இருபதாம் நூற்றாண்டின் சாதனைத் தமிழ்ப் பெண்மணிகள்

பதிப்பாசிரியர்

ச. சிவகாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இருபதாம் நூற்றாண்டின் சாதனைத் தமிழ்ப் பெண்மணிகள்

பதிப்பாசிரியர்
முனைவர் ச. சிவகாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Irupatām nūṟṟāṇṭin Sātanait Tamiḻp Peṇmaṇikaḷ
General Editor	:	Dr. K.A. Gunasekaran Director International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Chennai-600 113
Editor	:	Dr. S. Sivakami International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Chennai-600 113
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Chennai-600 113 Ph: 22542992
Publication No.	:	612
Language	:	Tamil
Edition	:	First
Year of Publication	:	2009
Paper Used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	10 Point
No. of Pages	:	502+xxvi
No. of Copies	:	1200
Price	:	Rs. 150/- (Rupees One hundred and fifty only)
Printed by	:	United Bind Graphics 189-D, Royapettah High Road Mylapore, Chennai - 600 004.
Subject	:	Biography and works of Tamil Women achievers in 20th Century

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

அணிந்துரை

இருபதாம் நூற்றாண்டின் சாதனைத் தமிழ்ப் பெண்மணிகள் எனும் இந்த நூல் தமிழ் இனப் பெண்களிடம் 21ஆம் நூற்றாண்டினில் பயணம் செய்யத் தொடங்குவோருக்குச் சரியான திசையைக் காட்டத்தக்க பலவிதமான கருத்துக்கள் கொண்டதாக அமையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

பெண்ணிய விடுதலை குறித்த சிந்தனை 20ஆம் நூற்றாண்டில் உலகமெங்கும் உரத்த குரலில் பதிவாகியுள்ளது. இந்தியாவில் சுதந்திரப் போராட்டக் காலத்தில் பெண்கள் பலர் சுதந்திரம் குறித்த போராட்டத்தில் பங்கெடுத்தனர். தொடர்ந்து பல்வேறு வகையான ஒடுக்குமுறைகளைக் காலந்தோறும் பெண்கள் குழுவாகவும், இயக்கமாகவும் களைந்தெறியப் போராடி வந்துள்ளனர். எனினும் பெண்ணிய விடுதலை குறித்த நோக்கில் அவர்களின் பங்களிப்பு அமைந்திருக்கவில்லை. இரண்டாம் உலகப்போரில் இடதுசாரிகள் வங்காளத்தில் மாதர் இயக்கம் கட்டினர். இரண்டாம் உலகப்போரின் போது மாதர் இயக்கம் கட்டப்பட்டது.

1942 டிசம்பரில் மலபார், கொச்சி, திருவிதாங்கூர்ப் பகுதிகளில் உள்ள மாதர்கள் ஒன்றிணைந்து கோழிக்கோட்டில் மாதர் மாநாடு நடத்தியுள்ளனர். சோவியத் நாட்டின் தாக்கத்தில் இடதுசாரிகள் பெண்கள் இயக்கத்தினைக் கட்டியுள்ளனர்.

மகாராஷ்டிரத்தில் தானா மாவட்டத்தில் சில தாலுக்காக்களில் ஆதிவாசிகள் உடை அணியத் தடை, காடுகளிலிருந்து பெற்ற காய்கள், கனிகள், விதைகள் போன்றவற்றை மலையின மக்கள் எடுத்து விற்கத் தடை என்ற, பலவிதமான ஒடுக்குமுறைகளைச் சந்தித்ததன் விளைவாக ஆதிவாசிகளிடம் எழுச்சி ஏற்பட்டது.*

8.10.1945ஆம் நாளன்று சுமார் 8000 ஆதிவாசிகள் திரண்டார்கள். அவர்கள் நான்கு பகுதிகளாகத் தம்மைப் பிரித்துக் கொண்டு நான்கு திசைகளிலும் ஊர்வலமாகச் சென்றார்கள். நிலப்பிரபுவின் வீட்டுக்கு முன்னால் சென்று நிற்பார்கள். பறையை அடிப்பார்கள். "சகோதரனே, உன்னுடைய துணியையும் மண் பானையையும் எடுத்துக்கொண்டு வெளியில் வா. அடிமையாக இருக்காதே" என்று முழங்குவார்கள். (ரேணுசக்ரவர்த்தி, இந்தியாவில் பெண்கள் இயக்கம் 1940-1950, ,தமிழில் நா.தர்மராஜன், அலைகள் வெளியீட்டகம், 2006.

காந்திய இயக்கத்தில் பெண்கள் ஒருங்கிணைந்தனர். நேதாஜி கட்டியமைத்த இயக்கத்தில் பெண்கள் இயக்கம் கட்டப்பட்டது.

இந்தியாவில் பெண்கள் இயக்கம் வெவ்வேறு அரசியல் மற்றும் சமூகத் தேவைகளின் பின்புலத்தில் ஆங்காங்கு கட்டப்பட்டிருந்தன. செயற்பட்டன.

தேவதாசிகள் பல்வேறு வகைகளில் சாமியின் பெயரால் அல்லது மன்னர்கள் பெயரால் இங்குக் கோயில் அடிமைகளாக இருந்தனர். பசி, பஞ்சம், நோய், போர் போன்ற காரணங்களால் பெண்கள் இங்கு விலைக்கு விற்கப்பட்டனர். நாகபட்டினம், கடலூர், புதுச்சேரி போன்ற பகுதிகளில் உள்ள கடற்கரை களிலிருந்து புறப்பட்ட கப்பல்களில் பெண்கள் அடிமைகளாக விற்கப்பட்டதோடு மொரிசீயஸ், பிஜி, சிங்கப்பூர், மலேசியா, பர்மா, தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

பல நிலைகளில் பெண்கள் தங்கள் பிரச்சினைகளுக்காக ஆணாதிக்கத்துக்கு எதிராக வெகுண்டெழவில்லை. தோள்சீலைப் போராட்டம் (கி.பி.1821 முதல் 1859 வரை) போலப் பெண்களின் ஒடுக்குமுறைக்கு எதிராகத் தமிழகத்தில் பெண்கள் திரண்டெழுந்துள்ளனர். சமூகச் சீர்திருத்தச் செவ்வியர், விடுதலைப் போராட்ட மறத்தியர் அரசியல் முன்னோடியர், படைப்புச் சிற்பியர், கலையரசியர் எனப் பல தளங்களில் பெண்களின் பங்களிப்புகள் காலந்தோறும் இருந்துள்ளன.

1921ஆம் ஆண்டில் நடைபெற்ற கள்ளுக்கடை மறியல் போராட்டத்தில் பெண்கள் பங்கெடுத்தனர். சாதி ஒழிப்புப் போராட்டத்தில் அன்னை பெரியார் மணியம்மை பங்கெடுத்துள்ளார்.

தேவதாசி ஒழிப்புச்சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமைச் சட்டம் போன்ற சட்டங்கள் இயற்றக் காரணமாக இருந்த டாக்டர் முத்துலட்சுமிரெட்டி, காந்தியோடு இணைந்து தென் ஆப்பிரிக்காவில் நிறவெறி மற்றும் இனவெறிக்கு எதிராகப் போராடிய தில்லையாடி வள்ளியம்மை, பொட்டுக்கட்டி இளம் பெண்களைத் தேவரடியார்களாக்கும் முறையை ஒழிக்கப் போராடிய மூவலூர் இராமாமிர்தத்தம்மாள், சுதந்திரப் போராட்டத்திற்குத் தன் இனிய குரலால் பாடியும் நடித்தும் பங்களிப்புச் செய்துள்ள மதுரை கே.பி. ஜானகி அம்மாள் நேதாஜியுடன் இணைந்து செயற்பட்ட லக்ஷ்மிசேகள் (லக்ஷ்மி

சுவாமிநாதன்) எனும் கேப்டன் லட்சுமி, தமிழுக்கும், தமிழர்க்கும் உழைத்து, விதவை மணம், கலப்புத் திருமணம், பெண்கல்வி எனப் பலநிலைகளில் உழைத்துள்ள பெண்மணிகள், சமூகப் போராளி டாக்டர் தருமாம்பாள் எனத் தமிழகச் சாதனைப் பெண்களைப் பட்டியலிட்டுக் காட்டித் தமிழ்ச் சமூகத்துக்குப் பெண்களின் பங்கு என்ன என்பதற்கு இந்த நூல் பல சான்றுகளைப் பக்கங்கள் தோறும் விளக்கி அமைந்துள்ளது.

இந்நூலில் பங்களிப்புச் செய்துள்ள அனைத்துப் பெரு மக்களுக்கும் எம் நிறுவனம் பாராட்டுதல்களையும் நன்றிகளையும் தெரிவித்து மகிழ்கிறது. தமிழ்ச் சமூகம் வளர்ச்சி பெற்ற வரலாற்றுப் பதிவுகள் கொண்ட இந்நூலை வெளியிடுவதால் எம் நிறுவனம் பெருமை கொள்கிறது.

இருபதாம் நூற்றாண்டின் சாதனைத் தமிழ்ப்பெண்கள் எனும் இக்கருத்தரங்கில் (24.02.2009 - 26-02-2009) பேராசிரியர்கள் பலரது கட்டுரைகளின் தொகுப்பு இது. இந்நூலில் முழுமையாகத் தமிழ்ப் பெண்களின் பங்களிப்புகள் பதிவுக்குள்ளாகவில்லை. காங்கிரஸ் இயக்கம், திராவிட இயக்கம், இடதுசாரிகள் இயக்கம் என்பன போன்ற பின்புலங்களில் பெண்களின் பங்களிப்புகள் இருந்துள்ளன. பெண்ணிய இயக்கம் என ஆணாதிக்கத்திற்கு எதிராக உருப்பெறவேண்டும். பெண்ணிய எழுத்துக்கள், பெண்ணிய அரங்கியல், பெண்ணிய மொழிகள் எனத் தனித்த நிலைகளை உள்வாங்கிய நிலைகளில் பெண்ணிய இயக்கங்கள் உருப்பெறவேண்டும்.

மீனம்பாள் சிவராஜா போன்ற தாழ்த்தப்பட்ட பெண்களின் பங்களிப்புகள் மற்றும் தமிழக வட்டாரங்களில், நாட்டுப்புறங்களில் தமிழ்ச் சமூக முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட பல சாமானியப்பட்ட உழைக்கும் பெண்களில் மடிந்து போன பெண்மணிகள் உள்ளனர். மைய நீரோட்டத்திற்கு அப்பால் (Main Stream) வாழ்ந்து உழைத்தவர்களின் பதிவுகளை நாம் தேடிக்கண்டறிந்து வரலாற்றில் பதிவுக்குள்ளாக்க வேண்டும். இந்தத் தேடலுக்கு இந்த நூல் துணையாக அமையும். இந்நூல் உருவாக்கத்தில் பங்கெடுத்துக் கொண்ட பேரா. சிவகாமி அவர்கள், எம் நிறுவனத்தின் பேராசிரியர் பெருமக்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் எனது நன்றி உரித்தானது.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையையும் காட்டிவரும்

நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக்கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி.

எழுத்துருவையும் மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் மற்றும் எழுத்துருவை இந்நிறுவனத்தில் ஒளிவடிவமைப்புச் செய்த திருமதி பா.கௌசல்யா மற்றும் எ.ம. லட்சுமி ஆகியோருக்கும் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கும் பாராட்டுகள்.

இயக்குநர்

பதிப்புரை

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்று
எண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்
(பெண்கள் விடுதலைக் கும்மி:2)

என்று கும்மியடித்த பாரதியின் கனவு ஓரளவு நனவானது உண்மைதான். ஆனால் பெண் மேம்பாட்டுச் சிந்தனையாளர் வேண்டும் 'ஆண்-பெண் சமநிலை' தோன்றிவிட்டதா எனின்தலை நிமிர்ந்து பெருமிதத்துடன் 'ஆமாம்' என்று விடையிறுக்க இயலா அவலமே தொடர்கிறது. சமுதாயத்தின் பல்வேறு துறைகளிலும் போற்றத்தக்களவு பணியாற்றியுள்ள பெண்கள் மீது, அவர்கள் உழைப்பைத் துய்த்துக் கொண்டே ஆணாதிக்க சமுதாயம் அவர்கள் மீது புகழொளி படராவண்ணம் இருள்திரை விரித்தது. அதனை விலக்கி வெளிவந்தோர் முத்து லெட்சுமி ரெட்டி, எம்.எஸ். சுப்புலட்சுமி, கே.பி. சுந்தராம்பாள், ருக்மணி அருண்டேல் என மிகச் சிலரே. விடுதலைப் போராட்டத்தில் சுடப்பட்டு இன்னுயிர் இழந்த எஸ். வள்ளியம்மாள் போன்ற பலரின் வரலாற்றுப் புறக்கணிப்பு இவண் எண்ணத்தக்கது.

சமூகச் சீர்திருத்தச் செவ்வியர், விடுதலைப் போராட்ட மறத்தியர், அரசியல் முன்னோடியர், படைப்புச் சிற்பியர், கலையரசியர் எனத்தம் வாழ்வைத் தாம் உழைத்த துறைக்கு ஒப்பளித்த மங்கையரை இத்தமிழுலகம் அறிய வேண்டும்; அறிந்து உரிய மதிப்பினை நல்க வேண்டும் என்ற எண்ணம் ராஜம் கிருஷ்ணனின் 'இந்திய விடுதலைப் போரில் பெண்கள்' பைம்பொழில் மீரானின் 'தலை நிமிர்ந்த தமிழச்சிகள்' மு. வளர்மதியின் சுயமரியாதை இயக்க வீராங்கனைகள் (இரு தொகுதிகள்) முதலான நூல்களை நோக்க வலுப்பெற்றது.

ஆய்வு நூல் படைப்பிலும், ஆய்வுக் கருத்தரங்குகள் நடத்துவதிலும் முன்னிற்கும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,

இருபதாம் நூற்றாண்டின் சாதனைத் தமிழ்ப் பெண்மணிகள் கருத்தரங்கின் வழி இதற்கு உயிரூட்டியுள்ளது. சென்ற நூற்றாண்டின் நூற்றுக்கணக்கான தமிழ்ச் சாதனைப் பெண்டிரில் முப்பத்து நால்வர் இம் முதல் முயற்சியில் பாராட்டப்பட்டுள்ளனர். பின்னிணைப்பில் நூற்று எழுபதிற்கும் மேற்பட்ட விடுதலைப் போராளிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். பிற துறைச் சாதனையாளரைப் பட்டியலிடின் அவர்தம் எண்ணிக்கை உறுதியாக மலைக்கவைக்கும். இவ்வாண்டு (2008) கே.பி. சுந்தராம்பாள், குஞ்சிதம் குருசாமி அம்மையார் ஆகிய இருவருக்கும் நூற்றாண்டாக அமைவதுஇக்கருத்தரங்கிற்கும் நூலுக்கும் பெருமை சேர்க்கிறது.

இக்கருத்தரங்கப்பணியில் ஈடுபட்டபோது சில கருத்துகள் உருவாயின.

1. விடுதலைப் போராட்டம், சமூகச் சீர்திருத்தம், அரசியல், படைப்பு என ஒன்றுக்கு மேற்பட்ட துறைகளில் முத்திரை பதித்த பெண்மணிகள் பலர்.

2. ஆணுக்குச் சமமாக கல்வியிலும் பணிகளிலும் பெண் வளர்ந்துள்ள போதிலும் உயர்பதவிகளை முறையாகப் பெறுவதில் இன்றும் பெண் போராட வேண்டியுள்ளது. ஆணாதிக்கம் அவள் உயர்விற்குப் பெரிய தடைக் கல்லாய் நிற்கிறது. இதனால் பெண்ணினம் பெறும் காயங்களும் இழப்புகளும் முற்றாக நீங்கவில்லை. பெண்ணுரிமை, பெண்விடுதலை பற்றிய விழிப்புணர்வு தோன்றியிருப்பினும், ஒரு பகுதியினர் பெற்றிருப்பினும் ஆண் பெண் சமத்துவத்திற்கு இன்னும் நீண்ட நெடுந் தொலைவு பயணம் வேண்டப்படுகிறது.

3. சிறுவர் கலைக் களஞ்சியம் போன்று சாதனை மகளிருக்கென தனிக்களஞ்சியம் உருவாக்கப்படல் வேண்டும். வாழ்வியற் களஞ்சியம், கலைக்களஞ்சியம் போன்றவற்றில் உரிய இடம்பெறாத நிலையில் இதன் தேவை இன்றியமையாததாகிறது. சங்ககாலம் முதல் இன்றுவரை தான் சார்ந்த துறையில் சாதனை படைத்துள்ள, நாட்டுக்கும் தமிழ்ச் சமூகத்திற்கும் பெரும் தொண்டாற்றியுள்ள தமிழ்ப் பெண்மணிகள்

ஆயிரக்கணக்கானோர் ஆவர். அவர்களின் வீரம், ஈரம், மனத்திண்மை, அறிவு, ஆளுமை, சிந்தனைத்திறன், செயல்திறன் எனப் பன்முகப் பெருமைகளை வெளிப் படுத்த, இருட்டறையில் சிறைபட்டுள்ளோரை வெளி உலகு அறிய இதுவே சிறந்த வழியாகும்.

4. இக்கருத்தரங்கு தொடர்ந்து, விடுபட்டுள்ள அம்புஜம்மாள், வசுமதி இராமசாமி, மணலூர் மணியம்மை, ருக்மணிலட்சுமிபதி போன்ற இருபதாம் நூற்றாண்டுச் சாதனையாளர்களை அறிமுகப்படுத்த வேண்டும்.

கருத்தரங்க மையப் பொருளுரையையும் நிறைவுப் பேருரையையும் எங்கள் விருப்பிற்கிணங்க நூலுள் இணைப்பதற்கு வாய்ப்பாக, கருத்தரங்க நிகழ்வுக்கு முன்பே வழங்கியப் பெருந்தகையினர் முனைவர் கு.ம. இராமாத்தாள் அவர்கள், முனைவர் தாயம்மாள் அறவாணன் அவர்கள் ஆகிய இருவருக்கும் என் இதயம் கனிந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

தமிழக அரசின் பகுதி இரண்டு - திட்ட நிதி நல்கை வழி இக்கருத்தரங்கிற்கு நிதி நல்கிய தமிழக அரசு; கருத்தரங்கச் செயற்பாடுகள் முழுமைக்கும் துணை நின்ற நிறுவன இயக்குநர்; நிறுவன அழைப்பை ஏற்று, கருத்தரங்கக் கட்டுரையை உரிய காலத்தில் அனுப்பி நூலாக்கத்திற்குத் துணை நின்றுள்ள பேராசிரியப் பெருமக்கள்; மெய்ப்புத் திருத்தத்தில் உதவிய முனைவர் ஆ. தசரதன்; குறுகிய காலத்தில் சிறப்பாகக் கணினியச்சுப் படுத்திய திருமதி எ.ம. லட்சுமி, திருமதி பா. கௌசல்யா; கருத்தரங்கம் சிறப்புடன் நிறைவேற பல்லாற்றானும் உதவிய நிறுவனத் துணை இயக்குநர் திரு. க.ந. வீரபாகு சுப்பிரமணியம் உள்ளிட்ட அலுவலகத்தார் மற்றும் கருத்தரங்க வெற்றிக்குத் துணைநின்ற பிற அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்கின்றேன்.

ச. சிவகாமி
கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்



பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா!
பெண்மை வெல்கென்று கூத்திடுவோமடா!

– பாரதியார்



கருத்தரங்க மையப் பொருளுரை

முனைவர் கு.ம. இராமாத்தாள் அவர்கள்
தலைவர், மகளிர் ஆணையம், சென்னை.

சமுதாய நலத்தில் நாட்டம் கொண்ட மக்களே முன்னேற்றத்திற்கு வழி காண்பவர்கள் ஆவர். முன்னேற்றத்திற்கு உழைப்பே அடிப்படை. உழைப்பின் பலன் பொது நலன் சார்ந்ததாக இருத்தல் வேண்டும். பொதுநலத்திற்குப் பாடுபடுபவர்களே சாதனை படைத்தவர்களாக சரித்திரத்தில் இடம் பெறுவர்.

சமூகச் சீர்திருத்தம் என்பது பொதுநலனைக் குறிக்கோளாகக் கொண்டது. தொலைநோக்கு சிந்தனையில் பல்நோக்கு பார்வையில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்த பணிகள் சமுதாயத்தின் ஒட்டு மொத்த நன்மைக்கு உதவும்.

எழுத்தாலும், பேச்சாலும் மட்டுமின்றி செயலாலும் சாதிக்கப்பட வேண்டியது தான் சீர்திருத்தம். சமூகச் சீர்திருத்தத்தில் ஆர்வம் கொண்டு எழுத்தால் - பேச்சால் - செயலால் சாதனை புரிந்தவர்கள் ஏராளம். அவர்களுள், இருபதாம் நூற்றாண்டில் சமூகச் சீர்திருத்தச் செவ்வியராக விளங்கியவர் பலராவர்.

தந்தை பெரியாரின் இரு கண்களாக - கண்ணிற்குப் பின் கண்ணாக - பெரியாரின் வழிநடந்து சமூகச் சீர்திருத்தச் செவ்வியராக விளங்கியவர்கள் நாகம்மையாரும், மணியம்மையாரும் ஆவர்.

நாகம்மையார்

நாகம்மையார் சேலம் மாவட்டத்தில் தாதம்பட்டியில் ரங்சசாமி - பொண்ணுத்தாய் தம்பதியர்க்கு 1885-ல் பிறந்தார். நாகம்மையார் பெரியாரின் தாய்வழியில் ஒன்றுவிட்ட தம்பி மகள் ஆவார். ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து ஏட்டறிவில்லாத பெண்ணாக வளர்ந்தவர். ஈ.வெ.ரா. அவர்கள் நாகம்மையாரை 1898ல் திருமணம் செய்து கொண்டார். அப்போது நாகம்மையாருக்கு வயது 13 பெரியாருக்கு வயது 19.

நாகம்மையார் கணவர் எண்ணப்படி நடந்தவர். சீர்திருத்தம் என்பதில் அக்கறை இல்லாமல் மத நம்பிக்கையில் வைதீக நெறியில் திளைத்திருந்தார். சைவ உணவு உண்ணல், விரதங்கள் இருத்தல்,

கோயில் வழிபாடு செய்தல் என யாவும் தவறாமல் மேற்கொண்டொழுகினார்.

கணவரின் விருப்பத்திற்கேற்ப சுயமரியாதை கருத்துக்களை ஏற்றுக் கொண்டு இயக்க வளர்ச்சியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

மேடையேறி தயக்கமின்றியும், தடுமாற்றமின்றியும் பேசும் திறமையைப் பயிற்சியேதுமின்றி கைவரப் பெற்ற நாகம்மை, பட்டாடை உடுத்தாமல் கதராடை அணிவதை வழக்கமாகக் கொண்டார்.

1921ல் கள்ளுக்கடை மறியல் 1924ல் வைக்கம் சத்யாகிரகம் ஆகியவற்றில் நாகம்மையார் தலையாய பங்கு வகித்தார்.

கள்ளுக்கடை மறியல் கைவிடப்பட வேண்டும் என்றால் ஈரோட்டு நாகம்மையாரையும், கண்ணம்மாவையும் (பெரியாரின் தங்கை) கேட்க வேண்டுமென்று மகாத்மா காந்தி கூறியதாக வரலாறு காட்டுகின்றது. நாகம்மையாரின் கொள்கை உறுதிப்பாட்டிற்கும் கள்ளுக்கடை மறியலில் முழுமையான ஈடுபாட்டிற்கும் இதுவே சான்றாக விளங்குகிறது.

வைக்கத்தில் வாகை சூடிட, நாகம்மையார் கேரளப் பெண்டிரையும், களத்தில் இறக்கிய செயல் அவர் தலைமையேற்று தொண்டரை வழிநடத்தும் தகைசால் பொறுப்பிற்குத் தகுதியுடையவர் என்பதை எடுத்துக் காட்டுவதாக அமைந்தது.

1925ல் சுயமரியாதை இயக்கமும் 'குடியரசு' இதழும் தொடங்கப்பட்டன. குடியரசு இதழுக்குப் பதிப்பாசிரியராகவும் பிரசுரகர்த்தாவுமாக விளங்கினார். இயக்கத்தின் குறிக்கோளும், இதழின் குறிக்கோளும் பகுத்தறிவு பிரச்சாரம் செய்வதே. தொய்விலா பிரச்சாரத்தின் காரணமாக பகுத்தறிவு இயக்கத்தோடு தம்மை இணைத்துக் கொண்ட பெண்களின் எண்ணிக்கை நாள்தோறும் பெருகிற்று.

நாகம்மாளின் பகுத்தறிவு பிரச்சாரப் பயணம் கேரளம், சிங்கப்பூர், மலேயா என நீண்டு வியாபித்தது.

பிரச்சார அளவில் நின்றிடாமல், சுயமரியாதைத் திருமணம், கலப்புத் திருமணம், விதவைத் திருமணம் முதலியன நடைபெற உறுதுணையாக நின்று உற்றுழி உதவி ஊக்கமளித்தார். குத்தூசி குருசாமிக்கு முன்நின்று மணம் செய்வித்தார்.

சுயமரியாதைத் திருமண அழைப்பு

கலப்புத்திருமணம்

சாமிநாத முதலியார் குமாரர் எஸ் . குருசாமிக்கும் டி. சுப்பிரமணியப் பிள்ளை குமாரத்தி டி.எஸ். குஞ்சிதம் ஆகிய இருவருக்கும் 8.12.1929 அன்று நடந்த திருமணத்திற்கு ஈ.வெ.ராமசாமி ஈ.வெ.ரா. நாகம்மாள் பெயரால் அச்சிடப்பட்டு அழைப்பிதழ் அனுப்பப்பட்டது.

நாகம்மையார் தலைமையேற்று நடத்தி வைத்த சுயமரியாதை திருமணங்கள் மக்களிடையே நல் வரவேற்பைப் பெற்றன.

1927ல் "உண்மை விளக்கம்" எனும் அச்சகத்தை நிறுவி குடியரசு இதழை அதில் அச்சிடலானார். குடியரசு இதழ், சந்தாதாரர் எண்ணிக்கையில் ஏற்றமும், கட்டுரையாளர்களின் படைப்பில் புதுமையும் கண்டது.

நாகம்மையாரின் விருந்தோம்பல் பலராலும் பாராட்டப்பட்ட பண்புநிறை செயலாக விளங்கியது.

செல்வர்க்குரிய செருக்கு சிறிதுமின்றி ஆடம்பரங்களில் நாட்டமின்றிப் பெரியாரின் பயணம் வெற்றிப் பயணமாக அமைய நாகம்மையார் உறுதிபட உழைத்தார்.

மணவாழ்க்கை காலம் முப்பத்தைந்து ஆண்டுகள் முடியும் முன்னர் 15.5.1933ல் நாகம்மையார் இயற்கை எய்தினார். நாகம்மையார் மறைந்த போது பெரியார் பெருத்த மனத்துயர் கொண்டார். பெரியாரின் மனத்துயர் கண்ணீராய்ப் பெருகியதைப் பெரியாரின் எழுத்தில் காணலாம்.

> நாகம்மாள் உயிர் வாழ்ந்ததும், வாழ ஆசைப்பட்டதும் எனக்காகவே ஒழிய தனக்காக அல்ல என்பதை நான் ஒவ்வொரு விநாடியும் நன்றாய் உணர்ந்து வந்தேன்.

நாகம்மையாருக்குத் தான் ஆற்றியது குறித்து வார்த்தைகளாக வடிக்கின்றார்.

> பெண்கள் சுதந்திர விஷயமாகவும், பெண்கள் பெருமை விஷயமாகவும் பிறத்தியாருக்கு நான் எவ்வளவு பேசுகிறேனோ - போதிக்கின்றேனோ அதில் நூற்றில் ஒரு பங்கு வீதமாவது என்னருமை நாகம்மாள் விஷயத்தில் நான்

நடந்து கொண்டிருந்தேன் என்று சொல்லிக் கொள்ள எனக்கு முழு யோக்கியதை இல்லை.

நாகம்மையார் எத்தனை காலம் பெரியாரின் வாழ்க்கைத் துணைநலமாக வாழ்ந்தார் என்பதை விட பெரியாரின் குறிக்கோள்கள் வெற்றியுற என்னென்ன செய்தார் எவ்வாறு உழைத்தார் என்பதே உண்மையான கணிப்பு.

மணியம்மையார்

வேலூரில் வாழ்ந்திருந்த கனகசபை - பத்மாவதி எனும் தம்பதியருக்கு 10.3.1917ல் முதல் மகளாகப் பிறந்தவர் மணியம்மை. மணியம்மையாரின் இயற்பெயர் காந்திமதி.

மணியம்மையார் வேலூரில் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் பள்ளி இறுதி வகுப்பு வரைப் பயின்று பின் குலசேகர பட்டிணத்தில் சி.டி. நாயகம் தமிழ்க் கல்லூரியில் பயின்றார். கல்வியைத் தொடர முடியாமல் வேலூர் திரும்பினார்.

மணியம்மையார் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போது வேலூரில் சீர்திருத்த திருமணம் ஒன்றை நடத்தி வைக்க வந்திருந்த பெரியாரை முதன்முதலில் கண்டு பெரியாரின் சீர்திருத்தக் கருத்தில் ஈடுபாடு கொண்டு, பின்னர் ஈரோட்டில் இயக்க சார்பில் நடந்த பெண்கள் மாநாட்டில் கலந்துகொண்டார். பெரியார் மணியம்மையிடம் எங்கள் இயக்கத்தில் சேர்ந்து தொண்டாற்ற முடியுமா எனக் கேட்டார். யோசித்து விட்டு பின் பதில் சொல்வதாக கூறிவிட்டு வேலூர் திரும்பினார் மணியம்மை.

பெரியாரின் கொள்கைகளில் மணியம்மை கவரப்பட்டார். மணியம்மையின் தந்தை கனகசபை பெரியாரிடத்தில் தனி மதிப்பும், மரியாதையும் வைத்திருந்தவர். பெரியாருக்குத் தொண்டாற்ற பெரியாரின் இயக்கப் பணிகளில் உடனிருந்து துணை நிற்க மணியம்மையின் மன சம்மதத்துடன் பெரியாரின் தொண்டராக உடனிருந்து பணி செய்ய ஏற்பாடு செய்தார்.

வேலூரில் கண்டார்

ஈரோட்டில் பேசினார்

சென்னையில் இணைந்தார்.

11.4.1943 அன்று முதல் பெரியாருக்கு அருகிருந்து அணுக்கத் தொண்டாற்ற தொடங்கிய மணியம்மையார் இறுதிவரை பெரியாரின் இயக்கப்பணியை ஆற்றி வந்தார்.

கண்ணின் மணி போல் தன்னைக் காத்து வந்த வாழ்க்கைத் துணைவி நாகம்மையாரை இழந்த பெரியார் தனக்கு அருகிருந்து துணை செய்ய ஆளின்றி இருந்த பெரியார் 11.9.1943 அன்று மணியம்மையாரால் கண்ணில் புத்தொளி பெற்றார் எனலாம்.

பெரியாரைப் பொறுத்தமட்டில், "என் கண்ணின் பாவை யன்றோ கண்ணம்மா" எனப் பாரதியின் பாடல்களுக்கு உயிர் கொடுத்தவர் நாகம்மையார்; புத்துயிர் கொடுத்தவர் மணியம்மை.

மணியம்மையின் வாழ்க்கை தனிவாழ்க்கை என்றோ, சொந்த வாழ்க்கை என்றோ அமையாமல் இயக்கத்தின் பொதுவாழ்க்கையாக இயக்கத் தலைவரின் நலன் பேணும் வாழ்க்கையாக அமைந்தது.

நீதிக் கட்சியானது 27.8.1944ல் சேலத்தில் நடந்த மாநாட்டில் திராவிடர் கழகமாக மாறியது.

மணியம்மையாரின் இயற்பெயரான காந்திமதி அம் மாநாட்டில் கே. அரசியல் மணி என மாற்றம் கண்டு தொண்டர்களிடையே அறிமுகமாகியது.

திராவிடர் கழகத்தின் சார்பில் கும்பகோணத்தில் நடந்த மொழிப்போர் மாநாட்டில் அரசின் தடை உத்தரவை மீறியதாக கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

மணியம்மையார் இரண்டுமாத சிறைவாசத்திற்குப் பின் 31.3.1949ல் விடுதலையான போது வேலூர் சிறை வாயிலில் பெரியாரால் வரவேற்கப்பட்டார்.

சிறை மீண்ட தொண்டரைத் தலைவர் எதிர்கொண்டு வரவேற்ற நிகழ்ச்சி மணியம்மையின் இயக்கப்பற்றினைப் பெருமைப்படுத்திய நிகழ்ச்சியாக அமைந்தது.

9.7.1949 அன்று பெரியார் அவர்கள் மணியம்மையாரைப் பதிவுத் திருமண அலுவலர் முன்னிலையில் வாழ்க்கைத் துணைநலமாக ஏற்றார். ஈ.வெ.ரா. மணியம்மை எனப் பெயர் மாற்றம் கொண்டார். பதிவுத் திருமணத்திற்குப் பின் உண்டான உரிமை கொண்ட உறவால் மணியம்மையாரின் பொறுப்புகள் மேலும்

நிறைந்தன. பெரியாரின் இல்லற வாரிசாக விளங்கிய மணியம்மையார் பெரியாரின் போராட்டக் களங்களில் முன்னிலை வகித்து போராட்டங்களை முன்நடத்திச் சென்றதால் பெரியார் இயக்கத்தின் வாரிசாகவும் உருவானார்.

24.12.1973ல் பெரியார் இயற்கை எய்திய போது பெரியாரின் செயல் திட்டங்கள் கொள்கை விளக்கங்கள் யாவும் பெரியார் அளித்துள்ள பயிற்சியின் துணையால் தொடர்ந்திட உறுதி பூண்டார்.

திராவிடர் கழகத்தின் சட்டதிட்டப்படி 6.1.1974ல் அதன் தலைவராகித் தம் வாழ்நாள் இறுதிவரை பெரியாரின் கொள்கைகளுக்காகவே வாழ்ந்தார்.

பெரியாருக்குப்பின் பெரியாரின் கொள்கைகளுக்காக தாம் வாழ்ந்தது போலத் தனக்குப்பின்னும் பெரியாரின் கொள்கை வாழ வேண்டும் எனக் கருதி அதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்த பின்னரே 16.3.1978ல் இயற்கை எய்தினார்.

நாகம்மை - மணியம்மை

நாகம்மையார் பெரியாரோடு வாழ்ந்த காலம் (1898-1933) முப்பத்தைந்து ஆண்டுகள். மணியம்மையார் பெரியாரின் அணுக்கத் தொண்டரான பின்னர் வாழ்க்கைத் துணைநலமாக வாழ்ந்த காலம் (1943-1973) முப்பது ஆண்டுகள்.

பெரியாரை மணந்த போது நாகம்மையாருக்கு வயது 13. பெரியாரை மணந்த போது மணியம்மையாருக்கு வயது 32. நாகம்மையார் தம் 48-வது வயதில் மறைந்தார். மணியம்மையார் தம் 61-வது வயதில் மறைந்தார். பள்ளிக்கல்வி பயிலாதவர் நாகம்மையார். பள்ளியிறுதி வகுப்பு வரை படித்தவர் மணியம்மையார். பெரியாருக்கு முதலில் நடந்தது கலப்புத் திருமணமல்ல; ஆனால் உறவு முறையில் நடந்த பால்ய விவாகம். பெரியாருக்கு இரண்டாவது நடந்தது கலப்புத் திருமணம்.

இருபெரும் தமிழ்ப் பெண்மணிகளின் சாதனை இமாலய சாதனை எனலாம். தமிழகத்தின் தனிப் பெருந்தலைவராம் தந்தை பெரியாரின் வாழ்வில் அறுபத்தைந்து ஆண்டுகள் நாகம்மையும், மணியம்மையும் இருவேறு காலகட்டங்களில் அருந்துணையாக விளங்கினர்.

1879-ல் பிறந்த பெரியார் 1919ல் பொது வாழ்வில் (அரசியலில்) ஈடுபட்டு 1973 வரை இறுதி மூச்சு வரை பொதுத் தொண்டாற்றி வந்தார். பெரியாரின் பொதுத் தொண்டு ஆற்றிய காலத்தில் 14 ஆண்டு காலம் நாகம்மையாரும், மணியம்மையார் 30 ஆண்டுகளும் துணையிருந்தனர். சுமார் 16 ஆண்டு காலம் (1933-1949) பெரியார் பெண் துணையின்றி இருந்தார்.

நாகம்மையார், மணியம்மையார் இருவருமே பெரியாரின் கொள்கைகளை வலியுறுத்தவும், நிலைநாட்டவும் சிறையேகியவர்கள் ஆவர்.

பொதுத்தொண்டு ஆற்றிய தன்னேரிலாத் தலைவர்க்குப் பெருந்தொண்டு ஆற்றிய பெண்மணிகள்.

இருபெரும் தமிழ்ப் பெண்மணிகளான நாகம்மையாரும், மணியம்மையாரும் பல சுயமரியாதைத் திருமணங்களைத் தலைமையேற்று நடத்தினர். அகவாழ்வில், விருந்தோம்பல் பண்பில் பாராட்டுக்குரியவர்களாக திகழ்ந்தனர்.

சமூகச்சீர்திருத்தச் செவ்வியரான நாகம்மையாரும், மணியம்மையாரும் தங்கள் பால் காழ்ப்புணர்வு கொண்டவர்கள் இழிவுபடுத்தி எழுதிய கடிதங்கள், மேடையேறி முழக்கமிட்ட போது மாற்றாரால் ஏவப்பட்ட கல்வீச்சுகள், பகுத்தறிவுப் பகைவரின் ஏசல்கள் எனப் பல்வகையான எதிர்ப்புகளைப் புறங்கண்டு வெற்றி கண்டனர். இவ்விரு பெண்மணிகளும் இல்லறத்தை நல்லறமாக்கிய அருந்திறலில் இயக்கத்தை நடத்திச் சென்ற வியத்தகு ஆற்றலில் உயர்ந்து தமிழகச் சான்றோர் பலரின் பாராட்டுகளைப் பெற்றவராவர்.

நாகம்மையார் காலத்தில் வைதீகர்களின் வசவுகள் காங்கிரசாரின் காழ்ப்புகள் உச்சகட்டத்திலிருந்தது. நாகம்மையார் அவற்றைக் கண்டு அஞ்சாமல் புறநானூற்று மறத்தியென எதிர்கொண்டு பகைவென்று சுயமரியாதை இயக்கத்தின் ஆணி வேராய் திகழ்ந்தார். பெரியார் ஏற்றிய பகுத்தறிவுச் சுடரை ஒருவரைத் தொடர்ந்து ஒருவராக நாகம்மையும் மணியம்மையும் ஏந்தித் தமிழகமெங்கெனும் வெற்றி வலம் வந்தனர்.



மங்கையராகப் பிறப்பதற்கே – நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா

– கவிமணி



கட்டுரையாளர்

முனைவர் இரா. அறவேந்தன்
விரிவுரையாளர், தமிழ்த்துறை
அழகப்பாப் பல்கலைக்கழகம், காரைக்குடி 630 003

முனைவர் அ. அறிவுநம்பி
முதன்மையர், சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம்
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி - 605 014

முனைவர் அன்னி தாமசு
ஆய்வறிஞர்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
சென்னை - 600 005

முனைவர் அ. ஆலிஸ்
பேராசிரியர், தமிழியல் துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி - 24.

முனைவர் ரெ. இந்திரா
தமிழ்த்துறைத் தலைவர் & தேர்வுநிலை விரிவுரையாளர்
நா.க.இரா. அரசு மகளிர் கல்லூரி, நாமக்கல் - 637 001

முனைவர் க. இளமதி சானகிராமன்
பேராசிரியர், சுப்பிரமணிய பாரதியார் தமிழியற் புலம்
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி - 14

முனைவர் தி. உமாதேவி
தமிழ் விரிவுரையாளர்
இக்கால மொழி மற்றும் இலக்கியத்துறை
தில்லிப் பல்கலைக்கழகம், புதுதில்லி - 110 007

முனைவர் லோ.ஆ. உமாமஹேஸ்வரி
விரிவுரையாளர், தமிழ்த்துறை
பாரதி அரசு மகளிர் கல்லூரி, சென்னை

முனைவர் செ. ஏழுமலை
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
சர். தியாகராயர் கல்லூரி, சென்னை - 600 021

முனைவர் மு.சு. கண்மணி
தமிழ் விரிவுரையாளர்
ஸ்ரீ சேவுகன் அண்ணாமலைக் கல்லூரி
தேவகோட்டை - 630 303

முனைவர் கு. கதிரேசன்
விரிவுரையாளர், தமிழ்த்துறை
ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர் - 628216

முனைவர் தி. கமலி
இணைப் பேராசிரியர், தமிழியல் துறைத் தலைவர்
அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
கொடைக்கானல் - 624 101

முனைவர் காமாட்சி தரணிசங்கர்
இந்திமொழிப் பிரிவு
ஜிப்மர், கோரிமேடு, பாண்டிச்சேரி

முனைவர் ச. சிவகாமி
பேராசிரியர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113

முனைவர் தி. செந்தமிழ்ச்செல்வி
முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை
எஸ்டிஎன்பி. மகளிர் வைணவக் கல்லூரி
குரோம்பேட்டை, சென்னை - 600 044

முனைவர் சு. தமிழ்ச்செல்வி
இணைப் பேராசிரியர்
இராணிமேரிக் கல்லூரி, சென்னை

முனைவர் தாயம்மாள் அறவாணன்
(ஓய்வு) பேராசிரியர் & தலைவர்
அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம்
கொடைக்கானல் - 624 101

முனைவர் சு. துரை
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
அரசு கலைக் கல்லூரி, உதகமண்டலம் - 643 002

முனைவர் ந. தேவி
முனைவர்பட்ட மேலாய்வாளர்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
சென்னை - 600 005.

முனைவர் நித்தியா அறவேந்தன்
விரிவுரையாளர், தமிழ்த்துறை
டாக்டர் உமையாள் இராமநாதன் மகளிர் கல்லூரி
காரைக்குடி - 630 003

முனைவர் சூ. நிர்மலாதேவி
முதுநிலை ஆராய்ச்சியாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113

முனைவர் பாகீரதி
தலைவர், இசைத்துறை
இராணிமேரிக் கல்லூரி, சென்னை

முனைவர் மு. பாண்டி
பேராசிரியர் & தமிழ்த் துறைத் தலைவர்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி - 630 003

முனைவர் பு. பாலாஜி
தலைவர், தமிழ்த்துறை
த.மூ.இரா.ப.க.க.செ. இந்துக் கல்லூரி (சுயநிதி)
பட்டாபிராம், சென்னை

முனைவர் இரா. பிரேமா
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை, எத்திராஜ் மகளிர் கல்லூரி
சென்னை

முனைவர் தி. மகாலட்சுமி
முதுநிலை ஆராய்ச்சியாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113

முனைவர் பெ.சு. மணி
எழுத்தாளர் - ஆய்வாளர்
ப. எண். 11, பு.எண். 23, இராம்கிருஷ்ணாபுரம்
2வது தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 600 033

முனைவர் ரெ. மல்லிகா (எ) அரங்கமல்லிகா
இணைப்பேராசிரியர், எதிராஜ் மகளிர் கல்லூரி
எதிராஜ் சாலை, சென்னை - 8

முனைவர் கி. மைதிலி
தமிழ்ப்பேராசிரியர்
பாரதி அரசு மகளிர் கல்லூரி
சென்னை - 600 040

முனைவர் தா. ரெங்கநாதன்
இணைப்பேராசிரியர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113

முனைவர் வீ. ரேவதி
விரிவுரையாளர், ஏ.ஏ.கலைக்கல்லூரி
விழுப்புரம்

முனைவர் சு. லதா
பகுதிநேர விரிவுரையாளர்
தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

முனைவர் மு. வளர்மதி
முதுநிலை ஆய்வாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113

முனைவர் க.அ. ஜோதிராணி
விரிவுரையாளர், தமிழ்த்துறை
காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி
சென்னை - 600 006

உள்ளே

பக்கம்

சமுகச் சீர்திருத்தச் செவ்வியர்

மூவலூர் இராமாமிர்தத்தம்மாள் 1
முனைவர் அ. ஆலிஸ்

சிந்தனையாளர் குஞ்சிதம் குருசாமி 12
முனைவர் ச. சிவகாமி

சகோதரி சுப்புலட்சுமி 30
முனைவர் லொ.ஆ. உமாமகேஸ்வரி

சமூகச்சேவகி டி.வி.எஸ்.சௌந்தரம்மாள் 49
முனைவர் வீ. ரேவதி

டாக்டர் எஸ். தருமாம்பாள் 56
முனைவர் ந. தேவி

அன்னை நாகம்மையார் 64
முனைவர் மு. வளர்மதி

அன்னை பெரியார் மணியம்மையார் 85
முனைவர் அ. அறிவுநம்பி

மாதர்மித்தரி வழி அறியலாகும் சிந்தனையாளர் – மி.மி. 93
முனைவர் மு.சு. கண்மணி

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி 100
முனைவர் செ. ஏழுமலை

சமூக விடுதலையில் தமிழகப் பெண்மணிகள் 116
முனைவர் சு. தமிழ்ச்செல்வி

சமூக விடுதலையில் புதுவைப் பெண்மணிகள் 122
முனைவர் இளமதி சானகிராமன்

விடுதலைப் போராட்ட மறத்தியர்

லக்ஷ்மி சேகல் 134
முனைவர் அன்னிதாமசு

தில்லையாடி வள்ளியம்மை 146
முனைவர் அரங்க. மல்லிகா

மதுரை கே.பி. ஜானகியம்மாள் 152
முனைவர் க.அ. ஜோதிராணி

அரசியல் முன்னோடியர்

அன்னை சத்தியவாணி முத்து 159
முனைவர் கி. மைதிலி

சரசுவதி சுப்பையா 168
முனைவர் காமாட்சி தரணிசங்கர்

திருமதி பார்வதி கிருஷ்ணன் 177
முனைவர் ரெ. இந்திரா

இரமணி நல்லதம்பி 188
முனைவர் கு. கதிரேசன்

தோழர் லீலாவதி 208
முனைவர் சு. துரை

படைப்புச் சிற்பியர்

பண்டிதை அசலாம்பிகை அம்மையார் 214
திரு. பெ.சு. மணி

கவிஞர் அனந்தம்மாள் 236
முனைவர் தாயம்மாள் அறவாணன்

குமுதினி 253
முனைவர் சு. லதா

வை.மு. கோதைநாயகி 269
முனைவர் சூ. நிர்மலாதேவி

கு.ப. சேது அம்மாள் 300
முனைவர் தி. செந்தமிழ்ச் செல்வி

பூரணி அம்மையார் 314
முனைவர் இரா. அறவேந்தன்

படைப்பாளர் லக்ஷ்மி 335
முனைவர் தி. மகாலட்சுமி

கவிப்பேரரசி ஹா.கி.வாலம் 350
முனைவர் தி. கமலி

சித்தி ஜுனைதா பேகம் 377
முனைவர் நித்தியா அறவேந்தன்

கலையரசியர்

கே.பி. சுந்தராம்பாள் 397
முனைவர் பு. பாலாஜி

இசைமேதை எம்.எஸ். சுப்புலட்சுமி 421
முனைவர் மு. பாண்டி

வீணை தனம்மாள் 432
முனைவர் பாகீரதி

டி.கே. பட்டம்மாள் 437
முனைவர் தி. உமாதேவி

டி.ஆர். ராஜகுமாரி 445
முனைவர் இரா. பிரேமா

ருக்மணிதேவி அருண்டேல் 457
முனைவர் தா. ரெங்கநாதன்

நிறைவுப் பேருரை 466
முனைவர் தாயம்மாள் அறவாணன்

பின்னிணைப்பு 476
முனைவர் லொ.ஆ. உமாமகேஸ்வரி

இந்திய நாட்டின்,

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின்,

பெண்ணினத்தின் விடுதலைக்காகவும்

மேம்பாட்டிற்காகவும் போராடிய,

தாம் சார்ந்த துறையின் வளத்திற்கு

உரமூட்டிச் சாதனை படைத்த

ஆயிரமாயிரம் பெண்மணிகளின்

நினைவைப் போற்றி இந்நூல்

வெளிவருகிறது

மூவலூர் இராமாமிர்தத்தம்மாள்

அ. ஆலிஸ்

கல்வி வாய்ப்பும் வேலைவாய்ப்பும் பெற்ற பின்னரும்கூடப் பெண்ணினத்தின் முன்னேற்றம் முழுமையாக இல்லாதிருப்பது இன்றைய நடைமுறை ஆகும். மரபுக்கும் மரபு மாற்றத்திற்கும் இடையில் ஊடாடும் பெண்ணினம் இன்று அடைந்திருக்கிற மிகச் சிறிதளவான முன்னேற்றம் தமிழக வரலாற்றில் மிகவும் எளிதில் பெற்ற ஒன்று அன்று. அதற்காகப் பல சான்றோர் பெருமக்கள் இருபதாம் நூற்றாண்டில் போராடி வந்திருக்கின்றனர். அவர்களுள் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் குறிப்பிடத்தக்க பெண்மணி ஆவார். அன்னாரது இலக்கியப் பணியையும் சமூகப்பணியையும் மதிப்பிடுவது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் வாழ்வும் பணியும் என்ற பா. ஜீவசுந்தரியின் நூலும் (பாசல் வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு, டிசம்பர் 2006) அம்மையாரின் மதிபெற்ற மைனர் என்ற புதினமும் இக்கட்டுரைக்கு அடிப்படை ஆதாரங்கள் ஆவன.

அம்மையாரின் வாழ்க்கை வரலாறு

மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரின் வாழ்க்கை வரலாறு மேற்குறிப்பிட்ட நூலிலிருந்து இக்கட்டுரையில் தொகுத்துத் தரப்பட்டுள்ளது. அம்மையார் 1883ஆம் ஆண்டில் கிருஷ்ணசாமி - சின்னம்மாள் தம்பதியினருக்கு மகளாகத் திருவாரூரில் பிறந்தார். ஆனால் அவர் வளர்ந்தது வாழ்ந்தது மூவலூரில்தான். மூவலூரில் தந்தை தனது தாயையும், மனைவியையும் பிஞ்சுக் குழந்தையையும் காப்பாற்ற முடியாமல் குடும்பத்தை விட்டு வெளியேறி விட்டார். இதைத் தொடர்ந்து இவரது வயதான பாட்டி துக்கத்தால் இறந்துவிட, கைக்குழந்தை யுடன் ஆதரவற்றுத் தவித்த அவரது தாய் ஒரு தேவதாசியிடம்

குழந்தையைப் 10 ரூபாய்க்கும் ஒரு பழைய புடவைக்கும் விற்றுவிட்டாள். அப்போது இராமாமிர்தம் அவர்களுக்கு வயது ஐந்து. குழந்தை வளர்ந்து திருமணப் பருவத்தை அடைந்த போது அறுபது வயதுடைய முதியவருக்குத் திருமணம் செய்து கொடுக்க முயற்சித்தனர். அதைத் துணிந்து எதிர்த்து மறுத்துத் தான் விரும்பியவரும் தனக்கு ஆடல், பாடல்களைக் கற்றுத் தந்தவருமான சுயம்புப் பிள்ளை என்ற சங்கீத ஆசிரியரைக் காதல் மணம் செய்து கொண்டார். இந்தத் திருமணத்துக்குத் தேவதாசிகள் மத்தியிலே கடும் எதிர்ப்பு இருந்தது; அவர்கள் இருவரும் சாதிப் புறக்கணிப்புச் செய்யப்பட்டனர். இதனால் அவர்களது குடும்ப வாழ்க்கை துயரத்துடன் வறுமை நிறைந்ததாய் அமைந்தது. தனது வாழ்க்கை அனுபவத்தின் விளைவாக அம்மையார் ஒரு சமூகப் போராளியாகத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டு போராடினார். இதற்கு அவரது கணவர் சுயம்புப்பிள்ளையின் தார்மீக ஆதரவு முக்கியக் காரணம் ஆகும்.

தன்னை வளர்த்த ஆச்சிக்கண்ணு தேவதாசியாக இருந்தபோதும் தன்னை வளர்த்து ஆளாக்கியவர் என்ற நன்றி மறவாமல் அவரது பெயரையே தனது பெயருக்கு முதலெழுத்தாகச் சேர்த்து ஆ. இராமாமிர்தம் என்று போட்டுக் கொண்டார். சுயம்புப்பிள்ளை இராமாமிர்தம் தம்பதியருக்கு மூன்று குழந்தைகள். மூத்த மகனும் அதற்கு அடுத்த மகளும் நோய் கண்டு இறந்துவிட்டனர். மூன்றாவது மகன் செல்லப்பா. இவரும் இசைப்பயிற்சி பெற்றவர். தனது மகன் செல்லப்பாவுக்குத் தாசி ஒருவரிடமிருந்து மீட்ட இளம் பெண்ணைத் திருமணம் செய்து வைத்தார். செல்லப்பாவின் மகன் பேரன் செல்வராஜ் மீது அம்மையார் அவர்கள் நெருங்கியபாசம் கொண்டிருந்தார். அவரும் பாட்டி மீது மிகவும் பிரியம் கொண்டிருந்தார். தனது கடைசிக் காலத்தை மூவலூரில் தனது மகனுடன் கழித்த அம்மையார் 27.06.1962இல் மறைந்தார்.

அம்மையாரின் சமூகப்பணி

மூவலூர் அம்மையாரின் வாழ்க்கை, சமூகப்பணி, புதினம் ஆகிய அனைத்தையும் ஆராயின் அவரது ஆளுமை, எண்ணங்கள் மற்றும் செயலாக்கங்கள் முதலியன பின்வரும் நிலைகளில் அமைவதைக் காணலாம்.

1. சமூக அநீதி கண்டு மனம் குமுறுவது மட்டுமின்றித் துணிந்து அதனை எதிர்த்தல்.

2. சொந்த வாழ்க்கையில் குறுக்கிடும் சமூக அநீதியைத் தகர்த்து எறிதல்.

3. குறிப்பிட்ட சமூக அநீதியைக் களைய அதன் பல பரிமாணங்களை ஆய்ந்து செயலில் இறங்கிக் களைதல்.

தேவதாசிமுறை ஒழிப்புப் போராட்டம்

தேவதாசி ஒருவரால் வளர்க்கப்பட்டுத் தைரியமாக அரசியலில் அடியெடுத்து வைத்த அம்மையார், ஆண்களுக்கு இணையாகப் பிரச்சாரம் செய்தார். சங்க காலத்தில் வழக்கத்தில் இருந்துவந்த பொதுமகளிர், பரத்தையர் என்ற முறை பிற்காலத்தில் தேவதாசிகள் முறையாக மாறியது என்று சமூக வரலாற்றாசிரியர்கள் கூறுவர். "தமிழ்நாட்டைப் பொறுத்தவரை நதிநீர்ப்பாசனம் செழுமை பெற்றிருந்த தஞ்சை, நெல்லை, மதுரை மாவட்டங்களிலும் புதுக்கோட்டை சமஸ்தானத்திலும் தேவதாசிகள் முறை வலுவாக வேரூன்றி இருந்தது. குறிப்பாகச் சோழப் பேரரசின்போதுதான் குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்த பெண்களைப் பொட்டுக்கட்டிவிட்டு, அவர்களுக்குத் திருமண வாழ்க்கையை மறுக்கும் வழக்கம் அரசநியதியாக மாறியது. கி.பி. 1011இல், இராசராசசோழன் ஆட்சியின்போது, தஞ்சைப் பிரகதீஸ்வரர் ஆலயத்தில் நடனமாடிய பெண்களுக்கு நிலமும் வீடுகளும் தானமாக அளிக்கப்பட்டன" (ப.22).

இசைவேளாளர் சாதியைச் சேர்ந்த பெண்களே பொட்டுக் கட்டி விடப்பட்டனர். இளம் தேவதாசிகள் பெண்கள் பருவம் அடையும் முன்பே, கடவுளுக்குத் திருமணம் செய்து வைக்கப் படுகிறாள். அப்பெண்ணுக்கும் கடவுளுக்கும் திருமணம் முடித்து வைக்கும் சடங்குகள் கோயில் குருக்களால் நடத்தி வைக்கப்படும். அப்போது கடவுளின் சார்பாக அவரே தேவதாசி கழுத்தில் தாலி கட்டுவார். இதுவே 'பொட்டுக்கட்டுதல்' என்று பரவலாக அழைக்கப்பட்டது. அப்பெண் பருவம் அடைந்தவுடன் அவளைச் சடங்கு ஒன்றின் மூலம் குறிப்பிட்ட ஒரு கோயிலின் கடவுளுக்கு அடிமையாக்கித் 'தேவரடியாள்' என்று பகிரங்கமாக அறிவித்து

அவளை நித்யசுமங்கலி என்று அறிவித்தனர். திருமணம் செய்து கொள்ளாமலே தான் விரும்பும் பாலியல் துணைவரைத் தேர்வு செய்யும் உரிமை அவளுக்கு வழங்கப்பட அத்தகைய பாலியல் துணைவர்கள் நிலப்பிரபுக்களாகவோ, அறங்காவலர்களாகவோ இருப்பர். அவர்கள் பெரும்பாலும் பிராமணர்களாகவும் உயர்சாதி இந்துக்களாகவும் இருந்தனர். கோவில்களுக்கு வழங்கப்படும் நிலங்களின் மூலம் கிடைக்கும் வருமானத்தை இப்பெண்கள் பெற்றனர். இதன் மூலம் தேவதாசி ஒரு பெண் வாரிசை அடுத்த தலைமுறை தேவதாசியாக உருவாக்க வேண்டியது எழுதப்படாத சட்டமாகப் பின்பற்றப்பட்டு வந்தது. தேவதாசி வாரிசுப் பெண்கள் வேறு எந்தத் தொழிலிலும் ஈடுபட அனுமதிக்கப் படுவதில்லை. அம்மையாரது இளமைக்காலம் முழுவதும் தேவதாசி ஒழிப்புமுறைப் போராட்டமாகவே அமைந்தது.

தேவதாசிகள் என்ற பெயரில் ஆலயங்களில் பொட்டுக் கட்டப்பட்டு நிலப்பிரபுக்களுக்கும் - அறங்காவலர்களுக்கும் ஆசைநாயகிகளாக்கப்பட்டு அவதிப்பட்ட பெண்களின் விடுதலைக்காகப் பாடுபட்ட விடிவெள்ளியாக அம்மையார் திகழ்ந்தார். தேவதாசி முறையில் இருந்து விலகி வறுமையில் வாழ்ந்து வந்த குடும்பத்தில் பிறந்த அவர் தான் தேவதாசி முறை தொடர்பான இழிவுகளைச் சந்தித்தபோது அம்முறையை எதிர்க்க மனஉறுதி கொண்டார். தேவதாசிகள் முறையை ஒழிக்க நீதிக்கட்சியின் ஆட்சியில் சட்டம் இயற்றப்பட்டதற்குப் பின்புலமாக இருந்து அச்சட்டம் அமல் செய்யப்படக் காரணமாக இருந்து செயல்பட்டார்.

தேவதாசி முறையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு போராடிய அம்மையார் 1917, 1918 காலக்கட்டங்களில் மயிலாடுதுறைப் பகுதியில் துணிச்சலுடன் தனியாகப் போராடி இருக்கிறார். தேவதாசிப் பெண்களை நேரில் சென்று சந்தித்துப் பேசி இருக்கிறார். தேவதாசிப் பெண்களை உறுப்பினர்களாகக் கொண்ட 'நாகபாசத்தார் சங்கம்' என்ற அமைப்பை உருவாக்கி இருக்கிறார். தேவதாசி அமைப்பை விட்டு விலக முன்வரும் பெண்களுக்கு அவர்கள் வீட்டை விட்டு வெளியேறவும் மறுவாழ்வு பெறவும் உதவியிருக்கிறார்.

அரசியல் ஈடுபாடும் தேவதாசி ஒழிப்புப்பணியும்

ஒருசில காங்கிரஸ் தலைவர்களிடம் தேவதாசிமுறை எதிர்ப்புணர்வு இருந்ததனால் அம்மையார் காங்கிரஸில் சேர்ந்தார். அப்போது தமிழகக் காங்கிரஸ் கட்சியில் ஈ.வெ. ராமசாமி, திரு.வி.க. ஆகிய தலைவர்கள் தேவதாசி முறைக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யவே அம்மையார் காங்கிரஸில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அம்மையாரின் தேவதாசி ஒழிப்புமுறைப் போராட்ட ஈடுபாட்டினைப் பாராட்டிக் **காந்தியடிகள் அம்மையாருக்குப் பாராட்டுக் கடிதம்** ஒன்று எழுதியுள்ளார். ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்தபெண்ணே இவ்வாறு தனது சமூகத்தின் இழிநிலையை எதிர்த்துப் போராட முன்வந்தது காந்தியை மிகவும் கவர்ந்தது பற்றிக் குறிப்பிட்டு அண்ணாதுரை 35 ஆண்டுகளுக்குப் பின் மூவலூர் அம்மையாருக்குத் தி.மு.க. சார்பில் கேடயம் வழங்கிப் பேசும்போது வியந்து பாராட்டினார். திராவிடர் இயக்கக் கொள்கைகளைக் குறிப்பாகப் பெண்கள் சமூகத்திடம் கொண்டு சேர்த்து ஆணுக்குப் பெண் அடிமையல்ல என்ற விழிப்புணர்வை அம்மையார் ஊட்டினார்.

அம்மையார் இப்பணியில் தீவிரமாக ஈடுபட்டுப் பொட்டறுப்புச் சங்கங்கள் வைத்துப் பிரச்சாரம் செய்யத் தொடங்கினார்; தேவதாசி சமூகத்திலிருந்து எதிர்ப்புக் கிளம்பிற்று. இருந்தபோதும் தேவதாசிப் பெண்கள் பலர் இப் பொட்டறுப்புச் சங்கத்தில் உறுப்பினராயினர். நாதசுர இசைமேதை திருவாவடுதுறை டி.என். இராஜரத்தினம் பிள்ளை, சீர்காழி பெ.நா. சுப்பையா பிள்ளை போன்ற தன்மான உணர்ச்சி மிக்க இசைக்கலைஞர்களின் ஆதரவு கிடைத்தது.

தான் நடத்திய மேடை நாடகங்களில் அம்மையார் தேவதாசிமுறை ஒழிப்புக் குறித்துச் சில வசனங்களை முன்வைத்தார். சனாதனிகள் அதனைப் பொறுத்துக் கொள்ளாமல் மேடையில் ஏறி நடிப்பில் ஆழ்ந்திருந்த அம்மையாரின் கூந்தலைப் பிடித்து அரிந்துவிட்டனர். இதனால் சிறிதும் அச்சமுறாத அம்மையார் தொடர்ந்து இப்பணியில் தீவிரமாக ஈடுபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. தனது தீவிர ஈடுபாட்டின் காணமாக ஒரு அம்மையார் பாலில் விஷம் கலந்து

தனக்குக் குடிக்கக் கொடுத்ததையும் வாயில் ஊற்றியவுடன் துப்பிவிட்டதாகவும் சற்று நேரத்தில் முகம் வீங்கவே, நண்பர்கள் அதைப் பரிசோதித்து வீரம் என்ற விஷம் கலந்திருந்ததாகவும் பொட்டுக்கட்டுதல் என்ற வழக்கத்தை ஒழிக்கப் பாடுபட்டுவந்த தன்னை ஒழிக்க அவர் எண்ணி விட்டதாகவும் தையற்கலை என்ற இதழில் (மே, 1959) அம்மையார் எழுதியுள்ளதாகப் பா. ஜீவசுந்தரி (ப.33) குறிப்பிடுகிறார்.

நாகபாசத்தார் சங்கம் என்று முதலில் அழைக்கப்பட்டு பின்னர் இசைவேளாளர் சங்கம் என்று மாற்றப்பட்ட சங்கத்தின் தூண்போன்று அம்மையார் விளங்கியிருக்கிறார். 1925இல் மாயவரத்தில் இசைவேளாளர் மகாநாடு ஒன்றைக் கூட்டியிருக் கிறார். அம்மாநாட்டில் இராமசாமி நாயக்கரும் அம்மையாரும் உரை நிகழ்த்தியிருக்கின்றனர். அம்மாநாட்டில் தேவதாசிப் பெண்களிடமிருந்து அறிக்கைகள் பெறப்பட்டிருக்கின்றன.

காங்கிரஸில் இருந்த காலத்துக் கதராடைகளை விரும்பி அணிந்ததுடன் தேவதாசிப் பெண்களையும் பிறரையும் அணியச்செய்தார். கதராடையை ஊர் ஊராகச் சுமந்து சென்று விற்றுள்ளார். தேவதாசி சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் பலரைக் கதர் நூல் நூற்கச் செய்திருக்கிறார்.

தலித் ஆண்கள் இடுப்பில் வேட்டி கட்ட அனுமதிக்கப் படாத அந்தக் காலத்தில் பல தலித் ஆண்களுக்கு வேட்டி கொடுத்து இடுப்பில் அணிந்து நடமாடச் செய்திருக்கிறார். தஞ்சை மாவட்ட நிலப்பிரபுத்துவப் பண்ணையடிமை முறைக்கு இது ஓர் எச்சரிக்கையாக அமைந்திருக்கிறது.

தீண்டாமை, தேவதாசிமுறை, பால்யவிவாகம், விதவை மணம் மறுப்பு ஆகிய சமூக இழிவுகளை எதிர்ப்பதில் காங்கிரஸ் பிரமுகர்கள் மிதவாதிகளாகவே இருப்பதை அம்மையார் உணர்ந்தார். 1925இல் ஈ.வெ.ரா. பெரியார் காங்கிரசில் இருந்து வெளியேறிய போது தானும் சிங்காரவேலர், இராமநாதன் போன்றோருடன் வெளியேறினார். சுயமரியாதைப் போராட்டங்களில் ஈடுபட்டார் பெரியாருடன் தமிழகம் முழுவதும் சுயமரியாதை இயக்கத்தின் தொடக்கக் காலக்கட்டத்தில் பயணம் செய்த சுயமரியாதைப் பிரச்சாரம் செய்த பெண்மணியாகத் திகழ்ந்தார். சமஸ்கிருதத்தில் ஓதப்படும் மந்திரங்கள் பெண்களுக்கு எதிரானதாக

இருப்பதைத் தெளிவுபடுத்திப் பிரச்சாரம் செய்து சுயமரியாதைத் திருமணங்கள் நடைபெறப் பெரியார் ஆற்றிய பணியில் அம்மையாருக்கும் பங்கு இருந்தது. பின்னர் 1949இல் திராவிடர் கழகம் உடைந்து, திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்பட்டபோது அண்ணாவுடன் தி.க.விலிருந்து வெளியேறித் தி.மு.க.வின் முன்னணித் தலைவர்களில் ஒருவராக 70 வயதிலும் சுறுசுறுப்பாகச் செயல்பட்டிருக்கிறார்.

வாழ்நாள் இறுதிவரை தன் வேலைகளைத் தாமே செய்து கொண்டு தன் இறுதிக்காலம் 1962வரை தன் மகனுடன் வசித்து வந்திருக்கிறார். அவர் வாழும்போதே அண்ணாதுரை, தி.மு.க. சார்பில் 1956ஆம் ஆண்டில் விருது வழங்கிச் சிறப்பித்திருக்கிறார்.

தேவதாசி ஒழிப்பில் அம்மையார் மேற்கொண்ட சட்ட ரீதியான நடவடிக்கைகள்

இராமாமிர்தம் அம்மையார் தேவதாசி ஒழிப்பிற்கென்று பல்வேறு போராட்டங்களையும் மாநாடுகளையும் நடத்திய போதும் இம்முறையை முழுவதும் வேரறுக்க வேண்டுமெனில் சட்டரீதியான நடவடிக்கை அவசியம் என்பதை உணர்ந்திருந்தார். எனினும் சட்டம் தொடர்பான அறிவினை அம்மையார் பெற்றிருக்கவில்லை. இதுகுறித்து அம்மையாரே பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> *என்னைப் பொறுத்தவரை, தேவதாசி முறை அவலங்கள் பற்றி தான் ஆழமாக அறிந்திருந்தாலும், அதை ஒழிக்கும் சட்ட நுணுக்க அறிவைப் பொறுத்த வரையில் குழந்தையாகவே இருந்தேன்* (ப.92)

ஆலயங்களில் தேவதாசிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிலங்கள் பெரும்பாலும் தேவதாசிகள் பெயரில் பதிவு செய்யப்படவில்லை. அந்நிலங்கள் கோயில் பெயரிலோ அறங்காவலர் பெயரிலோ பதிவு செய்யப்பட்டிருந்தன. வருமானத்தை மட்டுமே பொட்டுக் கட்டி விடப்பட்ட பெண்கள் அனுபவித்து வந்தனர். நிலங்களைப் பொட்டுக்கட்டி விடப்பட்ட பெண்களின் பெயரிலேயே பதிவு செய்ய வேண்டும் என்றும் தேவதாசிப் பெண்களை அம்முறையி லிருந்து விடுவிக்கவேண்டும் என்ற கொள்கையிலும் அம்மையார் உறுதியாக இருந்தார். அம்மையாரின் பெரும் முயற்சியினால்

1929ஆம் ஆண்டு இப்பிரச்சினையின் தீவிரம் உணரப்பட்டு, தேவதாசிப் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிலங்களை அவர்களுக்கே உரிமையாக்கி, அவர்களைத் தேவதாசி முறையிலிருந்து விடுவிக்க மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அரசு உத்தரவு பிறப்பித்தது.

அம்மையார் பால்ய விவாக ஒழிப்புச் சட்டம் கொண்டுவர முயற்சித்த பொழுது கடும் எதிர்ப்பு எழுந்தது. ஆனால் தேவதாசி முறை ஒழிப்பிற்கு அனைத்துத் தரப்பினரின் ஆதரவையும் மேற்கொண்ட கடும் முயற்சியினால் 1947ஆம் ஆண்டு 31வது சட்டத்தின் மூலம் இம்முறை முழுவதுமாக ஒழிக்கப்பட்டது.

இலக்கியப் பணி

இராமாமிர்தம் வாழ்வில் ஏற்பட்ட தடைகளும் தாசி இல்லச் சூழலும் அதன் விளைவுகளும் முக்கியமானவை ஆகும். அவற்றைத் துணிந்து எதிர்த்தார். எதிர்ப்பு அவரது "மதிபெற்ற மைனர்" என்ற நாவலிலும் காணப்படுகிறது. பாத்திரமாகத் தன்னையே படைத்து அப்பாத்திரம் எதிர்ப்பதாகக் காட்டுகிறார். பெண்களின் அநீதி கண்டு வருத்தப்படுவது என்பது வேறு. அதை எதிர்த்து நீக்க முயல்வது என்பது வேறு. இவற்றுள் இரண்டாவது பணி அம்மையார் அவர்களின் பணியாக அமைகிறது.

தமிழ்நாட்டில் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் தேவதாசிகள் என்ற சமூக இழிவு பரவியிருந்தது. இந்தியப் பண்பாட்டிற்கே அவமானச் சின்னமான பெண்களுக்குப் பொட்டுக் கட்டி, 'தேவரடியார்'களாக்கும் இந்த முறையை ஒழிக்கப் போராடியவர் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார். அவரது போராட்டம் 1920களில் தீவிரம் கொண்டது. அவர் பெண் விடுதலை என்பது சமுதாயத் தளைகளில் இருந்து பெண் விடுவிக்கப்படுவதோடு இணைந்துள்ளது என்று பூரணமாக நம்பினார். ஆடம்பரத் திருமணங்களை எதிர்த்தும் வரதட்சணையை எதிர்த்தும் மேடை தோறும் முழங்கினர் என்று அம்மையாரின் பணியைக் குறிப்பிடுகிறார் பா.ஜீவசுந்தரி (ப.14). மதிபெற்ற மைனர் புதினத்தில் தாசிகளிடம் மதி மயங்கிய மைனர் ஒருவரைக் குணபூஷணி என்ற அம்மையார் அறிவுரை கூறித் திருத்துகிறார். பின்னர் அவ்வாறு திருந்திய மைனரே தேவதாசி முறையை ஒழிக்க முக்கியமாகக் களம் இறங்கிச் செயல்படுகிறார்.

நான் இலட்ச இலட்சமாய்த் தட்சணை வைத்துத் தாசிகள் மனம் சாந்தி அடைந்தால் மோட்ச லோகம் சித்திக்குமென்று நினைத்திருந்த காலத்தில் இதோ இருக்கும் காந்தா-கானவதி இவர்களும் இடையில் வந்து சென்னைச் செல்வதற்கு என் வண்டியில் ஏறினார்கள் - முடிவாக என் கையில் கட்டியிருந்த ரூ200 பெறுமானமுள்ள கடிகாரத்தை வேண்டா வெறுப்பாகப் பறித்துக் கொண்டு - அவர்கள் இருப்பிடத்தின் விலாசத்தையும் மாற்றிக் கொடுத்துப் போய்விட்டார்கள் - நம்மை ஏமாற்றியது போல் தானே பிறரையும் இப்பெண்கள் ஏமாற்றுகிறார்கள்? இந்த ஏமாற்றுக்கூட்டத்தை ஒழித்து விடுவதே மேல் என்ற முடிவுக்கு வந்தேன்

(மதிபெற்ற மைனர், பக்.216-217)

என்பது மைனரின் கூற்றாக நாவலில் அமைகிறது.

பெண்களை இழிவு படுத்துகிற வழக்கமாய் அமைந்த தேவதாசி முறையை எதிர்க்கப் புகுந்த அம்மையார் மேற்கொண்ட நடவடிக்கைகள் பல.

1. பெண்களுக்கு விழிப்புணர்வு ஊட்டல்
2. தேவைப்பட்டால் பெண்களை நேரில் சந்தித்து அவர்கள் நிலை குறித்துப் பேசுதல்
3. பாதிக்கப்பட்டபெண்களை மீட்டு வந்து திருமணம் செய்து வைத்தல்

போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

"தேவதாசிகளுக்கு ஓர் எச்சரிக்கை" என்ற கட்டுரையில் தேவதாசி முறை குறித்து,

சகோதரிகளே! எனது சொந்த அனுபவத்தை உங்களுக்கு அறிவிக்க வேண்டி இதை வரைகிறேன். நான் ஒரு நல்ல குடும்பத்தில் பிறந்தவள். என் சிறிய தகப்பனும் பெரிய தாயாரும் என் தந்தையிடம் வந்து என்னை விலைத் தொழிலுக்கு விடும்படியும், பெண் புத்திசாலி என்றும், சங்கீதமும் தெரிந்து கொண்டாளானால் நல்ல சம்பாத்தியம் பின்னால்

கிடைக்கும் என்றும், கல்யாணம் செய்து கொடுக்க வேண்டாம் என்றும், அடிக்கடிச் சொல்லி அவர்களை மதிமயங்க வைத்துப் போவார்கள். இதனால் எனது அன்னையும் தந்தையும் என்னைச் சங்கீதத்திலும் நாட்டியத்திலும் பயில வைக்க வேண்டியதாயிற்று. இத்தகைய ஆடல்களினால் என் வாழ்க்கையின் நடை வேறு விதமாயிற்று. இப்படிப்பட்ட கெடுதல்கள் யாரால் விளைந்தன என்று சிந்தித்தேன். நமது முன்னோர்கள் சாத்திரங்களைப் பற்றி ஆராய்ந்தேன். ஒருவித உணர்ச்சி தோன்றிற்று. ஆண்மக்கள் தங்கள் சுயநலம் பொருட்டும் தாங்கள் சுக ஜீவியாயிருக்க உத்தேசித்தும் நம்மைக் கேவல வாழ்க்கையில் விட்டுக் கொடுக்கிறார்கள்.

என்று குடி அரசு 1925, டிசம்பர் 13 இதழில் எழுதியுள்ளார் (ப.16).

நிலவுடமையாளர்களின் ஆதிக்கத்தில் வாழ்ந்து வந்த தேவதாசிப் பெண்களை மீட்டெடுத்தார். மயிலாடுதுறை பகுதியில் இவ்வழக்கத்தை ஒழிக்கத் துணிச்சலுடன் போராடினார்.

தொடக்கத்தில் அம்மையாரின் போராட்டங்கள் அமைப்புச் சார்ந்ததாக இல்லை. நடைமுறைச் செயல்பாடாகவே இருந்தது. அவர் தேவதாசிகள் வீட்டுக்குச் சென்று அங்கு பொட்டுக் கட்டி விடப் பட்ட இளம்பெண்கள் இருந்தால் அவர்களிடம் ரகசியமாய்ப் பேசுவார். அந்த இளம்பெண்களை இந்த வழக்கத்திலிருந்து விலகும்படி தமது அனுபவத்திலிருந்து எடுத்துக்கூறுவார். அவ்வாறு விலக முன்வரும் பெண்களை அவர்கள் வீட்டை விட்டு வெளியேறச் செய்து அவர்கள் புனர் வாழ்வுக்கும் உதவுவார்" (ப.30)

என்பது அவரது பணிக்குச் சான்றாகும். யுவதி சரணாலயம் நடத்தி வந்த யமுனா பூரண திலகம்மா என்ற ஆந்திரப் பெண்மணி தலைமையில் 1925இல் மாயவரத்தில் இது தொடர்பான மாநாடு ஒன்றை நடத்தினார்.

'தாசிகள் மோசவலை' அல்லது 'மதிபெற்ற மைனர்' என்ற நாவலில் தாசிகளின் பணம் பறிக்கும் நோக்கத்தினை அம்பலப்படுத்திப் பெண்கள்பால் உள்ள குற்றங்குறைகளையும் தயங்காமல் எழுதினார். மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியுடன் இணைந்து அவர்களுக்குப் பல வகையிலும் ஆலோசனைகள் வழங்கிப் பல போராட்டங்களுக்குப் பின் 1947ஆம் ஆண்டு தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன் பிறகு தேவதாசிமுறை முற்றிலுமாக ஒழிக்கப்பட்டது.

பெண்கள் வீட்டை விட்டு வெளியே வராத அந்தக் காலத்தில் குறிப்பிட்ட பெண்களின் நிலை குறித்துச் சிந்தித்து, அவர்தம் தாழ்ந்த நிலையைப் போக்கப் பல்வேறு வழிகளில் முயற்சி எடுத்துப் போராடி இறுதியில் வெற்றி கண்ட ஒரு சிறந்த பெண்ணியவாதியாகவே மூவலூர் இராமாமிர்தத்தம்மையாரை அவரது வாழ்வும், சமூகப்பணியும், இலக்கியப் பணியும் நமக்கு இனங்காட்டுகின்றன. தமிழக வரலாற்றில் பெண்களின் சிக்கல்களைத் தீர்க்க இயலும் பெண்ணியவாதிகளுக்கு அவரது வாழ்வு ஒரு வழிகாட்டியாக அமைகிறது.

சிந்தனையாளர் குஞ்சிதம் குருசாமி

ச. சிவகாமி

சிந்தனையாளர் எனில் ஆண் இனத்தை முன்னிறுத்துதல் இன்றளவும் நிலவும் இயல்பாகும். ஆனால் பெண்ணினத்துள்ளும் வியக்க வைக்கும் சிந்தனைச் சிற்பிகள் உண்டு; ஆணாதிக்கம் எனும் மேகத்தால் மறைக்கப்பட்ட அறிவுப் பகலவர்கள் இவர்கள். மேகத்தால் எப்பொழுதும் ஒன்றை மறைத்துக் கொண்டிருத்தல் இயலாது; பெண் விடுதலை எனும் பெரு முழக்கத்தால் ஆணாதிக்க மேகம் மறைய, பெண் சிந்தனையாளர்கள் பலர் இன்று வெளிச்சத்திற்கு வந்துள்ளனர். அவர்தம் சிந்தனை மழை பெண்ணினத்தின் வறண்ட மனத்திற்கு அறிவு ஊற்றாய் உட்புகுந்தது; இருண்ட உள்ளத்திற்கு ஒளியூட்டியது. இன்று பெண் இனம் தலை நிமிர்ந்து துணிந்து ஆணாதிக்கத்தை எதிர்கொள்வதற்கும் அதனின்று விடுதலை பெற்று மேன்மை கொள்வதற்கும் அன்று அவரிட்ட சிந்தனை வித்துகள் அடிப்படை என்பதில் ஐயமில்லை. அவர்களில் ஒருவரே குஞ்சிதம் குருசாமி அம்மையார். இவ்வாண்டு அவரது நூற்றாண்டு எனும் பெருமைக்குரியது. இந்நாளில் அவருக்குச் சிறப்புச் செய்யும் பாங்கில் அவரை, அவரது சமுதாயச் சீர்திருத்தச் சிந்தனைகளை அறிமுகம் செய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

பிறப்பும் வளர்ப்பும்

12-07-1909ஆம் ஆண்டு, திருவாரூரில் டி. சுப்பிரமணிய பிள்ளை - தங்கம்மா தம்பதியினரின் தலைமகவாகக் குஞ்சிதம் அம்மையார் பிறந்தார். பிறந்தார் என்பதைவிட இருண்மையை ஒழிக்க இறைவன் அவதரிப்பது போல் அறியாமை இருளில் மூழ்கித் துன்புற்ற தமிழ்ச் சமுதாயத்தை, குறிப்பாகப் பெண்ணினத்தை மீட்டெடுக்க அவதரித்தார் என்பது பொருந்தும். சமுதாயத்தில் பின்தங்கிய, எள்ளல்களுக்கு இடனாகிய இசை வேளாளர் குடும்பத்தில் பிறந்த இவருக்கு உடன்பிறந்தார் இரு தங்கைகளும் ஒரு தம்பியுமாவர். (இரண்டாவது பெண்ணான

காந்தம்மா, கல்வியியல் அறிஞர் நெ.து. சுந்தரவடிவேலு அவர்களின் துணைவியாவார்).

பெண்களைப் பள்ளிக்கு அனுப்புவதைக் கண்டித்த, அவதூறு செய்த காலகட்டத்தில் துணிந்து தம் மூன்று பெண்களையும் ஜார்ஜ்டவுன் டே ஸ்கூலில் (பின்னாளில் ஆண்டர்சன் பெண்கள் உயர்நிலைப் பள்ளி) படிக்க வைத்து, அம்மையாரின் பின்னாளைய சாதனைகளுக்கு அடிக்கல் நாட்டிச் சாதனை புரிந்த தந்தையார் இங்குப் பாராட்டப்பட வேண்டியவராவார். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதற்கேற்ப அம்மையார் பள்ளி இறுதித் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்றுத் தங்கப்பதக்கம் வென்றார்.

இராணிமேரி கல்லூரியில் சேர்ந்து பொருளாதாரம், அரசியல் ஆகிய இரு பாடங்களைச் சிறப்புப் பாடங்களாகத் தேர்ந்து படித்தார். பி.ஏ. இறுதியாண்டு (1929) படித்துக் கொண்டிருந்த பொழுதே திருமணம் நிகழ்ந்தாலும் படிப்பைத் தொடர்ந்து நிறைவு செய்தார். ராஜமகேந்திரபுரத்தில் ஆறுமாத காலம் ஆசிரியப்பணி புரிந்தபின் சென்னை லேடி வெலிங்டன் கல்லூரியில் சேர்ந்து ஆசிரியப் பயிற்சி பெற்று எல்.டி. ஆனார்.

திருமணம்

முற்போக்குச் சிந்தனையைப் பிறருக்கு அறிவுறுத்துவதுடன் அமையாது தமது வாழ்விலும் கடைப்பிடிக்கத் துணிந்த, அன்றைய 'ரிவோல்ட்' எனும் ஆங்கில இதழாசிரியர் குருசாமி என்பார் இவரது துணைவராவார். 'தொண்டை மண்டல முதலியார்' எனும் உயர்வகுப்பைச் சார்ந்த இவர் உற்றார் உறவினரின் கடும் எதிர்ப்பிற்கு இடையே 8-12-1929இல் குஞ்சிதம் அம்மையாரைக் கைபிடித்தார். ஈரோட்டில் ஈ.வெ.ரா. பெரியார் மாளிகையில் அவரும் அவரது துணைவியார் நாகம்மையாரும் புரட்சிமிக்க இக்கலப்புத் திருமணத்தை நடத்தி வைத்தனர். முதல் சுயமரியாதைத் திருமணம் என்ற சிறப்பும் இவர்களுக்கு உண்டு (குருவிக்கரம்பை வேலு, குத்தூசி குருசாமி, ப. 721). மூவலூர் இராமாமிர்த அம்மையார் இத்திருமணத்திற்குப் பெரிதும் முயன்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. திருமணத்திற்குப்பின் பெற்றோர் மற்றும் சுற்றத்தாரால் வெறுத்தொதுக்கப்பட்டனர். எனினும் இவர்தம் இல்லறம் நல்லறமாக ஒத்த மன உணர்வுடன் இனிதே நடந்தது. இதற்குச் சாட்சியாக மகள் ரஷ்யாவும் (மருத்துவர்) மகன் கௌதமனும் (பொறியியலாளர்) இன்று உயரிய நிலையில் உள்ளனர்.

அவரது கல்வியறிவு புதிய சிந்தனைகளின் பிறப்பிட மானது. துணைவரின் பணிச்சூழல், கொள்கைகளால் ஆட்கொள்ளப்பட்டார். பெண்ணுக்குத் தாலி அடிமைச் சின்னம்; குங்குமம் சமயச் சின்னம்; அவை தன்மானமுள்ள பெண்ணுக்குத் தேவையில்லை என்ற துணைவரின் கருத்தை ஏற்றுக்கொண்டு அவற்றைக் களைந்தார்; பெற்றோர் எதிர்ப்பிற்கும் ஆளானார். சுயமரியாதை இயக்க மாநாடுகளுக்குத் துணைவருடன் சென்று அறிவார்ந்த சொற்பொழிவாற்றினார். மிகுந்த துணிச்சலுடன் தம் கருத்துரைத்தார். இயக்கக் கொள்கைகளைப் பொது மக்களிடையே பரப்பி அதனை வளர்ப்பதில் பெரும் பங்காற்றினார். ஸ்ரீரங்கம், சுயமரியாதை மாநாடு (1933, மே 21), இராசிபுரம், சேலம் ஜில்லா, இரண்டாவது சுயமரியாதை மாநாடு எனப் பலவற்றில் தலைமைப் பொறுப்பேற்றுச் சிறப்புரை; வானொலி உரை (27-2-1959); இதழ்க் கட்டுரைகள் என இவர் தம் கருத்துப் பரப்பல் தொய்வின்றி நிகழ்ந்துள்ளது.

பணிக்களம்

நாட்டுக்குழைத்தல், சமூக மேம்பாட்டிற்குப் பாடுபடல் போல்வன பொதுவாழ்க்கைக்குத் துணையாவன. பொது வாழ்க்கையையும் இல்லற வாழ்க்கையையும் இரு கண்களாகப் போற்றிய அம்மையார் தம் குடும்ப நலனுக்காக ஊதியம் தரும் பணிகளிலும் ஈடுபட்டார். திருநெல்வேலியில் உதவி மேற்பார்வை யாளர்; மயிலைத் தேசியப் பெண்கள் பள்ளியில் ஆசிரியர் (ஸ்ரீரங்கம் சுயமரியாதை மாநாட்டில் ஆற்றிய சொற்பொழிவு காரணமாகப் பணிநீக்கம்); கடலூர் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் தலைமையாசிரியர்; சென்னை நகரசபை துவக்கப்பள்ளித் தலைமையாசிரியர்; இரண்டாவது உலகப் போரின்போது போர் ஆதரவுப் பிரச்சாரகர்; நகர சபை உயர்நிலைப் பள்ளி ஆங்கிலப் பாட ஆசிரியர்; முதலாவது பெண் கல்வி அதிகாரி என்பனவாக அவரது பணிக்களம் பரந்து விரிந்துள்ளது.

நிறைந்த வாழ்க்கை

சமூகச் சீர்திருத்தத்தையும் மகளிர் மேம்பாட்டினையும் உயிர் மூச்சாகக் கொண்டு அயராது உழைத்த அம்மையார் தம் வாழ்நாளை ஐம்பத்திரண்டே ஆண்டுகளில் முடித்துக் கொண்டார். 30-7-1961இல் புற்றுநோய்க்கு இரையானார். கணவர் கொள்கைக் காகச் சிறைத்தண்டனை பெற்றபோதும், தம் பணிகளில் குறைவு

படாது செயலாற்றிய அம்மையார் வாழ்க்கை அகத்திலும் புறத்திலும் முழுமையான நிறைவு பெற்றதாகும்.

துணைவியாரின் பிரிவாற்றாது துணைவர் குருசாமி, அம்மையார் தனக்கு எழுதியது போல் தானே எழுதிக் கொண்ட மூன்று மடல்கள் அவர் தம் அகவாழ்க்கையின் உன்னதத்திற்குச் சான்றாகும் (குருவிக்கரம்பை வேலு, பக். 604-614). இவர் தமது துணைவியாருக்கு, 'திருமதி குஞ்சிதம் குருசாமி நினைவு மலர்' (30-7-1962) வெளியிட்டு அஞ்சலி செய்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். அம்மையாரின் உரைகள் இதில் தொகுக்கப் பட்டுள்ளன.

அம்மையார் மறைவு குறித்துப் பெரியார், "திருமதி குஞ்சிதம் அம்மையார் மறைவு மிகவும் பரிதாபப்படக் கூடிய நிகழ்ச்சியாகும். அவரது குடும்பத்தினர் மட்டுமல்ல; நகரவாசி களும் சரி, தமிழகத்தில் எல்லோருக்கும் பேரிழப்பாகும். அவரது மறைவு நமக்கு - பொதுமக்களுக்கு ஈடு செய்ய முடியாத நட்ட மாகும். அவர்கள் இயக்கக் கொள்கைகளை உயிரினும் மேலாகக் கருதியிருந்தார்கள். அவர்கள் குடும்பம் முழுவதுமே சுயமரியாதைப் பகுத்தறிவுக் கொள்கையில் அக்கறையும் பிடிவாதமும் கொண்டதாகும். குஞ்சிதம் சுயநலம் கொஞ்சமும் இன்றி உழைத்தவர். தொண்டின் பயனாக எவ்விதப் பலனையும் எதிர்பாராமல் உழைத்தவர். குடும்ப நலத்தைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படவில்லை. அவருடைய **உழைப்புக்குத் தக்க பயனை அனுபவிக்கவுமில்லை**" (மேற்படி 602-603) எனக் கூறியுள்ளார்.

அவரோடு நெருங்கிப் பழகிய நண்பர்களுள் ஒருவரான திருவாசகமணி கே.எம். பாலசுப்பிரமணியம்,

> *இந்திய நாட்டின் புதுமைப் பெண்ணினத்தின் மிகச் சிறந்த மலர்களிலே ஒருவராகத் திகழ்ந்தார் அவர். ஆங்காரமற்ற நெஞ்சுறுதியும் இறுமாப்பில்லாத கலை ஞானமும் பகட்டில்லாத பண்பும் ஆரவார மற்ற நிறைகுணமும் ஒருங்கே பெற்றவர். ஆசை மகளாகவும் அன்பு மனைவியாகவும் பாசமுள்ள தாயாகவும் எல்லாவற்றிற்கும் மேலாக இலட்சிய ஆசிரியராகவும் திகழ்ந்தார் (மேற்படி ப. 616)*

எனப் போற்றியுள்ளார். இவை அம்மையாரின் புறவாழ்க்கைப் பணிகளுக்கு வழங்கப்பட்ட நற்சான்றிதழ்களாகும்.

பொதுவுடைமைபால் அம்மையார் கொண்ட பற்று தம் மகளுக்கு 'ரஷ்யா' எனப் பெயரிட வைத்தது; புத்த சமயச் செல்வாக்கு மகனுக்குக் 'கௌதமன்' எனப் பெயர் சூட்டியது என்பனவும் இங்குக் குறிக்கத்தக்கதாம். இனி, அம்மையாரின் சிந்தனைகளைக் காணலாம்.

ஒரு பொருளின் உள்ளும் புறமும் நன்கு உணர்ந்து அதன் தேவை, தேவையின்மை, மேம்படுத்துதல், பின்பற்றுதல் போல்வன குறித்த அறிவார்ந்த கருத்துகளைச் சிந்தனை என விளக்கலாம்.

கல்வி/பெண்கல்வி

இனி, பெண்களுக்கு ஒரு வார்த்தை. நீங்கள் எல்லோரும் ஆண்களின் கொடுமையினின்றும் மீள வேண்டுமானால் ஒருவர் தவறாமல் கல்வி கற்க வேண்டும். ஜட்ஜ் முதல் போலீஸ் வரையிலுள்ள எல்லா உத்தியோகங்களிலும் ஆண்களோடு போட்டி போட வேண்டும். அதுவரையில் நமது சமூகத்தைப் பிடித்திருக்கும் விதவைத் தன்மை, பாலிய மணம் முதலிய கொடுமைகள் ஒழியவே ஒழியாது. கல்யாணம் என்ற பெயரால் நமது பெற்றோர்கள் நம்மை ஆடுமாடுகளை விற்பதுபோல நமக்கு இஷ்டப்படாத ஆண்களிடம் விற்றுவிட்டு நாம் ஆயுள் முழுதும் கண்ணீரும் கம்பலையுமாக நின்று தவிக்கும் கொடுமை ஒழிய வேண்டுமானால் நம்முடைய பெண்கள் ஒவ்வொருவரும் படித்தாலொழிய முடியாது. (27-2-1959, வானொலிப் பேச்சு)

பெண் மேம்பாடு

கடைசியாக ஒரு வார்த்தை. நீங்கள் (ஆண்கள்) பெண்கள் விஷயத்தில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் எல்லாம் இரண்டே வார்த்தைகளில் அடங்கிவிட்டன. அதாவது சொத்து உரிமையும், படிப்புரிமையுமே ஆகும். பிறகு மற்ற உரிமைகள் தானாகவே தோன்றிவிடும்.

(சேலம் ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகாநாடு, 1933).

நமது நாட்டுப் பெண்கள் நிலையைப் பற்றி ஒரே ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். பெண்கள் உரிமையற்று, வாழ்வதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. எனக்குத் தெரிந்த வகையில் எல்லாவற்றிற்கும் அடிப்படையான காரணம்

என்னவெனில், நமது பெண்களைச் சுற்றி இறுக்கிக் கட்டப்பட்டிருக்கும் மதம் என்ற சங்கிலியை அவிழ்த்துவிடுவோமானால் அவர்கள் உலகில் அரிய பெரிய காரியங்களைச் சாதிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை

(ஸ்ரீரங்கம் - சுயமரியாதை மாநாடு - 1933, மே, 21)

வாய்ப்பு ஏற்பட்டால் எவரும் திறமைசாலியாகலாம்; தகுதியுடையவராகலாம்; 'என்ன இருந்தாலும் பொம்புளை தானே! அவளுக்கு என்ன தெரியும்! என்பவர்களும் 'பெண்களுக்கு அடுப்பங்கரை வேலையும் குழந்தைவளர்ப்பும், கும்மியும், கோலாட்டமும் கற்றுக்கொடுப்பதே அவசியம்' என்று கூறும் கல்வி நிபுணர்களும் ரஷ்யப் பெண்களைப் பற்றிப் படித்திராவிட்டாலும் சர்க்கஸ் பெண்களையாவது பார்த்திருக்கக் கூடாதா? வாசகர்களே நன்றாக யோசித்துப் பாருங்கள்! "வாய்ப்பு வேண்டும்" என்று வம்பு செய்யுங்கள்! *(கோவை முரசு, சன. 1949)*

புரட்சி வெடிகள்

இனி, இவ்வளவு கெடுதிகளுக்கு இருப்பிடமாயிருக்கும் இந்துக் கோவில்களை எப்படிக் கல்விக் கழகங்களாக ஆக்குவது? முதலாவதாகக் கோவிலின் உட்புறத்தில் சரியான ஜன்னல்கள், பெரிய வாசல்கள் முதலியன வைத்து அங்குப் படிப்பே இல்லாமல் ஆயிரக்கணக்கான வருஷங்களாக மேல் ஜாதிக்காரர்கள் என்பவரால் அழுத்தப்பட்டுக் கிடக்கும் ஆதிதிராவிடர்களுக்கு இலவசக் கல்வி சொல்லிக் கொடுக்க வேண்டும். அதற்கு வேண்டிய பணத்திற்குச் சர்க்காரிடத்தில் பல்லைக் காட்டிப் பணம் கேட்க வேண்டியதில்லை. வெண்ணெய்யை வைத்துக் கொண்டு நெய்க்கு அழுவானேன்? எங்கும் பரந்திருப்பதாகச் சொல்லப்படும் கடவுளுக்கு அவசியம் இல்லாத தங்க வாகனங்களையும் ஆசையற்ற கடவுளுக்கு அவசியமில்லாத நகைகளையும் விற்று ஆதி திராவிடக் குழந்தைகளுக்குத் துணி, புத்தகம் முதலியன வாங்கிக் கொடுக்க வேண்டும். செப்புப் பொம்மை தலையில் கொட்டும் குடம் குடமான பாலை, பாலே பார்த்திராத பாமரக் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும்.

வாண வேடிக்கைக்கு விரயமாகும் பணத்தைக் கொண்டு சுகாதாரத்தைப் போதிக்கக் கூடிய கண்காட்சிகள் (Health Exhibition) காண்பிக்க வேண்டும். அவற்றைப் பார்ப்பதற்குச் சகல மதத்தினரையும் அனுமதிக்க வேண்டும்.

உற்சவங்களுக்குச் செலவழிக்கப்படும் இலட்சக்கணக்கான திரவியத்தைக் கொண்டு பெரிய நூல் நிலையங்கள் (Libraries), வாசக சாலை (Reading Rooms) வைக்க வேண்டும். உண்டியலில் வியாதிக்காகவும் பிற காரியங்களுக்காகவும் வேண்டிக் கொண்டு ஜனங்கள் கொண்டுவந்து கொட்டும் பணத்தைக்கொண்டு கோவிலுக்குள் க்ஷயரோக மருத்துவமனை, வைத்திய மருத்துவ மனைகள் முதலிய மருத்துவமனைகளை அமைக்க வேண்டும்.

கடைசியாக இந்து மதங்களையல்லாத பிற மதங்களின் கோவில்களைப் பற்றி ஒரே ஒரு வார்த்தை - அவைகளில் இந்துக் கோவில்களைப் போல் அவ்வளவு வீண் விரயம் இல்லை என்றாலும் அவற்றைக்கூட மக்களது அறிவு வளர்ச்சிக்குப் பயன்படுத்துவதால் எந்தக் கடவுளுக்கும் கோபம் வந்துவிடாது. மனிதன் அறிவு வளர்வதால் எந்தக் கடவுளாவது கோபித்துக் கொண்டு தனக்குத் தேவாலயம் வேண்டும், பள்ளிவாசல் வேண்டும், கோபுரம் வேண்டுமென்று நினைத்துக் கொள்வதாய் இருந்தால் அந்தப் பேராசைக் கடவுள் நமக்குத் தேவையில்லை. (சென்னை ஞானமந்திரக் கூட்ட உரை, குடியரசு 9-10-1932).

இந்தக் கோவில்கள் பெயரைச் சொல்லிச் சோம்பேறிப் பிழைப்புப் பிழைத்து வந்த குருக்கள், பட்டர், தீட்சதர், சங்கராச்சாரி, மகந்து, ஜீயர், பண்டார சந்நிதி முதலியவர் களுக்கும் அவர்களது பரிவாரங்களுக்கும் ஆளுக்கொரு மண்வெட்டியும் கூடையும் கொடுத்து ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு குளமாவது வெட்டும்படிச் செய்ய வேண்டும். (தஞ்சை, இரண்டாவது சுயமரியாதை மகாநாடு, 1932).

வெகு நாட்களாக இருந்துவரும் இந்தச் சாதியைப் போக்கிக் கொள்வதற்குக் கலப்பு மணங்களே கைகண்ட மருந்தாகும். கலப்பு மணங்களினால் உண்டாகும் நன்மைகளை நீங்கள் கவனித்துப் பாருங்கள். முதலாவது இத்தகைய மணங்களில் பற்பல விதமான மூடநம்பிக்கைகளுக்கு இடமில்லை. வேண்டத் தகாத புரோகிதர்களுக்கும் அங்கு வேலையில்லை. மேலும் அத்தகைய மணங்கள் காதல் மணங்களாகும். அவை தம்பதி களின் பெற்றோர்கள் பேரம் செய்யக்கூடிய வியாபாரமல்ல.

(மதுரை - இராமனாதபுரம் ஜில்லா பிராமணர் அல்லாதார் இளைஞர் மாநாட்டுத் தலைமையுரை, 1930).

நமது இயக்கமானது விதவாமணம், கலப்புமணம், காதல் மணம் முதலிய துறைகளிலும் இன்னும் தீவிரமான பிரச்சாரம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன். "நீண்ட நாள் பழக்கம், முன்னோர்கள் செய்தது" என்ற காரணத்தால் எவ்வளவு பெரிய விஷயமானாலும் அது நமது அறிவுக்குப் பொருந்தாவிட்டால் அதனை உடனே விட்டொழிக்க வேண்டியதே நமது கடமையாகும். இவ்விஷயத்தில் வாலிபர்கள்தான் தைரியமாக ஒரு சமூகப்புரட்சி (Social Revolution) செய்ய வேண்டும். ஆகையால் இளைஞர்களாகிய ஆண்களும் பெண்களும் நமது இயக்கத்தைக் கிராமந்தோறும் பரப்பி, கூடிய சீக்கிரத்தில் சுயமரியாதை இயக்கம் இந்தியா முழுவதும் பரவி நமது மக்களுக்குக் கல்வி, நாகரிகம், ஒற்றுமை, சமத்துவம் முதலிய துறைகளில் பயன்பட வேண்டுமாய்ச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் (தஞ்சை, முன் சுட்டியது).

மூடப்பழக்கவழக்கத்திற்குச் சவுக்கடி

தெலுங்கு நாட்டிலும் தமிழ் நாட்டிலும் பக்குவம் அடையாத பெண்களைக் கூட ஆண்களின் மிருக உணர்ச்சிக்கு ஈடுபடுத்திப் பிறகு செயற்கை வழியாக அப்பெண் பக்குவம் அடையும்படிச் செய்யும் வழக்கம் சில ஜாதியருள் இருந்து வருகிறது. இத்தகைய மிருகத்தனமானதும் காட்டுமிராண்டித்தன மானதும் அறிவற்றதும் அநாகரிகமானதுமான ஒரு சாந்தி முகூர்த்த விழாவின் கொண்டாட்டத்தை நானே சமீபத்தில் ராஜமகேந்திரத்தில் பார்க்க நேர்ந்தது. ஐயோ! என்ன கொடுமை! ஆண்களின் முட்டாள்தனத்தைப் பரிட்சை செய்யவா பெண்கள் இந்நாட்டில் பிறந்திருக்கிறார்கள்? பக்குவமடையாத சிறு பெண்ணை அவளுடைய அவயங்களின் வளர்ச்சியைச் சிறிதும் பொருட்படுத்தாமல் ஒரு ஆண் 'வழக்கம்' என்னும் ஒரே காரணத்தால் தனது புத்தியை இழந்து, இந்த மிருகச் செயலுக்கு உட்படுவதென்றால், இவனை நான் மனிதன் என்று கூறுவதா, ஒன்றுக்கும் பயப்படாத குட்டிச்சுவர் என்று சொல்வதா என்பது விளங்கவில்லை. எனக்கு மட்டும் தண்டனை கொடுக்கும் உரிமையைக் கொடுத்தால். இம்மாதிரியான கொடுமைக்குக் காரணமாய் இருக்கும் பெற்றோர்களையும், மிருகக் குணத்தைக் கொண்ட அந்தக் கலியாணக் கோலங்கொண்ட கழுதையையும்

சித்திரவதை செய்து பட்டப்பகலில் பாலைவனத்தில் போட்டு வரும்படி உத்தரவிடுவேன்....

பெண்கள் பக்குவமடைந்தவுடனே அவர்களை வீட்டில் போட்டுப் பூட்டிவிடுகிறார்கள். அதுமுதல் திருமணமாகும் வரையில் அவர்கள் கைதிகளைக் காட்டிலும் கேவலமாக நடத்தப்படுகிறார்கள்... ஆண் மகன் பக்குவமடைந்தவுடன் அடைத்து வைக்கப்படுகிறானா? அப்படியிருக்கப் பெண்களை மாத்திரம் இப்படி அவமானப்படுத்துவதன் கருத்தென்ன? அற்பத்தனமான சந்தேகந் தானே காரணம்? ஆகவே இந்தத் துர் எண்ணமானது நமது ஆண் மகனைவிட்டுப் போக வேண்டுமானால் அவர்களுக்கு உலக ஞானம் வேண்டும். ஆண்கள் கிணற்றுத் தவளைகளாக இருப்பதால் அந்தக் கஷ்டமெல்லாம் பாவம்! ஒன்றுமறியாத பெண்களின் தலையில் வந்துவிழுகிறது. ஆண்கள் உலக ஞானத்தின் ருசியைச் சிறிதாவது உணர்ந்தாலொழிய அவர்களைப் பிடித்திருக்கும் சாதிப் பீடையும் மதப்பீடையும் ஒழிய மார்க்கமில்லை. இவ்விதம் கைதிகளைவிடக் கொடுமையாக நடத்தப்படும் பெண்களை மீட்க வேண்டுமானால் சர்க்கார் கூட இதில் தலையிட்டு இவ்விதம் செய்யும் பெற்றோர்களைத் தண்டிக்க வேண்டும். வேண்டுமென்றே சிறைப்படுத்திய (wilful confinement) குற்றத்தில் இதையும் சேர்க்க வேண்டும். (புதுவை முரசு சிறப்பு மலர், 8.8.1931).

மூடநம்பிக்கைக்குச் சூடு

இந்த ஜில்லாவில் பூ கட்டி வைத்துப் பார்த்தும் சகுனத்தைப் பார்த்தும் புராணத்தில் கயிறு சார்த்திப் பார்த்தும், சாதகத்தைப் பார்த்தும் ஒரு பெண்ணை மற்றொரு ஆணோடு பிணைத்து விடுகிறார்கள். இது எவ்வளவு மதியீனமான செயல் என்பதை யோசித்துப் பாருங்கள். 3 அடி உயரமான பெண்ணுக்கு 6 அடி உயரமுள்ள ஆணுக்குங்கூட 'நல்ல பூ' கிடைத்து விடுகிறது. 14 வயது பெண்ணுக்கும் 64 வயது கிழவனுக்குங்கூட "நல்ல பாட்டு" உதயமாகிவிடுகிறது. ஒரு பெண்ணுக்கும் ஒரு கழுதைக்கும் கூட ஜாதகம் சரியாயிருந்துவிடும். ஆகையால் ஜாதகம் சரியாயிருப்பதாக ஒரு பெண்ணை ஒரு கழுதைக்குக் கட்டிக் கொடுப்பதா என்று கேட்கிறேன். (தஞ்சை, முன் சுட்டிய உ ரை).

சமயங்களுக்குச் சாவுமணி

இந்து சமூகத்திலுள்ள பற்பல சாதிகளுக்கும் அதன் கொடுமைகளுக்கும் மதமே காரணமாகும். ஆகையால் அத்தகைய

தீங்குகளுக்கு ஜவாப்தாரியாயிருக்கும் இந்து மதத்தை அடியோடு ஒழிக்க வேண்டுமென்று உணர்கிறேன்... இந்து மதமும் சமூகச் சீர்திருத்தமும் ஒன்றுக்கொன்று பொருத்தமற்ற விஷயமாகும். அதனால்தான் மதத்தையே ஒழித்துவிட வேண்டுமென்று கூறுகிறேன்.... நமக்குப் பார்ப்பனர்கள் மீது எவ்விதத் துவேஷமும் இல்லை. ஆனால் பார்ப்பனியம் என்ற மதத்தையே எதிர்த்துப் போராடுகிறோம். பார்ப்பனியத்தைத் தான் சரித்திரக்காரர்களும் அகராதி இயற்றியவர்களும் இந்துமதம் என்று கூறியிருக்கின்றனர். ஆகவே பார்ப்பனர்களை யொழிக்க விரும்பவில்லை. பார்ப்பனியமாகிய இந்து மதத்தையே ஒழிக்க விரும்புகிறோம்... கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட நமது அனாதி இந்து மதத்தில் பெண்களின் வெட்ககரமான நிலைமைதான் மிகவும் பரிதாப மாகும். நீங்கள் கேவலம் மிருகங்களுக்கு அளிக்கும் சுதந்திரத்தை யாயினும் உங்களுடைய பெண்களுக்கு அளித்திருக்கின்றீர்களா? (பிராமணரல்லாதார் இளைஞர் மாநாடு, 1930).

நான் கத்தோலிக்கர்களை ஒரு விஷயம் மட்டும் கேட்கிறேன். புரோகிதப் புரட்டிலோ, சாதி வித்தியாசத்திலோ, விக்ரக வணக்கத்திலோ, ஆடம்பரச் செலவிலோ, பாவமன்னிப்புப் புரட்டிலோ, ஏழை, பணக்காரத் தன்மையிலோ இந்து மதத்தை விட எந்த விதத்தில் கத்தோலிக்க மதம் சிறந்தது என்பதைச் சொல்லுங்கள். இந்து மதத்தை விட ஒவ்வொரு அணுவிலும் ஆபாசமானதும் புரட்டுகள் நிறைந்ததுமான ஒரு மதத்தை வைத்துக் கொண்டும், இத்தனை நாள் செய்தது போல் இன்னமும் பாமர ஜனங்களை ஏமாற்றிக் கொண்டிருக்கலாமென்றால் எத்தனை நாளைக்கு முடியும்? உங்களுடைய மாதா கோவில்களில் பறையருக்கு வேறு இடம் பார்ப்பானுக்கு வேறு இடம் இருக்கிறது என்பதை மறுக்க முடியுமா? பணக்காரர்கள் மண்டியிடுவதற்கு ரெத்தினக் கம்பளமும் மற்றவர்களுக்குச் சாதாரணப் பாயும் விரித்திருப்பதை மறுக்க முடியுமா? கல்யாணத்திற்கும் சாவுக்கும் பணத்திற்குத் தகுந்த மாதிரி கோவில் மணியடிப்பது என்ற அக்கிரமம் இல்லையென்று எந்தப் பாதிரியாராவது விரலை மடக்க முடியுமா? பாவமன்னிப்பு என்ற பெயரால் பெண்கள் சமூகத்திற்கு விளைவிக்கும் அவமானத்தை மறுக்க முடியுமா? இந்த 300 வருஷங்களுக்குள் மேல்நாடுகளில் பிராட்டஸ்டெண்டுகளை ஆயிரக்கணக்காய்ச் சித்திரவதை செய்ததை மறுக்க முடியுமா? இவ்வளவு அக்கிரமங்களையும் வைத்துக்கொண்டு ஒரு கன்னத்தில்

அடித்தால் மற்றொரு கன்னத்தையும் காட்டச் சொன்ன மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ள உங்களுக்கு வெட்கமில்லையா? என்று கேட்கிறேன். (ஸ்ரீரங்கம், முன் சுட்டிய உரை).

அரசியல்

இனிச் சமதர்மக் கொள்கைகளின்கீழ் சமூக நிலை எப்படியிருக்கும் என்பதைப் பற்றியும் இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். மனிதர்க்குள் 'மதம்' என்ற அர்த்தமற்ற, பழக்கத்தில் இல்லாத ஒரு விஷயத்திற்காக ஏற்பட்டிருக்கும் வித்தியாசங்களும் சண்டைகளும் கொலைகளும் ஒழியும். ஏனெனில் சமதர்ம அரசாங்கத்தில் மதமற்ற மனிதர்களே இருப்பார்கள். ஆண்கள் பெண்களை அடக்கிவரும் கொடுமை ஒழியும். நிறவேற்றுமை, சாதி வேற்றுமைக்கு இடமிருக்காது. பண்டார சந்நிதிகள், முல்லாக்கள், பாதிரிகள், சங்கராச்சாரிகள் முதலான சோம்பேறிக் கூட்டங்களுக்கும் சமதர்ம ஆட்சியில் இடமே கிடையாது. இவர்களுக்கு ஆளுக்கொரு கோடாலி யாவது, ரிக்ஷா வண்டியாவது சர்க்கார் செலவில் வாங்கிக் கொடுக்கப்படும். மனுதர்மம் போன்ற ஆபாசப் புத்தகங்களும் வேதம் போன்ற உபயோகமற்ற விஷயங்களும் மியூசியத்துக்கு வேண்டிய காப்பி போகமற்றவை எரிக்கப்படும்." (இராசிபுரம், முன் சுட்டிய உரை).

நம்மை வாதைப்படுத்தும் அரசியல் நிலைமையைப் பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். தேசத்திலுள்ள பெரிய தேசாபிமானியைப் போல் நானும் சுயராஜ்யம் வேண்டுமென்றுதான் கூறுகின்றேன். ஆனால் அது வருணாசிரமிகளின் ஆட்சியாக இருக்கக் கூடாது. அந்தச் சுயராஜ்யத்தின் நோக்கம் ஒவ்வொருவருக்கும் சுயமரியாதையளிக்கக் கூடியதாய் இருக்க வேண்டும். தேசியச் சுயமரியாதையைவிடத் தனிப்பட்ட நபர்களின் சுயமரியாதைதான் முக்கியம். தனிப்பட்ட நபர்கள் சேர்ந்துதான் தேச மக்களாகின்றனர். ஆனால் அப்படிப்பட்ட சுயமரியாதை இல்லாததால்தான் இப்போதைய அரசியலில் மாணவர்கள் கலந்து கொள்ளக் கூடாதென்று எனது மாணவ நண்பர்களுக்கு வணக்கத்துடன் எச்சரிக்கை செய்கிறேன் (பிராமணரல்லாதார்..... உரை).

மனையறம்

குடும்பம் நடத்துவோர் முதலில் தெரிந்துகொள்ள வேண்டியது அவரவர் வேலையை அவரவரே செய்து கொள்வது

என்பதுதான். இயந்திர உதவி மூலம் வீட்டு வேலைகளைக் குறைத்துக் கொண்டால் பெண்களுக்குச் சக்திக்கு மீறிய வேலைப் பளு இல்லாமலிருக்கும், ஓய்வு நேரம் மிகுதியாகக் கிடைக்கும். குடும்பம் நடத்துவதில் நான்கு இலட்சியங்கள் எல்லோருக்கும் பொதுவாயிருக்கின்றன.

1. வீட்டிலுள்ள யாவருக்கும் போதுமான பொருத்தமான உணவு
2. வரவுக்கேற்ற செலவு
3. வேலைக்காரர்களை மேற்பார்வையிடுதல்
4. வீட்டுச் சாமான்களையும் குழந்தைகளையும் தூய்மையாக வைத்துக் கொள்ளுதல்

இவற்றில் ஆண்களும் ஒத்துழைத்தால்தான் ஒவ்வொரு நாளும் இவற்றைக் கவனிக்க முடியும். குடும்ப நிர்வாகத்தில் முதலில் கவனிக்க வேண்டியது வரவுக்கேற்ற செலவு. இது ஒன்றுதான் எந்தக் குடும்பத்துக்கும் ஆணிவேர். ஆதலால் அரசாங்க நிர்வாகத்தில் ஆண்டுதோறும் நடப்பது போலவே குடும்ப நிர்வாகத்திலும் முன்கூட்டியே வரவுசெலவுத் திட்டம் வகுத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு குடும்பத்திலும் முக்கியமான இருவராவது **ஆயுள் இன்ஷூரன்ஸ் செய்துகொள்ள வேண்டியது மிகமிக அவசியமாகும்.** தமிழ்நாட்டுக் குடும்ப நிர்வாகத்தில் முக்கியமான மாறுதல் ஒன்று தேவை. அதாவது நம் சமையல் முறையில் நல்ல மாறுதல் ஏற்பட வேண்டும். வெறும் நாக்கு ருசிக்காகவே பல்வேறு பண்டங்களையும் உணவுகளையும் தயார் செய்வது குறைக்கப்பட வேண்டும். சுருக்கமாகவும் விரைவாகவும் உணவுத் தயாரிக்கப்படுமானால் நம் பெண்களில் இலட்சக்கணக்கானவர்கள் நாள்தோறும் 10-12 மணிநேரம் அடுப்பங்கரையிலேயே கிடந்து புழுங்க வேண்டிய அவசியமிருக்காது.

குறிப்பாக, 'தன் கையே தனக்குதவி' என்ற பழமொழிப்படி அவரவர் வேலையை அவரவரே கவனித்துக் கொண்டால் வீட்டு வேலைகள் மிகச் சுளுவாக முடிந்துவிடும். துணி துவைப்பது, உண்பது, கழுவுவது முதலிய எல்லாத் துறைகளுக்கும் இது பொருந்தும் (வானொலி உரை, 27-2-1959).

உணவு

நல்ல உடற்கட்டோடு வாழ்வதற்கும் பல்வகைச் சத்துக்களும் ஏறத்தாழ விகிதாச்சார அளவுக்காவது இருக்கக்

கூடிய உணவை உட்கொள்வதுதான் அறிவுடைமை. மனிதன் பகுத்தறிவுடையவன் என்பதற்கு மற்றத் துறைகளில் எப்படியிருந்தாலும் உயிர் வாழ்வதற்கு முக்கியமான உணவிலாவது அறிவோடு நடந்து கொள்ள வேண்டாமா?.... உணவுப் பொருட்களில் நீர், பிசிதம் (ப்ரோட்டின்), கொழுப்பு, மாச்சத்து (கார்போ-ஹைட்ரேட்), உப்புச்சத்து (மினரல்ஸ்), உயிர்ச்சத்து (வைட்டமின்) ஆகிய அறுவகை சக்திகள் இருக்கின்றன. இந்த ஆறும் சரியான அளவுக்குக் கலந்துள்ள உணவுதான் உத்தமமான உணவு. (விடுதலை - பெரியார் மலர், 1956).

எந்தக் காரணத்தை முன்னிட்டும் உணவின் அளவிலோ, தரத்திலோ, சிக்கனம் காட்டவே கூடாது. போதுமான சத்தான உணவு இல்லாவிடில் நோய் நொடிகளும் முதுமையும் முந்திக் கொண்டு வரும். ஆதலால் நல்ல உணவுக்காக, உழைப்பை அதிகமாக்கி ஊதியத்தையும் பெருக்க வேண்டுமே தவிர, ஊதியக் குறைவுக்காக உணவுச் சிக்கனம் கூடவே கூடாது. நல்ல உணவு என்றால் மிதமிஞ்சிய உணவு அல்ல; டாம்பீகமான உணவும் அல்ல.... எதைச் சாப்பிட வேண்டும்? எப்போது சாப்பிட வேண்டும்? ஆகியவற்றை உணர்ந்து உண்டாலே முக்கால்வாசி நோய்களைத் தடுத்துவிட முடியும்.

தவிடு நீங்காத அரிசியைப் பொங்கிச் சாப்பிடுவதும் கேழ்வரகு, கோதுமை, சோளம், வேர்க்கடலை போன்ற உணவுகளை மாற்றி மாற்றி உண்பதும் உடலுக்கு நல்லது. காரத்தையும் புளியையும் குறைப்பது பல நோய்களுக்கு நிரந்தர விடுமுறை கொடுப்பது போலாகும்.... பெரும்பாலோர்க்குச் சாப்பிடத்தான் தெரியாது; மற்றதெல்லாம் தெரியும்! 'லபக் லபக்' என்று காகம் விழுங்குவது போல விழுங்கிவிட்டு வேலைக்கு ஓடுவது சாப்பாடே அல்ல, அது நோய் நோக்கும் ஒரு விளையாட்டு (வானொலி உரை, 27-2-1959).

அம்மையாரின் கனல் தெறிக்கும் இடிமுழக்க உரைகளும் அறிவார்ந்த வழி நடத்தல்களும் அன்றைய குடியரசு இதழ்களில் பதிவு பெற்றுள்ளன. அம்மையார் சிந்தனைகளின் வீர்யமும் ஆழமும் தூண்டலும் அப்படியே கற்பாருக்குக் கிடைக்க வேண்டும் எனும் நோக்கில், அவர் வாய்மொழி அங்ஙனமே இதில் வழங்கப்பட்டுள்ளது. மதிப்பீடுகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் சமூக, பெண்ணின மேம்பாடே அவரது சிந்தனைகள் அனைத்திற்கும் அடிப்படையாய் நிற்றல் வெளிப்படை. அவரது அறிவையும் துணிவையும் இன்றைய சமுதாயம் ஊன்றிக் கவனித்தல் இன்றியமையாததொன்று.

சாதனைகள்

1. இந்தியாவிலேயே முதன் பெண் கல்வியதிகாரி
2. முதன்முதல் சுயமரியாதைத் திருமணம் புரிந்தவர்
3. பெண் தலைமை என்பது இன்றும் அரிதானதொன்றாக இருக்க, பல சுயமரியாதை இயக்க மாநாடுகளைத் தலைமையேற்று அன்று நடத்தியுள்ளார். 1931ஆம் ஆண்டு டிசம்பர் 26, 27 ஆகிய நாட்களில் சென்னையில் நடந்த சுயமரியாதை மாநாடு மற்றும் பெண்கள் மாநாட்டைத் தம் துணைவருடன் இணைந்து முன்னின்று நடத்தினார்.
4. புறச் சமயங்களை எதிர்த்துரைக்க இன்றும் அஞ்சும் சூழலில் பொதுநோக்கில் இந்து மதத்துடன் பிறவற்றையும் கடிந்துரைத்திருக்கும் துணிவும் ஒரு சாதனையே.
5. கல்வி வாசனை என்பது பெண்களுக்கு அரிதினும் அரிதாக இருந்த காலத்தில் உயர்கல்வி கற்று அதனைத் தக்கவாறு பயன் கொண்டதும் பாரட்டத்தக்கதே. சமூகச் சீர்திருத்தம் என்பதனோடு அரசியல், மனையியல், உணவியல், நாட்டுநலம் எனப் பன்முகப் பார்வையும் அவற்றில் தெளிந்த சிந்தனையும் கொண்டிருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும். எப்பொருள் பற்றிப் பேசினும் அதனுடன் பெண்கல்வியை வலியுறுத்தியமைதலும் இதன் காரணமாகலாம்.
6. பலவாறான எதிர்ப்புகளையும் மிரட்டல்களையும் துணிந்து எதிர்கொண்டு இறுதிவரை கொண்ட கொள்கையில் உறுதிப்பாட்டோடு நின்றவர். இதனைத் தன் உயிர் பிரிவின் முன் நாள் அகில இந்தியப் பகுத்தறிவாளர் சங்கத்தின் செயலாளரும் குடும்ப நண்பருமான எஸ். இராமநாதனை அழைத்து வரச் செய்து அவரிடம், 'நான் ஒரு பகுத்தறிவுவாதி, நாத்திகப் பெண் என்பதை நீங்கள் அறிவீர்கள். இப்பொழுது நான் மரணப் படுக்கையில் இருக்கின்றேன். நான் உங்களுக்கு ஒன்றை நினைவூட்டுகின்றேன். அதையே மற்றவர்களுக்கும் சொல்லவும். நான் ஒரு பகுத்தறிவுடைய நாத்திகப் பெண்மணி யாகவே சாகிறேன்'' என்றுரைத்தது (குருவிக்கரம்பை வேலு, முன்சுட்டியது, ப. 600) கொண்டறியலாம்.

7. அம்மையாரின் சாதனைகளுள் மிக்க இன்றியமையாத பணி, பாரதிதாசனைத் தமிழுலகுக்கு அறிமுகப்படுத்திய தாகும். பாரதிதாசனோடு மிக நெருங்கிய நட்புக் கொண்டிருந்தவர்; உரிமையோடு தன் மகளுக்காகப் 'பெண் பிள்ளைத் தாலாட்டை'ப் பாடச் செய்தவர்; அதனால் 'ஆண்பிள்ளைத் தாலாட்டு'ம் அவரால் மலரச் செய்தவர் அம்மையார்.

இவரே முதன்முதலில் பாரதிதாசனின் அங்கொன்றும் இங்கொன்றுமாக வெளிவந்த கவிதைகளைத் திரட்டி 1933இல் 'பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுப்பை' வெளியிட்டார். "பாரதிதாஸன் கவிதைகள்", ஆசிரியர் பாரதிதாஸன் (கனக சுப்புரத்தினம், புதுச்சேரி) வெளியிட்டவர் டி.எஸ். குஞ்சிதம் குருசாமி, பி.ஏ., எல்.டி., வேணுகோபாலபுரம், கடலூர் என்.டி., 1933, விலை அணா எட்டு என்பது அதன் முன்பக்கச் செய்தி. அதனுள் வெளியிடுவோர் குறிப்பு எனக் குறிப்பிட்டு அம்மையார்,

> *"தோழர் பாரதிதாஸன் அவர்கள் பாடல்கள் இதுகாறும் பத்திரிகைகளில் மட்டுமே வெளி வந்திருக்கின்றன. ஒன்றிரண்டு மட்டும் மிகச்சிறு புத்தகங்களாக வெளியாகியிருக்கின்றன. ஒரு நல்ல புத்தக வடிவில் அவரது கவிகளைப் பார்க்க வேண்டும் என்றெண்ணிய பலருள் நானும் ஒருத்தி. இந்தப் பலநாள் ஆசையும் தோழர் நாராயணசாமி அவர்களின் பொருளுதவியும் டாக்டர் மே. மாசிலாமணியவர்களின் ஆதரவும், தோழர் குருசாமியவர்களின் தூண்டுதலும் சேர்ந்ததே இப்புத்தகம்.*
>
> *இப்புத்தகத்திலுள்ள கவிகள் சுமார் 300 கவிகளி லிருந்து பொறுக்கப்பட்டவை. பல அருமையான கவிகள் எவ்வளவு முயன்றும் கிடைக்கவே இல்லை; இடமின்மையால் பல கவிகள் நின்றுவிட்டன. அவசரத்தினால் ஆனால் தவிர்க்கக்கூடிய சில காரணங்களால் இப்புத்தகத்தை நினைத்த மாதிரியில் அத்தனை சிறப்பாக வெளியிடக் கூடவில்லை. இப்பதிப்பிலுள்ள குற்றங்களை வாசகர்கள் தயைகூர்ந்து தெரிவித்தால் மறு*

பதிப்பில் அவைகளைக் களைந்து இன்னும் அதிகப் பாடல்களைச் சேர்த்து வெளியிடலாம். தமிழர்கள் ஆதரிக்கக் கோருகிறேன். டி.எஸ். குஞ்சிதம் (மேற்படி, ப. 390).

என உரைத்துள்ளார். இந்நூலின் முன்னுரையில் பெரியார் ஈ.வே.ரா.,

இப்பாட்டுகளைப் பாடிய தோழர் பாரதிதாசன் அவர்களுக்கும் இவைகளைத் திரட்டி வெளியாக்கிய தோழர் குஞ்சிதம் குருசாமி அவர்களுக்கும் சீர்திருத்த உலகம் கடப்பாடுடையதாகும்

(மேற்படி ப. 391)

எனப் பாராட்டியுள்ளார்.

இங்குச் சற்று நின்று, நிதானித்துச் சிந்திக்க வேண்டிய செய்தி ஒன்றுண்டு. இந்நூலுக்குப் பொருளுதவி செய்தாருக்கு நூலைச் சமர்ப்பணம் செய்து பாடிய பாரதிதாசன் அன்பின் மிகையால், நட்பின் செழுமையால், பெண்மையை மதிக்கும் பெண்ணுரிமை வேண்டும் பண்பால், தன் மேன்மைக்கு வழிவகுத்த நன்றியால் போலும் அம்மையாருக்கு அத்தகு சிறப்பு யாதும் செய்யவில்லை. "புகழ்மலர்கள்" எனும் பாராட்டுப் பெற்றார் பட்டியலிலும் அவருக்கு இடமில்லை. இத்துடன், "இப்பதிப்பிற்குப் பின்வந்த அத்தனை பதிப்புகளிலும் வெளியீட்டாளராகிய அம்மையாரின் முன்னுரையும் பெயரும் இல்லாமற் போனது வியப்பிற்குரியதன்று" என்பதும் (மேற்படி 391) எண்ணத்தக்கது.

பெண்மையை உளமார மதித்துப் போற்றத்தயங்கும், உண்மை எதிரிடத்து இருந்தால் அதனை ஏற்றுக்கொள்ள மறுக்கும் உலகியலுக்கு ஏற்ப அன்றைய தமிழக அரசாலும் பாரதிதாசன் நூற்றாண்டு விழாவின்போது புறக்கணிக்கப்பட்டார். அம்மையார் பதிப்பின் பெருமையைச் சுட்டி அன்று இந்தியன் எக்ஸ்பிரஸ் (கவனிக்க: ஆங்கில நாளிதழ்) 'மறக்கப்பட்ட போராளி' (forgotten crusader - 30-4-1990) எனத் தலைப்பிட்டு எழுதிய பின்பே பாரதிதாசன் நூற்றாண்டில் அம்மையாருக்குப் 'பாவேந்தர் விருது' வழங்கப்பட்டது. அன்னை சார்பில் மகள் ரஷ்யா அதனைப் பெற்றுக் கொண்டார்.

நிறைவுரை

பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டின் முன் பகுதியில் வீறுகொண்டு செயல்பட்ட பெண்கள் இரு அணியினராக இருந்தனர். நாட்டு விடுதலையை முதன்மையாகக் கொண்டவர் காங்கிரசு இயக்கத்தில் (மிகுதியும் உயர் வகுப்பினர்) தம்மை இணைத்துக் கொண்டனர். சமூக விடுதலைக்கு முன்னுரிமை வழங்கியோர் (பெரும்பாலும் தாழ்த்தப்பட்டோர்) பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் தம்மைப் பிணைத்துக் கொண்டனர். இரு சாராரும் விடுதலைக்குப் பின்னும் தம் அமைப்புகளின் வழி நாட்டு முன்னேற்றத்திற்குப் பாடுபடுவதைத் தொடர்ந்தனர். அவ்வகையில் பெரியாரின் சிந்தனைகளில் தம்மை, குஞ்சிதம் குருசாமி அம்மையார் ஈடுபடுத்திக் கொண்டார்; இறுதி மூச்சு வரை சமூக விடுதலை, குறிப்பாகப் பெண் விடுதலைக்காகப் போராடினார். சுயமரியாதை இயக்க வரலாற்றில் இன்றியமையா இடம் கொண்ட அம்மையாருக்கு அவ்வியக்கம் என்ன கைம்மாறு செய்தது என்பது அறியுமாறில்லை.

அம்மையாரின் சிந்தனைகளில் பிறருக்குக் கருத்து முரண்பாடு இருக்கலாம். அதுவும் இயல்பே. ஆயினும் அவை உணர்த்தப்பட்ட காலச்சூழல் என்ன என்பதையும் கருத்தில் கொண்டு மறுவாசிப்புச் செய்தால் அவர் கருத்துகளின் வேகம், நோக்கம் புலப்படும்.

> *இச்சந்தர்ப்பத்தில் ஒரு வார்த்தை. நான் சொல்லுகிற விஷயங்களில் சில வார்த்தைகள் சிலருக்குச் சற்று அதிக காரமானதாயிருக்கலாம். அதற்கு நான் என்ன செய்ய முடியும்? ஆயிரக் கணக்கான வருஷங்களாய் மூடநம்பிக்கைகளிலும் குருட்டுத்தனமான பழக்கவழக்கங்களிலும் ஈடுபட்ட ஒரு ஜன சமூகத்திற்குக் கொஞ்சம் வேகமான மருந்து கொடுத்துத்தான் வியாதியைத் தீர்க்க வேண்டி யிருக்கிறது*

எனும் அம்மையார் கூற்று இணைத்து எண்ணற்பாலது.

மு. வளர்மதி தொகுத்த சொற்பொழிவுக் கட்டுரைகளின் அடிப்படையிலேயே இக்கட்டுரை எழுந்துள்ளது. அம்மையாரின் உரைகளும், சொற்பொழிவுகளும் முழுமையாகக் கிடைக்குமானால் (திராவிடக் கழகத்தார் இதற்கு முன்வர வேண்டும்), அவரது பெருமை மேலும் உயரும் என்பதில் ஐயமில்லை.

விடியும் நல்லொளி காணுதி நின்றே
மேவு நாகரிகம் புதிதொன்றே
கொடியர் நம்மை அடிமைகள் என்றே
கொண்டு, தாம் முதல் என்றனர் அன்றே
அடியொடந்த வழக்கத்தைக் கொன்றே
அறிவு யாவும் பயிற்சியில் வென்றே
கடமை செய்வீர் நந்தேசத்து வீரக்
காரிகைக் கணத்தீர் துணிவுற்றே
(பாரதியார், பெண் விடுதலை: 3)

துணை நூல்கள்

1. சுயமரியாதை இயக்க வீராங்கனைகள் (கட்டுரைகளும் சொற்பொழிவுகளும்) இரு தொகுதிகள்; மு. வளர்மதி (தொகு.); கருப்புப் பிரதிகள்; சென்னை, தொகுதி 1: இ.ப. 2008, மு.ப. 2008.

2. குத்தூசி குருசாமி; குருவிக்கரம்பை வேலு; வளவன் பதிப்பகம்; சென்னை, இ.ப. 1991.

3. நினைவு அலைகள்; நெ.து. சுந்தரவடிவேலு; வானதி பதிப்பகம், சென்னை.

4. பகுத்தறிவுச் சுடரொளி - குஞ்சிதம் குருசாமி, மு. வளர்மதி; சிந்தனையாளன் - பொங்கல் சிறப்பு மலர், சிந்தனையாளன், சென்னை, 2007, பக். 161-167.

சகோதரி சுப்புலட்சுமி

லொ.ஆ. உமாமஹேஸ்வரி

காலங்காலமாக மகளிர் ஆணாதிக்கச் சமுதாயத்தால் ஒடுக்கப்பட்டு வந்திருப்பினும், எழுச்சியுறும் மகளிர் சமுதாயத்தில் தோன்றிக்கொண்டேதான் உள்ளனர். பெண்களைக் கட்டியிருக்கும் தளையினின்றும் அவர்கள் விடுபடுவதோடு, தம்மைப் போன்ற பிற மகளிரும் சமுதாயத் தளையிலிருந்து வெளிவர உதவி, அரிய சாதனை படைக்கும் மகளிர் இருப்பதும் கண்கூடு. அவ்வகையில் சிறந்த சமூகச் சீர்திருத்தவாதியாகவும், கல்வியாளராகவும் திகழ்ந்த சகோதரி சுப்புலட்சுமி குறித்தும், அவர்தம் பணிகள் குறித்தும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

சென்னை மாகாணத்தின் முதல் பெண் பட்டதாரியான சுப்புலட்சுமியின் இளமைக்கால வாழ்க்கையுடன், அவர் குடும்பப் பின்னணியையும் காண்பது இன்றியமையாததாகிறது. சுப்புலட்சுமியின் பிற்காலச் சமூக, கல்விப் பணிகளுக்கு அவர் குடும்பம் அடித்தளம் அமைத்துக் கொடுத்துள்ளது எனலாம். எனவே சுப்புலட்சுமியின் வரலாற்றினை இளமைக்காலமும் கல்வியும், சுப்புலட்சுமியின் கல்விப்பணிகள், சமூகநலப்பணிகள், சட்டமன்ற உறுப்பினராக ஆற்றிய பணிகள், இலக்கியப் பணிகள் எனும் ஐந்து நிலைகளில் காணலாம்.

இளமைக் காலமும் கல்வியும்

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 'ரிஷியூர்' எனும் கிராமத்தில், மரபுக் கோட்பாடுகளை விடாது பின்பற்றும் அந்தணர் குடும்பத்தில், 1886ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 18ஆம் தேதி சுப்பிரமணிய அய்யர், விசாலாட்சி தம்பதியருக்குப் புதல்வியாகப் பிறந்தவர் சுப்புலட்சுமி. இவரின் தந்தை வழிப் பாட்டனார் வெங்கட்ராம அய்யர் சமயப்பற்று மிக்கவர். எனினும், இவர் தம் புதல்வர்களை ஆங்கிலக்கல்வி கற்க அனுப்பியதுடன், சென்னை மாநிலக் கல்லூரிக்கு அனுப்பிக் கல்லூரிக் கல்வி பெறவும் வழிவகை செய்தார். சுப்புலட்சுமியின் தந்தை 'பொதுப்பணிப் பொறியாளர்' (Civil Engineer) பட்டம் பெற்றவர்.

சென்னை மாகாணத்தின் பொதுப்பணித்துறையில் (Public Works Department) பணியாற்றியவர். எந்நிலையிலும் தன் புதல்வியான சுப்புலட்சுமி சிறந்த கல்விபெற வேண்டும் என எண்ணியதுடன், தான் சார்ந்த சமூகத்தின் கட்டுப்பாடுகளை மீறித் தன் புதல்விக்குக் கல்வியறிவு ஊட்டியவர். சுப்புலட்சுமியின் சித்தி வாலாம்பாள் (இளம் விதவை) இவர் கல்வியறிவு பெற உதவியதுடன், பிற்காலத்தில் சுப்புலட்சுமியின் அனைத்துப் பணிகளிலும் உடன் உறுதுணையாக நின்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. பாலம், சாவித்திரி, சுவர்ணம், நித்யா என உடன்பிறந்தோர் நால்வர். சுப்புலட்சுமி கல்வி பயின்று ஆசிரியையாகப் பணியாற்றிய காலத்தில் பாலம், சாவித்திரி இருவரும் அதே வகுப்பில் பயின்றதுடன், சுப்புலட்சுமியை 'Sister' என அழைத்ததால், பிறரும் அதேபோல் அழைக்க அப்பெயரே இவருக்கு நிலைத்தது. எனவே, இவர் (Sister. Risiyur (R) Subbramaniya Iyer (S) Subbulakshmi) சகோதரி R.S. சுப்புலட்சுமி எனப் பெயர் பெற்றார்.

கல்வி

1889ஆம் ஆண்டு சுப்புலட்சுமிக்கு மூன்று வயதான பொழுதே, பள்ளிக்கு அனுப்பத் தீர்மானித்தனர் இவருடைய பெற்றோர். 19ஆம் நூற்றாண்டில் 'பெண்கல்வி' என்பது அரிதான ஒன்று. அக்கால மக்களால் பின்பற்றப்படாததும், கல்விக்காகப் பெண்களை வெளியே அனுப்புவது இழிந்ததாகக் கருதப்பட்டதும் ஆன ஒன்று. பெண் குழந்தைகள் வீட்டிலுள்ள பெரியோரிடம் புராண இதிகாசங்களை வாய்வழியாகக் கற்பது, இறைவன் துதிப் பாடல்களைப் பாடக் கற்றுக்கொள்வது, வீட்டு வேலைகளில் பயிற்சி பெறுவது என வாழ்ந்த காலக்கட்டத்தில், சுப்புலட்சுமியின் பெற்றோர் எடுத்த முடிவு மரபுநெறிக்கு மாறாகக் கருதப்பட்டது. ஐந்தாவது வயதில் (1891), இவரை வீட்டிற்கு அருகில் உள்ள தொடக்கப்பள்ளியில் சேர்த்தனர். உறவினர்களிடமிருந்து இதற்குக் கடும் எதிர்ப்பு ஏற்பட்டது. இக்காலக்கட்டத்தில், தன் சித்தி வாலாம்பாளிடமிருந்து இராமாயணம், மகாபாரதம், நந்தனார் கீர்த்தனை, அருணாசலக் கவிராயர் இயற்றிய பாடல்கள் போன்றவற்றைக் கற்றார். தமிழ் இலக்கியத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொள்ள இவை உதவின. 1895ஆம் ஆண்டு (9 வயது), சென்னை மாகாணத்தில் நடைபெற்ற தொடக்கப்பள்ளிகளுக்கான பொதுத் தேர்வினை எழுதிச் செங்கல்பட்டு மாவட்டத்தில் முதல் இடத்தைப் பெற்ற மாணவி எனும் பெருமை பெற்றார்.

இந்த வயதில்தான், விதவைப் பெண்களுக்கு அளிக்கப்படும் தனிப்பட்ட கொடுமைகளைக் குறித்து முதன்முதலில் அறிந்து கொண்டார். தன் வீட்டிலேயே, இளம்வயது கொண்ட சித்தியை வெள்ளைப்புடவையுடுத்தி, தலையில் மொட்டை அடித்து விழாக்களில் கலந்துகொள்ள விடாமல் தனிமைப்படுத்தி இருப்பதைக் கண்டு அவர் மனம் புண்பட்டது. பிற பெண்களில் இருந்து, விதவையான பெண்கள் தனிமைப்படுத்தப்படுவது கண்டு அவர் ஆழ்மனத்தில் வடு ஏற்பட்டது (A Child Widow's Story, Monica Felton, p.21).

இந்நிலையில் 11½ வயதில் சுப்புலட்சுமிக்குத் திருமணமானது. திருமணமான சில வாரங்களிலேயே இவரும் 'இளம் விதவை' எனும் கடுந்துயர்க்கு ஆளானார். முன்னரே, விதவைகள் நடத்தப் பெறும் முறைகளைக் கண்டு துன்புற்றிருந்த சுப்புலட்சுமிக்கு வாழ்நாள் தண்டனையாகத் தனக்கும் அதே நிலை கிட்டியதைக் கண்டு துணுக்குற்றார். நன்றாக உடை உடுத்திக் கொள்ளவோ, உணவு வகைகளை உண்ணவோ, திருமணம் முதலிய பிற விழாக்களில் கலந்து கொள்ளவோ அனுமதிக்கப்படவில்லை. எனினும், இவருடைய பெற்றோர் இதனை விரும்பவில்லை. சுப்புலட்சுமியின் வாழ்க்கை வீணே கழிவதை விரும்பாமல், சமூகத்தை எதிர்த்துக் கொண்டு மீண்டும் 'கல்வி கற்க' அனுப்புவதற்கு முடிவு செய்தனர். சுப்புலட்சுமியின் வாழ்வில் திருப்புமுனையாக இது அமைந்தது எனில் மிகையில்லை. இதன்பின் சுப்புலட்சுமியின் கல்விப் பயணம் தடங்கலின்றிச் சென்றது எனலாம். முதலில் வீட்டிலேயே ஆங்கில எழுத்துக்களைத் தன் தந்தையின் மூலம் கற்றார். அத்துடன் சமஸ்கிருதம், கணிதம், வரலாறு, புவியியல் முதலான பாடங்களையும் கற்றுக் கொண்டார். இத்துடன் தன் விதவை வாழ்வினின்றும் விலக்குப் பெற்றார்.

1898ஆம் ஆண்டு சென்னை எழும்பூரில் இருந்த "பிரசிடென்ஸி செகண்டரி பயிற்சி பள்ளி"யில் சேர்ந்தார். இங்குச் சேரும்பொழுதே ஆங்கிலம் நன்றாகப் பேசும் திறன் பெற்றிருந்தார். வகுப்பில் ஒரே இந்து மாணவியாக இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. 1900களில் கீழ்நிலை நடுத்தரப் பள்ளிகளுக்கு இடையிலான பொதுத் தேர்வில் (Lower Secondary Public Exami-nation) சென்னை மாகாணத்தில் மூன்றாம் இடத்தைப்பெற்றுத் தேறி, வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

1903ஆம் ஆண்டு நான்காவது பாரத்தில் (Fourth Form) சேர்ந்து 'இலத்தீனை' இரண்டாவது மொழியாகவும், கோடை

விடுமுறை நாட்களில் 'மலையாளமும்' கற்றுத் தேர்ந்தார். டிசம்பர் திங்கள் 1905ஆம் ஆண்டு 'மெட்ரிகுலேஷன்' தேர்வு எழுதி அனைத்துப் பாடங்களிலும் அதிக அளவில் மதிப்பெண் பெற்றார். 12 ஆண் மாணவர்கள் படித்த வகுப்பில் ஒரே மாணவியாகப் படித்து, அதிக மதிப்பெண் பெற்றது சர்ச்சைக்குரிய செய்தியானது. சுப்பிரமணிய அய்யர் தேர்வாளர்களுக்குக் கையூட்டுக் கொடுத்துத் தன் புதல்விக்கு மதிப்பெண் பெற்றுத்தந்ததாகப் புரளி கிளப்பினர். 'பெண்' அதிக மதிப்பெண் பெறுவதைக்கூட விரும்பாத சமுதாயம் இருந்த காலத்தில், சுப்புலட்சுமியின் கல்விப்பயணம் கடினமான எதிர்நீச்சலைக் கொண்டதாக அமைந்திருந்தது எனலாம். எனினும் தளராமல், 'பிரசண்டேஷன் கான்வெண்டில்' இளநிலை எப்.ஏ. (Faculty of Arts) வகுப்பில் சேர்ந்தார். இங்கு 'மதர் பாட்ரிக்' இவரைக் கிறித்துவ சமயத்திற்கு மாற்றிவிடக் கூடுமானவரை முயன்றும் அதில் தோல்வி அடைந்தார். டிசம்பர் 1907ஆம் ஆண்டு எப்.ஏ, தேர்வு நடைபெற்று அதற்கான முடிவுகள் சனவரித் திங்கள் (1908) வெளியிடப்பட்டன. இதில் முதல் மாணவியாகத் தேறித் தங்கப்பதக்கத்தினைப் பெற்றார். இதன்பின் மாநிலக் கல்லூரியில் இளங்கலைப் பட்டப்படிப்பில் (1908-1911) சேர்ந்தார். "அந்தண வகுப்பைச் சேர்ந்த இளம் விதவைப்பெண் படிக்கச் செல்கிறாள்" எனும் அவச்சொல் சமுதாயத்தினரால் இவருக்கு அளிக்கப்பட்டது. அதிலும், இவர் தன் தோழி மேரி ராஜத்துடன் ரிக்ஷா வண்டியில் கல்லூரிக்குச்செல்வது பரிகாசத்திற்குரிய செய்தியாகப் பார்வை படுத்தினர். எனினும் சமுதாயத்தினை எதிர் நோக்கும் துணிவினைச் சுப்புலட்சுமியின் தந்தை அளித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. கணக்குப் பாடப்பிரிவில் ஒரே பெண் மாணவியாக இருந்ததால், பேராசிரியரிடம் தனியாகச் சென்று ஐயங்களைக் கேட்டுத் தெளிய இயலவில்லை. இக்காரணமாக மாணவிகள் அதிக அளவில் உள்ள வகுப்பான தாவரவியல் வகுப்பிற்கே இவரும் மாறிப்படிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. இதனிடையே டாக்டர் உ.வே.சாமிநாத அய்யரிடம் தமிழ்ப் பாடம் கற்றார். சாமிநாத அய்யரின் மிக்க கற்பிக்கும் திறனால் தமிழ் இலக்கியம் மீது பேரார்வம் கொண்டார். ஏப்ரல் 1911ஆம் ஆண்டு நடைபெற்ற பி.ஏ.தேர்வில் தன்னுடன் பயின்ற அனைத்து மாணவர்களையும் பின்தள்ளி, முதல் வகுப்பில் வெற்றிபெற்றார் என்பதைச் செய்தித்தாள்கள் பறைசாற்றின. பல்வேறு இடங்களிலிருந்து வேலை வாய்ப்பைப் பெற்றாலும், தான் முன்னர்ப் பயின்ற ''பிரசிடென்ஸி செகண்டரி பயிற்சி

பள்ளியிலேயே" ஆசிரியர் பொறுப்பேற்றார். அதன்பின் எல்.டி. (Licenriate of Teaching) படிப்பையும் (1912) பெற்றார்.

தான் கல்வி பயின்ற காலத்தில் விதவைகளின் அவலநிலை, சந்திக்க நேர்ந்த ஏளனங்கள், அவச்சொற்கள், சமூகத்தில் 'பெண்கல்வி'யின் சிக்கன நிலை இவையெல்லாம் தொடர்ந்து காண நேர்ந்தது. தந்தையின் இடைவிடாத ஆதரவு, சமூகத்தை எதிர்நோக்க அளித்த துணிச்சல், கல்வி பயின்ற காலத்தில் உடன் வந்து உதவி செய்த சித்தியின் அன்பு இவையனைத்தும் சகோதரி சுப்புலட்சுமியின் வாழ்வில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தின. எனவே, அதிக அளவில் தன்னைக் கல்விப்பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டார்.

கல்விப்பணி

1 விதவையர் இல்லம் (The Widow's Home)

இளம் விதவையர் பிறரைச் சார்ந்து வாழாமல், தன் கையினை நம்பி வாழவேண்டும், சுயசிந்தனையுடன் தன் வாழ்க்கைப் பாதையினைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற வேண்டும்; சமூதாயத்தில் தனிமதிப்புப் பெறவேண்டும். இதற்கு உதவுவது 'கல்வி' ஒன்றே. எனவே, இளம்விதவைப் பெண்களுக்கு மறுமணத்தினைவிடப் பேராதரவு அளிப்பது கல்வி எனும் நோக்கில் 1910ஆம் ஆண்டு 'விதவையர் இல்லத்தினை'ச் சகோதரி தோற்றுவித்தார். இச்சமயத்தில் சுப்புலட்சுமியின் தந்தை கோவை வேளாண்மைக் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்ததால், சென்னையில் தன் சித்தியுடன் தங்கியிருந்து விதவையர் இல்ல மேற்பார்வையினைச் செய்து வந்தார். அம்முக்குட்டி (சுப்புலட்சுமியின் தந்தை சுப்பிரமணியத்தின் நண்பரான தேவராஜின் மகள்; இளம் விதவை) இவ்விதவை இல்லத்தின் முதல் உறுப்பினராக இணைந்தார். இவருக்குப் பின் சேலம் பள்ளி ஆசிரியர் முத்துசாமி ஐயரின் மகள் பார்வதி (9 வயதில் விதவையானவர்) இவ் இல்லத்தில் இணைந்து, கல்வி பயிலும் பொருட்டுப் பிரசிடென்சி பயிற்சி பள்ளியில் சேர்ந்தார். (சுப்புலட்சுமிக்குப்பின் இதில் சேர்ந்த இரண்டாவது விதவைப் பெண் என்பது குறிப்பிடத் தக்கது). இக்காலக்கட்டத்தில் ஆசிரியர் பயிற்சி பள்ளியில் பெண் ஆசிரியர்கள் கிடைப்பதும் அரிதாக இருந்தது. எனவே, பாதிக்கப்பட்ட இளம்விதவைப் பெண்களுக்குக் கல்வி பயிற்றுவித்து, ஆசிரியப் பணியில் ஈடுபடுத்தலாம் எனப் 'பெண்கல்வி' மேற் பார்வையாளர் 'லின்ச்' என்பவர் சுப்புலட்சுமியின் தந்தையிடம்

ஆலோசனை வழங்கினார். இச்சமயத்தில் அதாவது 1901களில் சென்னை மாகாணத்தில் மட்டும் 5 முதல் 15 வயதிற்குள்ளாக 22, 395 இளம் அந்தண விதவைப் பெண்கள் இருந்ததாக மோனிகா பெல்டன் தனது நூலில் குறிப்பிடுகிறார் (ப.69). எனவே சுப்புலட்சுமியுடன், மிஸ்.லின்ச்சும் (Miss Lynch) இணைந்து இதற்கெனச் செயல் திட்டத்தினை வடிவமைத்து, சென்னை அரசிடம் 1908ஆம் ஆண்டு சமர்ப்பித்தனர். அரசிடமிருந்து அனுமதியும், நிதி உதவியும் கிடைக்கும் வரை, எப்படியேனும் நிதிதிரட்டி 'விதவையர் இல்லத்தினை' நடத்த முடிவுசெய்து அதன்படி 1912ஆம் ஆண்டு கிட்டத்தட்ட 2000 ரூபாய்வரை நிதி திரட்டினார். இதில் பெரும்பான்மையான தொகை சாரதா மகளிர் கூட்டமைப்பினின்றும் பெறப்பட்டது. முதலில் சுப்புலட்சுமியின் எழும்பூர் இல்லத்தில் இயங்கி வந்த இவ்வில்லம், நிதியுதவி கிடைக்கப்பெற்ற பின் 'ஆதி காட்டேஜ்' எனுமிடத்திற்கு மாற்றப்பட்டது. இங்கு வந்தபின் அம்முக்குட்டி, பார்வதியுடன், சீதாலட்சுமி, சுப்பக்கா இருவரும் சேர்ந்தனர். பின்னாளில் சுப்பக்கா கோலாலம்பூரைச் சேர்ந்த ஒருவரை மறுமணம் செய்து கொண்டார். இத்திருமணத்தில் சுப்புலட்சுமிக்கு உடன்பாடில்லை. பெண்கள் மறுமணம் செய்து கொள்வதைவிட, தன்கையே தனக்குதவியாகப் படிப்பதுதான் சிறந்தது எனும் எண்ணம் கொண்டிருந்ததே இதற்குக் காரணம். சென்னை அரசிடமிருந்து இவ்வில்லம் நடத்த அனுமதியும், நிதி உதவியும் கிடைக்கப்பெற்ற பின் மேலும் பல பெண்கள் இதில் இணைந்து ஆசிரியர் பயிற்சி பெறத் தொடங்கினர். இல்லத்துப் பெண்களுக்கு ஆங்கிலம், சமஸ்கிருதம் மற்றும் கும்மி, கோலாட்டம் போன்ற கிராமியக் கலைகளும் கற்றுத்தர ஏற்பாடு செய்தனர். 1914இல் 30 பெண்கள் இல்லத்தில் இணைந்திருந்தனர். இந்நேரத்தில் 'ஆதிகாட்டேஜ்' வேறு ஒருவருக்குச் சொந்தமாகிவிட, அங்கிருந்து இடமாற்றம் செய்யவேண்டிய கட்டாயத்திற்குட்பட்டனர். பின், பலவித இன்னல்களுக்கிடையே 'ஐஸ் அவுஸுக்கு' இல்லம் மாற்றப்பட்டது. ஒரு சமீன்தாருக்குச் சொந்தமான இவ்வில்லத்திற்கு அரசு வாடகைப் பணமாக ரூ.150ஐக் கொடுத்தது. பின்னர் 1917ஆம் ஆண்டு ரூ.80000க்கு அரசே இதனை வாங்கியது. இவ்வில்லத்தில் இருந்த பல பெண்கள் 1914ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட 'இராணிமேரி கல்லூரி'யில் சேர்ந்து பட்டப்படிப்பைப் பெற்றனர். 1918இல் இல்லப் பெண்களான அகிலா, லக்ஷ்மிதேவி, பாலம் ஆகியோர் சென்னைப்பல்கலைக் கழகத்தில் SSLE (Secondary School Leaving Examination) படித்தபின், டெல்லியில் உள்ள 'லேடி ஹார்டிங்கே

மருத்துவக் கல்லூரியில்' பயிலச் சென்றனர். பல்வேறு சிரமங்களுக்கிடையிலும், மக்களின் எள்ளல் பார்வைக்கிடையிலும் இல்லம் வெற்றிகரமாக நடைபெற்றது. சகோதரி சுப்புலட்சுமியின் இப்பணியினைப் பாராட்டி ஆங்கில அரசு 1920ஆம் ஆண்டு 'Kaiser-i-Hind' பதக்கத்தினை அளித்துக் கௌரவித்தது. நூற்றுக் கணக்கான பெண்களின் புனர்வாழ்விற்கு வழிவகுத்த இவ்வில்லத்தின் செயல் மிக நீண்டது.

2. ஸ்ரீ சாரதா மகளிர் சங்கம் (Sri Sarada Ladies Union)

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் மகளிர் அமைப்புகள் நாட்டில் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே இருந்தன. 1912ஆம் ஆண்டு சகோதரி சுப்புலட்சுமியால் தொடங்கப்பட்ட ஸ்ரீ சாரதா மகளிர் சங்கம் சென்னையில் தோன்றிய முதல் மகளிர் சங்கமாகும். சனவரி முதல் நாள் தொடங்கப்பட்ட இச்சங்கத்தின் முதன்மையான நோக்கம் 1. முதிய மகளிரின் அறிவுத்திறனை மேம்படுத்துதல்; சமூகம், கல்வி, ஒழுக்கம், இலக்கியம் குறித்த பல்வேறு தகவல்களைத் தக்க அறிஞர்களைக் கொண்டு பேசிடச் செய்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்; சமூகத்தில் அவரவர்க்கு உள்ள கடமையினை அறிந்திடச் செய்தல்; பெண்கல்விக்கு முதன்மைத்துவம் அளித்தல்; அத்துடன் சமூக சேவையிலும் ஈடுபடச் செய்து 'வீட்டினைத் தாண்டிச் சமூகம் குறித்த உணர்வினைப் பெறச் செய்தல்; விதவைப் பெண்கள், ஆதரவற்ற இளம்பெண்கள், முதிய பெண்கள் என அனைத்துத் தரப்பு மகளிருக்கும் ஆசிரியை, செவிலி போன்ற துறைகளில் பயிற்சியளித்துத் தங்கள் வாழ்நாட்களை மகிழ்ச்சியுடன் கழிக்கச் செய்தல் என்பதாகும்.

1927ஆம் ஆண்டு இச்சங்கத்தின் ஆதரவாளர்களைக் கொண்டு சாரதா வித்யாலயா கல்வி நிறுவனத்தைச் சகோதரி சுப்புலட்சுமி தொடங்கினார். 1932இல் இச் சங்க உறுப்பினர்கள் லஸ் சாலையில் அமைந்திருந்த பத்மா விலாஸ் சாரதா மகளிர் கிளப்பினைத் தொடங்கினர். பின்னாளில் மைலாப்பூர் மகளிர் கிளப் என்றறியப்பட்ட இக்கிளப் 'வித்யா மந்திர்' பள்ளியினைத் தொடங்கியது குறிப்பிடத்தக்கது. 1942ஆம் ஆண்டு தொடங்கப் பட்ட 'கலாநிலையம் டுடோரியல் பள்ளி'யும் சாரதா மகளிர் சங்கக் கட்டிடத்தினுள் இயங்கியது. வெளியூர்களிலிருந்து இப் பள்ளியில் பயிலவரும் மாணவர்களுக்காக விடுதியொன்றும் இங்கு

இயங்கியதுடன் 1962ஆம் ஆண்டுவரை முதியோர் கல்வியையும் ஊக்குவித்து வளர்த்தது.

இத்துடன் அன்னிபெசண்ட் அம்மையார் மகளிர் இந்த நாட்டிற்குச் செய்யவேண்டியது என்ன? என்பது குறித்து இம் மகளிர் சங்கத்தில் உரையாற்றியுள்ளார். 1921ஆம் ஆண்டு முத்துலட்சுமி ரெட்டி தேவதாசி, தீண்டாமை ஒழிப்பு குறித்த தம் உரையினை இங்கு நிகழ்த்தியுள்ளார். இவர்களைத் தவிர லேடி வெங்கட சுப்பாராவ், அம்மு சுவாமிநாதன், ராஜகுமாரி அம்ரீத் கெலிர், ருக்மணி லக்ஷ்மிபதி, அம்புஜம்மாள் போன்ற புகழ் பெற்ற மகளிரும் சிந்தனைமிக்க உரையினை இம் மகளிர் சங்கத்தில் ஆற்றியுள்ளனர். ஆன்மீகம் தொடர்பான சொற் பொழிவுகளும் இச்சங்கத்தில் இடம்பெற்றன. கீதை, திருக்குறள், தேவாரம் தொடர்பான போட்டிகளைப் பள்ளி மாணவர்களுக்கு நடத்திப் பரிசளித்து, மாணவர்களை ஊக்குவிக்கும் பணியிலும் இச்சங்கத்தினர் ஈடுபட்டனர். 1945ஆம் ஆண்டு தையல் வகுப்புகள் தொடங்கப்படன. மகளிர் பொழுது போக்காகவும், வருவாய் ஈட்டவும் இவ்வகுப்பில் சேர்ந்து பயின்றனர். கலாநிலையம் டுடோரியல் பள்ளியினர் கலந்துகொள்ளும் பொருட்டு இலக்கியக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. உடல் நலத்தினை மேம்படுத்தும் பொருட்டு உள் அரங்க விளையாட்டுகள் (இறகுப் பந்து, டேபிள் டென்னிஸ்) மகளிருக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. கிட்டத்தட்ட நாற்பதாண்டுகள் தனது மாதாந்திரக் கூட்டத்தினை வெவ்வேறு பள்ளிகளில் நடத்தி வந்த இச் சங்கத்தினர், பிறகு தியாகராய நகரில் தமக்கென ஓரிடத்தினைத் தேர்ந்து கொண்டனர். மகளிர் முன்னேற்றத்திற்காகவும், சமூகத் தளையினின்று விடுபட்டு, விழிப்புணர்வு பெறவும் பரந்த நோக்கில் தமது பணியினை முழுமையாகச் செலுத்திய இச் சங்கத்தின் பொன்விழா 1962ஆம் ஆண்டு இந்திய நிதியமைச்சர் மாண்புமிகு கிருஷ்ணமாச்சாரியின் மனைவி திருமதி கிருஷ்ணமாச்சாரி முன்னிலையில் நடைபெற்றது. இவ்விழாவில் வெளியிடப்பட்ட ஆண்டு மலரில் துர்காபாய் தேஷ்முக், முத்துலட்சுமி ரெட்டி, முன்னாள் விதவையர் இல்ல மாணவி டாக்டர் அலங்காரம் உள்ளிட்டோர் கட்டுரைகளை எழுதி உள்ளனர். மொத்தத்தில் இல்லத்தலைவியரும், பிற பெண்களும் தம் கூட்டினைவிட்டுவெளியே வந்து அரசியல், ஆன்மீகம், உடல்நலம், சமூகம், இலக்கியம் குறித்த விழிப்புணர்வினைப் பெற்றனர்.

3. சாரதா வித்யாலயா

பெண்கல்விக்காகத் தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்ட சகோதரி சுப்புலட்சுமி 16 முதல் 25 வயது வரையிலான பெண்கள் கல்வி பெறும் பொருட்டு, 1927ஆம் ஆண்டு சாரதா வித்யாலயாவைத் தோற்றுவித்தார். குறைந்தது 8ஆம் வகுப்பு வரை பெண்களைப் பயிற்றுவிப்பது இக்கல்விக்கூடத்தின் நோக்கமாக இருந்தது. முதலில் 12 மாணவியர் இப்பள்ளியில் சேர்ந்தனர். (ஐவர்-அந்தணர் குடும்பத்தைச் சேர்ந்தவர்; அறுவர் - பிற வகுப்பினர்; ஒருவர்-தாழ்த்தப்பட்ட பிரிவினைச் சேர்ந்தவர்). விதவையர் இல்ல முன்னாள் உறுப்பினரான லக்ஷ்மி இப்பள்ளி, விடுதிக் காப்பாளராக நியமிக்கப்பட்டார். பட்டதாரி ஆசிரியர் பலர் காலை, மாலை மற்றும் விடுமுறை நாட்களிலும் வந்து வகுப்பெடுத்தனர். பள்ளிக்குத் தேவையான நிதியினை இசை, நாட்டிய நிகழ்ச்சி எனப் பல வழிகளில் திரட்டினார் சுப்புலட்சுமி. பெண்கல்வியில் பெரும் முனைப்பினைக் காட்டிய இப்பள்ளி பின்னாளில் அட்சயதிரிதியை நாளன்று (மே.2,1938) இராம கிருஷ்ணா மிஷனிடம் ஒப்படைக்கப்பட்டது. 1960களில் இப்பள்ளி 1. ஸ்ரீ சாரதா வித்யாலயா பெண்கள் உயர்நிலைப் பள்ளி (1825 மாணவியர்; இப்பள்ளிப் பணிகளில் சகோதரி ஈடுபட்டார்). 2. அடிப்படைப் பயிற்சிப் பள்ளி 177 மாணவியருக்கு நெசவு, புத்தக பைண்டிங், தோட்ட வேலை, தையல், பூவேலை, பாட்டு, நடனம் எனப் பல விதமான தொழிற்கல்விகளை அளித்தது. 3. உயர் நடுநிலைப்பள்ளி. தமிழ்வழிக் கல்வியில் மாணவியரை 8ஆம் வகுப்புவரை பயிற்றுவித்தனர். 4. மாடல் உயர் நடுநிலைப் பள்ளி. 5. வித்யாலயா விடுதி 6. சாரதா தேவி இல்லம் எனப்பல விதப்பிரிவுகளாக விரிவடைந்தமை சுட்டத்தக்கது.

4. ஸ்ரீவித்யா கலாநிலையம்

சகோதரியின் அனைத்துப் பணிகளிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட சித்தி வாலாம்பாள் 1935ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார். சகோதரியின் அரசுப்பணி 1941ஆம் ஆண்டில் நிறைவடைந்தது. இதே ஆண்டில் தன் தாயாரையும் இழந்தார். பின்னர், தனது இல்லத்தினை மைலாப்பூரில் உள்ள வித்யாகாலனிக்கு மாற்றினார். அங்கிருந்த பெண்களில் பெரும்பாலோர் கல்வி பெற்றிருக்கவில்லை. சீரான கல்வி பெற இயலாத வயது வந்த பெண்களுக்காக 1942ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் தேதி, இராமகிருஷ்ண மடத் தலைவர் சுவாமி சரஸ்வதானந்தஜியின் தலைமையில் 'ஸ்ரீவித்யா கலாநிலையம்'

தொடங்கப்பட்டது. மாணவியர் சென்னை மெட்ரிகுலேஷன் மற்றும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதத் தனியாகப் பயிற்றுவிக்கப் பட்டனர். திருமதி நித்யா வெங்கடராமன் மேலாளராகவும், சகோதரி முதல்வராகவும பொறுப்பேற்றுப் பணியாற்றினர். இப்பள்ளி, மாணவியரை 'அரசு தொழிற்பயிற்சித் தேர்வு' எழுதவும் பயிற்சியளித்தது. கீழ் மற்றும் மேல்நிலை இந்திய வாய்ப்பாட்டு இசை, வயலின், வீணை, ஊசி வேலை, ஆடை வடிவமைப்பு, ஆடையில் பூவேலை இன்னபிற தொழிற்கல்விப் பயிற்சியினையும் இப்பள்ளி அளித்தது. சமுதாயத்தில் இப்பள்ளி பெரும் வரவேற்பினைப் பெற்றது என்பதை ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்த மாணவியர் சேர்க்கை எண்ணிக்கை உறுதிப்படுத்தியது. சமூகத்தின் அனைத்துப் பிரிவுப் பெண்களும் இப்பள்ளியில் சேர்ந்தனர். 15இல் இருந்து 35 வயது வரையிலான பெண்கள் திருமணம் ஆனவர்கள், மணமாகாதோர், கணவனால் கைவிடப் பட்டோர், விதவையர் எனப் பலவகைப்பட்ட பெண்கள் இதில் அடங்குவர். இங்குப் பயின்ற பெண்களுள் சிலர், பின்னர் 'லேடி வெலிங்டன் பயிற்சிக் கல்லூரியில்' அனுமதிக்கப்பட்டனர். 1943ஆம் ஆண்டு கலா நிலையம் விடுதியும் தொடங்கப்பட்டது. சமுதாயத்தில் உள்ள பெண் பாலருக்கு உண்மையான சேவையினைச் செய்து வந்த இப்பள்ளி 1953ஆம் ஆண்டு வித்யா காலனியில் இருந்து, மாம்பலத்தில் இருந்த சாரதா மகளிர் சங்க நிறுவனத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. அங்கேயே விடுதியும் மாற்றப்பட்டது.

5. குப்பம் பள்ளி

விதவையர் இல்லம் மெரீனா கடற்கரையை ஒட்டி அமைந்திருந்த 'ஐஸ் அவுஸ்' இல்லத்தில் செயல்பட்டது என முன்னர்க் கண்டோம். இதன் அருகிலேயே 'லேடி வெலிங்டன் பள்ளியும், கல்லூரியும் அமைந்திருந்தன. கடற்கரையை ஒட்டி அமைந்திருப்பது மீனவர் குடில்கள் அல்லவா? மீனவப் பெண்களும் ஆண்களும் தத்தம் வேலையில் முனைப்புடன் இருக்க, குழந்தைகளோ தம்தம் விளையாட்டில் வெறுமனே பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தனர். சகோதரி சுப்புலட்சுமியும், அவரது இல்லப் பெண்களும் இக் குழந்தை களிடம் நட்புப் பாராட்டியதுடன், 'ஐஸ் அவுஸ்' வளாகத்தினுள் இருந்த தோட்ட அறையிலேயே காலை நேரத்தில் பாடம் சற்றுக் கொடுத்தனர். பிறகு, இது சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்ட வகுப்புகளுடன் 1920ஆம் ஆண்டு முதல் பள்ளியாக இயங்கத்

தொடங்கியது. மீனவர்கள் தத்தம் குழந்தைகளை ஆர்வத்துடன் பள்ளிக்கு அனுப்பினர். இப்பள்ளியில் ஒவ்வோர் ஆண்டும் சமூகச் சேவை வாரம் கொண்டாடப்பட்டது. குழந்தைகள் தொழிற் கல்வி கற்றுக் கொள்வதிலும் ஆர்வம் காட்டினர். நாடகம் மற்றும் பல்சுவை நிகழ்ச்சியினை இப்பள்ளி மாணவர்கள் நடத்தியதுடன், இந்நிகழ்ச்சியினைப் பார்ப்பதற்கான நுழைவுச் சீட்டினையும் வெளியாருக்கு விற்று நிதி திரட்டினர். விதவிதமான விளையாட்டுகளை அறிமுகப்படுத்தி, அதன் வழியாகவும் நிதி திரட்டிப் பள்ளியினை மேம்படுத்தினர்.

6. சாரதா சேரிப் பள்ளி, கடலூர்

சென்னையில் உள்ள ஹோபர்ட் பள்ளியில் 1932, 33களில் பள்ளி மேலாளராகப் பணி புரிந்த சகோதரி, பின்னர்க் கடலூரில் உள்ள அரசு நடுநிலைப் பயிற்சிப் பள்ளிக்குப் பணி மாற்றம் பெற்றார். சென்னையில் பல பணிகளில் சுறுசுறுப்பாக இயங்கி வந்த சகோதரி இங்குக் கிடைத்த நேரத்தைப் பயனுள்ள வழிகளில் பயன்படுத்த எண்ணி, எண்ணற்ற இலக்கிய, சமய நூல்களைப் படிக்கலானார். எனினும், சென்னையில் தொடங்கிய குப்பம் பள்ளியைப் போன்றே இங்கும் தொடங்க எண்ணம் கொண்டார். எப்பொழுதும், ஆசிரியத் தொழிலில் பற்றுக் கொண்டவர் சகோதரி. ஆசிரியப் பணி வழியாகவே சமுதாயத்திற்குச் சிறப்பான தொண்டாற்ற முடியும் என எண்ணியவர். எனவே, இங்குள்ள மாணவர்களையும் ஆசிரியர் பயிற்சியில் ஈடுபடச் செய்ய வேண்டும் எனும் நோக்கம் கொண்டார். இந்நோக்கத்தினைச் செயலாக்க அரசுப்பள்ளியின் அருகிலேயே ஓரிடத்தைத் தேர்ந் தெடுத்துக் கொண்டு, அரசுப்பள்ளி மாணவியரின் உதவியுடன், நான்கு வண்டி மணலைக் கொட்டிச் சமன் செய்து, தென்னை இலையில் முடைந்த பாயினையும் மாணவர் அமரத் தயார் செய்து கொண்டு பள்ளியினை 1933ஆம் ஆண்டு தெடங்கினார். மீனவர், கள்இறக்குபவர், குயவர் எனச் சமூகத்தின் கீழ் மட்டத்தில் இருந்தோரின் குழந்தைகளே மாணவர்கள். ஆண், பெண் என 20 மாணவர்களுடன் தொடங்கியது. கல்வியுடன் சுற்றுப்புறத் தூய்மை, நல்ல பழக்கவழக்கங்கள் போன்றவற்றையும் பயிற்றுவித்தார். படிப்பறிவில்லா இப்பகுதி மக்களுக்குச் சகோதரி செய்த சேவை மிகப் பெரியது. மூன்று ஆண்டுகள் கடலூரில் பணியாற்றிய காலம் வரை இப்பள்ளிக் குழந்தைகளின் நலனுக்குப் பல விதங்களில் பணியாற்றியவர், பின் கடலூரில் இருந்து மாற்றல் பெற்றபின் இதனைத் தென்னார்க்காடு சமூகச் சேவை

நிறுவனத்தினரிடம் ஒப்படைத்து, மேற்கொண்டு பள்ளி சீராக இயங்க வழி வகுத்தார்.

7. வைகளத்தூர் மங்களாம்பிகா பள்ளி

வைகளத்தூர் சகோதரியின் தாயார் விசாலாட்சியின் சொந்த ஊர். அங்கு இருந்த பெரியோர்களின் உதவியுடனும், அரசு அனுமதி பெற்றும் 1947ஆம் ஆண்டு 'மங்களாம்பிகா பாட சாலை'யினைத் தொடங்கினார். 37 குழந்தைகளுடன் தொடங்கப் பட்ட இப்பள்ளியின் மாணவர் எண்ணிக்கை, அடுத்த ஆண்டே 35 ஆண், 25 பெண் குழந்தைகள் என உயர்ந்தது. தாழ்த்தப்பட்ட பிரிவினைச் சேர்ந்த குழந்தைகளும் இதில் அடங்குவர். இப்பள்ளி கட்டுவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் (நிலம், கட்டிடம், கரும்பலகை, மாணவர் அமர இருக்கை) செய்தார். புதிய கட்டிடத்திற்குப் பள்ளி மாற்றப்பட்ட பின் சுப்புலட்சுமியின் பெற்றோர் நினைவாக 'ஸ்ரீ விசாலாட்சி சுப்ரமணியம் கல்வி நிலையம்' என இப்பள்ளி பெயர் பெற்றது.

8. மதுராந்தகம் பள்ளி

சகோதரி சுப்புலட்சுமியின் கல்விப்பணி, மகளிர் கல்வி பெற அவர் ஆற்றும் தொண்டு எங்கும் பரவியது. இந்நிலையில் சுன்னம்பேட் (Chunampet) சமீன்தார், சகோதரியை அணுகி மதுராந்தகத்தில் கல்வி நிலையம் அமைக்கும் தன் திட்டம் குறித்துப் பேசினார். உடனே, சகோதரி அதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். இதன் பயனாக 1944ஆம் ஆண்டு மதுராந்தகம் பள்ளி உருவானது. வறுமைப் பிரிவிலிருக்கும் பெண் குழந்தைகள் இப்பள்ளியால் பயனடைந்தனர். சென்னை வித்யாலயா பள்ளியில் இருந்து சிறந்த ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். மங்களம் என்பவர் முதல் தலைமை ஆசிரியையாகப் பொறுப்பேற்றார். திருமதி ஸ்ரீனிவாச அய்யங்கார், அம்புஜம்மாள் போன்றோர் இப்பள்ளிக்கு வருகைதந்து, பள்ளியின் மேம்பாட்டிற்கு உதவினர். 1949இல் 'மதுராந்தகம் மாவட்ட வாரியம்' இப்பள்ளியைத் தன் வசம் எடுத்துக் கொண்டது.

9. வித்யாமந்திர் பள்ளி

சாரதா மகளிர் சங்கம், மைலாப்பூர் மகளிர் சங்கமாக உருமாற்றம் பெற்றபின் சமூகச் சேவையில் தனது காலை ஆழமாக வேரூன்றியது. புகழ்பெற்ற தமிழறிஞர் உ.வே.சா. இச் சங்கத்தில் உரையாற்றியுள்ளார். மாதாந்திரக் கூட்டங்களில் பலவிதச் செயல்

திட்டங்கள் குறித்துப்பேசி, செயலாக்கமும் செய்தனர். முதலில் உறுப்பினர்கள் S.S.L.C. தேர்வு எழுத, சமஸ்கிருத மொழி கற்க உதவுதல் என இருந்த இச் சங்கத்தின் செயல்பாடுகளில் சிறிய மாற்றம் உருவானது. மைலாப்பூர் மகளிர் சங்க உறுப்பினர்களால் 1956ஆம் ஆண்டு, 'கல்விக்குழு' அமைக்கப்பட்டது. இதன் கூட்டத் தினைத் தலைமையேற்று நடத்தியவர் சகோதரி. இக்குழுவின் பரிந்துரையின் படியும், சகோதரியின் முயற்சியினாலும், மகளிர் கிறித்தவக்கல்லூரி முதல்வர், சில்ரன்கார்டன் பள்ளியினர் அளித்த ஆதரவினாலும் 1956ஆம் ஆண்டு மழலையர் மற்றும் தொடக்கநிலைப் பள்ளியாக 'மைலாப்பூர் லேடிஸ் கிளப் ஸ்கூல் சொசைட்டி' எனும் பெயரில் இப்பள்ளி தோன்றியது. பின்னர் நடந்த, 'கல்விக்குழு கூட்டத்தில் இப்பள்ளி 'வித்யாமந்திர்' எனப் பெயர் மாற்றம் பெற்றது. பள்ளி படிப்படியாக முன்னேறி 1962ஆம் ஆண்டு மெட்ரிகுலேஷன் பள்ளியாக உயர்ந்தது. சகோதரி சுப்புலட்சுமி தூவின விதைகளான சாரதா வித்யாலயா, வித்யா மந்திர் பள்ளிகள் இன்று பெரும் விருட்சமாக வளர்ந்திருப்பது கண்கூடு.

சமூக நலப்பணிகள்

1. மகளிர் இந்தியக் கழகமும் அனைந்திந்திய மகளிர் மாநாடும்

மகளிர் கழகத்தின் முன்னோடியாகத் திகழ்ந்த மகளிர் இந்தியக் கழகம் (The Women's India Association), சென்னையில் 1917ஆம் ஆண்டு 'அனைத்திந்திய மகளிர் மாநாட்டிற்கு (All India Women's Conference) அடிக்கல் நாட்டியது. அன்னிபெசண்ட் அம்மையார் முதலில் இதற்குத் தலைமை தாங்கினார். பின்னர். அவர் மறைவிற்குப் பின் முத்துலட்சுமி ரெட்டி தலைமை பொறுப்பேற்றார். இதன் முக்கிய நோக்கம் இந்தியப் பெண்கள், குழந்தைகள் நலனுக்குப் பாடுபடுவது; கல்வியின் தரத்தை மேம்படுத்துவது; சமூகச் சீர்திருத்தம் போன்றவை. ஒவ்வோர் ஆண்டும் 'கல்வி மாநாட்டினை' இந்த அமைப்பு நடத்தியது. சகோதரி சுப்புலட்சுமி ஒவ்வோர் ஆண்டும் இக்கல்வி மாநாட்டில் பேராளராகக் கலந்து கொண்டு தன் பொழிவுகளை வழங்கினார். இக்கல்வி மாநாடு கல்விச் சீர்திருத்தத்திற்கு அடிகோலியது. தொடர்ந்து அனைத்திந்திய மாநாடுகளில் கலந்து கொண்டதுடன், 1953ஆம் ஆண்டு 'தமிழ்நாடு வாக்காளர் மாநாட்டினையும்' தலைமை தாங்கி நடத்தினார். மகளிர் இந்தியக் கழகத்திற்குத் தன் பங்களிப்பை அளித்ததன் மூலம் இந்தியப் பெண்களின் நலத்திற்குச் சகோதரி பெரும் பாடுபட்டார்.

2. கஸ்தூரிபா கிராம சேவிகா பயிற்சி மையம்

தேசிய அளவில் கஸ்தூரிபா நினைவு அறக்கட்டளை நிதி ஏற்படுத்தப்பட்டது. கிராமப்புற மேம்பாட்டிற்கு, ஆங்காங்கே பயிற்சி நிலையம் அமைக்க வேண்டும் என்பது காந்திஜியின் விருப்பமாக இருந்தது. இதன் அடிப்படையில் கஸ்தூரி கிராம சேவிகா பயிற்சி நிலையங்கள் கிராமம் தோறும் உருவாக்கப் பட்டன. மகாத்மா காந்தியின் சென்னை வருகைக்குப் பின், தக்கர் பாபாவினால் சகோதரி சுப்புலட்சுமி சென்னைக் கிளை பயிற்சி மையத்திற்கு முகவராக நியமிக்கப்பட்டார். பயிற்சி மையம் குறித்தும் அதன் நோக்கம் குறித்தும் திட்ட அறிக்கைகளை நன்கு படித்துச் சகோதரி அறிந்து கெண்டார். 1946ஆம் ஆண்டு ருக்மணி லக்ஷ்மிபதி, சுசித்ரா கிருபலானி போன்றோருடன் இணைந்து கஸ்தூரிபா மருத்துவ மையத்தை நிறுவி, பின் பயிற்சி மையத்தையும் திறந்து தனது சேவையினைத் தொடங்கினார். இங்குச் சேர்ந்த மாணவர்கள் தமக்குரிய உணவினைத் தாமே தயாரித்துக் கொண்டதுடன், கணக்கு வழக்குகளையும் கவனித்துக் கொண்டனர்.

3. ஸ்ரீனிவாசா காந்தி நிலையம்

சாதி, மத, இன அரசியல் பேதமின்றி மகளிர் நலனுக்காக மட்டும் செயல்படுவதற்காகத் திருமதி அம்புஜம்மாளால் 1946இல் தோற்றுவிக்கப்பட்டது இந்நிலையம். இந்நிலையத்தின் சேவைகளில் சகோதரி தன்னை இணைத்துக் கொண்டார். முதியோர் கல்வி, கீதை வகுப்புகள் போன்றவற்றைத் தொடங்கினார். இவரது சேவையினைப் பாராட்டி நிலையத்தார் 'காதி புடவை'யினைப் பரிசளித்துள்ளனர்.

4. பர்மா அகதிகளுக்கான நிவாரணப்பணி

பர்மாவில் இருந்து அகதிகளாக வந்த ஆதரவற்ற இளம் குழந்தைகள், பெண்களுக்கு அவ்வை இல்லமும், இராமகிருஷ்ணா மிஷனும் இடமளிக்க, சகோதரியும், தான் தங்கியிருந்த வித்யா காலனியில் ஆதரவற்ற பெண்கள் தங்க இடம் அமைத்துக் கொடுத்து, நாற்பது இராட்டைகளையும் வாங்கிக் கொடுத்து நூல் நூற்கக் கற்றுக் கொடுப்பதற்கு ஆசிரியைகளையும் நியமித்தார்.

5. மாதம்பாக்கம் மையம்

மாதம்பாக்கம் சென்னையின் அருகில் உள்ள கிராமம். கல்வித் துறையில் இருந்து சுப்புலட்சுமியும், அவரது சகோதரி

சுவர்ணமும் ஓய்வுபெற்ற பின், இக்கிராமத்தில் தங்கினர். அங்கிருக்கும் மக்களுக்குச் சேவை செய்யக் கருதி சமூகநல வாரியத்தின்கீழ் 1954ஆம் ஆண்டு பால்வாடியையும், 1956ஆம் ஆண்டு 'பிரசவ மையத்'தையும் நிறுவினார். தன்னை முழுமையாக இக்கிராமச் சேவையில் ஈடுபடுத்திக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

சட்டமன்ற உறுப்பினராக ஆற்றிய பணிகள்

1935ஆம் ஆண்டு அரசியற் சட்டப்படி பம்பாய், ஒன்றிய மண்டிலம் (United Provinces), பீகார், அசாம், வங்காளம் ஆகிய மாநிலங்களில் ஏற்பட்டதைப் போலவே சென்னை மாநிலத்திலும் மேலவை, கீழவை என்ற இரு சட்டமன்றங்கள் ஏற்பட்டன. மேலவையில் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்களும், நியமன உறுப்பினர்களும் இடம்பெற்றனர். இச் சபையில் மக்கள் தொகைக்கேற்ப 56 இடங்கள் ஏற்பட்டன. (இதில் 35 பொது; 10 தாழ்த்தப்பட்டவர், 7-இசுலாமியர், 3-இந்தியக் கிறித்தவர், 1-ஐரோப்பியர் என ஒதுக்கப்பட்டது). 10 இடங்களில் ஆளுநரின் நியமன உறுப்பினர் இடம்பெறுவர். இந்த மேலவை நிலையானது. கீழவையில் கொண்டுவரப்படும் ஒவ்வொரு சட்டவரைவும் இச்சபையில் விவாதித்து ஒப்புதல் பெற்ற பின்பு சட்டமாக்கப்படும். கீழவையில் 315 உறுப்பினர்கள் இடம் பெற்றனர். இதிலும் நியமன உறுப்பினர் உண்டு. இட ஒதுக்கீட்டில் பெண்களுக்கும் எட்டு இடம் ஒதுக்கப்பட்டன. இச்சட்டமன்றம் ஐந்தாண்டுகள் பதவியிலிருக்கும்.

ஆதரவற்ற மகளிர், இளம் விதவைகளுக்கான மறுவாழ்வுத் திட்டத்திற்குத் தன் வாழ்நாளின் பெரும் பகுதியினைச் செலவளித்தவர் சகோதரி சுப்புலட்சுமி. இவரது செயலைப் பாராட்டும் விதமாக 1952ஆம் ஆண்டு சென்னை அரசு, சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தது. இவரது ஆற்றல் காரணமாக 1956ஆம் ஆண்டுவரை இப்பணியில் நீடித்தார். சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய காலம்வரை கல்வி மேம்பாட்டிற்காகவும், பெண்களின் நலனுக்காகவும் சட்டமன்றத்தில் உரையாடிச் செயலாக்கம் பெறச் செய்தார்.

1. தேசிய ஒற்றுமைக்குக் கல்வி

1953ஆம் ஆண்டு ஆளுநர் உரையின் மீதான விவாதத்தின் பொழுது சட்டமன்றத்தில் சகோதரி உரைநிகழ்த்தினார். இவ்உரை தேசிய ஒற்றுமையை வலியுறுத்துவதாக அமைந்திருந்தது. இதனை மேம்படுத்தக் 'கல்வி' இன்றியமையாதது என்றும்,

சுதந்திர இந்தியாவிற்கு ஏற்ற வகையில், கல்விமுறையினை முழுவதுமாக மாற்றி அமைக்க வேண்டியதன் தேவை குறித்தும் எடுத்துரைத்தார். மார்ச் 21, 1953ஆம் ஆண்டு நடைபெற்ற நிதி அறிக்கை மீதான விவாதத்தின் பொழுது, திரு. லக்ஷ்மணசாமி முதலியாரின் கீழ் அமைக்கப்பட்டிருந்த நடுநிலைக் கல்விக் குழுவிற்கு, நடுநிலைக்கல்வி மாற்றி அமைப்பதற்குரிய தனது அறிவுரைகளை வழங்கினார். சமயம், நல்லொழுக்கம் தொடர்பான கல்விப் பாடத்திட்டத்தில் இடம்பெற வேண்டியதன் தேவையை வலியுறுத்தினார். கல்வியே மக்களின் கண்களைத் திறக்கக் கூடியது என்பதில் தீவிரம் காட்டினார்.

2. அடிப்படைக்கல்வி

மகாத்மா காந்தியின் 'அடிப்படைக்கல்வி' குறித்த கொள்கையின் மீது சகோதரி தீவிரப்பற்று வைத்திருந்தார். எனவே, இரண்டாவதாக 'அடிப்படைக்கல்வி' மேம்படுத்துவதற்குரிய திட்டத்தினை வடிவமைத்தார். கல்வியுடன் மாணவர்களுக்குக் கைத்தொழிலான தையல், நெசவு, ஓவியம், பாட்டு, தோட்ட வேலை போன்றவற்றிலும் பயிற்சி அளிக்க வேண்டியதன் கட்டாயத்தினை எடுத்துரைத்தார்.

3. கிராமங்களில் தொடக்கப்பள்ளிகள்

1955-56ஆம் ஆண்டு நடைபெற்ற நிதி அறிக்கையின் மீதான விவாதத்தின் பொழுது உரையாற்றிய சுப்புலட்சுமி கிராமங்களில் தொடக்கப்பள்ளிகள் அமைக்கப்படவேண்டும் என்றார். 1 முதல் 5 வகுப்புகள்; குறைந்தது இரண்டு ஆசிரியர்களாவது நியமிக்கப்பட வேண்டும். அதில் ஒருவர் பெண் ஆசிரியையாக இருக்க வேண்டும்; இரண்டாவதாக, கிராமப் பள்ளிகளில் போதிய வசதியின்மை குறித்தும் விவாதித்தார். வகுப்பறை, பள்ளி அமைந்திருக்கும் சுற்றுப்புறச்சூழல், வகுப்பறையில் இடம்பெறும் பொருட்கள் போன்றவை குறித்தும், தக்க பயிற்சி பெற்ற ஆசிரியரை நியமனம் செய்வது குறித்தும் ஆழமாகப் பேசியுள்ளார்.

4. ஆசிரியர்களின் ஊதியம்

மார்ச் 10,11,12 தேதிகளில் நடைபெற்ற பல்வேறு விவாதங்களின் பொழுதும் ஆசிரியர்களின் ஊதிய விகிதம் மாற்றி அமைக்கப்பட வேண்டியதன் தேவை குறித்தும், சிறப்பான ஊதியம் வழங்க வேண்டிய கட்டாயம் குறித்தும், நிதியில் இதற்குத் தனியாக முக்கியத்துவம் அளிக்க வேண்டும் எனவும் பேசியுள்ளார்.

5. இலவசம் மற்றும் கட்டாயக் கல்வி

மக்கள் தொகை அதிகம்; ஆனால் கல்வி பெற்றவர் குறைவு. இந்நிலை மாற வேண்டும் என்றும் ஒவ்வொரு குழந்தையும் ஆணோ, பெண்ணோ குறைந்தது தொடக்க நிலைக் கல்வியறிவாவது பெற்றிருக்க வேண்டும் என வலியுறுத்தினார். 8ஆவது வகுப்புவரை இலவசக்கல்வி அளிக்க வேண்டும் என்றும், S.S.L.C. படிக்கும் மாணவர்களுக்குத் தேவையானற்றை அரசே அளிக்க முன்வர வேண்டும் என்றும் சட்டமன்றத்தில் இவர் விவாதித்த பேச்சுகளில் குறிப்பிடத்தக்கவை.

6. கோவில் நிதியினைக் கல்விக்கும், ஏதிலிகளுக்கும் பயன்படுத்துதல்

கோவில் நிதியின் ஒரு பகுதியினைக் கல்வி மேம்பாட்டிற்கும், ஏதிலிகளுக்கும், பிற நலத்திட்டங்களுக்கும் பயன்படுத்த வேண்டும் என அறநிலையத்துறை அமைச்சரை வேண்டிக் கேட்டுக் கொண்டார். அத்துடன் ஆதரவற்றோர் இல்லம் அமைப்பதற்கும், சமூகத்தில் கீழ்நிலையில் உள்ள பெண்களுக்கும் கோவில் நிதியினைப் பயன்படுத்துவது சிறந்த சேவையாக அமையும் என எடுத்துக்காட்டியுள்ளார்.

7. முதிய பெண்களுக்குக் கல்வி

எண்ணற்ற ஆதரவற்ற பெண்கள், தத்தம் குழந்தைகளுடன் வசிக்க வாழ்வாதாரமின்றித் தவிக்கின்றனர். அத்தகைய பெண்களுக்குக் கல்வி அளித்து அவர்கள் தங்க விடுதியும், குழந்தைகள் வசிக்க 'இல்லமும்' கட்ட வேண்டும் என்றார். அத்துடன், பெண்கள் இண்டர்மீடியட், மற்றும் இளங்கலைப் பட்டப்படிப்புகளை வீட்டிலிருந்தே படித்துத் தனியாகத் தேர்வு எழுத வசதி செய்து தரவேண்டும் என்றுரைத்தார்.

இவை தவிரத் தொழிற்கல்வி, தமிழ்வழிக்கல்வி, மாநிலங்களை மாற்றி அமைத்தல், மக்கள் தொகைப் பெருக்கத்தினைக் குடும்பக் கட்டுப்பாடு வழியாகக் கட்டுப்படுத்துதல், கூட்டுறவு அடிப்படையில் ஆதரவற்ற பெண்களுக்கு இல்லங்கள் அமைத்தல், பிச்சைக்காரர் ஒழிப்புத் திட்டம், குடிசைத் தொழில் வழியாக ஏழைமக்களின் வருவாய் பெருகுதல், குறைந்தவட்டியில் உழவர்களுக்குக் கடன் அளித்தல், குடிசையின் வாடகையினை வரைமுறைப்படுத்துதல் எனப் பல நலத்திட்டங்களை வடிவமைத்து, அதற்கான வழிமுறைகளையும்

எடுத்துக்காட்டிச் சட்டமன்றத்தில் உரையாற்றியுள்ளமை பிரமிக்கத்தக்கதாய் உள்ளது எனில் மிகையிலை.

இலக்கியப் பணிகள்

'பகவத்கீதை' பெரும்பாலும் சமஸ்கிருத, ஆங்கில மொழியிலேயே காணப்பட்டது. அனைவராலும் படிக்க இயலாத நிலையில் இருந்ததால் பகவத் கீதையினைத் தமிழில் எளிய உரையுடன் எழுதி வெளியிட்டுள்ளார். 1928ஆம் ஆண்டு 'சாரதா மகளிர் சங்கம்' இந்நூலினை வெளியிட்டது. 18 அதிகாரம் கொண்ட இந்நூலின் பாடல்கள் சமஸ்கிருத மொழியிலும், உரை வார்த்தைக்கு வார்த்தை தமிழிலும் இடம்பெற்றிருத்தல் இதன் சிறப்பு.

தனது சிறுவயதில் இராமாயணப் பாடல்களைத் தனது தாய், சித்தியிடம் பயின்றவர் சுப்புலட்சுமி. எனவே "வால்மீகி இராமாயணப் பாட்டு மற்றும் ஞானராமாயணக் கப்பல்" எனும் நூலினைத் தமிழில் எழுதி 1906ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். பால, அயோத்தியா, ஆரண்யா, கிஷ்கிந்தா, சுந்தர, யுத்தம் என ஆறு காண்டங்களைக் கொண்ட இந்நூல் அனைவருக்கும் புரியும் வண்ணம் எளியமுறையில் எழுதப்பட்டிருந்தது. 1906ஆம் ஆண்டே, இராமாயணத்தின் உத்தரகாண்டத்தினை அடிப்படையாகக் கொண்டு 'குசேலவாக்கியம்' எனும் நூலினை வெளியிட்டுள்ளார்.

'ஆனந்தன்காடு' எனும் நூலின் முதற்பதிப்பு 1907ஆம் ஆண்டும், 9ஆவது பதிப்பு 1933ஆம் ஆண்டும் வெளியானது. இறைவன் கிருஷ்ணனிடம் சண்டையிட்டு முக்தி பெற்ற ஸ்ரீவாங்கல் (Srivangal) எனும் துறவி பற்றிய கதையினை இந்நூல் எடுத்துரைக்கிறது. இவை தவிர ஸ்ரீபார்வதி அம்மன் சோபனம் (1907), ஸ்ரீ லலிதாம்பாள் சோபனம் (1908 & 1941), குறவஞ்சி (1938), வேதாந்தப் பாட்டு (1907) முதலான நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். மேற்குறித்த நூல்கள் அனைத்தும் இலண்டனில் உள்ள பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் உள்ளன.

தனது பணிக்காலத்திலும் விதவையர் இல்லப் பெண்களை அழைத்துக் கொண்டு சுற்றுலா என நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று தனது கல்விக் கொள்கைகளை மக்களிடம் எடுத்துரைத் துள்ளார். வாழ்நாள் முழுவதும் தனது உழைப்பினைக் கல்வி, ஆதரவற்றோர், பெண்களுக்கு எனச் செலவிட்டு நல்வாழ்வு வாழ்ந்த சமூகச் சீர்திருத்தவாதியான சகோதரி சுப்புலட்சுமி

டிசம்பர் 20, 1969ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார். அவர் மறைந்தாலும், அவர் விதைத்து விட்டுச் சென்ற அமைப்புகள் இன்றுவரை அவர் புகழ்பாடிக் கொண்டுதான் இருக்கின்றன.

துணைநூல்கள்

ஆங்கில நூல்கள்

1. Felton, Monica, A Child Widow's story, Victor Gollanes Ltd. London, 1966.
2. Malathi Ramanathan, Sister R.S. Subbulakshmi Social Reformer and Educationist, Sukumar Damle, Bombay, 1989.

தமிழ் நூல்

1. தமிழ் நிலவரலாறு, கோ. தங்கவேலு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1976.

இதழ்கள் (கட்டுரை)

1. 'என் கல்லூரி அனுபவங்கள்', சகோதரி சுப்புலட்சுமி, கல்கி, தமிழ் மாத இதழ், 27.1.1957.
2. தன்வரலாறு, ஜகன்மோகினி, தமிழ்மாத இதழ், சன/ 1951 முதல் டிசம்பர் 1953 வரை.

சட்டமன்ற உரைகள்

Vol. IV, Vol. V, Vol. VI, Vol. VII, Vol. X, Vol. XII, Vol. XVI.

சமூகச்சேவகி டி.வி.எஸ். சௌந்தரம்மாள்

வீ. ரேவதி

முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை
(தொல். நூற்பா. 33)

என்று தொல்காப்பியர் கூறுவார். ஆண் வர்க்கத்தார் காலந் தோறும் பெண்களுக்கென வரையறைகளை வகுத்துச் செயற் படுத்தி வந்துள்ளனர். சங்ககாலந்தொட்டே பெண்களுக்கான வரையறைகள் இருந்துவந்துள்ளன. மகளிர்க்கான மசோதா மாநிலங்கள் அவையில் நிறைவேற்றப்பட முடியாத நிலை தொடருவதைக் கவனிப்போமெனில் தொடர்ந்து பெண்களுக் கான ஒடுக்குதல் நிகழ்வதை உணரலாம். காலந்தோறும் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்கள் நடந்து வருவதும் வரலாற்றின் அடிச்சுவடுகளாகும்.

கல்வி உரிமை பெறுவது, வாக்குரிமை பெறுவது, பெண்கள் கோயில் கருவறைக்குள் செல்ல அனுமதி பெறுவது, பெண்கள் ஆண்களுக்கு இணையானவர்களாக இருப்பது எனும் பல உரிமைகள் பெறுவதற்குப் பல சீர்திருத்தவாதிகள் காலந்தோறும் உருவாகி வருகின்றனர்.

சமூகச் சீர்த்திருத்தவாதிகளாகப் பலர் பணி செய்ய முன் வருகின்றனர். பலர் சமூக மாற்றத்திற்கானப் போராளிகளாக உருவாகின்றனர். பெண்களின் வரலாறு இன்று தங்களைப் புதிதாகக் கண்டுபிடித்துக் கொள்ளத் தொடங்கியுள்ளது. ஏன்? எதற்கு? எனும் கேள்விகளை முன்வைத்து எழத் தொடங்கிய காலம் கி.பி. 19ஆம் நூற்றாண்டில் தொடங்கிவிட்டது.

இருபதாம் நூற்றாண்டு இந்திய வரலாற்றில் மிக முக்கியமானதாகும். 1857இல் முதல் சுதந்திரப் போர் என வரலாற்றாசிரியர் குறிப்பிடுவர்.

> இந்திய இராணுவத்தில் சிப்பாய்களின் புரட்சி நடைபெற்றது. இப்புரட்சி இந்திய சிப்பாய் கலகம் என்றும், 1857ஆம் ஆண்டு புரட்சி என்றும், இந்தியாவின் முதல் சுதந்திர உரிமைப் போர்

என்றும் வரலாற்று ஆசிரியர்களால் அழைக்கப் படுகிறது. இப்புரட்சி ஜனவரி திங்கள் கல்கத்தாவிற்கு அருகிலுள்ள "டம்டம்" நகரிலிருந்து ஆரம்பித்தது.

(ஜேராவ், டி சர்னா, இந்திய வரலாறு, ப. 90, 1988)

அன்று தொடங்கிய சுதந்திரப் போராட்டம் 1947இல் அதாவது இருபதாம் நூற்றாண்டு மத்தியில் முடிவுக்கு வந்தது. சுதந்திரப் போராட்டக் காலத்தில் பங்கெடுத்துச் சுதந்திரம் பெற்ற பின்பும் தொடர்ந்து நாட்டு நலனில் அக்கறை கொண்டு பாடுபட்டவர்கள் பலருண்டு. அதில் சமூகச் சேவகி டி.வி.எஸ். சௌந்தரம்மாள் வகித்த பங்கு குறிப்பிடத் தகுந்ததாகும். சுதந்திரப் போராட்டத்துக்கு முந்தியும் பிந்தியும் நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் வாழ்ந்து சேவை செய்துள்ளார்.

டி.வி.எஸ். அய்யங்கார் திருநெல்வேலிச் சீமையிலே திருக்குறுங்குடி எனும் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் 15ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டுள்ள உயர்ந்த கோபுரம் கொண்ட வைணவக் கோயில் பதியில் பிறந்தவர். மோட்டார் கார் தொழில் செய்து இன்று இந்தியத் தொழிலதிபர்களுள் முதன்மையிடம் பெற்றுள்ளவர். அன்னாரது புதல்வியே டி.வி.எஸ். சௌந்தரம்மாள்.

அக்காலக்கட்டத்தில் பெண்கள் பூப்படையும் முன்னரே சிறுமி எனும் நிலையில் திருமணம் செய்து வைக்கப்படும் முறைமை வழக்கில் இருந்தது. எனவே சௌந்தரம்மாள் சிறு வயதுப் பெண்ணாக இருந்தபோதே மணமுடிக்கப் பெற்றார். இந்த வகைச் சிறுவயதுப் பெண்களுக்கான திருமணம் கூடாது எனும் கருத்து 1872இல் பிரம்ம சமாஜ தலைவர்களுள் ஒருவரான கேசவ சந்திர சென் அவர்களால் முன்வைக்கப்பட்டுச் சட்டமாகி முடிவுக்குக் கொண்டு வரப்பெற்றது. இளம்பெண் ஆவதற்கு முன்பே அவர்தன் கணவரை இழக்க நேரிட்டது. இளம்பெண் சௌந்தரம்மாள் கல்வியில் மிகத் திறமையுடன் விளங்கியதால் பெற்றோர் அவரை மருத்துவப் படிப்பில் தேர்ச்சி பெறச் செய்து மருத்துவராக்கினர். மகாத்மா காந்தி அவர்களின் தலைமையில் காங்கிரஸ் பேரியக்கத்தால் இந்தியா முழுவதும் சுதந்திரப் போராட்டம் நடத்தப்பட்டுக் கொண்டிருந்தபோது அப் போராட்டத்தில் பலரும் தங்கள் பங்களிப்பினைச் செலுத்தினர். இதனை அறிந்த சௌந்தரம்மாள் காந்தியின் தேசிய இயக்கத்தில் சேர்ந்தார். அச்சமயம் மகாத்மா காந்தி பலருக்கும் இலவச மருத்துவ சேவை புரியும் சேவாஸ்ரமம் ஒன்றினை மறைந்த தன்

மனைவி கஸ்தூரி பாய் பெயரில் நிறுவினார். கஸ்தூரி பாய் பெயரில் நிதி சேகரித்துப் பெண்களுக்கான சேவை புரிய வேண்டுகோள் விடுத்தார். காந்தி அடிகளின் வேண்டுகோளினை ஏற்றுப் பலரும் நிதி நல்கினர். பலர் அந்நிறுவனத்தில் பணியாற்ற முன் வந்தனர். அவ்வழியே சௌந்தரம்மாளும் அந்நிறுவனத்தில் சேவை செய்ய முன்வந்தார். சௌந்தரம்மாள் தானும் தன் மருத்துவத் தொழிலை, சமூகச் சேவை செய்யும் உயர்நோக்கில், அங்கு வரும் ஏழை நோயாளிகளுக்கு மருத்துவம் செய்ய எண்ணி, அவ்வாஸ்ரமத்தில் சேர்ந்தார். தொடர்ந்து காந்தீயச் சிந்தனையில் ஈடுபட்டார்.

காந்தி சேவாகிராமம் என்பது மத்தியப் பிரதேசத்திலுள்ள வார்தா எனுமிடத்தில் உள்ளது. அங்கு அவர் பணியாற்றி வந்தார். அச்சமயம் மகாத்மா காந்தியின் சிந்தனையில் ஒருங்கிணைந்து செயற்பட்டுக் கொண்டிருந்த காந்தீயச் சிந்தனைவாதி ஜி. ராமச் சந்திரன் எனும் கல்வியாளரைச் சந்தித்தார். இருவருக்கும் காதல் மலர்ந்தது. அவர்கள் இருவரும் மகாத்மா காந்தி தலைமையில் திருமணம் செய்துகொள்ள அவரை நாடினர். அப்பொழுது காந்தி அடிகள் அவர்களை வாழ்த்தி வேண்டுகோள் ஒன்றினை முன்வைத்தார். உண்மையான காதலராகிட, இறுதி வரை உறவாடி வரும் காதலாக மாறிட, இருவரும் ஓராண்டுக் காலம் உறவாடாது இருக்கும்படிக் கேட்டுக்கொண்டார். இருவரும் அவரின் அறிவுரையை ஏற்றுக் கொண்டனர். அதன்படி ஓராண்டு கழித்து மகாத்மா காந்தி தலைமையில் திருமணம் செய்து கொண்டனர். டி.வி. எஸ். ஐயங்காரின் மகளான சௌந்தரம் அம்மையார், பிறப்பாலும் வசதி வாய்ப்பாலும் உயர்ந்திருந்தார். ஜி. ராமச்சந்திரன் அவர்களின் சேவை மனம், காந்தீயச் சிந்தனை இவற்றையே பெரிதாகக் கருதி மணம் செய்து கொண்டு தன் இல்லறவாழ்க்கையை இனிதே தொடங்கினார்.

இராமாமிர்தம், முத்துலட்சுமி ரெட்டி, ருக்மணி அருண்டேல் (அடையாறு கலாச்சேத்திரா) போன்றோர் தத்தம் வழிகளில் மக்கள் பணிகள் செய்து வந்தனர். சௌந்தரம் அம்மையாரும் காந்தீயச் சிந்தனைகளின் வழியே மக்கள் பணிகளைச் செய்ய முன்வந்தார். சென்னையில் மருத்துவச் சேவை மையம், சேவிகா ஆசிரமம் ஆகிய நிறுவனங்களை நிறுவினார். பின்னர்க் கிராமங்களை முன்னேற்ற வேண்டும் எனும் காந்தி அடிகளின் வேண்டுகோளை ஏற்றுத் திண்டுக்கல் அருகே அவரின் பெயரால் காந்தி கிராமத்தை உருவாக்கினார்.

- கணவனால் கைவிடப்பட்ட பெண்கள்
- விதவைப் பெண்கள்
- ஆதரவற்ற பெண்கள்
- அனாதைப் பெண்கள்
- வாழவழி வகையற்ற ஏழைப் பெண்கள்
- முதுமையடைந்த பெண்கள்

எனப் பெண்கள் முன்னேற்றத்துக்காகச் சென்னையில் இருந்த மையங்களின் கிளைகளாக மருத்துவச் சேவை மையமும், கிராம சேவிகா ஆசிரமமும் நிறுவினார்.

மகளிர் மற்றும் குழந்தைகளுக்குக் கல்வி மற்றும் இதரப் பயிற்சிகளை அரசின் துணையுடன் அளித்து வந்தார். காந்திய நிர்மாணத் திட்டங்களை நிறைவேற்றி வந்தார். காந்தி அறிவித்த சுதந்திரப் போராட்டங்களில் தொடர்ந்து பங்கெடுத்து வந்தார்.

1930 ஏப்ரல் 6இல் உப்புச் சத்தியாகிரகம் நடத்திடக் காந்தி அடிகள் அறைகூவல் விடுத்தார். வேதாரண்யத்தில் உப்புச் சத்தியாகிரகம் செய்ய இராஜாஜி அவர்களுடன் சேர்ந்து சௌந்தரம் நடைப்பயணம் சென்று போராடியபோது கைது செய்யப்பட்டார்.

கோயில் நுழைவுப் போராட்டம் நாடெங்கும் காந்தி அடிகளால் அறிவிக்கப்பட்டுக் காங்கிரஸ் பேரியக்கத் தொண்டர்கள் வழியே அப்போராட்டம் நடைபெற்றது. காங்கிரஸ் தொண்டர் வைத்தியநாதய்யர் தலைமையில் 1939 ஜூலை 8ஆம் நாளன்று காலை 8.45க்கு மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குள் அரிசன மக்களைக் கூட்டிக் கொண்டு கோயில் நுழைவுப் போராட்டத்தை நடத்தினர். அப்போராட்டத்தில் கக்கன்ஜி போன்றோருடன் கலந்துகொண்டு தடியடிப் பிரயோகத்திற்கும் ஆட்பட்டார்.

> *இனி, தீண்டப்படாத சகோதரர்களுக்கு ஒரு வார்த்தை சொல்ல ஆசைப்படுகிறேன். அதாவது தீண்டப்படாத சகோதரர்கள் கோவில் பிரவேசம் செய்யக் கஷ்டப்படுவதைப் பார்க்கிலும் மக்களுக்கு ஒரு சின்ன உதவியும் இல்லாத அக்கோயில்களை ஒழிக்கச் சத்தியாக்கிரகம் செய்ய முயற்சிப்பது பலவகையிலும் நன்மையுண்டு*

எனக் கூறுகிறோம். கோவிலினுள் சென்றால் நமக்கு என்ன பலன்? ஒன்றுமில்லை. ஏன் இவ்விதக் கஷ்டப்பட்டுக் கோயில் நுழைவுக்கு வழிதேட வேண்டும். இதைவிட எல்லா மக்களுக்கும் உதவியற்ற அக்கோயில்களை ஒழிக்க வழிதேடுவதே சீர்திருத்தம், பகுத்தறிவு என மறுமுறையும் கூறுகின்றோம் (குடியரசு, 24-4-1932, ப. 7)

என்று வைதீகர்களின் கொட்டத்தை அடக்கவும் ஒடுக்கவும் தாழ்த்தப்பட்ட மக்களின் குரலாக அதி தீவிரமாகக் கருத்துகளை முன்வைத்தவர் தோழர் சிவகாமி சிதம்பரனார். இவ்வளவு தீவிரமான கருத்துடைய பெண்களை உருவாக்கியது சுயமரியாதை இயக்கம்.*

1925ஆம் ஆண்டு பெரியார் ஈ.வெ.ரா.வும் எஸ். இராம நாதனும் தோற்றுவித்த சுயமரியாதை இயக்கம் அன்றைய காலக் கட்டத்தில் புரட்சிகரமான இயக்கமாகவே அமைந்திருந்தது. சாதி வேறுபாடு பெண்ணடிமை எனும் இரு மையங்களை நோக்கிய போராட்ட இயக்கமாகவே அன்றைய சூழ்நிலைக்குட்பட்டது.*

1947இல் சுதந்திரம் பெற்ற பின்னர், சுதந்திரத்திற்காகப் போராடியவர்கள் பலர் அமைதி அடைந்தனர். ஆனால் அப்பொழுதும் ஒரு சிலர் மட்டுமே தொடர்ந்து சுதந்திர இந்தியாவை வளப்படுத்த முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டனர். அவர்களுள் சௌந்தரம் அம்மையார் குறிப்பிடத் தகுந்தவர். ஜனநாயக நாட்டில் மக்கள் பணி செய்திடத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்டு வேடசந்தூர் தொகுதியில் வெற்றி பெற்றுத் தமிழகச் சட்டசபை உறுப்பினரானார். அம்மையாருக்கு நேர்முக உதவியாளராகவும் நம்பிக்கைக்குரியவராகவும் இருந்தவர் நஞ்சுண்டார் எனும் ஒரு காந்தீயவாதி. அடுத்து வந்த தேர்தலில் அவரை வேடசந்தூர் தொகுதியில் நிறுத்திக் காங்கிரஸ் கட்சி சார்பில் வெற்றிபெறக் காரணமாக அமைந்தார். தானும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

காந்தி கிராமத்தில் கஸ்தூரிபாய் மருத்துவமனை ஒன்றினை ஏற்படுத்திக் கிராமச் சுற்றுப்புறங்களிலிருந்து வரும் ஏழை எளியோருக்குச் சுகாதார சேவை செய்து கிராமச்

* முனைவர் மு. வளர்மதி, சுயமரியாதை இயக்க வீராங்கனைகள் - 2, ப. 13.

சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை அரசுக்கும் எடுத்துக் கூறி முன் மாதிரியான ஒரு கிராமச் சுகாதாரம் தொடர்ந்து நிலைபெறப் பாடுபட்டார்.

குழந்தைக் கல்வி, பெண் கல்வி, ஏழைக் கல்வி எனும் பல்வேறு நிலைகளில் அம்மையார் கல்விப்பணியில் தொடர்ந்து பாடுபட்டு வந்ததால், அப்போது தமிழக முதலமைச்சராக இருந்த காமராசர் அவர்களால் பாராட்டப்பெற்றார். சௌந்தரம் அம்மையார் ஏழைகள், குழந்தைகள், பெண்கள் ஆகியோருக்காக நடத்தி வந்த கல்விச் சாலைகளில் மதிய உணவு வழங்கிய முறைமை காமராசர் அவர்களுக்குத் தமிழகத்தின் அனைத்துப் பள்ளிகளிலும் மதிய உணவு அளிக்க வேண்டும் என ஆணை யிட்டுச் செயற்படுத்தியமைக்கு முன்மாதிரியாக இருந்தது என்றால் அது மிகையாகாது.

கிராம ஒன்றியங்களை ஒன்றிணைத்து Block Development எனும் பெயரில் பல சேவைத் திட்டங்களை அரசு செயல் படுத்தியது. கிராமங்களின் முன்னேற்றத்திற்காக அம்மையார் பல திட்டங்களை முன்னின்று நடத்தி அரசுக்குத் துணை செய்தார். இந்திய அரசின் மத்திய இணை அமைச்சராக விளங்கிய சௌந்தரம்மாள் மருத்துவராக இருந்தமையால் அப்பதவி சிறக்க இந்திய மக்களுக்காகப் பெரிதும் பாடுபட்டார்.

பிற நாடுகளுடன் இணைந்து அவர்களை இங்கு அழைத்து வந்து, கிராமச் சுகாதாரப் பணிகள் செய்திடத் துணைநின்றார். அரசுக்கும் தான் நிறுவிய காந்தி கிராம சுகாதார நிலையங்களிலும் வெளிநாட்டார் மருத்துவத் துறைகளில் இணைந்து பாடுபடத் துணை நின்றார். கிராம மக்கள் சுகாதார வாழ்க்கை வாழச் சௌந்தரம்மாள் ஒரு முன்னோடியாக இந்தியாவுக்கும் இந்தியக் கிராமங்களுக்கும் விளங்கினார் எனில் அது மிகையாகாது.

தன் கணவர் திருமிகு. ஜி. ராமச்சந்திரன் அவர்களுடன் இணைந்து முயற்சித்து, காந்தி கிராமக் கல்வி நிறுவனங்கள் யாவற்றையும் இணைத்து ஒரு கிராமியப் பல்கலைக் கழகமாக மேம்படுத்தினார்.

- மருத்துவப் பயிற்சி
- ஆசிரியப் பயிற்சி
- கிராமியக் கல்லூரி

- தொடக்கப் பள்ளி
- கஸ்தூரிபாய் மருத்துவமனை
- முதியோர் இல்லம்
- கைத்தொழில் நிறுவனம்
- கிராமியப் பல்கலைக்கழகம்

போன்ற பல நிறுவனங்களைக் காந்தி கிராமத்தில் நிறுவித் தன்னையும் தமிழக வரலாற்றில் ஒரு சாதனைப் பெண்மணியாகப் பதிவு செய்து கொண்டுள்ளார்.

டாக்டர் எஸ். தருமாம்பாள்

ந. தேவி

சமூக வரலாற்றின் ஏடுகளைப் புரட்டிப் பார்க்கும்போது, அதன் வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் வித்திட்ட சான்றோர்களின் வரலாறும் தெற்றென விளங்கும். தமிழ்ச் சமூக வரலாற்றில் விளிம்புநிலை மக்களுக்காகப் போராடி அவர்கள் வாழ்வு மலரவும் தமிழகத்தில் புரையோடிக் கிடந்த சில களைகளை நீக்கிச் சமூக மறுமலர்ச்சிக்கு வழிகோலிய தன்மையினையும் அச்சான்றோர்கள் அமைத்துத் தந்த பாதையில் பயணிக்கின்ற போது உய்த்துணர முடிகின்றது. சமூக மறுமலர்ச்சியில் திராவிட இயக்கத்தின் பங்கு மிகப்பெரிது. இவ்இயக்கத்தின் ஆணி வேர்களாக விளங்கிய சான்றோர்களுள் பெண்களும் அடங்குவர். பல்வேறு போராட்டங்களை முன்னின்று நடத்தி வெற்றி கண்ட பெண்மணிகள் பலர். அவர்களுள் ஒருவராகத் திகழ்பவர்தான் டாக்டர் எஸ். தருமாம்பாள். நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நீர்மை, திமிர்ந்த ஞானச் செருக்கு என்னும் பாரதியின் புதுமைப் பெண்ணின் குணங்களைத் தன்னகத்தே கொண்ட பெருமாட்டி. அத்தகைய பெருமாட்டியின் வாழ்க்கையினையும் சாதனைகளையும் தொகுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

பிறப்பு

தஞ்சை மாவட்டத்திலுள்ள சின்னஞ்சிறிய கிராமமாகிய கருத்தட்டாங்குடி டாக்டர் எஸ். தருமாம்பாளின் பூர்வீகக் கிராமம் ஆயினும், இவர் பிறந்தது திருவையாறு. 1890இல் புரட்டாசி மாதம் கலைமகள் விழா (சரஸ்வதி பூஜையன்று) நாளன்று பிறந்தார். அந்நாளில் பிறந்தமையால் அவரது பெற்றோர் இட்ட பெயர் சரஸ்வதி. திருவையாற்றின் இறைவியின் பெயர் தர்மசம்வர்த்தினி. இப்பெயரைச் சுருக்கிப் பின்னர் தருமாம்பாள் என அழைக்கத் தலைப்பட்டனர்.

வேளாண் செட்டியார் வகுப்பைச் சேர்ந்த சாமிநாதன் என்பவருக்கும் நாச்சியார் என்றழைக்கப்பட்ட பாப்பம்மாள் என்பவருக்கும் திருமகளாய் வந்துதித்த வண்ணமகளே டாக்டர்

எஸ். தருமாம்பாள். இவரது தந்தை சாமிநாதன் துணிவியாபாரம் செய்து வந்தவர். ஆயினும் தமிழ்மீது ஆராப் பற்றுடையவர். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தோடு தொடர்பு கொண்டிருந்தவர். இவரது பாட்டனார் திவான்பேஷ்கராக இருந்தவர். எனவே டாக்டர் எஸ். தருமாம்பாள் மிகப் பெரிய செல்வச் செழிப்பில் வளரவில்லையானாலும் நடுத்தரத்தைத் தாண்டிய வாழ்க்கை வசதிகளோடு (Upper Middle Class) வாழ்ந்தமை புலனாகின்றது.

கல்வி

சிறுவயதிலேயே டாக்டர் எஸ். தருமாம்பாள் தனது பெற்றோரைப் பறிகொடுத்தவர். இவரது வளர்ப்புத் தாயார் இலக்குமி அம்மையார். சிறுவயதிலேயே பெற்றோரை இழந்தமையால் பள்ளி சென்று பயிலும் வாய்ப்பை இழந்தார். இருப்பினும், கல்வி மீது கொண்டிருந்த ஈடுபட்டினால், தனது சுயமுயற்சியில் கல்விகற்க முனைந்தார். தமிழ் உணர்வுமிக்க பாரம்பரியத்தில் பிறந்ததாலோ என்னவோ, தமிழ் மீது தீராத பற்றுடையவராய் அம்மையார் திகழ்ந்தார்.

திருமண வாழ்வு – குடும்பம்

டாக்டர் எஸ். தருமாம்பாள் கலையுணர்வு மிக்கவர். நாடகத் தமிழில் மிகுந்த ஆர்வமுடையவர். எனவே, அக்காலத்தில் சிறந்த நாடக நடிகராகவிருந்த முனுசாமி என்பவரைக் காதலித்து, கணவராகக் கரம்பிடித்தார். நாகபட்டினத்தில் கணவரோடு வாழ்ந்தவர், பின்னர் சென்னையிலேயே நிரந்தரமாகக் குடியேறினார். சென்னை பெத்தநாயக்கன் பேட்டை (தங்கசாலையில்) வாடகை வீட்டில் குடியேறி வாழ்ந்துவந்தார். டாக்டர் சிற்சபை, திரு. சமரசம் ஆகிய இருவரும் இவரது வளர்ப்பு மகன்கள். டாக்டர் சிற்சபையின் மனைவி டாக்டர் சரஸ்வதி. இவர்களுக்கு மூன்று மகன்கள் இரண்டு மகள்கள். திரு. சமரசத்தின் மனைவி திருமதி சீதா. இவர்களுக்கு இரண்டு பிள்ளைகள், இரண்டு பெண்கள். தாயைப் போன்றே அம்மையாரின் இருமகன்களும் சமூக உணர்வோடு வாழ்ந்து வந்தனர். மருமகள்களில் ஒருவர் மருத்துவத் தொண்டும், மற்றொருவர் சமுதாயத் தொண்டும் புரிந்தவர்கள். இவரது பேரன்கள் மூவரும் மருத்துவர்களாகப் பணியாற்று பவர்கள். மருத்துவ அறிவும் சமூக உணர்வும் கொண்ட மாபெரும் குடும்ப அமைப்பினை டாக்டர் எஸ். தருமாம்பாள் பெற்றவராய் இருக்கிறார். அவர் மட்டுமின்றி அவரது வாரிசுகளும் தம்மைச் சமூகத் தொண்டில் ஈடுபடுத்திக் கொண்டு வாழ்பவர்கள் என்பது குறிப்பிடத்தகுந்தது.

சமூகத் தொண்டு புரிதலைத் தன் தலைக்கடனாகக் கொண்டு வாழ்ந்த தருமாம்பாள், அதற்குத் தம்மை மேம்படுத்திக் கொள்ளும் நிலையில் சித்த மருத்துவத்தை நன்கு பயின்று தேர்ச்சி பெற்றவராய், சிறந்த மருத்துவராய் விளங்கினார். அக்காலத்தில் தேர்ச்சி பெற்ற ஒரு சில மருத்துவர்களே சென்னையில் இருந்தனர்.

சித்த மருத்துவர்

1930களின் தொடக்கக் காலத்தில், வேப்பேரி கங்காதர தேவர், தியாகராய நகர் எஸ்.எஸ். ஆனந்தன், சைதாப்பேட்டை தணிகாசல வைத்தியர், தங்கசாலை சி.த. ஆறுமுகம் பிள்ளை ஆகியவர்களே பிரசித்தி பெற்ற சித்த வைத்தியர்களாக அறியப் பட்டனர். இத்தனை ஆண்மக்களுக்கு இணையாகச் சென்னையில் பிரசித்தி பெற்ற சித்த வைத்தியப் பெண் மருத்துவராக விளங்கிய பெருமைக்குரியவர் டாக்டர் எஸ். தருமாம்பாள். இப்பணியே மக்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பை அம்மையாருக்கு ஏற்படுத்திக் கொடுத்தது.

தஞ்சைக் கரந்தையை விட்டுச் சென்னையில் தங்கிய அம்மையார், டாக்டர் எஸ்.எஸ். ஆனந்தம் அவர்களுடன் சேர்ந்து, சித்தவைத்திய முறைப்படி, பற்பொடி, தலைவலி, பேதி மாத்திரைகள் தயாரித்து மக்களுக்கு வழங்கினார். மாநகராட்சி உதவியுடன் பெத்தநாயக்கன் பேட்டையில், தங்கசாலை 330ஆம் எண்ணுள்ள இல்லத்தில் சித்த மருத்துவ மருந்தகம் நிறுவி, ஏழை எளிய மக்களுக்கு மருத்துவத் தொண்டு புரிந்து வந்தார்.

பெரிய நோய்களைக்கூடச் சிறுமருந்துகளைக் கொண்டு தீர்க்கக்கூடியவர். ஏக மூலிகாப் பிரயோகம் செய்து நோய்களைப் போக்கும் ஆற்றலுடையவர். மூன்று மாதக் காலமாகும் கக்குவான் நோயை மூன்றே நாட்களில் குணமடையச் செய்யும் வல்லமை யுடையவர். இவரது இத்திறமையினை டாக்டர் ஆர். தியாகராஜன் (முன்னாள் துணை முதல்வர் - சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங் கோட்டை) அவர்கள் வியந்து பாராட்டி, அத்தகைய ஏகமூலிகாப் பிரயோகத்தைத் தனக்குக் கற்று தந்ததாகவும் குறிப்பிடுகின்றார்.

இத்தகைய ஆற்றலின் காரணமாகப் பொது மக்களின் அன்பைப் பெற்றவராய் அவர்களோடு நெருங்கிப் பழகி மருத்துவராக மட்டும் செயலாற்றாது, அவர்களது சொந்தச் சிக்கல்களுக்கும் உரிய ஆலோசனைகளைத் தந்து வந்தார். இச்செயலே டாக்டர் எஸ். தருமாம்பாள் அவர்கள் பொதுப் பணியிலும் சமூகத் தொண்டிலும் ஈடுபடக் காரணமாயிற்று.

சமூகத் தொண்டும் பெண்கள் முன்னேற்றமும்

சித்த மருத்துவ உலகில் கலங்கரை விளக்காய்த் திகழ்ந்த தருமாம்பாள் சமூகத் தொண்டாற்றுவதிலும் பெரும் பற்றுடையவர். தாய்மார் கழகம், தமிழர் மாதர் கழகம் என்ற இரு அமைப்பை நிறுவிப் பெண்களுக்கு உழைத்தவர். கணவனால் விரட்டப்பட்ட பெண்களை, அவர்களது கணவன்மார்களிடம் வாதிட்டும், மிரட்டியும் அவர்களோடு மீண்டும் அவர்களை வாழச் செய்து, இல்லறத்தை நல்லறமாய் மாற்றிக் காட்டியிருக்கின்றார். கணவனை இழந்த பெண்களுக்கு மறுமணம் செய்து வைத்திருக்கிறார். மேலும் ஒரு சில பெண்களுக்கு அவரவர் நிலைக்குத் தக்கவாறு தொழிற்கல்வி தந்து ஆசிரியர்களாகவும் செவிலியர்களாகவும் வீட்டுவேலை புரிபவர்களாகவும் பணிபுரிய வழிவகை செய்துள்ளார். அவரது உதவியால் எண்ணற்ற மாணவமாணவியர் பள்ளியில் சேர்ந்திருக்கின்றனர். இலவச உணவுடன் கல்வியும் பெற்றிருக் கின்றனர். கல்வி கற்பதற்குரிய நூல்களையும் நோட்டுப் புத்தகங் களையும் இலவசமாகப் பெற்றிருக்கின்றனர். தான் பள்ளியில் சேர்ந்து பயிலாத நிலையில், பல மாணவமாணவியரின் கல்விக்கண் திறந்து வைத்த தமிழ்நாட்டுத் தவப்புதல்வியாய் டாக்டர் தருமாம்பாள் விளங்கியிருக்கிறார். சாதீயச் சிந்தனைகளை முற்றிலுமாக அகற்ற பாடுபட்டவர். இதன் காரணமாக, இவர் முன்னின்று நடத்திய கலப்புத் திருமணங்கள் பல.

பெண்களுக்குக் கல்லூரிகளில் கற்க, இடம் வாங்கித் தருதல், உதவித் தொகை வாங்கித் தருதல், பெண்களுக்கு வேலை வாய்ப்புகள் பெற்றுத் தருதல் எனப் பெண் கல்வி பெற வழிவகை செய்தார். தமிழ் மாதர் கழகத்தின் செயலாளராக இருந்தபோது பெண்களைக் கூட்டி வாரந்தோறும் வகுப்பு நடத்தினார். அசலாம்பிகை அம்மையாருடன் இணைந்து தமிழிலக்கிய வகுப்புகளை நடத்தியிருக்கிறார். பெண்கல்வியின் முக்கியத் துவத்தை வீடுகள் தோறும் வீதிகள் தோறும் சென்று எடுத்துக் கூறிப் பெண் கல்வியின் வளர்ச்சிக்கு அடிகோலினார். பெண்களிடம் கல்வி குறித்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார். தருமாம்பாள் அம்மையார் பலருக்கு வேலைகள் கிடைக்கவும், பிற பல உதவிகளுக்காகவும் திரு. முத்தையா செட்டியார் அவர்களை நாடி உதவி பெற்றிருக்கிறார். இவர் தனக்காக எதையும் கேட்டுப் பெற்றதில்லை. தனக்கென வாழாப் பெருந் தகையாய்ப் பிறர்க்கென மட்டுமே உதவிகள் பெற்ற பெருஞ் செம்மல்.

வேலை கேட்டு வரும் இளைஞர்களுக்கு உரிய வேலை வாய்ப்பை வழங்கியதோடு, பின்னர் கைம்பெண்களுக்கு மறுமணமும் செய்து வைத்தார். பெண்ணுரிமை, சமூகச் சீர்திருத்தம் வேண்டியும் மூடபக்தி, குருட்டு நம்பிக்கை இவற்றை எதிர்த்தும் உயிர்ப்பலி கூடாது என்னும் கொள்கைக்கு ஆதர வாகவும் தருமாம்பாள் அம்மையார் செயல்பட்டார். வேப்பந் தழையுடுத்தி, கோயிலில் வலம் வருதல் என்னும் வேண்டுதலை ஒழிக்க, நேரில் சென்று மக்களிடம் பேசி, அதனையொழிக்க முயற்சி மேற்கொண்டார். திரு.வி.க. தனது நூலில் தருமாம்பாள் மக்களின் உடல்நோய் தீர்க்கும் மருத்துவராக மட்டும் மருவவில்லை என்றும் சமூக நோய் தீர்க்கும் மருத்துவராகவும் மருவுகிறார் என்று குறிப்பிட்டுள்ள செய்தியை, திரு. அன்பு கணபதி குறிப்பிட்டிருப்பது டாக்டர் தருமாம்பாள் அவர்களின் சமூகத் தொண்டிற்கு நற்சான்றாய் அமைகின்றது.

தமிழுணர்வும் இந்தி எதிர்ப்புணர்வும்

கருந்தட்டாங்குடியிலிருந்த தன் இல்லத்தையே கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு அளித்த தமிழுணர்வு மிக்க நங்கை டாக்டர் தருமாம்பாள். தமிழ்நெறிக் காவலர் மயிலை சிவமுத்து அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட 'மாணவர் மன்றம்' பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் தாய்மொழிப் பாசறையாக விளங்கியது. இத்தமிழ்ப் பாசறையின் தலைவராக டாக்டர் தருமாம்பாள் பணியாற்றியிருக் கிறார். ஏறத்தாழ ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தலைமைப் பொறுப்பினை ஏற்று அதன் வளர்ச்சிக்காகப் பாடுபட்டிருக்கிறார்.

தலைமைப் பொறுப்பினை ஏற்பதற்கு முன்பே தம்மை அதன் வளர்ச்சிக்கு அர்ப்பணித்துக் கொண்டவர். திருமதி வா.பா. தாமரைக் கண்ணியார் பதவி வகித்தபோது, மாணவர் மன்றம் நடத்தும் போட்டிகளில் தமிழகப் பள்ளிகள் அனைத்தும் கலந்து கொள்ளப் பெரும்திட்டம் தீட்டப்பட்டது. அதற்கும் பெரும் பொருள் தேவைப்பட்டது. அந்நிலையில் தமிழார்வலர் தர்மாம்பாள் மாணவர் மன்ற ஆதரவாளர்கள் பலரை நேரில் சந்தித்துப் பெரும் பொருள் பெற்று, அத்திட்டத்தை வெற்றி பெறச் செய்தார்.

இவரது தலைமைக் காலத்தில்தான், இவரது முயற்சியால் மாணவர் மன்றத்திற்கு எனச் சொந்த நிலம் முத்தியாலு பேட்டையில் வாங்கப்பட்டது. பின்னர் அந்த இடத்தில் கட்டப்பட்ட கட்டிடம்தான் இன்றும் தலைநிமிர்ந்து நிற்கின்றது.

இன்றுவரை தமிழ் அறிவை மேம்படுத்தும் வகையில் கட்டுரை பேச்சு, கதை, எழுத்துத் தேர்வு எனப் பல போட்டிகளையும் நடத்தி வருகின்றது.

தமிழுக்காக மட்டுமல்லாது தமிழ்ப்பணியில் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட தமிழாசிரியர்களுக்காகவும் குரல் கொடுத்தார். 1940களுக்கு முன்னர்த் தமிழாசிரியர்களுக்குச் சமூகத்திலும் அரசிலும் பெரிதாக மரியாதை இல்லை. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழாசிரியர்கள் ஊதிய நிலையில் இரண்டாந்தரமாக நடத்தப்பட்டனர். இந்நிலையைக் கண்டித்துப் பெரும்போராட்டம் நடைபெற்றது. இப் போராட்டத்தில் தன்னையும் இணைத்துக் கொண்டு தமிழாசிரியர்களின் உயர்வுக்குக் குரல் கொடுத்தார். தமிழாசிரியர்களின் ஊதியத்தை உயர்த்தவில்லையென்றால் பெண்கள் அனைவரும் சேர்ந்து 'இழவு வாரம்' கொண்டாடுவோம் என அறிவிக்க, அப்போது கல்வி அமைச்சராகவிருந்த திரு. அவிநாசி லிங்கம் பிற ஆசிரியர்களுக்கு இணையான ஊதியத்தைத் தமிழாசிரியர்களுக்கும் வழங்க உத்தரவிட்டார்.

தமிழ்மொழிக்கு எந்நிலையிலும் ஊறு நேரக் கூடாது என்னும் கருத்துடையவர் தமிழன்னை தருமாம்பாள். இவ் எண்ணத்தினைப் பல செயல்பாடுகளின் வழி வெளிப்படுத்தினார். தமிழிசை மறக்கப்பட்டு, தெலுங்கு கீர்த்தனைகள் மட்டுமே பாடப்பட்ட நிலையில், தமிழிசையின் உயிர்ப்புக்காகத் தோற்றுவிக்கப்பட்டது தமிழிசை இயக்கம். அவ்இயக்கத்திலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு தமிழிசை மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டார். முதல் மூன்றாண்டு, தமிழிசை விழாக்களின் வரவேற்புக் குழுவில் இடம்பெற்றிருந்த அம்மையாரின் இசைத் தொண்டு மறக்க, மறைக்கவியலாதது.

திரு. என்.எஸ். கிருஷ்ணன் மற்றும் பாகவதர் மீது இலட்சுமிகாந்தம் கொலைவழக்கு நடந்தபோது, அவ்வழக்கை நடத்தத் தேவைபட்ட பெரும்பொருட் செலவை நிதிதிரட்டி, சேர்த்து வழக்கை நடத்தி, அவர்களை வழக்கிலிருந்து விடுவித்தார். தமிழ் வாழ்ந்தால் தமிழ்நாடு உயரும், தமிழன் உயர்வான் என்ற சிந்தனையோடு தன் வாழ்க்கைப் பயணத்தை மேற்கொண்டவர் டாக்டர் தருமாம்பாள்.

எப்பக்கம் வந்து புகுந்துவிடும்? இந்தி
எத்தனை பட்டாளம் கூட்டி வரும்?

என்னும் பாரதிதாசனின் பாடலைப் பாடிக்கொண்டு, தருமாம்பாள் பெண்கள் படைக்குத் தலைமை தாங்கி நடந்துவர, பொதுமக்கள் இந்தி ஒழிக! தமிழ் வாழ்க! என முழங்கினர். இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் தலைவர் ஈ.வெ.ரா. அவர்களின் கட்டளையை ஏற்று அவர் நடத்திய அப்போராட்டத்தில் தருமாம்பாள் மற்றும் பிற பெண் போராட்டக்காரர்கள் அனைவரும் சிறைக்குச் சென்றனர். மொழிப் போரில் பெண்கள் கலந்து கொண்டது அதுவே முதல் முறையாகும். அந்தக் காலக் கட்டத்தில்தான் தர்மாம்பாள் சென்னை ஒற்றவாடை தியேட்டரில் பெண்கள் இந்தி எதிர்ப்பு மாநாட்டை முன்னின்று நடத்தினார். இம்மாநாட்டில் அம்மையார், ஈ.வெ.ரா. என அழைக்கப்பெற்ற ஐயா அவர்களுக்குப் "பெரியார்" என்னும் பட்டத்தை வழங்கினார்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் வலுப்பெற்றபோது தமிழ்நாடு முழுவதும் பயணம் செய்து இந்தி எதிர்ப்புக்குழு சென்னைக்கு வந்தது. அக்குழுவை வரவேற்கப் பொருளும், மனமும் அற்றவர்களாய்ப் பலர் இருந்தனர். அக்குழுவை வரவேற்க முன்னரே வந்த 'முன்னேற்பாட்டுக் குழு' செய்வதறியாது திகைத்தது. இந்நிலையில் செய்தியறிந்த தருமாம்பாள் அம்மையார் முன்னேற்பாட்டுக் குழுவை அழைத்து நான் வரவேற்கிறேன் என உறுதிமொழி வழங்கியனுப்பி வைத்தார். பிறகு குமாரராஜா முத்தையா செட்டியாரை நேரில் சந்தித்து வரவேற்பில் கலந்து கொள்ள வேண்டுகோள் விடுத்தார். அவரது உதவியால் மறைமலையடிகள் தலைமையில், மிகச் சிறந்த வரவேற்பைத் திருவல்லிக்கேணி கடற்கரையில் இந்தி எதிர்ப்புத் தொண்டர் படைக்குக் கொடுத்துக் கௌரவித்தார்.

பட்டம்

எடுத்த காரியங்களில் எல்லாம் துணிவுடன் செயல்பட்டுப் பெண் சிங்கமாய் வாழ்ந்தவர் டாக்டர் தருமாம்பாள் அம்மையார். வீரத்தமிழன்னை என்ற பட்டத்தைத் தமிழறிஞர் டாக்டர் அ. சிதம்பரநாதன் வழங்கினார்.

இறந்தும் வாழும் பெண் ஒளி

பெண்ணினத்திற்குத் திலகமாய், பெண்ணினத்தின் பெரு விளக்காய் விளங்கிய டாக்டர் எஸ். தருமாம்பாள் 1959 ஆம் ஆண்டு மே 21ஆம் நாளன்று மண்ணிலிருந்து மறைந்து, மக்களின் உள்ளங்களில் வாழ்ந்து வருகின்றார்.

பெண் கல்விக்கு ஏற்றம் பல கண்டவராகையால் இவரது பெயரில், தருமாம்பாள் மகளிர் பாலிடெக்னிக், மற்றும் தருமாம்பாள் உயர்நிலைப்பள்ளி ஆகியன காணப்பட்டிருக் கின்றன. தருமாம்பாள் அம்மையாரின் நினைவாக விதவை மறுமண உதவித் தொகையும் கலப்புத் திருமண உதவித் திட்டமும் அவரது பெயரால் செயற்படுத்தப்படுகின்றன.

தொகுப்புரை

பெண்கல்வி, பெண்கள் முன்னேற்றம், விதவை மறுமணம், கலப்புத் திருமணம், தமிழ் வளர்ச்சி, இந்தி எதிர்ப்பு எனத் தம் வாழ்வையே சமூகத்திற்கும் தமிழுக்குமென அளித்த கொடை யாளி டாக்டர் எஸ். தருமாம்பாள். தமிழ்ப் பெண்மையின் அறிவு, வீரம், தொண்டு ஆகியவற்றிற்கு அவர் வாழ்வினும் சிறந்த எடுத்துக்காட்டுக் காணலரிது எனப் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை போற்றும் பண்பாளர் டாக்டர் எஸ்.தருமாம்பாள்.

துணை நூல்கள்

1. ஆலந்தூர் கோ. மோகனரங்கன் (தொகுப்பாசிரியர்), வீரத் தமிழன்னை டாக்டர் தருமாம்பாள், சென்னை: எம். வெற்றியரசி (வெளியிடுவோர்), 2004.
2. பெம்பொழில் மீரான், தலைநிமிர்ந்த தமிழச்சிகள், சென்னை: தோழமை வெளியீடு, 2007.
3. Vetri-vel - Tamil women in Tamil Society, Early 1900s - Part 2. Dravidian Politics Wednesday, Jan. 31, 2007.
4. Blogs about Dharmambal - Thiruvengimalai Saravanan, (Tamil News BBC, Dinamani, Dinamalar et.al)
5. Google.com. - திராவிடத் தூண் தர்மாம்பாள் - மதுரம்.

அன்னை நாகம்மையார்

மு. வளர்மதி

"இந்திய நாட்டில் பெண்கள் சகலதுறைகளிலும் தீண்டப் படாத மக்கள் அடைந்து வரும் கஷ்டத்தையும், இழிவையும், அடிமைத்தனத்தையும் விட அதிகமாகவே அனுபவித்து வருகிறார்கள்" என்று பெண்களின் அவல நிலையை உணர்ந்து கூறியவர் தந்தை பெரியார். பெண் இனத்திற்காக, பெண் விடுதலைக்காக, தனது இறுதி மூச்சுவரை எழுதியும், பேசியும், போராடியும் வந்தவர். அவர் எடுத்த அனைத்து விதமான கொள்கை முடிவுகளுக்கும் தோள்கொடுத்துச் செயல்பட உறுதுணையாக நின்ற துணிவு மிக்க வீராங்கனைகள் ஏராளமானோர். சிறு கிராமங்கள் முதல் பெரு நகரங்களில் வாழும் பெண்கள் வரை தந்தை பெரியாரின் வழிகாட்டலில் செயல்படுவதற்கு அஞ்சா நெஞ்சம் படைத்தவர்களாகத் திகழ்ந்தனர் என்பதை அவர்களுடைய வரலாறு காட்டுகிறது. இவ்வகையில் முதல் மரியாதைக்குரியவர்கள் பெரியார் குடும்பத்துப் பெண்களாவர்.

காங்கிரசுக் கட்சி தமிழகத்தில் மூலைமுடுக்கெல்லாம் பரவி வேரூன்ற மூலவர்களாக இருந்தவர்கள் சேலம் டாக்டர் வரதராசுலு நாயுடு, ஈரோட்டுப் பெரியார் ஈ.வெ.ரா, தமிழ்த் தென்றல் திரு.வி.க. ஆகிய மூவர். அந்தக் காலத்தில் இவர்களை நாயுடு, நாயக்கர், முதலியார் என்று அழைப்பது ஒரு வழக்கமாக இருந்தது. அந்த மூவருள் ஒருவரான பெரியார் தாம் மட்டு மல்லாமல் தமது குடும்பத்தையே காங்கிரசு இயக்கப் பணியில் ஈடுபடச் செய்தவர். காங்கிரசில் தந்தை பெரியார் இருந்தபோதும், காங்கிரசைவிட்டு வெளியேறிச் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்து அக்கொள்கைகளுக்காகப் பாடுபட்ட போதும் பெரியாருக்கு உறுதுணையாக இருந்தவர்கள் மனைவி நாகம்மையாரும், தங்கை கண்ணம்மாளும் ஆவர். இவர்கள் சுயமரியாதை இயக்கத்தின் தலைமை வீராங்கனைகளாக இருந்தவர்கள் எனக் குறிப்பிடலாம்.

புரட்சிகரமான கருத்துகளை, சிந்தனைகளைத் தமிழ் மக்களிடையே பரப்புகின்ற பணியிலும், போராட்டக் களத்திலும், பெரியாருக்குத் துணையாய் நின்று தோள் கொடுத்தவர் அவருடைய முதல் மனைவியான நாகம்மையார். 1885ஆம் ஆண்டு சேலம்

மாவட்டம் தாதம்பட்டி கிராமத்தில் ரங்கசாமி- பொன்னுத்தாயி தம்பதியினருக்கு மகளாகப் பிறந்தவர் நாகம்மை. பெரியாரின் தாயார் சின்னத்தாயம்மைக்கு ஒன்றுவிட்ட தம்பிதான் நாகம்மையின் தகப்பனார். ஆகையால் நாகம்மை பெரியாருக்கு உறவுப் பெண்ணாக இருந்ததால் இருவரும் சிறு வயது முதல் பழகி வந்தனர். குழந்தைப் பருவத்திலேயே நாகம்மை நல்ல தோற்றம் உடையவர். சிறந்த குணம் படைத்தவர். ஒருவர் மேல் ஒருவர் கொண்ட பாசமும் பற்றும் அவர்கள் வளர வளர அதுவே காதலாக மாறியது. மணந்தால் உன்னைத்தான் மணப்பேன் என்று இருவரும் உறுதி எடுத்துக் கொண்டார்கள்.

தாய் தந்தையர் பெரியாருக்கு வேறொரு பணக்காரக் குடும்பத்தில் பெண்பார்க்கத் தொடங்கிவிட்டனர். இச் செய்தியை அறிந்த பெரியார் 'நான் நாகம்மாளையே மணப்பேன்; வேறொரு பெண்ணை மணக்க மாட்டேன்' என்று உறுதியாகக் கூறிவிட்டார்.

> *நாகம்மாள் பிறந்த குடும்பம் பணம் படைத்ததன்று. அவரை ஈ.வெ.ரா.வுக்கு மணமுடிக்கப் பெற்றோருக்கு விருப்பமில்லை. அவர் விருப்பத்துக்கு மாறாகவும் செய்ய முடியவில்லை. இவரைப் போலவே நாகம்மாளும் இவரையே மணக்க உறுதி கொண்டிருந்தார். அம்மையாரின் பெற்றோர்கள் இவ்உறுதியை அறியாதிருந்தனர். ஆதலால் அவரை மற்றொருவருக்கு மணம் பேசினர். நாகம்மைக்குக் கணவராக முதலில் மணம் பேசப்பட்டவர் முதிர்ந்த வயதினர். முன்னரே இருமுறை மணம் புரிந்து கொண்டவர். இரு மனைவிகளையும் இழந்தவர். இவரைத் தன்க்குக் கணவராக மணம் பேசும் செய்தியை நாகம்மையார் அறிந்தார். அம்மையார் தனது எதிர்கால வாழ்க்கை நலனைக் கருத்திற் கொண்டார். பெற்றோரால் முடிவு செய்யப்படும் அத்திருமணத்திற்குத் தான் இணங்க முடியாதெனக் கூறிவிட்டார். 'மணந்தால் ராமசாமியை மணப்பேன்; இன்றேல் தற்கொலை செய்து கொண்டு இறப்பேன்' என்று முடிவாகச் சொல்லி விட்டார். இச்சமயம் அம்மையாருக்கு வயது 13 தான். இறுதியில் இராமசாமிக்கும், நாகம்மாளுக்கும் திருமணம் நடத்தப்பட்டது.*
>
> *(தமிழர் தலைவர், சாமி சிதம்பரனார், பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை, பன்னிரண்டாம் பதிப்பு, ப.39, 2001).*

முதலில் பெரியாரின் தாயார் இத்திருமணத்திற்கு எதிர்ப்பாக இருந்தாலும் திருமணத்திற்குப்பின் நாகம்மையைத் தன் மருமகளாக ஏற்றுக்கொண்டு ஆசாரம் மிக்க தம் குடும்பப் பழக்கவழக்கங்களை நாகம்மைக்குக் கற்றுக் கொடுத்தார். நாகம்மையும் அவருடைய கட்டளைப்படி நடந்து அவருடைய அன்பைக் குறுகிய காலத்திலேயே பெற்றுவிட்டார். வைணவ மதப் பழக்க வழக்கங்களைப் பின்பற்ற வேண்டும் என்று கட்டளையிட்டனர். அம்மையாரும் அவர்கள் விருப்பப்படியே நோன்பு இருந்தது, மதச் சின்னங்களை அணிவது, கோயில்களுக்குச் செல்வது என இருப்பது பெரியாருக்குப் பிடிக்கவில்லை. அம்மையாரைச் சீர்திருத்த வேண்டுமென முடிவு செய்து கொண்டார்.

அசைவ உணவு உண்பது, ஆசாரமற்றவராக இருப்பது, குளிக்காமல் இருப்பது போன்ற பழக்க வழக்கங்களால் பெரியாரின் தாயார் சின்னத்தாயம்மையார் தீட்டுபட்டுவிட்ட தென்று தலைமுழுகுவது வழக்கமாக இருந்தது. அவரைப்போல நாகம்மாளும் ஆகிவிடக் கூடாது என்பது பெற்றோரின் நோக்கமாக இருந்தது.

நாகம்மையார் விரதம் இருக்கும் நாளில் அசைவ உணவு சமைத்துப் பரிமாறவேண்டும் என்பது பெரியாரின் பிடிவாதம். நாகம்மையும் கணவர் விரும்பும் உணவைச் சமைத்துப் பரிமாறி விட்டு உடனே நீராடச் சென்று விடுவார். அவ் வேளையில் அம்மையார் சாப்பிடுவதற்காகத் தனியாக மூடி வைத்திருக்கும் சோற்றில் எலும்புத் துண்டை மறைத்து வைத்து விட்டுப் போய்விடுவார். அம்மையார் சாப்பிடும் பொழுது சோற்றுக் குள்ளிருந்து எலும்புத் துண்டைக் கண்டதும் இது அவருடைய வேலைதான் என்பதை உணர்ந்து கொள்வார். பெரியாரின் பெற்றோரும் இவருடைய குறும்புத் தனத்தை அறிந்து நாகம்மையாரை அழைத்து, 'இந்தப் புருஷனைக் கட்டிக் கொண்டு நீ விரதமிருந்து வாழ்ந்தது போதும்; நிறுத்தி விடு' என்று சொல்லிவிட்டனர். அத்துடன் நாகம்மையாரின் வெள்ளிக் கிழமை விரதம் ஒழிந்தது; மற்ற விரதங்களும் நாளடைவில் மறைந்தன.

நாகம்மையார் இதுபோன்று கணவரின் விருப்பத்திற் கேற்பப் பலவற்றை மாற்றிக் கொள்ளும் சூழல் உருவாகிக் கொண்டே இருந்தது. நாகம்மையார் எப்பொழுதாவது கோயிலுக்கு விழாக்காலங்களில் செல்வதுண்டு. அவ்வாறு அவர்

ஒரு முறை சில பெண்களுடன் கோயிலுக்குச் சென்றிருந்தார். அப்பொழுது பெரியார் தன் கூட்டாளிகளிடம் அவர் பின் சென்று எள்ளி நகையாடி ஏளனம் ஏகடியம் செய்யுமாறு சொல்லிவிட்டு மறைந்திருந்து பார்த்தார். நாகம்மையார் இவர்களின் செய்கைகளைக் கண்டு அஞ்சி, நடுநடுங்கி அவர்களிடமிருந்து தப்பி வீடு வந்து சேர்ந்துவிட்டார். இனி, கோயிலுக்குச் செல்வதில்லை எனக் கணவரிடம் நடந்ததைக் கூறினார். இவ்வாறு நாகம்மையாரின் பழக்க வழக்கங்களைச் சிறிது சிறிதாக அவரே மாற்றிக் கொள்ளச் செய்துவிட்டார் பெரியார். கணவர் பக்கத்தில் இருக்கும் போது தாலி இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? என்று பெரியார் கூறியதையும் நாகம்மையார் ஏற்றுக் கொண்டார்.

நாகம்மையார் கல்வி கற்கவில்லை. கடைசிக் காலத்தில் கையெழுத்துப் போட மட்டும் கற்றுக் கொண்டிருந்தார். ஆனாலும் சீர்திருத்தக் கொள்கைகளை எடுத்துக் கூறி விவாதிக்கும் திறமை பெற்ற அறிவாளியாகத் திகழ்ந்தார். விலையுயர்ந்த நகைகள், பட்டாடைகள் அணிவதை வெறுத்தார். முரட்டுக் கதராடை அணிந்தார். நாம் நாட்டில் உள்ள ஏழை எளிய மக்களின் நன்மைக்காக உழைக்கிறோம். நாமும் அவர்களைப் போல ஆடைகள் அணிய வேண்டும் என்ற கருத்துடையவராகப் பொதுவாழ்வில் ஈடுபட்டார்.

நாகம்மையாரின் மற்றொரு சிறப்பு அவருடைய விருந்தோம்பல் பண்பு.

> *நாகம்மையார் உயிரோடிருக்கும் வரையிலும் ஈ.வெ.ரா.வின் வீடு எப்பொழுதும் ஒரு விருந்துக் கூடமாகவே விளங்கும்! அவர் எத்தனை பேரானாலும் முன்னெச்சரிக்கை இல்லாமல் வீட்டுக்கும் சாப்பாட்டுக்கு அழைத்துப் போவார். எந்த நேரத்தில் எவர் சென்றாலும் இரவு 12 மணியானாலும், 'சாப்பிட வாருங்கள் இலை போட்டாயிற்று' என்பதுதான் அம்மையாரின் முதல் உபசாரம். நாகம்மையாரின் கொள்கைகள் இரண்டே ஒன்று! ஈ.வெ.ரா. எக்காரியஞ் செய்தாலும் அதற்குத் தானும் துணை நிற்பது. இரண்டு தன் இல்லத்திற்கு வரும் எல்லோருக்கும் சோறு போடுவது. இந்த இரண்டு கொள்கைகளையும் அவர் இறக்கும் வரையிலும் தவறாமல் பின்பற்றி*

வந்தார். எவ்வளவு பேர் மிகுதியாக உட்கார்ந்து சாப்பிடுகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அவருக்கு மகிழ்ச்சி. அடுத்த பந்திக்கு இன்னும் அதிகமான பேர் வரமாட்டார்களா? என்பதே அவருடைய கவலையாக இருக்கும். ஈ.வெ.ரா.வைச் சதா வையும் ஆண்களானாலும் வீட்டுக்கு வந்தால் உடனே சாப்பாடு போட்டு விட்டுத்தான் வேறு வேலை பார்ப்பார். இன்று தமிழ்நாட்டில் உள்ள அரசியல்வாதிகள் அனைவரும் நாகம்மையாரைப் பற்றி நன்கறிவார்கள். சீர்திருத்தவாதிகள் அனைவரும் நன்குணர்வார்கள். ஈ.வெ.ராவின் அரசியல், சமூக எதிரிகளும் அம்மையாரிடம் மதிப்பும், அன்பும் பாராட்டி வந்தனர். ஈ.வெ.ராவின் பொது வாழ்க்கைக்குக் காரணம் அம்மையாரின் அருங்குணங்களென்பதை எவரும் மறுக்க முடியாது. (மேற்படி, ப.46).

பெரியாரின் பொதுவாழ்வில் பங்கெடுப்பதிலும் துணிவுடன் செயல்பட்டார் நாகம்மையார். இதில் முதல் நிகழ்ச்சியாக அமைவது கள்ளுக்கடை மறியல். இக்கள்ளுக்கடை மறியலில் நாகம்மையாரும் கண்ணம்மாளும் ஈடுபட்டார்கள்.

கள்ளுக்கடை மறியலில் நாகம்மையார்

ஈரோட்டில் ஈ.வெ.ராமசாமியின் மாளிகையில் மகாத்மா காந்தியும் காங்கிரஸ் தலைவர்களும் ஒன்று கூடி காங்கிரசின் முக்கியக் கொள்கையான மதுவிலக்குக் கொள்கைகளைச் செயல் படுத்த கள்ளுக்கடை முன் மறியல் செய்வது எனத் தீர்மானித்தனர். முதல் நடவடிக்கையாகப் பெரியார் தமது தோட்டங்களில் இருந்த சுமார் 500க்கும் மேற்பட்ட தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தினார். இந்த ஈடுபாடே காந்தியும் பிற தலைவர்களும் ஈரோட்டிற்கு வந்து போராட்ட வழிமுறைகளை வகுக்கக் காரணமாயிருந்தது. பெரியார் மீது கொண்ட நம்பிக்கையால் காங்கிரசார் ஈரோட்டிலேயே கள்ளுக்கடை மறியல் போராட்டத்தைத் துவக்கிட நினைத்தனர்.

1921ஆம் ஆண்டில் நடைபெற்ற கள்ளுக்கடை மறியல் மிகவும் புகழ்மிக்க நிகழ்ச்சியாக அமைந்துவிட்டது. இக்கள்ளுக் கடை மறியலைத் பெரியார் தலைமை தாங்கி நடத்தினார். இதற்காக 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. 1921ஆம்

ஆண்டு நவம்பர் மாதம் பெரியாரும் அவருடன் சுமார் 100 தொண்டர்களும் சிறை சென்றனர். ஒரு மாதம் தண்டனை பெற்றனர். இதனால் நாடெங்கும் கலவரம் ஏற்பட்டது. இவ்வேளையில் நாகம்மையாரும், பெரியாரின் தங்கை கண்ணம்மாளும் கள்ளுக்கடை மறியலுக்குப் புறப்பட்டனர். பெண்கள் வீட்டைவிட்டு வெளியே வருவதற்கு அஞ்சும் அக் காலத்தில் பொதுவாழ்வில், அதுவும் இத்தகைய போராட்டத்தில் ஈடுபடுவதென்பது மிகப் பெரிய புரட்சிகர செயலாகும். நாகம்மையார் கண்ணம்மாளுடன் பல பெண்கள் இம்மறியலில் ஈடுபட்டனர். மறியல் செய்பவர்கள் ஆயிரக்கணக்கில் திரண்டனர்.

> *நாகம்மையாரும் அவருடன் சென்ற தோழர்களும் சிறைப்படுத்தப்பட்டால் ஈரோட்டின் நிலைமை மிக்க மோசமாகி 10,000 பேர்களுக்குச் சிறை செல்ல வேண்டியிருக்குமென்று அதிகாரிகள் கருதி, சென்னை அரசாங்கத்துக்குத் தந்தி கொடுத்து முன்னறிவுடன் தடையுத்தரவை நீக்கினர். அதுசமயம் சர்க்கார் 144க்கு மதிப்பற்று வாய்தா காலத்திற்குள் ரத்து செய்யப்பட்டது இது ஒன்றேயாகும். இச்சம்பவத்திற்குப் பிறகு தமிழ் நாட்டில் கள்ளுக்கடை மறியல் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்துவிட்டது. (மேற்படி, ப.68)*

இவ்வேளையில் இந்தியாவில் நடந்து வந்த ஒத்துழையாமை கிளர்ச்சி தொடர்பாகக் காங்கிரசுக்கும், அரசாங்கத்துக்கும் ஒரு சமாதான ஒப்பந்தப் பேச்சு நடைபெற்றது. இதற்காகப் பம்பாயில் 'மாளவியா மாநாடு' என ஒரு மாநாடு கூட்டப்பட்டது. இம் மாநாட்டின் தலைவரான சர். சங்கரன் நாயரும், திரு. பண்டிட் மாளவியாவும் 'கள்ளுக்கடை மறியலை நிறுத்திவிட்டு நடவடிக்கை துவக்கலாம்' என்று காந்தியிடம் கேட்டுக் கொண்டனர். அப்போது காந்தியார்,

> *"மறியலை நிறுத்துவது என் கையில் இல்லை; அது ஈரோட்டிலுள்ள இரண்டு பெண்களிடம் இருக்கிறது. அவர்களைக் கேட்க வேண்டும்" என்று பதிலுரைத்தார். இச்செய்தி அச்சமயம் 19.1.22ஆம் தேதி வெளியான 'ஹிந்து' பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கிறது. காந்தியார் இவ்வாறு சொன்னதற்குக் காரணம், ஈ.வெ.ராவின் மனைவி நாகம்மையார், அவரது தங்கை கண்ணம்மாள்*

ஆகிய இரு பெண்மணிகளும் மறியலுக்கு முக்கியக் காரணமானவர்கள். ஆதலால் அவர்களின் கருத்தையறிந்த பின்பே முடிவு செய்ய வேண்டு மென்று கருதிக் கூறியதேயாகும். (மேற்படி, ப.69)

நாகம்மையார், கண்ணம்மாள் அக்காலத்தில் ஈடுபட்ட இத் துணிவு மிக்க நடவடிக்கை குறித்து தந்தை பெரியாரின் மறைவுக்குப் பிறகு (1973 டிச.24) 26ஆம் நாள் பெரியாரை நினைவு கூர்ந்து பெருந்தலைவர் காமராசர் 'காண்டீபம்' இதழுக்குச் செய்திகளை வழங்கும்போது குறிப்பிட்டுள்ளார். 'பெரியார் பேச்சோடு நில்லாமல் மற்றொரு காரியமும் செய்தார். அதாவது ஈரோட்டில் தானும் தன் துணைவி நாகம்மையாரையும், சகோதரி கண்ணம்மாளையும் அழைத்துக் கொண்டு கள்ளுக்கடை மறியல் செய்தார். இதைக் கேட்ட தமிழ்நாடே அதிசயித்தது. காரணம் திருமதி நாகம்மையும் கண்ணம்மாளும் பெரியாரோடு கைதானார்கள். தமிழ்நாட்டில் இவ்விருவரும்தான் சிறைசென்ற முதற் பெண்மணிகள் என்பது என் நினைவு. பெரிய குடும்பத்தாரே சிறை சென்றார்கள் என்று ஈரோடு நகரமே மலைத்து நின்றது" (சுயமரியாதை இயக்கப் பொன்விழா மலர், 1925-1975, ப.56) என்று பெருந்தலைவர் காமராசர் குறிப்பிடுவதன் மூலம் இந்நிகழ்ச்சி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணரலாம்.

வைக்கம் போராட்டத்தில் நாகம்மையார்

கேரள மாநிலத்திலுள்ள திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் வைக்கம் என்ற ஒரு பேரூர் உள்ளது. அங்குக் கோயிலுக்கு அருகில் உள்ள தெரு ஒன்றில் தாழ்த்தப்பட்டோர் நடக்கக்கூடாது என நீண்ட நாளாகத் தடையிருந்து வந்தது. இதை எதிர்த்து, காங்கிரஸ் தலைவர்கள் வைக்கத்தில் இத்தடையை மீறும் போராட்டத்தைத் துவக்கினர். 19ஆம் நாள் ஆனதும் மேலும் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வரத் தலைவர்கள் இல்லை. சிறையிலிருந்து ஜார்ஜ் ஜோஃப் கேசவமேனன் ஆகிய தலைவர்கள் ஆழ்ந்து யோசித்து, இனி இந்தக் கிளர்ச்சியைத் தொடர்ந்து நடத்தி வெற்றி பெறக் கூடியவர் ஈரோட்டு இராமசாமி ஒருவரே எனக் கருதி அவருக்குக் கடிதம் எழுதிப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த முடிவு செய்தனர். அதன்படியே பெரியார் தாமே இப்போராட்டத்திற்குத் தலைமை தாங்கிக் களத்தில் இறங்கிக் கைதானார். அடுத்து கோவை அய்யா முத்து, மாயூரம் இராமநாதன், நாகம்மையார், கண்ணம்மாள் தலைமை தொடர்ந்தது.

இப்போராட்டத்தில் "ராமசாமியும் அவருடன் சென்ற தோழர் அய்யாமுத்துவும் சிறைப்பட்டனர். உடனே நாகம்மையார், தோழர் எஸ். ராமநாதன் அவர்களுடன் ஈரோட்டிலிருந்து வைக்கம் வந்து சேர்ந்தார். சிறிது காலம் தோழர் ராமநாதன் தலைமை தாங்கிச் சத்தியாக்கிரகத்தை நடத்தினார். பின் நாகம்மையார் இதில் முக்கியப் பங்கு கொண்டார். இச்சமயம் தமிழ்நாட்டிலிருந்தும், மலையாளத்திலிருந்தும் ஏராளமான பெண்கள் இக்கிளர்ச்சியில் பங்கு கொண்டனர். இச் சமயம் ஒரு மாதமானதும் ஈ.வெ.ரா. விடுதலையானார். விடுதலை ஆனவுடன் அவருக்கு நுழைவுத் தடை போடப்பட்டது. ஈ.வெ.ரா அதையும் மீறினார். அதனால் மறுபடியும் கைது செய்யப்பட்டு, ஆறு மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு, திருவாங்கூர் மத்திய சிறைக்குக் கொண்டு போகப்பட்டார். அதன் பிறகு நாகம்மையார் தலைமை தாங்கிப் பல பெண்களுடன் திருவாங்கூர் முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்து, புரட்சியான பெருங்கிளர்ச்சியை உண்டாக்கிவிட்டார். இறுதியில் சத்தியாக்கிரகம் வெற்றிபெற்றது. தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தெருவில் நடக்கும் உரிமை வழங்கப் பட்டது. **இந்தியாவிலேயே முதன் முதலில் வெற்றிபெற்றது வைக்கம் சத்தியாக்கிரகம் ஆகும்.** இச்சத்தியாக்கிரகத்தின் பின்விளைவேதான் கோயில் பிரவேசக் கிளர்ச்சி ஏற்பட்டுத் திருவாங்கூர் கோவில்களில் எல்லாத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் திறந்துவிடப்பட்டதாகும். இச் சத்தியாக்கிரகம் நாடெங்கும் புகழ் பெற்றுவிட்டது. இதனால் ஈ.வெ.ரா. 'வைக்கம் வீரர்' எனப் பெயர்பெற்றார். (தமிழர் தலைவர், சாமி. சிதம்பரனார், ப.73) இதன் பின்னணியில் ஊக்க சக்தியாகத் திகழ்ந்தவர் நாகம்மையார் என்பதை மறந்துவிட முடியாது.

> *இந்தியாவிலேயே முதன் முதலில் அரசியல் போராட்டக் களத்தில் குதித்துச் சிறைவாசம் ஏற்ற முதல் பெண்மணி நாகம்மையாரே ஆவார். கஸ்தூரிபா காந்திக்கும் இப்பெரும் புகழ் கிட்டியது கிடையாது! புறநானூற்று வீரத் தாய்மார்களுக்கு ஏற்றிச் சிறப்பிக்கப் பெறும் அத்தனை உயர் பண்புகளும் அம்மையாரிடம் நிறைந்துக் காணப்பட்டன. கற்ற கல்வி சொற்ப மாயினும், கணவர் வழி நின்று கற்றுக் கொண்டது ஏராளம். துவக்கத்தில் எல்லாப் பெண்களையும் போல் பண்டைய வழிமுறைகளையே பின்பற்றி வந்த நாகம்மையார் அவையெல்லாம் தம்*

கணவருக்குப் பிடிக்காதவை என்பதைப் படிப் படியே உணர்ந்து, தாமே திருத்திக்கொண்டார். சமுதாயக் கொள்கைகளில் மட்டுமன்றி, அரசியல் கொள்கைகளிலும் கணவரையே அடியொற்றி நடைபோட்டார். (ப.21, 1979)

என்று கவிஞர் கருணானந்தம் தந்தை பெரியார் வாழ்க்கை வரலாற்றில் குறிப்பிட்டுள்ளது நாகம்மையாரின் முக்கியத் துவத்தை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

குடியரசு, ரிவோல்ட் பத்திரிக்கைகள் பொறுப்பில் நாகம்மையார்

1931 டிசம்பர் 13ஆம் நாள் பெரியார் தனது அய்ரோப்பியச் சுற்றுப்பயணத்தைத் தொடங்கினார். அக்காலக்கட்டத்தில் சுயமரியாதை இயக்கத்தின் பணிகள் சிறிதும் தளர்ச்சியடையாமல் நாகம்மையார் கவனித்துக் கொண்டார். சுயமரியாதை இயக்கத்தில் பணியாற்றிய அறிஞர் பெருமக்களை, தொண்டர்களை ஊக்குவித்து அவர்களிடையே ஒரு தலைவரைப் போலச் செயல்பட்டார். இக்காலக்கட்டத்தில் நாகம்மையார் 'குடியரசு' பத்திரிகையையும் சுயமரியாதை இயக்கத்தையும் மிகவும் திறமையாக நடத்தி வந்தார் (உண்மை, 15.5.80) என்று 1933ஆம் ஆண்டு கொச்சியில் வெளியிடப்பட்ட **Who's Who** என்ற நூலில் நாகம்மையார் பற்றிய செய்திக் குறிப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளும் வேலைத் திட்டங்களும் தமிழ் மக்கள் மட்டுமல்லாமல் பிறமொழியாளர் களும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் 1928ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ரிவோல்ட் (Revolt) எனும் ஆங்கில இதழைப் பெரியார் தொடங்கினார். இந்த இதழ் தொடங்கும் முன்பு 'ரிவோல்ட்' ஆங்கில வாரப் பத்திரிக்கையின் பதிப்பாளராகவும் வெளியிடுவோராகவும் நாகம்மையார் தம்மைப் பதிவு செய்து கொண்டுள்ளார். பெரியார் எழுதிய இடைக்கால அறிக்கை மூலம் இச்செய்தி பெறப்பட்டுள்ளது.

'ரிவோல்ட்' என்னும் ஆங்கில வாரப் பத்திரிக்கையின் பதிப்பாளராகவும் வெளியிடுவோராகவும் மேஜிஸ்ட்ரேட் முன்னிலையில் பதிவு செய்துகொள்ள ஸ்ரீமதி நாகம்மாள் 19.4.28இல் மறுபடியும் கோர்ட்டுக்குப் போனதில், மேஜிஸ்ட்ரேட் தான் இது விஷயமாய்ப் போலீசாரை ரிப்போர்ட் கேட்டுவிட்டிருப்பதாகவும் அது வந்த பின்தான் பதிவு செய்து கொள்ள முடியும் என்றும் சொல்லிப் பதிவு செய்து கொள்ள மறுத்து விட்டார்.

பிறகு போலீசார் 'ரிவோல்ட்' என்னும் பத்திரிகையின் கொள்கை என்ன என்பது பற்றியும் மற்றும் பல விஷயங்களைப் பற்றியும் இரகசியமாகவும் வெளிப்படையாகவும் வேவு விசாரித்து வருவதாகத் தெரிகிறது. இன்ஸ்பெக்டர் கேட்ட கேள்விகளுக்கு அடியிற் கண்ட ஸ்டேட்மெண்ட் எழுதிக் கொடுக்கப் பட்டிருக்கின்றது.

"ஈரோடு டவுன் கச்சேரி வீதியிலிருக்கும் உண்மை விளக்கம் பிரஸ் புரொப்ரைட்ரெஸ் ஸ்ரீமதி நாகம்மாள் எழுதிக் கொடுத்த ஸ்டேட்மெண்ட் :-

இப்பவும் மேற்படி பிரசில் 'ரிவோல்ட்' என்கின்ற ஆங்கில வாரப் பத்திரிகை நடத்துவதின் கருத்து, இப்போது நான் பதிப்பாளராக இருந்து நடத்தும் 'குடிஅரசு' என்னும் தமிழ் வாரப் பத்திரிகையின் கொள்கைகளையே முக்கியமாகக் கொண்டு நடத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 'Revolt' என்ற வார்த்தைக்கு நான் எடுத்துக் கொண்ட அர்த்தம் கட்டுப்பாட்டை உடைத்தல் என்பது. அதாவது மனித தர்மத்துக்கும் மனித இயற்கைக்கும் விரோதமாக அரசியலினாலும் சரி, மத இயலிலானாலும் சரி, அதிகார இயலிலானாலும் சரி, முதலாளி இயலிலானாலும் சரி, ஆண் இயலிலானாலும் சரி மற்றும் எவைகளிலானாலும் சரி, அவைகளினால் ஏற்படும் இயற்கைக்கும் அறிவுக்கும் மாறுபட்ட கட்டுப்பாடுகளை உடைத்து, உலகமும் அதன் இன்பமும் எல்லோருக்கும் பொது என்பதும், மக்கள் யாவரும் சமம் என்பதுமான கொள்கையை மனசாட்சிப்படி சாத்தியமான வழிகளில் பிரசாரம் செய்வதே அதன் நோக்கம், இதற்கும் பத்திராதிபராக என் கணவர் ஸ்ரீமான் ஈ.வெ.ராமசாமி நாயக்கர் இருப்பார்.

இதன்மேல் போலீசாரின் அறிக்கை இன்னது என்றும், மாஜிஸ்ட்ரேட் எப்பொழுது பதிவு செய்து கொள்வார் என்பதும் குறிப்பாய்த் தெரியவில்லை (குடிஅரசு)". (இதழாளர் பெரியார், இறையன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், பதி. ப.260) இவ்விளக்க அறிக்கை பெரியாரைக் கண்டும், 'ரிவோல்ட்' என்ற பெயரைக் கேட்டும் அன்றைய வெள்ளைக்கார அரசு எப்படி வெகுண்டது, எப்படியெல்லாம் தடைவிதித்தது என்பதைக் காட்டுகிறது. அத்துடன் நாகம்மையார் 'ரிவோல்ட்' இதழ் பதிவு செய்ய நீதிமன்றத்திற்குச் சென்றும், காவல் துறையினருக்கு இவ்விதழ் குறித்து விளக்கமளித்தும் அவ்விதழ் தொடங்குவதில் துணிகரமாகச் செயல்பட்டு வந்துள்ளார் என்பதும்

இந்நிகழ்ச்சியின் மூலம் அறிய வருகின்றன. 1928ஆம் ஆண்டில் ஒரு பெண் பத்திரிகையின் பதிப்பாளராகவும், ஆங்கிலப் பத்திரிகை நடத்துவதற்குப் பதிவு செய்யக் கோரியும் செயல்பட்டது மாபெரும் புரட்சிகர நடவடிக்கையாகத் தோன்றுகின்றன. மற்றவர்கள் செய்வதற்கு அஞ்சுகின்ற, தயங்குகின்ற சமூக அக்கறை மிக்க செயல்பாடுகளை நாகம்மையார் துணிச்சலுடன் செய்து காட்டினார்.

தொண்டர்களிடையே நாகம்மையார்

அன்னை நாகம்மையார் சுயமரியாதை இயக்கத் தொண்டர்களின் தாயாக விளங்கினார். சுயமரியாதை இயக்க வளர்ச்சிக்கு அன்னையார்தான் முக்கியக் காரணம் என்பதைத் தலைவர்களும், அறிஞர்களும் சுட்டிக் காட்டியுள்ளனர். நாகம்மையார் செல்லாத சுயமரியாதை மாநாடுகள் இல்லை. பெரியாருடன் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வது வழக்கமாக இருந்தது.

தொடக்க காலத்தில் சுயமரியாதை இயக்கத்திற்கு எதிர்ப்பு மிகுதியாக இருந்தது. பெரியாரையும், நாகம்மையாரையும் மனிதத் தன்மையற்ற முறையில் திட்டி, கடிதங்கள் பல வரும். இருவரையும் கொலை செய்வதாக மிரட்டல் வரும். இவைகளுக்கெல்லாம் நாகம்மையார் சிறிதும் அஞ்சாமல் இயக்கப் பணிகளில் ஈடுபட்டார்.

"சுயமரியதை இயக்கம் வெற்றி பெறுவதற்கும், அதில் ஏராளமான பெண்மக்கள் தாரளமாகக் கலந்து கொள்வதற்கும் அன்னையாரே காரணமாவார். அவர் தமது கணவரின் எல்லா முயற்சிகளிலும் மிகுந்த உற்சாகத்துடன் ஒத்துழைத்ததே சுயமரியாதை இயக்கத்தின் வெற்றிக்குக் காரணமாகும். மூடக் கொள்கைகளினின்று மக்களை விடுவிக்கும் பொருட்டு அவர் தமிழ்நாடு, கேரளம், மலாய் ஆகிய இடங்களில் உள்ள எல்லா ஜில்லாக்களிலும் சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறார். அவர் ஒரு பிரசங்கியல்ல; ஆனால் அவர் பிரசன்னமாயிருக்கும் ஒவ்வொரு கூட்டத்திலும் பெண்கள் தீவிரமாக கலந்துக் கொள்ளுவார்கள். அவர் எல்லோரையும் அன்புடன் உபசரிப்பார். அவருக்கு மக்கட்பேறு இல்லை; ஆனால் பொது ஜன நன்மைக்காக வேலை செய்த எல்லா இளைஞர்களையும் பெண்களையும் தமது சொந்தப் பிள்ளைகளாகப் பாவித்து வந்தார். அவர் தமது சிறந்த கொள்கைகளுக்காக வேலை செய்தவர்களுக்கெல்லாம் ஒரு தாயாக இருந்தார். அவர்களுடைய சொந்த சவுகரியங்களை அவர்

தாமே நேராகக் கவனித்து வந்தார். சமூகப் போராட்டத்தில் வீட்டை இழந்தவர்களுக்கு அவர் அபயம் அளித்தார். இது தோழர் எஸ்.ராமநாதன் அவர்கள் எழுதியது. இதிலிருந்து சுயமரியாதை இயக்கத்திற்கு அன்னையாரின் ஆதரவு எவ்வளவு என்று அறியலாம். அன்னையார் இன்றேல் சுயமரியாதை இயக்கம் வளர்ந்திருக்க முடியாது என்று 1935ஆம் ஆண்டு பகுத்தறிவு இதழில் திருமதி சிவகாமி சிதம்பரனார் 'அன்னை நாகம்மையார்' எனும் தலைப்பில் எழுதியுள்ளது (மே 1, இதழ், 2, ப.58) குறிப்பிடத்தக்கதாகும். இதைப்போன்றே மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரும் 'அம்மையாரைப்பற்றி' என்ற தலைப்பில் முரசொலி பொங்கல் மலருக்கு வழங்கிய கட்டுரையில் நாகம்மையார் பற்றிப் பல செய்திகளை நினைவு கூர்ந்துள்ளார்:

"இன்று நம்முடைய கொள்கைகள் நாடெங்கும் பரவி இதைப் பற்றித் தெரியாதவரே இல்லையென்கிற நிலைமை யிருக்கிறது. இயக்கத்தில் பணியாற்றவும் நீ முந்தி நான் முந்தி' என்று ஏராளமான தோழர்கள் இன்று நிரம்பியிருக்கிறார்கள். ஆனால் ஆரம்பக் காலத்தில் இயக்கத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர்தான் இருந்தார்கள். இயக்கத்துக்கென்று நிதியோ, பணவசதியோ கிடையாது. அவரவர்களும், சொந்த வேலைகளை விட்டு இயக்கமே உயிர் என்று முன் வந்தவர்கள். அப்பேர்ப்பட்டவர்களை எப்போதானாலும் அன்போடு வரவேற்று, உபசரித்து ஆதரித்து வந்தவர்கள் அம்மையார்தான். அம்மையார் மட்டும் இல்லாமலிருந்தால் அப்போது இயக்கத்துக்கு ஆளே கிடைத்திருக்காது. இப்போது இந்த அளவுக்கு வளர்ச்சியும் வந்திருக்காது என்பது என்னுடைய உறுதியான எண்ணம்.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், அழகிரிசாமியை (உள்ளுக்குள்) அய்யாவுக்குப் பிடிக்காது. அழகிரி இல்லையானால் இந்த இயக்கமே இருக்காது என்பது அம்மையாரின் அசைக்க முடியாத நம்பிக்கை. ஆனால் அடிக்கடி அய்யாவுக்கும் அழகிரிக்கும் வருத்தம் உண்டாகும். அம்மாதிரி நேரங்களிலெல்லாம் அம்மையார் அழகிரியை அழைத்து 'தந்தை கோவித்தால் தாயிடத்தில் மகன் இருக்க வேண்டியதுதானே முறை என்று கூறி ஆறுதல் சொல்லுவார்கள். எல்லோரிடத்திலும் இதைப் போலவே இதமான வார்த்தைகளைச் சொல்லிச் சமாதானப் படுத்துவார்கள் அன்று பணியாற்றிய யாவருமே அம்மையாரின் அன்புக்குக் கட்டுப்பட்டுதான் இருந்தார்கள்.

அந்தக் காலத்தில் கழத்திற்கென்று அமைப்பு முறை இல்லை. ஆனால், எந்த விஷயத்தைப் பற்றி முடிவு செய்ய வேண்டுமானாலும் இயக்கத்திலுள்ள முக்கியமானவர்கள் ஈரோடு சென்று வர வேண்டும். சொந்தச் செலவில் காங்கிரசுக்கு இருந்தது போல் இந்த இயக்கத்துக்கு வெளியார் பணஉதவியும் கிடையாது. ஆகவே இப்படிப்பட்ட நெருக்கடிகளுக்கிடையிலும் இயக்கம் வளர்ந்ததென்றால் அதற்கு அம்மையாரின் அன்பு கலந்த உற்சாக மூட்டும் மொழிகளைத் தவிர வேறு எதுதான் காரணமாயிருக்க முடியும்! ஆனால் அம்மையார் எந்தக் கலத்திலும் மேடையேறிப் பேசியதுமில்லை; எந்தப் பத்திரிகையிலும் எழுதியதுமில்லை. இயக்கத்தையே வாழ்வாகக் கருதி அவ்வளவு அக்கறையோடு பணியாற்றி வந்தார்கள் (ப.50).

சாதிமறுப்புத் திருமணம், மத மறுப்புத் திருமணம், சீர்திருத்தத் திருமணம் ஆகியவற்றை முன்னின்று நடத்தி அவர்களுக்கு உற்சாகமளிக்கும் வகையில் நாகம்மையார் தனது பெரும் பங்களிப்பைச் செய்து வந்தார். பெரியாரின் இல்லத்தில் 8.12.1929 நாளன்று குருசாமி குஞ்சிதம் திருமணத்தைப் பெரியாரும் நாகம்மையாரும் முன்னின்று நடத்தி வைத்தனர். தமிழகத்தில் தொண்டை மண்டல முதலியார் வகுப்பைச் சேர்ந்த குருசாமிக்கும் இசைவேளாளர் வகுப்பைச் சேர்ந்த குஞ்சிதத்திற்கும் நடைபெற்ற இத்திருமணம் வைதீகத்தின் ஆதிக்கத்தை உடைத்தெறிந்த புரட்சிகரமான முதல் கலப்புத் திருமணம் என்ற வரலாற்றுச் சிறப்பைப் பெற்றதாகும். இதே போன்று தமிழ்ப் புலவர் சிதம்பரனார்-சிவகாமி அம்மையார் திருமணம், சீர்திருத்தத் திருமணமாகவும்-கலப்புத் திருமணமாகவும், விதவைத் திருமணமாகவும் நாகம்மையார் தலைமையில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. சிவகாமி-சிதம்பரனார் திருமண அழைப்பிதழில் "திரு. ஈ.வெ.ரா. அவர்கள் தோட்டத்தில் போடப் பட்டிருக்கும் சுயமரியாதை மாநாட்டுப் பந்தலில் திருமணம் நடைபெறும். திருமதி ஈ.வெ.ரா. நாகம்மாளவர்கள் திருமண வைபவத்தை நடத்தி வைப்பார்கள் - ஈ.வெ.ராமசாமி" எனக் குறிப்பிட்டு அனைவருக்கும் வழங்கப்பட்டது. ஒரு திருமண நிகழ்ச்சியை அதுவும் கலப்பு மணம், விதவை மறுமணம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு ஒரு பெண்மணியைத் தலைமையாகக் கொண்டு நடத்தியுள்ளது ஒரு வரலாற்றுத் திருப்பமாக அமைந்துவிட்டது. இதை முன்மாதிரியாகக் கொண்டு நாகம்மையார் தலைமையில் நடந்த திருமணங்கள் பலவாகும். சுயமரியாதை இயக்கத் தொண்டர்கள் பெரியார்-நாகம்மையார் தலைமையில் புரோகித

முறைத் திருமணங்களை ஒழித்துச் சீர்திருத்த முறையில் திருமணம் செய்து கொள்வதை ஒரு இலட்சியமாகக் கொண்டிருந்தனர்.

பெரியாருடன் மலேயா நாட்டுச் சுற்றுப்பயணம்

மலேயாவிலும் சிங்கப்பூரிலும் வாழுகின்ற தமிழர்கள் பல தலைமுறைகளுக்குமுன் அங்குக் குடியேறியவர்கள். அங்குள்ள சுதேசி மக்கள், சீனர், ஜப்பானியர், ஆங்கிலேயர், முஸ்லீம்கள், ஈழநாட்டவர் ஆகியோருடன் இணக்கமான சூழ்நிலையில் தமிழர்கள் கலந்து வாழ்ந்து வந்தனர். இவர்கள் அனைவருமே இணைந்து பெரியாரை மலேய, சிங்கப்பூர் நாடுகளுக்கு வருமாறு அழைப்பு விடுத்தனர்.

> *1929ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 15ஆம் நாள் பெரியார், தமது துணைவியார் நாகம்மையார், நண்பர்களான எஸ். இராமநாதன், சாமி சிதம்பரனார், அ. பொன்னம்பலனார், மாயூரம் நடராசன், நாகை காளியப்பன் ஆகியோருடன் நாகபட்டினம் துறைமுகத்தில் கப்பலில் ஏறினார். 20ஆம் நாள் பினாங்கில் இறங்கிய போது மலாயா வாழ் பெருமக்கள் இலட்சக்கணக்கில் திரண்டு வரவேற்றனர். வேறெந்த இந்தியத் தலைவரும் காணாத பெரு வரவேற்பு! மாலைகளும் வாழ்த்து மடல்களும் எண்ணிலடங்கா. பத்திரிகைகள் பிரமாதமாகப் பாராட்டி எழுதின! 23ஆம் நாள் ஈப்போவில் தமிழர் சீர்திருத்த மாநாட்டைப் பெரியார் துவக்கி வைத்தார். தமிழர் மாத்திரமன்றித் தெலுங்கர்கள், மலையாளிகள், யாழ்ப்பாணத் தமிழர்கள், முஸ்லிம் பெருமக்கள் ஏராளமாகக் குழுமியிருந்தனர். அடுத்து 26ஆம் நாள் சிங்கப்பூர் சென்று, மலேயா இந்தியச் சங்க மாநாட்டிலும் விரிவுரை நிகழ்த்தினார். (கவிஞர் கருணானந்தம் முன் சுட்டியது, ப.81)*

சுமார் எழுபத்தொரு இடங்களில் சொற்பொழிவுகளும் வரவேற்பு நிகழ்ச்சிகளில் உரைகளும் நிகழ்த்தி அம்மக்களிடையே மாபெரும் எழுச்சியும் விழிப்புணர்ச்சியும் ஏற்படுத்திவிட்டுத் திரும்பினர்.

"அன்னையாரின் மலாய் நாட்டு விஜயத்தைப் பற்றிச் சிங்கப்பூர், முன்னேற்றப்பத்திரிகை எழுதியிருப்பது கவனிக்கத்

தக்கது. அவர்களின் மலாய் நாட்டு விஜயத்தால் மலாய் நாட்டு மக்கள் எல்லாம் அவருக்கு அறிமுகமானார்கள். மலாய் நாட்டில் சுயமரியாதை இயக்கம் அதிதீவிரமாய்ப் பரவியிருந்ததைப் பார்த்த அன்னையார் அடைந்த களிப்பு அளப்பரியது. சிங்கப்பூருக்கு வந்திருந்து திரும்புங்கால் அவர்களுக்கு விருப்பமான - தேவையான மலாய் நாட்டுப் பொருள் என்ன வேண்டுமென்று நாம் கேட்டதற்கு 'நீங்கள்எல்லாம் இம்மலாய் நாட்டில் சுயமரியாதை இயக்கத்தைப் பரப்பியிருப்பதே நான் விரும்பும் பொருள்' என்று அன்னையார் சொல்லிய வார்த்தைகள் இன்னும் நமது செவியில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன என்று எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது எனச் (பகுத்தறிவு, 1935, மே 1, இதழ் 2, ப.58) சிவகாமி சிதம்பரனார் நாகம்மையாரைப் பற்றி எழுதியுள்ளார்.

பெரியாரின் வாழ்க்கைப் பயணத்தில் நிழல்போல் நீங்காது அவருடன் பணியாற்றிய நாகம்மையார் பெரியார் சிறைவாசம் அனுபவித்தபோது அவர் செய்ய வேண்டிய பணிகளைப் பக்குவத்துடன் தொடர்ந்தார். அந்த அளவிற்குப் பெரியார் நாகம்மையாரைப் பக்குவப்படுத்தியுள்ளார்.

"பெரியார் சிறைவாசம், தண்டனை ஆகியவற்றை அவர் மட்டுமல்லாமல் அவரது குடும்பத்தவரையும் எப்படி ஏற்கப் பக்குவப்படுத்தினார் என்பதற்கு அவர் தனியே சுயமரியாதை இயக்கம் காணுவதற்கு முன்பாகக் காங்கிரசில் இருந்த காலத்திலேயே நடந்த ஒரு நிகழ்வைச் சுட்டிக் காட்டுதல் பொருத்தமானதாக இருக்கும். அன்றைய 'நவசக்தி' ஏட்டில் வெளிவந்த அந்தச் செய்தி இதுதான்.

ஸ்ரீமான் நாயக்கர் மனைவியாரின் செய்தி

என் கணவர் ஈ.வி. இராமசாமி நாயக்கர் இந்த மாதம் முதல் தேதி திருவனந்தபுரம் சிறையிலிருந்து விடுதலையானார். இன்று காலை 10 மணிக்கு (11.9.1924) மறுபடியும் இராஜத் துரோகக் குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்டிருக்கின்றார். இரண்டு வருஷத்திற்குக் குறைவில்லாத காலம் தண்டனை கிடைக்கக்கூடிய பாக்கியம் தமக்குக் கிடைத்திருப்பதாய்ச் சொல்லி என்னிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டுவிட்டார்.

அவர் திரும்பத் திரும்பத் தேச ஊழியத்தின் பொருட்டுச் சிறைக்குப் போகும் பாக்கியம் பெறவேண்டுமென்றும், அதற்காக அவருக்கு ஆயுள் வளர வேண்டும் என்று கடவுளையும் மகாத்மா காந்தியையும் பிரார்த்திக்கின்றேன்.

அவர் பாக்கியில் வைத்துவிட்டுப் போவதாக நினைத்துக் கொண்டு போகிற வைக்கம் சத்தியாக் கிரக விஷயத்தில் வேண்டிய முயற்சிகள் எடுத்து அதைச் சரிவர அகிம்சா தருமத்துடன் நடத்த அனுகூலமான முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமாய் என் கணவரிடம் அபிமானமும் அன்பும் கொண்ட தலைவர்களையும் தொண்டர்களையும் பக்தியோடு பிரார்த்தித்துக் கொள்கின்றேன். - நாகம்மாள்" (12.9.1924 'நவசக்தி' ஈரோடு, ப.8).

இந்த அறிக்கை பெரியாரின் சிறைவாசக் காலத்தில் அம்மையார் தனித்து நின்று தொண்டர்களுக்குப் பேராதரவு அளித்த பண்பினைக் காட்டுகிறது. ஆனால் பெரியார் தம்மைப் பிரிந்து பதினொரு திங்கள் மேலை நாட்டுச் சுற்றுப் பயணம் மேற்கொண்டதால் அப்பிரிவாற்றமை ஒரு நோயாக மாற அம்மையார் உடல் நலிவுற்றார். சுயமரியதை இயக்கத் தொண்டர்கள் அதிர்ச்சியுறும் வகையில் 11.5.1933இல் நாகம்மையார் மறைவுற்றார். அது பற்றிய செய்தி குடிஅரசில் வெளியிடப்பட்டது.

"அன்னை ஈ.வெ.ரா. நாகம்மையார் அவர்கள் 11.5.1933ஆம் நாள் மாலை 4 மணிக்கு இனி உயிர்பிழைக்கமாட்டார்கள் என்ற நிலையில் ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு அழைத்து வரப்பட்டார்கள். வந்ததும் கடைசி நிலையில் செய்யக் கூடிய சிகிச்சைகளைச் செய்து பார்த்தும் இரவு 7.45 (11.5.1933) மணிக்கு அன்னை நாகம்மையார் அவர்கள் உயிர் நீத்தார்கள். உடனே அன்னையரின் உடல் சுத்தம் செய்யப்பட்டு நன்கு அலங்கரித்து ஈ.வெ.ரா. அவர்கள் இல்லத்தில் முன்மண்டபத்தில் யாவரும் எளிதில் பார்த்துச் செல்ல வசதியுடன் அழகிய பெட்டியில் வைக்கப்பட்டது. உடனே 8.30 மணிக்கு யாவருக்கும் (ஈ.வெ.ரா. உள்பட) சாப்பாடு நடந்தது. ஊர்ப் பிரமுகர்களும், வெளியூர்த் தோழர்களும் இரவு முழுவதும் வந்துகொண்டே இருந்தார்கள். அனேகமாக எல்லோரும் இரவு முழுவதும் விழித்துக் கொண்டே கேளிக்கையாய் இருந்ததோடு இடைஇடையே டீ வழங்கப்பட்டு வந்தது. முக்கியமாய் யாவரும் கவனிக்க வேண்டியதும், கவனித்ததுமான சம்பவம் யாதெனின் நெருங்கிய உறவினர் முதல் உற்ற தோழர்கள் வரை யாவரும் அழுதல் என்னும் அநாகரிகமான காரியத்தை அறவே ஒழித்து ஆண் பெண் அனைவரும் ஒற்றுமையாய்ப் பேசிக்கொண்டும் நாளைய காரியங்களைக் கவனித்து வந்தார்கள்" (குத்தூசி குருசாமி, குருவிக்கரம்பை வேலு, வளவன் பதிப்பகம், சென்னை, பதி. ஜூலை 1991, ப.331).

மறுநாள் காலை நடைபெற்ற தகன நிகழ்ச்சி குறித்தும் விரிவாக வெளியிடப்பட்டுள்ளது.

அம்மையாரின் இறுதி நிகழ்ச்சியும் வேறுபட்டு, அனைவரும் வியக்கும் வகையில் நடைபெற்றது. "நாற்பத்தெட்டு ஆண்டுகள் நலிவின்றி வாழ்ந்தவர், தமக்கென்று வாழாமல், கணவர்க்கென்றே வாழ்ந்தவர். அவருக்குத் தாம் வாழ்க்கைத் துணைவியே தவிர, அவர் தமக்கு வாழ்க்கைத் துணைவர் என்ற கருத்தினால் அவர்க்குத் தொல்லை தராமல், சாதாரணப் படிப்பறிவு பெற்றிருந்தும் இந்தியத் துணைக்கண்டமே விந்தையுடன் விழிதிருப்பி நோக்குமளவுக்கு அரசியலில் - போராட்டத்தில் - வரிசையாய் ஈடுபட்டுச் சிறைசென்று நாடு சுற்றித் தொண்டாற்றி, விருந்தோம்பி பத்திரிக்கை நடத்தி இயக்கத்தை முடுக்கிப் பெரியார்க்குக் காதலியாய், மனைவியாய்த், தோழியாய்த் தொண்டராய், அன்னையாய் அமைச்சராய்த் தலைவியாய்ப் பிள்ளையாய் ஏன் அனைத்துமாய் நின்ற அம்மையார் மறைவு நிம்மதிக் குறைவுதானே பெரியாருக்கு" (கவிஞர் கருணானந்தம் முன் சுட்டியது, பக்.92-93)

நாகம்மையார் மறைவு குறித்துத் தனது மனத்துயரை குடிஅரசு ஏட்டில் பெரியார் எழுதிய தலையங்கம் வரலாற்றுச் சிறப்புமிக்கது.

"நாகம்மாளை நான்தான் வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டு இருந்தேனேயல்லாமல் நாகம்மாளுக்கு நான் வாழ்க்கைத் துணையாக இருந்தேனா என்பது ஞாபகத்துக்கு வரவில்லை. நான் சுயநல வாழ்வில் 'மைனராய்' 'காலியாய்', 'சீமானாய்' இருந்த காலத்திலும், பொதுநல வாழ்வில் ஈடுபட்டுத் தொண்டனாய் இருந்த காலத்திலும் எனக்கு வாழ்வின் ஒவ்வொரு துறையின் முற்போக்குக்கும் நாகம்மாள் எவ்வளவோ ஆதாரமாய் இருந்தார் என்பது மறுக்கமுடியாத காரியம். பெண்கள் சுதந்திர விஷயமாகவும், பெண்கள் பெருமை விஷயமாகவும் பிறத்தியாருக்கு நான் எவ்வளவு பேசுகிறேனோ, போதிக்கிறேனோ அதில் நூற்றில் ஒரு பங்கு வீதமாவது என்னருமை நாகம்மாள் விஷயத்தில் நான் நடந்து கொண்டிருந்தேன் என்று சொல்லிக் கொள்ள எனக்கு முழு யோக்கியதை இல்லை.

ஆனால் நாகம்மாளோ பெண் அடிமை விஷயமாகவும் ஆண் உயர்வு விஷயமாகவும், சாஸ்திர புராணங்களில் எவ்வளவு கொடுமையாகவும், மூர்க்கமாகவும் குறிப்பிட்டிருந்ததோ அவற்றுள்

ஒன்றுக்குப் பத்தாக நடந்து கொண்டிருந்தார் என்பதையும் அதை நான் ஏற்றுக் கொண்டிருந்தேன் என்பதையும் மிகுந்த வெட்கத்துடன் வெளியிடுகிறேன்.

நாகம்மாள் உயிர் வாழ்ந்ததும், வாழ ஆசைப்பட்டதும் எனக்காகவே ஒழிய தனக்காக அல்ல என்பதை நான் ஒவ்வொரு விநாடியும் நன்றாய் உணர்ந்து வந்தேன். இவைகளுக்கெல்லாம் நான் சொல்லக்கூடிய ஏதாவதொரு சமாதானம் உண்டென்றால் அது வெகு சிறிய சமாதானமேயாகும்.

அதென்னவென்றால் நாகம்மாளின் இவ்வளவு காரியங்களையும், நான் பொது நலச் சேவையில் ஈடுபட்ட பிறகு பொதுநலக் காரியங்களுக்கும், சிறப்பாகச் சுயமரியாதை இயக்கத்திற்குமே பயன்படுத்தி வந்தேன் என்பதுதான். நாகம்மாள் நான் காங்கிரசில் இருக்கும்போது மறியல் விஷயங்களிலும், வைக்கம் சத்தியாக்கிரக விஷயத்திலும், சுயமரியாதை இயக்கத்திலும் ஒத்துழைத்து வந்தது உலகம் அறிந்ததாகும்.

ஆகவே நாகம்மாள் மறைந்தது எனக்கு ஒரு அடிமை போயிற்றென்று சொல்லட்டுமா? ஆதரவு போயிற்றென்று சொல்லட்டுமா? இன்பம் போயிற்றென்று சொல்லட்டுமா? உணர்ச்சி போயிற்றென்று சொல்லட்டுமா? ஊக்கம் போயிற்றென்று சொல்லட்டுமா? எல்லாம் போயிற்றென்று சொல்லட்டுமா? எதுவும் விளங்கவில்லையே!

எது எப்படியிருந்த போதிலும், நாகம்மாள் இயற்கையை எய்தினார். இதிலொன்றும் அதிசயமில்லை" (குடியரசு 14.5.1933)

தன் மனதில் தோன்றியதை ஒளிவுமறைவின்றி எழுதிய இக்கடிதம் சுயமரியாதை இயக்கத் தொண்டர்களின் மனதில் ஆழப் பதிந்தது. நாகம்மையார் உடல் தகனம் செய்த அன்று சனிக்கிழமை இரவு சுற்றுப் பிரயாணம் செய்வதற்குத் திருச்சிக்குப் புறப்பட்டுவிட்டார் என்பது அனைவரையும் மேலும் வியப்பில் ஆழ்த்தியது.

பெரியாரும் நாகம்மையாரும் பொதுவாழ்வின் ஈடுபட்டு வாழ்ந்த வாழ்க்கை எல்லோராலும் பாராட்டக்கூடியதாக அமைந்தது. திரு.வி.கலியாண சுந்தர முதலியார் அவர்கள் 1933இல் ஈரோட்டில் நாகம்மையாரின் உருவப் படத்தைத் திறந்து வைத்த போது கூறியதாவது:-

செல்வச் செருக்கில் மூழ்கிக் கிடந்த அம்மையார் தேசநலத்தின் பொருட்டு, அச்செல்வங்களை யெல்லாம் உதறித் தள்ளிவிட்டார். அம்மையார் ஏட்டுக்கல்வி அதிகம் பெறாவிடினும் உலக அறிவில் உயர்ந்து விளங்கினார். கணவனுடைய தேசத்தொண்டிற்கும் பின்னர், அவர் புரிந்த சமூகச் சீர்திருத்தத் தொண்டிற்கும் பெருந்துணையாய்த் தம் கணவருடன் ஒத்துழைத்தார். விருந்தோம்பலில் அம்மையாருக்கு இணையானவர் எவருமிரார். தம் இல்லத்திற்கு வரும் தொண்டர்கட்கு இனிய முகத்துடனும் இன்சொல்லுடனும் இன்னமுது படைத்து வந்ததை எவரும் மறுத்துக்கூற முடியாது. ஒரு சமயம் நானும் நாயக்கரும் திருநெல்வேலிக்குப் பிரச்சார நிமித்தம் சென்றுவிட்டு, ஈரோட்டுக்கு இரவு 12-30 மணிக்கு வந்தோம். அன்னம் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற அய்யப்பாட்டுடனே வந்தோம். அப்பொழுது அம்மையார் அன்புடன் வரவேற்று உடனே அறுசுவையுடன் அமுது படைத்ததை யான் என்றும் மறவேன்"

(சாமி சிதம்பரனார், முன்சுட்டியது, ப.62)

என்று திரு.வி.க. நாகம்மையாரின் சிறப்பை எடுத்துரைத்துள்ளார்.

இவ்வாறு பெரியாருடன் பொதுவாழ்வில் ஈடுபட்டுப் பணியாற்றிய அனைவரும் நாகம்மையாரின் உறுதுணையால் சுயமரியாதை இயக்கம் தமிழகத்தில் பட்டி தொட்டியெங்கும் பரவியது என்பதை உணர்ந்தவர்களாக இருந்தனர். பகுத்தறிவுக் கொள்கைகளைத் தாம் முதலில் பின்பற்றி மற்றவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்த நாகம்மையார் ஒரு சாதனைப் பெண்மணி என்பதில் சிறிதும் அய்யமில்லை.

அன்னை நாகம்மையார் அவர்களின் நினைவோடு வாழ்ந்த தந்தை பெரியார் அவருடைய பெயரால் திருச்சியில் 1959இல் பெரியார் மாளிகையில் ஆதரவற்ற பெண் குழந்தை களுக்கான இல்லம் ஒன்றை உருவாக்கினார். 13 பெண் குழந்தை களோடு தொடங்கப்பட்ட இந்த இல்லத்தில் ஆதரவற்ற பெண் குழந்தைகளின் சேர்க்கை எண்ணிக்கை பெருகிக்கொண்டே வந்தது. பெரியாருக்குப் பின் அன்னை மணியம்மையார் இவ்வில்லக் குழந்தைகளுக்கு தாயாக நின்று வளர்த்து ஆளாக்குவதிலும், அவர்களுடைய கல்வி, வேலைவாய்ப்பு, திருமணம் போன்றவற்றில்

பெரிதும் அக்கறை காட்டி வந்தார். இவ்வில்லக் குழந்தைகளால் பாசத்தோடு புலவர் அண்ணா என்றழைக்கப்பட்ட புலவர் கோ. இமயவரம்பன் அவர்கள் இவ் இல்லத்திற்குத் தாளாளராகவும் குழந்தைகளுக்குக் காப்பாளராகவும் நியமிக்கப்பட்டார். அவரும் அப்பொறுப்பிலிருந்து சிறிதும் பிறழாமல் தனக்கென ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்ளாமல், இல்லக் குழந்தைகளுக் காகவே தனது வாழ்வை அர்ப்பணித்தார்.

திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அவர்கள் 1980ஆம் ஆண்டு தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவினையொட்டி, விவசாயம் செய்து வந்த பெரியார் தோட்டத்தை பெரியார் நூற்றாண்டுக் கல்வி வளாகமாகப் பெயர் மாற்றம்செய்து, பெரியார் மாளிகையில் இயங்கி வந்த அன்னை நாகம்மையார் குழந்தைகள் இல்லத்தை மாற்றம் செய்தார். முன்பு இட நெருக்கடிக்கு ஆளான இவ்இல்லக் குழந்தைகள் தங்குவதற்கு, பேருள்ளம் கொண்ட நன்கொடையாளர்கள் பலரின் உதவியை நாட, ஏறக்குறைய ரூ. 50 இலட்சத்தில் மிகவும் பாதுகாப்பான எழில் நிறைந்த இடத்தில் அனைத்து வசதிகளுடன் இரண்டு அடுக்குக் கொண்ட தனிக்கட்டிடம் ஒன்றை உருவாக்கி அச்சிறப்பு மிகு கட்டிடத்தை முன்னாள் இந்தியப் பிரதமர் மாண்புமிகு வி.பி.சிங் அவர்களைக் கொண்டு திறந்து வைத்து வரலாற்றுச் சாதனையை நிகழ்த்திக் காட்டினார். 'நாகம்மையார் குழந்தைகள் இல்லம் 2009ஆம் ஆண்டு சனவரி (9, 10, 11) மாதம் 'அகவை 50' என்ற பெயரில் பொன்விழா கொண்டாடியது.

> *தாய் தந்தையர் இல்லாத நிலையில் ஆதரவற்ற குழந்தைகளுக்கு அடைக்கலமும், அறிவு வளர்ச்சிக் குரிய கல்வியும் அளித்துவரும் இந்த இல்லத்தின் மூலம் இதுவரை 1583 குழந்தைகள் பயனடைந்து நல்வாழ்வு பெற்றுள்ளனர் என்பது நாமெல்லாம் எண்ணிப் பெருமைப்படத் தக்கதேயாகும்.*
>
> *தந்தை பெரியார் அவர்களின் கொள்கை வெற்றி பெறுவதற்கு உறுதுணைபுரிந்த அன்னை நாகம்மையார் அவர்களின் நினைவு போற்றி திராவிட முன்னேற்றக் கழக அரசின் சார்பில் 1989ஆம் ஆண்டில் 'நாகம்மையார் நினைவு மகளிர் இலவச பட்டப்படிப்புத் திட்டம்' தொடங்கப் பட்டதையும் அத்திட்டம் தற்போது முதுகலைப் பட்டப்படிப்பு வரை நீட்டிக்கப்பட்டு ஏழை*

மகளிர் பயனடைந்து வருவதையும் இவ்வேளையில் நினைவுப்படுத்திட விரும்புகிறேன்.

இந்நிலையில் தந்தை பெரியார் அவர்களால் தொடங்கப்பட்டு அவருக்குப் பின் அன்னை மணியம்மையார் அவர்களாலும், அதன்பின் நம்முடைய தமிழர் தலைவர் கி. வீரமணி அவர்களாலும் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வரும் இந்த 'நாகம்மையார் குழந்தைகள் இல்லம்' கொண்டாடும் பொன்விழா தந்தை பெரியார் அவர்களின் மனிதநேய மாண்பைப் பறைசாற்றும் வகையில் எழுச்சியுடன் நிகழவும், விழா மலர் அன்னை நாகம்மையார் அவர்களின் புகழைப் பாடிடவும் என் உளமார்ந்த நல்வாழ்த்துகள் உரித்தாகுக.

என மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தம்முடைய வாழ்த்துச் செய்தியை வழங்கியுள்ளார். அன்னை நாகம்மையாரின் தொண்டை என்றும் பறைசாற்றும் இக் குழந்தைகள் இல்லம் பலராலும் பாராட்டப்பட்டு வருகின்றது.

இந்த இல்லத்தால் வளர்த்து ஆளாக்கப்பட்ட ஆர். தங்காத்தாள் என்பவரே இதன் காப்பாளராக இருந்து பணியாற்றி வருகிறார் என்பது இதன் மற்றொரு சிறப்பாகும். அன்னை நாகம்மையார் மறைந்தாலும் அவர் பெயரால் இயங்கும் இவ்வில்லம் என்றும் அவருடைய தொண்டை நினைவு கூறும்.

அன்னை பெரியார் மணியம்மை

அ. அறிவுநம்பி

வாழ்க்கையை வெற்றி வாழ்க்கையாக அமைத்துக் கொள்ளாமல், பயனுறு வாழ்க்கையாகச் சமைத்துக் கொண்டோரே வரலாற்றுப் பதிவேடுகளில் இடம்பெறுவர். அவ்வாறான நல்ல வாழ்வு பெற்றவர்களில் ஆண், பெண் இரு பாலாரும் இடம்பெறக் காணலாம். இருபதாம் நூற்றாண்டுப் பெண்மக்களில் ஒரு சிலர் தனிமுத்திரை கொண்டவர்கள். அவர்களில் ஈ.வெ.ரா. மணியம்மையார் குறிக்கத்தக்கவர். அவரின் தன்னலம் துறந்த வாழ்வு, இயக்கப் பணிகள், சமுதாயப் பணிகள் ஆகியவற்றை இந்த எழுத்துரை நினைவுகூர்கிறது. அவ்வளவே.

யார் இந்த மணியம்மை

தமிழகத்தில் மக்களை விழித்தெழ வைத்த இயக்கங்களில் ஒன்று திராவிடர் கழகம். தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் சீரிய தலைமையில் பங்காற்றிய இந்தக் கழகத்தில் தம்மை இணைத்துக் கொண்டனர் பலர். அவருள் ஒருவரான வேலூர் வி.எஸ். கனகசபை கருதத்தக்கவர். கனகசபை - பத்மாவதி இணைக்கு மகளாக 1917ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 10ஆம் நாள் பிறந்தவர் காந்திமதி.

நான்காம் பாரம் படித்துக்கொண்டிருந்த காந்திமதி (1936) பெரியாரை ஒரு மணவீட்டில் சந்தித்தார் என்பதற்காகப் பள்ளியிலிருந்து வெளியேற்றப் பெற்றார். 1944இல் சேலத்தில் ஜஸ்டிஸ் கட்சி திராவிடர் கழகமாக மாற்றம்பெற்றபோது காந்திமதி என்ற கே.ஏ. மணி, கே. அரசியல்மணி எனப் பெயர் மாற்றம் பெற்றார். 1949 சூலை 9ஆம் நாள் பெரியாருக்கும் இவருக்கும் நிகழ்ந்த பதிவுத் திருமணத்திற்குப் பின் ஈ.வெ.ரா. மணியம்மை எனப் பெயரில் மாற்றம் விளைந்தது. அப்பெயர் வரலாறும் ஆனது.

"பயமறியாத் துணிச்சல், கொள்கைப் பிடிப்பு, அறிவுக் கூர்மை, போராட்டக் குணம், நிர்வாகத் திறன் இவை எல்லாமுமே ஒருங்கே கொண்ட அபூர்வத் தமிழ்ப் பெண்மணி

மணியம்மை" (திருவேங்கிமலை சரவணன், "போராட்டக் குணம் + அறிவுக் கூர்மை = ஈ.வெ.ரா. மணியம்மையார்", தந்தை பெரியார் 123ஆம் பிறந்தநாள் மலர், விடுதலை, (2007) ப. 97) எனப் புகழும்வண்ணம் தன் வாழ்க்கையைச் செதுக்கிக் கொண்டவர் அம்மையார். 1943ஆம் ஆண்டில் பெரியாரின் சுயமரியாதைக் கருத்துகளால் ஈர்க்கப்பெற்ற அவர் அய்யாவின் தொண்டராகத் தம்மை மாற்றிக் கொண்டார். "சாதாரணமாகப் பெண்களுக்கு இருக்கும் ஆசாபாசங்களையெல்லாம் துறந்து அதிசய மனிதராக வாழ்ந்து காட்டியவர்; பெரியார் தொண்டு சமூகத்துக்கு அதிகக் காலம் கிடைக்கக் காரணமாக இருந்தவர் மணியம்மையார் ஆவார்கள்'' (நீதிபதி வேணுகோபால் உரை, பெரியார் மணியம்மை இலவச மருத்துவமனை திறப்புவிழா, சென்னை, 30-05-1979) என்ற குறிப்புரை ஆழமானது; பொருள் அடர்த்தி நிறைந்தது. ஒரு சீரிய சமூக அக்கறையாளரின் பணிகளுக்காகத் தன் இளமை, பொழுது, ஆசைகள் இவற்றைத் தியாகம் செய்த ஒரு பெண்மணியாக மணியம்மையாரை எல்லாரும் அடையாளப்படுத்துவர்.

"...1949ஆம் வருடம் பெரியாருக்கும் மணியம்மைக்கும் திருமணம் நடந்தது. இது சராசரியான திருமணம் அல்ல. அது ஒரு ஒப்பந்தத் திருமணம் என்று அறிவிக்கப்பெற்றது. பெரியாருக்கும் திராவிடர் கழகத்திற்கும் ஏராளமான சொத்துகள் இருந்தன. பெரியாருக்கோ வாரிசு இல்லை. அவருக்குப்பின் அவற்றையெல்லாம் சரியாக நிர்வகித்து, பராமரிக்கக் கூடிய தகுதி படைத்தவர் மணியம்மை மட்டுமே என்று நினைத்த பெரியார், அந்தச் சொத்துகளை நிர்வகிக்க, அவர் தன் மனைவியாக ஆனால்தான் சட்டப்பூர்வமாகச் செயல்படுத்த முடியும் என்று நினைத்தார். தன்னுடைய சமுதாயப் பணிகள் தொடரவும், இயக்கம் கட்டுக்கோப்பு குலையாமல் நடக்கவும் மணியம்மை தான் தலைவராக இருக்க முடியும் என்று ஆணித்தரமாக நம்பினார் பெரியார். அதன் விளைவுதான் அந்தத் திருமண ஒப்பந்தம்" (திருவேங்கிமலை சரவணன், முற்சுட்டிய கட்டுரை, ப. 98) என்ற செய்தி குறித்தலுக்குரியது.

'விடுதலை' ஏட்டில் 14-03-95இல் பெரியார் எழுதியவை:

புருஷனுக்கு மனைவி அடிமை (தாழ்ந்தவள்) என்றும், புருஷனுக்கு உள்ள உரிமைகள் மனைவிக்கு இல்லை என்றும் உள்ள ஒரு இனத்திற்கு ஒரு நீதியான மனுநீதி இல்லாமல் வாழ்க்கையில்

கணவனும் மனைவியும் சரிசம உரிமை உள்ள நட்பு முறை வாழ்க்கை ஒப்பந்தமாகக் கொண்ட திருமணம் தமிழர் திருமணம்.

இதனை வாய்ச்சொல்லாகவோ, வெறும் எழுத்து வடிவக் குறிப்பாகவோ கொள்ளாது வாழ்ந்து காட்டியவர்கள் பெரியாரும் மணியம்மையாரும். சுயமரியாதைத் திருமணம் அறிஞர் அண்ணாவால் சட்டமாக்கப் பெற்றமைக்குப் பெரியாரின் வாழ்வும் ஒரு காரணமெனலாம். "உத்திரப்பிரதேச மாநிலம் ஆக்ராவைச் சேர்ந்த பயல்கத்தாரா என்ற 21 வயதுப் பெண் அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் தான் திருமணம் செய்யாமலேயே தன் காதலனுடன் சேர்ந்து வாழ அனுமதிகோரி மனுத் தாக்கல் செய்திருந்தார்... இந்த மனுவை விசாரித்த... நீதிபதி... 'அதற்கு அவர்களுக்கு முழுஉரிமை அரசியல் சட்டத்தின் 21ஆவது சரத்துகளின் கீழ் வழங்கப்படுகிறது' எனத் தீர்ப்புக் கூறினார்." (கி. வீரமணி) என்கின்ற குறிப்பும் "பிரிட்டிஷ் தத்துவப் பேரறிஞர் - நான் ஏன் கிறித்துவனல்ல என்ற நூல் எழுதிய பெரும் பகுத்தறிவாளர் பெர்ட்ரண்ட் ரசல் - தம் 80ஆம் வயதில் 18 வயதான தம் செயலாளரை - நான்காம் முறையாக மணம் செய்து கொண்டபோது தவறெனக் கூறியவர் யாருமில்லை, உலகில்" (பெரியார் பற்றிய நூல், ப. 225) என்ற குறிப்பும் கணக்கிலெடுக்கப் பெற வேண்டியவை. பெரியார் - மணியம்மை மணம் இயக்கப் பணிகளின் தொடர்ச்சிக்கும் சொத்துப் பாதுகாப்பிற்குமே என்பதைப் பெரியாரே தெரிவிக்கிறார். வெறும் மானிட, மன, உடல் இன்பத்திற்காக இம்மணம் நிகழவில்லை என்பது வெளிப்படை. எனினும் தமிழகத்தில் அரசியல் நிகழ்வுகள் சில அரங்கேற இம்மணம் காரணமானது.

ஈ.வெ.ரா.வின் முதல் மனைவி நாகம்மையார் 1933இல் மறைவுற்றார். மணியம்மையாரின் "அவரோடு நான் 30 ஆண்டு 3 மாதம் 13 நாள்கள் அவரை விட்டுப் பிரியாது இருந்தேன். 1943 செப்டம்பர் 11 ஆம் நாள் வந்தடைந்த நான் அன்றுமுதல் இன்று வரை ஒரு நாளும் பிரியாது மகிழ்ந்தேன்" என்ற வாக்குமூலம் கவனிக்கத்தக்கது. (கி. வீரமணி (தொ.ஆ.), அன்னை ஈ.வெ.ரா. மணியம்மையாரின் சிந்தனை முத்துகள், ப. 65).

பெரியாரின் மறைவுக்குப் பின் திராவிடர் கழகத்தின் தலைவராகப் பணியேற்று, இயக்கப் பணிகள், சமூகப் பணிகள் எல்லாவற்றையும் திறம்படச் செய்து காட்டியவர் மணியம்மையார். அவருடைய பணிகள் சிலவற்றை முன்னிறுத்திப் பார்க்குங்கால்

இருபதாம் நூற்றாண்டு மகளிருள் அவர்பெற்ற சிறப்புடைய தனியிடம் புலனாகும்.

இயக்கப் பணிகளில் மணியம்மையார்

"அய்யா அவர்களின் உடலுக்கு நான் இயன்றவரை உறுதுணையாக இருந்தது போலவே இனி அவர் கொள்கைகளுக்கும் என் உயிர் உள்ளவரை உறுதுணையாக இருந்து வருவேன். அய்யா அவர்களுக்காகவே என் வாழ்வை ஒப்படைத்துக் கொண்ட நான் அவர் விட்டுச்சென்ற பணிகளைச் செய்யாமல் வேறு என்ன செய்யப் போகிறேன்" (கி. வீரமணி (தொ.ஆ.), அன்னை ஈ.வெ.ரா. மணியம்மையாரின் சிந்தனை முத்துகள், ப. 77). - இச்சொற்களைப் பெரியாரின் இறப்புக்குப் பின் உதிர்த்த மணியம்மையார் நிருவாக வசதிக்காகவே தான் தலைவராக இருக்கப்போவதாக மேலோட்டமாகக் கூறினார். கொள்கைப் பிடிப்பும், தமிழர் நலனும் அவரின் குருதி யோட்டத்தில் கலந்திருந்தமையால் பெரியாருக்கு நிகராகவே அவரின் தலைமைப் பொறுப்பு ஒளிர்ந்திருந்தது. அதற்கான காரணம் அவரின் ஒப்புதல் வாக்குமூலமாகத் தெரியவருகிறது. அது.... "அய்யா அவர்களது இடத்தை யாரும் பூர்த்தி செய்ய முடியாது. ஆனால் அவர் இலட்சியத்தைப் பூர்த்தி செய்ய நம்மால் முடியும். இந்தப் பொறுப்பை நான் பெருமையாகக் கருதிவிடுவேனே யானால் அந்தப் பெருமையே காரியங்கள் நடைபெறுவதில் குந்தகத்தை ஏற்படுத்திவிடும் என்று நல்ல வண்ணம் உணர்ந்தே இருக்கிறேன். எல்லோருடைய அப்பழுக்கற்ற அன்புக்கும் எவ்விதக் கசப்புணர்ச்சிக்கும் இடமில்லாமல் நடந்துகொள்வேன் என்று உறுதி கூறுகிறேன் (கி. வீரமணி (தொ.ஆ.), அன்னை ஈ.வெ.ரா. மணியம்மையாரின் சிந்தனை முத்துகள், ப. 82) என்பதாகும். சொன்னவண்ணம் வாழ்ந்தவர் மணியம்மையார் என்பதனைச் சான்றுகள் சில மெய்ப்பிக்கும்.

சான்று 1: 9-9-1976 அன்று பெரியார் திடலில் மணியம்மையார் தலைமையில் கூட்டம் நடந்தது. விடுதலை ஆசிரியர் கி. வீரமணி 'மிசா'வில் சிறையிலிருந்தார். நான்கு தீர்மானங்களை மணியம்மையார் நிறைவேற்றுகிறார். அதில் காணபெற்ற விழுமிய கூறுகள் (அ) திராவிடர் கழகம் அரசியல், மத, வகுப்புவாத ஸ்தாபனம் அல்ல.... பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் கடை நிலையில் உள்ள மக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபடும் இயக்க மாகும். இது எந்த அரசியல் கட்சியுடனும் தொடர்புடைய இயக்கமல்ல. (ஆ) பெரியாரின் வழியில் மக்கள் ஒருமைப்பாடு,

மண் ஒருமைப்பாடு ஆகியவற்றிற்காக உழைப்பது. தீர்மானங்கள் செயல்படக் களமிறங்குகிறார் மணியம்மையார்.

சான்று 2: சென்னையில் நடைபெற்ற வடநாட்டுச் சுரண்டல் தடுப்பு மறியலில் நேரே பங்கு பெறல். அத்துடன் தாய்மார்கள் பலரும் கலந்துகொள்ள நேரடியாகப் பேசியும் 25-03-1951இல் 'விடுதலை' ஏட்டில் எழுதியும் விழிப்புணர்வை உண்டாக்கியமை.

சான்று 3: 1958இல் மார்ச்சுத் திங்கள் முதலிரு வாரங்களில் சாதி ஒழிப்புப் போரில் ஈடுபட்டு மரணமுற்ற பட்டுக்கோட்டை இராமசாமி, மணல் மேடு வெள்ளைச்சாமி ஆகியோரின் பூதவுடல்களைத் தரச் சிறையதிகாரிகள் மறுத்தனர். அப்போது முதலமைச்சராக இருந்த காமராசரை நேரில் சந்தித்து, உரிய முறையில் முறையிட்டு உடல்கள் இரண்டையும் பெற்றவர் மணியம்மையார். 1958ஆம் ஆண்டு சனவரி 19ஆம் நாள் விடுதலை ஏடுவெளியிட்ட கட்டுரையின் தலைப்பு: "இளந்தமிழா! புறப்படு போருக்கு". இதற்காக விடுதலை ஏட்டின் ஆசிரியராகவும் வெளியிடுபவருமாக விளங்கிய மணியம்மையாருக்கு ஒரு மாதம் சிறைத் தண்டனை பரிசு.

சான்று 4: வடநாட்டு 'இராமலீலா'வுக்கு எதிராகத் தமிழ் மண்ணில் 'இராவணலீலா' நடந்த முயற்சிகளுக்கு முதுகெலும்பா யிருந்தவர் மணியம்மையார். கலைஞரிடத்தில் "இராவண லீலா நடத்துவதை நாங்கள் நிறுத்த வேண்டுமென விரும்பினால் இனி, 'இராம லீலா' நடத்துவதில்லை, பிரதமரோ, ஜனாதிபதியோ இராம லீலாவில் கலந்துகொள்வதில்லை என்று எங்களுக்குக் கூட அல்ல, தங்களிடத்தில் வாக்குறுதி ஒன்றினைத் தருவார்கள் என்றால் நாம் 'இராவணலீலா' நடத்தி இராமனை எரிப்பதை நிறுத்துவது பொருள் உள்ளதாக இருக்கும்" என வாதிட்டவர் அவர். அந்தச் சூழலில் அவரின் கொள்கைப் பிடிப்பிற்கும் உறுதியான நெஞ்சுரத்துக்கும் சாட்சியாகக் காவலதிகாரியின் கூற்றை முன்வைக்கலாம். "போலீஸ் கமிஷனர் (மணியம்மையாரிடம்) சொன்னார்கள்: 'நான் இதுவரை தந்தை பெரியார் அவர்களிடத்தில் பலமுறை வந்து வெற்றி பெற்றே இருக்கிறேன். உங்களிடத்தில்தான் முடியவில்லை. இவ்வளவு பிடிவாதமாக நீங்கள் இருப்பது எங்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கின்றது" (கி. வீரமணி (தொ.ஆ.), அன்னை ஈ.வெ.ரா. மணியம்மையாரின் சிந்தனை முத்துகள், ப. 173).

சான்று 5: வீட்டிலுள்ள குழந்தைகளுக்குப் பகுத்தறிவை முதலில் ஊட்ட வேண்டும் எனவும் வீட்டாரைத் திருத்திவிட்டால்

நாட்டாரை மாற்றுவது எளிது எனவும் கருதிய மணியம்மையார், "எங்கள் இயக்கத்தின் முக்கியக் கொள்கைகள் இரண்டு. ஒன்று, சாதிமுறை அடியோடு ஒழிக்கப்பட்டு மக்கள் எல்லாம் சமத்துவம் உடையவர்களாக ஆக வேண்டும் என்பது. மற்றொன்று, பெண்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு ஆண்களைப் போலவே சகல உரிமைகளையும் ஆணுக்குச் சமமாக அடைய வேண்டும் என்பது" (கி. வீரமணி (தொ.ஆ.), அன்னை ஈ.வெ.ரா. மணியம்மையாரின் சிந்தனை முத்துகள், ப. 196) என்றார். அதை நிறைவேற்றிக் காட்டப் பல்வேறு ஏச்சுகளுக்கும் வம்புப் பேச்சுகளுக்கும் இடையே பெரியார் திடல் முகப்பில் பெரியார் பெயரில் (Periyar Buildings) ஒரு தனிக்கட்டிடத்தை உருவாக்கினார்.

சான்று 6: டாக்டர் அம்பேத்கரைப் பற்றிய அம்மையாரின் கருத்துகள் வரவேற்கத்தக்கன. ''டாக்டர் அம்பேத்கர் வடநாட்டிலே பிறந்தவராக இருந்தும் தந்தை பெரியாரின் பெரும்பாலான கருத்துகளை ஏற்று, தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களின் நலனுக்காகப் பாடுபட்டார்" (கி. வீரமணி (தொ.ஆ.), அன்னை ஈ.வே.ரா. மணியம்மையாரின் சிந்தனை முத்துகள், ப. 230) என உரை நிகழ்த்தியவர் மணியம்மையார். அம்பேத்கரின் உரையொன்றைப் பெற்ற பெரியார், தமிழறிஞர்களைக் கொண்டு மொழியாக்கம் செய்து தமிழில் கொணர்ந்தார். அந்நூலே "சாதியை ஒழிக்க வழி" என்ற நூல். புரட்சிகரமான சிந்தனைகள் எங்கிருந்தாலும் அதனைப் போற்றத் துடித்த பெரியார் - மணியம்மையார் இணைபோல வேறு எப்பகுதியாலும் எவருமில்லை. 1973இல் 'இன இழிப்பு மாநாடு' நடத்தியவர் பெரியார். 1976 செப்டம்பரில் 'இராவண லீலா' நடத்தி ஆறுமாத காலச் சிறைத்தண்டனை வழங்கப்பெற்ற சூழலில் 16.09.1976 ('மிசா' காலத்தில்) கைதாகி இருநாட்களுக்குப் பின் விடுதலை ஆனவர் அம்மையார். தன் உடல்நலிவையும் கருதாமல் 1977இல் அன்றைய பிரதமர் (இந்திராகாந்தி) அவர்கட்குக் கருப்புக் கொடி காட்டிக் கைதானவர் அம்மையார். இவ்வாறாகத் தந்தை பெரியாரின் அடிச்சுவட்டில் தடுமாறாமல், தடம்மாறாமல் தொண்டாற்றிய மணியம்மையாரின் சமூகத் தொண்டுகளும் கருதப் பெற வேண்டியவை. காலமெலாம் போற்றப்பெற வேண்டியவை.

சமுதாய மேம்பாட்டுப் பணிகள்

"ஒருவர் பொன்னையும் பொருளையும் பதவியையும் புகழையும் 'தியாகம்' செய்யலாம். ஆனால் அம்மா அவர்கள்

அய்யாவைக் காப்பாற்ற முதலில் தம் 'இளமையையே' தியாகம் செய்தார்கள். பிறகு 'மானத்தை'யும் கூடத் தியாகம் செய்தார்கள்! இன மானம் தன்மானத்திலும் பெரிது; பொது வாழ்வுக்கு வருபவர் மானம் பாராது தொண்டு செய்யவேண்டும் என்ற தந்தை பெரியார் வகுத்த இலக்கணத்தின் பேரிலக்கியமாகத் திகழ்ந்தார்" (கீ. வீரமணி, 'நம் இதய மலர்வளையம்' (முன்னுரை), மேலது ப. 2) என்று ஆசிரியர் கி.வீரமணி கூறுவது அம்மையாரை இனங் காண உதவும். மணியம்மையாரின் சமூகப் பங்களிப்பை எடுத்துக் காட்டும் ஆவணங்கள் வருமாறு:

1. கொடியேற்றி வைத்து ஆற்றிய உரைகள்
2. குடியரசு இதழ், விடுதலை இதழ்களில் வழங்கப்பெற்ற கட்டுரைகள்
3. மாநாடுகளின் தலைமை உரைகள்
4. 'மெயில்' போன்ற ஆங்கில ஏடுகளுக்கு எழுதப்பெற்ற பதில்கள்
5. போராட்டக் களங்களில் ஆற்றிய உரைகள்
6. தலையங்கங்கள்
7. கல்லூரி மாணவர்களிடையே ஆற்றிய கலந்துரையாடல்கள்
8. அறிக்கைகள்

பல்வேறு கோணங்களில் அவரின் சிந்தனைகள் தமிழக மக்களுக்குப் பரிமாறப் பெற்றுள்ளன. காஞ்சி, தருமபுரி, சேலம், தஞ்சை, காரைக்குடி போன்ற ஊர்களில் அவராற்றிய உரையின் பிழிவாக ஒரு கருத்தை முன்நிறுத்த வியலும். "நம் கிளர்ச்சிகள் எப்பொழுதுமே பலாத்காரத்திற்கு இடம் இல்லாத கிளர்ச்சிகள். பொதுச் சொத்துக்களுக்குத் தீங்கு விளைவிக்காத கிளர்ச்சிகள். நாள், இடம், தொண்டர்களின் பட்டியல் இவற்றை வெளிப்படையாகக் கொடுத்து நடைபெறும் கிளர்ச்சிகள். பல காரியங்கள் கிளர்ச்சிகள் இல்லாமலேயே வெற்றி பெற்றுள்ளன.. ஆனால் நாம் ஒற்றுமையால் - அதிக ஒற்றுமையாக இருக்க வேண்டும்..... இதுபோன்ற கூட்டங் களுக்கு எல்லாம் பெண்கள் அதிகம் வரவேண்டும்." (கீ. வீரமணி, 'நம் இதய மலர்வளையம்' (முன்னுரை), மேலது ப. 128) என்பது அவர் கூற்று.

09.07.1949ல் மணியம்மையார் - பெரியார் திருமணம் நிகழ்ந்தபோது 72ம் 26ம் மணப்பதா என்று சிலர் பெரியாரையும் அம்மையாரையும் தரக்குறைவாகப் பேசினர். அவர்களே

24.12.73ஆம் நாள் பெரியார் மறைந்தபின் அம்மையாரின் சமூகத் தொண்டுகளை நேரில் கண்டு தம் கருத்துகளை மாற்றிக் கொண்டனர். மனம்மாறிப் பாராட்டவும் செய்தனர்.

பெரியாரின் பயணத்திட்டங்களை வரையறுப்பது, உணவைக் கட்டுப்பாட்டுடன் வழங்குவது, உடல்நலனைப் பேணுவது போன்ற சராசரிப் பெண்ணாகப் பெரியாருக்கு வாய்த்த நற்செவிலியாக வாழ்ந்த மணியம்மையார், தன் எழுத்தாலும், பேச்சாலும், போராட்டங்களாலும், தன்னை ஒரு தரமான தலைவியாகவும் வெளிக்காட்டினார். அனைவரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற போராட்டத்தில் அவரின் செயல்பாடுகள் குறிக்கத்தக்கன. 'இராவணலீலா' பிறிதோர் உயரிய நற்சான்று. "பெண் பொதுவாழ்வுக்கு வந்துவிட்டால் கல்லெறிகளும், சவுக்கடிகளும் நிச்சயம் கிடைக்கும். ஆனால், அதை வெல்வதுதான் அவளுடைய இலட்சியம் என்பதுதான் மணியம்மையார் விட்டுச் சென்றிருக்கும் செய்தி" (திருவேங்கிமலை சரவணன், முற்சுட்டிய கட்டுரை, ப. 99) என்ற குறிப்புரை வலுவானது. தந்தை பெரியார் சென்னை தியாகராயர் நகரில் இறுதியாக உரையாற்றியதைப் போலவே அம்மையாரும் அதே இடத்தில் தன் இறுதிப் பொழிவினை ஆற்றியுள்ளார்.

பெரியார் மணியம்மையை உணர்ந்து கொள்ளப் பாவேந்தரின் வரிகள் துணைபுரிகின்றன. "பெரியார் மேடைமேல் வீற்றிருப்பார். ஓர் இலக்கம் தமிழர் அவரின் தொண்டுக்காக மல்லிகை முதலிய மலர்களாலும் வெட்டிவேர் முதலிய மணப் பொருளாலும் அழகு பெறக்கட்டிய மாலை ஒவ்வொன்றாய்ச் சூட்டிப் பெரியார் எதிரில் இரண்டு வண்டியளவாகக் குவிப்பார்கள்.

அதேநேரத்தில் எல்லாம் உடைய அன்னை மணியம்மையார் ஏதுங்கெட்ட வேலைக்காரி போல் மேடைக்கு ஏறத்தாழ அரைக்கல் தொலைவில் தனியே உட்கார்ந்தபடி சுவடி விற்றுக் கொண்டிருப்பார்கள்.

ஒரே ஒரு மாலையை எந்துணைவியார்க்குப் போடுங்கள் என்று அந்தப் பாவியாவது சொன்னதில்லை. எம் அன்னையாவது முன்னே குவிந்துள்ள மாலைகளை மூட்டை கட்டுவதன்றி - அம்மாலைகளில் எல்லாம் மணக்கும் பெரியார் தொண்டை முகர்ந்து முகர்ந்து மகிழ்வதன்றி - ஓர் இதழைக் கிள்ளித் தம் தலையில் வைத்தார் என்பதுமில்லை....

பெரியார் வாழட்டும் என்று தன் துடிக்கும் இளமையைப் பெரியார்க்கு ஒப்படைத்த ஒரு பொடிப் பெண்ணை; அன்னை எனப் புகழாமல் நாம் வேறு என்ன என்று புகழவல்லோம்?" (பாரதிதாசன், 'குயில்' ஏடு, 10.04.1960 (புதுவை).

மாதர் மித்திரி வழி அறியலாகும் சிந்தனையாளர் - மி.மி.

மு.சு. கண்மணி

சமுதாய வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கும் துறைகளுள் ஒன்று இதழியல். அச்சு இயந்திரம் தமிழகத்திற்கு வருகை புரிந்ததிலிருந்து தனிப்பெரும் துறையாக, சமுதாயத்தைச் சீர்தூக்கும் வகையில் இதழியல் வளர்ந்து கொண்டு வருகின்றது. இதன் தொடக்கக் காலங்களிலேயே சமுதாயச் சிக்கலை மையப் படுத்தும் வகையில் பொதுத்துறையாக இல்லாமல் பல்வேறு பிரிவுகளாக வளர்நிலை எய்தியது.

உலகில் பெண்களின் நிலையினை உயர்த்திட 19ஆம் நூற்றாண்டிலேயே இதழ்கள் வெளிவரத் துவங்கிவிட்டன. பெண்களிடம் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தவும், வாசிப்புப் பழக்கத்தை வளர்க்கவும், பெண்கள் தங்களை உணர்ந்து கொள்ளவும் பெண்களுக்கென்றே இதழ்கள் உருவாக்கப்பட்டன. பெண்களுக்கென்றே தமிழில் வெளிவந்த முதல் இதழ் 'அமிர்தவசனி'. இவ்விதழ் 1860ஆம் ஆண்டு முதல் வார இதழாகத் திருச்சியிலிருந்து வெளிவந்தது. இவ்விதழை அமிர்தபாபு என்பவர் நடத்தி வந்தார். இதனை அடுத்து 1883இல் 'சுகுணபோதினி' என்ற மாதம் இருமுறை இதழினைப் பாலசுந்தரம் என்பவர் நடத்தினார். இவ்விதழ் பெண்களுக்கான கல்வி இதழாக வெளிவந்தது. இதனைத் தொடர்ந்து 1887இல் 'மாதர் மித்திரி' என்ற மாத இதழ் திருமதி ரூத் என்பவரால் நடத்தப்பட்டது. இவ்வாண்டிலேயே 'மகாராணி' (இருமாதம்) என்ற இதழை வி. கிருஷ்ணமாச்சாரியும், 'மாதர் போதினி' (மாத இதழ்) என்ற இதழினை இராமசாமி என்பவரும் நடத்தினர். இவ்விரு இதழ்களும் சென்னையிலிருந்தே வெளியாயின. 1891இல் 'பெண்மதிபோதினி' (மாத இதழ்) டி.பி. நாகரெத்தினம் என்பவரால் சென்னையிலிருந்து வெளியிடப் பட்டது. 1897இல் வெளியான 'ஞானபோதினி' என்ற இதழினைப் பற்றித் தகவல்கள் கிடைக்கவில்லை. 1899இல் 'மாதர் மனோரஞ்சனி' என்ற இதழ் சி.எஸ். இராமசாமி ஐயர் என்பவரால் சென்னையிலிருந்து வெளியிடப்பட்டது. இந்நூற்றாண்டிலேயே 'உத்தம போதரஞ்சனி'

என்ற இதழ் வெளியானது என்பதைத் தவிர அது தொடர்பான வேறு எந்தச் செய்தியினையும் அறிய இயலவில்லை.

19ஆம் நூற்றாண்டில் வெளியான 9இதழ்களிலும் 'மாதர் மித்திரி' என்ற இதழினைத் தவிர மற்ற பெண்கள் இதழ்களுக்கு ஆசிரியர் ஆண்களாகவே இருந்துள்ளனர். இக்காலவரிசைப் பட்டியலில் மூன்றாவது இடத்தில் இருக்கும் 'மாதர் மித்திரி' என்ற இதழினைத் திருமதி ரூத் என்ற (அமெரிக்க வாழ்) பெண்மணி நடத்தி வந்தார் என்பதை அறிய நேர்கிறது. இதில் கட்டுரைகள் வரைந்து தம் கருத்துகளைப் பதிவு செய்தவர்களில் மி.மியும் ஒருவர். அவரது சிந்தனைகள் இங்கு இடம்பெறுகின்றன. மித்திரி - என்றால் தோழி என்பது பொருள். 'தோழிகளுக்குத் தோழி' என்ற அடிப்படையில் இப்பெயர் அமைந்திருக்கலாம். இவரது இயற்பெயர் மற்றும் பிற செய்திகளை அறிய இயலவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இவர் படைப்புகள் வெளிவந்திருப்பது கொண்டு இருபதிலும் தம் சாதனைகளைத் தொடர்ந்து படைத்திருப்பார் என்ற அடிப்படையிலும், இருபதாம் நூற்றாண்டில் இதழியலில் சாதனை படைத்த பெண்மணிகளுக்கு முன்னோடி என்ற நிலையிலும் மி.மி. இங்கு இடம்பெறுகிறார்.

சூலை-1888 முதல் சூன் - 1889 வரை வெளியான ஓராண்டு கால இதழ்களிலும் மாதம் ஒரு கட்டுரையாக 12 கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இப்பன்னிரண்டு கட்டுரைகளிலும் நங்கையர்க்கு நல்லுரை என்று பொதுத் தலைப்பிட்டு மித்திரிக்கு மித்திரி, ஸ்திரீசாதி மேன்மை, அழகு, காப்பு, மும்மை, தாய், பதிவிரதை, குடித்தனக்காரி, நகை, மாமியார், கணக்கு, பாக்கியம் நிறைந்த மாளிகை என்ற தலைப்புகளின் அடிப்படையில் கட்டுரைகள் அமைந்துள்ளன.

மாதர் மித்திரி 1887இல் வெளியானாலும் 1887 முதல் 1888 (ஜூன்) வரை வெளியான ஓர் ஆண்டுக் கால இதழ்கள் தற்பொழுது கிடைக்கவில்லை. 1888 முதல் 1889 வரை வெளியான ஓராண்டுக்கால இதழ்களின் தொகுப்பு கிடைக்கின்றது. இதில் பத்திராதிபர் குறிப்புகள், ஞானகீதம், நங்கையர்க்கு நல்லுரை, சிறுவர்களுக்கான கதை, சமாச்சாரக் குறிப்புகள், பிரசவநூல் போன்ற தலைப்புகளின்கீழ்த் தொடர் கட்டுரைகளும், பாடல்களும் வேறு பல பொதுவான செய்திகளும், பெண்களுக்கான குறிப்புகளும் வெளிவந்துள்ளன. இவற்றில் நங்கையர்க்கு நல்லுரை என்று தலைப்பிடப்பட்ட கட்டுரையில் மட்டுமே கட்டுரையாளரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலும் கட்டுரையாளரின் முழுப்பெயர் குறிப்பிடாமல் 'மி.மி.' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

மித்திரிக்கு மித்திரி என்று தலைப்பிடப்பட்ட கட்டுரையில் ஒருபெண் படைப்பாளருக்குச் சமூகத்தில் அங்கீகாரமற்ற தன்மை இருப்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார். "எண்ணறப் படித்து எழுத்தற வாசித்தாலும் பெண்புத்தி பின்புத்தியே" என்ற பழமொழியினை எடுத்துக்காட்டி, குறைசொல்லுவோர் சொல்லட்டும்; என் புத்தி மண்புத்தியானாலும் அதனைப் பொன் புத்தியாக்கிடும் திறமை எனக்கு இருக்கிறது என்று தனக்குள் இருக்கும் எழுத்தாளுமையை வெளிப்படுத்துகிறார். இக் கட்டுரையில் தான் ஒரு நகரவாசி அல்ல. கிராமத்துப் பெண் என்பதைச் சுட்டுவதுடன், பல பிள்ளைகளைப் பெற்றெடுத்த அனுபவமுதிர்ந்தப் பெரியவள் என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

குடும்பத்தினர் அனைவரும் பெண்களை அடிமைகளாகவே பாவிக்கின்றனர் என்பதை 'ஸ்திரீசாதிமேன்மை' என்னும் தலைப்பிட்ட கட்டுரையின் மூலம் விளக்குகிறார்.

> *கட்டிலிலும், தொட்டிலிலும், அறையிலும், புறையிலும் வைத்து, அதற்கப்பால் அவர்கள் பயன்படத்தக்கவர்களல்ல வென்று நினைத்து, அறிவீனமும் பலவீனமும் அவர்களுக்கு மாறாச் சுதந்திரமாயிருக்கும்படிக்குப் பண்ணுகிறார்கள். இதற்கு மூலாதாரமான குருட்டாட்டம் புருஷர்களை மாத்திரமல்ல, ஸ்திரிகளையும் பிடித்திருப்பதால் இவர்கள் எவ்வித அபிவிருத்திக்கும் இடங்கொடாதிருக்கிறார்கள்*

பெண்ணின் வளர்ச்சிக்குத் தடை அவர்களது மனநிலையும்தான் என்பதை அழகாக உணர்ந்துள்ளார் இவ்வாசிரியர். ஆண்களுக்கு அடிமைகளாக இருப்பதற்காகப் பெண்களைத் திருமணம் செய்யவில்லை. துணையாக இருக்கத்தான் என்பதைத் தெளிவுபடுத்துகிறார். பெண்கள் கல்வி கற்பது வழக்கமில்லை அவ்வாறு கல்வி கற்றால் அவர்களின் ஒழுக்கம் குறைந்துவிடும் என்று கூறுபவர்களுக்கு ஔவை முதலியவர்களை எடுத்துக்காட்டி விளக்குகிறார்.

பெண்களுக்கு அழகியலின் மீது கொண்டுள்ள நாட்டத்தைக் களைவதே நோக்கமாகக் கொண்டுள்ளது 'மி.மி'. அவர்களின் 'அழகு' எனும் தலைப்பிடப்பட்ட கட்டுரை. பெண்கள் தங்களை ஒப்பனை செய்து கொள்ளும் அழகெல்லாம் நிலையானது அல்ல. அழகு சுரூபிகள் நோய் ஏற்படின் மகா குரூபிகளாக மாறிவிடுவார்கள் என்று பரிகசிக்கிறார். இந்தியாவில்

பெண்கள் நகை என்னும் மண்மூட்டைகளைச் சுமக்கும் சுமட்டுக் காரிகளாக இருக்கிறார்கள். நகைகளை மாட்டிக் கொள்வதற்காக உடம்பில் எத்தனைத் தொள்ளல்கள் துவாரங்கள் என்று ஏளனம் பேசுகிறார்.

குஞ்சிய ழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல – நெஞ்சத்து
நல்லம் யாமென்னும் நடுவுநிலை மையால்
கல்வி யழகே யழகு

என்ற நீதிநூல் பாடலை எடுத்துக்காட்டி அறிவுரை கூறுகிறார்.

ஐம்புலன்களைக் காத்தல் என்பது பெண்களுக்கு மிகவும் அவசியம் என்பதைக் 'காப்பு' என்னும் தலைப்பிடப்பட்ட கட்டுரையில் வெளிப்படுத்தியுள்ளார். தாழ்மை, பொறுமை, உண்மை வேண்டும் என்பதை 'மும்மை' எனத் தலைப்பிட்ட கட்டுரையில் குறிப்பிடுகிறார். பிள்ளைகளை வளர்க்கும் உன்னதமான பொறுப்பு பெண்களுக்கு உண்டு என்பதைத் 'தாய்' என்னும் கட்டுரையில் வெளிப்படுத்தும் 'மி.மி.' அவர்கள் இன்று பிள்ளைபெறத் தாய்மார்கள் உண்டே ஒழியப் பிள்ளைகளை வளர்க்க நல்ல தாய்மார்கள் இல்லை என்று வருத்தம் தெரிவிக்கிறார்.

பெண்களுக்கான சிறப்பான அறிவுரையையும், விழிப்புணர்வினையும் கூறிவந்த கட்டுரையாளர் 'பதிவிரதை' என்ற தலைப்பிட்ட கட்டுரையில் பெண்கள் கணவனின் சுக துக்கத்துக்காக வாழ்வதையே தம் வாழ்நாளில் பெரும் பேறாகக் கொள்ள வேண்டும் என்று பெண்ணியத்திற்கு முரணான கருத்தினை இங்குப் பதிவு செய்கிறார்.

நல்மனைவி, தன் வீட்டில் எத்தனைப் பிணிவிடை யாட்களிலிருந்தாலும் தன் கணவனுக்குத் தானே பணிவிடை செய்வதைப் பெரும் பாக்கியமாக எண்ணி, அவன் நாவுக்கு ருசிகரமான போசன பானங்களைப் பாகஞ்செய்யவும், அவன் சந்தோஷத்துக்கும் சௌக்கியத்துக்கும் அவசிய மானவற்றைத் தன் கையினாலே நடப்பிக்கவும் தவறாதிருக்கிறாள் (மா.மி. ஜன 1889; ப.81)

என்ற குறிப்பின் மூலம் பெண்கள் கல்வி கற்றாலும், அழகியலில் (நகை, ஒப்பனை) நாட்டமில்லாமல் போனாலும் ஒரு ஆணுக்குக் கீழ்ப்படிபவளாகத்தான் இருக்க வேண்டும் என்ற ஆண் மேலாண்மைக் கருத்தாக்கம் வெளிப்படுவதை அறியலாகிறது.

பெண்ணிற்கு முக்கியமானதாகக் கருதப்படும் மற்றொன்று, நன்முறையில் குடும்பத்தைக் கவனித்துக் கொள்ளுதல் என்ற செய்தியைக் 'குடித்தனக்காரி' என்று தலைப்பிடப்பட்டக் கட்டுரைகள் வழி வலியுறுத்துகிறார் ஆசிரியர்.

> *ஒரு பெண் எவ்வளவு அழகுள்ளவளாயிருந்தாலும், எவ்வளவு அறிவுடையவளாயிருந்தாலும், எவ்வளவு ஆஸ்தி பாஸ்தியுடையவளாயிருந்தாலும், அவள் குடித்தனக்காரியாயிராதே போனால் அவள் சமுசார வாழ்க்கைக்கு ஏற்றவளல்ல. அவளால் வாழ்மனை பாழ்மனையாம், வீடு காடாம்.*
>
> *(மா.மி. பிப். 1889; ப.92)*

பெண்களென்றால் குடும்பத்தைப் பராமரிப்பதையும், கணவனையும், குழந்தையையும் பேணுவதையுமே தம் முதல் கடமையாகக் கொள்ள வேண்டும் என்ற மேலாதிக்க உணர்வு ஆசிரியர் மனதிலும் வேருன்றி இருப்பதனை அறிய முடிகிறது.

பெண்களிடம் நகை அணியும் மோகம் கொண்டுள்ளதை வன்மையாகக் கண்டிக்கிறது 'நகை' என்னும் தலைப்பிடப்பட்ட கட்டுரை. இக்கட்டுரையில் நகையின் மீது நாட்டம் இல்லாத பெண்களை வற்புறுத்தி நகை அணியச் செய்யும் அவளது குடும்ப உறுப்பினர்களை மூடர்கள் என்கிறார்.

> *சில பெண்களுக்கு நகையின் மேல் நாட்டமிராதே போனால் அவர்களுடைய மூடத்தாய்மாரும், தங்கை தமக்கையரும் அவர்களைச் சித்திரவதை செய்து, நகை தரித்துக் கொள்ளக் கட்டாயப் படுத்துவதுண்டு, இது எவ்வளவு பெரிய அநியாயம்*
>
> *(மா.மி. மார், 1889; ப. 104)*

கை, கால், இடுப்பு, காது என்று ஒவ்வொரு உறுப்புகளிலும் அணியப்படும் அணிகலன்கள் பெண்களுக்கு இடப்பட்ட விலங்குகள் என்று சித்திரிக்கிறார். நகை திருடர்களின் கவனத்தை ஈர்க்கக் கூடியது. அதனால் உறுப்புகளையும், உயிரினையும் இழந்தோர் பலர் என்றும் சுட்டுகிறார். மேலும் நகைகள் பொருள் நாட்டத்தை ஏற்படுத்தும் என்பதைக் கீழ்வருமாறு விளக்குகிறார்.

> *பொன் ஆபரணம் பூணுவதால் உண்டாகும் பொருள் நஷ்டம் கொஞ்சமல்ல. பணத்தை வட்டிக்கு விட்டால், வியாபாரத்தில் போட்டால், அது பெருகும், ஆபரணாதிகளில் போட்டிருக்கும்*

பணம் வட்டி கொடாமல் போகிறதோடு,
தேய்வினாலும் குறைந்து போகிறதென்பது நிச்சயம்
(மா.மி.மார். 1889; ப. 105)

பெண்கள் நகைகள் மீது நாட்டத்தைக் குறைப்பதோடு, அப்பணத்தை வணிகத்தில் முதலீடு செய்து பெருக்க வேண்டும் என்று வணிகம் செய்யப் பெண்களுக்கு வழிகோலுகிறார்.

இச்சமுதாயத்தில் மாமியார் என்ற உறவு முறையானது கொடுமை செய்பவள் என்ற அர்த்தத்திலேயே உணரப்படுகிறது என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்துவதாக 'மாமியார்' என்னும் கட்டுரை அமைந்துள்ளது. அதில் 'கொடுமையிலெல்லாம் கொடுமை மாமிக்கொடுமை' என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். மாமியார் என்பவர்கள் இதுபோன்று கொடுமை செய்பவர்களாக இல்லாமல் மருமகள் நலனைத் தன் நலனாக எண்ணக் கூடியவர் களாக மாற வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்துகிறார்.

பெண்கள் குடும்பத்திற்கு நல்ல இனிய விஷயங்களைக் கூட்டியும் பிறருடைய நல்ல இயல்புகளைப் பெருக்கிப் பேசவும், பொருளினை வகுத்துச் செலவழிக்கும் திண்மையைப் பெற்றவர் களாக இருக்க வேண்டும் என்பதைக் 'கணக்கு' என்று தலைப்பிடப்பட்ட கட்டுரையின் மூலம் தெளிவுபடுத்துகிறார்.

ஆணும் பெண்ணும் எவ்வாறு ஒத்திசைந்து குடும்பத்தினை நடத்திட வேண்டும் என்பதைப் "பாக்கியம் நிறைந்த மாளிகை" என்னும் தலைப்பிடப்பட்ட கட்டுரையின் மூலம் அறிவுறுத்துகிறார். வீட்டில் கணவனும் மனைவியும் அன்பான வார்த்தைகளைப் பேசவேண்டும் என்பதைக் கீழ்வரும் நீதிநூல் பாடலின் மூலம் விளக்குகிறார்.

வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்திற்
பட்டுருவும் கோல் பஞ்சிற் பாயாது – நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும் (மா.மி. ஜூன். 1889; ப. 140)

அன்பாகவும், பொறுமையுடனும் குடும்பத்தினை நடத்தினால் அவ்வீடு பாக்கியம் நிறைந்ததாக அமையும் என்கிறார்.

பன்னிரு தலைப்புகளின் கீழும் கொடுக்கப்பட்டுள்ள செய்திகளில் பெரும்பான்மை பெண்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்கு வழிகோலுவதாக அமைந்துள்ளன. குறிப்பாக இன்றுவரை பெண்கள் இதழ்களில் தொடர்ந்து கொண்டிருக்கும்,

ஆணாதிக்க மனநிலையின் ஒட்டுமொத்த வடிவங்களான "அழகு", "நகை" போன்ற ஒப்பனைகளைத் தவிர்க்க வேண்டும் என்று கட்டுரையாளர் குறிப்பிடுவது பெண்கள் வாழ்வின் அடிப்படை முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். அழகியலில் நாட்டம் என்பது பெண்களைச் சீரழிக்கும். பெண்கள் நகை வாங்கும் பணத்தை வணிகத்தில் போட்டால் பெருகும் என்பது போன்ற கருத்தினை ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

குழந்தை வளர்ப்பு என்பது பெண்களை மட்டும் சார்ந்தது அல்ல. ஆண்களுக்கும் பங்குண்டு என்று தெளிவுபடுத்துகிறார். இவை தவிர அனைத்து வகை நற்குணங்களையும் பெற்றிருக்க வேண்டும் என்பதை மும்மை, கணக்கு, காப்பு போன்ற கட்டுரைகளில் அறிவுறுத்துகிறார்.

குடும்ப உறுப்பினர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை 'மாமியார்', 'பாக்கியம் நிறைந்த மாளிகை' போன்ற கட்டுரைகளில் சுட்டியுள்ளார். இது போன்று பல்வேறு கருத்துக்களைப் பெண்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்காகப் பதிவுசெய்துள்ள மி.மி. அவர்கள் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கே ஒருவரை உயர்த்துவதற்கான வழி என்பதையும் சுட்டுகிறார்.

இக்கட்டுரைகள் ஒவ்வொன்றும் சிறப்பான பெண்களின் வாழ்வியல் முன்னேற்றக் கருத்துக்களை எடுத்துச் சொன்னாலும் 'பதிவிரதை', 'குடித்தனக்காரி' போன்ற கட்டுரைகள் பெண்ணியச் சிந்தனைக்கு முரணானவையாக இருக்கின்றன. இருப்பினும் இவ்விதழ் வெளிவந்த காலச் சூழ்நிலையினைக் கருத்தில் கொள்வோமேயானால் இவை ஏற்றுக் கொள்ளத்தக்க வையாகவே கருதப்படுகின்றன. ஏனெனில் அக்காலக்கட்டத்தில் பெண்விடுதலை என்பதை எண்ணிக் கூடப் பார்க்க இயலாச் சூழலில் இவ்வகைக் கட்டுரைகள் செறிவான கருத்தைத் தாங்கி உள்ளன என்பதில் ஐயம் எதுவும் இல்லை.

கட்டுரையாளர் மி.மி. அவர்களின் மொழிப்புலமை, இலக்கிய ஆர்வம், கூறவந்த செய்தியைத் தெளிவாகக் கூறும் விதம், சிக்கலை மையமிட்டு அதனைத் தீர்ப்பதற்கான வழிமுறையினைப் படிப்படியாகக் கூறிச்சென்று சிக்கலுக்கான தீர்வினைச் சொல்லும் விதம் என்பன அவர் கட்டுரைகளில் செழிப்பாக உள்ளன. பெண்ணெழுத்திற்கு மதிப்பில்லை என்பதை உணர்ந்து அதனைத் தனது கட்டுரையின் மூலம் பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளது அவரின் ஆழமான அறிவினை விளக்குவதாய் அமைந்துள்ளது.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி

செ. ஏழுமலை

'பெண்மை' என்னும் இப்பதம் தாய்மை, பாசம், நேசம், ஒழுக்கம், உண்மை, உயர்வு, உழைப்பு, சேவை போன்ற பல அர்த்தங்களை உள்ளடக்கிய ஓர் ஒப்பற்ற பதமாகத் திகழ்கின்றது. இதனால்தான் "மங்கையராய்ப் பிறக்க மாதவம் செய்திட வேண்டும்" என்று பாடினார் போலும் கவிமணி.

ஒரு குழந்தை வளர்ந்து பெண்ணாதல்; பெண் மலர்ந்து மனைவியாதல்; மனைவி தாயாதல்; அந்தத் தாய் கனிந்து தெய்வ மாதல் அதாவது முதுமை அடைதல் என்ற மாற்றங்களினால் ஒரு பெண் எத்தனை அவதாரங்களை எடுக்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு அவதாரத்திலும் இந்தப் பெண்மை எவ்வளவு பொறுப்பும் கடமையுணர்ச்சியும் நிறைந்ததாகத் திகழ்கின்றது. இப்படிப்பட்டப் பெண்மைக்கே இலக்கணமாய்த் திகழ்ந்து பெண்ணினத்தின் விடிவெள்ளியாக விளங்கியவர்தான் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி ஆவார். அக்கால ஆண்கள் என்னும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துக் குரல் கொடுத்த அம்மையாரின் வாழ்க்கைக் குறிப்புகளையும் அவர் பெண்ணினத்திற்கு ஆற்றிய தொண்டுகளையும் மற்றும் அவர் படைத்த சாதனைகளையும் பின்வருமாறு ஆராய்கின்றது இக்கட்டுரை.

பெறற்கரிய பிறப்பு

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்றொரு பழம்புலவரின் வாக்கினைப் போன்று, பெறற்கரிய இம்மானிடப் பிறவியிலே பிறந்து, பிறருக்காக வாழ்ந்து சாதனை படைத்தவர்கள் ஒரு சிலரே. இந்த ஒரு சிலரில் மறைந்தும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற முத்துலட்சுமி புதுக்கோட்டையில் 30-08-1886இல் பிறந்தார்.

இந்தப் புதுக்கோட்டை இந்தியாவுடன் இணைவதற்கு முன் தொண்டைமானின் ஆட்சியின் கீழ்த் தனியொரு மாநிலமாக இருந்து வந்தது. இங்கே உள்ள அரசினர் கலைக் கல்லூரி முதல்வராகவும் கல்வித்துறை இயக்குநராகவும் மற்றும் மன்னரின் ஆலோசகராகவும் பணியாற்ற வந்த நாராயண சாமிக்கும் அவரின்

இல்லத்தரசியாக விளங்கிய சந்திரம்மாளுக்கும் தலைமகளாகப் பிறந்தார் முத்துலட்சுமி (பி.எல். ராஜேந்திரன்: 1980: 22).

முத்துலட்சுமியின் உடன்பிறந்தவர்கள் ஒரு சகோதரனும் இரு சகோதரிகளும் ஆவர். சகோதரர் இராமையா சென்னை உயர்நீதி மன்றத்தில் சிறந்த வழக்கறிஞராகத் திகழ்ந்தவர். அடுத்த சகோதரி சுந்தரம்மாள், ஆங்கிலக் கல்வியில் அதிகம் நாட்டமில்லாததினால் இசைக் கலையில் தேர்ச்சி பெற்று நல்ல கலைஞரானார். இளைய சகோதரி நல்லமுத்து, ஆங்கிலத்தில் நல்ல ஆற்றல் இருந்ததால் நன்றாகப் படித்து, வெளிநாடுகளுக்குச் சென்று உயர்கல்வியைப் பயின்றார். பின்னர், சென்னை இராணிமேரி கல்லூரியில் பேராசிரியராகச் சேர்ந்து, அக் கல்லூரியின் முதல் இந்திய 'முதல்வர்' என்ற சிறப்புக்குரியவராக விளங்கினார். (வசுமதி ராமசுவாமி: 1987: 13). அந்த வகையில் இவருடைய குடும்பம் ஒரு நல்ல பல்கலைக் கழகமாகத் திகழ்ந்தது.

காலத்தால் கனிந்த கல்வி

ஒரு ஆண் கல்வி கற்றால் அது அவனுக்கு மட்டுமே பயன்படுகின்றது. ஆனால் ஒரு பெண் கல்வி கற்றால் அது அவளுக்கு மட்டுமின்றி, அவளைச் சார்ந்த குடும்பத்திற்கும் இந்த சமுதாயத்திற்கும் பயன் அளிக்கின்றது. அதனால்தான் ஒரு சமுதாயத்தில் 'பெண் கல்வி' மிகவும் அவசியமாகின்றது. இதனை வலியுறுத்த வந்த பாரதிதாசன்,

கல்வியில் லாத பெண்கள்
களர்நிலம் அந்நிலத்தில்
புல்விளைந் திடலாம்; நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை
(குடும்ப விளக்கு: 69-70)

என்றார். அந்த வகையில் தமிழகத்தில் பெண் கல்வியின் ஆரம்பமாக முத்துலட்சுமி திகழ்ந்தார்.

ஆரம்பக் கல்விக்காக முத்துலட்சுமி தனது நான்காம் வயதில் ஒரு திண்ணைப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். அங்கேயே ஆறாம் வகுப்பு வரை பயின்றார். ஒரு பெண்ணுக்குப் பால் கணக்கு, சலவைக் கணக்கு எழுதத் தெரிந்தால் போதும் என்ற நிலையில்தான் அவர் பள்ளிக்கு அனுப்பப்பட்டார். ஆனால், அவர் கல்வி கற்பதில் கொண்டிருந்த ஆர்வத்தையும் நுண்ணறிவையும் கண்டு வியந்த அவர் தந்தை நாராயணசாமி, அவர் தொடர்ந்து

கல்வி கற்க உறுதுணையாக இருந்தார். அப்படியிருந்தும் அவருடைய பத்தாம் வயதில் அக்கால வழக்கப்படி பள்ளியிலிருந்து நிறுத்தப் பட்டார். பின்னர் அவருடைய பள்ளி ஆசிரியர் பாலையாவின் பரிந்துரையால் மீண்டும் பள்ளிக்கு அனுப்பப்பட்டார். இருப்பினும், இவர் தமது 13ஆம் வயதில் எட்டாம் வகுப்பை முடித்த நேரத்தில் பூப்படைந்ததால் மறுபடியும் பள்ளியிலிருந்து நிறுத்தப் பட்டார்.

பள்ளியிலிருந்து முத்துலட்சுமி நிறுத்தப்பட்டாலும் அவருடைய கல்வி ஆர்வத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க அவர் தந்தையார் விரும்பவில்லை. எனவே, மேற்கொண்டு அவர் வீட்டிலிருந்தே பயில, மாதம் இரண்டு ரூபாய் சம்பளத்தில் ஒரு ஆசிரியரை நியமித்தார். அவ்வாறு தமது ஒன்பதாம் வகுப்பை முடித்தார் முத்துலட்சுமி. பின்னர்த் தமது தந்தையின், தமிழ்ப் பேராசிரியர் சரவணப் பிள்ளை மற்றும் பேராசிரியர் ராதா கிருஷ்ணன் ஆகியோர் உதவியுடன் 'மெட்ரிக்குலேஷன்' பாடங்களைப் பயின்று வந்தார். 1902ஆம் ஆண்டில் அக்காலத்தில் மிகவும் கடினமானதென்று கருதப்பட்ட மெட்ரிக்குலேஷன் தேர்வில் சிறப்பான முறையில் தேர்ச்சி பெற்றார். இந்தத் தேர்ச்சியைப் புதுக்கோட்டை மாநிலமே பாராட்டியது.

முத்துலட்சுமி மெட்ரிக்குலேஷன் தேர்வில் தேர்ச்சி பெற்ற பின்னர் உள்ளூரிலிருந்த ஒரு பெண்கள் பள்ளியிலிருந்து தொடக்க நிலை ஆசிரியப் பணிக்கான அழைப்பு இவர் வீடு தேடி வந்தது. இதனை விரும்பாத முத்துலட்சுமி எப்படியும் பட்டப்படிப்பைத் தொடர்வதில் உறுதியாக இருந்தார். அதற்கு உந்துதலாக அமைந்தது, ஒரு புகைப்படம். தந்தை நாராயண சாமிக்குச் சென்னையிலிருந்து வந்த பத்திரிகையொன்றில் கமலா சத்தியநாதன் என்பவரும் அவர் சகோதரி கிருஷ்ணம்மாவும் பட்டதாரி உடையில் இருந்த அப்புகைப்படத்தைப் பார்த்ததி லிருந்து, எப்படியும் பட்ட வகுப்பில் சேர வேண்டும் என்ற எண்ணத்தில் உறுதியாக இருந்தார் (தி. முத்துக்கண்ணப்பர்: 2002: 21).

மகளின் ஆர்வத்தைப் புரிந்துகொண்ட இவர் தந்தையார், தமது குடும்பம் வறுமையுற்றிருந்தாலும் அவரைக் கல்லூரியில் சேர்த்துவிட முடிவு செய்தார். அதற்காக, புதுக்கோட்டை மன்னரின் உதவியை நாடினார். மன்னர் பண உதவி செய்ய தாம் பணியாற்றிய புதுக்கோட்டைக் கல்லூரியிலேயே மகளைச் சேர்த்தார். ஆண்களோடு தனியொரு பெண்ணாக இருந்து கல்லூரிப் படிப்பைத் தொடர்ந்த முத்துலட்சுமி நன்றாகப் படித்து

நல்ல முறையில் தேர்ச்சி பெற்றார் (நாகை விஜயபாரதி: 2005: 40) இவருடன் கல்லூரியில் ஒருசாலை மாணவர்களாக இருந்தவர்களில் இந்திய சுதந்திரப் போராட்டத் தலைவர்களில் குறிப்பிடத்தக்கவரான சத்தியமூர்த்தி, துணை நீதிபதி இராச கோபாலன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

கல்லூரிப் படிப்பை வெற்றிகரமாக முடித்த முத்துலட்சுமி தாம் மருத்துவராக வேண்டுமென்ற தமது விருப்பத்தைத் தந்தையாரிடம் தெரிவித்தார். பின்னர்த் தந்தையாரின் மாணவரான சீனிவாசராவ் என்பவரின் உதவியோடு 1907இல் சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார். கருமமே கண்ணாயிருந்த இவர் தமது கல்வியாற்றலாலும் கடுமையான உழைப்பாலும் அனைத்துத் தேர்வுகளிலும் சிறந்த முறையில் தேர்ச்சி பெற்று 1912இல் மருத்துவரானார் (தி. முத்துக் கண்ணப்பர்: 2002: 23).

நல்லறம் கண்ட இல்லறம்

அம்மையார் ஆரம்பக் கல்வி படித்து வந்த காலத்திலேயே அதாவது அவரது பத்தாவது வயதிலேயே திருமணம் செய்துவிக்க அவரது தாயார் சந்திரம்மாள் முடிவு செய்தார். ஆனால் தந்தையாரின் முயற்சியால் மட்டுமே அவர் கல்வியைத் தடையின்றித் தொடர முடிந்தது. அதே சமயத்தில் முத்துலட்சுமி திருமணத்தில் சிறிதும் நாட்டமில்லாதவராகவும் இருந்தார். காரணம் அக்காலத்தில் இருந்துவந்த இளமைத் திருமணம், வயோதிகத் திருமணம் ஆகிய சமூகக் கொடுமைகளாலும் திருமண வாழ்க்கையில் பெண்களுக்கு எதிரான அவல நிலைகளாலும் மனம் வெகுண்டிருந்தார்.

இவைபோன்ற காரணங்களால் திருமண வாழ்க்கையை வெறுத்திருந்த முத்துலட்சுமியின் நோக்கம் வெகுநாட்கள் நீடிக்கவில்லை. அவரின் மருத்துவப் படிப்பிற்குப் பின்னர் அவருக்கு வயது 26 ஆனதை நினைத்து, இதுவரையில் அம்மையாரின் அனைத்துச் செயல்பாடுகளுக்கும் ஆதரவாக இருந்த தந்தை நாராயண சாமியும் அவர் திருமணம் குறித்துக் கவலைப்பட ஆரம்பித்தார்.

இத்தருணத்தில்தான் 1913இல் இலண்டனுக்குச் சென்று மருத்துவக் கல்வி பயின்று எஃப்.ஆர்.சி.எஸ். (F.R.C.S. - Fellow of Royal College of Surgeons) என்னும் உயர்பட்டம் பெற்ற முதல் இந்தியரான சுந்தரரெட்டி, விசாகப்பட்டினத்திலுள்ள 'கிங் ஜார்ஜ்'

(King George) மருத்துவமனையில் மருத்துவராகப் பணியாற்றி வந்தார். முத்துலட்சுமியின் பெருமைகளை அறிந்திருந்த இவர் அவரை மணந்து கொள்ள விருப்பம் தெரிவித்தார். இதற்கு முதலில் சம்மதிக்காத முத்துலட்சுமி, பின்னர்த் தந்தையாரின் வற்புறுத்தலுக்கு இணங்கிச் சில நிபந்தனைகளுடன் சம்மதித்தார். பின்னர் 1914இல் இவர்களின் திருமணம் இனிதே நடந்தது. திருமணத்திற்குப் பின்னர்க் கணவரான சுந்தரரெட்டி, மனைவி முத்துலட்சுமியின் விருப்பங்களுக்கும் இலட்சியங்களுக்கும் மரியாதை கொடுத்து அவரின் அனைத்துச் செயல்பாடுகளுக்கும் உதவியாக இருந்து இல்லறத்தை நல்லறமாக்கினார்.

மாசற்ற மக்கட்பேறு

இல்லறத்தில் நல்ல மனைவியாகவும் சமுதாயத்தில் ஒரு நல்ல மருத்துவராகவும் செயல்பட்டு வந்த முத்துலட்சுமி, தமது இல்லறத்தின் நற்பயனாய் 1914இல் முதல் மகனையும் 1919இல் இரண்டாவது மகனையும் பெற்றெடுத்தார். இவருக்கு இவ்விரு பிரசவத்தையும் எளிதாக்கியவர், அக்காலத்தில் மருத்துவத் துறையில் பெயர்பெற்று விளங்கிய டாக்டர் ஏ.எல். முதலியார் ஆவார் (எல். ராஜேந்திரன்: 1980: 52).

> மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றதன்
> நன்கலம் நன்மக்கட் பேறு (குறள்: 60)

என்னும் திருக்குறளுக்கு ஏற்ப, இவ்விரு மக்களும் அம்மையாரின் பேர் சொல்லும் நன்மக்களாக விளங்கினர். மூத்த மகன் இராம் மோகன் நன்கு படித்து டெல்லியில் திட்டக்குழு இயக்குநராகப் பணியாற்றினார். இளைய மகன் கிருஷ்ணமூர்த்தி மருத்துவம் படித்து, நல்ல மருத்துவராகித் தமது தாயாரின் சமூக நலத் தொண்டுகளுக்கு உதவியாக விளங்கினார்.

முத்துவின் முத்தான சாதனைகள்

பெண்ணினத்தின் 'விடிவெள்ளி' என்று ஆண் வர்க்கமே பாராட்டும்படி வாழ்ந்த முத்துலட்சுமி, தமது பள்ளிக் காலங்களிலிருந்தே கிரீடத்தில் பதித்த முத்துக்கள் போன்ற பல முத்தான சாதனைகளைப் படைத்துள்ளார். இவர் நிகழ்த்திய சாதனைகளால் பெண்ணினம் விழித்தது - தலை நிமிர்ந்தது என்றால் மிகையாகாது. அவ்வாறு அவர் படைத்த சாதனைகளைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

பள்ளிக் கல்வியில் சாதனை

பெண்கள் வீட்டைவிட்டு வெளியே அனுப்பாத அக்காலக் கலாச்சாரத்தில் முதன்முதலாக உயர்நிலைப் பள்ளியில் சேர்க்கப் பட்ட முதல் பெண்மணி முத்துலட்சுமி. அக்காலத்தில், வயது வந்த பெண்கள் வெளியே செல்ல வேண்டுமென்றால் திரைகளால் மூடப்பட்ட கூண்டு வண்டியில்தான் செல்ல வேண்டும். இக் கலாச்சாரத்தை உடைத்தெறிந்த இவர், ஒவ்வொரு வகுப்பிலும் நன்றாகப் படித்துத் தேர்ச்சி பெற்று மெட்ரிக்குலேசன் தேர்வு வரை வந்தார். அப்போது வகுப்பில் ஒரே பெண்ணாக இருந்தும் பல இன்னல்களுக்கிடையே கடுமையாக உழைத்தார். அந்த ஆண்டு, மாநிலத்தில் மெட்ரிக்குலேசன் தேர்வை மொத்தம் நூறு மாணவர்கள் எழுதினார்கள். தேர்வில் வெற்றி பெற்றவர்கள் பத்து மாணவர்கள் மட்டுமே. அந்தப் பத்துப் பேர்களில் முதலிடம் பிடித்த ஒரே மாணவி - முதல் மாணவி என்று முத்திரையைப் பதித்தார். இது இவர் படைத்த முதல் சாதனையாகும்.

மருத்துவக் கல்லூரியில் சாதனை

"தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும்" என்பது முன்னோர்கள் அனுபவ மொழி. புதுக்கோட்டை அரசர் கல்லூரியில் முத்துலட்சுமி படித்துக்கொண்டிருக்கும்போது, கண்களில் ஏற்பட்ட பார்வைக் கோளாறு காரணமாகக் கண்ணாடி அணிய நேர்ந்தது. மேலும், அவர் உடல்நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டதால், மருத்துவரின் ஆலோசனைப்படி, ஓராண்டு படிப்பைத் தொடரமுடியாத நிலையும் ஏற்பட்டது. அடுத்ததாக, தன்னுடைய தாயார் கடுமையான காய்ச்சலில் பாதிக்கப்பட்டுப் படுக்கையில் கிடந்தபோது, அச்சமயம் ஒரு நல்ல மருத்துவ ஆலோசனை கூட இல்லாமல் தன் தாயார் தவித்ததை அவரால் மறக்கவே முடியவில்லை.

இவைபோன்ற காரணங்களால் எதிர்காலத்தில் தாம் ஒரு மருத்துவராக ஆகவேண்டுமென்ற உறுதிப்பாட்டிற்கு முத்துலட்சுமி வந்தார். தமது உறுதிப்பாட்டை நிறைவேற்றும் முகத்தான் சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார். பல ஆண்களுக்கு மத்தியில் படித்த ஒரே பெண் என்ற நிலையிலும் மருத்துவத்தை நல்ல முறையில் படித்தார். ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் பரிசுகளும் பதக்கங்களும் பெற்றார்; குறிப்பாகக் கல்வி இறுதியில் அறுவைச் சிகிச்சை செய்முறைத் தேர்வில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்களை எடுத்துச் சாதனை படைத்தார். அந்த வகையில்

மருத்துவப் பட்டம் பெற்ற முதல் "இந்தியப் பெண்" – "தமிழ்ப் பெண்" என்ற பெருமைக்குரியவர் ஆனார்.

மருத்துவத் துறையில் சாதனை :

முத்துலட்சுமி மருத்துவரானதும் இந்தியாவில் பல மருத்துவமனைகளிலிருந்தும் பணியேற்க வருமாறு அழைப்புக் கடிதங்கள் வந்தன. அவற்றையெல்லாம் விரும்பாத இவர், சென்னை எழும்பூரிலுள்ள குழந்தைகள் மருத்துவமனையில் பிரசவப் பிரிவில் முதல் பெண் மருத்துவராகச் சேர்ந்து தமது பணியைத் துவக்கினார். திருமணத்திற்குப் பின்னர்த் தமது ஊரான புதுக்கோட்டைக்குச் சென்று அங்கே மருத்துவப் பணியில் ஈடுபட்டார். அதன்பிறகு 1914இல் சென்னைக்குத் திரும்பியவர், சொந்தமாக ஒரு மருத்துவ மையத்தைத் துவக்கி, குறைந்த செலவில் ஏழை, எளியோர் உட்படப் பலதரப்பட்ட மக்களுக்கும் வைத்தியம் பார்த்துப் பலராலும் பாராட்டப்பட்டார்.

பொதுவாக, மருத்துவம் தொழிலாகக் கருதப்பட்ட அக்காலத்தில் அது ஒரு சேவை என்றுணர்ந்த முத்துலட்சுமி தாய்சேய் நலனில் அக்கறை செலுத்தினார். பிரசவத்தின் போதும் அதற்குப் பின்னரும் தன்னையும் குழந்தையையும் காப்பாற்றிக் கொள்ள வழிதெரியாமல் துன்புற்ற தாய்மார்களுக்கு நல்ல ஆலோசனைகளை வழங்கினார். இந்தச் சூழலில்தான் குழந்தைகள் - பெண்கள் மருத்துவ ஆராய்ச்சி மேல் படிப்பிற்காக இங்கிலாந்து செல்வதற்கு அம்மையாரைத் தேர்வு செய்தது இந்திய அரசு. அதற்காக, 1925இல் தமது குடும்பத்தாருடன் இங்கிலாந்திற்குப் பயணமானார். அங்கே இலண்டன் மாநகரில் 'செல்சியா' மருத்துவமனையில் தாய் சேய் மருத்துவப் பயிற்சியைப் பெற்றுத் தாயகம் திரும்பினார்.

மாதர் சங்கத்தில் சாதனை

ஒரு மருத்துவராகப் பலராலும் அறியப்பட்ட முத்துலட்சுமி தம்முடைய பணியை அதோடு நிறுத்திவிடாமல், இந்திய மாதர் சங்கத்தில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு பல சமுதாயத் தொண்டுகளில் ஈடுபடலானார். இதற்கு உந்துதலாக அமைந்தது 1926இல் பாரிசில் நாற்பது நாடுகளிலிருந்து வந்த பெண்கள் பங்கேற்ற "அகில உலகப் பெண்கள் மாநாட்டில்" இவர் கலந்துகொண்டதுதான். ஆம், இந்தியா சார்பில் அம் மாநாட்டில் கலந்துகொண்ட ஒரே இந்தியப் பெண் முத்துலட்சுமி ஆவார். அப்போது மருத்துவ மேல்படிப்பிற்காக இலண்டன்

சென்றிருந்த இவரை, இந்தியாவின் பிரதிநிதியாக அம்மாநாட்டில் கலந்துகொள்ளும்படி இந்திய அரசு கோரியது. அக்கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அம்மையார் அதில் கலந்துகொண்டது மட்டுமின்றி, பெண்கள் பிரச்சினைகள் குறித்து ஒரு அழகான சொற்பொழிவையும் நிகழ்த்தினார்.

மாநாட்டிற்குப் பின்னர் தமது மேல்படிப்பையும் முடித்துக் கொண்டு தாயகம் திரும்பிய இவர், மாதர் சங்க செயல்பாடுகளில் முனைப்போடு செயல்படத் தொடங்கினார். இதன்மூலம் அன்னிபெசன்ட், மார்கரெட் சசின்ஸ், சரோஜினி நாயுடு ஆகியோருடன் பழகும் வாய்ப்பும் இவருக்கு அமைந்தது. பின்னர் 1933ஆம் ஆண்டிலிருந்து 1945ஆம் ஆண்டு வரையிலும், 1949ஆம் ஆண்டிலிருந்து 1967ஆம் ஆண்டு வரையிலும் இரண்டு முறை இந்திய மாதர் சங்கத்தின் தலைவியாகச் செயலாற்றி யுள்ளார் (வசுமதி ராமசுவாமி: 1987: 42). இத்தருணத்தில் இந்திய மாதர் சங்கத்தின் சார்பாக இலங்கை, அமெரிக்கா, மற்றும் இந்தியா முழுவதும் நடந்த மாநாடுகளில் கலந்துகொண்டு பல சொற்பொழிவுகளை நிகழ்த்தி, பெண்ணினத்தை விழிப்புறச் செய்தார். இவர் தலைமைப் பொறுப்பை ஏற்ற பின்னர்தான் இந்தியா முழுவதும் பல கிளைச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன.

சட்ட மன்றத்தில் சாதனைகள்

1926ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள், தேர்தலில் மகளிரும் போட்டியிடலாம் என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டது. இத் தருணத்தில், சென்னையில் இயங்கி வந்த இந்திய மாதர் சங்கம், முத்துலட்சுமியைச் சட்டமன்ற மேலவை உறுப்பினராக நியமிக்கும்படி ஆளுநரைக் கேட்டுக்கொண்டது. இதனை ஏற்றுக் கொண்ட அப்போதைய ஆளுநர் அவ்வாறே அம்மையாரைச் சட்டமன்ற மேலவை உறுப்பினராக நியமனம் செய்தார். இதன் மூலம் **"சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியப் பெண்மணி"** என்ற சாதனைப் பெண்ணாக முத்துலட்சுமி விளங்கினார். இதற்குப் பின்னர் இவர் எவ்விதப் போட்டியுமின்றி அதன் உதவித் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

தேவதாசி ஒழிப்புச் சட்டம்

சட்டமன்றப் பதவிகளைச் சுயலாபத்திற்காகவோ அல்லது சுகபோக வாழ்விற்காகவோ ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக, அப்பதவிகளைப் பொறுப்பாகவே நினைத்த முத்துலட்சுமி, அவற்றைப் பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் பெண்களுக்கு

எதிரான அநீதிகளைக் களைவதற்காகவும் பயன்படுத்தினார். அதன் விளைவுதான் இவர் கொண்டு வந்த 'தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம்'!

அதுகாறும் கோயில்களில் இருந்து வந்த தேவதாசி முறை ஒழிப்பிற்கும், பெண்களுக்குப் பொட்டுக் கட்டும் முறை ஒழிப்பிற்கும் அயராது பாடுபட்டார். இச்சட்டத்தைச் சட்ட மன்றத்தில் அம்மையார் அறிமுகப்படுத்தியபோது அனைத்து உறுப்பினர்களும் இதனை எதிர்த்தார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. அப்படித்தான் ஒருநாள் சட்டமன்றத்தில் இது குறித்த விவாதம் கடுமையாக நடந்துகொண்டிருந்தபோது, இவ் விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய நாவலர் சத்தியமூர்த்தி, "அது காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வருகின்ற பெருமைமிக்க பணி, அது தேவனுக்குச் செய்கின்ற தொண்டு, எனவே அவ்வழக்கம் தொடர்ந்து நீடிக்க வேண்டும்" என்று வன்மையாக ஆதரித்துப் பேசினார். அவர் வாதத்தைக் குறுக்கிட்ட அம்மையார் "அப்படியானால் அப்பணிக்கு உம்முடைய சகோதரியையும் மகளையும் பொட்டுக்கட்டித் தேவதாசியாக ஆக்க சம்மதிப்பீரோ?" என்று கடுமையாகக் கேட்டுவிட்டார் (ம.பொசிவஞானம்: 1980: முன்னுரை) அதன்பின்னர், சத்தியமூர்த்தி வாயடைத்துப் போனார். சட்டமும் நிறைவேறியது.

பெண்களுக்குச் சொத்துரிமைச் சட்டம்

சட்டமன்றத்தில் முத்துலட்சுமியால் கொண்டு வரப்பட்ட சட்டங்களில் 'பெண்ணுக்குச் சொத்துரிமை வழங்கு சட்டம்" மிக முக்கியமானதாகும். சீதனம் கொடுப்பதால் ஒரு பெண், தான் பிறந்த குடும்பத்தின் சொத்துக்கு உரிமையற்றவள் என்பதை வன்மையாகக் கண்டித்தார். மாறாக, ஒரு பெண் திருமணம் ஆன பின்பும் தான் பிறந்த குடும்பச் சொத்தில் சரி பங்கு பெற உரிமையுடையவள்; அதேபோன்று வாழச்சென்ற இடத்தில் தற்செயலாகக் கணவன் இறந்தபோது கணவனுக்குச் சேர வேண்டிய அனைத்துச் சொத்திற்கும் முழு உரிமையுடையவள் என்பதற்கெல்லாம் இச்சட்டம் வழிவகை செய்கின்றது.

சிறுவர் திருமணத் தடைச்சட்டம்

சிறுவர்களுக்கு இளம் வயதிலேயே திருமணம் செய்து வைப்பதும் திருமணத்தைப் பற்றி அறியாத வயதிலேயே கணவனை இழந்து சிறுமிகள் கைம்பெண் கொடுமைகளுக்கு உள்ளாவதும் முத்துலட்சுமியின் மனதைப் பெரிதும் பாதித்தன.

இதன் விளைவுதான் இவர் கொண்டு வந்த 'சிறுவர் திருமணத் தடைச்சட்டம்'. பெண்களுக்குப் பதினான்கு வயதிற்கு மேல்தான் திருமணம் செய்து வைக்கவேண்டும்; பெண்கள் திருமணத்தைப் பற்றி அறியும் வயதில்தான் திருமணம் பேசப்பட வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளுக்கு இச்சட்டம் வழிசெய்கின்றது.

பலதாரத் திருமணத் தடைச்சட்டம்

ஓர் ஆண் தன் மனைவிக்குக் குழந்தை இல்லையென்ற ஒரே காரணத்தினால் மறுமணம் செய்துகொள்வது மிகவும் கண்டிக்கத்தக்கது. மேலும் அவளை மிரட்டுவது; அவள் விருப்பத்திற்கு மாறாக அவளிடம் கையொப்பம் வாங்குவது ஆகியவை பெண்களுக்கு எதிரான அநீதி என வாதாடினார். மனைவி பைத்தியமான தொழுநோயாளியாக, பெருநோயாளியாக இருந்தால் மட்டுமே ஒரு கணவன் அவள் சம்மதத்துடன் மறுமணம் செய்துகொள்ளலாமே தவிர, குழந்தை இல்லை என்பதற்காக அல்லது காம இச்சைக்காக ஓர் ஆண் மறுமணம் செய்துகொள்வது குற்றமாகும் என்பதை இச்சட்டம் வலியுறுத்தியது.

முத்துவின் இருபெரும் சாதனைகள்

சட்டமன்றத்தில் மக்களின் பேராதரவுடன் பல சட்டங்களைக் கொண்டுவந்து சாதனை படைத்த முத்துலட்சுமி, தமது சொந்த முயற்சியால் சென்னையில் பின்வரும் தொண்டு நிறுவனங்களை அமைத்து மக்களின் சமூக நலனிலும் சமுதாயச் சேவையிலும் சாதனை படைத்திருப்பது அம்மையாரின அரும்பெரும் சாதனைகளாகும்.

1) அவ்வை இல்லம்

பெதுவாக, முத்துலட்சுமி குழந்தைகள் மீது அதிகம் அன்பு கொண்டிருந்தார் என்பதற்கு அவர் வாழ்க்கையிலிருந்து பல சான்றுகளைக் காட்டலாம். குறிப்பாக, அவர் மருத்துவக் கல்வியை முடித்து மருத்துவரானதும் தாம் பணியாற்ற தேர்வு செய்தது சென்னை எழும்பூர் மகப்பேறு மருத்துவமனையைத் தான். அவர் மேற்படிப்பிற்காக இங்கிலாந்திற்குப் பயணம் மேற்கொண்டதும் அங்கே தாய் சேய் நோய்களை ஆய்வு செய்வதற்காகத்தான். அதே போன்று ஆதரவற்ற பெண்களுக்காக இரங்குவது மட்டுமின்றி, அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதில் அம்மையார் முனைப்போடு செயல்பட்டு வந்தார். இப்படி, தனித் தனியாகத் தொண்டுகள் பல செய்து வருகையில், அவர்களுக் கென்று ஒரு நிரந்தர மையம் அமைக்க வேண்டுமென்ற எண்ணம்

அம்மையாரின் மனதில் நீண்ட நாட்களாகவே இருந்து வந்தது. அதன் விளைவாக உருவானதுதான் 'அவ்வை இல்லம்'.

1930இல் சென்னை மயிலாப்பூரில் ஒரு வாடகைக் கட்டிடத்தில் இத்தொண்டு மையம் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் அது 1935இல் சென்னை அடையாறு பெசன்ட் அவென்யூவில் சொந்த இடத்திற்கு மாற்றப்பட்டது. இத்தொண்டு நிறுவனத்திற்கு 'அவ்வை இல்லம்' என்று பெயர் சூட்டியதற்குக் காரணம் சங்க காலப் புலவர் அவ்வையார் மீது முத்துலட்சுமி கொண்டிருந்த நாட்டம்தான்.

இந்த இல்லம் கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், கணவனை இழந்தவர்கள், திக்கற்ற பெண்கள், திக்கற்ற சிறுவர்கள் ஆகியோருக்கு ஆதரவளித்து வருகின்றது. அவர்களுக்கு உணவும் உறையுளும் அளித்து, அவர்களைத் "தாங்கள் ஆதரவற்றோர் அல்லர்" என்ற நிலைக்கு மாற்றிச் சொந்த வீட்டில் ஒன்றாக, ஒரு குடும்பமாக வாழும் உணர்வை அளித்து வருகின்றது. அந்த வகையில் இங்கே தங்கியிருந்த எத்தனையோ ஆதரவற்ற பெண்களுக்கு மறுவாழ்வு கிடைத்திருக்கின்றது. எத்தனையோ அநாதைக் குழந்தைகள் இங்கேயே தங்கி, கல்வி கற்று, வளர்ந்து பின்னாளில் பல்வேறு துறைகளில் பணியாற்றி வருகின்றனர்.

இந்த இல்லம் முந்நாளில், ஆதரவற்ற குழந்தைகள் இல்லம், முதியோர் இல்லம், கல்விக் கூடம், குழந்தை வளர்ப்பு, தொழிற்பயிற்சிக் கூடம், கிராம மருத்துவச் சேவை என்ற பன்முக அமைப்பில் செயல்பட்டு வந்தது. ஆனால் இந்நாளில், ஆதரவற்ற பெண்கள் மற்றும் குழந்தைகள் இல்லம், பெண்கள் ஆரம்பப் பள்ளி, பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி என்ற அளவில் மட்டுமே செயல்பட்டு வருகின்றது. முத்துலட்சுமியின் இளைய மருமகள் மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி இந்த இல்லத்தின் கண்காணிப்பாளராக நீண்ட காலம் செயல்பட்டு வந்தார். ஆனால் அண்மையில் அவர் காலமானதால் தற்போது செல்வி சுசீலா என்பவரின் கண்காணிப்பில் இது செயல்பட்டு வருகின்றது.

2) புற்றுநோய் மருத்துவமனை

முத்துலட்சுமியின் தங்கை சுந்தரம்மாள் இளம் வயதிலேயே கடுமையான வயிற்று வலியால் அவதிப்பட்டு வந்தார். கை தேர்ந்த பல மருத்துவர்கள் பரிசோதித்த பின்னரும் அவ்வலி அவருக்குத் தீர்ந்த பாடில்லை. இதற்கிடையில் அவருக்குத் திருமணம் செய்வித்தால்

சரியாகிவிடும் என்று ஒரு சிலர் ஆலோசனை வழங்கத் திருமணமும் செய்து வைக்கப்பட்டது. அப்போதும் அந்த வயிற்றுவலி தீராததால், அவரைப் பல மேனாட்டு மருத்துவர்கள் சோதித்தார்கள். அவர்கள் சோதனையில் அவருக்குப் புற்றுநோய் இருப்பது தெரியவந்தது. அதன்பின்னர்ப் பல இடங்களுக்குச் சென்று வைத்தியம் பார்த்தும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை. அவர் இறந்தே போனார்.

புற்றுநோயின் கொடுமையைத் தன் சகோதரி மூலமாக, கண்ணெதிரிலேயே கண்ட அக்காட்சி அம்மையாரின் மனதைப் பெரிதும் பாதித்தது. தன்னுடைய சகோதரியின் அகால மரணத்திற்குக் காரணம், நம் நாட்டில் அந்நோய்க்கான போதிய மருத்துவ வசதி இல்லாததுதான் என்பதை உணர்ந்தார். தன் சகோதரிக்கு ஏற்பட்ட இச்சோக முடிவு இனியும் நம் நாட்டில் தொடரக் கூடாது என முடிவெடுத்தார். அதற்காக, சென்னையிலேயே ஒரு புற்றுநோய் மருத்துவமனையை நிறுவ வேண்டும் என்றும் உறுதிபூண்டார். அதன் விளைவாக உருவானதுதான் இந்தப் புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம்.

1951 ஏப்ரல் மாதம் 8ஆம் நாளன்று இராஜேந்திர பிரசாத் அவர்களால் முதல் 'உலகப் புற்று நோய் தினம்' தொடங்கப் பட்டது. இதன் தொடர்ச்சியாக 1952, அக்டோபர் மாதத்தில் அடையாற்றில் அப்போதைய பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்களால் மருத்துவமனைக்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. இந்திய அரசு வழங்கிய ஒரு லட்ச ரூபாய், சுகாதாரத் துறை வழங்கிய இரண்டு இலட்ச ரூபாய் மற்றும் இந்திய மாதர் சங்கத்தார் திரட்டிய நிதி ஆகியவற்றின் நிதியுதவியால் 1954, ஜூன் மாதம் 18ஆம் நாளன்று இம்மருத்துவ மனை தொடங்கி வைக்கப்பட்டது.

தென்னிந்தியாவிலேயே முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட இந்த மருத்துவமனை பின்னாளில் வளர்ந்து புற்றுநோய் ஆய்வு மையம், புற்றுநோய்த் தடுப்பகம், டாக்டர் முத்துலட்சுமி புற்றுநோய் அறிவியல் துறைக் கல்லூரி ஆகிய பன்முகச் செயல்பாட்டுடன் மக்களுக்குச் சேவையாற்றி வருகின்றது.

பல வெளிநாடுகளுக்குச் சென்று மருத்துவப் பயிற்சி பெற்ற முத்துலட்சுமியின் இளைய புதல்வர் டாக்டர் கிருஷ்ண மூர்த்தி இந்தப் புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பேற்றுப் பலகாலம் நிர்வகித்து வந்தார். தற்போது அவர் ஓய்வு பெற்றதால் டாக்டர் சாந்தா என்பவர் நிர்வாகத்தில்

இந் நிறுவனம் செயல்பட்டு வருகின்றது. நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட மக்கள் இங்கே தங்கிச் சிகிச்சை பெற்று திரும்புகின்றனர். அறிஞர் அண்ணா இம் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்றார் என்பதும் அவரின் கடைசி மூச்சு நின்றதும் இம்மருத்துவமனையில் தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முத்துலட்சுமியும் இந்தியத் தலைவர்களும்

முத்துலட்சுமி தமது செயற்கரிய தொண்டுகளை நிறைவேற்றும் முகத்தான் நமது தேசத்தந்தை மகாத்மா காந்தி முதல் பல இந்திய மற்றும் தமிழகத் தலைவர்களுடன் நெருங்கிப் பழகியவர். இவர் சட்டசபைத் துணைத் தலைவராக இருந்தபோது 1927 செப்டம்பர் மாதத்தில் மகாத்மா காந்தியை முதன்முதல் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அச்சமயம் நடந்த கூட்டத்தில் மகாத்மா காந்தி அம்மையாரின் தொண்டுகளை வாழ்த்திப் பேசினார். அடுத்ததாக திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பள்ளியில் நடந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள வந்தபோது காந்தியடிகளை இவர் இரண்டாவது முறையாகச் சந்தித்தார். அப்போது தாம் சட்டமன்றத்தில் கொண்டு வரப்போகின்ற தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம், சிறுவர் திருமணத் தடைச் சட்டம் ஆகியவை குறித்துக் காந்தியடிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

பெண்களின் பொதுவான முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் தீய வழக்கங்களிலிருந்தும் மரபுகளிலிருந்தும் அவர்களை விடுவிக்க வேண்டும் என்ற தமது எண்ணத்தை உருக்கமாகக் காந்தியடிகளுக்குக் கடிதம் வரைந்தார். அதற்குக் காந்தியடிகள் உடனே பதில் கடிதம் எழுதி அனுப்பியது. இவர் தொண்டுகளின் மீது காந்தியடிகள் கொண்டிருந்த மதிப்பையே காட்டுகின்றது (சிவரஞ்சன்: 2004: 14).

1930இல் காந்தியடிகள் உப்புச் சத்தியாக்கிரகம் நடத்திய போது அப்போதைய ஆங்கில அரசு அவரைக் கைது செய்தது. அதனைக் கண்டித்து, அதற்கு மறுப்பு தெரிவிக்கும் விதத்தில் இவர் தமது துணைத்தலைவர் பதவியை இராஜினாமா செய்தது குறிப்பிடத்தக்கது. இப்படி, தமது பொதுச் சேவைகளால் காந்தியடிகளின் மனதில் தனியிடம் பிடித்தவர் முத்துலட்சுமி என்றால் மிகையாகாது.

முத்துலட்சுமி தேவதாசி முறை ஒழிப்புப் போராட்டத்தை நடத்தியபோது அப்போராட்டத்திற்கு நீதிக்கட்சித் தலைவர்கள் பனகல் அரசர், எம். கிருஷ்ணன் நாயர், ஈ.வெ.ரா., இராமாமிர்தம் அம்மையார், சி. நடேச முதலியார் ஆகியோர் ஆதரவு தெரிவித்த தோடு, அது சட்டமாக வந்தபோது பாராட்டும் தெரிவித்தார்கள். இத்தருணங்களில் இவர்களுடன் பழகும் வாய்ப்பும் முத்துலட்சுமிக்கு அமைந்தது.

முத்துலட்சுமி எழுதிய நூல்கள்

கல்வி, குடும்பம், அரசியல், பொதுத்தொண்டு என்று எப்போதும் பரபரப்புடன் விளங்கும் முத்துலட்சுமி, எழுத்துப் பணியிலும் சாதனை படைத்துள்ளார். இவர் தமது வாழ்க்கை அனுபவங்களைத் தொகுத்து 'சுயசரிதை' (Autobiography) என்றொரு அழகான நூலை எழுதி 1964இல் வெளியிட்டுள்ளார். இது மட்டுமின்றி, மக்களுக்கு, பெண்களுக்கு விழிப்புணர்ச்சியைத் தூண்டும் விதத்தில் பின்வரும் பதினொரு நூல்களை எழுதி யுள்ளார். இவையனைத்தும் ஆங்கிலத்தில் எழுதியிருப்பது அவரின் ஆங்கிலப் புலமைக்கு எடுத்துக்காட்டாகும்.

1. கர்ப்பிணிப் பெண்ணின் கவனம் (Care of Pregnant Woman)
2. கைக் குழந்தைகளின் உறவுமுறை (Infant feeding)
3. இந்தியாவில் சிசு மரணம் (Infant mortality in India)
4. சென்னையில் மாதர் சேவை (Women's work in Madras)
5. என் சட்டமன்ற அனுபவகள் (My experience as a Legislator)
6. இந்தியாவில் திருமதி மார்கரட் கசின் அம்மையாரின் பணிகள் (Mrs. Margaret Cousines work in India)
7. இந்தியப் பெண்களின் வாக்குரிமை (Indian Women's Franchise)
8. குழந்தைப் பாதுகாப்பு (Care of Children)
9. சிறுவர் திருமணத்தின் கேடுகள் (Evils of Child Marriage)

10. எதற்காகக் கோயில்களில், தேவதாசி முறையை ஒழிக்க வேண்டும்? (Why should Devadasi Institution in Hindu Temples be Abolished?)

11. புற்றுநோயும் அதைத் தடுக்கும் முறையும் (Cancer and its prevention)

அரசு வழங்கிய சிறப்புகள்

முத்துலட்சுமி தமது வாழ்நாள் முழுவதையும் சமூகச் சீர்திருத்தம், பெண்கள் முன்னேற்றம், ஆதரவற்றோர் மறுவாழ்வு போன்ற சமூகத் தொண்டுகளில் செலவழித்தவர். இவர் சேவைகளைப் பாராட்டிய இந்திய அரசு இவருக்குப் 'பத்மபூஷன்' என்னும் உயரிய விருதை வழங்கிச் சிறப்பித்தது. தமிழக அரசு சென்னை அடையாறில் இவர் பெயரில் ஒரு பூங்கா அமைத்துச் சென்னை மாநகராட்சியின் மூலம் பராமரித்து வருகின்றது. சென்னை அடையாற்றிலிருந்து திருவான்மியூர் செல்லும் சாலைக்கு 'டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி சாலை' என்று தமிழக அரசு இவர் பெயரைச் சூட்டிச் சிறப்பித்துள்ளது.

சாதனையாளரின் மறைவு

இந்தியாவின் முதல் பெண் மருத்துவர்; மேல் படிப்பிற்காக அரசின் உதவியைப் பெற்று மேல்நாடு சென்ற முதல் பெண்; பாரிசில் நடந்த உலக மகளிர் மாநாட்டில் கலந்துகொண்ட முதல் இந்தியப் பெண்; சட்டமன்ற உறுப்பினராகவும், அதன் துணைத் தலைவராகவும் பணியாற்றிய முதல் பெண்; அகில இந்திய மாதர் சங்கத்தின் முதல் தலைவி; சட்ட மன்றத்தில் பெண்களுக்கு எதிரான கொடுமைகளுக்குத் தடைச் சட்டங்கள் கொண்டு வந்து நிறைவேற்றிய முதல் பெண்; ஆதரவற்ற பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான தொண்டு நிறுவனங்கள் அமைத்த முதல் பெண்; தென்னிந்தியாவிலேயே புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனத்தை அமைத்த முதல் பெண் என்று மேற்கண்ட எல்லா நிலைகளிலும் முதன்மை வகித்த சாதனைப் பெண், பத்மபூஷன் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் அயராத உழைப்பிற்கு இயற்கை ஓய்வு கொடுத்த நாள்தான் 22-07-1968.

பெண்குலத்தில் பிறந்து, எண்பத்திரண்டு ஆண்டுகள் வரை வாழ்ந்து, பெண்ணினத்திற்குப் பெருமை சேர்த்த இவர், இவரின் பெயருக்கு ஏற்றாற்போல பெண்கள் மட்டுமல்லாமல் எல்லோர் மனங்களிலும் முத்தாய்த் திகழ்கின்றார் என்றால் மிகையாகாது.

துணை நூல்கள்

1. சிவரஞ்சன் (வ. இளங்கோ), சாதனைப் பெண்கள், சுரா புக்ஸ் லிமிடெட், சென்னை, 2004.
2. தி. முத்து கண்ணப்பன், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, கங்கை புத்தக நிலையம், சென்னை, 2002.
3. பி.எல்.ராஜேந்திரன், மகளிர் மனம் கவர்ந்த முத்து, பூங்கொடி பதிப்பகம், சென்னை, 1980.
4. வசுமதி ராமசுவாமி, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, ஸ்டார் பிரசுரம், சென்னை, 1987.
5. நாகை. விஜயபாரதி, உலகம் போற்றும் பெண்கள், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2005.
6. Dr. Muthulakshmi, (Mrs.). Autobiography, M.L.J. Press Private Limited, Chennai, 1964.

சமூக விடுதலையில் தமிழகப் பெண்மணிகள்

சு. தமிழ்ச்செல்வி

திருக்குறள் போன்ற நீதிநூல்களோடு சிலரின் வாழ்க்கை வரலாற்று நூல்களும் மனித இனம் மாண்போடு வாழ வழிகாட்டுகின்றன. அவ்வழியில் பல சான்றோர்கள் தம் வாழ்வை நிலைத்த புகழுடைய வாழ்வாக வாழ்ந்து காட்டியுள்ளனர். அவர்களுள் ஆடவர்க்கு இணையாக மகளிரும் எழுச்சி பெற்றுத் தம் வாழ்வைச் செம்மையான வாழ்வாக - தியாக வாழ்வாக - வாழ்ந்திருக்கிற சிறப்பு உணரத்தக்கதாகும். அவர்களின் வாழ்க்கை வரலாற்றை அறிதல் பின்வரும் தலைமுறையினர்க்கு எழுச்சியூட்டு வதாய் அமையும் எனும் எண்ணத்தில் அத்தகு பெண்மணிகள் சிலரின் வாழ்க்கை வரலாறு, தொண்டு போன்றவை இக்கட்டுரையில் எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன.

அக்காள் சுபலக்குமி (1886-1969), இ.தெ.இலக்குமி அம்மையார் (1908-1962), நீலாவதி இராமசுப்பிரமணியம் (1913-1982), வ.பா. தாமரைக் கண்ணியார் (1911-1971), பரிபூரணத்தம்மையார் (1981) ஆகிய ஐவரின் வாழ்க்கை வரலாறு, தொண்டு ஆகியவை இக்கட்டுரை வாயிலாக விளக்கப்படுகின்றன.

1. அக்காள் சுபலக்குமி

சென்னை மயிலாப்பூரில் பார்ப்பன வகுப்பில் ஆர்.வி. சுப்பிரமணியம் ஐயருக்கும், விசாலாட்சி அம்மையாருக்கும் 30-7-1886ஆம் ஆண்டு அக்காள் சுபலக்குமி மகளாகப் பிறந்தார். சுபலக்குமிக்கு இளவயதில் பதினோராம் வயதில் திருமணம் நடந்து, அதற்கடுத்த மூன்று மாதங்களிலேயே கணவனை இழந்ததால் 'கைம்பெண்' ஆனார். வாழ்வு முடிந்தது என்று மூலையில் முடங்கி விடாமல் அதற்குப்பின் கல்வி கற்று, 1908ஆம் ஆண்டு பி.ஏ. வகுப்பில் தேர்ச்சி பெற்று, அதற்காகக் 'கிரிக்கு' எனும் தங்கப் பதக்கத்தையும் பெற்றார். அயல்நாட்டுப் பெண்டிர் நம் நாட்டில் தங்கித் தொண்டு செய்வதைக் கண்ட அம்மையார், தானும் தொண்டு செய்ய விழைந்தார். அதன் விளைவாகத் தோன்றியதே 'சாரதா ஒற்றுமைக் கழகம்'. இதில் இவரே ஆசிரியராக அமர்ந்து பாடம் நடத்தினார். எனவே அவ்வமயம், அனைவரும் 'அக்காள்' என அழைத்தனர். எனவே அவர் தம் பட்டப்பெயர் 'அக்காள் சுபஇலக்குமி' ஆனது.

1912ஆம் ஆண்டில், எழும்பூரில் 'கைம்பெண் குடிலை' நிறுவினார். அதன் வாயிலாகக் கைம்பெண்களுக்குப் புது வாழ்வை அளித்தார். அதனால் அவர் 'கைம்பெண் காவலர்' எனச் சிறப்பிக்கப் பெற்றார். இது மட்டுமன்றிச் சேரிகளுக்குச் சென்று பணிபுரிந்தார். ஏழை மாணவர்க்குக் கல்வி கற்பித்தார். 30 ஆண்டுகள் பல்வேறு இடங்களில் கல்விப் பணி ஆற்றி, 1941இல் ஓய்வு பெற்றார். அனைந்திந்திய மாதர் கழகத்தின் தலைவராகப் பணியாற்றினார். நடுவணரசு 'தாமரைத்திரு' (பத்மஸ்ரீ) பட்டமளித்துப் பாராட்டியது.

2. இ.ரெ. இலக்குமி அம்மையார்

வீராங்கனை இலக்குமி அம்மையார் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்தவர். 24.4.1908ஆம் ஆண்டு பிறந்தார். 1947ஆம் ஆண்டு முதல் திராவிட இயக்கத்தில் இணைந்து குறுகிய காலத்தில் முன்னணித் தொண்டராகப் பணிபுரிந்தார்.

இ.ரெ. இலக்குமி அம்மையார் தஞ்சைத் திராவிடர் கழகச் செயற்குழு உறுப்பினராய்ப் பொறுப்பேற்று, விரைந்து செயலாற்றினார். அக்காலத்தில் இரண்டு முறை கழகப் போராட்டம் காரணமாக வேலூர் சிறை சென்றார். 1957ஆம் ஆண்டு சட்ட எரிப்புக் கிளர்ச்சியில் தன் மகன் பாண்டியனுடன் மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை பெற்றார். 1960இல் தேச எதிர்ப்புப் போரில் தன் மகன் காந்தியுடன் 1½ மாதம் சிறைவாழ்வு அடைந்தார். பழைய நம்பிக்கைகளில் ஊறிய குடும்பத்தில் பிறந்தும், தன் பின்வந்தவர்களைத் தன்மானக் கோட்பாடுகளில் பற்றுக் கொள்ள வைத்தவர். இயக்க வரலாற்றில் அம்மையாரின் பணி போற்றுவதற்குரியதாகும்.

இ.ரெ.இலக்குமி அம்மையார் சிறைக் கொடுமைகளால் நோயுற்று வருந்தி 17.12.1963 நாளில் உயிர் நீத்தார். இத்தகு வீர மரணத்திற்குத் தந்தை பெரியார் அவருக்கு வீர வணக்கம் செய்யும் முறையில் நினைவுச் சின்னமொன்றை எழுப்பியுள்ளார். அம்மையார் மறைந்தாலும், அவர்தம் தொண்டு என்றும் நிலைத்து நிற்கக் கூடியதாகும்.

3. திருமதி நீலாவதி இராமசுப்பிரமணியம்

தமிழ்நாட்டில் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பியவருள் நீலாவதி இராமசுப்பிரமணியம் ஒருவராவார். அம்மையார் திருச்சியில் 23.1.1913ஆம் ஆண்டு பிறந்தார். நீலாவதி அவர்கள் இளமையிலேயே தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளில்

பயிற்சி உடையவராய் விளங்கினார். இளமைக் காலத்திலேயே செய்தித்தாள்களுக்குக் கட்டுரைகள் எழுதி வந்தார்.

நீலாவதி அம்மையார் பெரியார் தலைமையில் திரு.இராமசுப்பிரமணியம் என்பவரைக் கலப்புத் திருமணம் செய்து கொண்டார். திருமணத்திற்குப் பிறகு எதிர்ப்பு வரவே, சிலநாள்வரை பெரியார் இல்லத்தில் பாதுகாப்பாக இருந்தனர். பின்னர்ப் பிற சமூக அமைப்புகள் சார்பாக நடைபெற்ற பாராட்டு விழாக்களில் கலந்து கொண்டனர். இத்திருமண நிகழ்ச்சி, தமிழகத்தில் பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது.

நீலாவதி அம்மையார் சிறந்த மேடைப் பேச்சாளராக விளங்கினார். சீர்திருத்தச் சொற்பொழிவுகளைத் தமிழ்நாடு முழுவதும் செய்து வந்தார். எதிர்ப்புகளைக் கண்டு அஞ்சாமல், பொதுப்பணி ஆற்றி வந்தார்.

1. சாதி ஒழிப்பு, தீண்டாமை, பெண்கள் மறுமணம், குழந்தை மணம் எதிர்ப்பு, புரோகித மறுப்பு முதலியவற்றில் ஈடுபாடு கொண்டு, கைம்மாறு கருதாது உழைத்து வந்தார். 1931ஆம் ஆண்டு முதல் 1936 வரை இப்பணி தொடர்ந்தது.

2. 1930ஆம் ஆண்டு திருச்சியில் காந்தியடிகளைச் சந்தித்து உரையாடினார். அதன் பயனாக நகை அணிவதை விடுத்துக் கதராடை உடுத்தலானார்.

3. 1938ஆம் ஆண்டு பர்மாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, தமிழகத்தின் சிறப்பை விளக்கினார். ஏராளமான தமிழர்கள் அம்மையாரை வரவேற்றுப் பாராட்டினர்.

4. 1940ஆம் ஆண்டு திருச்சியில் மாவட்டப் பெண்கள் சங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்றார். அதே ஆண்டில், தீண்டப்படாத கிறித்தவர்கள் முதல் மாநாட்டைத் தொடங்கி வைத்து அரிய ஓர் உரை நிகழ்த்தினார்.

5. 1941ஆம் ஆண்டு, சென்னையில் 'இலக்கியப் பண்ணை' என்னும் அமைப்பைத் தொடங்கித் தமிழ்மொழி வளர்ச்சிக்காகப் பணியாற்றினார். தேவகோட்டையில் நடைபெற்ற தமிழிசை மாநாட்டிற்குத் தலைமைதாங்கிச் சிறப்பித்தார்.

6. 1-12-41ஆம் நாள் முதல் இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்டார். 'வெள்ளையனே வெளியேறு' என்று முழங்கிப் போராட்டத்தில் கலந்து கொண்டார். அதன் விளைவாக நான்கு மாதச் சிறைத்தண்டனை பெற்றார்.

இவ்வாறாகத் தமிழ், சீர்திருத்தம், விடுதலை ஆகிய துறைகளில் சிறப்பாகப் பணியாற்றிய அம்மையாருக்கு 5 ஏக்கர் நிலம் அரசு அன்பளிப்பாக அளித்தது. அதை ஆதி திராவிட மக்களுக்கு அன்பளிப்பாக அளித்துவிட்டார். தாம் எழுதும் கட்டுரைகள் மூலம் கிடைக்கும் வருவாயை வாலாசாபாத்து இந்துமதப் பாடசாலை வளர்ச்சிக்கு அளித்தார். தம் வானொலிப் பேச்சின் வழிக் கிடைக்கும் தொகையை, ஏழை எளியவர்களுக்கே செலவு செய்தார். இவ்வாறு பிறர்க்கே உழைக்கும் வாழ்க்கை உடையவராக அம்மையார் வாழ்ந்தார். அவர் தொண்டுள்ளம் என்றும் போற்றத் தக்கதாகும்.

4. வ.பா. தாமரைக் கண்ணி அம்மையார்

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நடைபெற்ற பொழுது அக்கிளர்ச்சியில் பங்குபெற்ற மகளிருள் சிறுகதை எழுத்தாளர், பேச்சாளர், இசைஞானியர் என்ற பன்முகம் கொண்ட பெண்மணியாய் விளங்கியவர் வ.பா. தாமரைக்கண்ணியார் ஆவார். இவர் வேலூரில் 1911இல் பிறந்தார். தமிழ் மீது கொண்ட பற்றால் தம் பெயரைத் 'தாமரைக் கண்ணியார்' என மாற்றிக் கொண்டார். இவர் தமிழ், தெலுங்கு, ஆங்கில மொழிகளில் புலமை பெற்றிருந்தார். திரு.வி.க. நடத்திய பல தமிழ்த் திருமணங்களில் தேனினுமினிய பாடல்களைப் பாடியதால் திரு.வி.க. அவர்கள் 'இசை ஞானியார்' எனும் பட்டத்தை இவருக்கு அளித்துச் சிறப்பித்தார்.

13-11-1938ஆம் ஆண்டு, சென்னையில் நடைபெற்ற 'தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டில்' வரவேற்புக்குழுத் தலைவியாயிருந்து வீர உரையாற்றினார். இதனைத் 'தாமரைக் கண்ணியாரின் தனிப் பேரூரை' என்று தலைப்பிட்டு 'விடுதலை' இதழ் பாராட்டியது. பின்னர் வேலூர், சேலம், நிலக்கோட்டை, அருப்புக்கோட்டை, தென்காசி, திருப்பத்தூர் முதலிய ஊர்களுக்குச் சென்று கட்டாய இந்தியை எதிர்த்துச் சூறாவளிச் சொற் பொழிவாற்றினார். 1938ஆம் ஆண்டு பெண்கள் மாநாட்டில் ஆற்றிய அரிய சொற்பொழிவு அவரின் தமிழுள்ளத்தை நமக்குப் புலப்படுத்துவதாய் அமைகிறது. இதனை,

> *என் அருமை உடன் பிறப்புகளே! தமிழர் சமூகம் அடியோடு மாண்டு போகாமல் காப்பதற்காகத் தமிழர்களை, அவர்தம் பேருறக்கத்தினின்றும் சிறிது தட்டி எழுப்புவதில் நம்மாலான உதவியைச் செய்வதுதான் இம்மாநாட்டின் நோக்கமாகும்.*

தற்போதைய தமிழர்களின் சீர்கேடற்ற நிலையை ஒரே சொற்றொடரில் கூற வேண்டுமானால், தமிழர்கள் தங்களது சொந்த நாட்டில் உரிமை உணர்ச்சியுடன் தலைநிமிர்ந்து நிற்க முடியாத நிலையிலிருக்கிறார்கள். தமிழர்கள், என்றைக்குத் தாய்மொழியாகிய தமிழைப் போற்றாமல் விட்டார்களோ, அன்றே அவர்க்கு அடிமைத்தளை பூட்டப்பட்டது. தமிழ்ச்சான்றோர்களையும், அவர்கள் இயற்றுகிற நூல்களையும் தமிழர்கள் பாராட்டுவதில்லை. தங்கள் முன்னேற்றம் கருதி நடத்தப்படும் இயக்கங்களுக்கு ஆதரவளிக்காமல், தங்களுடைய அடிமை விலங்கைப் பின்னும் இறுக்குவதற்காக மாற்றார் செய்யும் வஞ்சனை, சூழ்ச்சிகளில் சிக்கி, அம்மாந்தருக்குப் பொருளுதவி செய்கிறார்கள்.

எனும் உரையால் அறியலாம்.

தாமரைக் கண்ணியார் சிறந்த ஆராய்ச்சி அறிஞராகவும் விளங்கினார். செந்தமிழ்ச்செல்வி, சித்தாந்தம், பாசறை, திருவிளக்கு, நம்நாடு, உலோகோபகாரி, பூந்தோட்டம், அமுதசுரபி, திருவள்ளுவர், போர்வாள், மாலுமி, தமிழ்முரசு (மலேயா) முதலிய இதழ்களுக்கு ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். இவர் எழுதிய 'அழகை வெறுத்த அழகி' எனும் கட்டுரைத் தொகுப்பு நூலுக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் 1950ஆம் ஆண்டில் கோவையில் பாராட்டிதழ் வழங்கிப் போற்றினர். சிறந்த மொழிபெயர்ப்பாளராகவும் தாமரைக்கண்ணியார் விளங்கினார். ஆங்கிலப் பேராசிரியரான 'ஆஸ்கார் ஒய்ல்டு' எழுதிய 5 சிறுகதைகளைத் தமிழாக்கம் செய்து, 'வண்ணத்தாமரை' எனும் பெயரில் வெளியிட்டார். அறிஞர் அண்ணா தாமரைக்கண்ணியார் உரையினைக் கேட்டுப் புகழ்ந்துள்ளார். அம்மையார், தாமே முன்னின்று பல தமிழ்த் திருமணங்களை நடத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகு உணர்வுடைய அம்மையார் அவர்கள் தான் மரணம் அடைந்த நாளான 30.4.1971ஆம் நாள்வரை. 'தமிழ், தமிழர் உயர்வு' என்று எண்ணியே தொண்டாற்றினார். மங்காத மாணிக்கமான அம்மையார் மறைந்தாலும், அன்னார் தம் அரிய கருத்துக்கள் நம்மை இன்றும் விழிப்புறச் செய்வனவாகவே உள்ளன.

5. பரிபூரணத்தம்மையார்

தமிழ்நாட்டுப் பெருங்குடி மகளிரின் தன்மான உணர்வுகள் வழிவழி வளரச் செய்ய முயன்றவர் பரிபூரணத்தம்மையார் ஆவார். இவரது கொள்கைப் பற்று இவர் காலத்து மகளிரை வியக்கச் செய்தது. தம் குடும்ப உறுப்பினர்களின் பழைமை நம்பிக்கைகளைத் தமது சொல்லாற்றலால் களைந்து, அவர்கள் அனைவரையும் இயக்க உணர்வு கொள்ளுமாறு செய்து காட்டியவர்.

அம்மையார் அவர்கள் தந்தை பெரியாரிடத்துப் பெரு மதிப்புக் கொண்டவர். கழகவழிப் பெரியார் நடத்தும் இன மானப் போராட்டங்களில் கலந்துகொள்ளும் வீர உணர்வு மிக்கவர். தம் குடும்பத்துப் பிள்ளைகளைப் பெரியார் பெரும்படையில் பங்கு கொள்ளப் பக்குவப்படுத்திப் பிறர்க்கு முன்மாதிரியாக விளங்கினார்.

அம்மையார் தஞ்சையில் இயக்க வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றார். தமது அயராத முயற்சியால் மகளிரை அழைத்து, தன்மானத் தத்துவங்களை விளக்கி, இயக்க உறுப்பின ராக்கினார். கழகம் நடத்திய சாதி ஒழிப்புப் போராட்டத்திலும், சட்ட எதிர்ப்புப் போராட்டத்திலும் கலந்து ஆறு மாதச் சிறைத் தண்டனை அடைந்தார். தன்னலம் கருதாத தூய தொண்டாற்றிய அம்மையார் 10.3.1981இல் மறைவெய்தினார். தமிழகத்தில் மகளிர் குலம் தலைநிமிர்ந்து நிற்பதற்கு, அம்மையார் போன்ற வீராங்கனைகள் ஆற்றிய தொண்டு மிகப்பெரியது எனில் மிகையன்று.

நம்நாடு விடுதலை பெறாத அக்காலகட்டத்தில் ஆணுக்கு நிகராகப் பெண்கள் கல்வியறிவு, சமுதாயத்தொண்டு, நாட்டுப் பற்று போன்றவற்றில் சிறந்து விளங்கினர் என்பதைக் கண்டோம். அம்மு சுவாமிநாதன், வசுமதி ராமசாமி, அம்புஜம்மாள், சரசுவதி பாண்டுரங்கம்_ என அவர்தம் பட்டியல் நீண்டது. அவர் தம்வாழ்வு, தொண்டு போன்றவை பிற்காலச் சந்ததியினர்க்குச் சிறந்த வழிகாட்டியாய் அமைகிறது. அவர்தம் நினைவைப் போற்றுவோம்; அவர் வழி நடக்க உறுதி மேற்கொள்வோம்.

துணை நூல்கள்

1. இராசகோபாலன். தி., **பெருமைக்குரிய பெண்டிர்**, முதல்பதிப்பு, 1990.
2. முத்துக்குமாரசுவாமி.சிவ., **நம் நாட்டுப் பெண்மணிகள்**, முதற்பதிப்பு, சென்னை, 1960.
3. ஸ்டாலின்குணசேகான்.த., (தொகுப்பாசிரியர்), **விடுதலை வேள்வியில் தமிழகம்**, முதல்பதிப்பு, டிசம்பர், 2000

சமூக விடுதலையில் புதுவைப் பெண்மணிகள்

க. இளமதி சானகிராமன்

சமுதாயம் என்பது மக்களின் நடை, உடை, சூழ்நிலை, பழக்கவழக்கம் முதலிய மாறுபட்ட தன்மைகளைக் கொண்ட குழுமம். இந்தியச் சமூக அமைப்பிற்குத் தூண்களாக விளங்குவன சாதியும் கூட்டுக் குடும்ப அமைப்புமேயாகும். இவ்விரண்டுமே தம்மிடத்து மிகுந்த கட்டுப்பாடுகளைக் கொண்டிலங்குகின்றன. குடும்பத்தைக் குறித்து, செயப்பிரகாசு கூறும்பொழுது,

> *குடும்பமே அடிப்படைச் சமூகமாகும். ஆண், பெண் கூட்டு வாழ்க்கையே சமுதாய வாழ்வின் தொடக்க நிலையுமாகும். இவர்களுடைய கூட்டு வாழ்வும் கூட்டு உணர்வுகளும் கூட்டு நலனும் கருத்திற் கொள்ளப்படுதல் காரணமாகவே குடும்ப அமைப்பு சமுதாய அமைப்பின் முதல் நிலையாகக் கருதப்படுகிறது*

என்பார். இத்தகைய குடும்ப அமைப்பு ஆண், பெண் இரு பாலாரையும் சமமாகக் கருதவில்லை. பெண்ணிற்கு மட்டுமே மிகவும் அதிகமாகக் கட்டுப்பாடுகளை விதித்திருந்தது. இச்சமூகக் கட்டுப்பாடுகளில் இருந்து விடுதலை வேண்டி, மகளிருக்காக மகளிர் எழுப்பிய, செய்த செயற்பாடுகளே இன்றைய நிலையில் பல்வேறு துறைகளிலும் மகளிர் முன்னேற்றமடைய ஏதுவாகின. இவர்கள் மகளிருக்காக மட்டுமல்லாது பல்வேறு நிலைகளிலும், பல மூடப்பழக்கவழக்கங்களை ஒழிக்கவும் ஏழைகளின் வாழ்விற் காகவும் பல சமூகத் தொண்டுகளையும் புரிந்தனர்.

புதுவையைப் பொறுத்தவரையில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இத்தகைய விடுதலை உணர்வும் அதன் வெளிப் பாடாகத் தொண்டுகளும் மகளிரால் செய்யப் பெற்றுவந்துள்ளன. இன்றைய நிலையிலும்கூட, பல பெண்கள் சமூக விடுதலைக்குப் போராடுவதுடன் பல்வேறு சமூகத் தொண்டுகளையும் செய்து புதுவை அரசால் 'மகளிர் திலகம்' முதலான பல பட்டங்களையும் பெற்று வாழ்கின்றனர். அவர்களின் ஒரு சிலரைக் குறித்து எழுதுதலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சமூக விடுதலை

சமூகவியல் சிந்தனையாளர்களான எமிலிதுர்க்கேம் மற்றும் மேக்ஸ்வேபர் இருவரும் இருவேறு விதமான சமூகம் மற்றும் தனிமனிதன் தொடர்பான கருத்துக்களை முன்வைக் கின்றனர். இவ்விருவரின் கோட்பாடுகளே இன்றைய சமூகவியல் சிந்தனைகளுக்கு முன்னோடிகளாகும்.

> *சமூகம்தான் முதன்மையானது; சமூகம்தான் தனிமனிதனைக் கட்டுப்படுத்துகின்றது. சமூக நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டவன் மனிதன். சமூகத்திற்குக் கட்டுப்பட்டே அவனும் வாழ்ந்து வருகின்றான்*

என்பர் பிரெஞ்சு நாட்டு எமிலிதுர்க்கேம்.

ஜெர்மனியைச் சார்ந்த மேக்ஸ்வேபரோ இவருக்கு மாறுபட்ட நிலையில்,

> *தனிமனிதன்தான் இன்றியமையாதவன்; சமூகத்தை உருவாக்குவதே தனிமனிதர்களின் கூட்டுதான். சமூகம் அவனுக்கேற்பத் தான் மாறவேண்டும். ஆண் சமூகத்திற்குக் கட்டுப்பட்டவன் இல்லை. கால மாறுதல்களுக்கேற்ப அவன் மாறும்பொழுது சமூகமும் மாறவேண்டியது கட்டாயமாகும்.*

என்று கூறுவர். இவ்விருவரின் கோட்பாடுகளில் மேக்ஸ்வேபரின் கோட்பாடே இன்றைய சமூக விடுதலை உணர்விற்கு மிகவும் பொருத்தமுடையதாகும்.

மக்களின் செயற்பாடுகள் காலமாற்றங்களோடு இணைந்து மாறுபடும் தன்மையன. உணவு, உடை, பழக்கவழக்கங்கள், குணநல வேறுபாடுகள் முதலானவையும் மாறுபடுகின்றன. இத்தகைய மாற்றங்களுக்கேற்ப, சமூகக் கட்டுப்பாடுகளும் தகர்க்கப் பெற வேண்டியவையாகின்றன. அவ்வகையில் பல்வேறு சமூகக் கட்டுப்பாடுகளில் இருந்து விடுபடும் நிலையே சமூக விடுதலையாகின்றது. குறிப்பாக, சாதி, சமயம், சடங்கு முதலான சம்பிரதாயங்கள், பெண் அடிமைத்தனம், பெண் கல்வி மறுப்பு, பெண் தொழில் மறுப்பு முதலான பலவற்றிலிருந்து விடுபட்டு, கலப்பு மணம், சமய வேறுபாடுகளைக் களைதல், சாத்திர சம்பிரதாயங்களில் இருந்து விடுபடல், பெண் அடிமைத்தனம் ஒழித்தல், பெண்களின் கல்விக்காகத் தனித்த பள்ளிகளை

அமைத்தல், பெண்களுக்கென்றே பல தனித்த வேலைவாய்ப்புகளை உண்டாக்குதல், பல வேலைகளில் ஆண்களுக்கு இணையாகப் பயிற்சி பெற்றுச் செயல்படுதல், முழுநேரமும் அடுப்பங்கரையில் அடைந்து கிடப்பதைத் தவிர்த்துப் பல பொதுச்சேவைகளில் ஈடுபடல், போதைக்கு அடிமைப்பட்டவர்களைத் திருத்துதல், மது ஒழிப்புப் பிரச்சாரங்களைக் கைக்கொள்ளல், ஊனமுற்றோருக்கு உதவுதல் எனப் பலத் திறப்பட்ட நிலையில் பெண்களின் செயற் பாடுகள் பரந்து விரிந்து சமூக விடுதலையை உண்டாக்கி உள்ளன.

சாதிய மறுப்பும் கலப்பு மணமும்

மக்கள் செய்யும் தொழிலுக்கு ஆகி வந்த பெயர்கள் மக்களையே தரம்பிரிக்கும் சாதிப் பெயர்களாக உருவாகிவிட்டன. இன்றைய நிலையில் தம் பெற்றோர்கள் செய்த தொழிலையே கைவிடும் அத்தொழிலுக்குரிய சாதி மட்டிலும் எப்படிப் பொருந்துவதாகும்? இச்சாதியமைப்பை உடைத்துச் சமூக விடுதலை பெறவேண்டுமேல் கலப்பு மணம் ஒன்றே வழி என்பதை நன்குணர்ந்த பெண்கள் தங்களது சமூக விடுதலை உணர்வை, கலப்பு மணம் செய்து கொண்டதின்வழி உணர்த்துவர். கலப்பு மணம் செய்து கொண்டது மட்டுமன்றி மிகச் சிறந்த முறையில் ஊரே மெச்சும்படி வாழ்ந்தும் காட்டி, பிறரையும் அம்மணம் புரியச் செய்தது குறிப்பிடத்தக்கது. இதனைச் செய்தவர்கள் திருமதி கமலாசர்மா மற்றும் சுதா சுந்தரராமன்.

திருமதி கமலாசர்மா 1906ஆம் ஆண்டு நவம்பர் 4ஆம் தேதி திருவையாற்றில் மிகவும் ஆசாரமான அந்தணர் குடும்பத்தில் பிறந்தவர். சிறுவயதிலே தந்தையை இழந்து, பள்ளிப் படிப்பில் ஆர்வம்கொள்ளச் சென்னைக்கு வந்து இந்தி மொழியைக் கற்றார். வேலைகளையும் கற்றுத் தேர்ந்த அவர் பிரபல வழக்கறிஞரும் தேசபக்தருமான சீனுவாச ஐயங்கார் இல்லத்தில் தங்கித் தன்னுடைய 15 வயதிலேயே ஐயங்காரின் மகள் எஸ். அம்புஜம்மாள், சித்தி ஜனம்மாள் இவர்களுடன் சேர்ந்து வெள்ளையரை எதிர்க்கும் போராட்டத்தில் கலந்து கொண்டு, பலமுறை கைது செய்யப்பெற்று வேலூர் சிறையில் அடைக்கப் பெற்றார். பாரதியாரின் நெருங்கிய நண்பரும், காந்திஜியின் இந்திப் பிரசார சபாவின் நிறுவனருமான பண்டிட் ஹரிஹர சர்மாவை மணந்து விடுதலைப் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டார். இவர்களுக்கு ஒரு மகளும் இரண்டு மகன்களும் உண்டு.

காந்திஜியின் விருப்பப்படி பண்டிட் ஹரிஹர சர்மா சென்னையில் இந்திப் பிரச்சார சபாவிற்குச் சென்றார். அதுபோது திருமதி கமலா சர்மாவும் தன் குழந்தைகளுடன் டி.வி.எஸ். நிறுவனர் சுந்தரம் ஐயங்காரின் மகள் டாக்டர் சௌந்திரம் ராமச்சந்திரன் நடத்தி வந்த திண்டுக்கல் அருகில் உள்ள காந்தி கிராமத்தில் சில காலம் சேவை புரிந்தார். தன்னுடைய தோழியான இந்தி செல்லம்மாளுடன் சிலகாலம் புதுவையில் தங்குவதற்கு வந்தவர், அரவிந்தர் ஆசிரமத்திலேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டார். 1962இல் தெலுங்கு புத்தாண்டு தினத்தில் கமலா சர்மா கஸ்தூரி பாய் சேவா சங்கத்தைப் புதுவையில் தோற்றுவித்தார். குழந்தைகளுக்கான பால்வாடி, பெண்களுக்கான மாதர் சங்கம் மற்றும் இரவுப் பள்ளி முதலானவை இச்சங்கத்தால் உருவாக்கப் பெற்றன. வாடகை இடத்தில் இருந்து பல இடர்ப்பாடுகளைச் சந்தித்த இச்சங்கத்திற்கான சொந்தக் கட்டிடத்தைத் தனவந்தர் சேனாபதி முதலியார் தரவே சங்கம் பல்வேறு சமுதாயப் பணிகளை வீறுடன் செய்தது.

புதுவையில் முதன்முதலில் பெண்களுக்கு இராட்டையில் நூல் நூற்கக் கற்றுக் கொடுத்தவர் இவரே. காந்தீய நெறிகளை இச்சமுதாயத்தில் பரப்பும் பணியில் தம் வாழ்க்கையை இணைத்துக் கொண்ட கமலா சர்மா சிலகாலம் மட்டுமே புதுவையில் தங்க வந்தவர், நிரந்தரமாகவே தங்கி, நாட்டு விடுதலைக்காகவும் மகளிர் முன்னேற்றத்திற்காகவும் உழைத்து 1972 ஆம் ஆண்டு டிசம்பர் 25ஆம் நாள் ஆசிரமத்திலேயே இயற்கை எய்தினார்.

1957இல் ஒரு வைதீகப் பிராமணர் குடும்பத்தில் பிறந்த **சுதா சுந்தரராமன்** சென்னை எத்திராஜ் கல்லூரியில் முதுகலை படிக்கும்பொழுதே மாணவர் அமைப்பின் தேர்தலில் வெற்றி பெற்றுக் கல்லூரியின் பொதுச் செயலாளராக மாறியவர்.

துணிவுடன் சம்பிரதாயங்களைத் துறந்துவிட்டுக் கலப்பு மணம் புரிந்துகொண்டார். அவரது கணவர் டாக்டர் தொழிலை ஜிப்மர் மருத்துவமனையில் திறம்பட ஆற்றுபவர். ஒருவர் சுதந்திரத்தில் ஒருவர் குறிக்கிடாமல் வாழ்ந்து பல சமூகத் தொண்டுகளை ஆற்றுபவர்கள். சென்னை கிறித்துவக் கல்லூரியில் சேர்ந்து இளமுனைவர் பட்டம் பெற்றவர், தொடர்ந்து ஆசிரியர் படிப்புப் பட்டமும் பெற்றார்.

பெண் தொழிலாளர்களின் நலனுக்காக உழைத்த அவர், ஜனநாயக மாதர் சங்கத்தின் தமிழ் மாநிலச் செயலராகவும்,

அனைத்திந்திய மத்தியச் சங்கத்தின் துணைச் செயலராகவும் ஆனார். இவரைப் பற்றிக் கூறும்பொழுது,

> *புதுச்சேரி மார்க்கெட்டில் சில்லறை காய்கனி வியாபாரம் செய்யும் பெண்களாகட்டும், ஆலைகளில் வேலை செய்யும் பெண் தொழிலாளர் வர்க்கமாகட்டும் அவர்களுக்கு ஒரு அநீதி என்றால் அவர்களுக்காகக் குரல் கொடுக்க முன்வந்து நிற்கும் ஒரு பெண்மணியைப் பார்க்கலாம். ஆலை வாயிலோ, சிறைச்சாலை முற்றமோ அல்லது கடை வீதியோ - எங்கும் பாதிப்புக்குள்ளான பெண்களைக் கூட்டி வைத்துச் சட்டப்பூர்வமான அவர்களது கோரிக்கையை ஊரறிய உரக்க எடுத்துரைப்பவர். எவரொருவர் கவனத்தையும் கவரும் அந்த மங்கை நல்லாள் யார் என வினவத் தோன்றும். இந்தியக் கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சேர்ந்த அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் செயலாளரான சுதா சுந்தரராமன் என்ற அம்மையாரே அவர்*

என்று குறிப்பிடுவர் கிளமெண்ட் ஈசுவர். மேலும் அவர்,

> *வறுமையில் உழலும் பெண் தொழிலாளர்களின் தாக்கம் இவரைப் பெரிதும் மாற்றிவிட்டது. பாரம்பரியப் பகட்டான ஆடை, அணிகலன் களெல்லாம் இவரை விட்டு அப்பாற் சென்றுவிட்டன. தம்மைச் சார்ந்துள்ளோருக்குச் சமமாக எளிமையான தோற்றமும், ஏற்ற கொள்கையில் உறுதியான பிடிப்பும் கொண்ட சுதா பல்வேறு சமூகநல அமைப்புகளில் அங்கம் வகிக்கிற பல நூல்களை எழுதியவர். 1995இல் சீனாவில் நடை பெற்ற மாதர் மாநாட்டில் இந்தியப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டு அந்த உலக அரங்கில் தனது கருத்தை விளக்கி உரையாற்றினார். தென்னகம் கண்ட ஓர் உண்மையான பெண்ணியக்கவாதி சுதா சுந்தரராமன் என்றால் மிகையாகாது (ப. 219).*

என்றும் உரைப்பது இவண் குறிப்பிடத்தக்கதாகும்.

மருத்துவமனை கட்டல்

எழில் மிகுந்த புதுவை நகரைச் சுற்றியுள்ளவை இயற்கை யோடு கூடிய கிராமங்கள். இக்கிராம மக்களின் மருத்துவ வசதிக்காக

ஒரு மருத்துவமனையைக் கட்ட விரும்பிய மதாம் ஞானம்மாள் சஞ்சீவி அப்போதிருந்த புதுவை ஆர்ச் பிஷப்பிடம் ரூ. 20 இலட்சம் நன்கொடை வழங்கினார். 1920இல் பிறந்து சமூக விடுதலை உணர்வோடு பல சேவைகளைப் புரிந்த அவர் 2000இல் இயற்கை எய்தினார்.

அன்னசத்திரங்கள் அமைத்தல்

காரைக்கால் கொளக்குடி அருணாச்சல நாயக்கரின் மனைவி மனோன்மணி அம்மையாரின் பெயரில் ஓர் அறக்கட்டளை நிறுவப்பெற்று, அவ்வழிச் செல்லும் பயணி களுக்கும் ஏழைகளுக்கும் அன்னதானம் இன்றுவரை செய்யப் பெறுகின்றது.

காரைக்காலைச் சேர்ந்த ப்ரணம்பாள் அம்மாள் 1888இல் திருநள்ளாறு கந்தன்குடி சாலையில் ஒரு சத்திரம் கட்டியுள்ளார். அச்சத்திரத்தில் அன்னதானம் குறைவின்றி நிகழத் தமது நஞ்சை, புஞ்சை நிலத்தில் 10 வேலி நிலங்களை எழுதி வைத்துள்ளார். "தினசரி 6 பிராமணர்களுக்கும் பரதேசிகளுக்கும் அரிசிச் சோறு உணவு படைக்க வேண்டும் என்று பத்திரத்தில் எழுதிச் சென்றுள்ளார்" என்பது குறிப்பிடத்தக்கது.

முடியப்ப நாத முதலியார் - ரோசம்மாள் தம்பதியரின் தவப் புதல்வியான மரி அந்துவானேத் தங்கவதி அம்மாள், கடலூர் தியாகு முதலியார் சத்திரம் கட்டினார். அரியாங் குப்பத்தில் குழந்தை தெரியநாதன் கல்யாண மாளிகை கட்டி ஏழைகளுக்கு இலவசமாக வழங்கினார். கோவிலூரிலுள்ள தியாகு முதலியார் சத்திரத்தைச் சீர்படுத்தினார். தம் இறுதிநாள் வரையில் தொடர்ந்து ஏழைகளுக்கு அன்னதானம், ஆடைகள் வழங்கல் முதலான செயற்பாடுகளைச் செய்து வந்தார். புலவர் இரா. வெங்கடேசன் தாம் இயற்றிய தங்கமதி அம்மாள் சரிதம் என்னும் நூலில் இவர் தம் பெருமைகளை எடுத்தியம்பியுள்ளது நோக்கத்தக்கது.

சமூக விழிப்புணர்வுச் சங்கம்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்திய மக்களின் கல்விக்காகவும் பிற சமூகச் சேவைகளுக்காகவும் புதுவையில் சொசித்தே (Sociate Reveil Social) என்ற சமூகச் சேவைச் சங்கம் ஏற்பட, அதற்கான கட்டடத்திற்காக 1915இல் புதுவை லப்போர்த் வீதியில் உள்ள தமது வீட்டையே நன்கொடையாக வழங்கியவர் மதாம் லெசெல் பிரான்சிஸ்கா. இச்சங்கம் ஏழைகளுக்குப்

பண்டிகை நாட்களில் உடைகள், ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டிகள், ஏழை மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள், போர் மற்றும் புயல், வெள்ளம் முதலானவற்றால் துன்பப்படும் மக்களுக்கு நிவாரணப் பணிகள் எனப் பல செயல்களில் ஈடுபட்டு உழைத்து வருகின்றது. இச்சங்கத்தில் 250 ஆயுள் உறுப்பினர்கள் உள்ளனர். இவற்றிற்கான செலவுகள் அனைத்தையும் இவர்கள் ஏற்று வருகின்றனர். எவரிடமும் பொருள்களோ, பணமோ வாங்குவதில்லை. மதாம் லெசெல் பிரான்சிஸ்காவின் உதவியே இத்தகைய செயற்பாடுகளுக்குக் காரணமாகும்.

பெண்கள் பள்ளிகள் அமைத்தல்

ஆணையும் பெண்ணையும் நிகரெனக் கொண்டு அறிவில் ஓங்க வைத்தால் பெண்கள் உயர்நிலை அடைவர்; சமூகத்தில் உயர்ந்த மதிப்பைப் பெறுவர். தாம்பெறும் பிள்ளைகளின் அறிவுத் தாகம் தீரப் பாடுபவர். களர் நிலமாக மாட்டார்; வைய மாட்சிக்கும் பாடுபவர் என்ற உயரிய நோக்கினைக் கொண்ட **சுசீலாபாய் அம்மையார்**, சமூக விழிப்புணர்வினை மகளிர் அடையவேண்டுமெனில் அதற்கு அவர்கள் கல்விகற்றல் வேண்டும் என்ற எண்ணத்தின் நினைவாக, சுசீலாபாய் அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி இன்று புதுவையில் புகழ்பெற்று விளங்குகின்றது. இப்பள்ளியை 1940ஆம் ஆண்டு, பிரெஞ்சு கவர்னர் **லூய்போன்வேன்** என்பவர் திறந்து வைத்தார். இன்றைக்குச் சுசீலாபாய் இல்லாவிட்டாலும் அவர் அளித்த நன்கொடையால் கட்டப்பட்ட இப்பள்ளியில் பல பெண்கள் சிறப்புடன் கல்வி கற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

முருகாத்தாள் ஆச்சியின் மகன் கோவிந்தசாமிப் பிள்ளை, தம் அன்னையின் பெயரால் 1962இல் ரத்தினம் ஆச்சி என்பவருடைய நிலத்தை வாங்கி, புதுவை அரசுக்கு அளித்தார். 1965ஆம் ஆண்டு முருகாத்தாள் ஆச்சி பெண்கள் உயர்நிலைப் பள்ளியை அரசு கட்டுவித்தது. ஏழை எளிய மாணவிகள் இப்பள்ளியில் பயின்று பல நிறுவனங்களில் வேலை பார்த்து வருகின்றனர்.

புதுவையில் தனியார் துறையில் முதன்முதலாகப் பெண்களுக்கு எனத் தனிப் பள்ளி துவக்கக் காரணமானவர் சவராயலு நாயகர். இவரது பெயரில் அறக்கட்டளையை நிறுவியவர் மதாம் சின்னாஸ். 1920இல் பிறந்த இவர் பெண்கள் கல்வி கற்க வேண்டும் என்பதில் பெரும் முனைப்புக்

கொண்டிருந்தார். பிரெஞ்சுக் கல்வியினைப் பயின்றிருந்தாலும், பிரெஞ்சு வாழ்க்கை முறையில் வாழ்ந்தவரானாலும் அவர் விரைவில் இந்தியப் பண்பாட்டில் தம்மை இணைத்துக் கொண்டவர். பெண்கள் மற்றும் குழந்தைகளின் மேம்பாட்டிற்காகப் பாடுபட்டவர். 1948இல் துவக்கப்பட்ட மகளிர் கழகத்தின் செயலாளராக இருந்த இவர் 1955இல் புதுவை-செஞ்சி சாலையில் இந்தியக் குழந்தைகள் மேம்பாட்டுக் கழகம் துவக்கப் பெரிதும் உழைத்தார். 1980ஆம் ஆண்டு அதன் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். மாநில சமூக நல வாரியத்தின் உறுப்பினராகவும் நியமனம் பெற்று ஆக்கப்பூர்வமான பணிகளைச் செய்தார். 1976இல் சிறுவர் குற்றவியல் நீதி மன்றத்திற்குக் கௌரவ நீதிபதியாக நியமிக்கப் பெற்றார்.

கல்வியில் மட்டுமல்லாது பிற கலைகளிலும் மகளிர் முன்னேற வேண்டும் என்று நினைத்தமையால் இசை மற்றும் நாட்டியம் கற்றுக்கொள்ள சசிகலா மன்றம் என்ற நுண்கலைப் பள்ளியை 1956இல் துவக்கினார். 1958இல் டில்லியில் நடந்த சுதந்திர தின விழாவில் பங்கு கொண்ட இக்கலைக் குழு பிரதமர் நேருவிடமிருந்து பரிசு பெற்றது. இந்தியாவில் மட்டுமல்லாது, பாரிஸ், லண்டன், பெல்ஜியம், சுவிட்சர்லாந்து, ஜெர்மனி முதலான நாடுகளுக்கும் சென்று நாட்டிய நிகழ்ச்சிகளை அரங்கேற்றி நம்முடைய பாரம்பரியப் பெருமையை அவ்வந்நாட்டு மக்களும் அறிந்து இன்புறச்செய்தது. இத்தகைய பல பெருமைகளுக்குச் சொந்தக்காரரான மதாம் சின்னாஸ் 1991ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

பெண் திலகங்கள்

புதுவை அரசு, 1995ஆம் ஆண்டு முதல் மகளிர் முன்னேற்றத்திற்காகவும், பிற பொது நலச் சேவைகளுக்காகவும் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட சிறந்த பெண்களைத் தேர்ந்தெடுத்து, 'மகளிர் திலகம்' என்ற விருதை வழங்கிச் சிறப்பித்து வருகின்றது. அவ்விருதை முதன்முதலாக 1995ஆம் ஆண்டே வாங்கியவர் திருமதி சரஸ்வதி சுப்பையா ஆவார். இவர் சிறந்த சமூக சேவைக்காக இவ்விருதைப் பெற்றார். இவருக்கு அடுத்து இவ்விருதினைச் செல்வி சி. சுந்தரம், திருமதி அஞ்சலி தயானந்த், திருமதி சுமணா தெய்வசிகாமணி, திருமதி ரேணுகா அப்பாதுரை, சகோதரி ஏபாயல்பீட்டர், திருமதி லட்சுமி தேவி வேலு, சகோதரி சேவியர் மேரி, திருமதி சாயா குமாரி, திருமதி பார்வதி காந்தராஜ் ஆகியோர்

பெற்றனர். 2000 ஆண்டிற்குப் பின்னர் இதுவரையில் வேறு எவருக்கும் இவ்விருது வழங்கப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பத்மஸ்ரீ விருது பெற்ற லீலா இந்திராசென்

1908இல் அரியானாவில் பிறந்த இவர் 1943 முதல் புதுவையில் தங்கியிருந்தவர். இந்திய அரசின் பத்மஸ்ரீ விருது பெற்ற புதுவையின் ஒரே பெண்மணி 'லீலா இந்திரா சென்'. இவர் புதுவை சமூக நல ஆலோசனை வாரியம் ஏற்படவும் வளர்ச்சி பெறவும் உறுதுணையாக இருந்தவர். ஆங்கிலம், இந்தி, பஞ்சாபி போன்ற மொழிகளில் தேர்ச்சி பெற்ற இவர் அரவிந்த ஆசிரமப் பன்னாட்டுக் கல்வி மையத்தில் ஆசிரியராகப் பணியாற்றினார். மகான் அரவிந்தர், அன்னையின் நூல்களை இந்தியில் மொழிபெயர்த்தவர்.

ஆசிரமவாசியாக இருந்தாலும் சமூகத் தொண்டுகள் பல செய்து வந்தமையால் புதுவை அரசு 1955இல் சமூக நல ஆலோசனை வாரியம் துவக்கியபோது அதன் பொருளாளராக இவரை நியமித்தது. 1957இல் அதன் தலைவரானார். 1978 வரை இவரே அதன் தலைவராக நீடித்தார். இவரது தலைமையின் போதுதான் அவ்வாரியம் பெருவளர்ச்சி கண்டது. டில்லியிலுள்ள மத்தியச் சமூக நல வாரியத்தின் உறுப்பினராகவும் இருமுறை பணியாற்றினார். 1955இல் இந்தியக் குழந்தைகள் நலக் கவுன்சிலிங் புதுவைக் கிளையின் முதல் தலைவராகவும் இவர் பணியாற்றியதுடன், சிறுவர் குற்றவியல் நீதிமன்றத்திலும் புதுவை ஜிப்மர் மேற்பார்வை வாரியத்திலும்கூட இவரது பணி சிறப்பாகப் பேசப்பெற்றது.

சமூகப் பணிக்காகவே இந்தியாவின் பல இடங்களுக்கும் சென்று வந்த இவர் தாய்லாந்திற்கும் சென்று வந்தார். 1969இல் இவரது தன்னலங் கருதாச் சேவையைப் பாராட்டி, இந்திய அரசு பத்மஸ்ரீ விருது வழங்கிச் சிறப்பித்தது. இவருக்குப் பிறகு இதுவரையில் புதுவையில் இவ்விருதை எவரும் பெறவில்லை என்பது இவண் நோக்குதற்குரியது. பல்வேறு சிறப்புகளைப் பெற்று புதுவைக்கே புகழ் சேர்த்த இவர் அக்டோபர் 9ஆம் தேதி 2000ஆம் ஆண்டில் தம்முடைய தொண்ணூற்று இரண்டாம் வயதில் காலமானார். அவரின் பூதஉடல்தான் பிரிந்ததே தவிர இன்றைக்கும் அவரது செயற்பாடுகள் புகழுடன் போற்றப் பெறுகின்றன.

இன்றைய நிலையிலும் சமூக விடுதலை உணர்வோடு உழைத்து வரும் பெண்கள் பலர் உள்ளனர். அவருள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவர்கள். சுமனா தெய்வசிகாமணி, மதாம் கே. கொண்டப்பா, பி. மதுமிதா பானர்ஜி, மதாம் குளோரியா துய்மோன், செல்லம்மாள், மதாம் பிரதேரிக்நோயே, மதாம் கஜபதி, சரசுவதி சந்திரசேகரன், இந்திரா முனுசாமி, ஜனாமிஷ்டி அம்மாள், ஆலிஸ் தாமஸ், சியாமளா அசோக், வீரம்மா, மார்கிரேட் நிக்கோலாஸ், ஜோஸ்பின், சரசுவதி சுப்பிரமணியம், கவிதா, சத்தியநாதன் ஜூலியட், அம்மணி அம்மாள், திருமதி ரேணுகா அப்பாதுரை, சகோதரி ரபாயல் பீட்டர், இலட்சுமி தேவி வேலு, அருட்சகோதரி சேவியர் மேரி, திருமதி சாயிகுமாரி, திருமதி பார்வதி காந்தராஜ், திருமதி மீனாட்சி தேவி பவானி முதலானோரின் சமூக சேவைகள் மிகவும் போற்றத்தக்கன.

1948இல் புதுவையில் மகளிர் கழகம் என்ற பெண்களுக்கான ஒரு முன்னோடி சேவை நிலையம் துவக்கப் பட்டபோது மதாம் கொண்டப்பா துணைத் தலைவராகப் பணியாற்றினார். 1955இல் சமூகநல ஆலோசனை மையம் தொடங்கிய பொழுது அதன் முதல் உறுப்பினராக நியமனம் செய்யப் பெற்றவர் மதாம் கொண்டப்பா. தமிழ், கன்னடம், பிரெஞ்சு மொழிகளை நன்கறிந்த மதாம் பெண்களுக்கான சேவையில் முன்னின்றவர்.

விதவைகளுக்கு உதவுதல், உடல் ஊனமுற்ற சிறுவர்களுக்கு ஆதரவு அளித்தல், பிள்ளைகளைத் தவறாது பள்ளிக்கு அனுப்புமாறு பெற்றோர்க்கு அறிவுரை கூறுதல், குடிசை வாழ் பகுதி மக்கள் சுகாதார அடிப்படையிலான வாழ்க்கை வாழ வேண்டும் என்பதைக் கற்பித்து நல்ல வாழ்வுக்கு அழைத்துச் செல்லல் போன்ற பல விழிப்புணர்வுக் கருத்துகளை வழங்கி வருபவர்.

பி. மதுமிதா பானர்ஜி

தட்சிண பாரத் இந்திப் பிரசார சபாவைப் புதுவையில் தோற்றுவித்து இந்தி மொழிக் கல்வி வளர அடித்தளமிட்டவர் செல்லம்மாள். காந்திஜியின் கையால் பட்டம் பெற்றவர். இலவசமாகவே இந்திமொழியைக் கற்பித்துக் கொடுத்தார்.

மதாம் கஜபதி, 1968இல் ஆதரவற்ற ஏழை மாணவர் களுக்கான இல்லம் ஒன்றைத் துவக்கினார். 1978இல் விவேகானந்தர் இல்லத்தைக் கட்டி 50 மாணவர்களுக்குப் புகலிடம் அளித்தார்.

அவர்களுக்குக் கல்வி வசதியும் செய்து கொடுக்கப் பெற்றது. அம்மாணவர்கள் இன்று வாழ்க்கையில் நல்ல நிலையில் உள்ளனர். அவர்கள் அவ்வாறு மகிழ்வோடு வாழ்வதற்கு மதாம் கஜபதியே காரணம்.

இந்திரா முனுசாமி, 1988இல் இவரது கணவர் பெயரால் துவக்கப்பட்ட வி.பி.எம். குட்வில் டிரஸ்ட் மூலம் பார்வையற்றோர் மற்றும் காது கேளாதோருக்குச் சேவை செய்வதுடன், இருபது அம்சத்திட்டம், தொழுநோய் ஒழிப்பு, நுகர்வோர் நலச் சங்கம், பொது வினியோக முறைமை, சமூக நல ஆலோசனை வாரியம், கூட்டுறவுச் சங்கங்கள் முதலான பலவற்றிலும் தொடர்பு கொண்டு ஆலோசனைகள் வழங்கிப் பலராலும் பாராட்டப் பட்டு வருகின்றார். 1993இல் டில்லி பாரதீய தலித் சாகித்ய அகாடமி இவருக்கு "டாக்டர் அம்பேத்கர் சேவா விருது" வழங்கிக் கௌரவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஜனாமிழ்த அம்மாள் அரியாங்குப்பத்தில் மீராபாய் மாதர் சங்கம் தொடங்கி, அதன் 70 கிளைகளையும் நிர்வகித்து வருபவர். மாதர் சங்க உறுப்பினர்கள் மட்டுமல்லாது சமூகத்துப் பிற பெண்டிருக்கும் தம்மாலான சேவைகளைச் செய்து வருபவர். ஏழை விதவைப் பெண்டிர், ஆதரவற்றவர்கள், முதியோர் போன்றோருக்குப் புகலிடம் அளித்து அவர்களுக்கு அரசுத் துறையின் மூலம் உதவி பெற்றுத் தருகின்றார். இவரது முயற்சியால், ஏழை எளிய பெண்களும் நாட்டியம், விளையாட்டு முதலானவற்றில் சிறப்புற்றுப் பல பரிசுகளையும் விருதுகளையும் பெற்று வருகின்றனர்.

ஆலிஸ் தாமஸின் பணி மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். வாழ்க்கையில் எவ்விதக் குறிக்கோளுமின்றி வழிகாட்டுவாரின்றி ஊர் சுற்றி வரும் இளைஞர்களை நல்லவர்களாக உருவாக்க வேண்டும்; சமூக விரோதச் சக்திகளிலிருந்து அவர்களை விடுவிக்க வேண்டும் என்ற சமூக விழிப்புணர்வுடன் 'உதவிக் கரங்கள் – சமூக நலத் தொடர் கல்வி இயக்கம்" எனும் அமைப்பை உருவாக்கி இதுவரையில் 40க்கும் மேற்பட்ட இளைஞர்களைத் திருத்தி, பொறுப்புள்ள மனிதர்களாக மாற்றியுள்ளார்.

ஸ்கிரீன் பிரிண்டிங், புக்-பைண்டிங், தச்சுவேலை, தையற் கலை போன்ற சிறுதொழில்களில் பயிற்சியளித்து அவர்கள் சுயமாகத் தொழில் தொடங்கும்படியாகச் செய்துள்ளார். திக்கற்ற பெண்களுக்கு மறுவாழ்வு இல்லம், எய்ட்ஸ் தடுப்பு போன்ற

புதிய திட்டங்களையும் தொடங்கியுள்ளார். பல பெண்கள் இதில் சேர்ந்திருப்பது நோக்குதற்குரியது.

சியாமளா அசோக், எய்ட்ஸ் எனும் உயிர்க்கொல்லி யிடமிருந்து மக்களைக் காக்கும் முயற்சியில் இறங்கி, சிவப்பு விளக்குப் பகுதிகளுக்குச் சென்று அங்கு வரும் ஆண்களை வழிமறித்து எயிட்ஸின் அபாய நிலையை எடுத்துக்கூறி விபச்சாரத்தை விடும்படிக் கேட்டுக் கொண்டு வருகின்றார். உயர்ரக மதுக்கடைகள் முன்னும் அவர் வாடிக்கையாளர்களை நிறுத்தி மறியல் செய்து வருகின்றார். ஆண்களும் செய்யத் துணியாத காரியத்தைத் தனியொரு பெண்ணாக நின்று போராடி வரும் சியாமாள அசோக் பல கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பெண்களின் விடிவெள்ளியாவார்.

உடல் உறுப்புகள் பலமிழந்தபோதும் உள்ளம் வலிமை யுடனிருந்ததால் தாமே ஓர் உடல் ஊனமுற்றோர் இல்லத்தைத் தொடங்கிக் கடந்த ஏழு ஆண்டுகளாகத் திறம்பட நடத்தி வருபவர் **கவிதா.** இவரது சேவையைப் பாராட்டி, சென்னையிலுள்ள **சத்குரு ஞானானந்தா விருது** வழங்கப் பெற்றுச் சிறப்பிக்கப் பெற்றுள்ளார்.

இவ்வாறாகப் புதுவையில் சமூக விடுதலைக்காகப் பாடுபட்டு வரும் பெண்மணிகள் பலராக உள்ளது புதுவைக்கும், புதுமைப் பெண்ணாக உருவாகத் துடிப்பவர்க்கும் பெருமை சேர்ப்பதாகும். தம்முடைய குடும்ப வாழ்க்கை, செய்யும் வேலை, தொலைக்காட்சி இவற்றின் சுமையே தாங்காமல் பல பெண்கள் இருக்க, இவர்களுக்கு மத்தியில் சமூக விடுதலையே மக்களின் சிறந்த வாழ்வுக்கு வழியாகும் என்பதை உணர்ந்த பெண் கல்வியாளர்களும் பெண் அரசியல்வாதிகளும், பெண்ணினத் திற்காகவும், இளைஞர்களுக்காகவும், ஒட்டுமொத்த சமூகத்தின் விழிப்பிற்காகவும் பாடுபட்டனர். பாடுபட்டும் வருகின்றனர். அவர்களின் உழைப்பை இச்சமுதாயம் ஏற்றுப் போற்றுதலே நாடும் வீடும் நலமுற வழியாகும்.

துணை நூல்

புதுவைக்குப் புகழ் சேர்த்த பெண்மணிகள், கிளமெண்ட் ஈஸ்வர்.

லக்ஷ்மி சேகள்

அன்னி தாமசு

இருபதாம் நூற்றாண்டின் இந்திய அரசியல் வரலாற்றில் தமக்கெனத் தனியிடம் கொண்டுள்ள மகளிர் சிலருள் திருமதி லக்ஷ்மி சேகள் என்னும் காப்டனும் ஒருவர். இவரது இளமைப் பெயர் லக்ஷ்மி சுவாமிநாதன் என்பதாகும்.

பிறப்பு

1914 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 24ஆம் நாள் இவர் சென்னையில் பிறந்தார். (24-09-1914 என்ற குறிப்பும் உள்ளது).

பெற்றோர்

தந்தை திரு. எஸ். சுவாமிநாதன் (டாக்டர் எஸ். சுவாமிநாதன் என்ற குறிப்பும் உண்டு). தாயார் திருமதி அம்முக்குட்டி, சென்னை உயர்நீதிமன்றத்தில் புகழ்பெற்ற குற்றவியல் வழக்கறிஞராகப் பணியாற்றியவர். திரு. சுவாமிநாதன் கேரள மாநிலத்தின் பாலக்காடு பகுதியிலுள்ள ஆனக்கரா என்ற இடத்தைச் சார்ந்த புகழ்மிக்க வடக்கத்துக் குடும்பத்தைச் சார்ந்தவர். அம்முக்குட்டி, அம்மு சுவாமிநாதன் எனப் பரவலாக அறியப்பட்ட இவர், சமூகச் சேவகியாகவும் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவராகவும் இருந்தார். இதே குடும்பத்தைச் சேர்ந்த ஏ.வி.குட்டிமாலு அம்மா என்பவரும் பெயரும் புகழும் பெற்ற விடுதலைப் போராட்ட வீரராகவிருந்தார். புகழ் மிக்க நாட்டியப் பேரொளியான திருமதி. மிருணாளினி சாராபாய், லக்ஷ்மியின் சகோதரி ஆவார்.

இளமை

இளம்வயதிலேயே லக்ஷ்மி, தன்னை ஒரு தேசப்பற்றாளராக இனங்காட்டிக் கொண்டார். சிறுபெண்ணாக இருந்தபோதே, வெளிநாட்டுப் பொருட்களை எரித்தழிக்கும் இயக்கத்தில் பற்றுக் கொண்டு தனது விளையாட்டுப் பொருட்களையும் ஆடைகளையும் நெருப்பிலிட்டார். கள்ளுக்கடை மறியலிலும் ஈடுபட்டார். அவரது தாயார் அனைத்திந்திய மகளிர் மாநாட்டுத் தலைவியாகவும், பெண்களின் உரிமைகளுக்காகப் போராடுகிற வராகவும் இருந்தமையும், சென்னை மாநகராட்சி, சட்டப்

பேரவை, மக்களவை, மாநிலங்களவை ஆகியவற்றின் உறுப்பினர் பதவிக்கான தேர்தல்களில் வெற்றியுடன் போட்டியிட்டமையும், லக்ஷ்மியின் உருவாக்கத்திற்கு வலுவான பின்புலம் அமைத்துக் கொடுத்துள்ளன எனலாம்.

கல்வி

மருத்துவம் கற்க வேண்டும் என லக்ஷ்மி விரும்பினார். பொருளாதார வெற்றியுடைய வாழ்க்கைக்காக அவர் இத்துறையைத் தேர்ந்து கொள்ளவில்லை. ஏழைகளுக்குச் சேவை செய்ய வேண்டும். குறிப்பாக ஏழைப் பெண்களுக்குத் தேவையான மருத்துவ உதவி அளிக்க வேண்டும் என்பதே அவருடைய நோக்கமாக இருந்தது. 1932ஆம் ஆண்டு சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து, 1938ஆம் ஆண்டு எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றார். அடுத்த ஓராண்டில் மகளிர் மருத்துவம், மகப்பேறு மருத்துவம் ஆகியவற்றில் பட்டயம் பெற்றார். தந்தை சுவாமிநாதன் இவரை இங்கிலாந்துக்கு அனுப்ப விரும்பிய போதும் இவர் அதற்கு உடன்படவில்லை.

மருத்துவப்பணி

1940இல் தந்தை இறந்தார். தாயும் சகோதரியும் அமெரிக்காவில் இருந்தனர். லக்ஷ்மி சென்னையிலிருந்து சிங்கப்பூருக்குச் சென்றார். அங்கு அவரது உறவினர் சிலர் இருந்தனர். அங்கே, ஏழைகள் வந்து பயன்பெறும் வண்ணம் ஒரு மருத்துவ மையம் தோற்றுவித்தார். இந்தியாவிலிருந்து புலம் பெயர்ந்த ஏழைத் தொழிலாளர் - தோட்டத் தொழிலாளர்கள் மிகுதியாக இவரது மருத்துவத்தால் பயன் பெற்றனர். இவர், சிங்கப்பூர் நகரத்தின் பெயரும், புகழும் மிக்க மருத்துவராகத் திகழ்ந்தார்; திறன்மிக்க மருத்துவராக மட்டுமன்றி இரக்கமும் மனித நேயமும் நிறைந்தவராகவும் பெயர் பெற்றார். மிக்க வறுமையிலிருந்து ஏழைகளுக்கும் இவர் மருத்துவத் தொண்டாற்றினார். இரப்பர் தோட்டத் தொழிலாளர் பலர் இவரது மருத்துவத்தால் பயன்பெற்றனர்.

விடுதலைப் போராட்டம்

மருத்துவக் கல்வியில் ஈடுபட்ட போதும், மருத்துவப் பணியில் ஈடுபட்டபோதும் இவரது மனம் விடுதலை வேள்வியில் விருப்பம் கொண்டது; மக்கள் சேவையில் நாட்டம் கொண்டது. பொதுவுடைமைத் தத்துவம் பற்றிய நூல்களைப் படித்தார். எல்லாம் எல்லாருக்கும் சமம் என்ற கோட்பாடு இவருக்குப்

பிடித்திருந்தது. அதை அடைய மக்கள் போராட வேண்டும். புரட்சி செய்ய வேண்டும் என இவர் எண்ணியதால், இவருக்குக் காந்திஜியின் அஹிம்சைப் போராட்டத்தில் ஈடுபாடு ஏற்பட வில்லை.

இரப்பர் தோட்டங்களில் பெரும்பாலும் பணிபுரிந்த இந்திய, தமிழ் ஏழைத் தொழிலாளிகளின் பரிதாப நிலை கண்டு வருந்தி அவர்களுக்காகத் தொழிற்சங்கம் அமைத்துப் போராட்டமும் தொடங்கினார். தாயும் சகோதரியும் வந்து அழைத்த போதும் அவர்களுடன் செல்லாது இங்கேயே தங்கினார்.

இந்திய விடுதலைக் கூட்டமைவில் இவர் ஊக்கமாகச் செயலாற்றியது இந்திய சுதந்திரப் போராட்டத்திற்குப் பெரும் பங்களிப்பு ஆயிற்று என இவரைப் பற்றிச் சிறப்பித்துக் குறிப்பிடப் பட்டுள்ளது.

பிரிட்டிஷ் பேரரசின்கீழ் இருந்த சிங்கப்பூர் 1942இல் ஜப்பானியரின் வசமாயிற்று. கிழக்கு நாடுகளில் முன்னேறிய ஜப்பானியர் சிங்கப்பூரைக் கைப்பற்றியபோது ஏற்பட்ட போரில் குண்டு வீச்சால் அநேகர் காயம்பட்டனர். அவர்களுக்கும், போர்க் கைதிகளுக்கும் டாக்டர் லக்ஷ்மி தேவையான மருத்துவ உதவிகள் செய்தார். இந்திய விடுதலைப் படையைத் தோற்றுவிப்பது பற்றிய ஜப்பானியரின் கருத்துக்குப் போர்க் கைதிகளாக இருந்த இந்தியப் படைவீரர் பலரைப் போல இவரும் ஆதரவளித்தார்.

நேதாஜியும் லக்ஷ்மியும்

1943ஆம் ஆண்டு ஜூலை 2ஆம் நாள் சுபாஷ் சந்திரபோஸ் சிங்கப்பூர் வந்தார்.

இந்திய தேசியப் படை (இந்தியன் நேஷனல் ஆர்மி - ஜான் ஏ) என்பதை வெளிநாட்டில் அமைத்தவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ். காந்திஜி, ஆயுதமில்லாப் போராட்டம் என்ற போது, இவர் ஆயுதப் போராட்டமின்றி விடுதலை வாய்ப்பில்லை என்றார். இந்தியாவிலிருந்து மாறுவேடத்தில் ஜெர்மனிக்குத் தப்பிச் சென்று. இராணுவப் படை பற்றிய அனுபவங்கள் பெற்று, அங்கிருந்து ஜப்பான், பர்மா எனச் சென்றார். அங்கங்குள்ள இந்தியர்களைத் திரட்டினார்; இராணுவப் படை அமைத்தார்: கடும்பயிற்சி கொடுத்தார்; "டில்லி சலோ? செங்கோட்டையில் நம் கொடி பறக்கும். ஜெய் ஹிந்த்" என முழங்கினார்.

இந்த இராணுவப் படையில், பெண்களுக்கென்று ஒரு தனி அணி இருந்தது. அதற்கு வீராங்கனை, ஜான்சி ராணி லட்சுமி பாய் அவர்களின் பெயரை நேதாஜி வைத்தார். இதன் சிங்கப்பூர்ப் படையணிக்குக் காப்டன் லக்ஷ்மி, துணைத்தளபதி (கர்னல்)ஆகத் தலைமை தாங்கினார். ஒரிசாவைச் சேர்ந்த லக்ஷ்மி பாண்டே, மலேயாவைச் சேர்ந்த ஜானகி, ஆதிநாகப்பன், ராசம்மா பூபாலன் போன்றோர் இவ் அணியில் இருந்தனர்.

ஜான்சிராணி படையணி

சிங்கப்பூரில் இந்திய தேசியப்படை, தளபதி மோகன் சிங் தலைமையில் அமைந்திருந்தது. அதன் ஆக்க முயற்சியில் லக்ஷ்மிக்கும் மிக்க பங்கிருந்தது. சிங்கப்பூருக்கு நேதாஜி வந்தது முதல், தொடர்ந்து பொதுக் கூட்டங்களில் அவர் பல நாட்கள் பேசியதுடன், இந்திய விடுதலைக்கான போராட்டத்தில் மகளிரால் அமைந்த ஜான்சி ராணி படைப் பிரிவுக்குத் தலைமை தாங்கத்தக்க இந்தியப் பெண்மணி ஒருவரைத் தேடினார். தளபதி மோகன் சிங், லக்ஷ்மியை அறிமுகம் செய்ய, அப்பணி அவருக்கு ஆயிற்று. இவ்வாறு தற்செயலாகவும், எதிர்பாராதவிதமாகவும் பெற்ற தலைமையில் அவர் செவ்வையாகச் செயலாற்றினார். பெண்களைக் கூட்டித் தமிழில் பேசினார். இந்திய நாட்டின் சுதந்திரத்துக்கான போர். பெண்களே நீங்களும் சேர வேண்டும். தாய்நாட்டின் விடுதலைப்போர்...' எனக் குரல் கொடுத்துக் கூவி அழைத்தார். 5000 பெண்கள் பெயர் கொடுக்க முன்வந்தார்கள். கைக்குழந்தைக்காரிகள் முதல் தலை நரைத்த கிழவிகள் வரை யாரும் பின்தங்கவில்லை. சிங்கப்பூரில் 100 பெண்களைத் தேர்ந்தெடுத்தார். அடிப்படைப் பயிற்சி கொடுக்கப்பட்டது. பின்னர்க் கடுமையான ஆயுதப் பயிற்சியும் பெற்றார்கள். மூன்றே மாதத்தில் சிங்கப்பூரில் பெண்கள் படையணி ஒன்று தயாராயிற்று. தொடர்ந்து இதேபோல் பர்மாவிலும் பெண்கள் படையணி ஒன்றிற்கு லக்ஷ்மி பயிற்சி கொடுத்தார். ராணி ஜான்சி படையில் மெல்லமெல்ல ஆயிரம் பெண்கள் சேர்ந்தார்கள். இவர்களில் 200 பெண்கள் இராணுவ மருத்துவமனைகளில் பணியாற்றினார்கள். போர் முனையில் பணியாற்ற துப்பாக்கியால் சுடவும் இலேசு ரக இயந்திரத் துப்பாக்கிகளை (லைட் மெஷின்கள் என்ற ஆயுதத்தை) உபயோகிக்கவும் எறி குண்டு வீசவும் மற்றவர்கள் கடும் பயிற்சி பெற்றார்கள். பல மணி நேரம் சோறு தண்ணீர் இல்லாமல், தூக்கம் இல்லாமல் நடக்கவும் போர் புரியவும் உறுதி பெற்றார்கள் (இந்திய விடுதலைப் போரில்

பெண்கள், ராஜம் கிருஷ்ணன், நேஷனல் புக் டிரஸ்ட், 1997, பக். 81-82) எனத் தகவல்கள் உள.

லக்ஷ்மி தலைமை தாங்கிய ஜான்சி ராணி படைப்பிரிவில் (Rani of Jhansi regiment) ஒரு படையணிக்குரிய (brigade) எண்ணிக்கையிலான மகளிர் இருந்தனர். (இரண்டு, மூன்று அல்லது நான்கு பட்டாலியன் (battalions) உடையது ஒரு பிரிகேட்; சுமார் ஆயிரம் காலாட்களை உடையது ஒரு பட்டாளம் (battalion); அதாவது 2000 முதல் 4000 மகளிர் இருந்திருக்கின்றனர் எனக் கணக்கிடப்பட முடிகிறது. மருத்துவராகவும் அதே வேளை யுத்த வீரராகவும் அமைந்து சிறந்தவராக லக்ஷ்மி வெளிப்படுகின்றார். ஆசிய வரலாற்றிலேயே இத்தகு மகளிரணிப்படை இங்குதான் முதலானதாக ஒரு படைப்பிரிவாக அமைந்தது குறிப்பிடத் தக்கது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் தம் பகுதி ஆட்சியாளர் பக்கமாக இப்படை நின்று பொருதது.

1944இல் முதல் அணி சிங்கப்பூரிலிருந்து பர்மா வந்தது. இவர்கள் இந்திய எல்லையிலிருந்த இம்பாலைத் தாக்க எண்ணி மேமியோ என்ற இடத்தில் தாவளம் இட்டனர். பெருமழை காரணமாக முன்னேற இயலவில்லை; பின்வாங்கவேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டனர். ஜான்சிப் படையை நேதாஜி சிங்கப்பூர் திரும்பச் சொன்னார். ஆனால் கேப்டன் லக்ஷ்மி திரும்பவில்லை. ஆங்கிலேயரிடம் பிடிபட்டார். இரங்கூனில் வீட்டுக் காவலில் இவரை வைத்தனர். இந்தியாவுக்கு 1946 மார்ச் 4ஆம் நாள் இவர் கொண்டு வரப்பட்டபோது ஒரு வீராங்கனைக்குரிய பெரும் வரவேற்பு இவருக்குக் கிடைத்தது. இவரைச் சிறைப்படுத்தி வைப்பதால் எதிர்விளைவுகள் ஏற்படக் கூடும் எனக் கருதிய பிரிட்டிஷார் இவரை விடுதலை செய்தனர்.

படைத் தலைவியே அமைச்சர்

ஜான்சி ராணி படையணித் தலைவியாக இருந்தபோதே டாக்டர் லக்ஷ்மி, மகளிர் அமைப்புகளில் தலைமை தாங்கி, நேதாஜியின் 'ஆசாத் ஹிந்த்' (சுதந்திர இந்தியா) அமைச்சரவையில் அமைச்சராகவும் இருந்தார். இந்தியா சுதந்திரம் பெறுவதை எதிர்நோக்கி, சுபாஷ் சந்திர போஸ் சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசாங்கத்தை (Arzi Hukukate Azad Hind - Provisional Government of Free India) 1943 அக்டோபர் 21இல் அமைத்தார். அந்த அமைச்சரவையின் ஒரே பெண் அமைச்சர் என்ற பெருமை லக்ஷ்மியைச் சாரும்.

இந்தியாவில் லக்ஷ்மி

இந்தியாவுக்கு 1946இல் வந்த பின்பும் லக்ஷ்மி, இந்திய விடுதலைக்காகவும், இந்திய தேசியப் படைக் கைதிகளின் விடுதலை மற்றும் மறுவாழ்வுக்காகவும் சோர்வின்றி உழைத்தார். இந்திய நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து இப்படை வீரருக்காகப் பெரும் நிதி திரட்டினார். காலனி ஆதிக்கத்திற்கு எதிராகப் பொதுமக்களை விழித்தெழச் செய்தார். காங்கிரஸ் சேவா தளத் தொண்டர்களுக்கும் பயிற்சி அளித்தார்.

திருமணம் – குடும்பம்

இந்திய தேசியப் படையின் சிறைபிடிக்கப் பெற்ற வீரர்களுக்கெதிரான வழக்கு 1946ஆம் ஆண்டு நடந்தபோது, அவர்களுக்காக, ஜவஹர்லால் நேரு உட்படப் பல புகழ்பெற்ற வழக்கறிஞர்கள் வாதாடி விடுதலை பெற்றுத் தந்தனர். செங்கோட்டையிலிருந்து விடுவிக்கப் பெற்றவருள் ஒருவராக அமைந்த துணைத்தளபதி பிரேம் குமார் சேகள் (Col. Prem Kumar Sehgal) என்பவரை, லாகூரில் மார்ச் 1947இல் லக்ஷ்மி திருமணம் செய்தார். இவர், நீதிபதி அச்ரு ராம் சேகளின் மகனாவார். திருமணத்திற்குப் பின், தில்லிக்கு 450 கி.மீ. தென்கிழக்காக அமைந்துள்ள கான்பூரில் இவர்கள் குடும்பம் இருந்தது. இவர்களின் மகளான சுபாஷிணி அலி, கம்யூனிஸ்ட் கட்சியில் முக்கியப் பிரமுகராகவும், தொழிலாளர்க்காகக் குரல் கொடுப்பவ ராகவும், பெற்றோரைப் போலவே நாத்திகவாதி யாகவும் சுட்டப்படுகிறார்.

மீண்டும் மருத்துவப் பணி

பொது வாழ்க்கையில் தொட்க்கத்திலிருந்தே ஈடுபாடு கொண்டு பணியாற்றிய லக்ஷ்மி, திருமண வாழ்க்கையைக் கான்பூரில் தொடங்கியபின் அங்கே ஒரு மகப்பேறு மருத்துவ மனையை உருவாக்கினார். வாரத்தின் ஏழு நாட்களும் தினமும் காலை 9.00 மணி முதல் மாலை வரை மருத்துவப் பணியில் அயராது ஈடுபட்டார். மானுட சமுதாயத்திற்குச் சேவை செய்வதையே தன் சித்தாந்தமாகக் கொண்டதால் விருதுகளோ அரசியல் தொடர்போ அவரை வழிமாறச் செய்யவில்லை. கான்பூரில் முசுலீம்களுக்கு இவருடைய மருத்துவமனையில் மட்டுமே சிகிச்சை பெறும் வாய்ப்புக் கிட்டியது.

1947இல் இந்தியா பாகிஸ்தான் பிரிப்பின்போது, ஏராளமாக வரத் தொடங்கிய அகதிகளுக்கு மருத்துவச் சேவை

செய்தார். 1971இல் வங்க தேச அரசியல் நெருக்கடி ஏற்பட்டு அப்போதைய கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து மேற்கு வங்காளத்துக்கு ஏராளமாக அகதிகள் வந்தபோது, பாங்கோன் அகதிகள் முகாமில் பல மாதங்கள் தங்கிப் பணி புரிந்தார். கல்கத்தாவிலும் அகதிகளுக்கும் முகாம் அமைத்து மருத்துவ உதவிகள் செய்தார். 1984ஆம் ஆண்டு அக்டோபரில் இந்திரா காந்தி படுகொலையால் சீக்கியருக்கு எதிரான கலவரம் வெடித்தபோது, தன் மருத்துவமனைப் பகுதியிலுள்ள சீக்கியர் குடும்பங்களையும் கடைகளையும் சேதமுறாமல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டார்.

94 வயதாகும் லக்ஷ்மி, இன்றும் கான்பூரிலுள்ள தன் மருத்துவமனையில் நோயாளிகளைப் பார்வையிட்டு மருத்துவம் செய்கிறார்.

விருது

1998இல் இந்திய அரசு இவருக்குப் பத்மவிபூஷன் விருது அளித்துச் சிறப்பித்தது.

அரசியல்

இரண்டாம் உலகப் போர் முடியும் தறுவாயில் இந்தியாவுக்குத் திரும்பிய லக்ஷ்மி, சுதந்திர இந்தியாவின் அரசியலில் நுழைந்தார். இந்திய நாடாளுமன்றத்தின் மேலவை உறுப்பினராகப் பணியாற்றியதுடன், இடதுசாரி வேட்பாளராக 2002இல் இந்தியக் குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டார் (12ஆவது குடியரசுத் தலைவர்).

1971இல் இவர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)யில் இணைந்தார். இந்தியத் தேசியப் படைக்கும் சுபாஷ் சந்திர போசின் கருத்துக்கும் இது எதிர்ப்பதமாக அமைந்ததாகும். மாநிலங்களவையில் இந்தக் கட்சியின் பிரதிநிதியாக ஆனார். மகளிரியக்கம், வியாபாரிகள் சங்கம் ஆகியவற்றில் ஈடுபட்டார். 1981இல் தொடங்கப்பட்ட பேரமைப்பான அனைத்திந்திய மகளிர் சமஉரிமைக் கழகத்தின் துணைத் தலைவராக அமைந்தார்.

2002இல் இடதுசாரிக் கட்சிகள் நான்கின் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, சோசியலிஸ்ட் புரட்சிக் கட்சி, அகில இந்திய முற்போக்குக் கட்சி) சார்பில் குடியரசுத் தலைவர் பதவிக்கு முன்மொழியப்பட்டார்.

வெற்றி பெற்ற டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமை எதிர்த்த ஒரே வேட்பாளராகவும், குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட முதல் பெண்மணியாகவும் அமைந்தார். தேர்தலின் முடிவு எவ்வாறிருக்கும் எனத் தெளிவாகத் தெரிந்திருந்தபோதும், சாதீயத்துக்கும் சமயவாதத்திற்கும் எதிர்ப்புக் குரல் எழுப்பும் நோக்கிலேயே வேட்பாளரானார். இந்த வாய்ப்பைப் பயன் கொண்டு இந்திய மாநிலங்கள் பலவற்றிற்கும் சுற்றுப் பயணம் சென்ற அவர், நாடு எதிர்நோக்கும் முக்கியப் பிரச்சினைகள், சாதீய அமைப்புகளால் ஏற்படும் ஆபத்து, சமயம் கடந்த விழுமியங்கள், இலட்சக்கணக்கான மக்களை அழுத்து கின்ற வறுமையும் பிற குறைபாடுகளும், சிறுபான்மை இன மக்களுக்குப் பாதுகாப்பு, இந்தியாவின் பொருளாதாரத் தன்னிறைவு, காஷ்மீர் பற்றிய கண்ணோட்டம், அணுஆயுதக் கோட்பாடு என்பன பற்றிய தன் கருத்துகளை மக்களுக்கு முன் வைத்தார். போராட்டமும் தியாகமும் நிறைந்ததாக இவர் வாழ்க்கை அமைந்தது. பதவி நோக்கமன்றிக் கடமையுணர்வே இவரைக் குடியரசுத் தலைவர் வேட்பாளராக்கிற்று.

கருத்துகள்

சாதி, சமய, வர்க்கப் பிரிவினைகளின்றி மக்கள் ஒத்திசைவுடன் இணைந்து வாழவேண்டும் எனவும் அதுவே உண்மையான தேசியம் எனவும் கருதினார். குஜராத், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்கள் இயல்பு நிலைக்குத் திரும்பா விட்டால் நாட்டின் எதிர்காலம் இருண்டுவிடும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து விலகக் கடினமாகப் போராடி உயிர்த் தியாகம் பல செய்து, ரத்தம் சிந்தி, விடுதலை பெற்ற நிலையில், மீண்டும் பிரிட்டிஷ், அமெரிக்க நிறுவனங்களுக்கே வணிக நடவடிக்கைகளை வழங்குவது சரியன்று. அரசியல் அடிமைத்தனத்தை விட வெளிநாட்டுச் சக்திகள் மக்களை உறிஞ்சிவிடுகின்ற இந்தப் பொருளாதார அடிமைத்தனம் கொடுமையானதாகும். இத்தகு ஆதிக்கங்கள் நீக்கப்பெற்று, வெறுப்பும் கசப்புமில்லாத ஒரு புது இந்தியா உருவாக வேண்டும். சமூகப் பொருளாதார நீதியும், அனைவருக்கும் வேலையும் உள்ள நிலையாக இது அமைதல் வேண்டும். எல்லாரும் எல்லாமும் பெற்ற, ஏற்றத்தாழ்வற்ற நிலையே உண்மையான சுதந்திரமாகும். அகிம்சையை நேசித்த தேசத் தந்தை மகாத்மா காந்தியின் நாட்டில் அணு ஆயுதப் பரவலை ஆதரிப்பதை இவர் எதிர்த்தார். வெளி ஆதிக்கத்திலிருந்து சுதந்திரம் கிடைத்தபின்பும், சாதி

வர்க்கப் பெயர்களால் மக்கள் தங்களுக்குள் பொருது மாண்ட கலகங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அரசியல் தலைமையை இவர் கடிந்தார். எளிய மக்களுக்கும் பெண் களுக்கும் குழந்தைகளுக்கும் இழைக்கப்பெற்ற கொடுமை, விடுதலை இயக்கம் சரியான நெறியில் செல்லாமையையே வெளிப்படுத்துகிறது. சுயநலவாதிகளாகவும் பணத்தாசை பிடித்தவர்களாகவும் மக்கள் மாறி விட்டனர்; கடவுளுக்குப் பயப்படுகிறவர்களாகவும் சமய நம்பிக்கையுடையவராகவும், மாய்மாலம் செய்கின்றனர். சரியான தலைமையும் பின்பற்றப்பட வேண்டிய உயர்ந்த குறிக்கோள் களும் முன்வைக்கப்படவில்லை. விடுதலை இந்தியாவில் சமத்துவ சமுதாயமும் சமூக நீதியும் நிலவும் என்ற நம்பிக்கை பொய்த்துப் போனது; இந்தியா பிரிந்தது; ஏழை பணக்காரர் என்ற ஏற்றத் தாழ்வும் இடைவெளியும் ஏற்பட்டன. பணம் சம்பாதிக்க எதையும் செய்ய மனிதன் துணிந்தான். இதனால் இந்தியாவின் நிலைமை சீரழிந்தது. 'காசே தான் கடவுளடா' எனப் பணம் சம்பாதிக்க எத்தகைய தவற்றையும் இழிசெயலையும் செய்ய முனைந்தவர்கள் தண்டிக்கப்படாது போனதால், பிறரும் வழிமாற ஏதுவாயிற்று. இன்று ஏழ்மை என்பதே இந்தியாவை வருத்தும் மிகப் பெரும் பிரச்சினையாகும். உலகளாவிய நிலையில் பார்த்தவரை (அமெரிக்கா தவிர), ஆப்பிரிக்க நாடுகளில் கூட இந்த அளவு அழுக்கும் வறுமையும் காணப்படவில்லை. தீவிரமான சமூகப் புரட்சி ஒன்று ஏற்பட்டால் தான் பழம் பஞ்சாங்கப் பழக்கவழக்கங்கள் ஒழியும். கல்வி இலவசமாக அனைவருக்கும் கிடைக்க ஏதுவாகும். அதனால் எல்லா மக்களும் பயன்பெறுவர். மக்கள் சிறிதுகூடக் குடிமைப் பண்பும் சூழல் சிந்தனையுமின்றித் தம்மால் உருவாகிய அழுக்கை அள்ளி நீக்கப் பிறரை எதிர்நோக்குகின்றனர்; சாதீயமும் வர்க்க மனப்பான்மையும் அவர்கள் குருதியில் ஊறிக் கிடக்கின்றன.

பேச்சு வார்த்தையால் மட்டுமே இந்தியா பாகிஸ்தான் அமைதி காக்கப்பட முடியும். எப்போதுமே போர் ஒரு தீர்வாக இயலாது. ஜம்மு காஷ்மீர் பிரிக்கப்பட முடியாத இந்தியப் பகுதியாகும். இந்தியாவின் மணிமுடியாக அமையும் இதனைப் பிரிப்பது என்பது தேசியத்துக்கு எதிரிடையான சிந்தனையாகும். இந்தியர் போராடிப் பெற்ற விடுதலையை மறுதலிப்பதாகும். இரட்டைத் தேசியக் கோட்பாடு இந்தியாவைச் சிதைத்துவிடும். முசுலீம்களின் நாடு எனப் பாகிஸ்தான் தனியாகப் பிரிக்கப் பட்டதே அடிப்படையில் தவறாக அமைய, ஜம்மு காஷ்மீர் பிரிக்கப்பட்டால் அது பெருந்தவறாகிவிடும். சமய ஒருமைப்

பாடுடைய நாடாக இந்தியா அமைவதே சுதந்திரத்திற்குப் போராடிய அனைவரின் பொதுக் கருத்தாகும். காஷ்மீர் மக்களும் இந்தியாவுடன் இணைந்திருப்பதையே விரும்புகின்றனர். பாகிஸ்தானுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையிலும் இவர்கள் இந்தியப் படையை ஆதரிக்கவே செய்தனர். எனினும் இப்பகுதியை இனிமேலும் ஒரு படைத்தளமாகத் தொடர்ந்து கையாளாது, கூடுதல் தன்னாட்சியளித்து, வளர்ச்சிப் பணிகளுக்கு இடமளிப்பதே மேற்கொள்ளப்பட வேண்டிய செயலாகும்.

எதிர்கால இந்தியாவைப் பெண்களே காக்கமுடியும். இந்திய மக்கட் தொகையில் சரி பாதிக்கு மேல் பெண்களாக அமைகின்றனர். கல்வியும் வாய்ப்பும் கொடுக்கப்பட்டால் அவர்களால் தங்களை மட்டுமல்ல சமுதாயத்தையும் மேம்பாடு அடையச் செய்ய முடியும். வலிமையற்றவர் எனவும் திறமை யற்றவர் எனவும் கூறி நூற்றாண்டுக் காலமாக ஒடுக்கப்பட்டிருந்த பெண்கள் எழுச்சியுற்றால் சமுதாயப் புரட்சி ஏற்பட்டுப் பெருமாற்றங்கள் உருவாகும். வீரமும் தைரியமும் நிறைந்த பல பெண்கள், இனவெறிக் கலவரங்கள் நடந்தபோது சிறுபான்மையினர் பலரைப் பாதுகாத்துக் காப்பாற்றியுள்ளனர். இன்னும் மிகுதியான துறைகளில் பெண்கள் ஈடுபடுவதும், மேலும் கூடுதலான உரிமைகள் அவர்கட்குக் கொடுக்கப் படுதலும், மகளிருக்கு உரிய ஒதுக்கீட்டைச் சட்டமாக்கி அளித்தலும் அவரை மேம்பாடடையச் செய்யும்.

தாராளமயமாக்கம் என்பது சரியானதேயல்ல. இதனால் பயனடைவோர் யார்? இக்கோட்பாட்டால் ஆயிரக்கணக் கானோர் பணியிழந்துள்ளனர். இப்போது தேவை புதிய வேலை வாய்ப்புகளாகும். ஆனால் கல்வி கொடுக்கப்பட்டாலன்றி இது சாத்தியமாகாது. கணினியும் புதிய தொழில்நுட்பங்களும் இன்று இருப்பினும் இவை கிடைக்கப்பெறாத எண்ணிறந்த மக்கட்கு என்று எப்படி இவை சென்று சேரும். பள்ளிக்குக் கூடத் தங்கள் பிள்ளைகளை அனுப்ப இயலாத ஏழைப் பெற்றோர் செலவு மிகுந்த கல்வியை எப்படிக் கொடுக்க முடியும்? மருத்துவ வசதியும் பணமுள்ளவர்களுக்கே பெறமுடியும் நிலையில் இவர்கள் மக்கி மடியத்தான் இயலும். உண்மையான சமத்துவம் ஒன்றே இந்நிலையை நேர் செய்ய முடியும். இன்றைய நிலையில் கல்வியே மிகமிக இன்றியமையாதது. ஆரம்பப் பள்ளியிலிருந்தே இது தொடங்கினால்தான் அனைத்தும் சரிசெய்யப்பட முடியும். மனித உரிமைகளைப் பற்றிப் பேசிமட்டும் பயனில்லை; அதை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

இவ்வாறு, அரசியல், சமூகம், பொருளாதாரம், பிற நாடுகளுடனான உறவு, தேசியம், சுதந்திரம், பொதுமக்கள் நிலை, மகளிர் மேம்பாடு, கல்வி, உரிமைகள் எனப் பல துறை பற்றிய சிந்தனைகளும் இவரிடம் வெளிப்பட்டுள்ளன.

அறியப்பட்டமை

குடியரசுத் தலைவர் பதவி வேட்பாளராக இவர் முன்மொழியப்பட்டபோது, இளந்தலைமுறையினர் பலரால் இவர் அறியப்பட்டவராகக் காணப்படவில்லை. மறக்கப்பட்ட பல விடுதலைப் போராட்டத் தியாகிகள் போல இது ஆயிற்று. அரசியல் வாதிகளும் சில அரசியல் தலைவர்களும் கூட இதில் அடங்குவர். மேடை முழக்கங்களும் பத்திரிகைச் செய்திகளும் பிற ஊடகங்களும் இவரைப் பற்றிய உண்மைகளை, வரலாற்றை வெளிக்கொணர்ந்தன. மக்கள் வாக்களிப்பதாக இருந்தால் குறிப்பாக, மகளிர், இளைஞர் வாக்குகள் தமக்கே கிடைக்கும் என மொழிந்தார். 11 இலட்சம் வாக்குகள் இருந்தால், ஒரு இலட்சம் வாக்குகளே தமக்குக் கிடைக்கும் என்பதற்குக் காரணம் தன் கோட்பாடுகளைப் புரிந்து வாக்களிக்கும் அவரைப் போலன்றி மற்றோரெல்லாம் கட்சி சார்புடன் ஆளுங்கட்சி வேட்பாளர்க்குத் தங்கள் வாக்குகளை வழங்குவதேயாகும் எனச் சுட்டினார்.

1945-46 காலக்கட்டத்தில் இவர் இந்தியாவிலும், தமிழகத்திலும் நன்கு அறியப்பட்டிருந்தார். இரண்டாம் உலகப் போர் முடிந்து, சுதந்திரப் போராட்டத்தின் உச்ச நிலை மாறி, இடைக்கால அரசு ஏற்பட்டு, மக்கள் வாழ்வு நெருக்கடியாக இருந்த காலம் அது.

> *அப்போது நவராத்திரி விழா வந்தது. கடையில் புதிய கொலு பொம்மைகள் வந்திருந்தன. சுதந்திரப் போராட்டக் காலத்தில் காந்தி, நேரு பொம்மைகள் வந்தன. அந்த வருசம், நேதாஜி போஸ் பொம்மை வந்தது. அத்துடன் அதே மாதிரி சாய்ந்த ராணுவத் தொப்பி, பித்தான் தைத்த ராணுவச் சட்டை, நிஜார், முழங்கால் வரை ஜோடு.... ஒரு பெண்மணியின் பொம்மை ஜெய் ஹிந்த் என்று நெற்றியில் சலாமிடும் கை. யார் இவர்? இவர்தான் கேப்டன லட்சுமி*
>
> *(மு.சு., ப. 79)*

என ராஜம் கிருஷ்ணன் கூறுகிறார். இந்திய விடுதலைக்காகப் போராடிய பெண்மணியாகவே இவர் முதலில் அறியப்படுகின்றார். சிங்கப்பூரிலிருந்து இந்தியா வந்த போது பத்திரிகைகள் அவரைப் பறறிப் பரவலாக எழுதின.

தகவல் களம்

அரசியல், சமூகம் ஆகிய இரு தளங்களிலும் பங்களிப்புச் செய்த டாக்டர் லக்ஷ்மி சேகள் பற்றிய தகவல்களை அறியச் சில களங்களே கைவந்தன. ராஜம் கிருஷ்ணன் 'இந்திய விடுதலைப் போரில் பெண்கள்' பற்றி எழுதும்போது இவரைப் பற்றிய தகவல்களையும் தருகின்றார். இணையத் தளத்தின் பல பக்கங்கள் மேலும் இவரைப் பற்றி அறியக் களனாகின்றன. விகிபீடியா கலைக்களஞ்சியம் இவரது வாழ்க்கை வரலாற்றைத் தெளிவுபடத் தந்துள்ளது. 'லக்ஷ்மி சேகள்: சேவையில் ஒரு வாழ்க்கை' (சுபாஷிணி அலி), 'இந்தியாவின் ஐம்பது புகழ்மிக்க மகளிர்' (இந்திரா குப்தா), 'லக்ஷ்மி சேகள்: போராட்டமும் தியாகமுமான வாழ்க்கை' (சாம்பவிக சர்மா) என நூல்களும் கட்டுரைகளும் ஆங்கிலத்தில் தெரியவருகின்றன. இந்துப் பத்திரிகையின் இதழான 'ப்ரண்ட் லைன்' (Front line), மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பத்திரிகையான 'பீப்பிள்ஸ் டெமோக்ரசி' (People's Democracy) என்பனவும் பிறவும் இவரைப் பற்றிய கட்டுரைகளை வெளியிட்டுள்ளன. குடியரசுத் தலைவர் பதவிக்கான வேட்பாளராக நின்ற காலத்தில்தான் பத்திரிகை ஊடகங்கள் இவருக்கு மிகுதியான முதன்மை தந்துள்ளன. இவரது பேட்டிகளும் (Rediff Interviews), இவரது வாய்மொழியாக இவரது சிந்தனைகளை அறிய இணையத்தில் களம் வழங்கியுள்ளன.

நிறைவு

இளமை வாழ்வும் கல்வியும் தமிழகத்தில் அமைந்ததும், பெற்றோர் சென்னையில் பணிபுரிந்ததும் இவரைச் சாதனை புரிந்த தமிழகப் பெண்மணியாகக் கொள்ளச் செய்கின்றன. நேதாஜியின் மகளிர் படையணிக்குத் தலைமை தாங்கியது, சேவை மனப்பான்மையுடன் மருத்துவப் பணியில் தொடர்வது, குடியரசுத் தலைவர் பதவிக்கு வேட்பாளராக அமைந்த முதல் பெண்மணியானது, மகளிருக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து வருவது என்ற பலவற்றை இவருக்குரிய சாதனைகளாகக் கருத முடிகிறது.

தில்லையாடி வள்ளியம்மை

அரங்க மல்லிகா

வரலாறு அடிமைகளை உற்பத்தி செய்கிறது. அடிமைகளைக் குழுவாக உற்பத்தியில் பயன்படுத்துவது வழக்கமாக இருக்கிறது. பிறரது வளர்ச்சிக்கு, அடிமைகளின் உழைப்பு அடிப்படையாகிறது. அடிமைகளைத் தங்களின் அதிகாரக் கட்டுக்குள் வைத்துக் கொள்ள ஆதிக்கவாதிகள் தொடர்ந்து சில சட்டத்திட்டங்களை வகுத்து வைத்துள்ளனர். அந்தச் சட்டத்திட்டங்கள் ஊருக்கு ஊர், நாட்டுக்கு நாடு மாறுபாடு கொண்டதாக இருக்கின்றன.

இனவேற்றுமை, சாதி வேற்றுமை, மத வேற்றுமையும் அடிமை வரலாற்றுக்குட்பட்டவைதான்.

வெள்ளையர் X கருப்பர், ஆங்கிலேயர் X இந்தியர், காலனித்துவம் X விடுதலை என ஆதிக்கம் X அடிமை வரலாற்றை விரித்துப் பொருள் புரிந்து கொள்ளலாம். நிறவேற்றுமை உணர்வு கொண்ட தென்னாப்பிரிக்க வெள்ளையர் இந்தியருக்குத் தொல்லை கொடுப்பதாக இருந்து வந்துள்ளனர். இந்தியர்களின் கடுமையான உழைப்புதான் தென்னாப்பிரிக்க அரசுக்கு நெருக்கடியானது. இந்தியர்களுக்கு எதிராக, சட்டங்களை வகுத்தது. 1. தென்னாப் பிரிக்காவில் உழைக்கச் சென்ற இந்தியர்கள், ஒப்பந்தத் தொழிலாளிகள் விடுதலை அடைந்த பின் அங்கே தங்கவிரும்பினால் மிகுந்த வரி செலுத்த வேண்டி யிருந்தது. 2. அனைத்து இந்தியர்களும் தங்கள் அடையாள அட்டையை வைத்திருக்க வேண்டுமென்றும், காவலர்கள் கேட்கும் போது அதனைக் காட்டவேண்டும் என்றும் கூறப்பட்டது. 3. அத்துடன், இந்தியத் திருமணங்கள் செல்லாது எனவும் கூறப்பட்டது. இந்தச் சட்டங்களை இந்தியர்களுக்கு எதிராகப் பயன்படுத்திய தென்னாப்பிரிக்க அரசை எதிர்த்தவர் அண்ணல் காந்தியடிகள். சத்தியாகிரகப் போராட்டமாக அடையாளப் படுத்தப்பட்ட இதன் மையப் புள்ளி உண்மையும், அஹிம்சையாகும்.

1913ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் நாள் கேப் உயர்நீதி மன்றத்தில் நீதிபதி 'சியர்லே' என்பவர் தீர்ப்பு ஒன்றை வழங்கினார். "தென்னாப்பிரிக்காவில் கிறித்துவச் சடங்குப்படியும் திருமணப் பதிவுச் சட்டப்படியும் நடக்காத எந்தத் திருமணமும் செல்லாது"

என்பதே அத்தீர்ப்பு. இந்தியர்கள் தங்கள் வழக்கப்படிச் செய்த திருமணங்கள் செல்லாதவையாகக் கருதப்படுவதை எதிர்த்தனர். இந்தியக் கூலிகளுக்குக் குடியுரிமை வழங்கத் தென்னாப்பிரிக்க அரசு மறுத்ததைக் கண்டித்தனர். அவர்களுக்குக் கடுமையான வரி விதித்ததைச் சாடினர். தென்னாப்பிரிக்கா முதலாளிகள், இந்தியக் கூலிகளுக்குக் கொடுத்து வந்த கொடுமைகளை எதிர்த்து விடுதலை பெற முடியாது தவித்தனர்.

இந்தியரின் சுயமரியாதைக்கு இழுக்கு ஏற்படுத்திய தீர்ப்பினை எதிர்த்து, வழக்கறிஞராகப் பணியாற்ற தென்னாப்பிரிக்கா வந்த காந்தியடிகள் தனது வழக்கறிஞர் பணியை விட்டு, இந்தியர்களின் உரிமைப் போராட்டத்திற்குத் தலைமை ஏற்றார். அவருடன் போராடியவர்கள் தமிழர்கள். சத்தியாக்கிரகப் போராட்டப் பேரணி 1913 அக்டோபர் 29 அன்று ஜோகன்ஸ்பர்க்கிலிருந்து நியூகேசில் நோக்கிப் புறப்பட்டது. அதில் மொத்தம் 16 பெண்கள். அவர்களில் 10 பேர் தமிழ்ப் பெண்கள். ஐந்து பெண்கள் கைக்குழந்தையுடன் கலந்து கொண்டனர். நிறைமாத கர்ப்பிணிப் பெண்ணும் இவர்களுடன் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. இது பெண்களின் உரிமை வேட்கை - எழுச்சியுடன் நடைபெற்றது. வழிநெடுக சத்தியாக்கிரகிகளுக்குத் தொண்டு செய்தபடித் தாய் ஜானகியுடன், வள்ளியம்மை பேரணியில் கலந்துகொண்டது வரலாறாகியுள்ளது.

நாகை மாவட்டம் தரங்கம்பாடி தில்லையாடியில் வாழ்ந்த முனுசாமி என்பவர் தமது வாழ்க்கைத் துணைவி ஜானகியோடு ஒப்பந்தத் தொழிலாளியாக வேலை செய்து பிழைக்க, தென்னாப்பிரிக்கா வந்தார். அங்கே சிறுகடை வியாபாரியாக இருந்த முனுசாமி தம்பதியருக்கு 1898இல் வள்ளியம்மை பிறந்தாள். ஆங்கிலப் பள்ளியில் படித்தவள். நிறவெறிக் கொடுமையை எதிர்த்துக் காந்தியடிகளுடன் அறப் போராட்டத்தில் ஈடுபட்டவள்.

அடுப்பூதும் பெண்கள் அரசாளும் தகுதி படைத்தவர்கள். அழகை மட்டும் ஆராதிப்பவர்கள் அல்லர். வீட்டின் நலனில் அக்கறை காட்டுபவர்கள் மட்டுமல்ல. அரசு அதிகாரத்திற்கு எதிராகப் போராடத் துணிவு கொண்டவர்கள். இந்த நோக்கில் வள்ளியம்மையின் அறப்போராட்டம் பெண்ணிய அரசியலில் குறிப்பிடத்தக்கது. வள்ளியம்மை சமூகவிடுதலை விரும்பியாக இருந்தமைக்கு அவரின் குடும்பப் பின்னணி காரணமாக இருந்திருக்கிறது. இந்திய விடுதலைப் போரின் தாக்கமும் காரண

மாகிறது. தில்லையாடி கே.எஸ். தட்சிணாமூர்த்தி ஆச்சாரியார் 1940ஆம் ஆண்டில் தமக்குத் திருமணம் நிகழ்ந்த 13ஆம் நாள், 'வெள்ளையனே வெளியேறு' என்னும் புரட்சி இயக்கத்தின் ஆணைப்படி வெள்ளை அரசின் அன்றாட நடைமுறைகளைக் கெடுப்பதற்காகக் குடந்தை நாச்சியார் கோவில் அருகில் உள்ள அழகாபுத்தூர் ஆழியான் மதகு பாலத்தைத் தபால் வண்டி செல்லாமல் தடுப்பதற்காகத் தகர்த்து இருக்கிறார். இந்தச் செயலுக்காகக் குடும்பத்தினருடன் குடந்தைத் துணைச் சிறையில் (Sub Jail) ஆறு மாதங்கள் அடைக்கப்பட்டார். தில்லையாடி வரலாறு இங்கிருந்து தொடங்குவதாகக் கருத வாய்ப்பிருக்கிறது.

ஜோகன்ஸ்பர்கிலிருந்து நேட்டாலில் உள்ள நியூகேசில் நோக்கிப் புறப்பட்ட சத்தியாக்கிரகக்குழு, நேட்டாலிலிருந்து டிரானஸ்வாலுக்கும், டிரான்ஸ்வாலில் இருந்து நேட்டாலுக்கும் அரசு அனுமதியின்றி நுழைவது குற்றமாகக் கருதப்பட்டது. எனவே, டிரான்ஸ்வால் எல்லையை அவர்கள் மீண்டும் கடக்கும்போது வால்க்ஸ்ரஸ்டு என்ற இடத்தில் கைது ஆயினர். 22-12-1913இல் வள்ளியம்மை கைது செய்யப்பட்டார். இப்போராட்டத்தில் செல்வன், சூசை, பச்சையப்பன் ஆகியோர் வெள்ளையரின் துப்பாக்கிச் சூட்டில் பலியாகிவிட்டார்கள்.

தம்பி நாயுடு, வீராச்சாமி நாயக்கர், சிவலிங்கம் பிள்ளை, ரெங்கசாமி பிள்ளை, இராமசாமி, ஹரிலால் (காந்தியின் புதல்வர்) ஆகியோரும் கைது செய்யப்பட்டனர். தில்லையாடி அ. சுப்பிரமணிய ஆச்சாரியாரும் ஆர். அண்ணாமலைச் செட்டியாரும் போராட்டத்தில் பங்கேற்றுச் சிறை சென்றுள்ளனர். இவர்கள் தில்லையாடியிலிருந்து தென்னாப்பிரிக்கா சென்று நாடு கடத்தப்பட்டு மீண்டும் தில்லையாடி வந்து சேர்ந்தவர்களாவர்.

வள்ளியம்மை 'மணிட்ஸ் பர்க்' சிறையில் 3 மாதங்கள் கடுங்காவல் தண்டனை அனுபவித்தார். கொடுமையான சித்திரவதைகளை அனுபவித்தார். அதனால் உடல்நலம் பெரிதும் பாதிக்கப்பட்டது. சிறையில் கடுங்காய்ச்சலால் அவதியுற்ற வேளையில் விடுதலையாகி எலும்பும் தோலுமாக வெளியில் வந்தார். பெண்கள் சமூகம் சார்ந்து இயங்குவது குறைவு. எனினும் இயங்கியவர்கள் வரலாற்றில் மைல்கல்லாக உள்ளனர். குடும்பத்தில் மட்டும் கவனம் செலுத்துபவர்கள் ஒரு புறம் இருந்தாலும் அவர்கள் பொதுவாக மதிப்பிற்குரியவர்கள் என்றாலும், பெண்களுக்கே உரித்தான பொதுக் குணங்களிலிருந்து

சற்று வேற்று அடையாளத்துடன் வாழ்பவர்களைப் பெண்ணிய அரசியலுக்குரியவர்களாகக் கருதுவதுண்டு.

பெண்கள் இயக்கமாக இயங்குவதைத்தான் பெண்ணியம் என்று கூறுவது இயல்பு. காந்தியின் சத்தியாக்கிரகப் போரில் பெண்கள் அதிக அளவில் பங்கெடுத்துக் கொண்டனர் என்பதை பெண்ணியத்திற்குள் பார்க்க இயலும். 2037 ஆண்கள், 127 பெண்கள், 75 குழந்தைகளுடன் காந்தி டிரான்ஸ்வால் என்ற பகுதிக்குள் நுழைந்தார். அப்போது போலிஸார் ஒன்றும் செய்ய வில்லை. அன்று இரவு படுக்கப்போகும்போது அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். போராட்டம் தீவிரமடைந்தது. இதனால் தென்னாப்பிரிக்கா அரசுக்குப் பலம் ஏற்பட்டது. இந்தியர்கள் விஷயத்தில் தென்னாப்பிரிக்கா அரசு கடை பிடிக்கும் கொள்கை சரியில்லை என்று இந்தியாவின் வைசியராக இருந்த ஹார்டிங் பிரபு கண்டித்தார். தென்னாப்பிரிக்க அரசின் போக்கு இங்கிலாந்து அரசுக்கும் அதிருப்தியளித்தது. இதனால் காந்தியுடன் பிரதமர் ஸ்மட்ஸ் நடத்திய சமரசப் பேச்சின் முடிவில் இந்தியருக்கு எதிரான கறுப்புச் சட்டம் விலக்கப்படு வதாகவும், இந்தியத் திருமணங்கள் செல்லுபடியாகும் என்றும் அறிவித்தனர். 1914 ஜனவரி 21 ஆம் நாள் இந்தியர்களின் கோரிக்கை ஏற்கப்பட்டதால் போராட்டம் நிறுத்தப்படுவதாக அறிவித்தார்.

இந்தப் போராட்ட வெற்றிக்கு, அன்னை கஸ்தூரி பாய் உட்பட்ட ஏராளமான பெண்கள் பங்கெடுத்துக் கொண்டமை மிக முக்கியப் பதிவாகும். இதில் வள்ளியம்மையின் பங்கு குறிப்பிடத்தக்கது. பொதுவாகப் பெண்கள் சமூகத் தளத்தில் இயங்க வரும்போது உயிரையும் இழக்க நேரிடும் சூழலையும் எதிர்கொள்பவர்களாக இருப்பர். துணிவும், தன்னம்பிக்கையும் ஊன்றுகோலாக இருக்கும். சிறை வாழ்க்கைக்குத் தங்களை தயார்படுத்திக் கொள்வர். வள்ளியம்மையும் இதற்குட்பட்டவர்தான். வள்ளியம்மை நாட்டுக்காக உயிர்விடுவதைப் பெருமையாகக் கருதினார். எனினும் வள்ளியம்மை மரணத்தோடு போராடிய நேரத்தில், காந்தி, வள்ளியம்மையிடம், "நீ சிறை சென்றதற்காக வருந்துகிறாயா?" என்று கேட்டார். "வருத்தமா? எனக்கா? மீண்டும் ஒரு முறை கைது செய்யப்பட்டாலும் நான் சிறை செல்லத் தயார்தான்" என்றார் வள்ளியம்மை. அதனால் நீ இறந்துபோவதாக இருந்தால் என்ன செய்வாய்?" எனத் தொடர்ந்தார் காந்தி. "நாட்டிற்காக உயிர்விடுவதாக இருந்தால் பெருமையோடு அதை

எதிர்கொள்வேன்" என்றார். "காலா! உனை நான் சிறுபுல்லென மதிக்கின்றேன்; என்றன் காலருகே வாடா! சற்றே உனை மிதிக்கிறேன்" என்ற பாரதியின் வரிகளுக்கு உயிர் தந்தவர் வள்ளியம்மை. புறநானூற்றில் ஒரு பாடலுண்டு.

சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுளனோ என வினவுதி; என் மகன்
யாண்டு உளன் ஆயினும் அறியேன்; ஒரும்
புலி சேர்ந்து போகிய கல்லளை போல,
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே (86)

என்று வீரனைப் பெற்றெடுத்த புலி தங்கும் குகை போன்ற வயிற்றை உடைய தாயின் வீர மகனைப் போல, வீரமகள் வள்ளியம்மை என்பதால்தான் காந்தியடிகள் இந்தியா வந்தபின், தில்லையாடி ஊரைச் சென்று பார்த்தார். காந்தியடிகளின் மனதில் தங்கியவர் வள்ளியம்மை.

இந்தியன் ஒப்பீனியன் என்னும் பத்திரிகையில் வள்ளியம்மையைப் புகழ்ந்து பாராட்டி ஓர் உரை எழுதியிருக்கிறார். "இந்தியாவின் புனித மகள் ஒருத்தியை இழந்துவிட்டோம். எனது தமையனாரின் மரணத்தை விடவும் வள்ளியம்மையின் மரணம் எனக்குப் பேரிடி. வள்ளியம்மையும் நாகப்பனும் செய்த தியாகம் நான் உட்பட இந்தியர் அனைவரின் சேவைகளையும் சிறியதாக்கிவிட்டது.... அவள் தனது தியாகத்தால் தனக்கென ஓர் அழியாத ஆலயத்தை அமைத்துக் கொடுத்தாள். இந்தியா வாழும் வரையில் தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரக வரலாற்றில் வள்ளியம்மையின் பெயர் நிலைத்துநிற்கும்" என எழுதியுள்ளார்.

1969ஆம் ஆண்டு அக்டோபர் 22ஆம் நாள் தில்லையாடியைத் தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் மாதிரி கிராமமாக மாற்றும் பணியை மேற்கொண்டார். 13-8-1971 அன்று வள்ளியம்மை அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார். வள்ளியம்மை மாணவியர் விடுதி, தியாகி வள்ளியம்மை மண்டபம் ஆகியன கட்டப்பட்டன. அதில் விடுதலை உதயத்தையும் அடிமை விலங்கை ஒடிப்பதையும் காட்டும் முறையில் அமைந்த ஸ்தூபியையும் அதில் பொறிக்கப்பட்ட நேருவின் உரையையும் காணமுடிகிறது. வள்ளியம்மை மண்டபத்தில் வள்ளியம்மையின் உருவச்சிலையும், வீரமாதர் எழுச்சி நடைபயணத்தைச்

சித்திரிக்கும் ஓவியமும் இடம்பெற்றுள்ளன எனத் தில்லையாடி வீ. தமிழன்பன் குறிப்பிட்டிருக்கிறார்.

காந்தியடிகள் எழுதிய சத்திய சோதனையில் வள்ளியம்மை உடல் மறைந்துவிட்டது; ஆனால் அவர் பெயர் சிரஞ்சீவியாக என்றும் நிலைத்திருக்கும் என எழுதியுள்ளார். அது உண்மை.

துணை நூல்கள்

1. இராஜம்கிருஷ்ணன், இந்திய விடுதலைப் போரில் பெண்கள்.
2. தில்லை வள்ளியம்மை நூற்றாண்டு பொன்விழா மலர், காந்திப் பேரவை, சென்னை - சித்தார்த்தா பள்ளி, ஈரோடு,
3. சுனிதா பூபாலன், விடுதலைக்கு வித்திட்ட வீரப் பெண்மணிகள், வானதி பதிப்பகம், 2005.
4. வீ. தமிழன்பன், தென்னாப்பிரிக்கா தியாகி தில்லையாடி வள்ளியம்மை (கட்டுரை) நன்றி (தோழர் அரச முருகு பாண்டியன்)
5. ஞானி, நெருப்பு மலர்கள், விகடன் பிரசுரம், 2006.
6. அ. சிவசுப்பிரமணியன், அடிமை வரலாறு, காலச்சுவடு, 2007.

மதுரை கே.பி. ஜானகியம்மாள்

க.அ. ஜோதிராணி

இந்தியாவில் அந்நிய ஆட்சி நிலைகொண்டிருந்தபோது அடிமைப்பட்ட இத்தேசத்தில் ஆங்கிலேயருக்கு எதிரான அறைகூவலைத் தமிழகம் விடுத்தது. இந்திய விடுதலைப் போராட்டமாக அது வடிவெடுத்தபோது ஜான்சிராணி, ருக்மணி லட்சுமிபதி, முத்துலட்சுமி போன்றோர் தங்களது பங்கைச் சிறப்பாக அளித்திருக்கின்றனர் என்பதை வரலாற்று நூல்கள் நமக்குச் சொல்லுகின்றன. எனினும் ஆங்கிலேய ஏகாதிபத்தியம் குரலெடுத்தபோது அதை எதிர்த்துக் கலைகளின் வாயிலாக எதிர்ப்புக் குரலைப் படையாகத் திரட்டியவர்கள் தமிழகப் பெண்கள். அந்நியரான ஆங்கிலேயரோடு ஆளுமைப் பார்ப்பனீயமும் காழ்கொண்டிருந்ததால் சமூகத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வு, சாதீய அடிமை, தீண்டாமை இவை கிளை பரப்பி இருந்தன. அவற்றைப் பூண்டோடு அழிக்கின்ற போர்முனைக் களமும் அப்போதே உருவாகத் தொடங்கியிருந்தது.

சுதந்திரப் போராட்டக் காலத்தில் சமூக ஏற்றத் தாழ்விற்கான போராட்டமும் முத்துலட்சுமி போன்றவர்களால் தீவிரமடைந்திருந்தது. அதை நாம் எண்ணிப்பார்க்கும் வேளையில் தமிழ்க் கலைத்துறையிலும் சாதீயப் பாகுபாடு காட்டப்பட்டிருந்ததை எதிர்த்துத் தம்மை ஒரு சாதீய மறுப்புக் கலைஞராக வெளிப்படுத்தியவர் 'மதுரை கே.பி. ஜானகி'. அவரது சிந்தனையின் வலிமையை அறிந்தவர்கள் குறிப்பாக விடுதலைப் போராட்ட வீரர்கள், தலைவர்கள், கே.பி. ஜானகியம்மாளின் பங்களிப்பினைச் சுதந்திரப் போராட்டக் களமான மேடை களிலும் ஒலித்திடுமாறு கேட்டுக் கொண்டனர். அதற்கிணங்கத் அம்மையார் தம்மைச் சுதந்திரப் போராட்டத்திற்கு அர்ப்பணிக்கத் துணிந்தார். பாடல், இசைத் தட்டு வெளியிடல், மேடை நாடகம், மேடை உரைவீச்சு எனச் சுதந்திரப் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டார்.

நடந்ததை எண்ணிப் பார்ப்பதும் நடப்பியலோடு பொருத்திப் பார்ப்பதும் சமூக வரலாற்றில் உண்மையைத் தேடும் அரிய முயற்சி. உண்மையான வரலாற்றை வரையறுக்கும் பணி நம்முன் நிற்பதால் களம் சென்று தரவுகளைச் சேர்ப்பதும்

அவற்றைச் சமூகத்திற்கு அளிப்பதும் தேவையாகிறது. மதுரை ஜானகி அம்மா பற்றிய நேர்காணல் செய்தியோடு ஒரு அம்மாவின் கதை, அம்மா ஜானகி தொகுப்பு நூல்கள் மற்றும் செய்தித்தாள் கட்டுரைகள் என ஒரு முழுமையான வரலாற்று நூலிற்கான தரவுகள் இக்கட்டுரையில் முறைப்படுத்தப்பட்டு இருக்கின்றன. இந்திய விடுதலைப் போராளியான கே.பி. ஜானகி அம்மாள் வரலாறு தமிழ்க் கலைப்பண்பாட்டு வரலாற்றில் குறிப்பாக நாடகம், இசை, பாட்டு, உரைவீச்சு என முத்திரை பதித்தவர். இவர் இந்திய விடுதலைப் போராட்டத்திற்கெனத் தன்னை இந்திய தேசியக் காங்கிரஸ் உறுப்பினராக்கிக் கொண்டவர். உறுப்பினரான பின்பு தமது நாடகத் திறனையும் வளமான குரலையும் இணைத்துக் கொண்டு இயக்க மேடைகளில் தொடர்ந்து பேசியும் வந்தவர். அவரை ஆங்கிலேய ஏகாதிபத்திய ஆட்சி பலமுறை சிறையில் அடைத்தது. தம் கலைத்திறன்களால் மக்கள் மனதில் பெரும் புரட்சியை விதைத்தவர் என்று சொல்லுமளவில் தம் நாடக இசைப் பாடல்கள் மூலம் சுதந்திரப் போராட்ட உணர்வை ஊட்டியவர். அவரைப் பற்றிய வாழ்க்கை வரலாற்று நூல் ஒன்றைப் படைப்பதும் எண்ணிப் பார்ப்பதும் வரலாற்றில் மிக முக்கியமானது. கலைத் துறையில் பதிவு செய்யப்பட்டிருப்பதைப் போலச் சுதந்திரப் போராட்டக் காலத்தில் விடுதலை உணர்வை ஊட்டியவரின் வாழ்க்கையைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் தவறாது பதிவு செய்ய வேண்டியது நமது கடமை.

தன்னை இந்திய விடுதலைக்கு இணைத்துக் கொண்டு இந்திய காங்கிரஸ் கட்சியில் கடுமையாக உழைத்திருந்த ஜானகியம்மாள், உலகச் சமத்துவம் தேடும் கம்யூனிசத் தத்துவத்தைச் சரியாகப் புரிந்துகொண்ட முற்போக்குச் சிந்தனையாளராக இறுதிக் காலங்களில் தம்மை அடையாளப் படுத்திக் கொள்ள விரும்பினார். சுதந்திரக் களத்தில் இந்திய தேசியக் காங்கிரஸ் என்ற விடுதலை இயக்கத்தில் இருந்தபோது அவரது அர்ப்பணிப்புப் பணிகள் இதுவரை முழுமையாகக் கண்டறியப்படாதது பெரும் குறையே.

ஒரு வரலாறு வாழ்ந்து கொண்டிருக்கின்றதெனில் அந்த வரலாற்றுத் தலைவனும் வாழ்ந்து கொண்டேயிருக்கிறான். அதாவது இலக்கியம் எதிர்பார்க்கும் நல்ல சிந்தனையாளனும் உருவாகிக் கொண்டே இருக்கிறான். அந்தப் பொறுப்புள்ள பணியை ஆய்வுகள் செய்து கொண்டிருக்கின்றன. வரலாறு படைக்கும் தொடர்ச்சியை ஒரு நல்ல மனிதரின் வரலாறு செய்யும்.

அந்த வகையில் மதுரை கே.பி. ஜானகியம்மாளின் வரலாறு சரியாக எழுதப்படுவதும் வாசிக்கப்படுவதும் அவசியம்.

1917ஆம் ஆண்டில் மதுரையில் பத்மநாபன் லட்சுமி தம்பதியரின் மகளாகப் பிறந்து வறுமையான குடும்பத்துள் பாசத்தோடு வளர்க்கப்பட்டவர். தமது 8 வயதில் தாய் இறந்துபோனதால் பாட்டியின் பராமரிப்பில் வளர்க்கப் பட்டார். வறுமையான சூழல் வாழ்க்கையில் பற்றிக் கொண்ட போது தமது நாடகக் கலைத்திறமையால் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தவர் என்பதை அவரது சக வயது நண்பர்கள் இன்று நினைவுபடுத்துகின்றனர்.

8ஆம் வகுப்பே படித்திருந்த ஜானகியம்மாள் 12ஆம் வயதில் நாடகக் கம்பெனியில் சேர்க்கப்பட்டார். அதற்கு அவரது வறுமையான குடும்பமே காரணமாயிருந்தது என்ற செய்தியை நாடக சபாக்கள் நினைவுக்குக் கொண்டு வருகின்றன. தத்துவ மீனலோச்சனி வித்துவ பாலசபை, மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி, காரைக்குடி ஸ்ரீராமபால சபா, திருச்சி பால பாரத சபா, மதுரை தேவிபால வினோத சங்கீத சபா போன்ற பல நாடக சபாக்களில் நடித்து வந்தார். ரூபாய் 25ஐ மட்டும் சம்பளமாகப் பெற்றுத் தமது வாழ்க்கையை நடத்திவந்தார். பக்திக் கதைகள் நாடக சபாக்களில் நடிக்கப்பட்ட போது பல்வேறு முக்கியக் கதாப்பாத்திரங்கள் அவருக்குத் தரப்பட்டன. பின்னர் அவரது இனிய குரல் வளமும் நன்றாக நடிக்கும் பாங்கும் அவரைக் கதாநாயகியாக நடிக்க அழைத்தன. அவரது திறமைக்குச் சிறந்த நடிகை என்ற பெயரோடு மேடைகளிலேயே பரிசாக ஜரிகைச் சேலைகளும், தங்க நகைகளும் குவிந்தன என்ற சொல்லாடல்களில் அவரது சிறந்த நாடகக் கலைத் திறனை நுட்பமாக அறிய முடிகிறது. அன்பளிப்புக்களை அள்ளிக் குவிக்கும் அவரது திறமைக்குச் சான்று அன்றைய நாடக நடிகைக்கான சம்பளம் பொதுவாக ரூ.20, ரூ.25, ரூ.50 என்ற நிலையே தொடர்ந்திருந்தாலும் அவருக்குத் தரப்பட்ட சம்பளமோ ரூ. 400 என்று கூறுகிறார்கள் நாடக சபாக்களில் இணைந்து நடித்த மூத்த கலைஞர்கள். இன்றைய தொகை மதிப்பு ரூ. 50,000ஐத் தொடும் என்று கூறி ஜானகியம்மாவைப் பற்றிப் பெருமித உணர்வோடு போற்றிப் பேசுகின்றனர் மதுரை நகரில் உள்ள நாடக சபாக் கலைஞர்கள்.

வள்ளித் திருமணம், கோவலன், மனோகரா, நல்லதங்காள், அரிச்சந்திர மயான காண்டம் போன்ற நாடகங்களில் பல்வேறு கதாப்பாத்திரங்களில் நடித்து வந்தவரான அவர் புகழ்பெற்ற

நாடக நடிகர்களான சுப்பையா பாகவதர், எம்.எம். சிதம்பரநாதன் தாமோதரராவ், எஸ்.எஸ். விசுவநாததாஸ் ஆகியோருடன் கதாநாயகியாக வேடமேற்று நடித்துவந்தார்.

சாதிய ஏற்றத்தாழ்வு நாடக சபாக்களிலும் தவழ்ந்து வந்திருக்கிறது. பிற நடிகைகள் இணைந்து நடிக்க மறுத்த குலம் தாழ்ந்த விசுவநாத தாஸ் அவர்களோடு மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவரான இவர் கதாநாயகியாக இணைந்து நடித்தார் என்பது குறிப்பிடத்தக்கதே. ஏற்றத்தாழ்வு மனத்துள் இல்லாதிருந்ததால், தான் நடித்த நாடகத்தில் மிகவும் சிறப்பாக ஆர்மோனியம் வாசித்து வந்த எஸ். குருசாமியிடம் காதலை வெளிப் படுத்தியிருக்கிறார். குருசாமி தன் இரண்டாவது மனைவியாக ஜானகியம்மாவை ஏற்றுக் கொண்டார். திருமணம் செய்துகொண்ட ஜானகி ஒரு ஆண்மகனைப் பெற்றெடுத்தார். சில வருடங்கள் கழித்து, இறந்து போன மகனின் இழப்பால் மிகுந்த வேதனைக் குள்ளானார்.

கணவரான குருசாமி காங்கிரஸ் கட்சியில் ஆர்வம் உடையவர். ஆதலால் மனைவி ஜானகியையும் அக்கட்சியில் ஈடுபடச் செய்தார். திருமணத்திற்குப் பின்பு நாடகத்தில் நடிப்பதிலிருந்து தம்மை விலக்கிக் கொள்ள நினைத்துக் கட்டாயப்படுத்தப்பட்டதால் நடித்தும் வந்துள்ளார்.

பக்திக் கதைகளை மட்டுமே நடத்தி வந்த சபாக்கள் சமூக நாடகங்களையும் நடத்த ஆரம்பித்தன. அப்போது சுதந்திரப் போராட்டக் காலம் என்பதால் தேசபக்தி நாடகங்களையும் நடத்திடத் துணிந்தன நாடக சபாக்கள். இந்திய சுதந்திரத்தில் நாடகங்களின் பங்கு அளப்பரிது என்பதை இந்திய நாடக வரலாற்றுப் பதிவுகள் நமக்குத் தருகின்றன. ஆங்கிலேயரை எதிர்த்துக் குரல் கொடுத்த களமாக நாடக மேடைகளும் திகழ்ந்தன.

ஒலிபெருக்கி இல்லாத காலத்தில் இனிய குரலாலும் 'கணீர்' எனும் குரல் வளமையாலும் மேடை நாடகங்களில் கலை நயத்துடன் நடித்து வந்த அவரைச் சுதந்திரப்போராட்ட நாடகங்கள் முக்கிய வேடங்களில் நடிக்க விரும்பி அழைத்தன. நாடக மேடைகளில் இனிய குரலோடு தேசபக்திப் பாடல்களைப் பாடி நடித்த ஜானகியம்மாள் தனது 12 வயதில் கலைஞராகத் தமிழகத் திற்கு அறிமுகமானவர். பெண் கலைஞர்கள் நடிக்கவே அனுமதிக்காத காலங்களில் நாடகங்களைப் பார்த்த பார்வை யாளர்கள் விதந்து பாராட்டியதைக் களத்தில் அறிய முடிகிறது. ஜானகியின் குரலில் தேசபக்திப் பாடல் ஒலிக்கப்பேரகிறது என்று

மேடையில் அறிவிப்பினைக் கேட்டால் பார்வையாளர் கூட்டம் கரை புரளும் என்று அவரது கலை வரலாற்றுக் குறிப்புகளில் காணமுடிகிறது.

கலைகளே மக்களை இணைக்கும் பாலம் என்பதை இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியும் அறிந்திருந்தது. காங்கிரஸ் கட்சி மேடைப் பாடகியாக்கிட எண்ணியதோடு அவரை மேடைப் பேச்சுக்கென விரும்பி அழைத்துக் கொண்டது. காங்கிரஸ் கட்சிக் கூட்டங்களில் தன்னை முழுமையாக இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயத்தில் தனது இனிய குரலை இந்திய தேசியக் காங்கிரஸ் மேடைகளில் சுதந்திரப் போராட்ட, தேச பக்திப் பாடல்களாக ஒலிக்கச் செய்தார். கட்சித் தலைவர்கள் கேட்டுக் கொண்டதால் விடுதலைப் போராட்ட உணர்வூட்டும் தேசபக்திப் பாடல்களை ஒலிநாடாக்களாகவும் வெளியிட்டார். ஒலி நாடா விற்பனைத் தொகையினைக் காங்கிரஸ் கட்சிக்கே அர்ப்பணித்தார். நாடக மேடைகளில் முழுமையாக நடிப்பதை நிறுத்திக் கொண்டு காங்கிரஸ் கட்சி மேடைப் பேச்சாளரானார்.

1929இல் மதுரை நகர் காங்கிரஸ் கமிட்டியின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தமது 19ஆவது வயதில் 1936ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி உறுப்பினரானார். குறுகிய காலத்தில் மதுரை நகரில் பிரபலக் காங்கிரஸ் கட்சியின் ஊழியராக விளங்கினார். 1938ஆம் ஆண்டு மதுரை மாவட்டம் வத்தலக்குண்டு எனும் நகரில் நடைபெற்ற காங்கிரஸ் அரசியல் மாநாட்டில் ப. ஜீவானந்தம், பி. இராமமூர்த்தி, எம்.ஆர். வெங்கட்ராமன் போன்ற கம்யூனிஸ்ட் தலைவர்களைச் சந்தித்தார்.

ப. ஜீவா கலை இலக்கிய ஈடுபாடு கொண்டவர். அவரது இயல்பான கலை ஈடுபாடானது கலை இலக்கியத்தால் இயக்கத்தைக் கட்ட முடியும் என்ற அசையாத, நம்பிக்கையைத் தந்தது. அந்த நம்பிக்கை ஜானகியம்மாவிடமும் முன்வைக்கப் பட்டது. ப. ஜீவா, பி. ராமமூர்த்தி, எம்.ஆர். வெங்கட்ராமன் ஆகிய மூவரும் தலைவர்களாயிருந்த காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி' என்ற அப்புதிய கட்சியில் ஜானகி அம்மாளும் கணவர் எஸ். குருசாமியும் குடும்பமாக இணைந்தனர்.

1939இல் தலைவர் பதவிக்குக் காங்கிரஸ் கட்சி வேட்பாளராக வெற்றி பெற்றார் இராஜாஜி. மகாத்மா காந்தி தான், தலைமைப் பதவிக்கு வேட்பாளராக நிறுத்திய டாக்டர் பட்டாபி சீத்தாராமையா தோல்வியடைந்துவிட்டார் என்பதால்

'நான் தோற்றது போன்றதே' என்று கூறினார். ஆதலால் பெரும் பான்மையான காங்கிரஸ் உறுப்பினர்கள் இராஜாஜியை விட்டு விலகிப் பிரிந்தனர். ஆதலால் 1939இல் காங்கிரஸிலிருந்து வெளியேறினார். இவ்வேளையில் இராஜாஜி மதுரைக்கு வந்தார். அப்போது அவரை யாரும் வரவேற்கக் கூடாது எனக் கட்சித் தலைமை உத்தரவிட்டிருந்தது. அத்தடையை மீறிக் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி உறுப்பினர் என்ற முறையில் பசும்பொன் முத்துராமலிங்கம், வி. இராமநாதன் மற்றும் தம் கணவர் குருசாமியுடன் சென்று இராஜாஜிக்குச் சிறப்பான வரவேற்பினை அளித்தார். சுதந்திர இந்தியனுக்கு மறுக்கப்பட்ட தடையை மீறி, பெருமை அளிக்க நினைத்த வேட்கை அவரிடம் இருந்தது என்பதை இவ்வரலாறு காட்டுகிறது.

1940இல் கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் கிளை மதுரை நகரில் உருவாக்கப்பட்டது. அப்போது ஏ. செல்லையா, வி. ராமநாதன், எஸ். குருசாமி, என். சங்கரய்யா ஆகியோர் இணைந்து முதன் முதலில் கட்சிக் கிளையை உருவாக்கினர் என்பது வரலாறு. அந்த வரலாற்றில் இடம்பெறக் கூடிய பெண்மணியாக மதுரை ஜானகியம்மாள் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1940ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சிக் கிளை தொடங்கப் பட்ட சில வாரங்களிலேயே ஆங்கிலேயரை எதிர்த்துப் பிரச்சாரம் செய்யப்பட்டபோது திருச்சியில் கைதானார். 16 மாதங்கள் மத்திய சிறையில் கடுங்காவல் தண்டனை பெற்றார். விடுதலையான பின்னரும் ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தார். ஆதலால் ஆங்கிலேய அரசு அவசரப் பாதுகாப்புச் சட்டப்படி அவரைக் கைது செய்தது. இந்திய விடுதலைப் போரில் பலமுறை சிறைசென்று சொந்த மண்ணில் சுதந்திரம் பெறப் போராடி வெற்றி பெற்ற சிறந்த தலைவர்களுள் ஒருவராகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர் மதுரை கே.பி. ஜானகியம்மாள். ஏற்றத்தாழ்வான சமூகத்தை விரும்பாத வராகவும் இருந்துள்ளார். ஆதலால்தான் வர்க்க முரணான கட்சிகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு சமத்துவம் தேடும் இயக்கத்தின்பால் விரும்பிச் சென்றார் என்பதைத் தோழர் என். இராமகிருஷ்ணன் அவர்களின் தொகுப்பு நூல்களால் அறிய முடிகிறது.

சுதந்திரப் போராட்டக் காலங்களில் சிறைவாசம் செய்த அவருக்குப் பல்வேறு சமூகநலச் சிந்தனைகளை ஊட்டியவர் களாகக் கம்யூனிசத் தோழர்கள் இருந்தனர். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டவர்கள் சிறை நிரம்பியபோது

ஆங்கே பல்வேறு கட்சி உறுப்பினர்கள் மற்றும் பலர் தம் நிலைகளைப் பகிர்ந்து கொள்வதும் தோழமை உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்வதும் வழக்கம். அப்போது பல்வேறு இயக்கங்களைச் சார்ந்தோர் புதிதாகத் தங்களை வேறு கட்சிகளில், இயக்கங்களில் இணைத்துக் கொண்டனர் என்பதும் நேர்காணலின் போது அறிய முடிகிறது.

அவ்வாறே கே.பி. ஜானகியம்மாள் தம் வாழ்க்கையில் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார் என்பதை அவருடன் சிறை சென்ற மதுரை ஐ.மா.பா. என்று சுருக்கமாக அழைக்கப்படும் இன்று 91 வயதடைந்த தோழர் ஐ. மாயாண்டிபாரதி அவர்களின் தகவலால் அறிகிறோம்.

1942ஆம் ஆண்டு விலைவாசி உயர்வுக்கு எதிரான போராட்டத்தில் முன்னின்றார். கம்யூனிச இயக்கத்தில் இணைந்து கொண்டு 1967இல் ஐக்கிய மாதர் சங்கத்தைக் கட்டினார். எத்திசையில் மனித இனம் வஞ்சிக்கப்பட்டாலும் அதற்கான நிவாரணத்தை அளிப்பதில் அக்கறை கொண்டவர் என்பதை வங்க தேசப் பஞ்சத்தின்போது அவர்களுக்காக நிதி திரட்டித் தந்துள்ள தகவலின் மூலம் அறியமுடிகிறது.

1942 முதல் 1964 வரையிலும் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து பின்பு கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சி என்ற புதிய அமைப்பில் சேர்ந்தார். தடை செய்யப்பட்ட கம்யூனிஸ்ட் இயக்க உறுப்பினர்கள் சிறையிலடைக்கப்பட்டபோது வேலூர் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டார். 16 மாதங்கள் சிறையிலிருந்து விடுதலையான பின்பு 1967ஆம் ஆண்டில் சட்டமன்றத் தேர்தலில் மதுரைக் கிழக்குத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அவரது வெற்றிக்குப் பல பெண்கள் உறுதுணையாக இருந்தனர். அவர்களுக்கு, குறிப்பாக கே.பி. சுந்தராம்பாளுக்குப் பாராட்டுச் செய்ய முனைந்தார். அந்தப் பாராட்டு விழாவில் கே.பி. சுந்தராம்பாளின் பெரும் பங்களிப்பை வெளிப்படுத்தினார். அவ்விழாவில் ருக்மணி லட்சுமிபதி, சுந்தரி சத்தியமூர்த்தி, பெங்களூர் பின்னிபாய், வை.மு. கோதைநாயகி ஆகியோர் இணைந்திருந்தனர் என்பதைப் புகைப்படப் பதிவுகளின் வழியே அறியமுடிகிறது.

1972ஆம் ஆண்டு மதுரையில் ஜனநாயக மாதர் சங்க முதல் மாநாடு கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் கே.பி. ஜானகி அம்மாள் மாநிலத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இன்று

வரை மதுரை கே.பி. ஜானகியம்மாள் கம்யூனிசத் தோழர்களால் மதிக்கப்படுபவராகவே உள்ளார்.

1917ஆம் ஆண்டு மதுரையில் பிறந்த 'கே.பி. ஜானகி' 1992ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் நாள் மறைந்தார். 12 வயது முதல் நாடகக் கலையின் வாயிலாகத் தமிழக மக்களிடம் அறிமுகமாகி மேடைப் பேச்சாளராக உருவானவர்; ஆங்கிலேயரை எதிர்த்து விடுதலைப் போராட்டத்தின்போது பல முறை சிறை சென்றவர்; காங்கிரஸ் கட்சித் தலைவர்களிடம் நன்மதிப்பும் பெற்றவர். இந்திய தேசியச் சோசலிஸ்ட் கட்சியில் தனித்துவமிக்க பெண்ணாக மதிக்கப் பட்டவர். இவ்வாறு நெஞ்சுரம் மிக்க வீராங்கனையாகச் சுதந்திரப் போராட்டக் களத்திலே தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டு வாழ்ந்தவர் அவர். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்குகொண்டு போராடுவது தமது கடமை என உறுதிகொண்டு தம் வாழ்க்கையை நாட்டு மக்களுக்காகவே அர்ப்பணித்தவர். அவரைச் சுதந்திரப் போராட்ட வரலாற்றில் பதிவு செய்தல் தமிழக வரலாற்றிற்குப் பெருமை சேர்க்கும்.

துணை நூல்கள்

1. என். இராமகிருஷ்ணன், ஒரு அம்மாளின் கதை, சென்னை புக் ஹவுஸ், சென்னை, 2002.
2. என். இராமகிருஷ்ணன், அம்மா ஜானகி, சவுத் ஏசியன் புக் ஹவுஸ், சென்னை, 2001.
3. த. ஸ்டாலின் குணசேகரன் (தொ.ஆ.) விடுதலை வேள்வியில் தமிழகம், பாகம் - 2, நிவேதிதா பதிப்பகம், ஈரோடு - 638004, 2000.
4. 'ஜானகி'யின் கையெழுத்துப் பிரதி (கட்டுரை).
5. நேர்காணல், பதிப்பாசிரியர் என். இராமகிருஷ்ணன் (தீக்கதிர்), எழுத்தாளர் - ஜவகர், தோழர் - ஐ. மாயாண்டி பாரதி, வழக்கறிஞர் - ம. இராஜேந்திரன், கலைஞர்கள் - மதுரை நாடகக் கலைமன்றம், சுண்ணாம்புக்காரத் தெரு, மதுரை.

அன்னை சத்தியவாணி முத்து

கி. மைதிலி

இந்தியாவை அலைக்கழித்து வந்த, இன்னமும் அலைக்கழித்து வருகின்ற தீண்டாமை என்னும் கடும் நோயை, வேரோடும், வேரடி மண்ணோடும் அகற்றினால் ஒழிய, இந்தியா வாழ்வு பெறமுடியாது என்பதற்காகப் பகுத்தறிவுத் தந்தை பெரியாரும் டாக்டர் அம்பேத்கரும் அண்ணல் காந்தியடிகளும் போராடினார்கள்.

"நால்வருணங்களை ஒழிக்காமல் தீண்டாமையை ஒழிக்க முடியாது" என்று கூறிப் பெரியார், அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்குப் பலப்பல போராட்டங்களை நடத்தி வந்தார். இந்தியாவைக் குடியரசு நாடாக அறிவிப்பதற்கு இரு மாதங்கள் முன்பு அதாவது 25-11-1949 அன்று டாக்டர் அம்பேத்கர், இந்திய அரசியல் அமைப்பு சபையில், இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தைக் கொண்டுவந்து மூன்றாவது கட்டத்தில் நிகழ்த்திய உரையில்,

> *1950 ஜனவரி 26ஆம் நாள் நாம் ஒரு முரண் பாடான வாழ்வை மேற்கொள்ள இருக்கின்றோம். அரசியலில், சமத்துவமும் சமூக, பொருளாதார வாழ்வில் சமத்துவமில்லாத ஒரு வாழ்வும் நாம் பெற இருக்கிறோம். அரசியலில் நாம், ஒரு மனிதன், ஒரு வாக்கு, ஒரு மதிப்பு என்னும் கொள்கையை ஏற்றுக்கொள்வோம். நமது சமூகப் பொருளாதார அமைப்பின் காரணமாக ஒரு மனிதன், ஒரு மதிப்பு என்னும் கொள்கையைத் தொடர்ந்து மறுத்துக் கொண்டிருப்போம். இந்த முரண்பாட்டை நாம் வெகுவிரைவில் நீக்கியாக வேண்டும். இல்லையானால் இந்தச் சமத்துவமற்ற வாழ்வில் துடித்துக் கொண்டிருப்போர் இவ்வகை கடினப்பட்டு உழைத்து, இந்திய அரசியல் நிர்ணய சபை உருவாக்கிய அரசியல் ஜனநாயக அமைப்பை உடைத்தெறிந்து விடுவர்*

என்று முழங்கினார். இதனை நன்கு விளங்கிக் கொண்டு தமிழ்நாட்டில் போராடத் துணிந்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர் சத்தியவாணி அன்னையார். தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்து, அச்சூழலில் வளர்ந்தாலும், தம் ஊக்கத்தாலும் உழைப்பாலும் விடாமுயற்சியாலும் உயர்ந்த நிலையை அடைந்தார்.

தாழ்த்தப்பட்டோரை மேம்படுத்தும் முயற்சியில் அன்னை ஈடுபட அடித்தளமிட்டவர் அவர்தம் தந்தை நாகை நாதர். உரமூட்டியவர் அவர்தம் கணவர் முத்து. அவர்களால் பெற்ற துணிவும் தம்மிடமிருந்த திறமையும் தியாகம் செய்யும் மனமும் செழித்தமையால் உயர்ந்த தலைவரானார்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, டாக்டர் அம்பேத்கர் ஆகிய வரலாற்றுத் தலைவர்களிடம் பயிற்சி பெற்றவர் அன்னையார். குழந்தைப் பருவத்திலேயே தம் தந்தையுடன் கூட்டங்களுக்குச் சென்று பகுத்தறிவுச் சிந்தனைகளைப் பதித்துக் கொண்டவர் இவர். 15-2-1923இல் பிறந்த அன்னைக்கு 1943இல் திருமணம் நடந்தது. அவர்தம் கணவர் முத்து சுயமரியாதைக் கொள்கையில் மிக்க ஈடுபாடு கொண்டவர். 1938இல் தந்தை பெரியார் நடத்திய இந்தி எதிர்ப்புப் போரில் கலந்து கொண்டவர். பெரியாரும், அண்ணாவும் சேலத்தில் ஆர்.கே. சண்முகம் தலைமையில் கம்பரின் இராமாயண நூலைக் கொளுத்தும் நாளாகத் திருமணநாள் அமைந்தது. அதனால் அவர்க்குப் பதிலாகத் தமிழ்த் தென்றல் திரு.வி.க.வின் தலைமை ஏற்கச் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை முன்னிலை வகிக்கத் திருமணம் நிகழ்ந்தது.

தென்னிந்திய நல உரிமைச் சங்கமாக இருந்தது, திராவிடர் கழகமாக 1944இல் மாறியது. அந்த ஆண்டு சேலத்தில் நிகழ்ந்த திராவிடர் கழக மாநாட்டில் தம் இருபத்தோராவது வயதில் பங்கு கொண்டார். அந்த நாள் பெண், கல்வி பெற முடியாத காலம். வயதுக்கு வந்தபின் வெளிவர முடியாத காலம். இந்த நிலையில் மாநாட்டில் அன்னை பங்கு பெற்ற துணிவை எண்ணிப் பார்க்க வேண்டும். 1944 முதல் 1949 வரை, திராவிட முன்னேற்றக் கழகம் பிறக்கும் வரை, திராவிடர் கழகத்தின் செயற்குழு உறுப்பினராகப் பணியாற்றியவர் அன்னை சத்தியவாணி முத்து.

கொட்டும் மழையில் சென்னை இராயபுரம் ராபின்சன் பூங்காவில் அறிஞர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எனக் கட்சியைத் தொடங்கிய போது உடனிருந்த தலைவர்களுள்

ஒருவர் அன்னை. தி.மு.க.வில் இருந்த காலத்தில் அதன் செயற்குழு உறுப்பினராகவும் பொதுக்குழு உறுப்பினராகவும் மகளிர் அணித்தலைவியாகவும் கொள்கை பரப்புச் செயலராகவும் பலபடப் பணியாற்றினார்.

துணிவு

புதுச்சேரியில் திராவிடர் கழக மாநாடு ஒருமுறை நடந்தது. டாக்டர் அம்பேத்கர் படத்தைத் திறந்து வைக்க அன்னை அழைக்கப்பட்டார். பிற்பகலில் நடைபெற வேண்டிய நிகழ்ச்சி இது. ஆனால் பகலில் மாநாட்டுப் பந்தலில் கலவரத்தை உண்டாக்கி, வந்திருந்த தலைவர்களை எல்லாம் கலகக்காரர்கள் தாக்கினர். இருந்தும் மேடைக்குத் துணிவோடு வந்தேறியவர்களுள் அன்னையும் ஒருவர். இவர்கள் பேசுமுன் மீண்டும் கலவரத்தில் ஈடுபட்டனர். உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்னும் நிலையில் சிலர் மேடையின் முன்புறம் குதித்துத் தப்பினர். அன்னையும் கலங்காமல் மேடையேறி, துணிவுடன் குதித்து வெளியேறினார். அறுபத்து மூன்றாண்டுகட்கு முன்பு பெண்ணின் சாகசம் இது என்பதை நினைவில் நிறுத்த வேண்டும்.

ஆபத்து முடிந்துவிடவில்லை. மாலை இரயில் ஏறும்போது அன்னையின் துகில் உரியத் திட்டமிட்டிருந்தனர். இதை அறிந்த நண்பர் ஒருவர் (பொன் ராமலிங்கம்) வாடகைச் சிற்றுந்தில் ஏற்றி அடுத்த இரயில் நிலையத்தில் ஏறுமாறு செய்து காப்பாற்றினார். இதை அறிந்து அன்னை கலங்கினாலும் தொடர்ந்து போராட்டங்களிலும் மேடைகளிலும் முழங்கினார்.

நெற்றியில் பொட்டு இட்டுக் கொள்வதை இந்துமத வைதீகம் என்று கருதிய சிலர் பொட்டு இட்டுக் கொள்ளக் கூடாது என வற்புறுத்தினர். துணிவாக அதனை எதிர்த்தார் அன்னை.

> *பொட்டு இந்துமத சின்னமல்ல; பொட்டு இந்துமத சின்னமானால் தாலி இழந்துநிற்கும் கைம்பெண்கள் பொட்டை இழப்பதன்மூலம் அவர்கள் இந்து அல்ல எனச் சொல்லிவிட முடியாது. மாறாக, கணவனை இழந்த பின்னர் தான் கடவுளை அதிகமாக வழிபடுகிறார்கள். ஆகவே பெண்கள் நெற்றியில் பொட்டு இட்டுக் கொள்வது அழகைப் பெருக்குவதற்குத் தானே தவிர ஆத்திகப் பழியில் தீவிரம் நாட்டுவதற்கல்ல என்பது என் கருத்து (எனது போராட்டம், ப. 20)*

எனத் துணிவுடன் சொல்லிப் பின்பற்றவும் செய்தார்.

அவைத் தலைவராக இருந்த ஈ.வெ.கி. சம்பத் கருத்து வேறுபாட்டால் அப்பதவியிலிருந்து விலகி அண்ணாவுக்கு நெருக்கடியை ஏற்படுத்தினார். அப்பதவிக்கு அன்னை போட்டியிலிருந்து விலகாமல் துணிவுடன் நின்றார். பேராசிரியர் அன்பழகன் அவர்கள் தம் தொழிற்சங்கச் செயலர் பதவியிலிருந்து விலகி, போட்டியாளர் இருவர்க்கும் பதவிகிட்டுமாறு வழி வகுத்தார். அதனால் கொள்கைபரப்புச் செயலரானார் அன்னை.

நடுவண் அரசின் கல்வி மற்றும் சமூக நலத்துறை தில்லியில் ஒருமுறை பின்தங்கியோர் நல மாநில மாநாட்டைக் கூட்டியது. நடுவண் அரசில் பின்தங்கியோர் என வெளிப்படுவோர் தாழ்த்தப்பட்ட மக்களேயாவர். ஆனால் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஒன்று உருவாக்கப்பட்டு அதற்கு ஓர் அமைச்சரும் அரிசன நலத்துறைக்குத் தனியே ஓர் அமைச்சரும் இருந்தனர். அன்னை அரிசன நலத்துறையின் அமைச்சராக இருந்தார். தில்லிமாநாட்டின் நிகழ்ச்சிகள் தம் துறை சார்ந்தவை என்பதால் தாமும் தில்லி போகத் துணிவு கொண்டார். ஒருவரே மாநாட்டில் பேசமுடியும். பிற்பட்டோர் நலத்துறை அமைச்சருக்கே பேச அழைப்பு இருந்தது. அவரும் பேசி முடித்துவிட்டார். அடுத்து, தாம் பேசவேண்டும் என்றும் அந்த அமைச்சகத்துக்குப் பொறுப்பானவர் தாம் என்றும் மாநாட்டின் பொறுப்பாளர் நூடுவ் ஹசனிடம் துணிவுடன் கூறினார். அவர் ஒருவரே பேச முடியும் என்றார். அதை உடனே கண்டித்துப் பேசத் தொடங்கினார்.

> *பின்தங்கியோர் நலம் மாநில அரசின் திட்டமாகும். மத்திய அரசு பெரும் தவறு செய்கிறது. இந்திய அரசியல் சட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களை அனுபந்த சாதியினர் (எஸ்.கி.) மற்றும் மலை வாசியினர் (எஸ்டி.) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஒதுக்கீட்டில் (பட்ஜெட் புரவிஷன்) பின் தங்கி யோர் என்று குறிக்கப்படுகிறது. இப்படி மத்திய அரசு குறிப்பிடுவது, மாநிலங்களிலுள்ள பின் தங்கியோரைப் பற்றித்தான் என்று மாநில அரசுகள் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள். இந்தத் தவறுகள் இன்னமும் நடைபெற்று வருகின்றன. அவை நீக்கப்படவேண்டும். நீங்கள், மாநிலப் பின்தங்கியோர் நல அமைச்சர்களின்*

அடிப்படையில் அழைப்பு அனுப்பப்பட்டதால், பின்தங்கியோர் நல அமைச்சர் ராஜாராம் அவர்களும் பிரச்சினைக்குரிய அரிசன நலத்துறை அமைச்சர் என்ற முறையில் நானும் வரவேண்டிய சூழ்நிலை. இந்த விவரம் அறியாத தாங்கள், முறையாக என்னைப் பேச வாய்ப்பளிக்காது, விவாதிக்கக் கூடாது. ராஜாராம் அவர்களை அழைத்து, அவர் பிரச்சினையையே தொடாது பேசி முடித்து விட்டது வருந்தத்தக்கது ஆகும். என்னையும் பேச விடாது தடுப்பது நீங்கள் பிரச்சினையில் அக்கறை கொள்ளவில்லை; ஏதோ இந்த மாநாட்டினை நடத்துகிறோம் என்ற பொறுப்பற்ற நிலையில் இருக்கிறது

(எனது போராட்டம், பக். 43-44)

எனத் துணிவுடன் சொல்லியிருக்கின்றார். எந்த மக்களுக்கு உதவி போய்ச் சேர வேண்டுமோ அந்த மக்களுக்கு அதை பெற்றுத் தருவதற்கு அவர் துணிவு பெரிதும் உதவியிருக்கிறது.

குறிக்கோள்

அன்னையின் குறிக்கோள்களாக மூன்றைக் கூறலாம். தீண்டாமையை ஒழிப்பது, ஆதிதிராவிடர் முன்னேற்றம் அடைய உழைப்பது, மகளிர் குழந்தைகள் நலம் பேணுவது ஆகிய மூன்றிலும் வாழ்நாள் முழுதும் கவனம் செலுத்தினார். பட்டி தொட்டி எங்கும் முழங்கினார். பேச்சு அவருக்குக் கைவந்த கலையானது. அன்னையின் திருமணம் நிகழ்ந்த அன்று அவரே கூட்டத்திற்கு நன்றி கூறினார். மணமகள் நன்றி கூறுவது (17-1-1943) அந்தக் காலக்கட்டத்தில் சிறிதும் எதிர்பார்க்க இயலாத ஒன்று. தம் கன்னிப் பேச்சினைத் திருமணநாளில் தொடங்கித் தொடர்ந்தார். தமிழ்நாட்டின் எல்லாப்பகுதிகட்கும் கழகத்தின் முன்னணிப் பேச்சாளராக, பெண் பேச்சாளராக விளங்கியவர் அன்னை. கொள்கைப் பிடிப்பின் காரணமாகவும் இலட்சிய வேட்கையின் விளைவாகவும் அவருடைய பேச்சு ஆணித் தரமாக அமைந்தது. மக்களையும் எளிதில் சென்றடைந்தது.

ஆட்சிக் கட்டிலில் அமரும் எண்ணமே எழாத காலக் கட்டத்தில் இலட்சியப் பிடிப்போடு, கொள்கை உறுதியோடு முழங்கினார். 1957இல் முதன் முறையாகச் சட்டமன்ற உறுப்பினர் ஆனார். அறிஞர் அண்ணாவுடன் சட்டமன்றம் சென்றார்.

தி.மு.கழகம் தொடங்கும்போது அண்ணாவுடன் இருந்தவர் சட்ட மன்றத்திற்கும் உடன்சென்றார். 1962இல் இருவருமே தோல்வி யுற்றனர். ஆனால் 1967இல் இருவரும் மீண்டும் வென்றனர். அண்ணா தம் அமைச்சர் அவையில் அன்னைக்கு இடம்தந்தார்.

இந்தி எதிர்ப்பு, விலைவாசி உயர்வு, குலக்கல்வித்திட்ட எதிர்ப்பு என எல்லாப் போராட்டங்களிலும் முன்னின்றார். கர்ப்பிணியாக, கைக்குழந்தையைக் கொண்டவராகப் போராடிச் சிறைக்கும் சென்றார். சிறைக்கு அஞ்சாத பறவை என்று பேரெடுத்தார். சமுதாயத்தில் புரையோடிப் போயிருக்கும் சாதி வேற்றுமை என்ற புண்ணைக் கீறி ஆற்றுவதன் மூலம்தான் சமுதாயத்திலுள்ள தீண்டாமை என்னும் புண்ணை ஆற்ற முடியும் எனப் பெரியார் கூறினார். அறிஞர் அண்ணா, கலப்புத் திருமணத்தால் தீண்டாமையை ஒழிக்க முடியும் எனச் சிந்தித்தார். இருவர்தம் கருத்துக்களையும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார் அன்னை. கலப்புத் திருமணத்திற்குப் பெரும் ஆதரவு தந்தார் அன்னை.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏற்படும் தீங்கினைப் போக்க அரணாக ஓர் அமைப்புத் தேவை என்று கருதி, 'தாழ்த்தப் பட்டோர் முன்னேற்றக் கழகம்' எனும் அமைப்பினை நிறுவினார். அவர்கள் வெளிப்பாட்டிற்குப் பெரிதும் தம் பணத்தைச் செலவழித்து உழைத்தார்.

சென்னை அம்பத்தூர் ஓரகடம் பகுதியில் 'அண்ணா அனாதை இல்லம்' எனும் அமைப்பினை நிறுவி, பெண்களுக்குத் தையல் பயிற்சியும் தட்டெழுத்துப் பயிற்சியும் அளிக்க வழிவகை செய்தார். ஆதரவற்ற குழந்தைகளுக்கு அடைக்கலம் தரும் இல்லமாகவும் அது திகழ்ந்தது.

திறமை

சட்டமன்ற உறுப்பினராக, மேலவை உறுப்பினராக தில்லியில் மாநிலங்களவை உறுப்பினராக விளங்கியவர் அன்னை. முதுகுளத்தூர் கலவரம் குறித்துச் சட்டமன்றத்தில் அவர் ஆற்றிய உரை குறிப்பிடத்தக்கதாகும். ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சராக இருந்தபோது மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகையை உயர்த்தினார். வாணிகம் செய்யக் கடன் வழங்கவும் ஆணையிட்டார். வேளாண்துறை அமைச்சராக இருந்தபோது பசுமைப் புரட்சியை உண்டாக்கினார். புதிய நெல் ரகத்தை அறிமுகப்படுத்த ஆவன செய்தார். சமூக நலத்துறை அமைச்ச

ராகவும் இருந்து தம் திறமையை வெளிப்படுத்தினார். பொது நலத்தில் அவர் காட்டிய அக்கறை சிறப்பானது. ஆகாசவாணியை வானொலி ஆக்கியதற்கும் வியாசர்பாடியில் அம்பேத்கர் கலைக் கல்லூரி தோன்றுவதற்கும் அவர் உழைப்பும் திறமையும் உதவின. நடுவண் அரசின் கேபினெட் அமைச்சராகவும் திறமையுடன் பணியாற்றியவர் இவர்.

தியாகம்

குடும்பத்தை மறந்து உற்றார் உறவினரைத் துறந்து பெண் என்பவள் ஆணுக்கு இளைப்பில்லை எனப் பணியாற்றிய தியாகம் போற்றுதலுக்குரியது. திராவிடர் கழகம் தேர்தலில் போட்டியிடாத கழகம்; சமூக சேவைக்கென்றே அமைந்த கழகம். அதில் எதையும் எதிர்பாராமல் எதிர்கால வளம் பற்றிச் சிந்திக்காமல் போராட்டங்களிலும் சிறைக் கூடங்களிலும் கழிந்த தியாக நாள்கள் அன்னையின் உண்மை நோக்கத்தினைக் காட்டும். மக்களுக்காகப் போராடிய நேரத்தில் அதில் வெற்றி பெற முடியவில்லை என்றபோது அமைச்சர் பதவியையும் துறந்தவர். அம்பேத்கரின் ஷெட்யூல் கேஸ்ட் பெடரேஷன், தி.மு.க. என எல்லாவற்றிலும் உறுப்பினராக இருந்தார். ஒட்டுமொத்த பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உழைக்கும் எல்லா அமைப்புகளிலும் தம்மை இணைத்துக் கொள்ள உறுப்பினர் ஆனவர் அன்னை. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அமைப்புகளில் இருக்கக் கூடாது எனத் தி.மு.க. தீர்மானம் நிறைவேற்றியபோது எல்லாவற்றிலிருந்தும் விலகித் தி.மு.க.வில் மட்டும் பணியாற்றினார். சமுதாய அமைப்பில் இருந்தால் தமிழகத்தின் தலைவராக விளங்கியிருக்க முடியும். சேவைதான் முக்கியமே ஒழியத் தலைமைப் பொறுப்புத் தேவையில்லை எனும் தியாகம் எண்ணிப் பார்க்கத்தக்கது.

பெருமை

தி.மு.க. முதன்முறையாகச் சட்டமன்றத்தில் நுழைந்த போது பதினைந்து பேரில் இவர் ஒருவரே பெண் உறுப்பினர். தி.மு.க.வில் மகளிர் மன்றத்தை முதலில் தொடங்கியவர் (25-1-51) இவரே. இன்று எல்லாக்கட்சிகளும் பின்பற்றுகின்றன. பெண்களுக்கென்று பெண்களால் அரசியலில் தொடங்கப்பட்ட முதல் பத்திரிகை இவருடையதே. பல சூழல்களால் ஒதுக்கப்பட்ட பெண்களுக்கு மறுவாழ்வு தரவும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு அடைக்கலம் தரவும் முதலில் இல்லம் (1971) கண்டவர் அன்னை சத்தியவாணி

முத்து என இவர்தம் பெருமைகள் போற்றுதற்குரியவை. தாய்மை அடைந்த நிலையிலும் சிறை சென்றவர். ஒன்பது முறை சிறைவாசம் அனுபவித்தவர்.

முடிவுரை

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்து - பெண்ணாகப் பிறந்து - சமூகத்தை மேம்படுத்தப் போராட வேண்டும் என்னும் எண்ணம் ஊன்றி வளர்ந்து - ஆடவரோடு தனிநின்று - அரசியலில் ஈடுபட்டு - சட்டமன்ற உறுப்பினராய் - அமைச்சராய் - நாடாளுமன்ற உறுப்பினராய் - நடுவண் அரசு அமைச்சராய் - பல்வேறு குழுக்களின் உறுப்பினராய் விளங்கி - மகளிர் மன்றத் தலைவியாய் - பெண்ணுக்கான ஆசிரியராய் - பெண்கள், குழந்தைகள் காப்பகத்தின் நிறுவனராய் விளங்கி - சாதனைகள் பல படைத்த பெண்மணி அன்னை சத்தியவாணி முத்துவை அண்ணாவின் நூற்றாண்டில் நினைவுகூர்வது பொருத்தமானதாகும்.

சரசுவதி சுப்பையா

காமாட்சி தரணிசங்கர்

புதுச்சேரி மாநிலம் புதுமைகள் நிறைந்த புனித மண். அரவிந்தரையும் அன்னையையும் ஆன்மிகத்தில் ஆழ்த்திய மண். மகாகவி பாரதியும் பாவேந்தர் பாரதிதாசனும் எழுச்சிக் கவிஞர் தமிழ் ஒளியும் பெண்ணுரிமைக்காகக் குரல் எழுப்பிய மண். இந்திய விடுதலை இயக்க வரலாற்றிலும், சமூக முன்னேற்றத்திலும் பெண்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். புதுச்சேரியின் விடுதலை இயக்கத் தளபதி மக்கள் தலைவர் வ. சுப்பையா அவர்கள் விடுதலைக்காகத் தொழிலாளர்களை அணிதிரட்டிய பொழுது பஞ்சாலைகளில் பணியாற்றிய பெண் தொழிலாளர் களையும் இல்லத்தரசிகளையும் விடுதலை இயக்கத்தில் பங்கேற்க இவரது துணைவியார் சரசுவதி சுப்பையா அணிதிரட்டினார்.

புதுச்சேரியில் தொழிலாளர் வர்க்கத்தின் எழுச்சி விடுதலைப் போராட்டமாக உருவெடுத்தபொழுது பெண்களும் பெருமளவில் விடுதலை இயக்கத்தில் பங்கேற்றுப் பிரெஞ்சு இராணுவம், போலீஸ் அடக்குமுறைகளுக்கும் சித்திரவதை களுக்கும் உள்ளானார்கள். அவர்களுள் குறிப்பிடத் தகுந்தவர்கள். **சரசுவதி சுப்பையா, பங்காரு அம்மாள், ஆவணி அம்மாள், தையல் நாயகி அம்மாள், அவிக்காம்பாள், தமயந்தி, விஜயலட்சுமி, திலகவதி கிளாமன்சோ** போன்றவர்கள்.

சரசுவதி சுப்பையா அவர்களின் வாழ்க்கை மூலம் அறிந்து கொள்ள வேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன. அவரது வாழ்க்கை போர்க்குணம் பொருந்திய போராளியின் நிறைவு பெற்ற வாழ்க்கை. கடைசி மூச்சு உள்ளவரை பெண் கொடுமை களுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்களில் முன்னணியில் நிற்பவர். கம்யூனிஸ்ட் இயக்கத்தில் புகழ்மிக்க தலைவர்கள் ஒவ்வொருவரின் வாழ்க்கையும் ஒரு சகாப்தம். எளிமை, அர்ப்பணிப்பு, தியாகம் என்ற எல்லை மீறாமல் வளர்த்தெடுக்கப் படுவது. மற்றவர்கள் நினைத்துப் பார்க்கமுடியாத தியாகங்களைக் கூடப் பிறருக்குத் தெரியாமல் தங்களுக்குள்ளே மறைத்து

வைத்துக் கொள்ளும் கம்யூனிஸ்டுகளின் விளம்பரமற்ற வாழ்க்கை சிறப்பு மிக்கது. அப்படிப்பட்ட கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவரான தோழர் வ. சுப்பையா அவரது துணைவியார் திருமதி சரசுவதி சுப்பையா அவர்களின் வாழ்க்கை ஓர் உயரிய சகாப்தம். இதில் கற்றுக் கொள்வதற்கும் கடைபிடிப்பதற்குமானவை ஏராளமாக நிறைந்துகிடக்கின்றன. புதுச்சேரி மாநிலத்தின் மாதர்குல மாணிக்கமாகத் திகழ்ந்து விடுதலைப் போராட்டத்தில் தான் ஈடுபட்டதோடு, புதுவைப் பெண்டிரும் தன்னுடன் போராடத் தூண்டுதலாகத் திகழ்ந்த சரசுவதி சுப்பையா அவர்களின் போராட்ட வாழ்க்கையை இக்கட்டுரை பதிவு செய்கிறது.

பிறப்பும் சிறப்பும்

இந்தியாவின் தனிச்சிறப்புமிக்க பகுதியாகப் புதுச்சேரி விளங்கி வருகிறது. இந்தியாவில் உள்ள ஒன்றியத்து ஆட்சிப் பரப்புகளில் சட்டமன்றம் உள்ள ஒரே ஆட்சிப் பரப்பாகத் திகழ்ந்துவரும் புதுச்சேரி, பிரெஞ்சியர் ஆட்சியின் கீழ் ஏறத்தாழ 260 ஆண்டுகள் இருந்துள்ளது. "பிரெஞ்சு சன்னல்" என்று போற்றப்படும் புதுச்சேரியின் விடுதலைக்காகப் போராடி பல்வேறு இன்னல்களை அடைந்து வெற்றி வாகை சூடி "மக்கள் தலைவர்" என்றும் "தோழர் வி.எஸ்." என்றும் புதுச்சேரி மக்களால் அன்புடன் அழைக்கப்பெற்றவர் வ. சுப்பையா அவர்கள். இவரது துணைவியார் திருமதி சரசுவதி சுப்பையா அவர்களும் கிட்டத் தட்ட 60 ஆண்டுகாலம் புதுச்சேரியின் விடுதலைக்காகவும் அதைத் தொடர்ந்து பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் பொது வாழ்க்கையில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்.

வேலூர் மாவட்டம் ஆரணியில் மருத்துவத் தொழில் செய்து வந்த சடகோபன் - சூடாமணி தம்பதியினருக்கு 22-10-1924 அன்று இரண்டாவது மகளாகப் பிறந்தார் சரசுவதி. இவர் ஆரம்பக் கல்வியைப் போளூரிலும், செய்யாரிலும், ஆரணியிலும் பயின்றார். சென்னை இராணிமேரி கல்லூரியில் இன்டர்மீடியட் பயின்றார்.

புதுவை வரதராஜுலு நாயுடு - பங்காரு அம்மாள் மகனாகப் பிறந்தவரும், புதுச்சேரியின் விடுதலைப் போராட்டத் தலைவருமான தோழர் வ. சுப்பையா அவர்களுக்கும் சரசுவதி அம்மையாருக்கும் 5-9-1943இல் திருவண்ணாமலையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. தனது கணவர் சுப்பையாவின் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட சரசுவதி

அவர்கள் கணவரின் வழிகாட்டுதலின்பேரில் கிராமப்புறங்களில் மகளிர் அமைப்புகளை உருவாக்கும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அதில் வெற்றியும் கண்டார். அதைத் தொடர்ந்து பெண்களை விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக ஒன்று திரட்டித் தலைமையேற்று அவர்களை முழுமூச்சுடன் போராட்டத்தில் ஈடுபடச் செய்தார். சரசுவதி அவர்களின் இந்த முயற்சிக்கு அவரது தாயாரும், மாமியாரும் உறுதுணையாக இருந்தனர் என்பது இங்கே குறிப்பிடத் தக்கதாகும்.

பிரெஞ்சிந்திய மாதர்கள் முதல் மாநாடு

பிரெஞ்சிந்திய விடுதலைக்குப் பெண்களை அணி திரட்டும் வகையில் மாதர்கள் மாநாடு ஒன்றை நடத்த முடிவு செய்யப்பட்டது. அதனைச் செயல்படுத்தும் செயல் வீராங்கனை யாகச் சரசுவதி சுப்பையா தலைமையேற்றுத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்ததன் காரணமாகப் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்ற பிரெஞ்சிந்திய மாதர்கள் முதல் மாநாடு 9.4.1946இல் ரோமயர்மில் மைதானத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டில் மதுரை ஜானகியம்மாள், ருக்குமணி, மீனாட்சி, பத்மாவதி போன்ற தமிழக மாதர் சங்கத் தலைவர்களும் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இம்மாநாட்டில் வரவேற்புரை ஆற்றிய சரசுவதி சுப்பையா அவர்கள், "வீட்டுக்குள்ளிருக்கும் அடிமைத்தனம், நாட்டுக்குள் இருக்கும் அடிமைத்தனம் அனைத்தையும் உடைத்தெறிந்துவிட்டுப் பரிபூரண சுதந்திரத்தை நாட்டுவதுதான் இங்கே கூடியுள்ள பெண்களின் இலட்சியம். இச்சுதந்திரத்தைப் பெறுவதற்கு எல்லாத் தரப்பட்ட பெண்களும் ஒன்றுபட்டு ஓர் இயக்கத்தை நடத்துவதற்குப் பிரெஞ்சிந்திய மாதர் சங்கத்தை அமைத்துள்ளோம். அதன் முக்கியக் குறிக்கோள் தேசத்தின் சுதந்திரம், அதனோடு ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாகச் சம உரிமையுடன், சம தர்மத்துடன் வாழக்கூடிய ஒரு புதிய சுதந்திரச் சமுதாயத்தை அமைப்பதாகும். அந்தச் சமுதாயத்தில் ஆண்களைப் பெண்கள் அடிமைப்படுத்துவதோ பெண்களை ஆண்கள் அடிமைப்படுத்து வதோ கிடையாது. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு? என்று அந்தப் புதிய சமுதாயத்தில் சொல்ல முடியாது" என்று வீர முழக்கமிட்டார். பெண்ணியச் சிந்தனைகளை, நாட்டுப்பற்றை அனல்தெறிக்கப் பேசிய சரசுவதி சுப்பையா அம்மையாருக்கு அப்பொழுது 22 வயதுதான். அந்த இளம்

வயதிலேயே முற்போக்குச் சிந்தனை உள்ளவராகவும் சுதந்தரப் போராட்டத்தில் பெண்களுக்கும் பங்குண்டு என்று அணி திரட்டித் தலைமையேற்றுப் போராடியவராகவும் விளங்கினார்.

> *இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல் தீர்மானத்தில்தான் முதன்முதலாகப் புதுவைக்குப் பரிபூரணச் சுதந்திரம் என்ற கோரிக்கை எழுப்பப் பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.*

அதற்கு முன்னரே இந்திய விடுதலை பற்றியே சிந்தித்துச் செயல்பட்டு வந்த புதுவைத் தலைவர்களை, புதுவையின் சுதந்திரத்தைப் பற்றியும் சிந்திக்கச் செய்த மகத்தான பணியை இம்மாநாடு செய்ததென்றால் அது மிகையல்ல.

இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல் தீர்மானமாவது:

> *பிரான்சின் சுதந்திரப் போரில் முன்னணியில் நின்று போராடிய பிரெஞ்சு வீரர்களையும் குறிப்பாகப் பிரெஞ்சுப் பெண்களையும் இம்மாநாடு வாழ்த்து வதுடன் பெண்களின் அரசியலுரிமையை மறந்த 3-வது குடியரசையும் அதன் பிற்போக்கு அரசியல் வாதிகளையும் தொலைத்து ஆண்களுக்கும், பெண்களுக்கும் சம உரிமையளிக்கும் உண்மையான சுதந்திரத்தைப் பிரான்சில் ஸ்தாபித்து வருவதை இம்மாநாடு பாராட்டுகிறது. இத்தகைய சுதந்திர பிரேமையுடைய பிரெஞ்சுப் பொதுமக்கள், பிரெஞ்சிந்தியாவிலுள்ள நாம் பிரெஞ்சு ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டுப் பரிபூரணச் சுதந்திரத்துடன் வாழவேண்டுமென்று கோரும் நமது சுதந்திரக் கோரிக்கையை ஆதரிப்பார்களென்று இம்மாநாடு நம்புகிறது.*

இம்மாநாட்டிற்குத் தலைமை ஏற்ற வரவேற்புக் கமிட்டித் தலைவர் திருமதி சரசுவதி சுப்பையா அவர்கள், அனைவரையும் மாநாட்டை வெற்றிகரமாக நடத்திக் கொடுக்க வேண்டிக் கொண்டு வரவேற்புரையை வாசித்தார்.

> *இம்மாநாடு, உலக சுதந்திரத்தின் மிக முக்கியமான சந்தர்ப்பத்தில், அதாவது நூற்றாண்டுகளாக மக்களை அடிமைப்படுத்தியிருந்த ஏகாதிபத்தியத்தை விரட்டிவிட்டுச் சுதந்திர சர்க்காரை ஸ்தாபித்தும்,*

பிற்போக்குவாதிகளை முறியடித்துவிட்டு மக்களின் நலனைக் காக்கும் உண்மையான ஜனநாயக சர்க்காரை ஸ்தாபித்தும் வரும்படியான சந்தர்ப்பதில் கூடியிருக்கிறது. அதேபோல் நம் நாட்டிலும் சுதந்திர இயக்கம் தன்னுடைய இலட்சியத்தில் வெற்றி என்னும் கட்டத்திலிருக்கிறது. இவ்வாறு உலகமெங்கும் பேசப்படும் சுதந்திரம் மனித சமுதாயம் முழுவதற்கும் வழங்கப்படுமா? அந்தச் சுதந்திரத்தில், மனித சமுதாயத்தில் சரிபாதி யிருக்கும் பெண்களுக்கு என்ன உரிமையிருக்கிறது என்பதைப் பெண்களாகிய நாம் கவனிக்க வேண்டும்.

இம்மாநாட்டில் இந்தியாவின் பல நகரங்களிலிருந்தும் பல்வேறு தலைவர்கள் கலந்து கொண்டனர். தலைவர்கள் அனைவரும் பிரெஞ்சிந்திய மாதர்களிடம் காணப்பட்ட அளவு கடந்த ஆர்வத்தைப் பாராட்டினர்.

இதுவரை ஆயிரக்கணக்கான ஆண்களின் கூட்டங்களில் பேசியிருக்கிறோம். ஆனால் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பெண்களைக் கூட்டி இவ்வளவு ஆர்வத்தோடு நடத்தப்படும் மாதர் மாநாட்டை நாங்கள் பார்த்ததேயில்லை. பிரிட்டிஷ் இந்தியப் பெண்களுக்கு ஒரு வழிகாட்டியாய் இருக்கிறீர்கள். சுதந்திர உணர்ச்சி பெற்று விட்டீர்கள். இதை நாங்கள் இந்தியா முழுவதற்கும் எடுத்துச் செல்வோம்

என்றனர். இவ்வாறாக இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் பிரிட்டிஷ் இந்தியப் பெண்களும் ஈடுபடத் தூண்டுதலாக இருந்தவர் சரசுவதி சுப்பையா.

புதுவை ராஜ்ய மாதர் சங்கம்

இந்திய சுதந்திரத்திற்குப் பின்பும், புதுச்சேரி சுதந்திரத்திற்குப் பின்பும் சரசுவதி சுப்பையா அவர்களின் பணிகள் மக்களின் நலனுக்காகக் குறிப்பாக, பெண்களின் முன்னேற்றத்திற்காகத் தொடர்ந்த வண்ணமிருந்தன. விடுதலைக்குப் பின்னர் 1955ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25ஆம் நாள், 1900ஆம் ஆண்டு பிரெஞ்சு சட்டத்தின்படியும் சொசைட்டி சட்டம் 1960இன் படியும் புதுச்சேரியில் பதிவு செய்யப்பட்ட பழமையான முதல் பெண்கள்

அமைப்பு "புதுவை ராஜ்ய மாதர் சங்கம்" என்பது குறிப்பிடத்தக்க தாகும். புதுவை விடுதலைக்குப் போராடிய வீராங்கனை, விடுதலைதான் கிடைத்துவிட்டதே என்று ஓய்வெடுத்துக் கொள்ளாமல் தொடர்ந்து மாதர் முன்னேற்றத்திற்காகவும் அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்கு எதிராகக் குரல் கொடுப்பதற்காகவும் இந்தச் சங்கத்தைத் தலைமையேற்று நடத்தினார்.

விடுதலைக்குப் பின்னர் இந்த அமைப்பின் மூலம் பெண்கள் முன்னேற்றத்திற்கான பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்துக் கீழ்வரும் 11 மாநாடுகளைச் சரசுவதி சுப்பையா அவர்கள் தலைமையேற்று நடத்தியுள்ளார்.

முதல் மாநாடு	–	06-02-1956
2வது மாநாடு	–	12-09-1965
3வது மாநாடு	–	15-12-1973
4வது மாநாடு	–	16-09-1976
5வது மாநாடு	–	07-12-1980
6வது மாநாடு	–	24-11-1983
7வது மாநாடு	–	27-11-1986
8வது மாநாடு	–	20-09-1990
9வது மாநாடு	–	28-01-1995
10வது மாநாடு	–	18-01-1997
11வது மாநாடு	–	22-04-2002

புதுவை ராஜ்ய மாதர் சங்கத்தை 2003ஆம் ஆண்டுக்குப் பின்னர் சரசுவதி சுப்பையா இந்திய மாதர் தேசிய சம்மேளனத்துடன் இணைத்துவிட்டார். ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகப் புதுவையில் இயங்கிவந்த புதுவை ராஜ்ய மாதர் சங்கம் 1956இல் பாலர் பள்ளி ஒன்றை ஆரம்பித்து நடத்தி வந்தது. புக் பைண்டிங் மற்றும் நோட்புக் தயாரிப்பு மையம், தையல் பயிற்சி, பாய் முடைதல், முதியோர் கல்வி போன்ற திட்டங்களைப் பெண் களின் முன்னேற்றத்திற்காக ஏற்படுத்திப் பல குடும்பங்களின் வறுமைப் பிரச்சினையைத் தீர்க்க வழி வகுத்தார். பெண்களுக்குப் பயிற்சி அளித்ததோடு தினசரி வேலை அளித்து, கண்காட்சிகள் திருவிழாக்களில் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் விற்கப்பட்டு ஊதியம் அளிக்கப்படடு வந்ததை அறிய முடிகிறது. 200க்கும் மேற்பட்ட "பெண்கள் விழிப்புணர்வு" முகாம்களைச் சரசுவதி சுப்பையா அவர்கள் நடத்தியுள்ளார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பதவிகள், வகித்த பொறுப்புகள் மற்றும் ஆற்றிய ஆக்கப் பணிகள்

1956 முதல் 1964 வரை புதுச்சேரி பிரதிநிதித்துவ சபையின் உறுப்பினராக விளங்கினார். இவர்தான் புதுச்சேரியில் **முதன்முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்** என்பது குறிப்பிடத்தக்கது. இவர் சட்டமன்ற உறுப்பினராகச் செயல்பட்ட காலத்தில்தான் பெண்கள் பிரச்சினைகள் தொடர்பாகச் சட்டமன்றத்தில் பல கேள்விகள் எழுப்பப்பட்டுத் தீர்வு காணப்பட்டது.

1968 முதல் 1978 வரை புதுவை நகர்மன்றத் துணை மேயராகவும், பொறுப்பு மேயராகவும் பதவி வகித்தார். **துணை மேயர் பதவி, மேயர் பொறுப்பு வகித்த முதல் பெண்மணி** என்ற பெருமைக்குரியவர் இவர்.

21-4-1997 முதல் 26-06-2002 வரை புதுச்சேரி சமூகநல வாரியத் தலைவராகப் பொறுப்பு வகித்துப் பல்வேறு பெண்கள் நலத்திட்டங்களைப் பெண்களின் நலனுக்காக அமல்படுத்தினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக் குழு உறுப்பினராகவும் புதுச்சேரி மாவட்டச் செயற்குழு, நிர்வாகக் குழு உறுப்பினராகவும் 40 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் அகில இந்தியத் துணைத் தலைவராகத் தனது இறுதிக்காலம் வரை பணியாற்றினார்.

புதுச்சேரி அரசின் குடும்பநல நீதிமன்ற ஆலோசகர், சுகாதார ஆலோசனைக் குழு, நுகர்வோர் ஆலோசனைக் குழு, இலவசச் சட்ட உதவி ஆலோசனைக் குழு போன்ற பல்வேறு குழுக்களில் சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

வாக்காளர்களுக்குப் போட்டோவுடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும் என்று முதன் முதலில் குரல் கொடுத்தவர் இவரே.

பெண்களுக்குப் பிரசவம் பார்க்கப் பெண் மருத்துவரை நியமனம் செய்ய வேண்டும், பெண் கல்விக்கு என்றும் முன்னுரிமை அளிக்க வேண்டும், கர்ப்பிணிப் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்க வேண்டும், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்க வேண்டும் என்று குரல் எழுப்பியவர்.

அன்று அவர் எழுப்பிய குரல் இன்றைக்குப் பல்வேறு நலத் திட்டங்களாகப் புதுவை அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுச் செயல்பட்டு வருவது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

பெண்களின் சமூகப் பிரச்சினைகளுக்காகவும் வரதட்சணைக் கொடுமைக்கு எதிராகவும் பல்வேறு போராட்டங்களை நடத்தியவர். இலவசச் சட்ட உதவி மையம், குடும்ப நீதிமன்றம் போன்ற அமைப்புக்களின் மூலம் பல வழக்குகளை நடத்தித் தொடர்ந்து பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவினார்.

பெண்களுக்கு 33 சதுவீத இட ஒதுக்கீடு கோரி டெல்லி பாராளுமன்றம் முன்பு 20-11-1996இல் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றார்.

19-11-1997இல் கேப்டன் லட்சுமி தலைமையில் டெல்லியில் 33 சதவிகித இட ஒதுக்கீடு கோரி விடுதலைப் போராட்ட வீரர்கள் பாராளுமன்றம் முன்பு நடத்திய உண்ணாவிரத அறப்போரில் பங்கேற்றார்.

1962இல் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே போர் மூண்ட பொழுதும், 1965இல் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே போர் மூண்ட பொழுதும் பணம், பொருள், பின்னல் ஆடைகள் ஆகியவற்றைச் சேகரித்துக் கொடுத்ததோடு தனது நகைகளையும் ஆயிரக்கணக்கில் தன் சொந்தப் பணத்தையும் கொடுத்துள்ளார்.

அயல்நாடு பயணம்

1963இல் மாஸ்கோவில் நடைபெற்ற உலகப் பெண்கள் மாநாட்டிலும், 1968இல் பெர்லினில் (கிழக்கு ஜெர்மனி) நடைபெற்ற உலகப் பெண்கள் மாநாட்டிலும், 1973இல் இலங்கையில் நடைபெற்ற ஆசியப் பெண்கள் மாநாட்டிலும், 1977இல் சோவியத் யூனியனிலும், 1985இல் மீண்டும் பெர்லினிலும் இந்தியப் பிரதிநிதியாகப் பங்கேற்றுத் தாய்நாட்டிற்குப் பெருமை சேர்த்தார்.

பெற்ற பாராட்டுக்கள்

இந்திய விடுதலைப் பொன்விழாவினை ஒட்டி இந்திய அரசால் "சிறந்த மூத்த விடுதலை வீரர்" என்று தேர்வு செய்யப்பட்டு 14-8-1987இல் விருது வழங்கப்பட்டது.

இந்திய விடுதலைப் பொன்விழாக் கொண்டாட்டத்தின் பொழுது புதுச்சேரி அரசால் சிறந்த விடுதலைப் போராட்ட வீரர் எனப் பாராட்டி 15-08-1997இல் விருது வழங்கப்பட்டது.

புதுச்சேரி அரசு சமூக நலத்துறை இவரது சிறந்த சமூகச் சேவைக்காக 8-3-1994இல் "மகளிர் திலகம்" என்ற விருது அளித்துக் கௌரவித்தது.

ஜூனியர் சேம்பர், புதுச்சேரி மூலம் 16-09-1997 அன்று தலைசிறந்த மூத்த குடிமக்கள் விருது வழங்கிச் சிறப்பிக்கப் பட்டது.

மேதகு புதுவைத் துணைநிலை ஆளுநர் அவர்களால் தேசியப் பெண்கள் ஆணையம்வழி நிறைவேற்றப்படும் மங்கலம் திட்டத்தின் மூலம் அளிக்கப்பட்ட சிறந்த சமூகச் சேவகருக்கான விருதினை 20-08-1998இல் பெற்றார்.

1944இல் தொடங்கிய சரசுவதி சுப்பையா அவர்களின் பொது வாழ்க்கைப் பயணம் எண்ணற்ற இன்னல்களைச் சந்தித்தது. இது தன் இறுதி மூச்சை நிறுத்திய வரை ஏறத்தாழ 60 ஆண்டுகள் புதுச்சேரி மாநில விடுதலைக்காகவும், பெண்களின் முன்னேற்றத் திற்காகவும் தொடர்ந்தது. விடுதலைப் போராட்டத்தில் போராடிச் சுதந்திரம் பெற்றதோடு தனது சேவையை நிறுத்தி விடாமல், அதைத் தொடர்ந்து பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத்திற்காகத் தனது கடைசி மூச்சுவரை அயராது உழைத்தார்.

2005 ஜூன் 3, 4, 5 தேதிகளில் புதுச்சேரியில் இந்திய மாதர் தேசியச் சம்மேளனத்தின் அகில இந்தியப் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. இந்தியாவின் அனைத்து மாநிலங்களி லிருந்தும் நூற்றுக்கும் அதிகமான பெண்கள் புதுவைக்கு வந்திருந்தனர். இந்திய மாதர் சம்மேளனத்தின் அகில இந்தியத் துணைத்தலைவர் என்ற முறையில் தனது உடல்நிலை சரியில்லாமல் இருந்தாலும் வரவேற்புரையை வாசித்துவிட்டு வீடு திரும்பினார். மறுநாள் 4ஆம் தேதி காலை மாரடைப்பால் மரணமடைந்தார். தனது 81 வயது வரை இளமைத் துடிப்புடன் சமூகச் சேவையில் ஈடுபட்ட இந்த மாதரசியை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

திருமதி பார்வதி கிருஷ்ணன்

ரெ.இந்திரா

நாடு விடுதலை அடைவதற்கு முன்பே தென்னிந்தியாவில் திருச்செங்கோடு என்ற ஊருக்கு அருகில் உள்ள குமார மங்கலத்தில் பிறந்த பார்வதி அவர்கள் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் முதுகலை வரலாறு பாடம் படித்தவர். இவர் அங்குப் படித்தபோது இவருக்குத் தோழர்களாகவும் இந்தியர்களாகவும் இருந்தவர்கள் இந்திரா பிரியதர்ஷினி, பெரோஸ்காந்தி, பூபேஸ் குப்தா, ஜோதிபாசு, என்.கே. கிருஷ்ணன், ரொமேஷ் சந்திரா, நிகில் சக்கிரவர்த்தி, 'டெக்ஸ்மோ' ராமசாமி, அருண்போஸ் ஆகியோர். இவர்களில் இந்திரா பிரியதர்ஷினி, பெரோஸ் காந்தி தவிர மற்றவர்கள் அனைவரும் கம்யூனிஸ்ட் சித்தாந்த அபிமானிகள்.

இந்திரா பிரியதர்ஷினிக்கு முன்பே பார்வதி அவர்கள் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படித்தவர். ஜவஹர்லால் நேரு பார்வதி கிருஷ்ணனின் தந்தையாகிய சுப்பராயன் அவர்களிடம் பார்வதி அங்குத் தானே படிக்கிறாள், அங்கு நிறவேறுபாடு உள்ளதா என்று கேட்டறிந்தார்.

> *அப்படி எதுவும் நிறவேறுபாடு இல்லை என்று என் தந்தை நேருவிடம் சொன்னார். அதற்குக் காரணம் முற்போக்குச் சிந்தையுள்ள பேராசிரியர் கில்பாட் மரைன் என்பவர் ஆக்ஸ்போர்டில் அப்போது ஆசிரியராக இருந்தார். என் தந்தை சொன்ன பின்னர்த் தான் இந்திராவைக் கல்லூரி நுழைவுத் தேர்வுக்கு நேரு குடும்பத்தார் அனுப்பி வைத்தனர்*

என்கிறார் பார்வதி கிருஷ்ணன்.

பார்வதி கிருஷ்ணன் படிக்கச் சென்றபோது அவருக்குக் கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தின் மீது பிடிப்பு ஏற்பட்டது. அதன் காரணமாக அவர் பிரிட்டன் கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராகச் சேர விண்ணப்பம் செய்தார். பிரிட்டன் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலராக இந்தியாவின் கேரள மாநிலத்தில் எர்ணாகுளம் கல்லூரியில் இன்டர் மீடியட்டில்

தங்கப்பதக்கம் பெற்று, சென்னை பிரசிடென்சி கல்லூரியில் பி.ஏ. கணிதம் படித்து எம்.எஸ்.சி. படிப்பதற்காக ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த என்.கே. கிருஷ்ணன் என்பவர் பார்வதியின் தகுதிகளை மதிப்பீடு செய்ய வந்தவர், பிறகு பார்வதியின் கணவர் என்ற தகுதியைப் பெற்றுக் கொண்டார். இவர் கேரள மாநிலத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் தாய்மொழி தமிழ்தான். அந்தக் காலத்தில் இங்கிலாந்தில் பல பல்கலைக் கழகங்களில் இந்திய மாணவர் சங்கம் (Indian Students Society) இருந்ததாகப் பார்வதி கிருஷ்ணன் கூறுகிறார்.

கட்சியில் சேர்ந்த பின் அவர் செய்த முதற்பணி பம்பாயில் கட்சியின் பொதுச் செயலாளர் பி.சி. ஜோசியின் தனி உதவியாளராக இருந்ததாகும். அப்பொழுது அவருக்கு மாதச் சம்பளம் ரூ.40/-. பின்னர்க் கலைத்துறைப் பணிகளில் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். அப்பொழுது கலைத்துறை சார்ந்த நண்பர்கள் பலர் அவருக்கு அறிமுகம் ஆகியுள்ளனர். அவர் இங்கிலாந்தில் இருந்தபோது அங்கிருந்த பி.பி.சி.யில் பணி புரிந்த பால்ராஜ் சானி-தமயந்தியும், பின்னர், கே.ஏ. அப்பாஸ், நடனக் கலைஞர் உதயசங்கர் ஆகியோருடன் இவருக்குப் பழக்கம் ஏற்பட்டது. இந்திய மக்கள் நாடக மன்றம் 'இப்டா' ஆரம்பிக்கப்பட்டது. அதன் மூலம் 'பலே' நடனக்குழு ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. இதனை உருவாக்கப் பி.சி. ஜோசிதான் தூண்டுதலாக இருந்தார் என்கிறார் பார்வதி கிருஷ்ணன்.

'பலே' நடனத்திற்கு இவர் விளக்க உரைகள் எழுதிச் சில நேரங்களில் இவரே வாசித்தும் இருக்கிறார். 'பலே' நடன அரங்கின் ஒளி அமைப்பும் இவரது பொறுப்பில் இருந்திருக்கிறது. இந்தக் கலைக் குழுவின் முக்கியமான உறுப்பினரில் ஒருவர் அமெரிக்காவில் உள்ள ரவிசங்கர். இவரது அண்ணன்தான் உதயசங்கர். 'பலே' நடனத்திற்கான இசையை ரவிசங்கர்தான் அமைத்துக் கொடுத்ததாகவும் பார்வதி கிருஷ்ணன் விளக்குகிறார். மேலும் 1946 வரை எந்தக்கலை நிகழ்ச்சிகள் தொடங்கினாலும் ரவிசங்கர் இசை அமைத்துப் புகழ்பெற்ற 'சாரே சஹான்சே அச்சா' என்ற பாடலைப் பாடத் தொடங்கி, நிகழ்ச்சி முடியும் பொழுது தாகூரின் 'ஜனகணமன' பாடலைப்பாடி நிறைவு செய்வோம் என்கிறார்.

இந்தக் கலைக்குழு கல்கத்தா, டெல்லி, பஞ்சாப் முதலிய முக்கியமான நகரங்களில் நிதி திரட்டிக் கலை நிகழ்ச்சிகள் நடத்தி, வங்காளப் பஞ்சத்திற்கு உதவியது. ஒவ்வொரு மாநிலத்திற்கும்

இந்தக் கலைக்குழு சென்றபோது அங்குள்ள பிரபலக் கலைஞர் களையும் சேர்த்துக் கொண்டது. வங்காளத்திலிருந்து ஜம்புமித்ரா, மிருணாள்சென், ஆந்திராவிலிருந்து ராஜாராவ் முதலிய தோழர்களை இணைத்துக் கொண்டார். பம்பாயில் புகழ் பெற்ற 'புரக்தா' என்ற கிராமியக்கலையையும், மராட்டியத்தில் புகழ்பெற்ற பவாடா கிராமியக் கலையையும் அரங்கேற்றம் செய்துள்ளார்.

இவர் கலந்துகொண்டு அரங்கேற்றம் செய்த நாடகங்களின் கருப்பொருள் தேசபக்தியைத் தூண்டும் பல நிகழ்ச்சிகள்தாம். 1946இல் பம்பாய் துறைமுகத்தில் நிகழ்ந்த கப்பல் படையின் போர் பற்றியும், காந்தி-ஜின்னா சந்திப்பு போன்ற முக்கிய வரலாற்று முக்கியத்துவம் பெற்ற நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டபோது இவருக்குக் கொடுக்கப்பட்ட வேலை, தலைவர்கள் எழுதித் தந்த கடிதத்தைத் திறமையாகப் பட்டுவாடா செய்வதும், முக்கியத் தலைவர்களை ஓர் ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குப் பாதுகாப்பாக அழைத்துச் செல்வதும்தான். அப்படிச் அழைத்துச் சென்ற தலைவர்களில் தோழர் பி. இராமமூர்த்தி அவர்களை அழைத்துச் சென்றபோது தனக்கு ஏற்பட்ட ஒரு சுவையான நிகழ்ச்சியை அவர் நினைவுகூர்கிறார்.

> *ஒரு முறை தோழர் பி.இராமமூர்த்தியை அழைத்துச் சென்று கல்கத்தாவில் விட்டுவர வேண்டிய வேலை என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவரை அழைத்துச் சென்றபோது ஒவ்வொரு பெரிய ஊரிலும் ரயில் நிற்கும்போது ரயிலைவிட்டுக் கீழே வர விரும்பினார். நாங்களோ தலைமறைவு (Underground Life) வாழ்க்கையில் இருந்தோம். சிக்கல் ஏற்படுமென எச்சரித்தேன். அவருக்கோ ஒரு கால் ஊனம். வண்டியை விட்டு இறங்கினால் உடனடியாக ஏற முடியாது. அத்துடன் சி.ஐ.டி. களும் சுலபமாகக் கண்டுபிடித்துவிடுவார்கள் என்று சொன்னேன். அவரோ என்னைப் போல் லட்சக்கணக்கான நொண்டிகள் இருக்கும் போது, என்னை எப்படிக் கண்டுபிடிப்பார்கள்' என்று விதண்டாவாதம் பேசினார். படாதபாடுபட்டு அவரைக் கல்கத்தாவிற்குக் கொண்டு போய்ச் சேர்த்தேன்*

என்று கூறுகிறார்.

கட்சியில் பல பணிகளைச் செய்து இவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபொழுது பாரதி கண்ட புதுமைப் பெண்ணாகவே இருந்துள்ளார் என்பதற்குப் பின்வரும் இரு நிகழ்ச்சிகளே சான்றுகள்.

மொரார்ஜி தேசாய் பிரதமராக இருந்தார். அவர் காந்தி ஜெயந்தியின்போது, காந்தி சமாதியில் மரியாதை செலுத்திவிட்டு அங்கே பெண்களைப் பற்றித் தாழ்வாகப் பேசிவிட்டார். நாடாளுமன்றத்திற்கு நான் வந்தபோது, மற்ற பெண் எம்.பி.க்களிடம் பிரதமர் பெண்களைப்பற்றி இப்படி மோசமாகப் பேசியது சரியா? என்று கேட்டேன். சரியில்லை தான் என்றனர். அப்படியானால், அவர் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்றேன். அப்போது பிரதமர் தனி அறையில் (சேம்பர்) இருந்தார். மற்ற பெண் எம்.பி.க்கள் சேம்பருக்குச் சென்று பிரதமரிடம் என்னைப் பேசச் சொன்னார்கள். நான் சேம்பருக்குச் சென்று பிரதமரிடம், பெண்களைப் பற்றித் தாழ்வாகக் காந்தி ஜெயந்தி அன்று காந்தி சமாதியிலேயே நீங்கள் பேசியது எங்களுக்கு வருத்தமாக இருக்கிறது. காந்தி பெண்களின் சம உரிமைக்காகப் பாடுபட்டவர். அவரது நினைவிடத்தில் இப்படிப் பேசியுள்ளது தவறு. இதற்காக வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று சொன்னேன். மொரார்ஜியும் உடனே வருத்தம் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்றேன். காங்கிரஸ்காரர்கள் கிண்டல் செய்வார்களே என்றார் பிரதமர். இதைப் பேசும்போதே நீங்கள் நினைத்திருக்கவேண்டும் என்றேன். பின்னர் நாடாளுமன்றத்தில் பூஜ்யம் நேரத்தில் (Zero hour) எழுந்து நின்றேன். சபாநாயகரும் என்னைப் பேச அனுமதித்தார். 'காந்தி சமாதியில் பிரதமர் பெண்களைத் தாழ்வாகப் பேசிவிட்டார். எங்களுக்கு இது வருத்தம் அளிக்கிறது. பிரதமர் இதற்கு வருத்தம் தெரிவிக்க வேண்டும்' என்றேன். இதற்குப் பதில் அளிக்குமாறு பிரதமரிடம் சபாநாயகர் கூற, பிரதமரும் வருத்தம் தெரிவித்தார். மறுநாள்

'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேடு தலைப்புச் செய்தியாக 'Prime Minister Apologised' என்று செய்தி வெளியிட்டது.

மற்றொரு செய்தி:

லோக் சபாவில் அவைத்தலைவர் (சேர்மன்) இல்லாதபோது, அந்தப் பொறுப்புக்கு வரிசைப் படி சிலரை நியமித்தார்கள். ஒருநாள் எனக்கு அந்தப் பொறுப்பு வந்தது. அப்போது ஜனதா ஆட்சி. ஜார்ஜ் பெர்னாண்டஸ் ராணுவ மந்திரி. அவர் பேச எழுந்தார். லோக்சபாவின் தலைவரான என்னைப் பார்த்து "சேர்மன் அவர்களே!" என்று அழைத்துத்தான் பேச்சைத் தொடங்கவேண்டும். ஜார்ஜ் பெர்னாண்டஸ் பேசும்போது குயுக்தியாக, 'காம்ரேட் சேர்மன்' என்று என்னை அழைத்தார். அவர் பேசும்பொழுது யாரோ ஒரு உறுப்பினர் குறுக்கிட்டார். நான் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி "When Comrade Minister is speaking Honourabe Member should not interrupt" என்றேன். டைம்ஸ் ஆப் இந்தியா நாளேட்டில் Comrade is now a parlimentary word என்று முதல் பக்கத்தில் செய்தி வெளியிட்டது

என்று சொல்லும் அளவிற்கு அஞ்சா நெஞ்சம் உடையவர் பார்வதி கிருஷ்ணன். அதே சமயத்தில் எளிமையானவரும் ஆவார்.

திருச்செங்கோடு குமாரமங்கலம் ஜமீன்தார் சுப்பராயனின் மகளான இவர், கட்சிக் கொள்கையின்படி எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர். வாழ்க்கைத் துணைவராகக் கம்யூனிஸ்ட் சிந்தனையுள்ள என்.கே. கிருஷ்ணனைத் தேர்வு செய்தார். இருவருக்கும் பம்பாயிலுள்ள மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் 50 பேர் மத்தியில் திருமணம் நடந்து பின் பதிவாளர் அலுவலகத்தில் திருமணம் பதிவு செய்யப்பட்டது. திருமணத்தைப் பதிவு செய்ய ரூபாய் 10 கட்டணம் செலுத்த வேண்டும். ரூ.5/-ஐ அவரது அண்ணன் மோகனும் மீதி ரூ.5/-ஐக் கட்சித் தோழர் ஒருவரும் கொடுத்துள்ளனர். திருமணம் முடிந்ததும் அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டுள்ளது. திருமணச் செலவு மொத்தம் ரூ.50/- மட்டுமே. சாட்சிகளாக ஏ.எஸ். ஆச்சாரி, வைத்தியா, மோகன் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

எளிய வாழ்க்கை, உயர்ந்த சிந்தனையுள்ளவராக இவர் இருப்பதற்குக் காரணம் இவருடைய பெற்றோர்களே. அவரது தந்தையார் டாக்டர் கே.சுப்பராயன் அவர்கள் விடுதலைக்கு முந்தைய தமிழக முதல்வர்; பின்னர் மத்திய அமைச்சர்; மாநில அமைச்சர்; மாநில ஆளுநர் எனப் பல முக்கியப் பொறுப்புகளை வகித்தவர். கொங்கு வேளாள சாதியினரான சுப்பராயன் மங்களூரைச் சார்ந்த அந்தணர் பெண்ணான இராதாபாயைச் சாதி மறுப்புத் திருமணம் செய்தவர். மூன்று ஆண்மக்களில் மூத்தவர் பரமசிவம் குமாரமங்கலம் (இராணுவத் தளபதி ஆகப் பணியாற்றியவர்). இரண்டாவது மகன் கோபால் குமாரமங்கலம் (நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தின் நிர்வாகத் தலைவர்). மூன்றவாது மகன் மோகன் குமாரமங்கலம் (கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்). ஒரு பெண்மகள், பார்வதி.

பார்வதி கிருஷ்ணன் தன் தந்தையைப் பற்றிக் கூறும்போது,

> *எங்கள் அப்பா எங்களிடம், 'நீங்கள் யாருக்கும் எந்தக் கெடுதலும் செய்யக் கூடாது அதே போல, சமூக விரோதமான பழக்கவழக்கங்களான மது அருந்துவது, பெண்களிடம் ஒழுக்கக்கேடாக நடந்து கொள்வது, பொய் சொல்வது ஆடம்பரமான வாழ்க்கை வாழ்வது போன்றவற்றைச் செய்யக் கூடாது' என்பார். அதே சமயம், 'நீங்கள் எந்தக் கொள்கையை வேண்டுமானாலும் பின்பற்றுங்கள். அதற்கு உங்களுக்குச் சுதந்திரம் உண்டு' என்பார்*

என்கிறார்.

> *பெண்களுக்குச் சம உரிமை கொடுப்பது அன்றைக்குப் (விடுதலைக்கு முன்பு) பெரிய விஷயம். எங்கள் குடும்பத்தில் அது நடைமுறையில் இருந்தது. நாங்கள் உடன்பிறந்தோர் நால்வர், மூன்று அண்ணன்மார்கள். நான் ஒருத்தி பெண். அண்ணன்மார்கள் ஆண்கள் என்பதற்காக அதிக முக்கியத்துவமோ, நான் ஒருத்தி பெண் என்பதற்காக உதாசினப்படுத்தவோ இல்லை. நான்கு பேரும் சமமாக நடத்தப்பட்டோம்*

என்று தனது பெற்றோர்களின் நற்குணங்களை நினைவுகூர்கிறார்.

சுப்பராயன் அவர்கள் அமைச்சராக இருந்தபோதும் அவரிடம் எளிமையையும், மனிதநேயத்தையும் தான் கற்றுக் கொண்டதாகவும் பார்வதி கிருஷ்ணன் பின்வருமாறு கூறுகிறார்.

> *எங்கள் குடும்பத்தில் உள்ள வழக்கம். நாங்கள் வீட்டிலிருந்தால் எல்லோரும் ஒன்றாகவே சாப்பிடுவோம். எல்லோருக்கும் பிடித்த பொதுவான கருத்துக்களைத்தான் அப்போது நாங்கள் பேசிக் கொள்வோம். யாராவது வித்தியாசமான அரசியல் கருத்துக்களைப் பேசினால், உடனே என் தகப்பனார், அப்பா அம்மாவோடும் சகோதர-சகோதரியுடனும் குடும்பமாக இங்கே இருக்கிறோம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்குப் பிடித்த கொள்கைகளை நீங்கள் பின்பற்றுங்கள்; பிரச்சாரம் செய்யுங்கள்; அதற்கெல்லாம் உங்களுக்குச் சுதந்திரம் உண்டு. ஆனால் அவற்றை இங்கே பேசினால் பிரச்சினைகள் வரலாம்*

என்று எடுத்துச் சொல்வார் என்கிறார்.

> *இராதாபாய் அவர்கள் இந்திய நாடாளுமன்றத்தின் முதல் பெண் உறுப்பினர். இந்தியாவிலேயே பல்கலைக்கழகச் செனட் சபையிலும் சிண்டிக்கேட்டிலும் முதன்முதலில் இடம் பெற்ற பெண் உறுப்பினர். ஒரு ஜமீன்தார் குடும்பத்திற்கு மருமகளாக வந்த என் தாயாரிடத்தில் ஜாதி, மத பேதம் எப்போதும் இருந்ததில்லை. அதைவிட அதே உணர்வுகள் தனது குழந்தைகளிடம் வளர வேண்டுமென்று அதற்கான பயிற்சிகளையும் தந்தார்.*
>
> *எங்களை அழைத்துக் கொண்டு எப்போதாவது சில சாதாரண வீடுகளில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்குச் செல்வார். அங்குச் சாப்பிட உட்கார்ந்தால் அவர்கள் எதைக் கொடுத்தாலும் மனம் கோணாமல் சாப்பிட்டு எங்களையும் சாப்பிட வைப்பார். எங்கள் வசதிக்கு வைரம், மரகதம், கோமேதகம் என்று எதை வேண்டுமானாலும் வாங்கலாம். ஆனால் ஒரு தங்க நகையைக் கூட, என் தாயார் அணிந்து கொண்டதில்லை. என்*

தந்தையாவது ஒரே பெண்ணாகிய என்னையும்
அணிந்து கொள்ளச் செய்யவில்லை

என்று கூறும் பார்வதி கிருஷ்ணன் இன்றும் அதே எளிமையான தோற்றத்தில்தான் வாழ்கிறார்.

இளம் வயது முதல் இவர் அரசியல் தலைவர்கள் பலருடன் அறிமுகம் ஆகியுள்ளார். இராஜாஜிதான் இவருடைய தந்தையின் குடும்ப வழக்கறிஞர். இவரது தந்தையின் கலப்புத் திருமணத்திற்குக் குமாரமங்கல ஜமீன்தாரிணியாகிய இவரது பாட்டியிடம் பேசிச் சம்மதம் வாங்கியவரே இராஜாஜி தான். அதனால் இராஜாஜி வீட்டிற்கு அடிக்கடி சென்று வந்துள்ளார். காந்தி ஒரு முறை இவரது தந்தையின் வீட்டிற்கு வந்து தங்கியுள்ளார். நேரு இவரது தந்தையின் பங்களாவில் 10 நாட்கள் மனைவி கமலாவுடன் வந்து தங்கியுள்ளார். இராஜாஜியின் மகள் இலட்சுமி எங்களோடு நெருக்கமாகப் பழகுவார். "இலட்சுமியைக் காந்தியின் மகன் தேவராஜ் காந்தி விரும்புவதைப் பற்றியும், திருமணம் செய்து வைக்க உதவி செய்ய வேண்டுமென்றும் எனது தாயாருக்குத் தேவராஜ் காந்தி ஒரு கடிதமும் எழுதினார். அதனைப்படித்த எங்கள் தாயார் எல்லாப் பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டு அத்திருமணத்தை நடத்திவைத்தார். தேவராஜ் காந்தி எங்கள் தாயாருக்கு அப்போது எழுதிய அந்தக் கடிதம் நீண்ட நாட்கள் என்னிடமே இருந்தது. சில நாட்களுக்கு முன்புதான் அதை தேவராஜ் காந்தியின் மகன் மேற்கு வங்கக் கவர்னர் கோபாலகிருஷ்ண காந்திக்கு அனுப்பி வைத்தேன்" என்கிறார். மேலும்,

இலண்டனில் நானும் இந்திராவும் நாள் தோறும்
பார்த்துக் கொள்வோம். பேசிக்கொள்வோம்.
மாணவப்பருவத்தில் சிநேகிதிகளாக இருந்தோம்.
நான் எம்.ஏ.வரை ஆக்ஸ்போர்டில் படித்தேன்.
இந்திரா இடையிலேயே இந்தியா திரும்பி
விட்டார். இந்தியாவில் நாங்கள் இருவரும்
சிநேகிதிகளாகவே இருந்தோம். குடும்ப
வாழ்க்கையில் ஈடுபட்டபோதும் நாங்கள்
சந்தித்தோம். மனம் விட்டுப் பேசிக்கொள்ளக்கூடிய
அளவிற்கு நண்பர்கள்

என்று கூறும் பார்வதி கிருஷ்ணன் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் நல்ல செயல்களையும் தீய செயல்களையும்

சுட்டிக்காட்டத் தவறவில்லை. சோவியத் யூனியன் உடைந்து போனதற்குக் காரணம் அங்கும் கம்யூனிஸ்ட் கட்சி இலஞ்சம் போன்ற பலகீனங்களைக் கடைப்பிடித்ததால்தான் என்றும், சோவியத் யூனியனில் எல்லோருக்கும் மருத்துவ வசதி, கல்வி வசதி, வேலைவாய்ப்பு சமமாகக் கிடைத்தன என்பதனையும், தோழர் கோர்பச்சேவ் எதற்கெடுத்தாலும் ஸ்டாலினின் சர்வாதிகாரத்தைப் பற்றி மட்டுமே பேசுவார்; ஸ்டாலின் சர்வாதிகாரியாக மட்டுமா இருந்தார்? அவரால் தான் ஹிட்லரை அழிக்க முடிந்தது என்றும், பாலைவனமான சைபீரியாவில் லெனின் ஒரு இராட்சத மின் உற்பத்தி நிலையத்தை உருவாக்கியிருந்தார்; அதைத் திறந்து வைத்தபோது, 'எலெக்ரிசிட்டி+ஸ்டீல்=ரஷ்யா' என்று லெனின் சொன்ன வாசகம் உலகப்புகழ் பெற்றது என்றும் அதனைத் தான் பார்க்கப் போயிருந்ததாகவும் கூறுகிறார்.

மூத்த தலைவரான பார்வதி கிருஷ்ணன்,

இன்றைய இளைய தலைமுறையினர் வருமானத்தைத் தான் முதலில் பார்க்கிறார்கள். அதைத்தான் நம்புகிறார்கள், உதாரணத்திற்கு ஐ.டி. என்கிற கணினித்துறையைப் பாருங்கள். கை நிறைய அல்ல பை நிறையச்சம்பளம். எத்தனை ஆண்டுகளுக்கு ஐ.டி. துறை இப்படியே வேலைவாய்ப்பைக் கொடுக்கும். நிறைய இளைஞர்கள் படித்துத் தொழிற்கல்விப் பட்டத்தோடு வெளிவருகிறார்கள். இளைஞருக்குப் படிப்புத் தரவேண்டியது நமது கடமை. ஆனால் அது விஞ்ஞானப் பூர்வமானதாக இருக்கவேண்டும். வேலைவாய்ப்புத் தரக்கூடிய தாகவும் இருக்க வேண்டும். வேலை வாய்ப்பு இல்லையென்றால் இளைஞர்களுக்கு விரக்தி ஏற்படும். இளைஞர்கள் மத்தியில் விரக்தி ஏற்படுமானால் அது விபரீதமாக மாறிவிடும். அவர்கள் தீவிரவாதத்திற்குச் சென்று விடுவார்கள். ஒரு விஞ்ஞானப் பூர்வமான திட்டமிட்ட அணுகுமுறை இன்று வரை நம்மிடம் இல்லை

என்று வருத்தப்படுகிறார்.

மக்களுக்குச் சேவை செய்வதாகப் பதவிக்கு வருபவர்களுக்கு (எம்.பி., எம்.எல்.ஏ., அமைச்சர்) ஊதியமும், தொலைபேசி வசதி, வாகன வசதி, தலைநகரங்களில் வீட்டு வசதி, போக்குவரத்து

வசதி எல்லாம் செய்து தரப்படுகின்றன. இவ்வளவையும் பெற்றுக் கொண்டுதான் இவர்கள் சேவை செய்ய வருகிறார்கள். முன்பெல்லாம் எம்.பி., எம்.எல்.ஏக்களெல்லாம் பலன் கருதாத பல சேவைகளைச் செய்திருக்கிறார்கள். இப்போது அப்படி இல்லை. அதைப் போல் அரசியலில் மதம் கலந்து சிக்கலையும் சிரமத்தையும் உண்டாக்குகிறது. மதம் அரசியலுக்குள் வரக் கூடாது. மதம் தனி. மனிதனின் சொந்த விஷயம். மதத்தைப் பின்பற்றுவதோ பின்பற்றாமல் இருப்பதோ அவனது தனிப்பட்ட விருப்பம். நேரு காலத்தில் மதத்திற்கும் அரசியலுக்கும் இப்போதுள்ள நெருக்கடியில்லை. நேருக்குப்பிறகு தான் மெல்ல மெல்ல இந்தக் கட்டுகள் உடையத் தொடங்கின.

இந்திராகாந்தி பிரதமராக இருந்தபோது திருப்பதி கோவிலுக்குப் போய் பூரணகும்ப மரியாதை பெற்றார். சர்ச்சுக்குப் போனார். காஞ்சி சங்கராச்சாரியரிடம் சென்று ஆசி பெற்றார். இவையெல்லாம் தனக்குப் பிடிக்கவில்லை என்று கூறும் பார்வதி கிருஷ்ணன் அவர்கள் அந்தக்காலத்தில் நாட்டிற்கு உழைத்த உத்தமர்கள் தங்கள் சாதியையும் மறந்திருந்தார்கள் என்கிறார். சத்தியமூர்த்தி ஐயர், சத்தியமூர்த்தி என்று மட்டும் தான் கையொப்பம் இடுவார். காமராஜரும் அப்படியே. இராஜாஜியும் அப்படியே. சி. சுப்பிரமணியம் ஒரு நாளும் கவுண்டர் என்று காட்டிக் கொண்டதில்லை. அவினாசிலிங்கமும் அப்படியே. சமூகச் சீர்திருத்தக் காலம் அது என்று இன்றைய அரசியலின் அவலம் கண்டு அவர் வருந்துவது அவர் அளித்த பேட்டி மூலம் அறியமுடிகிறது.

ஜமீன்தார் குடும்பத்தில் பிறந்து வெளிநாட்டில் சென்று படித்து வந்தாலும் பார்வதி கிருஷ்ணன் தாய்மொழிப் பற்று உடையவர். செல்வ வளமிக்கக் குடும்பத்தில் பிறந்ததால் ஆரம்பக்கல்வி சீனியர் கேம்பிரிட்ஜ் வகுப்பு வரை சென்னை வேப்பேரியில் உள்ள ஈவார்ட்ஸ் பள்ளியில் படித்துள்ளார். மேற்படிப்பிற்கு இங்கிலாந்துக்குச் சென்று விட்டார். அதனால் இவருக்குப் பேசமட்டுந்தான் தமிழ் தெரியும். ஆனால் தாய்மொழியில் படிப்பது தான் நல்லது. தமிழோ, இந்தியோ, ஆங்கிலமோ எதுவாக இருந்தாலும் தாய்மொழியில் படிப்பதுதான் சிந்திப்பதற்கு வசதியாக இருக்கும் என்னும் இவர்,

> *என் கணவர் கேரளத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் தாய்மொழி தமிழ்தான். எனக்கும் தமிழ். நாங்கள் கோவை காட்டூரில் குடியிருந்த*

போது எங்கள் மகள் இந்துவைக் கோவை ராம்நகரிலுள்ள சபர்பன் பள்ளியில் தமிழ்வழிப் பாடப் பிரிவில் தான் சேர்த்தோம். அவள் தமிழில் படித்து மருத்துவப்படிப்புக்கே தேர்வு பெற்றாள். ஆங்கிலமும் சிறப்பாகக் கற்பித்தனர். என்மகள் குழந்தைகள் புற்றுநோய் மருத்துவராக அமெரிக்காவில் நியூயார்க் நகரில் உள்ளார். மாப்பிள்ளை டாக்டர் மானஸ்தாஸ் குப்தா, சிறுநீரக நிபுணர்.

என் மகளுக்குச் சென்னை மருத்துவக் கல்லூரியில் தகுதி அடிப்படையில் இடம் கிடைத்தது. செலவு இல்லை. அப்போது என் கணவருக்குக் கட்சியில் மாதச் சம்பளம் ரூ.350/- எனக்கு எம்.பி. பென்சன் ரூ.500/-. இந்த நிலையில் தான் எங்கள் மகளைப் படிக்க வைத்தோம். இன்றைக்கு ரூ.8000/- சம்பளம் வாங்குபவர் கூடப் படிக்க வைக்க முடியாத அளவிற்குக் கல்வி வணிகமயமாகிவிட்டது

என்கிறார்.

நாட்டுமக்களின் நலனுக்காகக் கட்சி நடத்திய போராட்டங்கள் பலவற்றில் கலந்து கொண்டு பலமுறை கைதாகி இரண்டு, மூன்று நாட்களில் விடுதலையாகியவர். 1975இல் நடந்த இரயில்வே வேலை நிறுத்தத்தில் கைதாகி டெல்லியில் திகார் சிறையில் மூன்று வாரங்கள் இருந்த இந்த எளிய செல்வ மகளின் சிந்தனையும் செயல்பாடுகளும் பலவாக இருந்தபோதும் இவருடைய கனவு தான் மெய்ப்படவில்லை என்பது நமக்கும் வருத்தமான ஒன்றே! ஆம்.

இந்திய விடுதலைக்குக் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் இரண்டு கட்சிகளும் போரடின. ஏகாதிபத்தியத்திலிருந்து இந்தியாவை விடுதலை செய்வதற்கு மட்டும்தான் காந்தியத் தலைமையை நாங்கள் ஏற்றுக் கொண்டோம். விடுதலைக்குப் பிறகு இந்தியாவைச் சீரமைக்க வேண்டுமென்றால் அதற்குக் காந்தீய நெறிகள் போதா என்பதும் மார்க்சியத் தத்துவம்தான் அதற்குத் தேவை என்பதும்தான் அம்மையாரின் கனவு.

துணை நூல்

ஓம் சக்தி தீபாவளி மலர், நவ. 2008.

இரமணி நல்லதம்பி

கு. கதிரேசன்

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே
பெண் இளைப்பில்லை காண்

என்னும் எட்டயபுரத்தாரின் கைகொட்டிக் களிப்பினை உண்மை ஆக்கிய பெருமை இருபதாம் நூற்றாண்டுப் பெண்களுக்குண்டு. படிப்பதற்கும் பணியாற்றுவதற்கும் தனியாக வெளியில் நடமாடு வதற்கும் ஆண்களைப் போல் சிரிப்பதற்கும் பேசுவதற்கும் முடிவெடுப்பதற்கும் சுதந்திரமாகச் செயல்படுவதற்கும் வாய்ப்பின்றிப் பெண்ணடிமை பரவியிருந்த பழமைச் சமுதாயச் சூழலிலிருந்து பெண்கள் விடுதலை பெற்று ஆண்களுக்கு இணையாக அனைத்துத் துறையிலும் சாதிக்கும் நிலை இருபதாம் நூற்றாண்டில் உதயமானது. பெண்ணடிமை இருள் அகன்று புதுமைச் சூரியன் உதிக்கும் பொற்காலம் உருவானது. இத்தகைய புரட்சிக்கு அரசியல், சட்டவியல், பொருளாதார, சமூக, உளவியல் கூறுகள் பல காரணங்களாக அமைந்தன. உலகமே திரண்டு, முயன்று பெண்ணுலகைப் பொன்னுலகமாக மாற்றியது. இந்தப் புதுயுகப் புரட்சியில் பொலிவுடன் பூத்துப் பூவுலகம் பூரிப்புடன் பார்த்து வியக்கும் வகையில் சாதித்த பெண்கள் பலர் உண்டு. அவர்கள் வரலாறு மறைக்கப்பட்டும் மறக்கப்பட்டும் போன சூழலில், அவற்றை நினைவுகூர்ந்து முயன்று திரட்டித் தொகுத்து வைப்பது இன்றைய வரலாற்றின் நாளைய தேவைக்கு உதவும். அந்த வகையில் இருபதாம் நூற்றாண்டில் இணையற்ற சாதனை படைத்த பெண்கள் பலர். அவர்களில் சமூகத் துறையிலும், கல்வித் துறையிலும், அரசியல் துறையிலும், பெண் உரிமை இயக்கத் துறையிலும், மனித உரிமைகளைப் பேணும் நேயத்திலும், சேவைப் பணியிலும், மக்கள் தொண்டிலும் தம்மை முழுமையாக அர்ப்பணித்து மிகக் குறைந்த வயதிலேயே தம் வாழ்வை நிறைவுபடுத்திக் கொண்ட வீராங்கனை இரமணி நல்லதம்பி நிகழ்த்திய சாதனைகளைப் பதிவு செய்யும் முயற்சியில் இக்கட்டுரை அமைகிறது.

பிறப்பும் வளர்ப்பும்

இருபதாம் நூற்றாண்டில் அரசியல், சமூகம், பெண்கள் முன்னேற்றம், கிராமப்புற மேம்பாடு முதலிய துறைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு தமது ஐம்பதாவது வயதில் இவ்வுலகை விட்டு மறைந்த பெண் சட்டமன்ற உறுப்பினர் தீவிரக் காங்கிரஸ் இயக்கத் தொண்டர் வீராங்கனை இரமணி நல்லதம்பி திருநெல்வேலி மாவட்டம் தென் பகுதியில் அமைந்துள்ள திசையன்விளைக்குத் தெற்கில் ஆனைகுடி என்னும் கிராமத்தில் 1946ஆம் ஆண்டு பிறந்தார். அவரது பெற்றோர் திரு.சுவாமிராஜ் நாடார் திருமதி சோபீஸ் அம்மையார் ஆவர். இவர்கள் குடும்பம் மிகப் பெரியது. இவர்களுக்கு ஒன்பது பிள்ளைகள். அவர்களில் ஆறு பெண்கள் மூன்று ஆண்கள். சாதனையாளர் இரமணி நல்லதம்பி மூன்றாவதாகப் பிறந்தவர்.

தந்தை சுவாமிராஜ் நாடார் சுங்க இலாகா ஆய்வாளராகப் பணியாற்றினார். அவர் உடுமலைப் பேட்டை என்ற இடத்தில் பணியாற்றி வந்தமையால் சிறுமி இரமணி நல்லதம்பி உடுமலைப் பேட்டையிலேயே தொடக்கப் பள்ளிப் படிப்பை முடித்தார். திருநெல்வேலி மாவட்டம் தென்பகுதியில் இடையன்குடி என்ற இடத்தில் பிஷப் இராபர்ட் கால்டுவெல் பெயரால் இயங்கி வரும் பாரம்பரியமிக்க பழமையான சி.சி.எம். மேல்நிலைப் பள்ளியில் (Caldwell Centinary Memorial Higher Secondary) நடுநிலைக் கல்வியைப் பயின்று முடித்தார். அதன்பின் மீண்டும் உடுமலைப் பேட்டையில் எஸ்.எஸ்.எல்.சி. பயின்றார். பின் அங்குள்ள அரசு கலைக் கல்லூரியில் பி.யூ.சி. பயின்று பின் பி.ஏ. பட்டப்படிப்பையும் முடித்தார்.

தற்காலத்தில் கல்வியியல் படிப்பான பி.எட்., இருப்பது போல் அக்காலத்திலிருந்த பி.டி. (B.T.) படிப்பைக் கோயம்புத்தூர் அரசு கல்விப் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து படித்தார். பின்பு பி.ஜி.எல். (B.G.L.) படித்து வழக்கறிஞர் பட்டம் பெற்றார். படிக்கும் காலத்திலேயே அஞ்சா நெஞ்சமும் துணிச்சலும் ஆடவருக்கு இணையாக அனைத்துத் துறைகளிலும் சாதிக்க வேண்டும் என்னும் முனைப்புடன் அரசியல் ஈடுபாடும் மிக்கவராக இருந்தார். புரட்சி எண்ணம் உடையவர். எதையும் போராடிச் சாதிக்க முடியும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டு விளங்கினார். பல சமூக அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டுச் சிறை சென்றார்.

நல்லதம்பி என்பது அவரது கணவர் பெயர். திருமணம் ஆனது முதல் அவர் கணவர் பெயரையே தம் பெயருடன் இணைத்துக் கொண்டார். ஆனால் தீவிரமான பெண்ணியவாதியாக இருந்தார். குடும்பம் என்று வந்தால், கணவர், பிள்ளைகள், மாமன், மாமியார், உறவினர்கள் அனைவரையும் பேணும் நல்ல இல்லத்தரசியாகவும் விளங்கினார். எனவே வீராங்கனை இரமணி நல்லதம்பி நல்ல பெண்மணியாக, நல்ல சமூகச் சீர்திருத்தவாதியாக, சமூகப் புரட்சியாளராக, அரசியல்வாதியாக, சேவைப் பணியாளராகத் திகழ்ந்து அனைவர் நெஞ்சிலும் நிறைந்து நின்றார் என்று கூறலாம்.

1971ஆம் ஆண்டு இரமணி நல்லதம்பி அம்மையாரின் திருமணம் திருநெல்வேலி மாவட்டம் வாகைநேரி என்ற இடத்தைச் சேர்ந்த திரு.பாக்கியநாத நாடார், திருமதி. தங்கப்பழம் அம்மாள் தம்பதியரின் மகனான வழக்கறிஞர் திரு.நல்லதம்பி என்பவருடன் நடைபெற்றது. அம்மையாரின் மாமனார் பர்மாவிலுள்ள தேசியக் காப்பீட்டுக் கழகத்தில் 15 ஆண்டுகளுக்கு மேலாக உதவி மேலாளராக இருந்துவிட்டுத் தாய்நாடு திரும்பினார். மாமியார் அம்மாள் அருகிலுள்ள இட்டமொழி என்னும் ஊரில் அமைந்திருக்கும் ஏவி.ஜோசப் மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியர் பணியாற்றினார்.

இருவரின் இனிய இல்லறத்தின் பயனாக அவர்களுக்கு இரு குழந்தைகள். ஒரு ஆண், ஒரு பெண். இருவருக்கும் திருமணம் ஆகிக் குழந்தைகள் இருக்கின்றனர். இருவரும் சென்னையில் வசிக்கின்றனர். 1996இல் வீராங்கனை இரமணி நல்லதம்பி மறைவுக்குப் பின் இன்றுவரை அவரது கணவர் வழக்கறிஞர் திரு.நல்லதம்பி அவரது தந்தையார் கட்டிய ஓட்டு வீட்டிலேயே வசித்து வருகிறார்.

சமூகப் பணிகளும் போராட்டங்களும்

வீராங்கனை இரமணி நல்லதம்பி பள்ளியில் படிக்கும் இளமைப் பருவம் முதல் எதிலும் முனைப்பாக நின்று செயல்படும் ஈடுபாட்டுத் திறனும் பெற்றிருந்தார். படிக்கும் பள்ளிப்பருவம் தொடங்கி நல்ல சமூகப் பொறுப்புணர்ச்சியுடன் விளங்கினார். மாணவப் பருவத்திலேயே பள்ளி, கல்லூரி அளவில் நடைபெற்ற பேச்சுப்போட்டி, கட்டுரை, கலைப்போட்டிகளில் ஆர்வத்துடன் பங்கெடுத்துப் பல பரிசுகள் பெற்றுள்ளார்.

இரமணி நல்லதம்பி தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் நல்ல புலமை பெற்றிருந்தார். நன்கு படித்து நல்ல ஒழுக்கத்தையும்

பண்பாட்டையும் கடைப்பிடித்து, நல்ல மாணவியாகத் திகழ்ந்தார். இளமைப் பருவத்திலேயே சமூகத்தில் மண்டிக்கிடந்த ஆண் பெண் பேதமை, பெண்ணடிமைத் தன்மை, பெண்ணுக்குக் கல்வியும் பிற உரிமைகளும் மறுக்கப்பட்ட அவலம், ஆடவர்களால் பெண் கொடுமைப்படுத்தப்படும் இழிநிலை, சாதி சமய வேறுபாடுகள் அதனால் ஏற்படும் சிறுசிறு பூசல்கள் முதலியவற்றைக் களைந்து ஆக்கப் பூர்வமான, அறிவார்ந்த, அன்பான சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்று கருதினார்.

படிக்கும் இளமைப்பருவம் முதற்கொண்டே பெண்களை அணி சேர்த்து அவர்கள் பிரச்சனைகளுக்காக ஒன்று கூடிப் போராடும் இயல்புடையவராயிருந்தார். கிராமப்புறப் பெண்களின் அறியாமையைப் போக்குவதற்காக அயராது பாடுபட்டார். கிராமப்புறப் பெண்கள் வேலையின்றி வீணாகப் பொழுதைக் கழிப்பதையும், வீண் வம்புகள் பேசி வீண் பிரச்சனைகளை உருவாக்குவதையும் பொருளாதார வளம் இன்றி ஆடவர்கள் கையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் அவலத்தையும் அப் பெண்களின் ஆற்றல் ஆளுமை வீணாகி வரும் இழிநிலையையும் நேரடியாகக் கண்ணுற்றார். அவற்றைக் களைந்து ஒளிமயமான பெண் சமுதாயத்தை அமைக்கத் தீர்க்கமாகச் சிந்தித்துத் தாம் கற்ற கல்வியைப் பயன்படுத்திப் பெண்ணின் பொருளாதார வளம் மேம்படவும் அறியாமை அகலவும் பாடுபட்டார். அதனால் பல சமூக விழிப்புணர்வுப் போராட்டங்களை முன்னின்று நடத்தினார்.

கிராமத்தில் வாழும் பெண்கள் இன்றும் வீட்டை விட்டு வெளியில் வர உரிமை மறுக்கப்படுகிறது. படிக்கத் தடையுள்ள பெண்கள் உண்டு. படித்தாலும் வேலைபார்க்க அனுமதி மறுக்கப்பட்ட பெண்கள் பல உண்டு. படித்து முடித்து வேலை கிடைத்தாலும் வேலைபார்த்து விட்டுத் தனியாகத் திரும்புவதற்குப் பலருக்கு அனுமதியில்லை. இந்தச் சூழ்நிலையில் படித்த பெண்களுக்கும் படிக்காத பெண்களுக்கும் உரிய வேலை பெற்றுக் கொடுத்து அவர்கள் வருவாயைப் பெருக்க வேண்டும் என்னும் நோக்கில் செயல்பட்டார்.

கிராமப்புறப் பெண்களுக்குச் சுயதொழில் தொடங்கு வதற்காகவும், வங்கிக் கடன் உதவி கிடைப்பதற்காகவும் பெரு முயற்சிகள் மேற்கொண்டார். அந்தச் சமயத்தில் அரசு வேலையில்லாத பெண்களுக்கு வங்கிக் கடன் கொடுக்கும் திட்டம் ஒன்றைச் செயற்படுத்தியது. அதனடிப்படையில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் 'லோன்மேளா' எனும் பெயரில்

வங்கிக் கடன் உதவித்திட்டம் செயற்படுத்தப்பட்டது. அத்திட்டத்தின்கீழ் நாங்குநேரி வட்டம் திசையன்விளைப் பகுதிகளில் வாழும் வேலையற்ற பெண்களுக்குக் கடன்உதவி பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் இறங்கினார். அதனால் திசையன்விளையில் உள்ள தேசிய மயமாக்கப்பட்ட வங்கியான கனரா வங்கிக்குப் பலமுறை சென்று பேசினார். ஆயினும் வங்கி, கடன் உதவித் திட்டத்தைச் செயற்படுத்தவில்லை. இதனால் அரசு உதவியைப் போராடியே பெறவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பல்வேறு முயற்சிகள் மேற்கொண்ட பின்னும் திட்டம் செயல் படுத்தப்படவில்லை என்பதால் பெண்களை ஒருங்கிணைத்து ஒரு போராட்டக் குழுவை உருவாக்கினார். அதன் பயனாக, திசையன்விளை சுற்று வட்டாரப் பகுதிகளில் வாழும் வேலையில்லாத பெண்கள் சுமார் நூறுபேரை அழைத்துக் கொண்டு கையில் காங்கிரஸ் இயக்கக் கொடியைப்பிடித்துக் கொண்டு திசையன்விளை கனராவங்கியை முற்றுகையிட்டார். அந்த நிகழ்ச்சியினால், அந்தப் பகுதி முழுவதும் இரமணி நல்லதம்பி என்ற பெண்மணியைப் பற்றிய பேச்சு எழுந்தது. அனைவரும் அவரை உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கினர். அவருடைய போராட்டத்தினால் வங்கி நிர்வாகம் உடனடியாகச் செயல்பட்டு 'லோன்மேளா' திட்டத்தைச் செயல்படுத்திக் கடன் உதவி செய்தது. அதனால் அந்தப்பகுதிப் பெண்கள் பலர் கடன் உதவி பெற்றுப் பயனடைந்தனர்.

பாய்முடைதல், பெட்டி செய்தல், நூல் நூற்றல், கால்நடை வளர்த்தல், பனைத் தும்பு தயாரித்தல், ஊறுகாய் செய்தல், பெட்டிக்கடை வைத்தல், சிறு உணவு விடுதி அமைத்தல் முதலிய பல்வேறு சிறுதொழில்களில் ஈடுபட்டு, பெண்கள் தம் குடும்ப வருவாயைப் பெருக்கி வறுமையை விரட்டினர். இத்தகைய செயலினால் கிராமங்கள் தோறும் பெண்கள் மத்தியில் இரமணி நல்லதம்பிக்கு நற்பெயர் ஏற்பட்டது. அவரைப் பெண்கள் தங்கள் பிரதிநிதியாக, தங்கள் பிரச்சனைகளைத் தீர்க்கும் தலைவியாகக் கருதினர்.

ஒரு கிராமத்தில் ஒரு பெண்ணுக்கு ஒரு பிரச்சனை ஏற்பட்டால் அதனை முன்னின்று தீர்த்து வைப்பதற்கு எல்லா வகையிலும் துணை நிற்கும் இயல்புடையவர். பல சமயங்களில் கணவர் கொடுமையினால் துன்பமடையும் பெண்களின் அவலத்தைப் போக்க அந்தப் பெண்கள் மற்றும் குடும்பத்தினர் அழைப்பின்பேரில் சென்று சமாதானம் பேசித் தீர்த்து

வைத்திருக்கிறார். சமாதானப் பேச்சில் சுமுகத் தீர்வு ஏற்பட வில்லையானால் பெண்களை அணிதிரட்டி, போராட்டத்தில் குதிக்கவும் தயங்குவதில்லை. சாலை மறியல், உண்ணாவிரதம் என அமர்ந்து மக்கள் மத்தியில் கொண்டு சென்று வெளிப்படுத்தி விடுவதால் பல குடும்பத்தினர் சமாதானப் பேச்சிற்கு உடன்பட்டு விடுவர். இவ்வாறு பல பெண்கள் வாழ்வில் ஒளியேற்றி வைத்திருக்கிறார்.

ஒருமுறை திசையன்விளைப் பகுதியில் ஒரு ஆதரவற்ற பெண்ணை ஐந்து பேர் சேர்ந்து பாலியல் பலாத்காரம் செய்து விட்டனர். பாதிக்கப்பட்ட அந்தப் பெண் காவல்நிலையம் வந்து புகார் கொடுக்க முயன்றார்; ஆனால் காவல்துறை அதிகாரிகள், குற்றவாளிகளின் பணபலம், அரசியல் பலத்திற்கு மயங்கி அப்பெண்ணின் புகார் மனுவை ஏற்று முதல்தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்ய மறுத்துவிட்டனர். அந்தப் பெண் நீதிகேட்டுக் காவல்துறை வாயிலிலேயே கிடந்து அழுது புலம்பினார். அதனை அறிந்த இரமணி நல்லதம்பி அந்தப் பெண்ணுக்கு ஆதரவாகக் களம் இறங்கி, பெண்கள் கூட்டத்துடன் காவல் அலுவலகத்தை முற்றுகையிட்டார். காவல்துறை அதிகாரிகள்வேறுவழியின்றிப் புகார் மனுவை ஏற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தனர். அந்த வழக்கில் அந்தப் பெண்ணுக்காகப் போராடி குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுத்தார். திருநெல்வேலி வழக்கு மன்றத்தில் அந்தப் பெண்ணுக்குத் துரோகம் செய்த குற்றவாளிகளுக்கு ஒன்பது ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் 15,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டன. பின்பு அவ்வழக்கு மதுரை உயர்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. அங்கு வாதாடிப் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஒவ்வொருவரிடமிருந்தும் ரூபாய் பத்தாயிரம் வரை நட்டஈடு பெற்றுக் கொடுத்தார். குற்றவாளிகளும் தண்டிக்கப்பட்டனர். அந்தப் பெண்ணும் கிடைத்த நட்ட ஈடு பணத்தில் ஒரு சுயதொழில் தொடங்கி வாழ்க்கையை நடத்தினார். இவ்வாறு ஆபத்தான, கடினமான பிரச்சனைகளுக்குரிய பெண்ணுக்கு எதிராக நிகழக்கூடிய செயல்கள் அனைத்திலும் தம்மை இணைத்துக் கொண்டு போராடி மிகப்பெரும் வெற்றி பெற்றார். இதன் மூலம் மக்களும் இரமணி நல்லதம்பியைப் பெண்களைக் காக்கும் வீரமங்கையாகக் கருதிப் போற்றினர்.

ஒருமுறை இரமணி நல்லதம்பியின் சகோதரி இரவு 8.30 மணியளவில் திசையன்விளையிலிருந்து சாத்தான்குளம் செல்லும்

பேருந்தில் ஏறித் தம் சகோதரி ஊரான வாகைநேரி பேருந்து நிலையத்தில் இறங்க வேண்டும் என்று கேட்டுப் பயணச்சீட்டுப் பெற்றார். ஆனால் பேருந்து குறிப்பிட்ட நிறுத்தத்தில் நிற்காமல் ஊர் எல்லையைக்கடந்து நின்றது. பேருந்து ஓட்டுநரும், நடத்துநரும், "முதலிலேயே சொல்ல வேண்டியதுதானே" என்று கூறி இறங்கப் பணித்தனர். ஆனால் அவர் இறங்க மறுத்து விட்டார். "இந்த இரவு நேரத்தில் ஒரு பெண்ணாகிய என்னைக் காட்டிற்குள் கொண்டுவந்து இறக்கி விடுவதா? பேருந்து நிறுத்தத்தில் கொண்டு விட்டால்தான் நான் இறங்குவேன்" என்று கூறிப் போராடினார். பேருந்து நடத்துனரும், ஓட்டுநரும் அவரிடம் சண்டையிட்டு இறக்கிவிட முயற்சித்தனர். எனவே கோபமடைந்த அவர், "நான் யார் தெரியுமா? இரமணி நல்லதம்பியின் சகோதரி நீங்கள் உங்கள் கடமைகளை ஒழுங்காகச் செய்யவில்லையானால் நான் என் சகோதரியுடன் சேர்ந்து பெண்களைக் கூட்டிப் பஸ்மறியல், போராட்டம் நடத்துவேன்" என்று எச்சரிக்கை விட்டார். அதைக்கேட்ட பேருந்து ஓட்டுநரும் நடத்துநரும் பயந்துகொண்டு பேருந்தை நிறுத்தம்வரை பின்னோக்கியே வரச் செய்து அவரிடம் மன்னிப்பு கேட்டு இறக்கி விட்டுச் சென்றனர்.

மேற்குறித்த செய்தி அந்தப் பகுதி மக்களிடம் வீராங்கனை இரமணி நல்லதம்பிக்கு இருந்த நற்பெயரையும் அநீதிக்கு எதிராக அவர் களம் இறங்கிவிடுவார் என்ற அச்ச உணர்வையும் சமூக நீதியைக் காப்பதில் அவருக்கு இருந்த பொறுப்புணர்வையும் படம்பிடித்துக் காட்டுவதாக அமைகிறது.

வீராங்கனை இரமணி நல்லதம்பி கிறித்தவ சமயத்தைச் சேர்ந்தவராக இருந்தார். கிறித்தவ சமயத்திற்குச் சொந்தமான பல கல்வி நிறுவனங்கள், தேவாலயங்கள், கட்டடங்கள், சொத்துக்கள் முதலியவற்றை நிர்வகிப்பதற்காக 'டயோசீஸ்' எனப்படும் ஒரு நிர்வாக அமைப்பு உண்டு. அதற்குத் தலைவர், செயலர், உதவிச் செயலர், பொருளாளர் அங்கத்தினர்கள் என நிர்வாகக்குழு உண்டு இந்தக் குழுவே சிஎஸ்ஐ கிறித்தவ சமயத்தில் அனைத்து நிர்வாகப் பணிகளையும் செயல்படுத்துகிறது. இந்நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் கல்வி நிறுவனங்கள் அனைத்திலும் உள்ள ஆசிரியர், அலுவலர்கள் பணியிடங்களை நிரப்பும் அதிகாரத்தை 'டயோசீஸ்' பெற்றிருந்தது. எனவே இதற்கென டயோசீஸ் வேலை வாய்ப்புப் பதிவுப் பட்டியல் ஒன்றையும் உருவாக்கி வைத்திருந்தது. படித்த கிறித்தவர்கள் தங்களின் கல்வித் தகுதி விவரத்தைப் பதிவு செய்து வைக்கலாம். இது ஒரு வேலைவாய்ப்புப் பதிவு

அலுவலகம் போலவே செயல்படும். இதில் பதிவு செய்தவர் களுக்கே கிறித்தவக் கல்வி நிறுவனங்களில் பணியாற்ற வாய்ப்பு கிடைக்கும். எனவே டயோசீஸ் பொறுப்பாளர்கள் மிகவும் அதிகாரம் வாய்ந்தவர்களாக இருந்தனர். இந்த அமைப்பில் இருந்த இரு அணிகளுக்கும் கருத்து முரண்பாடுகளும் வேற்றுமைகளும் இருந்து வந்தன. அதனால் வேலைப்பணி அமர்த்தம் வரும் பொழுது இருஅணிகளும் தமது ஆதரவாளர்களுக்குப் பணத்திற் காகவோ, அல்லது வேறு காரணங்களுக்காகவோ வேலை வாய்ப்பு வழங்கும் நிலை உருவாயிற்று. எனவே மிகவும் பின்னால் படித்துப் பின்னால் பதிவு செய்தவர்கள் கூடப் பணத்தைக் கொடுத்து வேலையில் அமர்ந்து கொண்டனர். இதனால் அதிகம் படித்து, முன்பே பதிவு செய்து வைத்துக் கொண்டு பணி மூப்பு அடிப்படையில் வேலை கிடைக்கும் என்று நம்பிக் கொண்டிருந்த பலருக்கு மிகப்பெரும் ஏமாற்றம் ஏற்பட்டது. இந்தச் சூழ்நிலையில் படித்த கிறித்தவப் பெண்கள் பலரின் வேலைவாய்ப்பு கேள்விக்குறியானது. இந்தப் பிரச்சனையில் தலையிட்டுத் திருநெல்வேலி 'டயோசீஸ்' அமைப்பில் பதவி மூப்பு அடிப்படையில் பணி கொடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி நீண்ட நாட்களாகப் போராடி நடைமுறைக்குக் கொண்டு வந்தார். தமது ஊரான வாகைநேரியில் உள்ள பள்ளியை இழுத்துப் பூட்டிப் பெண்களைத் திரட்டி அனைவரையும் வெளியில் அமர்த்தி, தைரியமாகப் போராடினார். இப்போராட்டம் பொது மக்கள் அதிகாரிகளின் கவனத்தைக் கவர்ந்தது. தொடர்புடைய அதிகாரிகள் உடனடியாகச் செயல்பட்டுத் தீர்வு கண்டனர். இதனால் படித்தவர்கள் வயது அடிப்படையில் பணி கிடைக்கப் பெற்றனர். அதோடு பெண்கள் வேலை வாய்ப்பிற்கும் முக்கியத் துவம் கொடுக்கப்பட்டது. அவரால் படித்த கிறித்தவப் பெண்கள் பலர் வேலைவாய்ப்புப் பெற்றனர். இவ்வாறு வீராங்கனை இரமணி நல்லதம்பி தாம் சார்ந்த சமய அமைப்பில் இருந்த சீர்கேடுகளையும் களைவதில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்களும் பெண்களும் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து பல்லாண்டு காலம் காத்திருந்தும் பணி கிடைக்காத அவலநிலை தமிழகத்தில் பரவி யிருந்தது. இதனால் கிராமப்புற இளைஞர்களும் பெண்களும் அவர்களின் குடும்பத்தினரும் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர். இப்பிரச்சனையை அனுபவப்பூர்வமாக அறிந்த இரமணி நல்லதம்பி, இதற்கொரு தீர்வு ஏற்பட வேண்டுமென விரும்பினார். இப்பிரச்சனையை ஒரு தனிமனிதரால் தீர்த்து வைக்க முடியாது;

அரசினாலேயே முடியும் என்று அறிந்தார். தாமே வேலை வாய்ப்பு அலுவலகத்தினால் பதிவு மூப்பு அடிப்படையில் பணி கிடைக்கும் என்று பதினேழு ஆண்டுகளுக்கு மேலாகக் காத்திருந்தார். வேலை வாய்ப்பு அலுவலகம் வேலை தேடுவதையே வேலையாகத் தந்தது. விரக்தியின் விளிம்பிற்கே வந்துவிட்டவர் வாழ்வில், அரசியல் பணி ஒளி ஏற்படுத்தியது.

இராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இரமணி நல்லதம்பி, தம்மைப் போன்ற பலர் வாழ்க்கையில் இருள் ஏற்படுத்திய வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கச் சட்டசபையில் குரல் கொடுத்தார். 1989ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது, பதினேழு ஆண்டுகளுக்கு மேலாகியும்நேர்முகத் தேர்வே வராத தம் வாழ்க்கையையே எடுத்துக்காட்டி ஆண்களுக்கும் பெண்களுக்கும் பதிவு மூப்பு அடிப்படையில் உடனடியாக வேலை வழங்கப்பட வேண்டும் என்று வீரஉரை நிகழ்த்தினார். அவரது இந்த முதல் சட்டசபைப் பேச்சு, இரமணி நல்லதம்பியை அரசியல் உலகின் ஒரு வீராங்கனையாக அடையாளப்படுத்தியது. அவரது பேச்சினை ஏற்றுக்கொண்டு அரசு உடனடியாக வேலைவாய்ப்பு அலுவலகம் பதிவு மூப்பு அடிப்படையில் பணிகளை நிரப்ப ஆணையிட்டது. அதுமுதல் இன்றுவரை அவ்வாறே பதிவு மூப்பு அடிப்படையில் வேலைவாய்ப்பு கிடைத்து வருகிறது. இதனால் பயன்பெற்ற இளைஞர்களும் பெண்களும் எண்ணற்றோர்.

மேலும் தற்காலிக வேலையில் இருக்கும் தொழிலாளர்கள் வாழ்க்கையைக் கண்ணுற்ற இரமணி நல்லதம்பி, தொழிலாளர்கள் வேலை நிரந்தரத்தின் அவசியத்தை உணர்ந்து அதற்காகப் போராடத் துணிந்தார். தற்காலிகப் பணியாளர்களுக்கு வேலை நிரந்தரமற்ற தன்மையுடன் குறைந்த ஊதியம், எப்பொழுது வேண்டுமானாலும் வேலையை விட்டு அனுப்பும் நிலை, நியாயமான உரிமைகள் எதுவும் இல்லாத நிலை, பணிப் பாதுகாப்பற்ற தன்மை முதலிய பல்வேறு அவலநிலைகள் இருந்தன. இதனால் தொழிலாளர் சமுதாயம் மிகவும் பாதிக்கப்பட்டது. இத்தகைய தொழிலாளர்களை முதலாளிகள் சுரண்டியும் நசுக்கியும் கொத்தடிமையாக்கியும் மிகப்பெரும் பணக்காரர்களாக மாறிவந்தனர். இந்நிலையை மாற்றி, தொழிலாளர் வாழ்வைச் சீர்படுத்திடப் பல போராட்டங்களை நிகழ்த்தினார். தற்காலிகத் தொழிலாளர்களை ஒன்றிணைத்து

அவர்களுக்குத் தொழிலாளர் நிலை பற்றிய அவலத்தை எடுத்துக் கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். எவ்விதப் பிரதிபலனும் எதிர்பாராமல் தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரத் தொழிலாளர்களாக்கப் பாடுபட்டார். அதில் வெற்றியும் கண்டார். தாம் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபொழுது சட்டமன்றத் திலேயே இந்தப் பிரச்சனை பற்றிப் பேசி ஆட்சியாளர்களையும் மக்களையும் வெகுவாகக் கவர்ந்தார். அவரது சட்டசபைப் பேச்சினைக் கருத்தில் கொண்ட அரசு தமிழகத்தில் தற்காலிகப் பணியாளர்கள் அனைவரையும் நிரந்தரப் பணியாளர்களாக்கும் பணியில் ஈடுபட்டது. இன்று தொழிலாளர்கள் முழுமையான உரிமைகளுடன் திகழ்ந்து வருகின்றனர். இதற்குக் காரணமாக இருந்த பலருள்ளும் இரமணி நல்லதம்பி குறிக்கத்தக்க ஒருவர்.

பொது வாழ்க்கையும் இரமணி நல்லதம்பியும்

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று
எண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்

என்னும் பாரதியின் தீர்க்கத்தரிசனக் கருத்தை மெய்ப்பிக்கும் வகையில் இன்றைய சூழலில் பெண்கள் வீட்டுக்குள் அடைபட்டுக் கிடக்காமல், தம்கட்டுகளை உடைத்துக் கொண்டு வெளியில் சுதந்திரமாக நடமாடுகின்றனர்; படிக்கின்றனர்; பதவியிலிருக்கின்றனர்; பணியாற்றுகின்றனர். அரசியல் பொதுப்பணியில் முழுமையாகத் தம்மை இணைத்துக் கொண்டு அரும்பணியாற்றுகின்றனர். அதனால்தான் பாரதி,

இங்குப் பெண்ணுருப் போந்து நிற்பது
தாய் சிவசக்தியாம்

என்று பாடுகிறார். பெண்ணினம் இன்றைய அறிவியல் தொழில் நுட்ப நவீன உலகில் அனைத்துத் துறைகளிலும் ஆண்களுக்கு இணையாகக் கால்பதித்து, சாதித்து வருகிறது. "அரசியல்துறை ஆபத்து நிறைந்தது; நற்பண்புகள் அற்றது; இலஞ்ச இலாவண்யமானது; பொய்மை அதிகமாகத் தாண்டவ மாடுவது என எண்ணி இளைஞர்களும் பெண்களும் அதிகமாக இத் துறையில் ஈடுபடுவதில்லை. அரசியல் பணியை ஒரு நிலையான பணி என்றோ நேர்மையான பணி என்றோ முழுநேரப்பணி என்றோ கொள்ள முடியாது. பகுதிநேரமாக ஒரு தொழில் போலன்றிச் சேவைப்பணி போன்று செய்யவேண்டிய கட்டாயம்

எழுகிறது" எனவே இதில் இளைஞர்களும் பெண்களும் அதிகமாக ஈடுபடவில்லை. இந்தச் சூழ்நிலையில்தான் வழக்கறிஞராகப் பட்டம் பெற்றுப் பல்லாண்டுகளாக வேலை தேடிக் கொண்டிருந்த இரமணி நல்லதம்பி அரசியல் பொதுப்பணியில் தம்மை இணைத்துக் கொண்டார்.

பெண்கள் அரசியல் பணியாற்றுவதை நினைத்துகூடப் பார்க்காத, அரசியல் பெண்களுக்கு ஆகாது என்று வெறுத்து ஒதுக்கிய கிராமத்துச் சூழலில் படித்து முடித்த இரமணி நல்லதம்பி உரிய வேலை கிடைக்காமையினாலும் அப்பகுதியில் பெண்களுக்கு அரசியல் ஆகாது என்று ஒதுக்கி வைத்திருந்தமை யினாலும் தாம் படித்த சட்டக்கல்வி கொடுத்த உந்துதலினாலும் அரசியல் உலகில் அடியெடுத்து வைத்தார். எதிலும் துணிச்சலுடன் செயல்படும் அவர், தாம் ஒரு கிராமத்துப் பெண் எனும் காலம்தோறும் நிலவிவந்த அடிமைச்சிந்தனையை அடித்துவிரட்டி, ஆண்களுக்கு இணையாகத் தம்மாலும் சாதிக்க முடியும் என முடிவு செய்தார். அதனால் அகில இந்தியக் கட்சியான இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியில் தம்மை இணைத்துக் கொண்டார்.

காங்கிரஸ் இயக்கத்தில் தியாகத்தின் மறுவடிவமாக வாழ்ந்த பெருந்தலைவர் காமராசர், அன்னை இந்திராகாந்தி ஆகியோர் மீது அவருக்கு இருந்த பற்றும் பாரதப்பிரதமர் இராஜீவ் காந்தியின் வழியில் இருந்த நம்பிக்கையும் அவரது பெற்றோர்களின் காங்கிரஸ் இயக்க ஈடுபாடும் காங்கிரஸ் கட்சியில் பெண்களுக்கென மகிளா காங்கிரஸ் என ஒரு பிரிவு இருந்தமையும் அவர் காங்கிரஸ் கட்சியில் இணைய அடிப்படைக் காரணங்களாக அமைந்தன என்பதை அறிய முடிகிறது.

தொடக்க காலத்தில் பெண்கள் மற்றும் கிராமப்புறப் பாமர மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்காகச் சில உண்ணாவிரதம், மறியல், முற்றுகைப் போராட்டங்களில் ஈடுபட்ட இரமணி நல்லதம்பி, காங்கிரஸ் கட்சியில் எவ்விதப் பொறுப்பும் இல்லாமல் தாமே மக்களை ஒருங்கிணைத்துக் கையில் காங்கிரஸ் கொடியைப் பிடித்துக் கொண்டு களம் இறங்கினார். அதில் வெற்றியும் பெற்றார். "ஏதாவது ஒரு அரசியல் இயக்கப் பின்புலம் இல்லாமல் எந்த ஒரு சமூகப் பிரச்சனையையும் எளிதில் தீர்த்து விட முடியாது" என்பதை நன்குணர்ந்த அவர், தமக்குச் சிறுவயது முதலே ஈடுபாடுடைய

காங்கிரஸ் கட்சியைத் தேர்ந்தெடுத்து அதில் தம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டார்.

பெண்களை ஒருங்கிணைத்துக் கையில் காங்கிரஸ் கொடியுடன் போராட்டக் களத்தில் இறங்கி வெற்றிவாகை சூடும் இரமணி நல்லதம்பியின் திறனையும் கல்வி அறிவையும் பேச்சாற்றலையும் ஆளுமைப் பணியையும் சேவை உள்ளத்தையும் கண்ணுற்ற தமிழகக் காங்கிரஸ் இயக்கப் பொறுப்பாளர்களான திரு. ஜி.கே. மூப்பனார், திரு. வாழைப்பாடி இராமமூர்த்தி, திரு. பீட்டர் அல்போன்ஸ் போன்றோர் அவரது சேவையைக் கட்சியின் மேலிடத்திற்குத் தெரிவித்தனர். அதனால் காங்கிரஸ் இயக்கம் அவருக்குப் பொறுப்புக் கொடுத்துப் பாராட்டியது. மாவட்ட மகிளா காங்கிரஸ் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அதுமுதல் பெண்களின் பிரதிநிதியாகவே மாறிப் பல தீரச்செயல்களில் ஈடுபட்டார்.

1982 ஜூலை மாதத்தில் பெங்களூரில் அகில இந்திய மகிளா காங்கிரஸ் மாநாடு நடைபெற்ற பொழுது தாம் சார்ந்திருந்த இராதாபுரம் சட்டமன்றத் தொகுதியிலிருந்து ஏறத்தாழ 300 பெண்களுக்கு மேல் திரட்டி மாநாட்டிற்கு அழைத்துச் சென்றார். அதற்குரிய செலவுகளை இந்திய மகிளா காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது. அவரது இந்தச் செயலினால் அகில இந்திய அளவில் அவருக்கு ஓர் அங்கீகாரம் கிடைத்தது.

தொடர்ந்து கட்சிப்பணியாற்றி வந்த இரமணி நல்லதம்பி அம்மையாருக்கு 1989இல் நடைபெற்ற பொதுத்தேர்தலின் போது இராதாபுரம் சட்டமன்றத்திற்குக் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட வாய்ப்பு கிடைத்தது. மிகக் கடுமையான போட்டி யுடன் நடைபெற்ற அத்தேர்தல் நான்கு முனைப்போட்டியாக அமைந்தது. இராதாபுரம் தொகுதியில் காமராஜர் ஆட்சிக் காலத்தில் இருமுறை சட்டமன்ற உறுப்பினராகவும் காமராஜரின் நெருங்கிய நண்பராகவும் தொகுதிக்கு நன்கு அறிமுகமான வராகவும் எளிமை, சேவை உள்ளத்திற்குச் சொந்தக்காரராகவும் விளங்கிய திரு.சௌந்திரபாண்டியன் மற்றும் தென்பகுதியில் திமுகவின் தூணாக இருந்த சட்டமன்ற உறுப்பினர் திருகார்த்தீசன் உள்ளிட்ட மிகப்பெரிய வேட்பாளர்கள் பலர் களம் இறங்கியிருந்தனர். ஆயினும் அம்மையார் அவர்களை எதிர்த்துக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்டு 5,500 வாக்குகள் வேறுபாட்டில் வெற்றிபெற்றுச் சட்டமன்ற உறுப்பினரானார்.

அதுமுதல் காங்கிரஸ் கட்சியின் மிகச்சிறந்த பெண் சட்டமன்ற உறுப்பினர் என்னும் நற்பெயரைப் பெற்றார்.

1991இல் தமிழகத்தில் திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி கலைக்கப்பட்டது. அதன்பின் தமிழகச் சட்டமன்றத்திற்கு நடத்தப்பட்ட தேர்தலில் இரண்டாவது முறையாகக் காங்கிரஸ் கட்சி சார்பில் இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்தத் தேர்தலில் 31,000 வாக்குகள் வேறுபாட்டில் மிகப் பெறும் வெற்றி பெற்று மறுபடியும் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார்.

இருமுறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட இரமணி நல்லதம்பி, 1993இல் நோய்வாய்ப்பட்டார். தம் கணவர் வழக்கறிஞர் நல்லதம்பியின் உதவியுடன் அரசியல் பொதுப் பணியாற்றி வந்த அவர் 1996இல் மார்புப் புற்றுநோயால் தாக்குற்று அகால மரணமடைந்தார். ஐம்பது ஆண்டுகளே வாழ்ந்த அம்மையார், ஆற்றிய பணிகள் அளப்பரியன. அவற்றில் சிலவற்றை நினைவுகூர்வது அவசியம்.

சேவை உள்ளமும் செயல்திறனும்

இராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் காங்கிரஸ் கட்சி சார்பில் இருமுறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட இரமணி நல்லதம்பி, அப்பகுதி மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர்ப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் வேளாண்மைப்பாசன வசதி ஏற்படுத்துவதற்கும் அரும்பாடு பட்டார். அதற்காகப் பல போராட்டங்களில் ஈடுபட்டு வெற்றி பெற்றார்.

இராதாபுரம் தாலுகாவை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று சட்டமன்றத்தில் குரல் கொடுத்தார். அப்பகுதியில் இன்று செயற்படுத்தப்பட்டுவரும் நம்பியாறு, பொய்கையாறு, பச்சையாறு, கொடுமுடியாறு எனும் நான்கு அணைக்கட்டுகளுக்காகப் பலமுறை சட்டமன்றத்தில் பேசினார். பல போராட்டங்களில் ஈடுபட்டார். இத்திட்டத்தைச் செயற்படுத்த வேண்டித் திசையன்விளை பிரதான சலையில் பெண்கள் குழுவுடன் சமையல் செய்து போராட்டம் நடத்தினார். அனைவரையும் கவர்ந்த இந்தப் போராட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் வந்து, பேசி முடித்து வைத்தார். அவரது உரையையும் போராட்டங்களையும் கேட்ட தி.மு.க. அரசு

நம்பியாறு திட்டத்தை உடனடியாகச் செயற்படுத்த நிதி ஒதுக்கீடு செய்தது.

1989இல் சென்னை ஜவகர் மைதானத்தில் நடந்த நம்பியாறு அணைத்திட்டம் அடிக்கல் நாட்டு விழாவில் முதலமைச்சர் மு. கருணாநிதி அடிக்கல் நாட்ட இராதாபுரம் சட்டமன்றக் காங்கிரஸ் உறுப்பினர் இரமணி நல்லதம்பியோ தம் ஆதரவாளர்களைப் பெரும் அளவில் திரட்டிக் கொண்டு நம்பியாறு அணை அமையும் இடத்திற்குச் சென்று அதே நாளில் அதே நேரத்தில் அடிக்கல் நாட்டி மிகப்பெரும் புரட்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தினார். இதனை அறிந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தமக்கே உரிய அங்கதச் சுவையுடன் "மூலவர் இங்கிருந்து அடிக்கல் நாட்ட, உற்சவர் அங்குச் சென்று அணை வரும் இடத்தில் அடிக்கல் நாட்டுகிறார்" என்னும் பொருளில் நயம்படப் பேசினார். இது அம்மையாரின் துணிச்சலுக்கும் மக்கள் நலப் பணி முக்கியத்துவத்திற்கும் சான்றாக அமைகிறது.

இராதாபுரம் வட்டாரப் பகுதியில் குடிநீர்ப் பிரச்சனை தீர்க்க முடியாத பிரச்சனையாக இருந்து வந்தது. மணிமுத்தாறு அணையிலிருந்து அப்பகுதிக்கு நீர்வரத்து உள்ள கால்வசதி இருந்தும் அந்தத் தண்ணீர் இப்பகுதி மக்களுக்குக் கிடைப்பதில்லை. அந்த அணையில் நான்காவது மட்டக் கால்வாய் திறந்தால்தான் இப்பகுதி மக்கள் நீர் வசதி பெறமுடியும். அணை முழுமையாக நிரம்பினாலேயே அந்த நான்காவது கால்வாய் திறக்கும். இந்த நான்காவது கால்வாய் அளவுக்கு நீர்ப்பெருக்கு ஏற்படுவதற்கு முன்பே மூன்றாவது கால்வாய்த் திறந்துவிடும் வழக்கம் இருந்தது. அதனால் இராதாபுரம் வட்டார மக்களுக்கு மணிமுத்தாறு கால்வாயினால் பயன் கிட்டாமலேயே போய்விட்டது. இப்பிரச்சனையை அறிந்த இரமணி நல்லதம்பி அம்மையார், பெண்கள் அணியைத் திரட்டி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார். அதற்குப் பலன் கிட்டாததால் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டார். இம்மணிமுத்தாறு கால்வாய்த் திட்டத்தைச் செயற்படுத்த வலியுறுத்தித் திசையன்விளை பழைய பேருந்து நிலையச் சந்திப்பில் பெண்கள் குழுவுடன் தீக்குளிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார். இதனை அறிந்த அரசு உடனடியாக இப்பிரச்சனையைக் கருத்தூன்றிக் கவனித்தது. உடனடியாக மூன்றாம் நான்காம் கால்வாய் திறப்பிலேயே இராதாபுரம் பகுதி மக்கள் பயனடையும் வகையில் ஒரு சிறப்பு ஆணையை அரசு வெளியிட்டது. அன்று முதல் இன்றுவரை இராதாபுரம்

வட்டாரப் பகுதிகளில் மணிமுத்தாறு கால்வாய் நீர் வந்து கொண்டிருக்கிறது. இதனால் இப்பகுதி மக்களின் நீர் ஆதாரம் பெருகியிருக்கிறது. குளத்துப் பாசனம் உள்ளவர்கள் விளைச்சல் பெருகியுள்ளது. குளங்கள், ஏரிகள் நிரம்புகின்றன. குடிநீர்ப் பிரச்சனை முழுமையாக நீக்கப்பட்டுவிட்டது எனலாம்.

மேலும் சேரன்மகாதேவி, இராதாபுரம், திசையன்விளைப் பகுதி மக்களின் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கும் விதத்தில் இன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக அன்று சட்ட மன்றத்தில் பலமுறை குரல் கொடுத்தார் இரமணி நல்லதம்பி. மக்களின் அடிப்படைத் தேவையான குடிநீர் அவசியத்தை வலியுறுத்திப் பலமுறை சட்டமன்றத்தில் வாதிட்டார். அதன்பயனாக அரசு உடனடியாக 30 கோடி ரூபாயை ஒதுக்கி, கூட்டுக் குடிநீர்த்திட்டத்தைச் செயற்படுத்தக் களம் இறங்கியது. இத்திட்டத்தால் இன்று மக்கள் குடிநீர்த் தட்டுப்பாடின்றி மகிழ்ச்சியாக வாழ்கின்றனர்.

தென் மாவட்டப் பகுதிகளில் உள்ள ஆற்றுப்படுகைகளில் விதிமுறைக்கு மாறாக ஆற்றுமணல் அள்ளப்படுவதையும் அதனால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வேளாண்மை பாழ்பட்டு வருவதையும் கண்ணுற்ற அம்மையார், இந்த அவல நிலையைப் போக்கி, இப்பகுதி விளை நிலங்களைக் காக்கும் சீரிய பணியில் இறங்கினார். எதிர்ப்புகளைச் சம்பாதிக்கும் ஆபத்தான இந்தப் பணியில் துணிச்சலுடன் இறங்கி, அதனைத் தடுத்தார். நம்பியாற்றுப் படுகையில் தரையிலிருந்து மூன்றுஅடிவரை மணல் அள்ளிக்கொள்ளலாம் எனக் குத்தகைதாரருக்குப் பெர்மிட் இருந்தது. ஆனால் அவர்கள் நான்கு அடிக்கு மேல் மணலைத் தோண்டி எடுத்து விற்பனை செய்து கொண்டிருந்தனர். அதிகாரிகளும் கண்டு கொள்ளாமல் இருந்தனர். இதனை அறிந்த அம்மையார் வள்ளியூருக்கு அருகில் உள்ள பெருமளஞ்சி என்ற இடத்தில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டார். மணல் அள்ளி வந்த லாரிகளைச் சிறை பிடித்தனர். அதன்பின் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் சமாதானம் பேசிப் பிரச்சனையைத் தீர்த்து வைத்தனர். அன்றுமுதல் விதிமுறைக்கு மாறாக ஆற்று மணல் அள்ளும் தவறு தடுக்கப்பட்டது. இதனால் வறட்சிப் பகுதியாக இருந்த இடங்களில் நீர்ப்பிடிப்பு குறைவு தடுக்கப் பட்டது. பயிர்கள் வாடிக் கருகுவது மாறியது. நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்தது. கடல்நீர் புகுந்து நிலமும் நீரும் உப்பாக மாறுவது தடுக்கப்பட்டது.

திருநெல்வேலி தூத்துக்குடி மாவட்டப் பகுதிகளில் கால்நடைகள், குறிப்பாக மாடுகள் கொன்று உண்பதற்காகக் கேரளாவிற்குக் கடத்தப்பட்டு வந்தன. இதனால் தினமும் ஏராளமான கால்நடைகள் அழிந்தன. இந்தக் கொடும் பாவச் செயலைக் கண்ணுற்ற அம்மையார், இதனைத் தடுப்பதற்காகச் சட்டமன்றத்தில் பேசினார். மிருகவதைத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி, மாடுகள் கொல்லப்படுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் எனக் குரல் கொடுத்தார். அதன் விளைவாக, கேரளாவிற்குக் கடத்தப்பட்டுக் கொண்டிருந்த ஆயிரக்கணக்கான மாடுகள் காப்பாற்றப் பட்டதுடன் இது தடை செய்யப்பட்டது. இதனால் அவர் மிகுந்த பாராட்டைப் பெற்றார்.

சாதிக்கும் துணிச்சலும் நேர்மையும்

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே

என்னும் பாரதியின் வழியில் புதுமைப் பெண்ணாகத் துணிச்சலுடனும் நேர்மையுடனும் வாழ்ந்து காட்டியவர் வீராங்கனை இரமணி நல்லதம்பி. தமிழகத்தின் தென்பகுதியிலுள்ள உவரி, குட்டம், பெரியதாழை, நவ்வலடி முதலிய இடங்களில் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து, கிணற்று நீர் வற்றியதுடன் உப்பாகவும் மாறிய கொடூரமான அவலம் நிகழ்ந்தது. இதனை மாற்றவே கொடுமுடியாற்று அணைக்கட்டுத் திட்டத்தை வலியுறுத்தி வந்தனர். ஆனால் அத்திட்டம் செயல்படுத்தப்படாமல் கிடந்தது. அதற்குக் காரணம், அந்த அணை அமையப்போகும் இடம் பற்றிய பிரச்சனை. நாகர்கோவிலில் உள்ள திரு. மத்தியாஸ் அவர்களின் குமாரர் திரு.மோசஸ் அவர்களுக்குச் சொந்தமான ஏறத்தாழ 80 ஏக்கர் தோப்பு தடையாக இருந்தது. அவர் அதனை அரசிடம் ஒப்படைக்க ஒத்துழைக்காத நிலையில் அத்திட்டம் செயற்படுத்தப்படாமல் இருந்தது. அவரது நிலத்தைப் பெற்றால் மட்டுமே அணைக்கட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும் எனும் நிலையில் சட்டமன்ற உறுப்பினராக இருந்த இரமணி நல்லதம்பி தம் ஆதரவாளர்களுடன் தனிநபர் உரிமை நிலப்பகுதிக்குள் சென்று பேராட்டம் நடத்தினார் இது மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பையும் நற்பெரையும் ஏற்படுத்தியது. அம்மையாரின் துணிச்சலான இந்தச் செயலை அதிகாரிகளே வியந்து நின்றனர். இதனைக் கண்டு மனம் பொறுக்காத உள்ளூர்

அரசியல் வாதிகளின் தூண்டுதலினால் நில உரிமையாளர் அம்மையார்மீது நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார். தம் தோப்பிற்குள் புகுந்து யாருக்கும் தெரியாமல் தேங்காய், மாங்காய் முதலிய விளைபொருட்களைப் பறித்துச் சென்று விட்டார். எனவே அவரைப் பிடித்துத் தண்டிக்க வேண்டும் என்று ஒரு வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். இதனை விசாரித்த நீதிபதி அம்மையாருக்குப் பிடிவாரண்ட் அனுப்பினார். வழக்கறிஞரான அம்மையார் அஞ்சா நெஞ்சமுடன் வழக்கை எதிர்கொண்டார். கைது செய்யப்பட்டுக் காவல் துறை விசாரணைக்காகச் சிறையில் அடைக்கப்பட்டார். நீதிபதி அவரை விடுவித்த பின்னும் சிறையிலிருந்து வெளிவரமறுத்து விட்டார். அவரது இரும்பு இதயத்தைப் பார்த்த காவலர்கள் வீட்டில் கொண்டுவந்து விட்டனர். அந்த வழக்கு அவர் இறந்ததற்குப் பின்னும் முடியாமல் விசாரணையில் இருந்தது. அதன்பின் காலப்போக்கில் தானாக அந்த வழக்கு தள்ளுபடியானது. கொடுமுடியாற்றுப் பிரச்சனைகளுக்காகப் போராட்டங்களில் ஈடுபட்டு மூன்று முறை சிறை சென்றிருக்கிறார். அவரது இந்த இடைவிடாத போராட்டத்தினால் மக்கள் ஆதரவை நிரம்பப் பெற்றார். இப்பணிக்குக் குறுக்கீடு செய்பவர்களை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனை அறிந்த சட்டமன்ற உறுப்பினர் திரு.மோசஸ் அவர்கள் அணை அமையும் இடத்தில் தமக்கிருந்த 80 ஏக்கர் நிலத்தை விட்டுக் கொடுத்தார். அதனால் அணை உதயமானது. அனைவர் முகத்திலும் மகிழ்ச்சி தாண்டவமாடியது.

ஒருமுறை தினகரன் பத்திரிக்கை அதிபர் திரு. கே.பி. கந்தசாமி அவர்கள் மாநில அறநிலையத்துறை அமைச்சராக இருந்தபோது அவரும் சட்டமன்ற உறுப்பினர் இரமணி நல்லதம்பியும் ஒரே இடத்தில் தம் இருகட்சிகளுக்காகப் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்திருந்தனர். முதலில் அம்மையாரே அனுமதி பெற்றிருந்தார். ஆனால் அமைச்சர் நிகழ்ச்சி பின்பு ஏற்பாடு செய்யப்பட்டவுடன் அம்மையார் நிகழ்ச்சிக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அதனால் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டார். இதனை அறிந்த அமைச்சர் திரு.கே.பி. கந்தசாமி, "அந்தப் பெண்மணி தான் முதலில் அனுமதி வாங்கினார் என்றால், இங்கு அவர் கூட்டம் நடத்துவது தான் முறை. தனது கூட்டத்தை மற்றொரு நாள் வைத்துக் கொள்ளலாம் என்று கூறித் தம் கூட்டத்தை ரத்து செய்துவிட்டு அம்மையார் கூட்டத்திற்கு வழிவிட்டுக் கண்ணியமாகச் சென்றார். இது அவரது துணிச்சலான போராட்டத்தில் எழுந்த வெற்றியாகும்.

சாதிசமயப் பேதமின்றி அனைத்து இனப்பெண்களையும் சமமாகப் பார்த்து அவர்களுக்கு உதவும் சிந்தனையும் செயல்திறனும் உடையவர். அவர் பகுதியில் வாழும் நாடார், தேவர், ஆசாரி ஆதிதிராவிட இனத்துப்பெண்கள் அனைவரையும் ஒன்று திரட்டி, பெண்ணுரிமை இயக்கம் ஒன்றை உருவாக்கிப் பெண்கள் உரிமைக்காகத் துணிச்சலுடன் போராடியவர். பெண்ணுரிமைக்காக டெல்லி வரை சென்று போராடினார். டெல்லியில் நடைபெற்ற பெண்ணுரிமை மாநாடுகளில் தம் ஆதரவாளர்களுடன் பெருந்திரளாகச் சென்று பங்கு கொண்டார். ஒரு பெண்ணுக்குப் பிரச்சனை என்றால் உடனடியாக ஓடிவந்து ஆதரவுக் கரம் நீட்டி அவர் பிரச்சனையைத் தீர்த்து வைக்கும் துணிச்சலும் நேர்மையும் பெற்றிருந்தார்.

ஒருமுறை இரவு திசையன்விளைப் பகுதியில் ஓடும் டிரக்கர் வண்டியில் ஒரு பெண் நான்கு ஆடவர்களுடன் தனியாகப் பயணம் செய்து கொண்டிருந்தார். காட்டுப்பாதை வழியாகக் கட்டணத்திற்கு ஓடும் அந்த வண்டியில் அந்தப் பெண் எவ்வித அச்சமுமின்றித் தனியாகப் பயணம் செய்தது அந்த ஆடவர்களுக்கு வியப்பை ஊட்டியது. எனவே அவர்கள் அப் பெண்ணிடம் "ஏம்மா. இந்த இரவு நேரத்தில் இந்தக் காட்டுப் பாதையில் ஆடவர்களுடன் அச்சமில்லாமல் பயணம் செய்கிறாயே உனக்குப் பயம் இல்லையா?" என்று கேட்டனர். அதற்கு அந்தப் பெண்மணி, "எம்.எல்.ஏ. ரமணி நல்லதம்பி இருக்கும் போது எதற்குப் பயம்?" என்று திருப்பிக் கேட்டார். ஆடவர்கள் வாயடைத்துப் போய்விட்டனர். அந்த அளவிற்கு அஞ்சா நெஞ்சமுடன் அப்பகுதி மக்கள் மத்தியில் வீராங்கனையாக வலம் வந்தவர் அம்மையார்.

"ஒரு பெண் கழுத்தில் நிறைய நகைகளுடன் இரவு 12 மணிக்கு என்றைக்குத் தனியாக வருகிறாளோ அன்றுதான் உண்மையான சுதந்திரமடைந்த நாள்" என்னும் மகாத்மா காந்தியடிகளின் கருத்தை மெய்ப்பித்தவர் இரமணி நல்லதம்பி எனில் மிகையில்லை.

அம்மையாரின் சட்டமன்றப் பேச்சுகளையும் போராட்டங்களையும் அறிந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தம் கட்சிப் பெண் சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்து, "இரமணி நல்லதம்பி போன்று உரையாற்றவும் செயலாற்றவும் வேண்டும்" என்று ஆலோசனை வழங்குவது உண்டாம். அந்தவகையில் ஒருமுறை சட்டமன்றத்தில் முதலமைச்சர் பேசும்

பொழுது அம்மையாரின் செயல்திறனையும் துணிச்சலையும் பாராட்டி, 'வீராங்கனை' எனப் பாராட்டிப் புகழாராம் சூட்டினாராம். இத்தகைய செய்திகளிலிருந்து வீராங்கனை இரமணி நல்லதம்பியின் துணிச்சலையும் நேர்மைப் பண்பினையும் விளங்கிக் கொள்வதுடன் மாற்றுக் கட்சி உறுப்பினர்களைப் பாராட்டும் முதலமைச்சர் கலைஞரின் மாண்பையும் விளங்கிக் கொள்ள முடிகிறது.

எளிமையும் தூய்மையும்

மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா

என்னும் கவிமணியின் கருத்தினை மெய்ப்பிக்கப் பிறந்த வீராங்கனை இரமணி நல்லதம்பி அம்மையார். காங்கிரஸ் பேரியக்கத்தில் ஐக்கியமாகிக் காந்தியடிகளும், காமராசரும் விட்டுச் சென்ற 'கதர்' இயக்கத்தில் மனதைப் பறி கொடுத்தார். தம் வாழ்நாள் முழுமையும் கதர்ப் புடவையே அணிந்தார். ஆபரணத்தில் நாட்டம் கொள்ளவில்லை. எவ்வித ஆடம்பர அலங்காரங் களுமின்றி எளிமையான தோற்றத்தைப் பெற்றிருந்தார்.

இருமுறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட ஒருசட்டமன்ற உறுப்பினர், சென்னையில் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கும் புதுவிடுதியில் அறை எண் 202இல் தான் சுமார் எட்டு ஆண்டுகளாகத் தங்கினார். சட்டமன்றத்திற்குக் காரில் செல்வதில்லை. அரசு வாகனத்தில்தான் வந்து செல்வார். சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் சைவ உணவுகளையே உட்கொள்வார். உணவிற்கு முக்கியத்துவம் தராமல் பணிகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் தருவார். தனியாக ஒரு வீடுகட்டிக் கொண்டதில்லை. தன் கணவரின் பூர்வீக வீடான சிறு ஓட்டு வீட்டிலேயே இறுதிவரை குடியிருந்தார். தனக்கென ஒரு கார்கூட வாங்கிக் கொண்டதில்லை. பெருந்தலைவர் காமராசரின் வழியில் வந்த அம்மையார் அவரைப் போலவே எளிமையின் இலக்கணமாகத் திகழ்ந்தார். அவரது எளிமையும் சேவை உள்ளமும் பாரதப் பிரதமர் இந்திராகாந்தி, இராஜீவ்காந்தி, மத்திய அமைச்சர்கள் மார்க்ரெட் ஆல்வா, அம்பிகா சோனி, வாழைப்பாடி இராமமூர்த்தி உள்ளிட்ட தலைவர்களிடம் நன்மதிப்பையும் தொடர்பையும் உருவாக்கின. கல்விக் காவலர், ஆன்மீக வள்ளல், சான்றோர் குலச்சக்கரவர்த்தி பத்மஸ்ரீ டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அவர்கள் ஆண்டுதோறும் சட்டமன்ற

உறுப்பினர்களுக்கு வழங்கும் விருந்தில் தவறாது பங்கேற்று அவரது ஆதரவையும் அன்பையும் பெற்றவர். தாம் சார்ந்த சமூகத்திலும் தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்திருந்தார்.

தனக்கென எந்தச் சொத்துக்களையும் சம்பாதிக்காத கறைபடியாத கரத்திற்குச் சொந்தக்காரர். தம் இருபிள்ளைகளுக்குக் கூட எதுவும் சம்பாதித்துக் கொடுக்காதவர். அம்மையாரின் குடும்பம் மிக ஏழ்மையான குடும்பமாக இன்னும் இருந்து வருகிறது. சட்டமன்றக் கூட்டத் தொடர் தவிரப் பிற நாட்களில் சொந்தத் தொகுதிக்கு வந்துவிடுவார். தொகுதியில் இருக்கும் சமயத்தில் யார் வந்து எந்த நேரத்தில் அழைத்தாலும் மனம் கோணாமல், எதையும் எதிர்பாராமல், தன்னலம் கருதாமல் சென்று அவருக்கு உதவும் தூய பண்புடையவர். சாதி, சமயம் என எவ்விதப் பேதமும் இன்றிஅனைவரையும் சமமாக நடத்தும் இயல்புடையவர். யாரிடமும் எவ்விதப் பிரதிபலனும் இதுவரை பெற்றதில்லை. சட்டமன்றத்திற்குச் செல்லும் போது கூட அரசுப் பேருந்தில் பாஸ் கட்டணத்திலேயே பயணம் செய்யும் பழக்கம் உடையவர். உதவியாளர் ஒருவர் மட்டுமே உடன் செல்வார். நோய்வாய்ப்பட்ட பின்னாட்களில் அவரது கணவர் வழக்கறிஞர் திரு. நல்லதம்பியே உதவியாளராக இருந்து பணியாற்றினார்.

தம் உடல் நலத்தைப் பற்றியும் பொருளாதார வளத்தைப் பற்றியும் கவலைப்படாமல் பொதுமக்கள் நலத்தையும் வாழ்க்கையையும் பற்றியே கவலைப்பட்டுத் தம்மையே அழித்துக் கொண்ட தியாகத்தின் திருவுருவம் அவர். குடும்பப் பொறுப்பு களையும் தவறாது நடத்தி வந்தார். கணவரின் வழக்கறிஞர் பணி தந்த ஊதியத்தைக் கொண்டே குடும்பத்தை நடத்தி வந்தார். தொகுதியில் இருக்கும் பொழுது எத்தகைய பணிக்காக வெளியில் சென்றாலும் இரவு 11 மணிக்குள் வீடு திரும்பி விடுவார். வீட்டிலேயே உணவு, பிள்ளைகள், கணவர், உறவினர்கள் ஆகியோரைப் பராமரிக்கும் பணியில் ஈடுபட்டு ஒரு உயிருள்ள இயந்திரம் போலவே செயல்பட்டு வந்தார்.

தியாகத்தின் வடிவமாகத் திகழ்ந்த வீராங்கனை இரமணி நல்லதம்பி மார்புப் புற்று நோய்க்கு ஆட்பட்டுத் தீவிரக் கதிரியக்க அறுவை சிகிச்சை முறைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்ட போதும் பயனின்றித் தம் ஐம்பதாவது வயதில் அமரத்துவம் அடைந்தார். வாழ்வாங்கு வாழ்ந்த அவர் இன்று வானுறையும் தெய்வமாகி நிற்கின்றார்.

தோழர் லீலாவதி

சு. துரை

மதுரை வில்லாபுரத்திற்குக் குடிநீர்க் குழாய்கள் பதியப்பட்டுக் குழாயில் குடிநீர் வந்தது. அப்பகுதி மக்கள் முதன் முதலாகக் குழாய் மூலம் பிடித்த குடிநீரை அவ்விடத்திலேயே வார்த்து மாலையிட்டு அஞ்சலி செலுத்தினர். குடிநீர் பிடித்த இடத்தில் யாருக்கு அஞ்சலி செலுத்தினர்? குடிநீர் கொண்டு வருவது என்பது அவ்வளவு பெரிய சாதனையா? ஆம். தன் செந்நீரைச் சிந்தித் தண்ணீரைக் கொண்டு வந்தவர் தோழர் லீலாவதி. குடிநீர் பிடித்த இடத்தில் தான் லீலாவதி என்னும் மாதர்குல மாணிக்கத்தைச் சமூக விரோதக்கும்பல் வெட்டிச் சாய்த்தது. எனவேதான் அந்த இடத்தில் குடிநீரை வார்த்து அவருக்கு அஞ்சலி செலுத்தியது மக்கள் வெள்ளம்.

யார் இந்த லீலாவதி

சௌராஷ்டிரா சமூகத்தைச் சேர்ந்த வெங்கடாசலம், இந்திரா இணையரின் மூன்றாவது புதல்வி லீலாவதி. 1957ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27ஆம் தேதியன்று பிறந்தார். லீலாவதி 10ஆவது வகுப்பில் படிக்கும் பொழுது குடும்பத்தில் மிகவும் வறுமையான நிலைமை இருந்தது. எனவே அவர் பள்ளிப்படிப்பை நிறுத்திவிட்டு வீட்டில் நெசவு வேலை செய்தார். அதைச் செய்துகொண்டே பொது நூலகத்திலும் உறுப்பினராகி நூல்களைத் தொடர்ந்து வாங்கிப்படித்துத் தனது பொதுஅறிவை வளர்த்துக் கொள்வதில் கண்ணுங் கருத்துமாய் இருந்தார்.

இவருக்கும் குப்புசாமிக்கும் 1977ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் தேதியன்று திருமணம் நடைபெற்றது. குப்புசாமி இரண்டாம் வகுப்பு வரைதான் படித்தார். ஜனநாயக வாலிபர் சங்கத்தின் செயலூக்கமுள்ள வீரரான அவர் தன் மனைவி லீலாவதிக்குப் படிப்படியாக அரசியல் உணர்வை ஏற்படுத்தினார்.

குப்புசாமி எவர்சிலவர் பட்டறைத் தொழிலாளி. குடும்பச் சிரமம் காரணமாக லீலாவதியின் மூத்த மகள் கலாவதி தன் படிப்பை 10ஆவது வகுப்போடு நிறுத்திவிட்டு முழு நேரமும் தறியில் நெய்யத் துவங்கினார். லீலாவதி குப்புசாமி இணையருக்குக் கலாவதி, துர்கா, டான்யா என மூன்று புதல்விகள்.

கணவர் லீலாவதியைக் கைநெசவுத் தொழிலாளர் சங்கத்தில் உறுப்பினராகச் செய்தார். பின்னர் வாலிபர் சங்கத்தில் உறுப்பினராகச் செய்தார். கட்சி வெளியீடுகளையும் இதழ்களையும் கொண்டுவந்து கொடுத்துக் கட்சியோடு தொடர்பு ஏற்படச் செய்தார். லீலாவதி 1987ஆம் ஆண்டில் மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சியின் உறுப்பினர் ஆனார்.

ஒரே அறையில் ஐவரைக் கொண்ட இந்தக் குடும்பம் வாழ வேண்டியிருந்தது. அறையின் நடுவில் நெசவுத்தறி. அதைச் சுற்றிப் பெட்டி, படுக்கை. அங்கேயே எண்ணெய் அடுப்பை வைத்துச் சமையல், இரவில் தறிக்குக் கீழே உறக்கம் என்ற நிலை தான் அந்தக் குடும்பத்திற்கு. லீலாவதி நெசவுத் தொழில் செய்து வந்தார். அவரது கணவர் குப்புசாமி பட்டறைத் தொழிலாளியாக வேலை செய்து வந்தார்.

வகித்த பதவிகள்

சாதிய பலமோ பணபலமோ எதுவும் இல்லாத ஓர் அன்றாடம் காய்ச்சி, அதுவும் கைநெசவு செய்து பிழைப்பு நடத்திய ஒரு பெண் பல்வேறு பதவிகளை வகித்தார்.

1. இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்ட்) - மதுரை மாவட்டக்குழு உறுப்பினர்.
2. இந்திய ஜனநாயக மாதர் சங்கம் - மாநிலக்குழு உறுப்பினர் மற்றும் மாவட்டப் பொருளாளர்.
3. ஜனநாயக வாலிபர் சங்கம்-மாவட்டக்குழு உறுப்பினர், மாநிலக்குழு உறுப்பினர்.
4. கைத்தறி நெசவுத் தொழிலாளர் சம்மேளன மாநிலத்துணைத் தலைவர், மாவட்டப் பொருளாளர், மாநிலக் குழு உறுப்பினர்.
5. மதுரை மாநகராட்சியின் மார்க்சிஸ்ட் கட்சிக் கொறடா.
6. மதுரை மாநகராட்சியின் உறுப்பினர்.

பெண்களுக்கு இட ஒதுக்கீடு

சமூகத்தில் சரிபாதியாக உள்ள பெண்கள் அரசியலிலும், சமுதாய வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் தங்களுக்குச் சம உரிமை வேண்டும் என்று முழக்கம் எழுப்பி வரும் நேரம் இது. உள்ளாட்சி முதல் நாடாளுமன்றம் வரை அனைத்துத் தேர்ந்தெடுக்கப்படும் அமைப்புகளிலும் உரிய இடம் வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கும் நேரம் இது.

நாடாளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் மூன்றிலொரு பங்கு இடங்கள் பெண்களுக்கென்று ஒதுக்கப்பட வேண்டும் என்று சட்ட முன்வரைவுகள் நாடாளுமன்றத்தில் வைக்கப் பட்டுள்ள நேரம் இது.

1996ஆம் ஆண்டில் நடைபெற்ற தமிழக உள்ளாட்சித் தேர்தலின்போதுதான் முதல் முறையாகப் பெண்களுக்கென்று மூன்றில் ஒரு பகுதி தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. இதன்படி மதுரை மாநகராட்சிக்கான 74 வட்டங்களில் 24 வட்டங்கள் பெண்களுக்கென்று ஒதுக்கப்பட்டன. வில்லாபுரம் இத்தகைய வட்டங்களில் ஒன்று. வில்லாபுரத்தில் லீலாவதியை நிறுத்துவது என்று மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சி முடிவு செய்தது.

லீலாவதியின் பேட்டி

வில்லாபுரம் வட்டத்தில் லீலாவதி போட்டியிடுவது என்பது உறுதியானதும், 'தினமலர்' நாளிதழ் (5.1.1996) அவரைப் பேட்டி கண்டது. அந்தப் பேட்டியில் தெரிவித்தவை:

> நான் தேர்தலில் போட்டியிடுவது சம்பாதிப் பதற்காக இல்லை, மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத் தான். வில்லாபுரம் பகுதியில் மாநகராட்சி சார்பாக லாரியில் விநியோகிக்கப்படும் குடி தண்ணீர் கூவி விலைக்கு விற்கப்படுகிறது. இந்த அவலத்தைப் போக்கிக் குழாய் மூலம் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்வேன். இந்தப்பகுதியில் மேல்நிலைத் தொட்டி கட்டிப் பயன்படுத்தப் படாமல் உள்ளது. இதைப் பயன்படுத்துவேன். ரேசன் கடைகளில் சமூக விரோதிகள், அரசியல் கட்சியினரின் தலையீடு இருந்து வருகிறது. இந்தத்தலையீட்டைத் தடுத்து நிறுத்தி எடை குறையாமல் பொதுமக்களுக்குப் பொருட்கள் கிடைக்கப்பாடுபடுவேன். இந்தப் பகுதியில் ரவுடிகளின் அட்டகாசம் அதிகம் உள்ளது. இதைக் குறைக்க நடவடிக்கை எடுப்பேன்.

லீலாவதி சொன்னதும் செய்ததும்

வில்லாபுரம் பகுதியில் உள்ள வணிகர்கள், மாமூல் என்ற பெயரில் சமூக விரோதக் கும்பல் பயமுறுத்திக் காசு வசூலிக்கும் போக்கைத் தாங்கமுடியாமல் அதற்கெதிராகக் கடையடைப்பு நடத்தினர். மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சியின் வில்லாபுரம் கிளைகள் வணிகர்களின் போராட்டத்திற்கு ஆதரவாகச்

சுவரொட்டிகள் அச்சிட்டு அந்தவட்டம் முழுவதும் ஒட்டின. அன்று நடந்த பேருந்து மறியல் போராட்டத்திலும் லீலாவதி ஈடுபட்டார்.

உணவுப் பொருள் பங்கீட்டுக்கடை (ரேசன்) முறைகேடுகள், மாநகராட்சியின் இலவசக் குடிநீரைக் காசுக்கு விற்பது போன்ற சமூக விரோதச் செயல்களுக்கு எதிராகத் தொடர்ந்து லீலாவதி குரல் எழுப்பினார். இவருடைய தொடர்ச்சியான நடவடிக்கையின் காரணமாகவே குடிநீர்க் குழாய்கள் பதிக்கும் வேலைகள் விரைவாக நடைபெற்றன.

சரக்குந்து மூலம் வரும் மாநகராட்சிக் குடிநீரைக் காசுக்கு விற்று ஒவ்வொரு மாதமும் பல்லாயிரக் கணக்கான ரூபாய்களைக் கொள்ளையடித்து வந்த அந்தக் கும்பல் இந்தக் கொள்ளைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்போகும் லீலாவதியைக் கொலை செய்யத் திட்டம் தீட்டியது.

நடந்தேறிய கொடூரம்

காலை உணவு தயாரித்துக் கொடுப்பதற்காக எண்ணெய் வாங்கும் பொருட்டு எண்ணெய்க் குப்பியை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு அருகில் உள்ள பலசரக்குக் கடைக்குப் போகும் பொழுது அந்தக் கொடிய நிகழ்வு அரங்கேற்றப்பட்டது.

1997ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23ஆம் நாள் காலைப் பொழுதில் ஆறு சமூக விரோதிகளால் லீலாவதி வெட்டி வீழ்த்தப்பட்டார். ஒரு பெண் என்றும் பாராமல் மூன்று பெண் குழந்தைகளுக்குத் தாய் என்றும் பாராமல் லீலாவதியை வெட்டிச் சாய்த்தனர் கொடியவர்கள். சமூகமாற்றத்திற்கான போராட்டத்தில் தமிழகத்தில் ஒரு பெண் வெட்டிக் கொல்லப் பட்டது அப்போதுதான். முதல் பெண் களப்பலி தோழர் லீலாவதி தான்.

இந்திய மக்கள் நாயகத்திற்கே, மனித நாகரிகத்திற்கே. மனிதநேயப்பண்பாட்டிற்கே விடப்பட்ட சவால்தான் இந்தக் கொடூரக் கொலை.

மதுரை நீதி மன்றம் கொலைக் குற்றத்தை உறுதி செய்து குற்றவாளிகள் ஆறு பேருக்கும் ஆயுள் தண்டனை விதித்தது.

லீலாவதியின் குடும்ப நலநிதி

லீலாவதி படுகொலை செய்யப்பட்டதும் அவரது குடும்பத்திற்குத் தமிழக முதல்வர் அவர்கள் ரூ.50,000/- வழங்க முன் வந்தார். அதைப் பெறுவதற்கு லீலாவதியின் கணவர்

குப்புசாமி மறுத்துவிட்டார். மூன்று மகள்களில் ஒருவருக்கு வேலை தருவதாக மதுரை மாநகராட்சி அறிவித்தது. பதவி சுகத்துக்காக எங்கள் தாயின் மரணத்துக்கு விலை பேச மாட்டோம் என்று மறுத்துவிட்டனர் லீலாவதியின் குடும்பத்தினர்.

லீலாவதி சார்ந்திருந்த மார்க்சியப் பொதுவுடைமைக்கட்சி, லீலாவதி குடும்பப்பாதுகாப்பு நிதி என்ற பெயரில் தமிழக அளவில் வசூல் செய்தது. அக்கட்சி சார்பில் திரட்டப்பட்ட தொகை ரூ.23 இலட்சம். 17.6.1997 அன்று மதுரையில் நடந்த லீலாவதி நினைவுக் கூட்டத்தில் மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சியின் மையக்குழு உறுப்பினர் திரு என். வரதராசன் செய்த அறிவிப்பு:

> *4 1/2 இலட்சம் செலவில் லீலாவதி குடும்பத்துக்காகப் புதிதாக இடம் வாங்கி வீடு கட்டிக் கொடுப்பது என்றும் குடும்பப் பராமரிப்புக்காக 2 இலட்சம் ரூபாய் குப்புசாமி பெயரில் வங்கியில் சேமிப்பு முதலீடாகப் போடுவது என்றும் மூன்று மகள்களின் திருமணச் செலவுக்காக ஒவ்வொருவர் பெயரிலும் ரூ.50,000/- வங்கியில் வைப்புத் தொகையாகப் போடுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.*

25 இலட்சம் ரூபாய் செலவில் லீலாவதி நினைவரங்கம் கட்டப்படும் என்றும் மேலும் அவர் அறிவிப்புச் செய்தார்.

பெண்கள் அரசியலுக்கு வருவதே அரிதான காலகட்டத்தில் அநீதிக்கு எதராகக் குரல் கொடுத்த ஒரு வீரத்தாயினை வெட்டிக்கொலை செய்த நிகழ்வு தமிழ்நாட்டிற்குப் பெருத்த அவமானத்தை - கேவலத்தை ஏற்படுத்தி விட்டது. இந்தக் கொடூரம் நடந்தேறியபொழுது சு. வெங்கடேசன் இவ்வாறு ஒரு கவிதை எழுதியிருந்தார்.

ரேசன் கடைத்தராசுத்தட்டு
ஒரு பக்கம் சாயக் கூடாதென்று
சொன்னதற்காக இன்று
ரோட்டில் சாய்ந்து கிடக்கிறாய்!
தண்ணீருக்குக் காசு கேட்டதைத்
தட்டிக் கேட்டதற்காக
இன்று வீதியில் ஓடுகிறது
உன் இரத்தம்

துணை நூல்கள்

1. மக்கள் சேவையில் மடிந்த வீராங்கனை லீலாவதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), மதுரை மாநகர் மாவட்டக் குழு, மதுரை, 1997, முதல் பதிப்பு.

2. என். ராமகிருஷ்ணன், நினைவில் வாழும் லீலாவதி, பாரதி புத்தகாலயம், சென்னை, 2008, முதல் பதிப்பு.

பண்டிதை அசலாம்பிகை அம்மையார்

பெ.சு. மணி

விடுதலைப் பாசறையில் தோன்றிய கவிஞர்களிலே காலத்தால் தேசிய மகாகவி பாரதியாருக்கு அடுத்த படியாக நமது நினைவுக்குரியவர் பண்டிதை அசலாம்பிகை அம்மையாராவார். அம்மையார் பாடிய 'திலகர் புராணம்', 'காந்தி புராணம்' ஆகிய செய்யுள் இலக்கியங்கள் 'புராணம்' எனப் பெயர் பெற்றிருப்பினும் விடுதலைப் போர்க்களத்தின் - இருபெரும் சகாப்தத்தின் - தளபதிகள் பற்றிய புரட்சி இலக்கியங்களாகும். பண்டிதை அசலாம்பிகை அம்மையார் நாட்டின் விடுதலைக்கும் தமிழுக்கும் ஆற்றியுள்ள தொண்டுகள் போற்றத்தக்கவையாகும். இவரது வரலாற்றை விடுதலைப் பாசறையினர் மறந்தனர். கால தேவன் மறைத்தேவிட்டான். யார் யாரைப் பற்றியெல்லாமோ தகவல் தரும் தமிழ்க் கலைக்களஞ்சியம்கூட இவ்வம்மையாரைப் பற்றிய ஒரு குறிப்புக்கூடத் தந்திலது. நல்ல வேளையாகப் பெண் குலத்தைப் பெருமைப்படுத்துவதற்கென்றே பிறந்து வளர்ந்து வாழ்ந்த தமிழ்ப் பெரியார் திரு.வி.க. தமது வாழ்க்கைக் குறிப்பில் இவரைப் பற்றிப் பல செய்திகளைத் தந்துள்ளார். பண்டிதையார் திருப்பாதிரிப்புலியூரில் வாழ்ந்தவர். ஆனால், தேசத் தொண்டு, தெய்வத்தொண்டு, தமிழ்த்தொண்டு காரணமாகத் தம் வாழ்நாள் முழுவதும் நாடு சுற்றிப் பாடுபட்டார்

என "விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு, 1970" எனும் அரிய ஆய்வு நூலில் விடுதலைப் போராட்ட இலக்கியச் செம்மல் ம.பொ.சி.யால் பண்டிதை அசலாம்பிகை அம்மையார் போற்றிப் புகழப் பட்டுள்ளார்.

பண்டிதை அசலாம்பிகை அம்மையாரைக் குறித்த சில குறிப்புகளைத் திரு.வி.க. தமது 'வாழ்க்கைக் குறிப்புகள்' எனும்

புகழார்ந்த வரலாற்று ஆவணக் களஞ்சியத்தில் சற்று விரிவாக எழுதியுள்ளார். இதில் ஒரு பகுதி வருமாறு:

> *பண்டிதை அசலாம்பிகை அம்மையார் இக்கால ஔவையார். அம்மையார் பழம்பெரும் புலவருள் வைத்துக் கணிக்கத்தக்கவர். பண்டிதையார்க்கு நாவன்மையும், எழுத்தினிமையும், பாட்டுத்திறனும் ஒருங்கே அமைந்துள்ளன. பண்டிதை அசலாம்பிகை அம்மையார் தமிழ் அமிழ்தையாம்.*

இத்தகு சிறப்புடைப் பெண்மணியின் சாதனைகள் இங்குப் பேசப்பட்டுள்ளன.

வாழ்க்கைச் சுருக்கம்

அசலாம்பிகை அம்மையார் 1875 ஜூலை 16இல் திருக்கோவிலூரில் பிறந்தார்.

> *தென்னார்க்காடு ஜில்லா திருக்கோவிலூர் தாலுகா கஸ்பா போலீஸ் இன்ஸ்பெக்டராயிருந்த பெருமாளய்யர் என்பவருக்கு இரண்டாவது மகளாகக் கோவல் வீரட்டேசுவரர் கோவிலிற்கருகில் பிறந்தேன்*

என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மிக இளம் வயதிலேயே, எட்டு வயதிலேயே திருமணம் செய்து கொண்டு 11ஆவது வயதில் விதவையாகிவிட்டார். 11ஆம் வயதில் விழுப்புரம் அரசு பெண்கள் பாடசாலையில் அக்காலத்தில் இருந்த முறைப்படி 5ஆவது வகுப்பில் தேறினார். ஆங்கிலம் நீங்கிய லோயர் ஸெகண்டரி தேர்வில் தனிமையிற் படித்துத் தேறினார். அதன்பின் பள்ளியில் சேராமல் வீட்டிலேயே தந்தை விருப்பப்படி தமிழில் உள்ள இதிகாச புராணங்கள், பக்த சரித்திரங்களைக் கற்றார்.

ஒரு சமயம் அக்காலத்தில் பெண்கள் பாடசாலைத் தலைவியாயிருந்த மிஸ். பிராண்டர் என்பவர் அசலாம்பிகைக்கு விதவைப் படிப்பு உதவித் தொகைக்கு ஏற்பாடு செய்து, அவரை ஆசிரியையாக்க முன்வந்தார். தந்தையிடமும் வற்புறுத்தினார். ஆனால் அசலாம்பிகை தந்தை மறுத்துவிட்டார்.

இந்தியப் பெண்கள் மத சம்பந்தமான கல்வியை வளர்த்துச் சுயேச்சையாகவிருந்து ஒழுக்கத்தைப் பாதுகாப்பது சிறப்பேயன்றி, பொருள் வருவாயை முன்னிட்டு உத்தியோக

வலையில் சிக்கி மேலுள்ள அதிகாரிகட்குக் கீழ்ப்படிந்து நடந்து பாரமார்த்திக ஞானம் தரமாட்டாதும் நமது மதவொழுக்கத்தை அசட்டை செய்விக்கக் கூடியதுமான ஆங்கிலக் கல்வியைப் பெறுவது சிறப்பல்லவென்று தான் கருதுவதாக மிஸ். பிராண்டர் அம்மையாரிடம் அசலாம்பிகையின் தந்தை கூறினார். இதனால் ஆங்கிலக் கல்விமுறை, அசலாம்பிகை அம்மையாருக்கு வாய்க்காமற் போனது.

அசலாம்பிகையின் கல்விமுறையில் அவருடைய பதினைந்தாவது வயதில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த 65 வயதான ஸ்ரீ சுப்பிரமணியத் தம்பிரான் என்பவரை வரவழைத்து (தங்குவதற்குத் தனி வீடு ஏற்பாடு செய்து) நாள்தோறும் அவர் அசலாம்பிகைக்குப் பகல் 12 மணிக்குப் பின் 4 மணி வரையில் தமிழில் பிரபலமாக உள்ள இலக்கிய நூல்களைக் கற்பித்தார். பாடங்கேட்கும் சமயத்தில் அசலாம்பிகையின் அன்னையார் உடன் இருப்பதென்னும் விதி கட்டாயமாகப் பின்பற்றப்பட்டது. இது தவிரத் தந்தையார் முன்னிலையில் தினமும் பல தமிழ்ப் புலவர்கள் வந்து அசலாம்பிகையின் கவன வன்மையைச் சோதித்து வந்தனர்.

ஒரு பிராமண விதவை இளம்பெண் எவ்வளவு கட்டுப்பாட்டுடன் எச்சரிக்கையுடன் பாடங்கேட்க வேண்டி இருந்தது என்பதை மேற்காணும் செய்தி புலப்படுத்துகிறது.

ஆதீனத் தம்பிரானிடம் பாடங் கேட்பது பதினெட்டு வயது தொடக்கத்தில் முடிவுற்றது.

18ஆவது வயதில் திண்டிவனத்திற்கருகிலுள்ள இரட்டணை யென்னும் சொந்தக் கிராமத்திற்குத் தந்தையார் ஓய்வுதியம் பெற்றுச் சென்றதால் அங்குப் பத்தாண்டுகள் அசலாம்பிகை வசித்தார். இக்காலக்கட்டத்தில் செய்யுள் வடிவில் சில நூல்களை இயற்றினார். 'ஆனந்த போதினி' இதழ்களில் 'மாதர் பகுதி'யில் அம்மையார் எழுதிவந்தார். 'தமிழ் லெக்சிகன்' (பேரகராதி) வெளியீட்டினை நன்கு பதிப்பிக்க உரியவராக அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட 18 பண்டிதர்களில் அம்மையாரும் ஒருவர்.

கண் சதை வளர்ச்சி சிகிச்சைக்காகச் சென்னையில் தங்கிய காலத்தில் சுதேசமித்திரன் ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயரின் அறிமுகமும் நட்பும் ஏற்பட்டன. அசலாம்பிகை அம்மையார் சுதேசமித்திரனில் 1916 ஏப்ரல் 15இல், தம்மைப்போல் ஆங்கிலமறியாத பெரும்பான்மையான சகோதர சகோதரிகள்

அரசியல் அறிவு பெற வழிவகுத்தவர் ஜி. சுப்பிரமணிய ஐயர் என்று குறிப்பிட்டுள்ளார். சுதேசமித்திரனில் அவருடைய கவிதைகள் அவ்வப்பொழுது வெளிவந்துள்ளன. அவர் வழியே பத்திரிகை யுலகில் ஊக்கம் ஏற்பட்டு அரசியல் அறிவையும் பெற்றார். இவருடைய 27ஆம் வயதில் தந்தை காலமானார். அவருடைய தாயாரும் 47 ஆண்டுகளில் வாழ்க்கையை முடித்துக் கொண்டு காலமானார். பெற்றோரை இழந்த அசலாம்பிகை அம்மையார் அரசியல், சமய, இலக்கியக் கூட்டங்களுக்குச் செல்வதை மிகவும் குறைத்துக் கொண்டார். அவருடைய தமக்கையின் கணவர் துணையுடன் சில அழைப்புகளுக்குச் சென்றார்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் கௌரவச் செயலாளராகச் சங்கம் நிறுவிய பாண்டித்துரை காலத்தில் அங்கீகரிக்கப்பட்டார். அப்பொழுது அசலாம்பிகைக்குப் பண்டிதைப் பட்டம் வழங்கப்பட்டது. தந்தையாரால் அளிக்கப் பெற்ற சொற்ப நில வருமானத்தில் வாழ்ந்து வந்தார். இறுதிக் காலத்தில் வள்ளலார் இராமலிங்க சுவாமிகளிடம் செலுத்திய பக்தி காரணமாக வடலூரில் வாழ்ந்து வந்தார். அதன் பிறகு எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார் என்பது அறியப்பட வேண்டிய செய்தியாகும். இறுதிக் காலத்தில் தொழுநோயால் துன்புற்றார் என்றும் கூறப்படுகின்றது.

அசலாம்பிகை அம்மையின் கவித்துவ ஆளுமை

அசலாம்பிகை அம்மையார் தமது கவித்துவ எழுச்சியைப் பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார்:

> *14 வயது நடந்து வருகையில் ஓர் நாள் விடியற் காலையில் வாயிலிருந்து மழைபெய்வது போல் ஒரு கனவு தோன்றியது. அன்று முதலாகவே இயற்கையாகக் கவியெழுச்சி கவன சக்தி உண்டாகியதால் சாதாரண நடையில் கும்மிகள், கீர்த்தனைகள் பல வரைந்து வந்தேன்.*

8-10-1921இல் சுதேசமித்திரனில் ப. 8இல் வெளிவந்த 'பிரஜாநுகூலன்' இதழாசிரியர் எஸ்.ஜி. இராமானுஜுலு நாயுடுவின் 'தமிழ்' எனும் கட்டுரையில் அசலாம்பிகை அம்மையார் பின்வருமாறு பாராட்டுப் பெற்றுள்ளார்.

> *திரு. பண்டிதை அசலாம்பிகையம்மாளின் கவித்துவமே கவித்துவம்... திரு. பண்டிதை அசலாம்பிகையம்மாளின் வசனநடை ஆழ்ந்த அர்த்த புஷ்டியுள்ளது.*

17ஆவது வயதில் திருவாமாத்தூர் திரிபந்தாதி இயற்றி அச்சிடப் பெற்றது.

25ஆவது வயதில் அவர் 'பக்தி' எனும் தலைப்பில் எழுதிய கட்டுரை 'மதுரை விவேகபானு' இதழில் 1900 நவம்பரில் (பக். 70-73) வெளிவந்தது.

இரட்டணை கிராமத்திற்கருகிலுள்ள சேவூர் என்று வழங்கும் திருவிசையூர் தலபுராணம் ஒன்றினை வடமொழி யினின்றும் மொழிபெயர்த்துத் தமிழ்ச் செய்யுள் வடிவில் பாடி முடித்து அத்தலத்தில் பெருங்குழுவில் அரங்கேற்றினார் அசலாம்பிகை அம்மையார்.

மதுரைச் செந்தமிழ்ச் சங்கத்தின் நான்காம் ஆண்டு விழாவின்பொழுது அசலாம்பிகை அம்மையார் இயற்றிய வாழ்த்துப் பாக்கள் சுதேசமித்திரன் 1905 மே 26இல் வெளிவந்துள்ளன.

1906 சனவரியில் பிரிட்டிஷ் அரச குடும்பத்தைச் சார்ந்த வேல்ஸ் இளவரசர் சென்னைக்கு வந்த சமயத்தில் பண்டிதை அசலாம்பிகை அம்மையாரின் "பெருமேன்மை தங்கிய வேல்ஸ் இளவரசரின் வாழ்த்துப் பாக்கள்" 26-1-1906இல் சுதேசமித்திரனில் வெளியிடப்பெற்றன.

ஞானபோதினி பாராட்டு

1900லேயே அவரைத் தமிழ் இலக்கிய இதழ்கள் பாராட்டின. தமிழ்ப் பேரறிஞர் எம்.எஸ். பூர்ணலிங்கம்பிள்ளை. வி.கோ. சூர்ய நாராயண சாஸ்திரியார், ஆசிரியர்களாகவிருந்த "ஞானபோதினி"யில் டிசம்பர் 20, 1900 - 'ஞானபோதினி'யில் "மாதர் சுதந்திரம்" எனும் தலையங்கத்தில் சக்கை இராமசாமி ஐயங்கார் எழுதியதாவது:

> இரவில் மேகத்தால் மூடப்பட்ட வானத்தில் தோன்றும் தனி விண்மீன் என ஆங்காங்குக் காணப் படும் அசலாம்பிகையம்மை போன்ற மாதர்கள்தாம் வெகுகாலமாய் இழந்த சுதந்திரங்களைத் தக்க வாற்றான் யெய்தற்கு உரியரும் அருகருமாகின்றார்கள்.
>
> (ப. 163)

'காக்கைப் பொன்னிலுங் கல்லிழைப்பதோ?" எனும் அம்மையாரின் கடிதமும் இந்த இதழில் வெளிவந்துள்ளது.

பாரதியார் பாராட்டினார்

'சக்ரவர்த்தினி' மாத இதழின் ஆசிரியரான சுப்பிரமணிய பாரதியார் அசலாம்பிகை அம்மையாரின் வேல்ஸ் இளரவசர் வாழ்த்துப் பாக்களைச் சக்ரவர்த்தியினியில் (ஜனவரி 1906) பின்வரும் பேருள்ள பாராட்டுரையுடன் வெளியிட்டார்.

"இளவரசர் வரவைப் பற்றி அநேகர்களால் இனிய பாடல்கள் பாடப்பட்டுள்ளன. பூவை - ஸ்ரீ கலியாண சுந்தர முதலியார், பண்டித வெங்கட்ட ராமையங்கார், இப்பத்திரிக்கை ஆசிரியர் முதலிய அநேகர் செய்யுளெழுதியிருக்கிறார்கள். இவையனைத்திலும் பண்டிதை அசலாம்பிகை எழுதியிருக்கும் பாடல் எளிதாயும், சுவையுடைத்ததாயுமிருப்பது பற்றியும், பெண்மணியே எழுதியிருக்கும் சிறப்புப் பற்றியும் அதனைக் கீழே பதிப்பிக்கின்றோம்.

பாரதியாரின் சீரிய பாராட்டைப் பெற்ற 42 வரிகளில் சில பின்வருவன.

பொய்யாத விந்தியரைப் பொதிந்திருக்கும்
வறுமையெனும் பொல்லாக் கங்குல்
மெய்யாம் சுதேசியமென் றுரைபெறு நல்லா
தவனால் விலகி யேகச்
செய்யாநின் றிடுநினது சீர்வரவின் பாக்கிய
மென்றுள்ளே சிந்தித்
தையாயாம் பெறுமகிழ்விற் களவுண்டோ
நிகருண்டோ அறையுங் காலே

'சக்ரவர்த்தினி'யின் ஆசிரியராகப் பாரதி இருந்த காலத்தில் பண்டிதை அசலாம்பிகை அம்மையாரின் "படியாப் பெண்கள் படும்பாடு" எனும் கட்டுரைத் தொடர் வெளிவந்தது. இக்கட்டுரையில் சந்தி பிரித்தலைப் பற்றிப் பண்டிதை அசலாம்பிகை அம்மையார், "இதில் 'ஒருப்படியாக' என்பதைப் படிப்பு அடியாக எனப் பிரித்துப் பொருள் கொள்க" என எழுதியுள்ளார்.

சக்ரவர்த்தினியில் நீண்ட வாக்கியங்களில் அமைந்த தமிழ் நடையை நிறையக் காணலாம். "படித்த பெண் களினால் எய்தும் பயன்" எனும் அம்மையாரின் தொடர் கட்டுரையும் வெளிவந்துள்ளது.

காந்தி புராணத்தைப் படைக்கத் தமக்குத் தூண்டுதலாக அமைந்தது கிருஷ்ணசாமி சர்மாவின் நூல் என்று 1923இல் வெளி வந்த காந்தி புராணம் முதல் இருகாண்ட முதற்பதிப்பின் நூன்

முகத்தில் பின்வருமாறு கூறியுள்ளார் பண்டிதை அசலாம்பிகை அம்மையார்.

> *எவ்வுலகத்தும் எம்மதத்தினர்களாலும் ஒருங்கே உலகில் பெரியார் என மதித்துப் போற்றும் மாண்பு வாய்ந்த மகாத்மாவாகிய மோஹன் தாஸ் கரம் சந்த் காந்தியடிகளின் தூய சரிதத்தினை ஆங்கிலம் முதலிய பல பிற பாஷைகளிலும் அறிஞர் பலர் வரைந் திருப்பது போல் நமது தாய்ப்பாஷையிலும் தேச பக்தராகிய ஸ்ரீமத் கிருஷ்ணசுவாமி சர்மா என்னும் எனதாப்த சோதரரால் எழுதப் பெற்ற இனிய தெள்ளிய நடை வசனநூலை யான் கண்ணுற்றபோது, இச்சரிதம் பண்டைத் தமிழ் முறைப்படி செய்யுள் வடிவமாகப் புனைந்து அழியாவாறு நிலைபெறச் செய்வதே இன்றியமையாத செம்பணியெனக் கருதினேன்.*

மேலே அம்மையார் குறிப்பிட்ட தேசபக்த மாவீரன் காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி சர்மா (1887 - 1925) தமிழில் அரசியல், இலக்கிய நூல்களைப் படைத்த மிகச் சிறந்த எழுத்தாளராகவும் புகழ் பூத்தவர். சிறை வாழ்க்கையில் ஏழு நூல்களையும், சிறைக்கு வெளியே பதினைந்து நூல்களையும் எழுதியவர்.

இந்த நூல்களில் ஒன்றாக அவருடைய "மகாத்மா காந்தியின் ஆன்ம சக்தியும் சாந்தி நிலையும்" எனும் நூல் 1922இல் அவருடைய சென்னை, 'காங்கிரஸ் விளம்பர சபை' சார்பில் வெளிவந்தது. இந்த நூலைத்தான் அசலாம்பிகை அம்மையார் குறிப்பிட்டுள்ளார்.

காந்தி புராணம் இயற்ற காந்தியடிகள் தரிசனமும், அவர் வரலாறும் ஊக்குவித்தன என்பதையும் தமது "எனது ஜீவியக் குறிப்புகள்" எனும் கட்டுரையில் 'பாரதி' இலக்கிய மாத இதழ், ஏப்ரல் 1931இல் (ஆசிரியர், நா. நாராயணசாமி, உத்தமபாளையம்) பின்வருமாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

> *45ஆவது வயதில் அதாவது 1921ஆம் வருஷத்தில் மகாத்மாவைத் தரிசிக்கவும் அவர் உபதேசங்களைப் படிக்கவும், அடிகள் கூடலூர் விஜயம் செய்த காலங்களில் வரவேற்புப் பத்திரம் வரைந்து சமர்ப்பிக்கவும் ஏற்பட்ட சந்தர்ப்பங்களின் பயனாக*

அவர் சரிதம் படிக்கவும் அதனைத் தமிழ்ச் செய்யுள் வடிவில் இயற்றவும் நேர்ந்தது.

"வரவேற்புப் பத்திரம் வரைந்து சமர்ப்பித்தது" எனும் குறிப்பு, காந்தியடிகள் 17-9-1921இல் கடலூரில் தமிழகக் காங்கிரஸ் தலைவர்களுள் ஒருவரான எஸ். சீனிவாச ஐயங்கார் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் தென்னார்க்காடு மாவட்ட மாதர்கள் சார்பாக அளிக்கப்பட்ட அசலாம்பிகை அம்மையாரின் வரவேற்புரையைக் குறிப்பிடுவதாகும்.

காந்திபுராணப் பதிப்புகள்

காந்தி புராணத்தில் முதல் இரு காண்டங்கள் தனிப் பதிப்பாக 1923 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முற்பகுதியில் வெளி வந்தன. பி.ஆர். ராம ஐயர் கம்பெனியாரால் அச்சிடப் பெற்றது. விலை ரூபாய் ஒன்று. முதற்காண்டம் 328 செய்யுள்களைக் கொண்டது. காந்தியடிகள் பிறப்பு முதல் தென்னாப்பிரிக்க அறப்போரில் சிறைவாசம் ஏற்று விடுதலை பெற்றுத் தாயகம் திரும்பிய வரையில் வாழ்க்கை வரலாறு எழுதப் பெற்றுள்ளது.

இரண்டாவது காண்டம் 258 செய்யுள்களைக் கொண்டது. இதில் "தாய்நாடு அடைந்த காந்தியடிகளின் வரவேற்பு" முதல் காந்தியடிகள் ஒத்துழையாமை, சத்தியாகிரகம் முதலான போராட்டங்கள் பலவற்றில் ஈடுபட்டுச் சிறைவாசம் மேற்கொண்டதையும், "தண்டனை அறிந்த மக்கள் நிலை" வரையிலும் வரலாறு கூறப்பெற்றுள்ளது.

முதல் இரு காண்டம் முதற்பதிப்பின் நூன்முகத்தில் அசலாம்பிகை அம்மையார் எழுதியதில் ஒரு பகுதி வருமாறு:

> *எம்மதமும் சம்மதமாக ஏற்குந் தலைவராகிய மகாத்மாவின் சரித்திரத்தினை நமது இயக்கத்தைத் தழுவி நிற்பவர்களும் எதிர்ப்பவர்களும் கூடக் கண்ணோட்டம் செய்து வியப்பும் ஆறுதலும் எய்துதல் வேண்டுமென்னும் அவாவினால் துவேஷம், நிந்தை, குறை கூறல் முதலியன ஓரிடத்திலும் காண்பதற்கிடம் இன்றி இந்நூல் இயற்றப்பட்டுள்ள தென்பதை எவரும் மறுக்கத் துணியார்.*

வரலாற்று ஆதாரங்களைத் திரட்டுவதில் அம்மையார் மேற்கொண்ட முயற்சிகளும் நூன்முகத்தில் கூறப்பெற்றுள்ளது. இதற்கொரு சான்றாக அமைவது அவர் எழுதிய பின்வரும் பகுதி.

பின்னும் இதற்காதாரமாக நான் கண்ணுற்ற தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் உள்ள பதிப்புகளில் இரண்டொரு விஷயங்கள் ஒன்றினுக்கொன்று பேதித்தும் காந்தியடிகளின் தெய்வத்தாயின் திருப்பெயர் காணப்படாமலும், அன்னாரின் தரும பத்தினியாரின் தென் ஆப்பிரிக்காவின் சிறைவாச காலம் திட்டமாய் அறியக்கூடாமலும் இருந்தமையால் ஸ்ரீமதி கஸ்தூரி பாய் அவர்கட்குக் கடிதமெழுதிக் கேட்டதில் அவ்வம்மையார் மனம் உவந்து வரைந்து விடுத்த கடிதத்தில் கண்ட விவரங்களையும் இப்புராணத்தில் விளக்கியுள்ளேன்.

முதல் இரு காண்டங்கொண்ட இந்தத் தனிப்பதிப்புக்கு அம்மையாரின் ''சகோதர நண்பர்'' திரு.வி.க. அவர்கள் ஆழ்ந்தாராய்ந்து விரிவான அரிய முன்னுரை எழுதியுள்ளார். முன்னுரையில் காந்தி புராணத்தை எழுத அம்மையாருக்கு இருந்த தகுதிப்பாட்டை, கவிதையாற்றலை விரிவாக எழுதியுள்ளார்.

புராணங்களில் முன்னோர் கதைகளும் முன்னோர் பொழிபொருளும் அமையுமாறு பாடுதல் தொன்று தொட்ட வழக்கம். அவ்வழக்கு பற்றியே இவ்வாசிரியரும் முன்னோர் கதைகளும், அவர் மொழிபொருளுஞ் சில விடயங்களில் செறியுமாறு இந்நூலை யாத்துள்ளார்

என்று திரு.வி.க. குறிப்பிடுவதின்மூலம் 'காந்தி புராணம்' எனும் பெயர்க் காரணத்தை அறிய முடிகின்றது.

அசலாம்பிகை அம்மையாரை, ''பாமயமாயிலங்குங் காந்தியடிகள் வரலாற்றைப் பாக்களால் புராண நூலாக்கித் தமிழ் நாட்டிற்குதவ விரைந்து முந்தியவர்'' என்று திரு.வி.க. சாற்றியுள்ளது காந்திபுராணம் முதனூலாகவும் விளங்குகின்றது என்பதை உணர்த்துகிறது.

மூன்றாங் காண்டம்

காந்திபுராணத்தின் மூன்றாங் காண்டம் தனிப்பதிப்பாகத் திரு.வி.க.வின் சாது அச்சுக்கூடத்தில் அச்சிடப்பெற்று 1924இல் 64 பக்கங்களுடன் வெளிவந்தது.

மூன்றாங் காண்டத்தில் 284 பாக்கள் உள்ளன. காந்தியடிகள் 'எரவாடா பிரவேசம்' முதல் பல்வேறு அரசியல் நிகழ்வுகளை விளக்குவது மூன்றாங்காண்டம். இந்தப் பதிப்பில் காந்தியடிகளின்

உள்ளங்கவர்ந்த "வைஷ்ணவ ஜனதோ தேனே கஹியே" எனும் குஜராத்திப் பாடலைத் தமிழாக்கம் செய்துள்ளார் அசலாம்பிகை அம்மையார். குஜராத்தில் அருளாளரும் கலைஞருமான நரசிங்மேத்தா (1414-1479) எழுதிய இந்தக் குஜராத்தி மொழிப் பாடலின் முதல் தமிழாக்கமென்றும் கூறலாம். இப்பாடலின் முதல் சில வரிகள், பின்வருவன:

> தன்றுயர் போலப் பிறர்துயர் தனையும்
> ஒன்றென நோக்கி யுணர்வதும், பகட்டும்
> தற்புகழ் குணமு மின்றியே தளர்வோர்க்
> கற்புடன் தொண்டுக ளாற்றுவோர் தாமே
> உண்மையாம் வைணவர்.....

> *நூன்முகத்தில் அம்மையார் எனதுண்மைச் சகோதரரறிஞராகிய 'நவசக்தி' ஆசிரியர் ஸ்ரீமான் திரு.வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களின் பேருதவியே இம்மூன்றாங் காண்டம் விரைவின் வெளி வரவும் முன்னின்றது*

என்று நன்றி நவின்றுள்ளார். 'விவிலிய வேத பாசுரம், குர்ஆனின் முதலாவது ஸீராவின் பொருள்' எனும் மொழிபெயர்ப்புகளும் குறிப்பிடத்தக்கன.

நான்காம் காண்டம்

1925இல் நான்காம் காண்டம் தனிப்பதிப்பாக வெளி வந்தது. 78 பாக்களைக் கொண்டது. 'வங்காள அடக்குமுறைச் சட்டம்' முதல் "சி.ஆர். தாஸ் மறைவு" வரையில் இக்காண்டம் அமைந்துள்ளது.

> *மூன்றாம் காண்டம் அஹிம்சாமூர்த்தியின் உண்ணா விரதத்துடன் பூர்த்தி செய்யப் பெற்றுள்ளது. அதன் பின்னர் நிகழ் ஆண்டில் மிகப் பெரிய மாற்றங் களையும் எண்ணவும் கூசும் சோக நிகழ்ச்சிகளையும் தொகுத்து நான்காம் காண்டமாக இஞ்ஞான்று புனைந்து வெளியிட முன்வந்தேன்*

என்று நூன்முகத்தில் (16-12-1925) கூறியுள்ளார், அசலாம்பிகை அம்மையார். இந்நூலிற்குத் திரு.வி.க. எழுதிய முன்னுரையில்,

> *(14-1-1925) அன்று புத்திரிபாய் வடநாட்டில் காந்தியை ஈன்றார். இன்று அசலாம்பிகையார் தென்னாட்டில் தமிழ்க் காந்தியை ஈன்றார்*

என்று குறிப்பிட்டுள்ளார்.

எட்டுக் காண்டங்களடங்கிய முழுமையான பதிப்பு

முன்பதிப்பித்த நான்கு காண்டங்களையும் பின்பு 5, 6, 7, 8ஆம் காண்டங்களையும் எழுதி, காந்திபுராணத்தைத் தமது 73ஆம் வயதில் முற்றுவித்தார் அசலாம்பிகை அம்மையார். இது மூவாயிரத்திற்கும் அதிகமான பாடல்களைக் கொண்டது. காந்தியடிகள் மறைவுடன் எட்டாம் காண்டம் முடிவுற்றது. இறுதியுரையில்,

> *எனது வயதின் முதிர்ச்சியால் இயல்பாய் எழக்கூடிய தளர்ச்சியாலும், மெளவினாலும், இன்றியமையாத அவசிய கருமங்களுக்கும் இயங்க முடியாத இளைப்பினாலும், நைந்து, திரைந்து, நொந்து நிற்க எழுபத்து மூன்று ஆண்டும் எய்திய யான் எவ்வாறு பாப்புனையும் முயற்சியில் ஈடுபடலாம் என அஞ்சினேன். எனினும் இறைவன் பெருங்கருணையால் மூளைவன்மையும், சிந்தனா சக்தியும், பாப்புனையும் இயற்கை வன்மையும் குன்றாதிருந்தமையால் ஒருவாறு இந்நூலை முற்றுவித்தேன்*

என்று குறிப்பிட்டுள்ளார் அசலாம்பிகை அம்மையார்.

காந்தியடிகள் மீது இயற்றிய இரங்கற்பாக்களையும் இறுதியில் இணைத்துள்ளார் கவியரசி.

வ.வே.சு. ஐயர் பாராட்டுரை

1907இல் அரசியல் பிரவேசத்தில் புரட்சி வீரராக மலர்ந்து, பின்பு 1919இல் காந்தியுகத்தில் காந்தியடிகளின் தலைமையை ஏற்றுக்கொண்ட 'வீரவிளக்கு' வ.வே.சு. ஐயர் படைப்பு இலக்கியக் கர்த்தாவாகவும், திறனாய்வாளராகவும் புகழ் பெற்றவர். இவர் பண்டிதை அசலாம்பிகை அம்மையாரின் காந்திபுராணத்தைத் (முதல் இருகாண்டங்களின் பதிப்பு) தமது "பாலபாரதி" எனும் இலக்கிய மாத இதழில், நவம்பர் 1924இல் பின்வருமாறு பாராட்டி எழுதியுள்ளார்.

> *பண்டிதை அசலாம்பிகை அம்மையார் அருளிய காந்தி புராணத்திற்கு நல்வரவு கூறுகிறோம். ஆத்ம சக்தியின் வெற்றி முரசு மிருக பலத்தைத் திடுக்கிடச் செய்யும். இந்த நவயுகத்திற்கு நாயகனான மகாத்மா காந்தியடிகளின் சரிதையைப் புராண வாயிலாகச் சாசுவதப்படுத்திய அம்மையாருக்குத் தமிழ்நாடு*

மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. இக்காவியத்தின் நடையழகும் விருத்தம் அமைந்திருக்கும் பொருத்தமும் ஆங்கில மொழி களையும் தமிழுக்கு அந்நியமான சொற்களையும் வெகுநயமாகக் கவிகளில் அமைத்திருக்கும் அழகும் மகாத்மாவின் உயர்வாழ்வில் நடந்தவற்றை விடாது உரைக்கப்பட்டிருக்கும் துட்பமும் ஆராயுமிடத்தில் இந்நூல் தமிழ்நாட்டிற்கு ஒரு நன்கொடை என்றே எண்ணுகிறோம். தமிழ் வளர்ச்சிக்கு இத்தகைய முதல் நூல்கள் இன்றியமையாதன.

தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதையர், அம்மையாருக்கு எழுதிய கடிதத்தில், "நூலில் (காந்திபுராணத்தில்) உள்ள செய்யுட்கள் நாமத்தைக் கண்டு மிகவும் மகிழ்ந்தேன்" என்று பாராட்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

திலகர் மான்மியம்

இந்திய தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் மாபெரும் மற்றொரு சகாப்தமான திலகர் சகாப்தத்தின் தலைவரான லோகமான்ய பாலகங்காதர திலகரைப் பற்றியும் செய்யுள் நடையில் ஒரு மாபெரும் படைப்பைக் காந்தி சகாப்தத்தில் அளித்துள்ளார், பண்டிதை அசலாம்பிகை அம்மையார். 'திலகர் புராணம்' எனும் வழக்கு இருந்த போதிலும் நூலின் உண்மையான பெயர் 'திலகர் மான்மியம்' (திலகர் பெருமை) என்பதாகும். இந்நூல் 1927இல் வெளிவந்தது. 415 பாடல்களைக் கொண்டுள்ளது. நூன்முகத்தில் அம்மையார், நூலின் தோற்றத்திற்கும் பெயர்க் காரணத்திற்கும் உரிய காரணங்களைப் பின்வருமாறு கூறியுள்ளார்.

எனது உண்மையுரிமைச் சோதரர் (ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார்) அவர்கள் என்னை நேரில் கண்டபோது "சாத்வீக அஹிம்சாமூர்த்தி"யின் சரிதத்தினை நமது தாய்மொழிப் பசுங்கவிதைகளில் இறக்கிய தாமே, வீரவேத்தரும், சுதந்திர தாக கர்த்தாவுமாகிய ஸ்ரீதிலகரின் சரிதத்தினையும் ஒருவாறு தமிழ்மொழி விளங்க யாத்தல் வேண்டுமென்றும் உலகமுய்யத் தோன்றிய இருபெரு மக்களின் நோக்கங் களும் ஒன்றே யாதலினால் இவ்விரண்டினையும் தனிப்பட்ட இரு தமிழர்கள் புனைவதிலும்

ஒருமைப்பாடு தோன்ற ஒருவரே முற்றுவிப்பது சிறந்ததென்று அறிவுறுத்திய ஆலோசனையே பேருற்றமாக என் மனதில் நிலைநின்று இப்பணியில் ஈடுபடுத்தியது உண்மை....

கீதாசாரியரின் அவதாரப் பிரதிபிம்பமே இவரென என்னுள் என்னையுமறியாமல் தோன்றிய ஒரு தூய நம்பிக்கையின் காரணமாகவும் விஷ்ணுமூர்த்தியின் அவதார மாண்புகளைப் பற்றிக்கூறும் வரலாறு களை மான்மியமென்றழைப்பது மரபாதலினாலும் உலகம் ஒருங்கே மானியர் என்ற விசேடப் பெயர் தந்தே கவுரத்தமை பற்றியும் ஸ்ரீதிலகர் சரிதத்தினுக்கும் மான்மியம் என்னும் பெயர் புனையத் துணிந்தேன்.

திரு.வி.க. முகவுரை (6-11-1927)

திரு.வி.க. தமது முகவுரையில் "மஹாராட்டிரத் திலகரைத் தமிழ்த் திலகராக்கித் தமிழ்நாட்டுக்கு நல்கிய பண்டிதை அசலாம்பிகை அம்மையார்க்குத் தமிழுலகங் கடமைப்படுவதாக" என்று குறிப்பிட்டுள்ளார்.

முகவுரையில் திரு.வி.க., திலகரின் அரசியல் தொண்டுகளை விரிவாக எழுதியுள்ளார். "திலகர் மான்மியம்' என்னும் இந்நூல் தீந்தமிழ்ப் பாச் செய்யுளால் யாக்கப்பட்டிருக்கிறது. பா வனப்புகளை நேயர்கள் ஆங்காங்கே அவ்வப்போது நுகர்ந்து செல்வார்களாக" என்று எழுதியதோடல்லாமல் 'பாவனப்புகள்' பலவற்றை மேற்கோள்களாகக் காட்டியுள்ளார். இவற்றுள் இரண்டு வருமாறு:

1. தருக்கமுங் கணித நூலுங்
தத்துவக் கலைக ளென்னும்
வருக்கமு மொருங்கே யின்னார்
மதியெனு முதயக் குன்றில்
அருக்கரே போலத் தோன்றி
யவிர்ந்தன வெனிலிம் மேலோன்

2. அரசியற் போரின் வித்தை
யவனியில் விதைத்தோ னென்ன
உரைசெயு முதல்வன் தீரன்
உயர்கலை யறிவன் ஞானி
கரைசெயற் கரிய தியாகி
கருமயோ குடையோன்.....

திலகர் மான்மியத்தை முற்றுவித்து, அடுத்துத் திலகரின் முப்பெரும் நூல்களை விளக்கி அகவற்பாவெனும் எழுத் தோவியமாகக் கவியரசி "முச்சுடர் விளக்கம்" எனத் தலைப்பில் வரைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

திலகரின் "Oriyan", "The Artic Home in the Vedas", "கீதாரகஸ்யம்" என்பன முச்சுடர்களாகும். முதலிரண்டும் ஆங்கிலத்திலும், மூன்றாவது மராட்டிய மொழியிலும் எழுதப் பட்டவையாகும். மூன்றும் திலகரின் மாண்டலே (பர்மா) சிறை வாசத்தில் எழுதப்பட்டவையாகும். இவற்றை,

மிருக சீரிட மென்றொருபெயர் விளம்பி
ஆங்கில மொழியி லோங்குயர் நடையில்
இங்கிதன் கருத்தை யினிய கட்டுரையாய்

என்றும்

வேத நூல்களிலே விளம்புவதாகும்
ஓதுமா ரியரின் உத்தர துருவ
நிவாஸ மென்பெயரால் நிறுவிய நூலைப்
பிற்படச் சிறையுட் பெய்திட வுழந்து
நிற்புழி வரைந்து நிகழ்த்தியதாகும்

என்றும்

ஆண்டகை யறுபதா மாண்டினில் வலிய
மாண்டலே சிறையில் மன்னிய காலை
கரும யோகத்தின் பாற்பட்டு கருத்தில்
மருமமார் கீதை மர்தண மெனவே
இயற்றின ரோருரை யிணையில் நூலிதனை

என்றும் குறிப்பிட்டு விளக்கியுள்ளார் அசலாம்பிகை அம்மையார்.

மகாவித்துவான் மு. இராகவையங்கார் சிறப்புப் பாயிரம்

பாரதி பாராட்டிய 'ஸ்வதேச பக்தி உணர்வுடன் அசலாம்பிகை அம்மையாரின் தேசபக்திச் சுடரெனப் படைக்கப் பட்ட திலகர் மான்மியத்திற்குச் சிறப்புப் பாயிரம் அளித்துக் கௌரவித்தார் மகாவித்துவான். சிறப்புப் பாயிரம் முழுவதும் வருமாறு:

ஞாலமிசைப் பாரதமா நாடேற்ற
முறல் நாடி நனியுழந்த
சீலமுடையப் பெரியோருட் செகத்தின்மே
னிலத்திருந்து சீற்றத் தோடுஞ்

சாலவரு வானாற்றின் றருக்கொழிந்த
சடைக்கடவுள் தகைமை சான்ற
பாலகங்கா தரதிலகர் படைத்தபுக
முலகிலெவர் படைத்தா ரம்மா

அன்னவர்தம் பெருமையெலா மளவிடுதற்
கரிதேனு மரிதின் வாய்ந்த
நன்னரமை செய்தியெலா நனிதிரட்டிச்
செந்தமிழி யைந்த பாவாற்
பின்னவரு மறிந்துய்யப் பீடுறுபா
திரிப்புலியூர் பிறங்க மேவி
மன்னுமச லாம்பிகையா மாப்புலமை
யாட்டி செய்நூல் வாழ்த்தார் யாரே

இராமலிங்க சுவாமிகள் சரிதம்

பண்டிதை அசலாம்பிகை அம்மையார் வள்ளலார் இராமலிங்க சுவாமிகளிடம் பக்திகொண்டு, அவருடைய வரலாற்று நூலான காரணப்பட்டு ச.மு. கந்தசாமி பிள்ளையவர் களால் ஒப்பு நோக்கப்பட்டு வெளிவந்த பதிப்பிற் கண்ட வரலாற்று நிகழ்ச்சிகளை ஆதாரமாகக் கொண்டு 409 செய்யுள் களில் "சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் சரிதம்" எனும் நூலை இயற்றினார். இந்நூல் 1934இல் வெளிவந்தது. திரு.வி.க.வின் சாது அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது. நூன்முகத்தில் அம்மையாரின் வள்ளலார் வழிபாட்டுணர்வு பொங்கித் ததும்புகின்றது. இதில் ஒரு பகுதி வருமாறு:

சுத்த சன்மார்க்க தூநெறி நேயர்காள்! திருவருட் பிரகாச வள்ளலாரென்று வழங்கும் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் அவர்களின் ஜீவிய சரிதம் இன்றளவும் வசன ரூபமாக இருந்து வருவதால் இதனைச் செய்யுள் வடிவில் யாத்தளிக்க வேண்டுமெனச் சுவாமிகளின் மெய்யன்பர் சிலர் எளியேனை மூன்றாண்டுகளுக்குமுன்பு அறிவுறுத்தியும் வற்புறுத்தியும் வந்தனர். எனினும் செயற்கரிய தொன்றில்லாச் சித்தர் பெருமானும் ஞானயோகியும் கருணை வள்ளலுமாகிய அப்பெரியாரின் சரிதத்தினை யாக்கும் பணியில் எத்தகுதியுமற்ற பேதை ஈடுபடத் துணிவது பெருந்தவறாகு மென்றஞ்சி நீண்ட நாள் முயலாதிருந்தேன். இந்நிலையில் மீண்டும் அம்

முயற்சியினை மேற்கொள்ளும் தூண்டுதல்களாக நிகழ்ந்த இரண்டொரு சான்றுகளால் துணிந்து இதனை எனதறி வாற்றலுக் கேற்றபடி இயற்ற நேர்ந்தனன்.

'நூற்பயன்' எனும் தலைப்பில் எழுதப்பெற்ற இரு பாடல்களில் இரண்டாவது பாடல் வருமாறு:

நித்திய யோகி யாகிய நிமலன்
நிகரிலாக் காதையை நினைவோர்
பத்தியாற் படிப்போர் படித்திடக் கேட்போர்
பரவச வுணர்ச்சியிற் படிவோர்
சத்திய ஞான அருட்பெருஞ் சோதித்
தண்ணருள் மிகமிக வாய்ந்து
பொத்திய மாயைத் திரையகன் றிறவாப்
பூரண இன்பமே வுவரே

வடலூரில் வள்ளற்பெருமான் அமைத்த அற்புதமான சத்திய ஞான சபையில் ஜோதி வழிபாட்டிற்கான புதுமையான வழிபாட்டையும் வகுத்தார். இந்த வழிபாட்டில் ஏழுதிரைகள் ஒவ்வொன்றாக விலக்கப்பட்டு ஜோதி தரிசனம் காட்சியளிக் கின்றது. ஏழு திரைகள் பற்றிய விளக்கங்கள் பலவாறாக உள. இவற்றுள் அம்மையார் தமது விளக்கத்தைப் பின்வரும் இரு பாடல்களில் இசைத்துள்ளார்.

கரிய திரைதான் மாமாயை
கவின்ற நீலத் திரையுருவம்
பெரிய மாயா சக்தியதன்
பின்பார் பச்சைத் திரைகிரியை
உரிய சிகப்பு நிறம்பரையாம்
ஒளிர்பொன் இச்சை உயர்வெண்மை
அரிய ஞானம் கலப்புநிறத்
திரைதான் ஆதி சக்தியதாம்

அழியா வான்ம விளக்கமதை
அரணாய் மறக்கும் எழுவகையாம்
ஒழியா வன்மைச் சக்திகளும்
ஒவ்வொன் றாக நீங்கிடுமேல்
எழுமா சோதி தெரிச னந்தான்
எளிதிற் பெறலா மெனும் குறிப்பைத்
தொழுவோ ருணர வகுத்தனரால்
தூய ஞான சபையிடையே

வள்ளற் பெருமானின் வரலாற்றில் காணப்படும் அற்புதங்கள் பலவற்றை விரிவாக எடுத்துரைத்துள்ளார் அம்மையார். சுவாமிகளைச் சந்தித்தவர்கள், உரையாடியவர்கள் பற்றிய குறிப்புகளையும் நயம் கொழிக்கும் பாக்களில் வரைந்துள்ளார். பிரம்ம சமாஜத்தாரோடு அடிகளார் நிகழ்த்திய விவாதத்தையும் அம்மையார் விளக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

1935ஆம் ஆண்டுகளில் எழுதப் பெற்ற அம்மையாரின் கடிதங்கள் "அருட்பெருஞ்ஜோதி துணை" எனும் தலைப்பு வரிகளுடன் தொடங்கப் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது. அம்மையார், வடலூரில் சிலகாலம் வாழ்ந்தார் என்பது முன்பே குறிப்பிடப் பெற்றுள்ளது.

பிற நூல்கள்

திருவொற்றியூர்ப் பஞ்சகம், பதிகம், ஆத்திகுடி வெண்பா, குழந்தை சாமிப் பதிகம், நீதித் தொகுதி எனும் வசன கட்டுரை நூல் என்பன பிற படைப்புகளாகும். இந்நூல் "சென்னைப் பாடப் புத்தக நிர்ணய கமிட்டியாரால் வெர்னாகுலர் காம்போஸிஷனுக்கு நிரந்தர உபயோகமாக அங்கீகரித்திருக்கிறார்கள்" என்று பண்டிதை குறிப்பிட்டிருக்கிறார். இவை எம் பார்வைக்கு கிடைத்தில. திருவிடையூர்ப்புராணம் எனும் நூலுக்கு அவருடைய தமக்கையார் உருக்குமணி அம்மையார் சிறப்புப் பாயிரம் நல்கியுள்ளார். (நூற்றாண்டுகளில் தமிழ் - 1961. க.பொ. இரத்தினம்- இன்பநிலையம் - ப. 32)

கம்பராமாயண ஆய்விலும் அசலாம்பிகை அம்மையார் ஈடுபட்டார். 1943இல் 'கம்பரின் ஒரு திவலை' எனும் சிறு நூல் தமிழ் உலகவெளியீடாக வந்தது. 'ஆனந்தபோதினி' எனும் பழம்பெரு இதழில் (சூலை 1932 முதல் சூன் 1934) 'பிராட்டியார்' எனும் தலைப்பில்

திருமணத்தில் இருந்து இராமரால் மீட்சி பெற்றவரை உள்ள சீதையின் நிலையினை ஒவ்வொரு இதழிலும் சிறிது சிறிதாகக் கூறியுள்ளார். உத்தர காண்டத்தைக் கம்பர் இயற்றியதாகக் கூறியுள்ளார்.

தமிழ்ப் பேரறிஞர் குறித்த இரங்கல் கவிதை

தமிழ் உணர்ச்சியை வளர்த்த தொடக்ககால நூல்களுள் "ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்" எனும் வரலாற்றாய்வு நூல் (ஆங்கிலத்தில் எழுதப்பெற்று 1904இல்

வெளிவந்தது) புகழ்பெற்றதாகும். இதன் ஆசிரியர் யாழ்ப்பாணம் வி. கனகசபைப் பிள்ளையாவார் (1855-1906). இவர் மறைவு குறித்து பண்டிதை அசலாம்பிகை அம்மையார் இயற்றிய 28 வரிகள் கொண்ட இரங்கற்பா சுதேசமித்திரனில் 1-3-1906இல் பின்வரும் குறிப்புடன் வெளிவந்தது.

> *1906 பிப்ரவரி 7இல் காலஞ்சென்ற சென்னைத் தபால் இலாகாத் துணைத் தலைவரும், மதுரைச் செந்தமிழ்ச் சங்க அவயவியும் ஆகிய ஸ்ரீமான் கனக சபைப் பிள்ளையவர்கள் பிரிவாற்றாமை இரங்கற் பாக்கள்*

பேச்சாளராகப் புகழ் பெற்றது

அம்மையாரின் பேச்சாற்றலைக் குறித்துத் திரு.வி.க. பாராட்டியுள்ளார். பாராட்டுரைகளில் ஒன்று. பின்வருவது:

> *சென்னையிலே பாண்டித்துரை, நல்லசாமிப் பிள்ளை, ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர் முதலியோர் தலைமையில் அசலாம்பிகை அம்மையாரின் சொற் பொழிவுகள் நிகழும். அவைகளைக் கேட்கப் பெருங் கூட்டங் கூடும். முதியரும் மொய்ப்பர். இளைஞரும் ஈண்டுவர். பின்னவருள் யானும் ஒருவன். பண்டிதையார் பேச்சிலே கம்பனும் சேக்கிழாரும் காட்சியளிப்பர். அம்மையாரின் சொல் திறம், யான் வீடு சேர்ந்ததும், அவர் எடுத்துக்காட்டிய பாட்டுக்களை ஒரு முறை ஊன்றி நோக்க என்னை ஏவும்!*

சமய, இலக்கிய, இதிகாச, புராணச் சொற்பொழிவு களுக்காகச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார் அம்மையார் என்பதும் குறிப்பிடத்தக்கது. கதர் பிரச்சாரம், மதுவிலக்குப் பிரச்சாரக் கூட்டங்களிலும் சொற்பொழிவாற்றியுள்ளார். "அதிதீவிரமாக எவ்விதச் சிரமமான பாக்களைப் பாடுவதும் அதுபோலவே பேசுவதும் அவ்வாறே எழுதுவதும் என்னால் முடியும்" என்று பண்டிதை கூறியுள்ளார்.

அரசியல் சார்பு

காந்தியடிகள் கொள்கைகளில் ஆழ்ந்த பற்றுக் கொண்டிருந்தார். கதருடை அணிந்து கதர் பிரச்சாரம் செய்வதைக் கடமையாகக் கொண்டிருந்தார். காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தில் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர். மதுவிலக்குப் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தார்.

1924இல் திருவண்ணாமலையில் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் மாநாட்டில் அன்றைய ஈ.வே. இராமசாமி நாயக்கர் தலைமை ஏற்க முன்மொழிந்து பேசியவர்களுள் பண்டிதை அசலாம்பிகை அம்மையாரும் ஒருவர்.

> *ஒத்துழையாமை ஓங்கி நின்ற 1922-23இல் கட்குடி, இந்துமதச் சட்ட விரோதமென்பதைப் பெரிய சபைகளில் விளக்கியதற்காக அதிகாரிகள் ஸி.ஐ.டி. இருவரை ஏற்படுத்தி சுமார் 2 1/2 வருஷங்கள் வரை கண்காணித்து வந்தனர்*

என்று அம்மையார் 'எனது ஜீவியக் குறிப்புகள்' எனும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

பெண்ணியச் சிந்தனைகள்

அசலாம்பிகை அம்மையாரின் நெருங்கிய நண்பர்களில் ஒருவராக இருந்தவர் பரிதிமாற் கலைஞர் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார். அம்மையாரின் தந்தை எட்டுமாளையர் காலஞ் சென்றபொழுது, "அவர்கள்பாற் பரிந்து அவர்கள் ஆற்றியிருத்தல் வேண்டி" ஏழு பாடல்களை இயற்றி அனுப்பினார். அவற்றுள் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பாவில் அமைந்த முதற் பாடலில் பெண்ணுரிமை பேணி அம்மையார் வாதிட்டத் திறத்தைப் பின்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

> **மருட்டுவிழி மடவார்த முரிமையெலாம்**
> **மயங்கிப் பேசுங் கவர்ந்துகொடு**
> **திருட்டுமொழி யாளர்தமை வாதித்துப் புறங்காட்டிச்**
> **செலத்தொ லைத்துத்**
> **தெருட்டுரைகள் பலவெழுதித் திகழ**
> **சலாம்பிகையம்மைத் தெரிவை காண்க...**
>
> *(ப.127, பாவலர் விருந்து, 1933, வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார், மதுரை வி.சூ. சுவாமிநாதன் வெளியீடு)*

1. பிறப்பினடியாக ஏற்பட்ட குல ஒழுக்கங்களைப் பெண்கள் தவறாமல் காத்து ஒழுகல் வேண்டும்.

2. பெண்கள் உபாத்தியாயினிகளாகி லௌகிகம் புரிவதும், ஆங்கிலப் பட்டதாரிகளாவதும் தாய்நாட்டிற்கும் தாய்மொழிக்கும் அன்பு செய்யவோ தொண்டு செய்யவோ முடியாமல் தடை செய்வதேயாகும்.

3. நவநவமான நாகரிகங்கள் பலவற்றில் பெண்கள் மூழ்கி நடையுடை பாவனைகளில் மேல்நாட்டினரைப் பின்பற்றுவதில் மிக்க வெறுப்புக் கொள்கிறேன்.

4. பெண்கள் ஆங்கிலம் சுற்பது காலநிலையில் அவசிய மாயினும் தாய்மொழியை ஊன்றிப்படியாமல் ஆங்கிலம் பயில்வது கூடாது.

5. அந்நிய ஆடை, அந்நிய பானை, அந்நிய பானம், அந்நிய நாகரிகம், அந்நிய அலங்காரம், இவைகள் நாட்டை விட்டொழிந்தாலன்றிச் சுயராஜ்ஜியம் வரினும் சரியாக முன்னேற்றம் ஏற்படாது. ஒழுங்கு, கட்டுப்பாடு, தெய்வ பக்தி, ஆசான் இவைகளைப் பெண்கள் மேற்கொள்ளத் தவறி விட்டதே அநர்த்தத்திற்குக் காரணம்.

6. பெண்கள் ஸ்திர புத்தியில்லாதவர்கள் என்பதையும் நான் ஏற்க முடியாது. பால்ய விவாகக் கொடுமைகள் நாட்டை விட்டு வெளியேறிப் பல ஆண்டுகளாய் விட்டன. ருதுமதி விவாகம் சமூகச் சட்டத்தையே நாசம் செய்வதாகும். மதத்தை அவமதித்த இதைவிடச் சிறந்த கருவி வேறில்லை.

7. ருதுவாகுமுன் வைதவ்யம் அடையும் சில கன்னிகைகள் வைதவ்ய விரதங்களுக்கு உட்படக் கூடாது. சமூகம் அதனை அங்கீகரிக்க வேண்டும். அத்தகையோர் பொதுநலத்திற்கும் கல்வி வளர்ச்சிக்கும் பாடுபடக் கூடியவர்களாகத் தக்க பயிற்சி பெறல் வேண்டும். ஒவ்வொரு வகுப்பிலும் இதற்கெனப் பொது நிதி, ஸ்தாபனம் வேண்டும்.

மேற்காணும் அம்மையாரின் பெண்ணியச் சிந்தனைகளில் பல பாரதியாரின் புதுமைப் பெண் எழுச்சிக்கு எதிரானவை.

பெண்கள் பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும் கூடாது எனும் கருத்து மேற்காணும் இரண்டாவது கருத்தில் வெளிப்பட்டுள்ளது. பெண்ணுரிமைக்கு எதிரானது பிறப்பின் அடிப்படையாகக் குல ஒழுக்கங்களைப் பாதுகாக்க வேண்டும் எனும் கருத்தும் ஏற்கத்தக்கதன்று.

ஆறாவது கருத்தில் கூறப்பட்டுள்ள ருதுமதி விவாக சமூகச் சட்ட எதிர்ப்பு முற்றிலும் நிராகரிக்கத்தக்கது. சென்னை சட்ட மன்றத்தில் 1914ஆம் ஆண்டில் நவம்பர் மாதத்தில் பெண் வயதுக்கு வந்த பிறகு திருமணம் செய்து கொண்டால் அது சட்ட

சம்மதமாக்கப்பட வேண்டும் எனும் மசோதாவை மிதவாதக் காங்கிரஸ் பிரமுகரான வி.எஸ். சீனிவாச சாஸ்திரிகள் கொண்டு வந்தார். இந்த மசோதாவிற்கு அக்காலத்தில் "ருதுமதி விவாஹ மசோதா (The Post publicity marriage bill) எனும் பெயர் சூட்டப் பெற்றது.

பெண்ணியச் சிந்தனையின் முற்போக்கிற்கு ஆதாரவான ருதுமதி விவாக சட்டத்தைப் பாரதியார் வரவேற்றுள்ளார். இந்தச் சட்டத்திற்கு மதவாதச் சாயம் பூசப்பட்டு எதிர்ப்பு தெரிவிக்கப் பட்டது. பாரதியாரின் அரசியல் தோழர் சுப்பிரமணிய சிவாவும் இந்து மதப் பழக்கவழக்கங்களுக்கு ஊறு செய்வதாகும் என நினைத்து எதிர்ப்பு தெரிவித்து தமது 'ஞானபாநு' மாத இதழில் '1915 ஜனவரி) தீவிரமாக எழுதினார். ஆயினும் மசோதா, சட்டமாயிற்று.

அம்மையார் ருதுவாகுமுன் விதவைகளாகும் கன்னிகைகளை அலங்கோலப்படுத்துவதை ஏற்கவில்லை. ருதுவான பிறகு ஆகும் விதவைகளுக்கும் 'வைதவ்ய விரதங்கள்' தேவையில்லை என்பதைத் தெளிவுபடுத்தவில்லை. அவர் விதவைக்கோலம் பூணவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. விதவைகள் நலன்களுக்குப் பாடுபட வேண்டும் எனக் கூறியவர், அவர்கள் விரும்பினால் மறுமணம் செய்து கொள்ளலாம் என்று கூறத் தவறிவிட்டார் அம்மையார்.

'மிகை நாடிமிக்க கொளல் வேண்டும்' எனும் நோக்கில் அசலாம்பிகை அம்மையார் சமூகச் சீர்திருத்தத்தில் மிதவாதி யாகவே தம்மை அடையாளங் காட்டிக் கொண்டார். சமூகச் சீர்திருத்த முயற்சிகள் குறித்த அவருடைய பின்வரும் கருத்தும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

> *வைதீக சட்டங்களில் இயக்கத்திற்கு ஒவ்வாத முறைகளை ஏற்காமல் மீறுதல் அவசியம் என்பது என் கொள்கை. சமூகச் சீர்திருத்தங்கள் வகுப்பிலுள்ள அறிஞர்களால் திருத்தப்பட வேண்டுமன்றி மசோதாக்கள் (Bills) பில்லுகள் உற்பத்தி செய்து, அரசியல் சட்டங்களை உண்டு பண்ணி அதனால் சீர்திருத்தம் விளைவிப்பது கூடாது. சட்டங்களினால் ஒருபோதும் சமூகச்சீர்திருத்தம் கால்கொள்ளாது.*

இலக்கியம், சமயம், சமூகம், அரசியல் எனும் பல்வேறு தளங்களில் பண்டிதையாய், கவியரசியாய், படைப்பாளியாய், சொற்பொழிவாளராய்த் தமிழ் மகளிர் வரலாற்றில் அழுத்தமான சுவடுகளைப் பதிப்பித்தவர் அசலாம்பிகை அம்மையார் என்பது வரலாற்றுண்மையாகும். பல்வேறு தமிழ் இதழ்களில் வெளிவந்த அவருடைய கவிதைகள் உரைகள் தொகுக்கப்பெற்று வெளி வருமாயின் அவருடைய ஆளுமையின் பரிமாணங்கள் மேலும் விரியும்.

கவிஞர் அனந்தம்மாள்

தாயம்மாள் அறவாணன்

திருமதி அனந்தம்மாள் 19-20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கத்தோலிக்கக் கிறித்துவப் பெண் கவிஞர். தஞ்சைப் பெரும் பண்ணையூரில் (அன்றைய ஆவணங்களில் பெரும்பன்றியூர், பெரும்பண்ணியூர் என்றே அமைந்துள்ளது) கனவான் திரு. சின்னுடையார் மகளாகப் பிறந்து, இலந்தவனஞ்சேரி திரு. அப்பாசாமி உடையார் மனைவியாக வாழ்ந்து வட இந்தியா அசாமில் முசபர்ப்பூரில் மரணமானவர். அவர் எழுதிய கவிதைகள் மிகப்பல. அவற்றுள் தேர்ந்தவற்றையே தொகுத்து வழங்கியுள்ளனர். அவை 396க்கும் மேலான கவிதைகள், 562 பக்க நூலாகத் 'திருமதி அனந்தம்மாள் பாடல்கள்' என்று அச்சாகி வெளியிடப்பட்டுள்ளன. கவிஞர் இறந்து பத்தாண்டுகளுக்குப் பின் அவர் எழுதியவை நூலாக வெளிவந்துள்ளன.

கவிஞர் அனந்தம்மாள் 1863 சனவரியில் பிறந்தார். 1923 ஏப்ரல் 17ஆம் நாள் சாதனைகள் பல செய்து தம் வாழ்வில் நிறைந்தார். அறுபது வயது வரை இக்கவிஞர் வாழ்ந்தார்.

இவர் கணவர் நூறு வேலி நிலமுடைய பெரிய மிராசுதாரர். அவருக்கு இரண்டு பெண் குழந்தைகள். ஒருவர் பெயர் குழந்தையம்மாள். மற்றொருவர் பெயர் செல்வராஜாம்பாள். குழந்தையம்மாளை மருத்துவர் சபாஸ்டியன் திருச்செல்வன் என்பவருக்குத் திருமணம் செய்து கொடுத்தார். செபாஸ்டியனின் தம்பியே திருவாரூர் ஏடி. பன்னீர்செல்வம் என்ற புகழ்மிக்க திராவிட இயக்கத்தவர் ஆவார். குழந்தையம்மாளின் தங்கையைப் பொறியாளர் ஒருவருக்குத் திருமணம் செய்து கொடுத்தனர். அவர் ஏற்கெனவே முதல் மனைவியை உடையவராக இருந்திருக்கிறார். ஜாம்செட்பூருக்குச் சென்ற பின்னரே இதனை அறிந்த அனந்தம்மாளின் இரண்டாம் மகள் அவரோடு மணமுறிவு பூண்டு திருவாரூருக்குத் திரும்பி விட்டார். குழந்தையம்மாள் கணவர் கண் மருத்துவர். அசாமில் மருத்துவப் பணி புரிந்தார். குழந்தையம்மாளுக்கும் குழந்தை இல்லை. அவர் தங்கையின் வாழ்வும் ஏமாற்றப்பட்ட வாழ்வு. ஆகவே நூறு வேலி

நிலமுடைய அனந்தம்மாளும் அவர் பெண் குழந்தைகளும் அறக்கட்டளை ஒன்றை நிறுவினர். முதியோர் இல்லம் அமைத்துத் தம் சொத்து முழுமையையும் அதைப் பராமரிக்க எழுதிக் கொடுத்தனர் என்ற செய்தி திருவாரூரில் மார்ட்டின் செல்வம் என்பவரும் முதியோர் இல்லக் கண்காணிப்பாளர் சின்னம்மாளும் என் களப்பணியில் கூறினர். அவரை அறிமுகப்படுத்தியவர் அருள்தந்தை அமுதன் அடிகள் ஆவார். அவருக்கும் சிவகங்கை கத்தோலிக்க மறைமாவட்ட ஆண்டவர் சூசை மாணிக்கம் அடிகளாருக்கும் கட்டுரையாளரின் நன்றி.

கவிஞர் அனந்தம்மாள் இயற்கையாகவே கவிதை இயற்றும் ஆற்றலும் சரமாரியாக எழுதிக் குவிக்கும் திறனும் வாய்க்கப் பெற்றிருந்தார். தம் வாழ்நாள் முழுமையும் எழுதிய கவிதைகள் பல. கேட்போரைப் பிணிக்கும் பாடும் குரல் வளமும் இசை நுணுக்கத்துடன் பாடும் பேராற்றலும் உடையவராக இருந்தார்.

இவர் படைத்த கவிதையின் பாடுபொருள்கள்

இயேசு பெருமான், மாதா மரியன்னை, தேவதூதர், பெரியோர், இருபெண்கள், தாய் தந்தை, பழமொழிகள், உலக அனுபவ மெய்ஞ்ஞானம், கதைக் கவிதை, பேழை என்று பல கோணங்களில் இவர் கவிதை படைத்துள்ளார். அனந்தம்மாள் எழுதிய பாடல்கள் பல பதிவு செய்யப் பெறாமலேயே போயின. பல காற்றில் கலந்தன. பல படி எடுக்காமல் அழிந்தன. நண்பர்கள் கைவசம் சென்று மீளாமல் முடிந்தன. எஞ்சிய பாடல்கள் மட்டும் தொகுக்கப் பெற்று வகைப்படுத்தப் பெற்று 'ஸ்ரீமதி அனந்தம்மாள் பாடல்கள்' என்று பெயர் சூட்டப்பெற்று 1933ஆம் ஆண்டு வெளியிடப் பெற்றன; கவிஞர் இறப்பை ஒட்டி 10ஆம் ஆண்டு நினைவாக அச்சிடப் பெற்றன. அப்பாடல்கள் பத்துப் பிரிவுகளாக வகைப்படுத்தப் பெற்றுள்ளன. அவை வருமாறு:

முதல் பிரிவு குழந்தை இயேசுவின் பேரில் பாடல்கள்
17 தலைப்புகள்

2ஆம் பிரிவு தேவன் பேரில் பாடல்கள்
30 தலைப்புகள்

3ஆம் பிரிவு தேவமாதா பேரில் பாடல்கள்
33 தலைப்புகள்

4ஆம் பிரிவு சில அரியோர் பெரியோர்களைப் பற்றிய பாடல்கள்
22 தலைப்புகள்

5ஆம் பிரிவு ஹிதோப தேசப் பாடல்கள்
47 தலைப்புகள்

6ஆம் பிரிவு பிரதாபப் பாடல்கள்
148 தலைப்புகள்

7ஆம் பிரிவு தனநாசன் என்னும் சந்திரகாசன் விலாசம் பாடல்கள்

8ஆம் பிரிவு நோவா பேழையும் வேடிக்கைப் பாடல்களும்

9ஆம் பிரிவு மெய்ஞ்ஞானக் கும்மிப் பாடல்கள்

10ஆம் பிரிவு பழமொழி மாலை

மொத்தம் 562 பக்கங்களைக் கொண்டது இந்நூல். அதுவும் வாழ்நாள் முழுமையும் எழுதப்பட்ட பாடல்கள் முழுதும் அச்சிடப்படவில்லை. கவிஞர் அனந்தம்மாள் நினைவாகக் கும்பகோணம் மேற்றிராசனச் சுதேசக் குருக்களில் ஒருவராகிய காலஞ்சென்ற எஸ். அலோஸ்சியூஸ் சுவாமியவர்களால் பார்வையிடப்பட்டு அங்கீகாரம் செய்யப்பெற்றவை இந்நூலிலுள்ள பாடல்கள் ஆகும். இந்த அடிகளாரும் ஒரு கவிஞர். இவர் எழுதிய கவிதைக்கு அனந்தம்மாள் மெட்டு அமைத்துப் பாடியதாகக் குறிப்பு (ப. 72) நூலுள் காணப்படுகிறது.

கவிஞர் அனந்தம்மாள் கவிதையின் யாப்பு அமைப்பு

கவிஞர் இலக்கிய இலக்கண நூற்புலமை மிக்கவர். யாப்பிலக்கணம் நன்றாகக் கற்றுத் துறைபோயவர். எனவே மரபு வழியாகிய யாப்பு வழியில் வடித்துள்ளார். அவை வெண்பா, ஆசிரியப்பா, விருத்தப்பா, கலிப்பா, வஞ்சிப்பா மற்றும் கண்ணிகள், இயைபுத் தொடை நயம் நிறைந்தவையாகக் காணப்படுகின்றன. கல்வி கற்ற புலவர் நலம் நிரம்பிய கவிதைகளாகவும் சொல்லாளுமை மிக்கனவாயும் உயர்ந்த செந்தமிழ் மொழிப்புலமை மிக்கனவாயும் காணப்படுகின்றன. இலக்கணப் புலமை மிக்காரே இக்கவிஞர் என்று கூறும் வண்ணம் கவிதை யாப்பு (ப. 40, 41, 56, 58, 390) அமைந்துள்ளது.

தந்தைதாய்ப் பேணென்று தாரணியி லவ்வையார்
எந்தவிதஞ் சாற்றினா ளிந்தநூல் சொந்தமுறும்
மக்களைப் பேணார்க்கோ மனத்தி லன்பிலார்க்கோ
அக்கறையாய்ச் சொன்னா ளது (ப. 256)

எனும் வெண்பா சான்றாகும்.

இராகம், தாளம், பல்லவி, சரணம்

கவிஞர் கவிதைகளை இயற்றியும் அவற்றிற்கு இன்ன தாளம், இன்ன இராகம் என்று பெயரிட்டும் பல்லவி, அனுபல்லவி, சரணம் என அமைத்தும் தாமே இசைத்தவர் என்பன தெரிய வருகின்றன. காம்போதி, கல்யாணி, செஞ்சுருட்டி, தோடி, சங்கராபரணம், சுருட்டி, ஆரபி, பியாகு, இந்துஸ்தானி, கமாஸ், தோடி, எதுக்குல காம்போதி, கவாய்தோடி, அமீர்கல்யாணி, மோகனம், துசாவந்தி, ஆனந்தபைரவி, புன்னாகவராளி, காவேரி, துவாவந்தி, நாதநாமக்கிரிகை, உசேனி, காப்பி, கரகரப்பிரியா, கனடா, முகாரி, பந்துவராளி, பைரவி, கமால், சாமா என்று பல இராகங்கள் ஒவ்வொரு கவிதையின் முகப்பிலும் குறிக்கப் பட்டுள்ளன. அதேபோல் தாளங்களில், ஆதி, சாப்பு, பிசரம், சதுரசாதி, ஏகம், மிசர ஏகம், திசரம் எனப் பல பெயர்களை எழுதி இராகம், தாளம், பல்லவி, அனுபல்லவி, சரணம் என்று அமைத் தமையால் இவர் இசைத்துறையில் வல்லவர் என அறியப்படுகிறது.

மெட்டு

ஒவ்வொரு பாடலின் மேலே இது இன்ன மெட்டு என்று சுட்டியிருப்பார். சான்று: வண்டுவார்குழலி என்னும் வர்ணமெட்டு, நேத்து ராத்திரி வந்த பெண் வீடு என்னும் வர்ண மெட்டு, சத்தி பரா சத்தி முத்தி காந்திய சொரூபி என்னும் வர்ண மெட்டு என்று மெட்டுப்போட்டு எழுதிய கவிஞரின் இசை மேதமைத்தன்மை நன்றாகப் புலப்படுகிறது. சான்று:

> சங். அலோசியூஸ் சுவாமிகளால் இயற்றப்பட்டு
> அனந்தம்மாளால் மேற்றிராணியார் முன் பாடப்பட்டது.

அனந்தம்மாள் உறுதிப்பூசுதல் பெற்ற போது 1873ஆம் ஆண்டு மிகவும் சங்கைக்குரிய லவுயேனான் மேற்றிராணியார் பேரில் இசையாகப் பாடின பாடல் சுட்டத்தக்கது (ப. 72).

முத்தமிழ்ப் புலமை மிக்கவர் கவிஞர்

கவிதை எழுதி உருவாக்கும் ஆற்றலும், மெட்டு அமைத்துப் பாடும் இசைத்துறை நுணுக்கமும் கொண்டதோடு நாடக நயம் தோன்றும் வண்ணம் உரையாடல் பாணியில் கவிதைகளைப் படைக்கும் ஆற்றலும் பெற்றவர் அனந்தம்மாள். சான்று:

> தனநாசன் எனும் சந்திரகாசன் விலாசம் (ப. 261)
>
> ஆதாம் ஏவாள் விலாசம் (ப. 123)

லூசிபேய்: ஏவை எனும் பெண்ணரசே இந்த மரக்கனி - வெகு
இலங்கி மிகத் துலங்கியிருக்க ஏன் புசிப்பதில்லை
நாவுக்கேற்ற ருசிகரமான நல்ல கனியிதே - இது
நன்மையுள்ள சீவகனி தின்னும் பெண்ணரசே

ஏவை: தின்பீரானால் சாவீரென்று தேவன் நீக்கி வைத்தார் - அதைத்
தீண்ட வொண்ணாதென்று எங்கள் தேவன் சொன்னாரே
இன்று வரையில் நாங்கள் இருபேரும் தின்னோம் - எங்கள்
ஏகநாதன் புசிக்க விடை தரவு மில்லையே.
- ஆதாம் ஏவாள் விலாச கண்ணிகள்

கத்தோலிக்க அடிகளாரைப் போற்றுதல்

சில அரியோர், பெரியோர்களைப் பற்றிய பாடல்களை அனந்தம்மாள் இயற்றியுள்ளார். அவர் பல குருமார்களைக் கவிதையில் போற்றியுள்ளார். கவிதையில் போற்றப் பெற்றோர் வருமாறு:

1. 13ஆம் சிங்கராயர் பேரில் பாடியது (ப. 71)
2. லவுயேனான் மேற்றிராணியார் பேரில் பாடினது
3. காந்தி மேற்றிராணியார் பேரில் பாடினது (ப. 73)
4. அலோயிசியுஸ் சுவாமிகள் என்னும் தத்தா சுவாமியைப் பற்றிப் பாடின பாடல் (பக். 74, 75)
5. எச்.எம்.பொத்தேரோமேற்றிராணியார் பேரில் பாடியது (ப. 78)
6. பிரகாச நாத சுவாமியார் பேரில் பாடியது (பக். 80, 81)
7. அகுஸ்தீன் ஷப்புயி மேற்றிராணியார் பேரில் பாடியது (ப. 82)

மேலே சுட்டப்பட்ட அடிகளார் அத்தனைப் பேரையும் அருமையான சவிதை வரிகளில் விளக்கி எழுதிய பாடல்கள் நன்றிப் பெருக்கில் நயம்பட எழுதப் பெற்றவை. அடியார்கள் தேவதூதர்களாகவும், மக்களுக்காகச் சேவை செய்வதற்காகவும் அவதரித்துள்ளனர் என்று சுட்டியுள்ளார் அனந்தம்மாள்.

ரிப்பன் பிரபு பேரில் பாடல்

நம் நாட்டை ஆண்ட வெள்ளைக்காரர்களில் இராஜ பிரதிநிதியாக இருந்து இந்திய அரசை ஆண்ட கவர்னர் ஜெனரல் ரிப்பன் பிரபுவைக் கவிதையால் (ப. 83) போற்றியுள்ளார்.

பல்லவி

ரிப்பன் ரிப்பன் கவர்னர்தனை நினைத்தால்
எவர்க்கும் ஆனந்தமே
ஓப்பில்லாத திரு மரியருளால் உதித்த
ரிப்பன் வதனமதைச்
சொப்பனத்திலும் காண்போமேயானால்
சொல்லரிதான நன்மையுறும்

சரணங்கள்

பாலர் பாடசாலைகளும் பலவிதப் பாஷை
அச்சுக்கூடங்களும்
வாலர்க் கல்விச் சாலைகளும் வைத்திய சாஸ்திரக்
கூடங்களும்
சீலமுடன் நடத்திவந்த செல்வச் சீமான் துரையவரை-
ஞாலமதனில் புகழ்ந் தேற்ற நாடி வாருங்கள் நண்பர்களே

அனந்தம்மாள் ஏமாந்த வரலாறு

நூலில் உள்ளபடி இவ்வரலாறு பின்வருமாறு அமைகிறது. அச்சுக்குப் போனவை அச்சாகாமல் திரும்பிய வரலாற்றை அடிகளார் அழகாகச் சொல்லுகிறார் (பக். 86-88).

15-9-1913 ஞாயிறு அன்று புதுவை வித்துவான் ஸ்ரீமான் பாப்பு நாயுடுகார் பெரும்பண்ணியூருக்கு வந்திருந்த காலை அவர் பாடிய ஆனிய பாடல்களைச் செவியுற்றிருந்த ஸ்ரீமதி அனந்தம்மாள் அவருக்குச் சாற்றுக்கவியாக விருத்தம் பாடிச் சாற்றினாள். அதைக்கொண்டு ஸ்ரீமதி அனந்தம்மாளின் கவித் திறமையை உணர்ந்து கொண்ட மேற்படி நாயுடுகார் அனந்தம்மாள் இல்லிடம் தேடிச் சென்று அவள் இயற்றிய பாடல்களைப் பார்வையிட்டுப் பேராச்சரியமுற்று, அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம் பாடி, அனந்தம்மாளுக்கு 29-9-1913 ஞாயிறு சாற்றுக் கவியாகச் சாற்றினார். அதன்பின் தான் புதுவையில் அச்சாபீசில் ஏதோ வேலையிருப்பதாகவும், இந்தப் பாடல்களை யெல்லாம் அச்சியற்றித் தருவதாயும், அச்சிடச் செலவு ரூபாய் 20 போதுமென்றுஞ் சொல்லி முன்பணமாக ரூபாய் 12 பெற்றுக் கொண்டு, ஸ்ரீமதி அனந்தம்மாளியற்றிய பாடல்களடங்கிய

கையெழுத்துப் புத்தகங்களைப் பொறுக்கி யெடுத்துக் கொண்டு, அதிசீக்கிரத்தில் அச்சியற்றித் தருவதாய் உறுதிமொழி கூறி, புதுவைக்குச் சென்ற நாயுடுகார் வாளாவிருந்து விட்டார். அவரது சாதுரிய வார்த்தைகளை முற்றும் நம்பிய அனந்தம்மாள் தனது பாடல்கள் அச்சு வாகன மீதேறி அதி தீவிரமாய்த் திரும்பி வருமென்றெண்ணி ஆவலாய் எதிர்பார்த்திருந்தாள். நாயுடுகார் பதில் போடாமல் சில வருஷங்கள் கடத்திவிட்டார். இனி பாட்டுப் புத்தகங்களாவது பணமாவது திரும்பி வருமென்னும் நம்பிக்கையும் அற்றுப் போய்விட்டது. அனந்தம்மாளின் மனம் சலனப்படலானது. இவ்வாறு தன் பாடல்களைப் பறிகொடுத்துவிட்டுப் பரிதவித்திருந்த சமயம் அனந்தம்மாளுடைய சகோதரருக்கு நண்பரான நாகை மாஜி மஜுராக்கம்பேனி மானேஜராகிய ஸ்ரீமான் வரப்பிரசாதம் பிள்ளை என்பவர் 1916 ஹூ அனந்தம்மாளைப் பார்க்க இலந்தவனஞ்சேரிக்கு வந்தார். அவரிடம் பாப்பு நாயுடுகார் செய்த மோசத்தைச் சொல்லியபோது அவர் புதுவை வாசியானபடியால் தான் பாட்டுப் புத்தங்களை மீட்டுத் தருவதாக உடன்பட்டார். என்றாலும், நாயுடுகார் மேற்படி புத்தகங்களைத் திருப்பிக் கொடுக்க மனமின்றி அப்புத்தகங்களிலிருந்து மிக அருமையான பொதுப் பாடல்களை ஏடு ஏடாய்ப் பிய்த்து எடுத்துக்கொண்டு புத்தகங்களை அங்கீனமாக்கி ஸ்ரீமான் வரப்பிரசாதம் பிள்ளையின் கட்டாயத்தின் பேரில் திரும்பக் கொடுத்தார். அச்சு விமானமேறி அழகாக ஊருக்குத் திரும்பி வரலாமென்று எண்ணமிட்டுக் கொண்டு குதூகலத்துடன் புதுவைமா நகரஞ் சென்ற பாட்டுப் புத்தகங்கள், ஏட்டைப் பறிகொடுத்துவிட்டு, ஏங்கியழுது கொண்டு, சிறகிழந்த பறவையாய் ஸ்ரீமான் வரப்பிரசாதம் பிள்ளையின் பிரயாசையால் சிறை வாசத்திலிருந்து மீட்கப்பட்டு, தன் பிறந்த அகம் திரும்பி வந்து சேர்ந்தன. காணாமற்போன சேயைக் கண்ட தாயைப்போல அனந்தம்மாள் அதி ஆவலுடன்

புத்தகங்களை வரவேற்று உற்றுப் பார்த்தபோது இதழ்கள் கிழிக்கப்பட்டிருந்த மர்மம் தெரியலானது. இவ்வாறு சீரழிந்து மெலிந்து, குற்றுயிராய்த் திரும்பிவந்த பாடல்கள் எல்லாம் 1916 ஜூல அனந்தம்மாளால் முற்றும் பழுது பார்க்கப்பட்டுப் பெயர்த்து எழுதப்பட்டுப் புத்துயிரடைந்தது.

அனந்தம்மாள் இயற்றியவை

தனநாசன் என்னும் சந்திரகாசன் விலாசம் (பக். 261–298)

அக்கிமபுரியை ஆண்ட அதர்மராஜன் தன் பிள்ளையான சந்திரகாசனை வெறுத்து மந்திரியிடம் கூறுகிறான். மந்திரி குரூரதாசன் என்பவன், அரசனிடம் அரசகுமாரனைக் கொன்று விடுங்கள். 'இக்கணம் அவனுயிரை எமலோகம் அனுப்பலாமே' என்று தீய வழி கூறுகிறான். ஆனால் அரசன் 'தனையனைக் கொன்றான் என்று தரணி யேசும் என்னை' என்று மந்திரியிடம் தன் மகனைக் கொல்வதில் தயக்கம் காட்ட, கொடிய மந்திரி அரசன் மகனைக் கொல்லத் துணிகிறான். இல்லத்தில் வைத்தே தீயை மூட்ட குரூரதாசன் ஒருவனிடம் கூற அவனும் தீ மூட்டினான். ஆனால் அரசகுமரன் தப்பிக்கிறான்.

தாய் புலம்புகிறாள்; செவிலித்தாய் வருந்துகிறாள். பின் சந்திரகாசன் அந்தணர் உணவு கொடுக்க உண்டு சோலையில் விளையாடுகிறான். அவனைக் கொலைஞன் ஒருவன் கொல்ல வருகிறான். அக்கொலைஞனிடம் சந்திரகாசன் நல்ல உபதேச மொழிகளை உரைக்கிறான்.

எஞ்சிய பகுதியை அனந்தம்மாள் எழுதி முடிக்கவில்லை. சந்திரகாசன் சரித்திரக் கதை முற்றும் முடிக்கும்முன் அனந்தம்மாள் வியாதியாய் விழுந்துவிட்டாள். கதைக்கவிதை முடிக்காமல் போய்விட்டது (ப. 298).

நாட்டாருக்கும் நகரத்தாருக்கும் வாக்குவாத உரையாடல்

கிராமத்திலுள்ளாரும் நகரத்தில் உள்ளாரும் உரையாடுவதைப் போல் பெரிய கவிதை (பக். 375-377) எழுதிய அனந்தம்மாளின் திறன் வியக்க வைக்கிறது. பாடல் பகுதி வருமாறு:

நாட்டாரே நாட்டாரே நாகரிகம் உமக்குண்டோ
மாட்டை கட்டியடித்து மண்ணை உழுதுண்பீர்
கோட்டு வாசல் அறியீர் கோமானார் வீடறியீர்
ஆட்டபாட்டம் அறியீர் அங்காடி வீதி அறியீர்

பாட்டுக் கச்சேரி வைத்துப் பாடமாட்டீர் ஆடமாட்டீர்
வீட்டுக்கு வீடு விருந்துண்டு வெறிஏறி
மாட்டை அடித்து மகத்தான விருந்துண்பீர்

* * *

நகரவாசியே கேளும் நாட்டார்க்கென்ன தெரியும்
எத்தொழிலுக்கும் ஆதி ஏரின் தொழிலாக
அத்தன் கொடுத்திருக்க அறியாமல் பேசுவதேன்
ஏருழவு தொழில்தான் எல்லோருக்கும் அன்னமிடும்
ஏராளமான இறை வரிகள் தான் கொடுக்கும்
எள்ளு விளைந்து வரும் எழிலான எண்ணெய் ஆகும்
கொள்ளு விளைந்து வரும் குதிரைக்குத் தீனியாகும்
அவரை விளைந்து வரும் அமுத கறியாகும்
துவரை விளைந்து வரும் தூய கறியாகும்
முட்டாள் குணவாதம் கட்டையோடுதான் போகும்
கெட்டு நலிந்தாலும் பட்டணத்துப் போக்கிரிகள்
முட்டாள் கேள்வி கேட்க முன்னே வந்து நிற்பார்கள்
பட்டணத்துக் கருவ மெல்லாம் பதமற்ற கருமம் ஆச்சே

நோவா பேழை

நோவா என்பவர் முதல் பிரளய யுகத்தில் அழிந்துவிடும் உலகையும் உலகப் பொருள்களையும் காப்பாற்ற எண்ணினார். ஜெருசல நாட்டு மக்களுக்காக விலங்கு, பறவை, பொருட்கள் யாவற்றையும் காப்பாற்ற ஒரு பேழை செய்தார். கடல் அளவுள்ள பெரிய கப்பலில் பொருள்கள் நிறைந்து உள்ளன. பொருள்களின் பட்டியலை அடுக்கிக்கொண்டே செல்கிறார் கவிஞர். ஒவ்வொரு பொருளுக்கும் இரண்டு பக்கக் கவிதையில் பொருள்களின் பெயர்கள் சரவெடிபோல அடுக்கடுக்காக அமைக்கப் பெற்ற நயம் வியந்து போற்றுதற்குரியது. 'தான மிகு நோவையது கப்பல் விவரம்' என்று மரவகைகள், விலங்கினங்கள், பறவைகள், மீன் வகைகள், வித்துக்கள், மணப் பொருள்கள், உணவு வகைகள், நகைகள், எண்ணெய் வகைகள், வீட்டு உபயோக மரச்சாமான்கள், சரக்குகள் எனப் பொருள்களை அடுக்கிக் கொண்டே அமைத்துள்ளார் (பக். 299-326) அனந்தம்மாள். சான்று:

அத்தி ஆல் புங்கு புளி பூவரசு நெல்லி
ஆச்சா கருங்காலி குங்குமம் கொன்றை
முற்றின சண்பகம் சந்தனம் கோங்கு
மூங்கிற் கூந்தற்பனை தேங்கு சாதிக்காய்

விரைந்து விரைந்து அணியாய் மிகுந்து வரும் விலங்கினங் களையும் சுட்டுகிறார். பாம்பு வகைகளின் பெயர்களாக எண்பதுக்கும் மேல் குறிப்பிடுகிறார். பூச்சிகளில் நாற்பதுக்கும் மேலான வகைகளை எழுதுகிறார். வண்டு வகைகளின் பெயர்கள் வியக்க வைக்கின்றன. மீன் வகைகளின் பெயர்களை ஆசிரியர் எங்கிருந்து தெரிந்து கொண்டார் என்பதில் பெரும் வியப்பு மேலிடுகிறது. நவதானியப் பெயர்களும், நெல் வகைகளின் பெயர்களும், வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

சங்க இலக்கியப் பத்துப்பாட்டான குறிஞ்சிப்பாட்டில் கபிலர் 96 வகைப் பூக்களை அடுக்கடுக்காகக் கூறுவார். அதன் சாயலை அனந்தம்மாள் கவிதையில் காணமுடிகிறது. ஆற்றலும் இலக்கியப் பயிற்சியும், புலமையும் மிக்கோராலேயே இவ்வகையில் எழுத இயலும். அந்த வகையில் அனந்தம்மாள் மாபெருங் கவிஞர் என்பதில் ஐயமில்லை. திருவள்ளுவர், ஔவை, கம்பர் என்று இலக்கிய முன்னோர்களைப் பொன்னே போல் தம் கவிதைகளில் போற்றியுள்ளார் அனந்தம்மாள்.

சாற்றுக்கவி

ஒரு கவிஞர் எழுதிய கவிதையைப் பாராட்டி ஆண் கவிஞர்கள் பலர் எழுதிய அணிந்துரைக் கவிதைகள் பல தமிழிலக்கியங்களில் உள்ளன. ஆனால் பெண்களையும் போற்றி ஏற்றும் மரபு பிற்காலத்தில் தோன்றியது எனலாம். பெண்கள் ஆண்கள் எழுதிய நூலைப் போற்றுவது ஒன்று; மற்றொன்று பெண்கள் எழுதிய கவிதையைப் போற்றிப் பாடுவது. சோழவள நாட்டில் கம்பர் தாம் எழுதிய நூலை அரசவையில் அரங்கேற்றம் செய்ய விழைந்தபோது குலோத்துங்க சோழன் மிகக் கற்ற தாசிப்பெண் ஒருத்தியிடம் சாற்றுக்கவி எழுதிவரக் கம்பரிடம் சொன்னதாகக் கதை வழங்குகிறது. இன்னொரு செய்தி தனிப்பாடல் திரட்டு நூல் வழி அறியப்படுகிறது. அதாவது 19ஆம் நூற்றாண்டில் மனுச் சோழ சக்கரவர்த்தி வாசகப்பா என்னும் நூலை எழுதிய திரு. நாராயண சாமிக்குத் தாசி பெரியகுப்பு என்பவர் சாற்றுக்கவி பாடினார்.

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அனந்தம்மாள் திரு. பாப்புநாயுடுகார் நூலுக்கும், செண்பகக் கொல்லை திரு. சௌந்திரராஜ உடையார் நூலுக்கும் (பக். 84, 85) போற்றி ஏற்றிய சாற்றுக் கவிதைகள் போற்றத்தக்கவை.

பண்டிதை மனோன்மணி அம்மையார் அசலாம்பிகை அம்மையார் எழுதிய திருவாமாத்தூர் திரிபு அந்தாதி என்ற

நூலைப் போற்றிப் பாடிய கவிதை அந்நூலுள் காணப்படுகிறது. அசலாம்பிகையின் அக்கா உருக்குமணி தம் தங்கையின் நூலான திருவிடையூர்த் தலபுராணம் என்ற நூலுக்குச் சாற்றுக்கவி தந்துரைத்துள்ளார்.

25-09-1913ஆம் ஆண்டு பாப்பு நாயுடுகாருக்கு அனந்தம்மாள் சாற்றிய சாற்றுக்கவி (ப. 88):

நாவலர் புகழும் பாப்பு நாயுடுகாரு ரைத்த
பாவளம் சீர்கற்கண்டு பதஉரை அதிரசந்தேன்
கேவலம் கல்லாநாரி கேட்டகமகிழா வண்ணம்
மேவலன் போல்பரிதி மேற்றிசைக் கேகினானே

இப்பாடல் போல் மொத்தம் நான்கு விருத்தப் பாடல்களில் சாற்றுக்கவி பாடியுள்ளார்.

29-09-1913ஆம் ஆண்டு ஸ்ரீமதி அனந்தம்மாளுக்குப் புதுவை வித்துவான் ஸ்ரீமான் பாப்பு நாயுடுகார் சாற்றிய சாற்றுக் கவிகளில் அனந்தம்மாளின் கவிதை ஆற்றலையும் இசை நுணுக்கத்தையும் சிறப்பித்துச் சொல்லுகிறார். சின்னுடையார், அப்பாசாமி என இருவரையும் சுட்டுகிறார். கிறித்துவ மறைகளை நன்கு உணர்ந்த நடுவுநிலை தவறாத நீதிமணி அலோசியு சந்தணர் அவர்களால் அனந்தம்மாள் இலக்கியக் கலையை ஆய்ந்தார் எனக் கவிதையில் குறிப்படுகிறார் (பக். 88-89) பாப்புநாயுடு.

பொற்றிரளா மணிகொழிக்கு மெழிற்பண்ணை
பதிவியக்கும் பூமான்சின்னு
நற்றிரளாந் தனத்தாளர் கண்ணேறு முரம்புரமால்
நயபொற் றேகன்
கற்றிரளிற் கனமணியாங் கனதனவப்பாசாமி
கலைஞ னுக்கிங்
குற்றவரு ளனந்தளே! நீயுலகின் மேன்மேலு
முயர்ந்து நிற்க!

துங்கமரி யடிவருடித் துதிக்குமா நந்தமெனுந்
தோகை நீதான்
பங்கமணி பல்லிடும்பு பற்பிணிகளோய செல்வம்
பரவ வின்ன
மெங்கணுமுன் மான்மியங்க ளெதிரொலிபோ
லிலங்கிடவு மெந்தையேசு
மங்களவாழ் வளித்திடுவர் வையத்தி னீமேலும்
வாழ்க! வாழ்க!

என்பன சான்றுகள்.

நகைச்சுவைப் பாடல்

அனந்தம்மாள் பெரும்பண்ணையூர்ப் பெண்களைக் கேலி செய்து பாடிய பாடல் (ப. 257) சுவையானது.

கரும்பு கசக்கும் காஞ்சிரங்காய் இனிக்கும்
இரும்பை எலிதின்னு மென்றியம்பும் – பெரும்பன்றியூர்
பெண்டுகளைப் போல பேய்மிரட்டி யெங்குநான்
கண்டதில்லை கேட்டதில்லை காண் (ஆறாம் பிரிவு)

இதே போல மணமகனைக் கேலி செய்து பாடிய கேலிப் பாடல்களும் இந்நூலுள் உள்ளன.

பெற்றோர் பற்றிய செய்தி

கவிஞர் தம் பெற்றோரைத் தம் கவிதைகளில் பல இடங்களில் சுட்டுகிறார். தந்தை பெயரையும் அவர் பெரும் கனவான் என்பதையும், மாதாபிதா மடிந்துவிட்டதையும், அத்துயரம் பொறுக்க இயலாமல் அலறித் துடித்து அழுவதையும் இவர் கவிதைகளில் பார்க்க முடிகிறது.

செல்வச் சீர்தழைத் தோங்குஞ் சின்னு
பூபனிடத்தில் செனித்திடவுஞ் செய்தீரே
பொல்லார்க்கு அடிமையாகப் போ என்று எழுதி
என்னைப்
பூமியிற் பிறந்திட சாமிநீர் விதித்தீரே
நல்ல தந்தையரிடஞ் செல்வப் பந்தனையா
நான் வளர்ந்திடச் செய்தீரே
தனவானும் கனவானும் தந்தையால்
அமைந்திட்ட தயவதை மறந்தீரோ (ஆறாம் பிரிவு - 7)

இவ்வாறு இறைவனிடம் கேட்பது போல் தம் தந்தை பெரும் சிறப்பு உடையவராக இருந்ததாகப் போற்றி ஏற்றுகிறார். தாயும் தந்தையும் இறந்துவிட்டதை எண்ணி வருந்திக் கவிதை படைத்துள்ளார் கவிஞர்.

தந்தை தாயாரும் இல்லை தனயனும் எனக்கில்லை
தக்க சோதர ரில்லை தலைவரோ பெருந்தொல்லை
(ஆறாம் பிரிவு - 27)

ஐயோ அனுதினமும் ஆகுலம் நேருதே
ஆதாரமான எந்தன் மாதாபிதா மடிந்தார்
(ஆறாம் பிரிவு - 40)

தந்தைதாய் எனக்கில்லையே தகுந்த ஜனம்
தனமும் இனமும் இல்லையே (ஆறாம் பிரிவு - 43)

தந்தை பெரும் பணக்காரர் என்றும் பெரும் நிலங்களை மகளுக்கு அளித்துள்ளார் என்றும், அவற்றைப் பலர் அபகரித்து விட்டனர் என்றும் கவிதை வழி அறிகிறோம்.

தந்தை அளித்த பூமியை அபகரித்துத்
தாங்கொண்ணாத் தீங்கு செய்தும்

என்ற அடிகளால் மேற்சொன்ன செய்திகள் தெரியவருகின்றன. பெற்றோர் இக்கவிஞரைக் கைவிட்டனரோ என்ற ஐயம் சில பாடல்களில் தோன்றுகிறது.

தந்தை தாய் கைவிடுத்தார் இன
பந்துக்கள் சண்டை தொடுத்தார் (ஆறாம் பிரிவு - 3)

எந்தைதாய் இழந்ததன்றி இளையோனைத் தானிழந்து
சிந்தையும் உருகிவாடி சிரங்கவிழ்ந் திருக்கும்போது
சுந்தரமான எந்தன் சோபன மகளை நீக்கி
அந்தரப் பறவைபோல அகமதி லிருக்கப் போமோ
(ஆறாம் பிரிவு - 76)

என்ற பாடலில் தாய், தந்தை, தம்பி இவர்களை இழந்ததோடு தன் மகளையும் நீங்கி இருப்பதாகக் கவிஞர் வேதனைப்படுகிறார். நல்ல விருத்த யாப்பில் கவிதை புனையும் ஆற்றல் பெற்றவர் என்பதற்கு இப்பாடல் சான்றாகும்.

கவிஞர் தம்மைப் பெற்ற தாய் மாண்டபோது அவலம் பொங்கிப் பாடிய பாடல் வருமாறு:

தாயே உன்றனைப் பிரிந்து தனித்திருக்க
தகுந்த கால மிதல்லவே – அம்மா
நேய இனமானாலும் தாய்போ லெமக்காவாரோ
நீணிலத்தின் வளமை யானறியே னம்மா (தாயே)

அம்மா அம்மணி யென்றே அனுதினம்
ஆரை அழைத்திடுவோம் அம்மா
நேய இனமானாலும் தாய்போ லெமக்காவாரோ
நீணிலத்தின் வளமை யானறியே னம்மா (தாயே)
(ஆறாம் பிரிவு - 56)

தம்பி மீது பற்றுதல் உடையவர் கவிஞர். ஏனைய சகோதரர்கள் கவிஞருக்குத் துன்பம் விளைவித்துள்ளனர் என்பதைச் சில கவிதைகள் புலப்படுத்துகின்றன. 'தம்பி முத்தையா' என்ற பெயர் சுட்டிப் பாடிய கவிதையால் இவர் தம்பியின் பெயர் முத்தையா என்றிருத்தல் கூடும்.

பிறர் வசை சொல்லி ஏசுதலைக் கவிஞர் அறிந்துளார். 'எய்யும் வேலாயுதம் போல் எனை ஈன வசை சொல்லிப் பிறர் ஏசுகிறார்' என்கிறார். 'இருள் சூழ் மனமுடையார்' என்று ஏசுபவரைச் சாடுகிறார் கவிஞர். உற்றாரும் பெருந்தொல்லை என்றும் 'பந்துக்கள் செய்த அடம் அதனால் மெய் நொந்ததே' என்றும் கூறுகிறார்.

கவிஞர் தன் பெண்பிள்ளைகளை நினைத்து வருந்துதல்

கவிஞருக்கு இரண்டு பெண் பிள்ளைகள் இருந்ததை அவர் கவிதைகள் சுட்டும். அவர்கள் இருவரையும் திருமணம் செய்விக்கக் கவிஞர் பெரும்பாடுபட்டார் போலும். 'பெண்ணாகப் படைத்ததற்குப் பதில் மண்ணாகப் படைத்திருக்கக் கூடாதா' என்றும் கலங்கி இருக்கிறார் கவிஞர். 'கவலைப்படும்படியாகப் பெண் பிள்ளைகளைத் தந்தாயே இறைவா' என்றும், 'கன்னியர் இருவரை எவரிடந்தங்க விடப் போகிறேன்' என்றும், 'பெண்களே எப்போதும் அடிமையானவர்' என்றும், 'அவர்களுக்கு நல்ல கணவனைத் தரமாட்டாயா இறைவா' என்று வேண்டியும் கவிதை படைத்திருப்பது படிப்போர் நெஞ்சைக் கனக்கச் செய்கிறது.

இருகுமாரிகள் படும் குறைகளை ஈஸ்வரனே அறிவீர்
ஐயோ தெய்வமே எந்தன் அருமைப் பெண்மணிகளை
ஆதரிப்பவர் இல்லையே நான் என்ன செய்வேன்
வையம் மீதில் இளந் தையலரைக் காக்க
வாஞ்சை உள்ளார் இல்லையே நான் என்ன செய்வேன்
அன்னைதனைப் பிரிந்து தன்னினத்தோடு இருக்க
ஆன மனிதரில்லையே நான் என்ன செய்வேன்
கன்னியர் மீது இரங்கிக் காரும்
கத்தாவே நித்தியனே நானென்ன செய்வேன்
வாரும் கடவுளரே தீரும் என்றன் நோயை
வல்ல பரம் பிரமமே நான் என்ன செய்வேன்
பாரும் கன்னியர் முகம் தாரும் நல்ல வரனை

(ஆறாம் பிரிவு - 53)

பெண்ணாகப் படைத்ததை மண்ணாகப் படைத்திருந்தால்
பிள்ளைகள் விளையாடுமே . . . . . .
ஒண்ணார் கொடுமையிலும் உலுத்தர் கடுமையிலும்
உசாவியே மனம் வேசாறினேன் ஐயோ

(ஆறாம் பிரிவு - 10)

பிறபாடல்கள்

மரணப் பாட்டு, நந்தவனப்பாடல், மிட்டாய்ப் பாட்டு, சதிகார வேசிகள் குடிகெடுக்கும் விதத்தைப் பற்றிய பாடல், நடவு நடும் பாடல், ஊஞ்சல் பாட்டு, மாப்பிள்ளை பேரில் பரிகாசப் பாடல், மண நலங்குப் பாடல், தாலாட்டு, மாமனார் மாமியார் கொடுமைப் பாடல், மெய்ஞ்ஞானக்கும்மி, துறவறக்கும்மி, நாஸ்திகர் கும்மி முதலாய பல தலைப்புகளில் உருவான கவிதைகள் கவிஞரின் கவித்திறமைக்குச் சான்றுகள். பெண்ணுக்கு ஏற்றம் தரும் வகையில் அனந்தம்மாள் கவிதைகள் அமைந்திருக் கின்றன என்பதில் ஐயமில்லை.

நவபெண்மணி மாலை என்ற தலைப்பில் நந்தவனப் பாடலைப் பாடியிருக்கிறார் கவிஞர். பூக்கள் கொய்வதற்குத் தோழியரை அழைப்பதைப் போன்ற பாணியில் அமைந்த பாடலில் தம் உறவினர் பெயர்களை அடுக்கடுக்காகச் சொல்லும் முறை அருமையாக அமைந்துள்ளது. அவர் குறிப்பிடும் பெயர்கள் குழந்தையம்மாள், குணரத்தினம்மாள், மரிராஜாம்பாள், மரி பொன்னுப்பாப்பா, செல்வராஜாம்பாள், மரி சுந்தராம்பாள், சுந்தர ஜெசுதாம்பாள், மரி லூர்தாம்பாள், மரி பெர்னதத் ஆகிய பெண்களைச் சுட்டுவதால் (பக். 551) இவர்கள் கவிஞரின் உறவினர் (தங்கையர், பெற்ற மக்கள், ஏனையோர்) என்று அறியலாம்.

பழமொழிமாலை

பழமொழிமாலை என்ற தலைப்பில் 94 பக்கங்களில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட அறக்கருத்துக்களைப் பழமொழி வடிவில் அடுக்கி எழுதியுள்ளார் கவிஞர். இப்பழமொழிகள் எங்குமே காணப்படாதவை. கவிஞரே புனைந்த மொழிகள் எனலாம். வார்த்தைகள் ஏவல் கேட்டு வந்து விழுந்துள்ளன. அவரின் பழமொழிகளைக் கீழ்க்கண்டவாறு அமைக்கலாம்.

1. சமுதாயத்தை நோக்கிய பழமொழிகள்
2. ஆண்களுக்கான பழமொழிகள்
3. பெண்களுக்கான பழமொழிகள்
4. பொதுவான பழமொழிகள்

என்ற நிலையில் இவற்றை வகைப்படுத்தலாம். சமுதாயத்தை நன்னிலைப்படுத்த வேண்டும் என்று கருதிக் கவிஞர் எழுதிய பழமொழிகளே மிகுதி. பெண்களைப் பற்றிய சில பழமொழிகளைக் கீழே தொகுத்துத் தருகிறது இவ்வாய்வு.

1. கணவன் உரைக்கு இணங்காது இரேல்
2. மங்கையர்க்குப் பங்கம் செய்யாதே
3. தண்மைக் குணம் பெண்ணுக்கு அழகு
4. கண் அடக்கம் பெண்ணுக்கு அவசியம்
5. கண்ணைப் போல் பெண்டிரை நேசி
6. கண்டபடி பெண்டிரை வதைக்காதே
7. பெண் நிறை காப்பது கண்ணியமாகும்
8. பெண் நிலை அழிப்பது புண்ணியம் அன்று
9. பெண்ணின் கண்ணீர் புண்படுத்தும்
10. கொண்டவனை விட்டுக் கண்டவனை நாடேல்
11. பெண்டுகள் கூடில் சண்டை வளர்ந்திடும்
12. தாதியையும் தூதியையும் நம்பாதே
13. பொல்லாத இல்லாளைக் கொண்டோன் இல்லம் இரணகளமாகும்
14. திருந்தா ஸ்தீரியுடன் இருந்து வாழ்வது மருந்தெனத் தகும்
15. பொருந்தாக் கணவனிடம் இருந்து வாழ்தலிலும் வாழாமை கோடி பெறும்
16. கொல்லாமல் கொல்லும் கொடிய கணவனிடம் இல்லாமை கோடி பெறும்
17. திருந்தாப் பதியானாலும் இருந்து பணிதல் விரும்பத் தகுந்தது.

சமுதாயத்தை நோக்கிய வேறு சில பழமொழிகளையும் இங்கே சுட்டுவது பொருந்தும்.

1. மேல் மக்களிலும் கீழ் மக்கள் உண்டு
2. பணமிருந்தால் பிணத்துக்கும் செல்வாக்குண்டு
3. ஏர் ஒழிந்தால் சீர் ஒழியும்
4. எத்தொழிலுக்கும் ஏர்த் தொழில் நன்றாம்
5. கலகம் மிகுந்தால் உலகம் கெடும்
6. காசியிலும் களவாணி உண்டு
7. மதியற்றால் நீதி அழியும்
8. நீசர் மிகுந்தால் பிசாசே ஆளும்

9. அந்நியர் குடியேறினால் தன் இனம் பாழாகும்
10. குருவைக் கொன்றவரும் குருபூசை செய்வார்
11. குத்தப் போனால் கத்தியின் கூர்மை அறியவேண்டும்
12. கத்தப் போனாலும் கணக்கொடு கத்த வேண்டும்
13. ஞானம் இல்லார்க்கு மானம் இராது

முடிவுரை

அனந்தம்மாள் இலக்கிய இலக்கணப் புலமைமிக்கவர். இராகம், தாளம், பல்லவி, சரணத்துடன் கவிதை எழுதும் ஆற்றல் பெற்றவர். கவி பாடுவதிலும் வல்லவர். தாமே பாட்டெழுதி மெட்டு அமைத்த பெருமைக்குரியவர். முத்தமிழ்ப் புலமை மிக்க கவிஞர். உரையாடல் பாணியில் தனநாசன் என்னும் சந்திரகாசன் விலாசம், ஆதாம் ஏவாள் விலாசம் போன்றவற்றைக் கதைக் கவிதையாக்கித் தந்துள்ளார். அரியோர் பெரியோர்களைப் போற்றும் அன்புக்குரிய கவிஞர் இவர். ரிப்பன் பிரபுவையும் போற்றிப் பாடல் பாடியிருக்கிறார். பாப்பு நாயுடு அவர்களின் நூலுக்கும் செண்பகக் கொல்லை சௌந்தரராஜ உடையார் நூலுக்கும் சாற்றுக்கவிகள் பாடியுள்ளார். நாட்டாருக்கும் நகரத்தாருக்கும் இடையேயான உரையாடல் பாணியில் அமைந்த கவிதை நம்மைச் சிந்திக்க வைக்கிறது. நோவா பேழை என்ற கவிதை சங்க இலக்கியக் குறிஞ்சிப் பாட்டுப் பூக்களை நினைவுபடுத்துகிறது. அகன்ற அறிவும் ஆழ்ந்த புலமையும் மிக்கவர் அனந்தம்மாள் என்பதை நிரூபிக்கும் தலைப்புத்தான் நோவா பேழையாகும்.

வட இந்தியாவில் இவர் பெரும் துன்பம் அடைந்திருக்க வேண்டும். தம் பெண் குழந்தைகளையும், பெற்றோர் உற்றோரையும் எண்ணிக் கலங்கிய துயரப் பாடல்கள் நம் நெஞ்சைத் துயரமடையச் செய்கின்றன. வாழ்வும் வசதியும் தனமும் உடைய தமிழ்நாட்டுப் பெண் கவிஞர் அனந்தம்மாள் மூசர்ப்பர்பூர் என்ற ஊரில் 1923 ஏப்ரல் மாதம் 17ஆம் நாள் இயற்கை எய்தினார். தாவீதுப்பூரில் 500ஆம் எண் கல்லறையில் அடக்கமானாள் ஆழ்ந்து அகன்ற அறிவுடைய கவிஞர் அனந்தம்மாள்.

குமுதினி

கு. லதா

ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்டதால் ஏற்பட்ட மிகப்பெரிய நன்மைகளுள் பெண்ணியமும் ஒன்று. பெண்களே தாம் அடிமைப்பட்டுக் கிடப்பதை உணராத காலத்தில், அவர்களை உணரவைப்பதற்காகப் பெரும்பாடுபட்டவர்கள் மாயூரம் வேதநாயகம் பிள்ளை, பாரதியார், திரு.வி.க. போன்றோர். மேற்கூறியவர்கள் பெண்ணின் பெருமை, பெண்கல்வி போன்றவை குறித்துப் பல நூல்கள் எழுதியிருப்பினும், படிப்பறிவு பெற்றிராத பெண்கள் அப்புத்தகத்தைப் படித்துணர்வது என்பது முடியாத ஒன்று. இந்நிலை மாறுவதற்காக ஆங்கிலேயர்கள் கொண்டு வந்த கல்விக் கொள்கைகள் பெண்கல்வி நிலை உயரப் பெரும்பங்காற்றின.

இருப்பினும் சென்னை போன்ற பெரு நகரங்களில் வசிக்கும் பெண்கள் ஓரளவிற்கு உயர்கல்வி அதாவது பத்தாவது வரை படிக்கக்கூடிய நிலையை எட்டினர். மேலும் இக்கல்வி பிராமணர் போன்ற உயர்குடி வகுப்பைச் சேர்ந்த பெண்களுக்கு மட்டும் கிட்டியது. இத்தகைய சூழ்நிலையில் மிகச் சிலர் தங்களுடைய வாழ்க்கையைச் சமுதாயத்திற்கு அர்ப்பணித்துக் கொண்டனர். சாதி மதப் பேதங்களைக் களைந்து இந்திய மக்கள் ஒன்றுபடப் பெண்கல்வியும் பெரிதும் துணைபுரிந்தது. இத்தகைய கல்வி பெற்ற பெண்கள் சிறந்த இல்லத்தரசிகளாகவும் அதே நேரத்தில் சமுதாயத்தில் பெண்ணுக்குரிய தீமைகளை, கொடுமைகளை, இன்னல்களைக் களையக்கூடிய வீரதீரப் பெண்களாகவும் வாழ்ந்து தங்களுக்குப் பின்வரும் பெண்களுக்குச் சிறந்த வழிகாட்டியாகவும் விளங்கினர்.

இத்தகு பெண்களுள் சிறந்தவராகவும் போற்றிப் புகழக்கூடியவருமாக விளங்குபவர் குமுதினி என்கிற ரங்கநாயகி அம்மாள். குமுதினி என்ற புனைபெயரே நிலைத்து விட்டதால் இக்கட்டுரையிலும் இப்பெயரே கையாளப்படுகிறது. இவர் தன்னுடைய எழுத்துகளால் தமிழ்ச் சமுதாயத்தில் பெண்ணுரிமை, காந்தீயக் கோட்பாடுகளை எழுச்சியுறச் செய்தவர். பெண் எழுத்தாளர்கள் குறைவாகவே இருந்த காலக்கட்டத்தில் இவர் தன் எழுத்துக்களைப் பன்முகத்துறையில் நிலைநாட்டியவர்.

கட்டுரை, சிறுகதை, நாவல், நாடகம், மொழிபெயர்ப்பு எனப் பல துறைகளிலும் காலூன்றிய இவரது படைப்புத்திறனை, ஆளுமைத் திறனை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். மேலும் இவரின் படைப்பாற்றலை இனங்காட்டுவதாகவும் இவ்வாய்வு அமையும்.

வாழ்க்கை வரலாறு

1905ஆம் ஆண்டு பெருமை மிக்க பாரம்பரியக் குடும்பத்தில் பிறந்தவர் குமுதினி. இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் ரங்கநாயகி. பாரம்பரியமிக்க பிராமணக் குடும்பத்தில் பிறந்திருந்தும் இவருக்குப் பள்ளிக்குச் சென்று கல்வி பயிலக்கூடிய வாய்ப்பு கிட்டவில்லை. ஆனால் தந்தையார் எழுத்தாளராக இருந்ததாலும் தன் மகளின் அறிவுக் கூர்மையைக் கண்டு, அவருக்குக் கல்வி கற்பிக்க வேண்டும் என்ற ஆர்வத்தாலும் ஆசிரியர் ஒருவரை நியமித்து வீட்டிலே தமிழ், வடமொழி ஆகிய இரண்டையும் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தார்.

இருப்பினும், இந்நிலை நீண்ட நாட்கள் தொடரவில்லை என்றாலும் குமுதினி பத்து வயதிற்குள் வடமொழி, தமிழ் ஆகிய இரண்டையும் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொண்டார். அதன்பின்பு பத்தாவது வயதில் திருமணம் செய்து கொண்டு, தனது பதின்மூன்றாவது வயதில் புக்ககம் சென்றார். மிகவும் ஆசாரமான பெரிய குடும்பத்தில் மூத்த மருமகளாகச் சென்ற இவர், தன்னுடைய குடும்பச்சூழலை அடிப்படையாகக் கொண்டே தன்னை ஒரு படைப்பாளராக உருவாக்கிக் கொண்டார்.

இவரது கணவர், தன்னுடைய இளம் மனைவி காலில் புதுவிதமான செருப்பு (Sandals) அணிய விரும்பி வாங்கிக் கொடுத்த போது, இவர் தன்னுடைய 25அடி உள்ள அறையைத் திறந்தவெளி மைதானமாகக் கற்பனை செய்து கொண்டு நடந்தார். மிகப்பெரிய பாரம்பரியம் என்று சொல்லிக் கொள்ளக்கூடிய வீட்டிலே இருந்தும் தன்னால் இந்தச் சிறிய மகிழ்ச்சியைக் கூட அடையமுடியாத நிலையை நினைத்து வருந்தினார். (இணையதளம், கூகுல்). இவ்வாறு தன்னுடைய வாழ்க்கையில் நடந்த சிறுசிறு நிகழ்ச்சிகளை வெளிக்காட்டும் விதத்தில் கட்டுரைகள் எழுதத் தொடங்கினார்.

தன்னால், ஆண்களைப் போன்று பள்ளிக்கூடம் சென்று கல்வி கற்க முடியவில்லையே என்று பல முறை ஆதங்கப் பட்டார். தனக்குக்கிடைத்த ஓய்வு நேரங்களில் எல்லாம் மற்ற

பெண்களைப் போல் வெட்டிப் பேச்சுப் பேசி நேரத்தை வீணடிக்காமல் தந்தையும், கணவரும் கொண்டு வந்து கொடுக்கும் பலவகைப் புத்தகங்களைப் படித்துத் தமிழ், ஆங்கில, வடமொழி அறிவினை வளர்த்துக் கொண்டார். ஆங்கில நாவல்களைப் படித்ததன் விளைவாகக் கதைசொல்வதில் மிகச் சிறந்த ஆற்றல் மிக்கவராக விளங்கினார். இதனால் அவர் வீட்டில் உள்ள குழந்தைகளுக்கு ஆங்கில நாவல்களின் பெயர்களும் கதாபாத்திரங்களும் நன்கு பரிச்சயமாயின.

இத்தகைய சூழ்நிலையில் இவருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த பெருந்துயரமே இவரை இன்னும் மேல்நிலைக்குக் கொண்டு சென்றது. தனது 22ஆவது வயதிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகக் காது கேட்கும் திறனை இழந்தார். இக் குறையினால் குடும்பத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாமல், அதையே ஒரு வாய்ப்பாகக் கொண்டு எழுத்துப்பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதால் தான் தமிழுலகம் சிறப்புமிக்க படைப்பாளரைக் கண்டது. இக்குறையைப் போக்க அவருடைய கணவரும், தந்தையும் அவர் எழுதியவற்றை யெல்லாம் அச்சேற்ற விரும்பினர். அவருடைய படைப்புகள் இதழ்களில் வெளிவருவதை முதலில் அவரது குடும்பத்தினர் அறியாதிருந்தனர். தெரியாததை நினைத்து வருத்தமும், பின்நாளில் தெரியவந்தபோது அதற்கான ஆடம்பரமோ இல்லாமல் எப்பொழுதும் ஒரே நிலையில் இருந்தார். இது அவருடைய பெருந்தன்மையை எடுத்துக்காட்டுகிறது. இவர் தமிழ், வடமொழி ஆங்கிலம், இந்தி, வங்காளி, குஜராத்தி எனப் பல மொழிகளைக் கற்றறிந்தவராகத் திகழ்ந்தார்.

1957 முதல் 1970 வரை குடும்பத்தில் ஏற்பட்ட பெரும் இழப்பின் காரணமாக அவரது எழுத்துக்களில் சிறிது இடைவெளி காணப்பட்டது. மீண்டும் எழுபதுகளில் எழுதத் தொடங்கினார் (பிரேமா நந்தகுமார், பெண்ணியத்தின் விடிவெள்ளி, குமுதினி, ப.19). அவர் மலேசியா, சிங்கப்பூர், பினாங், அமெரிக்கா, இலங்கை போன்ற இடங்களுக்குச் சென்று வந்ததோடு, அவை குறித்த பயணக்கட்டுரைகள் எழுதினார். இவர் தன்னுடைய 81ஆம் வயதில், 1986ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

படைப்புகள்

இவருடைய மருமகளான பிரேமா நந்தகுமார் வெளியிட்ட "பெண்ணியத்தின் விடிவெள்ளி குமுதினி" என்ற நூலில் அவர் அச்சில் வெளிவந்த நூல்களின் பட்டியல் தருகிறார்.

(மேற்படி, ப.ii). அத்துடன், ஆய்வாளருக்குக் கிடைத்த சில நூல்களையும் சேர்த்துத் துறைவாரியாக நூல்கள் பதிக்கப்பட்டுக் கீழே தரப்படுகின்றன.

சிறுகதை : இரட்டைக் கதைகள், நந்துவின் பிறந்தநாள்

நாவல் : திவான் மகள்.

நாடகம் : குடும்பக்காதல், விசுவாமித்ரர், புத்திமதி பலவிதம், தில்லி சென்ற நம்பெருமான்.

கட்டுரை : சில்லறைச் சங்கதிகள் லிமிடெட் (தொகுப்பு).

தொடர் : மக்கள் மலர்ச்சி, உளநூல், பெண் ஆராய்ச்சி.

கட்டுரை : அந்தப்புரத் தபால், குடும்ப வாழ்க்கை.

மொழிபெயர்ப்பு : குமுதினி, லம்பகர்ணன், கிராம இயக்கம், ஏசுநாதர் போதனை, Sacred sayings of Nammalvar.

தொகுப்பு : விடைதெரியுமா?
(குமுதினியால் தொகுக்கப்பட்ட நூல்)

பெற்ற பரிசு : 1938ஆம் ஆண்டு பாரதி தங்கமெடல் பரிசு ஆனந்த விகடன் குழுவால் தேர்வு செய்யப்பட்டு அளிக்கப்பட்டது.

புனைபெயர்கள்

தாகூரின் படைப்புகள் மீது ஆர்வம் கொண்ட அவர், மொழிபெயர்ப்புச் செய்த பின்பு அவற்றில் வரும் கதாபாத்திரங்களின் மீது கொண்ட ஈடுபாட்டின் விளைவாகத் தன்பெயரை மாற்றிக் கொண்டு எழுதினார். தாகூர் இயற்றிய குமுதினி என்ற நாவலை இந்தியிலிருந்து தமிழில் மொழி பெயர்த்ததுடன் அக்கதாபாத்திரம் ஏற்படுத்திய மனமாற்றத்தின் விளைவாகத் தன் பெயரைக் குமுதினி என்று மாற்றிக் கொண்டார்; அப்பெயரே நின்று நிலைத்து விட்டது. (மேற்படி, ப.14). அதே போன்று தாகூரின் காதம்பரி என்ற கட்டுரை ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவாகக் 'காதம்பரி' என்ற புனை பெயரிலும் கட்டுரைகள் எழுதியுள்ளார். (மேற்படி, ப.151). இவை மட்டுமின்றி நந்தினி, ஸ்ரீரங்கன் ஆகிய புனைபெயர்களிலும் அவர் கட்டுரை எழுதியுள்ளார். இவ்விரண்டில், ஆனந்த விகடனில் இரு கட்டுரைகள் ஒரே நேரத்தில் வெளியானதால் 'நந்தினி' என்ற புனைபெயரில் 'மக்கள் மலர்ச்சி'யை எழுதியதற்கான காரணம் தெரியவருகின்றது (மேற்படி, ப.118). ஆனால், ஸ்ரீரங்கன் என்ற பெயரில் எழுதியதற்கான காரணம் புலப்படவில்லை.

சிறுகதை

ஆனந்த விகடனில் 1932இல் வெளியான பிரம்மாவின் பக்ஷபாதம் என்பதே குமுதினியின் முதல் சிறுகதையாக இருக்கக் கூடும் என்று பிரேமா நந்தகுமார் குறிப்பிடுகின்றார். (மேற்படி, ப.25) அவர் உயிருடன் இருக்கும்போது, ஆனந்தவிகடன், பாரதமணி, கதாமணி, கலைமகள் ஆகிய இதழ்களில் வெளி வந்தவை தொகுக்கப்பட்டு நந்துவின் பிறந்தநாள் (1946), சில்லறைச் சங்கதிகள் லிமிடெட் என்ற இரு சிறுகதைத் தொகுதிகள் வெளி வந்தன. இவற்றில் சில்லறைச் சங்கதிகள் லிமிடெட் என்னும் நூல் ஆய்வாளரின் பார்வைக்குக் கிட்டவில்லை. ஆகையால், இந்நூல் சிறுகதைத் தொகுப்பா அல்லது கட்டுரைகளின் தொகுப்பா அல்லது இரண்டும் சேர்ந்த தொகுப்பா என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆகையால் இக்கட்டுரையாளர் அதைக் கட்டுரை என்ற பிரிவில் இணைத்துள்ளார்.

குமுதினியின் சிறுகதைகள் பெண்ணியம், காந்தீயவாதம், குழந்தை உளவியல் முதலான பொருண்மைகளில் அமைகின்றன. தான் ஓரளவிற்கு வசதியாக இருந்ததோடு மட்டுமல்லாது கணவரின் தூய அன்பையும் பெற்றிருந்தார். எனினும் அவர் சமூகத்தில் ஆண்களுக்கு இணையாக வாழ முடியவில்லையே என்ற ஏக்கத்துடன் பல முறை பெண்விடுதலை பற்றிச் சிந்தித்துள்ளார். அதே நேரத்தில் கல்வி கற்ற பெண்கள் சமுதாயத்தில் நல்ல செயல்களைச் செய்ய விரும்பாமல் 'லேடிஸ் கிளப்' எனத் தன்னைப் புதுமைப் பெண்ணாக ஆக்கிக் கொள்பவளை நகைச்சுவையோடு எள்ளி நகையாடுகிறார். 'கோதாவரி குண்டு' எனும் சிறுகதை இச்செய்தியை அடிப்படையாகக் கொண்ட சிறுகதை.

பள்ளிக்குச் சென்று படிக்க முடியாததையும் மேனாட்டுப் பெண்களைப் போல் ஆண்களோடு சேர்ந்து வெளியிடங்களுக்குச் சென்று வர முடியாததையும் அடிக்கடிச் சிந்தித்தார்.

அத்துடன் இல்லறத்தை நல்லறமாக நடத்த அறிந்திருக்க வேண்டும் என்பதை 'இரு மனைவிகள்' எனும் கதை காட்டுகின்றது. 'பிடிவாதம்' எனும் சிறுகதை புரட்சிக் கருத்தை மையமாக வைத்து எழுதப்பட்டது. இக்கதையில் வரும் கதாநாயகி கணவரால் ஒதுக்கப்பட்டவள். அதன் பின்பு பட்டம் பெற்றுப் பள்ளியை நிர்வகிக்கக் கூடிய திறன் படைத்தவளாக மாறியதோடு, தன் கணவன் திரும்ப அழைத்த போது தன்னை எந்த இடத்திலும் விட்டுக் கொடுக்காமல் துணிந்து பேசும் புரட்சிப் பெண்ணாகப் படைத்தார் குமுதினி.

பெண்ணியத்தைப் பற்றிப்பேசும் இவர் நாட்டு நலனிலும் அக்கறை கொண்டவராகத் திகழ்ந்துள்ளார். குறிப்பாகக் காந்தியக் கொள்கைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டு, சமயம் வாய்த்த போதெல்லாம் தன்னுடைய கதைகளில் அதைப் புகுத்தினார்.

தகப்பன்சாமி, இல்லாதபொருள் இருந்தால் நல்லது, கணக்கர் வருகை, தடைக்குழி, தேசியபாஷை போன்ற சிறுகதைகள் வழியாக மக்கள் கதராடை உடுத்த வேண்டும் எனக் குமுதினி எடுத்துக் கொண்ட முயற்சியைக் காணலாம்.

மாணவர்கள், பணக்காரர்கள், பெண்கள், இளைஞர்கள் என ஒவ்வொருவரையும் கதைத் தலைவர்களாக்கி அவர்களுக்கு இதன் முக்கியத்துவத்தை உணர்த்த ஆசிரியர் அரும்பாடுபட்டார் என்பதை இக்கதாபாத்திரங்கள் வழி உணரலாம். கதை எழுதுவதோடு நின்றுவிடாமல் தான் ஒரு காந்தீயவாதி என்பதற்கு அடையாளமாக இறுதி நாள் வரை உடுத்தியது மட்டுமல்லாது, இறந்தபின்பும் அவர் மேல் கதராடையைப் போர்த்த வேண்டும் (மேற்படி, ப.143) என்று கேட்டுக் கொண்டார். அந்த அளவிற்கு அவர் காந்தியின் மீது அன்பும் மரியாதையும் வைத்திருந்தார். வெறும் வார்த்தைகளால் மட்டுமல்லாது செயலாலும் வாழ்ந்து காட்டினார்.

அத்துடன் காந்திஜி, குமுதினிக்கு நாட்டுநலன் பற்றிய கடிதங்கள் எழுதுவதோடு, அவரைப்பற்றியும் எழுதிய கடிதங்களின் குறிப்பும் கிடைக்கிறது. அந்த அளவிற்கு அவர் காந்திஜியுடன் தொடர்பு வைத்திருந்தார். வார்தாவிற்கு இருமுறை சென்று வந்துள்ளார். இதனால் இவர் கதராடை உடுத்துவதில் காட்டிய ஆர்வமும், பலசிறுகதைகள் எழுதுவதற்கான காரணமும் வெளிப்படும்.

அடுத்ததாகக் கூட்டுக் குடும்பத்தில் வாழ்ந்த இவரது இல்லத்தில் எப்பொழுதும் நான்கைந்து தூளிகளில் குழந்தைகள் தூங்கிக் கொண்டு இருக்கும். ஆகையால் குழந்தைகளின் உளவியலை நன்கு அறிந்தவராக இருந்ததோடு அவர்களைப் பற்றியும் சிறுகதை எழுதத் தவறவில்லை. நந்துவின் பிறந்தநாள், விருந்தாவீண்பெருமையா?, நந்துவின் தம்பி முதலியன சிறந்த குழந்தை உளவியல் தொடர்பான சிறுகதைகளுக்கு நல்ல எடுத்துக்காட்டுகளாகும். தன்வீட்டுக் குழந்தைகளின் இயல்பான மனநிலையை நன்கு புரிந்து கொண்டு அவர்களுக்குச் சிறுவயது முதற்கொண்டே நாட்டுப்பற்றுணர்வையும், பெரியவர்களைப்

பின்பற்றிச் சிறியவர்களும் நடக்க வேண்டும் என்பதையும் கோடிட்டுக் காட்டியவர் குமுதினி.

இவ்வாறு சிறுகதைகளைத் தன்னுடைய சொந்தப் பட்டறிவு வாயிலாகவும் அதே நேரத்தில் தன்னுடைய கூட்டுக் குடும்பத்தில் தன்கண்முன் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அடிப்படையாகவும் கொண்டு எழுதியுள்ளமை அறிந்து போற்றத்தக்கது.

நாவல்

மிகச் சிறந்த சிறுகதை எழுத்தாளராகத் தன்னை உருவாக்கிக் கொண்ட குமுதினியால் நாவல்கள் பல எழுதக்கூடிய சூழ்நிலை கிடைக்கப்பெறாததால் 'திவான்மகள்' என்ற ஒரே ஒரு நாவல் மட்டும் அவரால் எழுதப்பட்டதாகத் தெரியவருகிறது. (மேற்படி, ப.52). ஆசாரமான பெரிய கூட்டுக் குடும்பத்தில் வாழ்ந்த காரணத்தால் நீண்ட நேரம் ஒய்வாக இருந்து எழுதக்கூடிய சூழ்நிலை அவருக்குக் கிட்டவில்லை. இதன் விளைவாகச் சமூக நோக்கத் துடனும் துணிச்சலுடனும் எழுதக்கூடிய ஒரு நாவலாசிரியரைத் தமிழுலகம் இழந்துவிட்டதாகப் பிரேமா நந்தகுமார் குறிப்பிடுவதைக் இக்கட்டுரையாளரும் ஏற்கின்றார். (மேலது)

ஆசார அனுஷ்டானங்களைப் பின்பற்றும் குடும்பத்தைச் சேர்ந்த இவர், கலப்பு மணத்தை ஆதரித்து நாவல் எழுதியுள்ளார் என்பது அக்காலக் கட்டத்தில் அவர் செய்த மிகப் பெரும்புரட்சி என்றே கூறலாம். பாரதி கனவு கண்ட புதுமைப் பெண்ணாக இல்லறத்தில் இருந்துகொண்டே பெண்ணியத்திற்காகக் குரல் கொடுத்தவர் இவர் எனலாம். இந்நாவலை வெளியிட இதழ்கள் ஒப்புக் கொள்ளவில்லை என்றும் குமுதினியே கலைமகள் காரியாலயத்தின் வெளியீடாக 1942இல் அச்சிட்டார் எனவும் பிரேமா நந்தகுமார் குறிப்பிடுகின்றார். (மேற்படி, ப.53).

காதல் மணத்தையே ஏற்றுக்கொள்ள மறுத்த அக்காலத்தில் கலப்பு மணத்திற்கு ஆதரவு தந்து எழுதியுள்ளமை ஈண்டு நோக்கத்தக்கது. இராஜாஜியின் மகளைக் காந்திஜியின் மகனுக்கு 1933இல் மணம் செய்து கொடுத்து, அவர்கள் இல்லறத்தை நல்லறமாகக் கொண்டு குடும்பம் நடத்தியதைக் கண்கூடாகக் கண்டும், சமுதாயத்தில் இம்மாற்றம் பெரிய அளவில் ஏற்பட வில்லை என்பதாலும் மக்கள் மனத்தில் இத்தகைய சீர்திருத்த எண்ணங்களை உருவாக்கவும் இந்நாவல் எழுதப்பட்டிருக்கலாம். பெண்களைப் புரட்சிப் பாதையில் கொண்டு செல்ல நினைத்த அவர், தன் படைப்புகள் வழி அதை நிலைநாட்டவும் செய்தார்.

தமிழில் நாவல்கள் பற்றிய விமரிசனங்கள் அதிகம் வெளிவராத காலக்கட்டத்தில் இந்நாவலைப் பற்றிப் பம்பாய் மாத இதழ் தி இண்டியன் பி.இ.என்.இல் (The Indian P.E.N.) கே.ஆர். ஸ்ரீனிவாச ஐயங்கார் கூறுவதைப் பிரேமா நந்தகுமார் தம்முடைய நூலில் எடுத்துரைக்கின்றார்.

> *நாவல் என்கிற பெயரைக் கொண்டு வெளிவரும் சொற்குவியல்களில் சிக்கிக்கொண்டு, கட்டமைப்பு ஏதுமில்லாத அழகற்ற தமிழ்நாவல்களைப் படிக்கும் போது ஏற்பட்ட ஏக்கம் திவான் மகளால் தீர்ந்தது. இந்நாவலைப்போல் மேலும் பல நாவல்களைத் திருமதி குமுதினி படைத்தால், தமிழிலக்கியம் மேன்மையுறும். நன்றியுடன் வாசகர்கள் தமிழிலக்கியத்தின் ஜேன் ஆஸ்டென் (Jane Austen) என்று அவரைப் புகழ்வார்கள். (The Indian P.E.N., September, 1942) (மேற்படி, ப.68).*

ஒரே ஒரு நாவலாக இருந்தாலும், அதுவே அவர் மிகப் பெரிய நாவலாசிரியர் என்பதை உணர்த்துகின்றது. நேரமின்மை, குடும்பச் சூழல் முதலிய காரணங்களால் பல நாவல்களைப் படைக்கக் கூடிய வாய்ப்பு கிட்டவில்லை.

நாடகங்கள்

இவர் ஒரு சிறந்த கதை சொல்பவராகவும் (Story Teller) இருந்ததோடு மட்டுமின்றித் தன்மகள் தேவகி நடத்திய பள்ளியில் மாணவர்கள் நாடகம் நடத்துவதற்காகச் சிறுசிறு நாடகங்களை எழுதி ஊக்குவித்துள்ளார். இதன்விளைவாக நாடகத் துறையிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு மிகச் சிறந்த நாடகங்களைத் தமிழுலகிற்குத் தந்துள்ளார்.

கூட்டுக் குடும்பத்தில் திருமணமான இளம் கணவன்-மனைவி ஒன்றாகக் கூடிப் பேசுதல் என்பது இயலாத ஒன்று. அவ்வாறு பேச நினைத்தாலும் குழந்தைகளோ அல்லது அக்கம் பக்கத்தில் உள்ளவர்களோ இடையூறு செய்வதை நகைச்சுவை யோடு 'குடும்பக்காதல்' என்ற நாடகத்தில் வெளிப்படுத்துவது குமுதினியின் ஆளுமைத் திறனுக்கு நல்ல சான்று.

பெண்ணின் அனுமதி இல்லாமலேயே திருமணத்தை நிச்சயிக்கும் தன்மையை எதிர்ப்பதாக, 'புத்திமதி பலவிதம்' எனும் நாடகம் அமைகிறது. இதில் புராணக் காலத்துக் கதாநாயகிகள் மூலமாக இக்கருத்தை எள்ளி நகையாடி இறுதியில் கதைத்

தலைவியே தன்னுடைய கணவனைத் தேர்ந்தெடுப்பதாக முடிக்கின்றார். இதன்வழிப் பெண்களுக்குச் சிந்திக்கும் திறனை வளர்ப்பதோடு அவர்களுக்குரிய உரிமைகளையும் உணர வைக்கின்றார்.

அன்றைய ஆங்கில அரசின் கொடுமையையும் சுதந்திரப் போராட்டத்தையும் புராணக் கதையான அரிச்சந்திரன் கதை மேல் ஏற்றி விளக்குவதாக 'விசுவாமித்திரர்' எனும் நாடகம் அமைகிறது. குமுதினி, எந்த ஒரு படைப்பாக இருந்தாலும் அதில் நாட்டுப்பற்று, காந்தீயம், பெண்ணியச் சிந்தனை முதலியவற்றை அடித்தளமாகக் கொண்டு படைத்திருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். சிறிதளவு கூட அவற்றிலிருந்து வழுவாமல் நகைச்சுவை உணர்வு மேலிடக் கதைக்கருவை எடுத்துச் சொல்வதே குமுதினியின் சிறப்பம்சமாகும். இத்தகு காரணத்தால் 1940களில் இவர் சிறந்த எழுத்தாளராக மக்கள் மனத்தில் நின்றதில் வியப்பில்லை.

பண்டைய காலத்தில் மக்கள் சமயப்பொறையோடு வாழ்ந்ததை உலகுக்கு உணர்த்துவதற்காகத் 'தில்லி சென்ற நம்பெருமாள்' என்ற நாடகத்தைக் குமுதினி எழுதியுள்ளார். இந்நாடகம் திருவரங்கத்தில் அரங்கேறிய போது ஸ்தலத்தாராகப் பிரபல ஹரிகதா விற்பன்னர் எம்மார் விஜயராகவாச்சாரியாரும் சுல்தானாகப் பேராசிரியர் ஸி.எஸ். கமலபதியும் நடித்ததாகப் பிரேமா நந்தகுமார் தன்னுடைய நூலில் குறிப்பிட்டுள்ளார். (மேற்படி, ப.89). பெண் எழுத்தாளரால் படைக்கப்பட்ட நாடகம் எழுதப்பட்ட காலத்திலேயே நடிக்கவும் செய்யப்பட்ட பெருமைக்குரியவர் குமுதினி.

கட்டுரைகள்

சிறுகதை, நாவல், நாடகம் எனப் படைப்பிலக்கியத்தில் தன் முத்திரை பதித்தாலும் அவருடைய கட்டுரைகள் தான் அவருக்கு எழுத்தாளர் என்ற புகழைத் தேடித்தந்தன எனலாம். "முப்பதுகளிலும் நாற்பதுகளிலும் கல்கி, எஸ்.வி.வி. போன்றோருக்குச் சமமாக நகைச்சுவைக் கட்டுரைகள் எழுதுவதில் புகழ்பெற்ற பெண்மணி இவர் ஒருவரே" (மேற்படி, ப.91) என்று பிரேமா நந்தகுமார் குறிப்பிடுவது சரியென இக்கட்டுரையாளரும் ஏற்கின்றார். தன் வாழ்க்கையைச் சுற்றி நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனித்து, அவற்றையே கட்டுரைப் பொருளாக்கி வெளியிடுவதில் கைதேர்ந்தவர் இவர். நூற்றுக்கும் மேற்பட்ட இவருடைய கட்டுரைகளின் பொருள் பொழுதுபோக்கு, பயணம் ஆகிய இருபிரிவுகளில் அமையக் காணலாம். (மேலது)

பொழுதுபோக்குக் கட்டுரைகள் சிலவற்றைக் குமுதினியே, ''சில்லறைச் சங்கதிகள் லிமிடெட்'' என்ற பெயரில் வெளியிட்டுள்ளார். இதற்கு முன்னுரை எழுதிய கல்கி, அவரைப் பற்றிக் கூறுவதைப் பிரேமா நந்தகுமார் தன்னுடைய நூலில் குறிப்பிட்டுள்ளதைக் கீழ் வருமாறு காணலாம்.

> *'வங்காளப் பஞ்சத்தின் கோரதாண்டவம்', 'தென்னாப்பிரிக்கா இந்தியர் படும் அவதி', 'அர்ஜெந்தினாவில் விவசாய வளர்ச்சி', பீஜித் தீவில் தோட்ட முதலாளிகள் கொடுமை' முதலிய மகத்தான விஷயங்களைப் பற்றி வேண்டுமானால் எழுதலாம். ரொம்ப நன்றாகவும் எழுதலாம். ஆனால் சலவைத் தொழிலாளியிடம் துணிபோட்டு வாங்குவது, சமையல் அறையில் ஈ மொய்க்காமல் காக்கும் முறை, வீட்டுக்கு விருந்தாளிகள் வந்தால் வரவேற்று உபசரிக்க வேண்டிய பத்தி, அடுத்த வீட்டுப் பெண் குழந்தை சங்கீதம் கற்றுக் கொள்ளும் அழகு ஆகிய சில்லறை விஷயங்களைப் பற்றி எழுதுவது அரிதரிது, மிகவும் அரிது! எனக்குத் தெரிந்தவரையில் 'குமுதினி' அவர்கள் தான் இம்மாதிரியான சில்லறை விஷயங்களைப் பற்றி ரஸமாக எழுதுவதில் சிறந்த வெற்றி அடைந்திருக்கிறார். (மேற்படி, ப.91-92).*

பகற்கனவு காண்பது போன்ற உத்தியைக் கையாண்டு அவர் எழுதிய கட்டுரைகள் சாதாரணமாக ஒவ்வொரு குடும்பத்திலும் நடைபெறும் சிறுசிறு நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டவை. ஆங்கில நூல்களைப் படித்ததன் விளைவாகப் பெண்ணியச் சிந்தனை அவருக்கு வளர்ந்தது. சமூகத்தில் ஆணும் பெண்ணும் சமமாக வாழ்கின்ற நிலையைக் கண்டு இங்கிதம் கொள்ளாமல் அதை முழு மனத்தோடு ஏற்றுக் கொண்டுள்ளார் அவர். இருப்பினும் பண்பாட்டு மொழிபெயர்ப்புச் செய்யும் போது ஏற்படும் இடரினையும் எடுத்துக்காட்டுகின்றார்.

> *மேரி புதிதாய் வந்தவன் கையைப் பிடித்துக் குலுக்கினாள் என்று இங்கிலீஷில் படித்தால் ஆச்சரியம் உண்டாவதில்லை. 'தன் தமையனுடைய நண்பன் கையைக் குலுக்கினாள்' என்று தமிழில் படித்தால் 'ஓகோ, பட்டு ரொம்பப் புது நாகரிகப் பெண் போலும்! என்று நாம் அவளைப் பற்றி நினைக்க நேரிடுகிறது' (மேற்படி, ப.99)*

என்று பெண்ணியத்தின் விடிவெள்ளி எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து தமிழ் மரபிற்கேற்ப அதை எப்படி எழுதுவது என்று சிந்தித்து, தமிழ்ப் பண்பாட்டிலிருந்து வழுவாமலும் அதே நேரத்தில் ஆங்கிலப் பண்பாட்டினையும் காத்து மொழிபெயர்த்துள்ளார்.

அறிவியல் தொடர்பான கட்டுரைகளாகத் தேன், ரேடியோ போன்றவை எழுதப்பட்டுள்ளன. பயணக்கட்டுரை எழுதுவதிலும் படிப்பதிலும் ஆர்வம் மிக்கவர் என்பதை அவருடைய 'செய்யாத யாத்திரை', 'கொடைக்கானல் யாத்திரை', 'யாத்திரைப் புத்தகங்கள்' போன்றவை வெளிப்படுத்தும். பயணம் செய்யக் கூடிய அல்லது செய்த இடங்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்பு, இயற்கைச் சூழல் முலியவற்றை விளக்கக் கூடியவைகளாகப் பயணக்கட்டுரைகள் அமைய வேண்டும். அதற்குப் பதிலாக வேண்டாத வெற்றுச் செய்திகளைப் பற்றிய நூல்களை அவர் முற்றிலும் வெறுத்தார். இவை மட்டுமின்றி எங்கள் ஊர், ஆதாரக்கல்வி போன்ற பொதுச் செய்திகள் பற்றியும் அவர் எழுதியுள்ள கட்டுரைகள் ஆய்வாளருக்குக் கிட்டியுள்ளன.

தொடர் கட்டுரைகள்

ஒவ்வொரு கட்டுரைகள் எழுதியதன் விளைவாகத் தொடர் கட்டுரைகள் எழுத அவை தூண்டியிருக்கலாம். தொடர் கட்டுரையிலும் அவருடைய பொருண்மைகளாகக் குழந்தை உளவியல், பெண்ணியம், காந்தீயம் போன்றவை அமைகின்றன.

குழந்தை வளர்ப்புப் பற்றி 'மக்கள் மலர்ச்சி' என்ற தலைப்பில் ஆனந்தவிகடனில் நந்தினி என்ற புனைபெயரில் எழுதியுள்ளார். குமுதினி என்ற பெயரில் வேறொரு கட்டுரை அதே இதழில் வெளியாவதால் ஆசிரியர் இப்பெயரில் எழுதியுள்ளதாகத் தெரியவருகிறது. (மேற்படி, ப.118). ஆனால், இத் தொடர்கட்டுரை 1944இல் நூலாக வெளியிடும் போது குமுதினி என்ற பெயரிலேயே வெளியிடப்பட்டுள்ளது. 15 இயல்களைக் கொண்ட இந்நூல் கருப்பம் தரித்த தாய்மார்களைப் பற்றித் தொடங்கி ஒருபெண் தன் குழந்தைகளை வளர்க்கும் விதம் குறித்து நடைமுறையில் நடக்கும் நிகழ்ச்சிகள் வரை கோடிட்டுக் காட்டியுள்ளார்.

அடுத்ததாகக் கூட்டுக் குடும்பத் தலைவியாக விளங்கிய குமுதினி, உளவியல் தொடர்பான தொடர் கட்டுரையைக் கலைமகளில் 1958ஆம் ஆண்டு எழுதியுள்ளார். மனம் பற்றிய

கொள்கை, சுயநினைவு போன்றவற்றைப் பற்றி ஆங்கில நூல்களைப் பயின்று, பொதுமக்கள் எளிதில் புரிந்துகொள்ள முடியாத இவற்றைத் தெளிவாக இனிய தமிழில் எழுதியிருப்பது அவருடைய ஆளுமைத் திறனை வெளிக்காட்டுவதாகும்.

எதைப்பற்றி எழுதினாலும் எளிய சொற்கள் தெளிவான விளக்கங்கள் கூறுவது இவரது தனிச் சிறப்பாகும். ஆனால் இத்தொடர் கட்டுரை நூலாக வெளிவரவில்லை என்பது வருந்துதற்குரியது. பல இன்னல்களுக்கு இடையே, புத்தகங்கள் பலவற்றைப் படிப்பதைப் பொழுது போக்காகக் கொண்ட இவரால் எழுதப்பட்ட இத்தகு சிறந்த தொடர் கட்டுரை நூலாக வெளிவந்தால் தமிழுலகம் குறிப்பாகப் பெண்ணுலகம் பெருமைப்படும்.

1940இல் பல ஊர்களுக்குப் பயணம் மேற்கொண்டபோது ஏற்பட்ட அனுபவங்களை ஆனந்தவிகடனில் பெண் ஆராய்ச்சி என்ற தலைப்பில் தொடர்கட்டுரையாக எழுதியுள்ளார். பெண்கள் தாய்மைப்பேறு அடைவதோடு அறிவில் சிறந்தவளாகவும் ஆற்றல் நிறைந்தவளாகவும் தன்னை மாற்றிக் கொண்டு இச் சமுதாயத்தில் மேன்மேலும் முன்னேற நினைக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைக்கின்றார். இதன் வழிப் பெண்ணியச் சிந்தனையை ஊக்குவிக்கும் மறுமலர்ச்சிக் கட்டுரையாக இத்தொடர் கட்டுரையைக் குறிப்பிடலாம்.

இதே போன்று பெண்கள் கல்வி கற்பதோடு மட்டுமல்லாமல் சுயமாகச் சிந்திக்கும் திறன் பெற்றிருத்தல் வேண்டும் என்பதை 'அந்தப்புரத்துத் தபால்' என்னும் கடிதம் கூறும். பெண்கள், தாம் உடுத்தும் புடவை மீது வைத்திருக்கும் வரம்பு மீறிய ஆசையை அழகாக வருணித்து, இறுதியில் அவையெல்லாம் விட்டுவிட்டுக் கதராடையை அனுப்பும்படித் தன் தாய்க்கு எழுதும் கடிதம் மிகவும் சுவையாக உள்ளது. படிக்கப்படிக்க அது இன்றுள்ள பெண்களுக்கும் சேர்த்து எழுதப் பட்டது போன்ற உணர்வினை ஏற்படுத்துகிறது. நிறம், துணி வகை போன்றவற்றிற்குப் பெண் கொடுக்கும் முக்கியத்துவத்தை அழகாக எடுத்துக்காட்டியுள்ளார். அதுவும் குறிப்பாக, சீதா தன் தாய்க்கு எழுதுவதுபோல் எழுதப்பட்ட கடிதம் இது. புராணக் கதையை உத்தியாகக் கொண்டு தன் கருத்தை விளக்கியிருப்பது கடிதத்தை ஆர்வத்தோடு படிக்கத் தூண்டுகிறது. இவை எல்லாவற்றிற்கும் மேலாகக் காந்தியின் கதராடையைப் பெண்கள் எல்லோரும் உடுத்த தன்னால் இயன்றவரை எல்லாப் படைப்புகளின் மூலமாகத் தெளிவாகப் பேசியுள்ளார்.

மங்கை எனும் மாத இதழில் குடும்ப வாழ்க்கை எனும் தொடர்கட்டுரை வெளியாகியுள்ளது. ஆனால் ஆண்டு பற்றிய குறிப்பு அறிய முடியவில்லை. (மேற்படி, ப.145).

மொழிபெயர்ப்பு

பன்மொழிகளை அறிந்தவராக இருந்த காரணத்தாலும் இயல்பாகவே கட்டுரை, சிறுகதை எழுதும் எழுத்தாளராக இருந்த தாலும் மொழிபெயர்ப்புப் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். வங்காளத்திலிருந்து இந்தியில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட யோகாயோக் என்ற நாவலைத் தமிழில் மொழி பெயர்த்தார். ஆனந்தவிகடனில் வெளியான மொழிபெயர்ப்பு சற்றுச் சுருக்கப்பட்டதாகவும், 1955இல் த.நா. குமாரஸ்வாமியின் உதவியுடன் முழுமையான மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்ட தாகவும் பிரேமா நந்தகுமார் குறிப்பிடுகின்றார். (மேற்படி, ப.153). மேலும் குமுதினி நாவலில் தாகூர் பெண்ணின் நிலைமை குறித்து வெளிப்படையாகவே விளக்கியுள்ளார். அதுவே அவர் மொழிபெயர்ப்புச் செய்வதற்குக் காரணமாக இருக்கலாம் என்றும் பிரேமா நந்தகுமார் கூறுகின்றார். (மேற்படி, ப.155).

அடுத்ததாகத் தாகூரின் 'காதாம்பரி' என்ற கட்டுரையையும் பரசுராம் வங்காளச் சமுதாயத்தைக் கிண்டல் செய்து எழுதிய லம்பகர்ணன் என்ற சிறுகதையையும் தமிழ்ப் பண்பாட்டிற்கேற்ப மொழிபெயர்த்துள்ளார்.

ஜே.ஸி. குமரப்பாவின் Village Movements மற்றும் Precepts of Jesus ஆகிய இருநூல்களையும் முறையே கிராம இயக்கம் மற்றும் ஏசுநாதர் போதனை என மொழிபெயர்ப்பு செய்துள்ளார். இவற்றில் முதல்நூலான கிராம் இயக்கம் என்ற நூலை மொழிபெயர்க்கும்போது ஆங்கிலத்தில் உள்ள கடினமான சொற்களை மொழிபெயர்ப்பு செய்ய வையாபுரிப்பிள்ளையும் பெ.நா. அப்புஸ்வாமியும் உதவியதாக அவர் குறிப்பிடுகிறார். (மேற்படி, ப.163)

மற்றொரு நூலான 'ஏசுநாதர் போதனை'யில் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு, பிரார்த்தனை, சோதனை மற்றும் கடமை முதலிய வற்றை இணைத்துக் குமரப்பா எழுதியிருப்பதைக் குமுதினி நல்ல முறையில் தமிழ்ப்படுத்தியுள்ளார் (மேற்படி, ப.168).

பிறமொழிகளிலிருந்து தமிழ்ப்படுத்தியதோடு தமிழிலிருந்து ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்துள்ளார். நம்மாழ்வாரின்

திருவாய்மொழியிலிருந்து 100 பாசுரங்கள் தேர்ந்து எடுத்து Sacred Sayings of Nammalvar என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். (மேற்படி, 169). 1983இல் தன் கணவரை இழந்த துயரிலிருந்து அமைதி வேண்டி இவற்றை மொழிபெயர்த்தார். இம்மொழி பெயர்ப்பிலிருந்து ஆசிரியையின் மனப்பக்குவமும் தெரிய வருகின்றது. (மேற்படி, ப.70). மேற்கூறியவற்றை நோக்கும்போது அவருடைய மொழிபெயர்ப்பின் திறனை அறிய முடிகின்றது.

இதழ்களின் பங்கு

குமுதினியின் தந்தை ஸ்ரீனிவாசாச்சாரியார் சிறுகதை எழுத்தாளராக இருந்ததால் இவருடைய கட்டுரை, கதைகளைப் பிரசுரிப்பதில் சிரமம் ஏற்படவில்லை. இதழ்களின் ஆசிரியரோடு அறிமுகம் எளிதாகக் கிடைத்ததாலும், தந்தை மற்றும் கணவன் ஆகியோரின் ஊக்குவிப்பாலும் குமுதினி என்கிற பெயர் கொண்ட ரங்கநாயகி என்ற சிறந்த எழுத்தாளரைத் தமிழுலகம் பெற்றது.

இவர் எழுதிய முதல் கட்டுரை எந்த இதழில் எப்பொழுது வெளியானது என்பது பற்றிய குறிப்பு கிட்டவில்லை. கல்கி கிருஷ்ணமூர்த்தி, அவருக்கு 1938இல் முக்கியப் பாகத்தை அதாவது சிறுகதைப் போட்டிக்கு உ.வே. சாமிநாதையர், இராஜாஜி ஆகியோருடன் நடுவராக இருக்கும் பேற்றினை வழங்கினார் என்பதாகும். (மேற்படி, ப.13). இவருக்குப் பல கட்டங்களில் கட்டுரைகளை எழுதும்படித் தூண்டியவரும் கல்கி கிருஷ்ணமூர்த்தி ஆவார்.

ஆனந்தவிகடன், கலைமகள், மங்கை, பாரதமணி, சுதாமணி போன்ற பல இதழ்களில் இவருடைய படைப்புகள் வெளி வந்துள்ளன. ஒருவருடைய படைப்பு ஓர் இதழில் வெளிவருவதே கடினமாக இருந்த காலக்கட்டத்தில் ஒரு பெண் எழுத்தாளரின் பன்முகப் படைப்புகள் பல இதழ்களில் வெளிவந்திருப்பதை நோக்கும்போது அவருடைய ஆளுமைத்திறன் வெளிப்படும்.

மொழிநடை

தனித்தமிழ் இயக்கம் தோன்றித் தூயதமிழில் எழுத வேண்டும் என்ற நிலை உருவாகி இருந்த காலத்தில் குமுதினி கட்டுரைகளை எழுதினார். இருப்பினும் இவர் நடையில் வடமொழிச் சொற்களின் கலப்பு மிகுந்து காணப்படுகிறது. இவர் பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதால் அக்காலத்தில் இக்கலப்பு தவிர்க்க இயலாத ஒன்று.

இவர் தமிழ், வடமொழி, ஆங்கிலம், இந்தி, வங்காளி முதலான மொழிகளை நன்கறிந்தவராகத் திகழ்ந்தார். அத்துடன் கலைச்சொல் ஆக்கம்பற்றியும் சில கட்டுரைகளில் அவர் விவாதித்துள்ளார். எடுத்துக்காட்டாக ரேடியோ கிராம் என்ற சொல்லிற்கு நிகழ்ச்சி எனச் சென்னை ரேடியோ நிர்வாகிகள் உருவாக்கியதைத் தக்க விளக்கங்களுடன் தவறு எனச் சுட்டிக்காட்டி புரோகிராம் என்பதற்கு நிகழும் விஷயங்களின் ஜாபிதா (மேற்படி, ப.100) என்ற சொல்லை உருவாக்கியதோடு, அதைப் பயன்படுத்துமாறு கூறுகின்றார்.

புல்டோஸர் (மேற்படி, ப.107) என்ற சொல் பற்றிய விளக்கம் இன்று தான் தெரியக் கூடிய நிலையில் இருக்க ஆனால் அவரோ 1940களில் இச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். அவருடைய நூல்களில் காணப்பட்ட சில கலைச்சொற்கள் பின்வருமாறு:

அறிவு உணர்ச்சி	-	awareness (மேற்படி, ப.131)
உளநூல்	-	Psychology (மேற்படி, ப.127)
சுயநினைவு	-	consciousness (மேலது)
சரிவிகிதம்	-	balance (மேலது)
பிராணிநூல்	-	biology (மேற்படி, ப.129)

நிறைவுரை

குமுதினி, சிறுகதை, நாவல் போன்ற படைப்புகளில் தன்னை இனங்காட்டியவர் என்ற பெருமைக்குரியவர்.

ஒரு பெண்மணி அதுவும் ஆசாரமான பிராமணக் குடும்பத்தில் பிறந்த இவர், 1940களில் கலப்புமணம் பற்றி நாவல் எழுதிப் புரட்சி செய்ததை நோக்கும்போது அவருடைய பரந்துபட்ட நோக்கும் ஆளுமைத்திறனும் வெளிப்படும்.

தன்னால் செய்ய முடியவில்லையே என்ற ஏக்கத்தை அவரது படைப்புகள்வழி தந்திருக்கின்றார். பாரதியார் விருதினைப் பெற்றிருந்தாலும் எந்த ஒரு படைப்பிலும் தன்னை உயர்த்தியோ தாழ்த்தியோ எழுதாமல், தன்னைச் சாதாரணப் பெண்ணாகப் பாவித்தவர். காந்தியக் கோட்பாட்டை இறுதிநாள் வரை பின்பற்றியவர்.

சிதறிக்கிடக்கும் இவரது அச்சாகாத படைப்புகளைத் தொகுத்து அச்சேற்ற வேண்டும். அச்சில் வந்தவை மறுபதிப்பு

செய்யப்படுதல் வேண்டும். இதன்வழி இப் பெண்ணியவாதியை அனைவரும் அடையாளம் கண்டு கொள்ள வழி ஏற்படும்.

பெண்ணியம், காந்தீயம், குழந்தை உளவியல் போன்ற பொருண்மைகள் அவருடைய கருப்பொருளாயின. இம்மூன்றைச் சுற்றியே அவருடைய உலகம் அமைந்து விட்டதாலும் இம் மூன்றின் அடிப்படையில்தான் படைப்புகள் எழுத்துப்பட்டுள்ளன.

காது கேட்கவில்லை என்ற குறைபாடு இருப்பினும் அதைப் பொருட்படுத்தாதது மட்டுமின்றி அந்த இழப்பைச் சரிக்கட்டும் வண்ணம் இலக்கியத்திலும் பெண்ணின் நலனிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு சாதனை புரிந்துள்ளார்.

அவருடைய ஆளுமையை வெளிக்காட்டுவதற்கு ஏதுவாகக் கணவரது, தந்தையரது ஊக்குவிப்பு அமைந்தது. அவருடைய உள்ளத்தில் எப்பொழுதும் எதையாவது எழுத வேண்டும், படிக்கவேண்டும் என்று இயல்பாக அமைந்த ஆர்வமே அவரை இந்த அளவிற்கு உயர்நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது.

துணை நூல்கள்

1. ஜே.சி. குமரப்பா, கிராம இயக்கம், குமுதினி (மொ.பெ.), ப.கு.இ., 1946.
2. குமுதினி, திவான்மகள், ஸ்ரீமதி ரங்கநாயகி, கலைமகள் காரியாலயம், சென்னை, 1942.
3. குமுதினி, மக்கள் மலர்ச்சி, சென்னை, கலைமகள் காரியாலயம், சென்னை, 1944.
4. குமுதினி, நந்துவின் பிறந்தநாள், சென்னை, கலைமகள் காரியாலயம், சென்னை, 1946.
5. இரட்டைக் கதைகள், வெள்ளிவிழா வெளியீடு, கலைமகள் காரியாலயம், சென்னை, 1957.
6. பிரேமா நந்தகுமார், பெண்ணியத்தின் விடிவெள்ளி-குமுதினி, வானதிபதிப்பகம், சென்னை, 2007.
7. இணையதளம், கூகுல்.

வை.மு. கோதைநாயகி

சூ. நிர்மலாதேவி

இருபத்து மூன்று வயதில் ஏந்திய எழுதுகோலை இறுதி மூச்சுவரை இயக்கிக் கொண்டேயிருந்த சிந்தனைச் சிற்பி; சமூகச் சீர்திருத்தத்துக்குப் பாடுபட்ட பொதுநலச் சேவகி; இதயங்களை இன்புறுத்தி இளக வைத்த இன்னிசைக் கலைஞர்; நாட்டு விடுதலையுணர்வு ஊட்டிய நாவன்மையாளர்; விடுதலைப் போரில் வெஞ்சிறை புகுந்த வீரத் தியாகி; பெண்கள் தெருவில் தலைகாட்டவும் கூடாது என்றிருந்த சமூகக் கட்டுப்பாட்டைத் தகர்த்தெறிந்து தெருவில் நடந்தது மட்டுமல்ல, மேடையிலும் ஏறிச் சொற்பொழிவாற்றிய முன்னோடி; பெண்விடுதலைக்குப் பேச்சில் மட்டுமல்ல, செயலிலும் வழிகாட்டிய சீர்திருத்தச் செல்வி; புதுமைக் கருத்துகளை எழுத்தில் வடித்து இதயந்தோறும் எதிரொலிக்கச் செய்த எழுத்து மேதை; பல நாடகங்களை எழுதிய நாடக ஆசிரியர்; பல நாடகங்களை மேடையேற்றிய முதல் பெண் இயக்குநர், எண்ணிறந்த இசைப் பாடல்கள் இயற்றிப் பாடிய பாடல் ஆசிரியர்; திரைப்படத்துக்கேற்ற கதைகள் பல படைத்துதவிய திரைக்கதையாசிரியர்; தம் படைப்புகளை வெளியிடுவதற்கென்றே ஒரு மாத இதழ் தொடங்கி நன்கு நடத்தி அதற்கு வெள்ளி விழாக் கண்ட இதழாசிரியர்; முதன்முதலாக மாதர்களுக்கென்றே 'நந்தவனம்' என்ற இதழ் தொடங்கிய புதுமைப்பெண்; வைணவக் கருத்துகளை வளர்ப்பதற்காக 'முகுந்த பக்த ஜனசபா' அமைத்த முதல் வைணவத் திருத்தேவி; தன்னைப் போலவே மேடையேறிப் பேசுவதற்கு ஏ. சரோஜாபாய், கமலா சடகோபன், வசுமதி இராமசாமி முதலிய பலருக்கு உற்சாகமூட்டி உயர்வு பெறச் செய்த உத்தமத்தலைவி என்ற இத்தகைய பெயருக்கும், புகழுக்கும் உரிய சாதனைப் பெண்மணி வை.மு. கோதைநாயகி ஆவார். அவருடைய வாழ்வையும் படைப்பையும் படம்பிடித்துக் காட்டுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

பிறப்பும் பெயரும்

செங்கற்பட்டு மாவட்டம் நீர்வளூர் வெங்கடாச் சாரியாருக்கும் முறப்பாக்கம் கிருஷ்ணமாச்சாரியார் புதல்வி

பட்டம்மாளுக்கும் 1-12-1901இல் சென்னை திருவல்லிக்கேணியில் வை.மு. கோதைநாயகி பிறந்தார். கோதை என்பது ஆண்டாள் பெயர் என்பதால் ஆண்டாள் என்றும் அழைக்கப் பெற்றார். தந்தை வெங்கடாச்சாரியார் காவல் துறையில் உயர் அதிகாரியாக இருந்தார்.

வை.மு.கோதைநாயகி அவர்களின் பெயருக்கு முன்னால் உள்ள வை.மு. என்பதிலுள்ள 'வை' வைணவ மரபு என்றற்குரிய சிறப்பு அடைமொழியாகிய 'வைத்தமாநிதி' என்பதிலுள்ள முதல் எழுத்தைக் குறிப்பதாகும். இந்த வைத்தமாநிதி என்பது திருக்கோளூரில் குடிகொண்டுள்ள இறைவனின் திருப்பெயராகும். இத்திருக்கோளூர் மாவட்டத்தில் நம்மாழ்வார் பிறந்த திருக்குருகூர்க்கு அருகில் இருப்பதாகும். வைணவர்கள் சிறப்பாக வழிபடும் நவ திருப்பதிகளுள் ஒன்றாகும். இப்பதியிலுள்ள வைத்தமாநிதிப் பெருமானையே குலதெய்வமாகக் கொண்டதால் வைணவ மரபில் வந்த கோதைநாயகியாரின் பெயரின் முன்னர் 'வை' இடம்பெற்றுள்ளது.

இவர் பெயரில் அடுத்ததாக உள்ள 'மு' என்பது 'முடும்பை' என்ற திவ்வியத் தலத்தைக் குறிப்பிடுவதாகும். ஆதியில் அந்தத் திருவூரில் குடியிருந்தவர்கள் ஆதலால் முடும்பை என்பதும் இன்னொரு அடைமொழியாக அந்த மரபினை அணி செய்தது. ஆக வைத்தமாநிதி முடும்பை என்பதன் குறியீடே வை.மு. என்பதாகும்.

வளர்ப்பும் மணமும்

வை.மு.கோதைநாயகி 5 மாதக் குழந்தையாக இருந்தபோது தாய் பட்டம்மாள் உலக வாழ்வை நீத்தார். தாய்ப்பால் குடிக்கும் பருவத்தில் தாயில்லாக் குழந்தையை எவ்வாறு காப்பாற்றுவது எனக் கலக்கமுற்றார் தகப்பனார் வெங்கடாச்சாரியார். ஆனால் அடுத்த ஒரே வாரத்தில் வெங்கடாச்சாரியாரின் தம்பி மனைவி கனகம்மாள் ஒரு குழந்தைக்குத் தாய் ஆனாள். அந்தக் கனகம்மாள் தன் குழந்தைக்காகச் சுரந்த பாலைக் கோதைக்கும் பங்கிட்டுக் கொடுத்து அரவணைத்து வளர்த்தாள். துழாயடியில் கிடைத்த ஆண்டாள் சொந்தத் தாயால் வளர்க்கப்படாமல் வளர்ப்புத் தாயால் வளர்க்கப்பட்டு ஞானச் செல்வி ஆனது போல, ஆண்டாள் பெயரான கோதையாரும் வளர்ப்புத் தாயால் வளர்க்கப்பட்டு ஞானச் செல்வியானார்.

1907ஆம் ஆண்டு திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவில் திருவிழாவில் கொடியேற்றும் நாள். அப்புண்ணிய

நாளில் கோதைக்கும் பார்த்தசாரதிக்கும் திருமண நிச்சயதார்த்தம் நடந்தது. அப்போது கோதைக்கு வயது ஐந்தரை. பார்த்தசாரதிக்கு வயது ஒன்பது. மணமகன் அப்போது நான்காம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். பெண்கள் ஏட்டினைத் தொடுவதும் பாவம் என்று கருதிய காலம் அது. எனவே கோதை பள்ளி சென்று பயிலவில்லை. கோதைக்குக் குழந்தை மணம் நடந்ததற்கு அக்காலக்கட்டச் சூழலே காரணமாகும். அக்காலக்கட்டத்தில் குழந்தை மணமே பெரும்பான்மையாக நடைபெற்றது. பாலிய மணத்தைத் தடுக்கும் சாரதாச் சட்டம் உருவாகாத காலம் அது. குழந்தை மணங்கள் அந்தணர் குடியில் மிக அதிகமாக நடைபெற்றன. 'பெண் பருவமடையுமுன்பே திருமணம் செய்து விடுதல் வேண்டும். பருவம் அடைந்த பிறகு திருமணம் செய்வது இழிவு' என்ற தவறான எண்ணம் நிலவிய காலம் அது.

'ஏக சந்தக் கிராகி' வை.மு.கோதைநாயகி

வை.மு.கோகைநாயகியின் திருமணத்துக்கு முன்பே சிற்றப்பா சீனிவாச ஆச்சாரியார் தம் இரு பெண்களுக்கும் சங்கீதம் கற்பித்து வந்தார். அப்பெண்கள் இசை பயிலும்போது அவர்கள் அருகிலிருந்து மௌனமாகக் கவனிக்கும் வை.மு.கோதை நாயகி இசை முழுவதையும் வாயால் முணுமுணுத்து மனத்தில் பதிய வைத்துக் கொள்வார். மனத்தில் பதிந்த இசையை அப்படியே வாயில் பாடிக் காட்டி விடுவதில் வல்லவராக இருந்தார். வை.மு.கோதைநாயகியின் திறமையைக் கண்டவர்கள் அவரை 'ஏகசந்தக்கிராகி' என்று பாராட்டுவார்கள். ஒருமுறை கேட்டவுடன் அதை அப்படியே மனத்தில் கொள்பவர் என்பது 'ஏகசந்தக்கிராகி' என்பதன் பொருளாகும். ஏகசந்தைக் கிராகி என்றும் இதனைக் கூறுவார்கள். திவ்வியப்பிரபந்தம் பாடம் கேட்கும்போது, ஆசிரியர் முதலில் சொல்லுவார். மாணவர்கள், அவர் சொன்னபடியே (கையில் புத்தகம் இல்லாமல்) கூறுதல் வேண்டும். அவ்வாறு ஆசிரியர் சொல்லுவது 'சந்தை சொல்லுதல்' என்பதும், கேட்பது 'சந்தை கேட்டல்' என்பதும் வைணவ மரபுப் பேச்சாகும். ஆசிரியர் ஒருமுறை சொன்னாலே மனத்தில் பதித்துக் கொள்ளும் ஆற்றலுடையவர் 'ஏக சந்தைக்கிராகி' எனப்பட்டனர். கிராகி என்பது கிரகித்துக் கொள்பவர் என்று பொருள்படும் சொல்லாகும்.

வை.மு.கோதைநாயகியும் தமிழும்

வை.மு.கோதைநாயகி பள்ளி சென்று முறையாகப் பயிலவில்லை. எனினும் 1908 ஆம் ஆண்டு சில நாட்கள் மட்டும்

பள்ளிக்குச் சென்றதாகத் தெரிகின்றது. அந்தச் சில நாட்களிலும் தமிழ் கற்கவில்லை. தெலுங்கு எழுத்துகள் மட்டுமே கற்கத் தொடங்கினார். அதற்குக் காரணம் வை.மு.கோதைநாயகியின் மாமியார் ஆந்திர நாட்டு நெல்லூரைச் சேர்ந்தவராக இருந்ததும், வீட்டு மொழியாகத் தெலுங்கு அமைந்திருந்ததுமாகும். ஆகவே வை.மு.கோதைநாயகி தன் இருபது வயது வரை தமிழ் எழுதவோ, படிக்கவோ அறியாதவராகவே இருந்தார்.

கதை சொல்லும் காலம்

1924 முதல் வீட்டிலுள்ள குழந்தைகளுக்குப் பழைய கதைகளைக் கூறத் தொடங்கினார் வை.மு.கோதைநாயகி. அவருடைய கதை சொல்லும் பாங்கு பெரியவர்களையும் கவர்ந்து இழுத்து அமர வைப்பதாக இருந்தது. எனவே நாள்தோறும் கதை சொல்வதற்கென்றே நேரம் ஒதுக்கித் தெனாலிராமன், மரியாதைராமன், பீர்பால், மதனகாமராஜன், விக்கிரமாதித்தன், பஞ்சதந்திரக் கதைகள், கீதோபதேசக் கதைகள் போன்றவற்றையும் இடையிடையே இராமாயணம், மகாபாரதம், பாகவதக் கதைகள் மற்றும் கிராமிய நாடோடிக் கதைகளைச் சுவைபடக் கூறினார். ஒரு கட்டத்தில் பழைய கதைகள் அனைத்தும் சொல்லித் தீர்ந்து விட்டன என்ற நிலை ஏற்பட்டபோது புதிய கதைகளைப் படைத்துக் கூறவேண்டிய தேவை அவருக்கு ஏற்பட்டது. இதனால் பழைய கதைகளின் அடிப்படையில் பல புதுக்கதைகளைக் கற்பனையில் உருவாக்கி விலங்கு, பறவை, இராஜா, இராணி பாத்திரங்களைக் கொண்ட கதைகளைப் படைத்துக் கூறினார். இவற்றிலும் ஒரு விதச் சலிப்பு தோன்றிய பொழுது, சமூகக் கதைகளை உருவாக்கிக் கூறினார். புதுக்கதை புனையும் ஆர்வம் காரணமாகப் பல நாடகக் கம்பெனிகள் நடத்திய நாடகங்களை வை.மு.கோதைநாயகி சென்று பார்த்தார். இதற்கு அவரது கணவர் பார்த்தசாரதி மிகவும் உறுதுணையாக இருந்தார். அந்நாட்களில் தலை சிறந்த நாடக நிறுவனங்களாகத் திகழ்ந்த அன்னையர் நாடகக் கம்பெனி, மதுரை பாய்ஸ் கம்பெனி, தெ.பொ.கிருஷ்ணசாமிப் பாவலர் கம்பெனி, சங்கரதாஸ் சுவாமிகளின் பாலமீனரஞ்சனி சங்கீத சபா ஆகியவை நடத்திய பல நாடகங்களை வை.மு.கோதைநாயகி சென்று தொடர்ந்து கண்டு வந்தார்.

வை.மு.கோதைநாயகியின் நாடகப் படைப்பாக்கங்கள்

பல நாடகங்களைப் பார்த்து நாடகக் கருத்துகளைத் தெரிந்து கொண்ட வை.மு.கோதைநாயகி தானும் நாடகம்

படைக்க ஆர்வம் கொண்டார். கருத்துகளும் கற்பனைகளும் உள்ளத்துள் ஊற்றெடுத்துக் குமிழியிட்டும் தமிழ் எழுதவோ, படிக்கவோ அறியாதவராதலின் நாடகம் எழுதி வெளியிடும் வழி அறியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தார். அந்நிலையில் பக்கத்து வீட்டில் வசித்த இளம்பருவத் தோழியான பட்டம்மாள் என்பவர் உதவிக்கு வந்தார். கதை சொல்லச் சொல்லத் தான் எழுதித் தருவதாகக் கனிவுரை நல்கினார். ஜார்ஜ் பெர்னாட் ஷாவின் படைப்புகள், நம்மாழ்வாரின் திருவாய்மொழி, கவியரசு கண்ணதாசனின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் ஆகியன அவர்களால் சொல்லப்பட்டுப் பிறரால் எழுதப்பட்டனவே. ஆசாரியன் கூறக்கூறச் சீடன் ஓலையில் எழுதுவதை வைணவர்கள் 'பட்டோலை கொள்ளுதல்' என்று கூறுவார்கள். அதுபோன்று வை.மு.கோதைநாயகி வாய்மலரப் பட்டம்மாள் பட்டோலை கொண்டார்.

பட்டோலை முறையில் உருவான நாடகம் 'இந்திர மோகனா' என்பதாகும். வை.மு.கோதைநாயகியின் முதல் படைப்பு இதுவேயாகும். நாடகம் காணச் சென்றபோது பழக்கமான திருவல்லிக்கேணி நோபிள் அச்சக உரிமையாளரின் மனைவியின் ஆர்வத்தால் அவ்வச்சகத்தில் 1924ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 'இந்திர மோகனா' அச்சுத் தேர் ஏறி உலா வந்தது. வை.மு.கோ.வின் முதல் படைப்பு வெளியிடப்பட்டவுடன் அக்காலத்தின் முன்னணிப் பத்திரிகையான சுதேசமித்திரனில் நூல் வெளியீடு குறித்த விளம்பரம் வெளியிடப்பட்டது. விளம்பரச் செலவு ஒரு ரூபாய். அந்நூல் எழுதுவதற்காக வை.மு.கோதைநாயகிக்குப் பணம் எதுவும் அளிக்கப்படவில்லை. நூல் ஆசிரியர் என்ற முறையில் 250 நூற்பிரதிகள் மட்டும் அளிக்கப்பட்டன.

இந்திரமோகனா – புகழுரையும் பாராட்டும்

நாடகம் வெளிவந்ததும் இளம் வயதிலேயே மிகச் சிறந்த படைப்பைக் கொண்டு வந்ததற்காக வை.மு.கோதைநாயகியைப் பாராட்டிக் கடிதம் எழுதியவர்களும், கவிதை எழுதியவர்களும் மிகுதி. நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியார், வடுவூர் துரைசாமி ஐயங்கார், நாவல் உலகமேதை ஜே.ஆர். ரங்கராஜு, வரகவி அ. சுப்பிரமணிய பாரதியார் போன்ற அறிஞர் பெருமக்களுக்கு இந்நாடகம் அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிகின்றது. குயின் மேரீஸ் கல்லூரித் தமிழ்ப் பண்டிதராக இருந்தவரும், சென்னைப் பல்கலைக்கழகத் தேர்வுக் குழுத்

தலைவருமான கா. நமச்சிவாய முதலியார், அரசுக் கையெழுத்துப் பிரதி நூலகத்தின் தமிழ்ப் பண்டிதர் டி. ரங்காச்சார்யா, திருவல்லிக்கேணி பண்டிதை விசாலாட்சி அம்மாள், எழுத்தாளரும் பத்திரிகையாளருமான மயிலை சகோதரி சித்தாமணி வி. பாலம்மாள், தலைசிறந்த நாவலாசிரியர் ஜெகதாபி ரகுபதி ரெங்கராஜு ஆகியோர் கவிதை, கடிதம் எழுதி வை.மு.கோதைநாயகியைப் பாராட்டினர். இவர்களின் பாராட்டு, புகழுரைகளைத் தாங்கி 1951இல் இந்நூலின் இரண்டாம் பதிப்பு வெளிவந்தது.

எழுத்துப் பயிற்சியும் முதல் நாவலும்

முதல் நூல் எழுதி வெளிவந்து அதற்கு நல்ல வரவேற்பும் இருந்தது. வை.மு.கோதைநாயகியின் எழுத்தார்வத்தைத் தூண்டியது. தான் எழுத்தறிவு பெறுதல் மிகுத் தேவை என உணர்ந்ததும், பட்டோலை கொண்ட பட்டம்மாளையே ஆசிரியையாகக் கொண்டு எழுத்தறிவு பெற முனைந்து சின்னாட்களில் எழுத்திலும் படிப்பிலும் ஓரளவு தேர்ச்சி பெற்றவராக ஆனார். எழுத்தறிவு பெற்ற பிறகு முதன்முதலாக வை.மு.கோதைநாயகியின் கையெழுத்தில் உருவான பெருமை பெற்ற முதல் நாவல் வைதேகி என்பதாகும். வை.மு.கோதை நாயகிக்கு எழுதத்தெரிந்தாலும் சொற்களைத் தவறின்றி எழுத வரவில்லை. ஒவ்வொன்று என்பதை 'ஒவ்வுன்று' என்று எழுதினார். ரகர, றகர வேறுபாடு முதலியவற்றையும் அறியாதவராக இருந்தார். ஆயினும் முயற்சியைக் கைவிடாமல் எழுதிக்கொண்டே இருந்தார்.

அவர் பேனா முனையில் வைதேகிக்குப் பின் இரண்டாம் நாவலான பத்மசுந்தரம் உருவானது.

வடுவூராரைப் பின்பற்றிய வை.மு.கோதைநாயகி

வை.மு.கோதைநாயகியின் முதல் நாடகத்தைப் படித்துப் பாராட்டுரை எழுதிய வடுவூரார் தன் வீட்டுக்கு ஒரு முறை வர வேண்டும் என்ற தன் அவாவினையும் வெளியிட்டிருந்தார். அவர் அழைப்பின்பேரில் வை.மு.கோதைநாயகியின் கணவர் பார்த்தசாரதி, 'வைதேகி', 'பத்மசுந்தரம்' என்ற வை.மு. கோதைநாயகியின் இரு நாவல்களுடன் அவர் இல்லம் சென்றார். படித்துப் பார்த்த வடுவூரார் இருநாட்கள் கழித்து வை.மு.கோதைநாயகியின் வீடு தேடி வந்து, இரு நாவல்களின் கதையமைப்பும், கற்பனையும், கருத்தும் சிறப்பாக இருப்பதாகப் பாராட்டினார்.

சிற்சில எழுத்துப் பிழைகள் உள்ளன. அவற்றைத் திருத்திவிட்டால் பண்பட்ட எழுத்தாக மாறிவிடும் நானே திருத்தித் தருகிறேன். பிறகு அச்சிடலாம்.

என்றார் வடுவூரார்.

'மனோரஞ்சனி' என்ற மாத இதழ் ஒன்றை வடுவூரார் நடத்தி வந்தார். தம் எழுத்துகளை அவ்விதழில் தொடர்ந்து வெளியிட்டுப் பின்னர் நூல் ஆக்குவது அவர் வழக்கம். அதே முறையில் வை.மு.கோதைநாயகி தன் நாவல்களை ஓர் இதழில் வெளியிட்டுப் பின்னர் நூலாக்குவது நலம் என்று ஆலோசனை கூறினார்.

அவ்வமயம் 'ஜகன்மோகினி' என்ற மாத இதழ் இரண்டாண்டுகளாக நடந்து வந்தது, சில காரணங்களால் அதை நடத்தியவர்கள் நிறுத்திவிட நேர்ந்தது. அந்த இதழையே வாங்கி நடத்தலாம் என்று வடுவூரார் எடுத்துக்கூறினார். அதன்படி ஜகன்மோகினி இதழின் பொறுப்பினை வை.மு.கோதைநாயகி ஏற்றுக் கொண்டார். இதழை அச்சிட்டுத் தர நோபிள் அச்சக முதலியார் முன் வந்தார்.

இதழ் தொடங்கிய நாளில் சமயப்பொதுமை

கோதையார் பிறந்தது வைணவ மரபு என்றாலும் பெருமாள் தவிரப் பிற தெய்வங்களையும் அவர் வழிபடுவதுண்டு என்பதற்குச் சான்றாக 1925ஆம் ஆண்டு ஆவணி மாதம் பிள்ளையார் சதுர்த்தியன்று 'ஜகன்மோகினி' வை.மு.கோதைநாயகி பொறுப்பில் உலாப் புறப்பட்டதை எடுத்துரைக்கலாம்.

வடுவூராரின் உதவி

ஜகன்மோகினி இதழ் 48 பக்கங்களுடன் 1000 பிரதிகள் முதன்முதலாக அச்சாயிற்று. வைதேகி நாவல் தொடர்ந்து வெற்றி நடைபோட்டது. மாதந்தோறும் விற்பனை அதிகரித்து வந்தது. சந்தாதாரர் மட்டும் ஆயிரவர்க்கு மேல் சேர்ந்தனர். சுமார் நான்கு மாதகாலம் வடுவூரார் எழுத்துப் பிழை திருத்தி உதவியதாகத் தெரிகிறது.

முதல் மொழிபெயர்ப்பு

ஜகன்மோகினி தொடங்கிய இரண்டாவது ஆண்டில் வை.மு. கோதைநாயகியின் 'பத்மசுந்தரம்' நாவலைத் தாங்கி அது வெளியிடப்பட்டது. கேரளம் ஆலப்புழையைச் சேர்ந்த ஒரு

பதிப்பாசிரியர் 'பத்மசுந்தரம்' நாவலை மலையாள மொழியில் மொழிபெயர்த்து வெளியிட வை.மு.கோதைநாயகியிடம் அனுமதி வேண்டிப் பெற்று மலையாளப் பதிப்பை வெளியிட்டார். இதனால் வை.மு.கோதைநாயகியின் நாவல்களில் பிறமொழி ஒன்றில் மொழிபெயர்க்கப்பட்ட முதல்நாவல் என்ற பெருமைக்குரியதாக 'பத்மசுந்தரம்' நாவல் ஆனது. இது அக்காலத்து நாவல் எதற்கும் கிட்டாத பெரும் பெருமை என்று அறியப்படுகிறது.

தனியாக வந்த முதல் நாவல்

ஜகன்மோகினி இதழில் மூன்றாம் ஆண்டு வெளிவந்த தொடர் நாவல் 'ராதாமணி' என்பதாகும். வை.மு.கோதைநாயகியின் எழுத்து வேகத்துக்கு 'ஜகன்மோகினி' இதழ் ஈடு கொடுக்காததால் அவ்விதழில் வருவது தவிர, ஆண்டுதோறும் ஒன்றிரண்டு தனி நாவல்களையும் வை.மு.கோதைநாயகி எழுதத் துவங்கினார். அவ்வாறு தனியாக வெளிவந்த முதல் நாவல் சண்முக விஜயம் என்பதாகும்.

இதழாசிரியர் வை.மு.கோதைநாயகி

வை.மு.கோதைநாயகி நாவலாசிரியராக மட்டுமின்றி மிகச் சிறந்த இதழாசிரியராகவும் திகழ்ந்தார். தன்னுடைய நாவலை வெளியிடுவதற்கென வடுவூராரைப் பின்பற்றி இதழ் தொடங்கி நடத்திய வை.மு.கோதைநாயகி அவ்விதழைப் பதிவு செய்து பல செய்திகளையும் உள்ளடக்கிய மிகச் சிறந்த இதழாக ஜகன்மோகினி இதழை வளர்த்தெடுத்தார். பி.ஸ்ரீ. ஆசார்யா, சுத்தானந்த பாரதியார், இராஜாஜி, சோமசுந்தர பாரதியார், டி.கே. சிதம்பரநாத முதலியார் போன்றோரின் எழுத்துகளைத் தாங்கி ஜகன்மோகினி இதழ் வெளிவந்தது. தானும் நாவல் மட்டு மல்லாது ஆளவந்தார், பெரியவாச்சான் பிள்ளை, திருமலைநம்பி, பெரிய நம்பி முதலிய வைணவப் பரமாச்சாரியார்களின் திவ்விய வரலாறுகளையும் பிரபாவங்களையும் 'யாத்திரை அனுபவம்' என்ற தலைப்பில் தொடர் கட்டுரைகளையும் எழுதினார். தலையங்கங்களையும் சிறுகதைகளையும் இசைப்பாடல்களையும் எழுதினார். இதனால் 48 பக்கங்களில் தொடங்கிய இதழ் 72 பக்கங்களாக உடல் பூரித்தது. ஆண்டுச் சந்தாவும் ஒன்றரை ரூபாயிலிருந்து இரண்டே கால் ரூபாயாக உயர்ந்தது. சந்தாதாரர் தொகையும் விற்பனையும் அதிகரித்தன.

சொந்தத்தில் அச்சகம் இருந்தால்தான் ஜகன்மோகினியின் வளர்ச்சியினைச் சமாளிக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டதால்

1937ஆம் ஆண்டு ஜகன்மோகினி சொந்த அச்சகத்தில் அச்சானது. அச்சகத்தைத் திறந்து வைத்தவர் அந்நாள் முதன் மந்திரியாக இருந்த சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் (இராஜாஜி) அவர்களாவார்.

1941இல் ஜகன்மோகினி 10,000 பிரதிகளாக வளர்ந்தது. அக்காலத் தமிழ் இதழ் வரலாற்றில் அது ஓர் அற்புதமான சாதனையாகும். ஏனெனில் அன்று மிகப் பிரபலமான 'ஆனந்த விகடன்' கூட அதற்கும் குறைவாகவே அச்சானதாக அறியப் படுகின்றது. இதழியல் துறை வரலாற்றில் வை.மு.கோதைநாயகி அவர்களின் அரிய சாதனையாக இதனைக் கருதலாம்.

வெளிநாடுகளிலும் ஜகன்மோகினியின் ஊர்வலம் நடந்தது. மலேயா, கோலாலம்பூருக்கு 1500 பிரதிகளும், சிங்கப்பூருக்கு 200 பிரதிகளும், பினாங்குக்கு 100 பிரதிகளும் இரங்கூனுக்கு 200 பிரதிகளும் ஏஜென்டுகள் மூலமும் சந்தாதாரர்களுக்குத் தபால் மூலமும் அனுப்பப்பட்டன. சிலோனில் 1000 இதழ்கள் விற்றுத் தீர்ந்தன. ஆப்பிரிக்காவுக்கும், மொரீஷியசுக்கும் சில நூறு இதழ்கள் சந்தாவாக அனுப்பப்பட்டன.

உலகப் பெரும்போர் என்ற உருவில் 1942இல் ஜகன்மோகினி இதழுக்குச் சோதனை வந்தது. ஆனால் அச்சோதனைகளால் ஜகன்மோகினி துவண்டுவிடவில்லை. போர் அபாயம் கருதிச் சென்னை நகர வாசிகள் சென்னையை விட்டுக் குடிபெயர்ந்து சென்றனர். அப்போது ஜகன்மோகினி இதழையும் சென்னை தாம்பரத்தை அடுத்த சிங்கப்பெருமாள் கோவிலுக்கு அதன் அச்சகத்துடன் கொண்டு சென்றார் வை.மு.கோதைநாயகி. இதழ் இடம் பெயர்ந்தாலும் அதன் வெற்றிப் பவனியில் தடை ஏற்படவில்லை. ஆனால் போரின் காரணமாக வெளிநாடுகளுக்கு இதழ் அனுப்ப இயலாமல் போனதால் பத்தாயிரம் பிரதிகள் ஏழாயிரமாகச் சுருங்கின.

இதழுக்கு வெள்ளி விழாவும் பாராட்டும்

உலகப் பெரும்போர் முடிந்த பிறகு மீண்டும் 'ஜகன்மோகினி' இதழைச் சென்னைக்குக் கொண்டுவந்த வை.மு.கோதைநாயகி 1949இல் இதழின் வெள்ளிவிழாவைக் கொண்டாடினார். விழாவுக்கு அந்நாள் முதல்வர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் தலைமை தாங்கினார். வங்காளக் கவர்னராக இருந்த இராஜாஜி வாழ்த்துச் செய்தி அனுப்பினார். நாவலாசிரியர் ஜே.ஆர். ரங்கராஜு, இதழாசிரியர் இராம. சடகோபன், பேராசிரியர் ஏ. எஸ். சீனிவாச

ராகவன், குகப்பிரியை உட்படப் பலர் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

எழுத்தாளர்கள் சார்பில் சரசுவதி, இலக்குமிகளின் அருளுக்கு அடையாளங்களாக வெண்முத்தும், மாணிக்கமும் சேர்த்து, ஜகன்மோகினியின் சின்னமான அமுதக் கலசம் ஏந்திய மோகினியின் உருவம் பதித்து, "கலாரத்தினம்" எனப்பட்டம் பொறித்த பொன்னாரம் ஒன்று பரிசாகச் சூட்டப்பட்டது. கவியோகி சுத்தானந்த பாரதியார் விழாவில் பேசியபோது,

> *தமிழ்நாட்டின் முன்னணிப் பத்திரிகைகளில் ஜகன்மோகினியும் ஒன்று அதில் அருள், பொருள், அழகு, அன்பு எல்லாம் சேர்ந்து விளங்குகின்றன. இன்று தமிழ்நாட்டில் தொடர்கதை எழுதுபவர் களில் முதன்மை வகிப்பவர் வை.மு.கோதைநாயகி. இவரை 'நாவல் ராணி' என்று சொல்லலாம். 'ஜகன்மோகினி' வாயிலாக இவர் 'கதாமோகினி'யாக விளங்குகிறார்.*

என்று பாராட்டுடன் "கலாசேவகி வை.மு.கோதைநாயகி" எனப் பொறிக்கப்பட்ட தங்கமெடல் ஒன்றையும் பரிசாக அளித்தார்.

படைப்பாளர் வை.மு.கோதைநாயகி

வை.மு.கோதைநாயகி வழங்கிய வளநூல்கள் மொத்தம் 115 ஆகும். கட்டுரை இறுதியில் அவை அகரவரிசையில் தரப்பட்டுள்ளன. அவர் தன் திருக்கரங்களால் எழுதிய கடைசி நாவல் 'கிழக்கு வெளுத்தது' என்பதாகும். அது 1958 டிசம்பரில் வெளிவந்தது. துப்பறியும் ராஜாராம் நாயுடு, குளிர்ந்த நெஞ்சம் ஆகிய நாவல்கள் முழுமை பெறாமல் பாதியிலேயே நின்றுவிட்டன.

வை.மு.கோதைநாயகியின் எழுத்துகள் உயிருள்ளவை; உணர்வினைத் தூண்டுபவை; உள்ளங்களைச் செவ்வனே நிறுத்துபவை. தமிழ் மொழிக்கு வளம் சேர்த்தவை. வை.மு.கோ. நாவல்களில் பெரும்பாலும் அறிவுரைகளும், அறவுரைகளும் தொட்ட இடமெல்லாம் காணப்படும். அவற்றை மனத்தில் படும்படிச் சுருங்கிய சொற்களில் சொல்வது அவர்தம் இயல்பு. நாவல்களுக்குச் சிறப்புச் சேர்ப்பவை கற்பனையும், வருணனையும் என்பது மறுக்க முடியாத உண்மை. இவரின் கற்பனைகள் கவர்ச்சியானவை; கருத்துக்கு இனியவை; புதிதானவை;

வருணனைகளோ வளமானவை; இலக்கியத்துக்குச் சுவையும் பொலிவும் தரும் புத்தம் புதிய உவமைகளை வைமுகோதைநாயகியின் படைப்புகளில் பரக்கக் காணலாம். அவற்றுட் சில:-

"க்ஷயரோகப் புழுவைப் போல"

"சோடா வாட்டர் காஸ் போன்ற ஆத்திரம்"

"பீரங்கித் தொனியில் பஞ்ச ஜதி முழக்கம்"

"வெள்ளைத் துணியில் சாயம் துளிபட்டது போல"

"கிராமபோன் போன்று மூச்சுவிடாமல் பேசுகிறேன்"

வை.மு.கோதைநாயகியின் படைப்புகளில் பற்பல பழமொழிகள் பக்கந்தோறும் வந்து சுவை கூட்டியுள்ளன.

"உள்ளே வயிறு எரிய உதடு பழம்சொரிய"

"ஒரே கல்லில் நான்கு மாங்கனிகளை அடிப்பதுபோல"

"காக்கா உட்கார்ப் பனம்பழம் விழுந்ததுபோல்"

"பாம்பின் காலைப் பாம்புதான் அறியும்"

"மதிற் சுவரின் மேல் பூனை"

இவரது எல்லாக் கதைகளும் 'உலகம்' அல்லது 'உலகளந்த உத்தமன்' போன்று 'உகர' முதலாகத்தான் தொடங்கும். 'இருக்கிறது' போன்ற 'துகர' இறுதிச் சொல்லால்தான் முடியும்.

ஆயிரம் பாத்திரங்கள் படைத்தாலும் அத்தனைக்கும் தனித்தனிப் பண்புகளைத் தரும் வை.மு.கோதைநாயகி தன் படைப்பின் இடையே வள்ளுவர், பாரதி முதலியோர் வாக்குகளை மணிமிடைப் பவளமாக்கிக் கோத்து அணி செய்வார்.

சில தனிப் பாடல்களும், பாசுரங்களும் அந்த உரை நடையில் சேர்ந்து அழகு பெறும்.

வடமொழிச் சொற்கள் பலவற்றை அப்படியே கையாளும் அம்மையார், சில அரிய தனித்தமிழ்ச் சொற்களையும் பயன்படுத்தத் தவறமாட்டார். சில வடசொற்களுக்குத் தக்க தமிழ்ச் சொற்களையும் படைக்கும் ஆற்றல் அவருக்கு இயல்பாகவே அமைந்திருந்தது.

இலட்சியம் என்பதை எதிர்பார்ப்பு என்ற இனிய தமிழ்ச் சொல்லாலேயே குறிப்பிடுவார்.

வை.மு.கோதைநாயகி தம் நூல்களுக்குப் பெயரிடும்போது பெரும்பாலும் கதாநாயகன் - நாயகி பெயர்களை இணைத்தே பெயரிடுவார். பத்மசுந்தரம், பரிமளகேசவன், மங்கள பாரதி, மாதவமணி என்பவற்றைக் குறிப்பிடலாம்.

நாவல்களின் அத்தியாயத் தலைப்புகளைச் செய்யுளடி போல் கவர்ச்சியாக இடுவார். ஒரு பிடிச் சோறு : "அன்புக்குப் பஞ்சம் ஆசைக்குத் தஞ்சம்" சான்றாகும். நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தாரின் பெண்கள் மறுமணம் (விதவாவிவாகம்) செய்வதை விரும்புவதே இல்லை. அவ்வாறு யாரேனும் செய்தால் அவர்களை இழிவுபடுத்தி விலக்கி விடுவர். 'ஜகன்மோகினி' கதைகளில் பல விதவாவிவாகத்தை ஆதரிப்பவை மட்டுமல்ல; தூண்டுபவையும் ஆகும். அவற்றைப் படித்து வந்த நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் வை.மு. கோதைநாயகியின் புரட்சி புதுமைக் கருத்துகளை ஏற்பது நலம் என்ற முடிவுக்கு வந்தனர். விதவாவிவாகம் செய்வது என்று கூட்டம் கூடி முடிவெடுத்தனர். எனவே பொழுதுபோக்குக்காகவே கதைகள் எழுதப்படுகின்றன என்பது பொய்யுரை என்பதையும், அக்கதைகளுக்குச் சமூகத்தின் அடித்தளத்தையே மாற்றும் ஆற்றல் உண்டு என்பதையும் வை.மு.கோ. தன் கதைகள் மூலம் சாதித்தார்.

இவரது நாவல்களில் 5 நாவல்கள் திரைப்படங்களாக வெளிவந்துள்ளன. அவை:

1. "அனாதைப் பெண்" என்ற சமூகக் கதை 1937இல் ராஜா சாண்டோவை இயக்குநராகவும், எம்.கே. ராதாவைக் கதாநாயகனாகவும் கொண்டு வெளிவந்தது. எம்.கே. ராதா. பி.யு. சின்னப்பா, கொத்தமங்கலம் சுப்பு ஆகியோரைத் திரையுலக நடிப்பு மேதைகளாக இப்படம் உருவாக்கியது.

2. ராஜமோகன் என்ற சமூகக்கதை 1937இல் வெளிவந்தது. காளி, என். ரத்தினம் நகைச்சுவைக்காகப் பெயர் பெற்ற படம் இது.

3. தியாகக் கொடி என்ற தேசியக் கதை 1937இல் நேஷனல் மூவிடோன் தயாரிப்பில் வெளிவந்தது.

4. நளினசேகரம் என்ற தேசியக் கதை 1942இல் கோவை வெங்கடாசலம் செட்டியார் தயாரிப்பில் வெளியிடப்பெற்றது.

5. தயாநிதி என்ற நாவலின் கதை 'சித்தி' என்ற பெயரில் 1968இல் கமால் பிரதர்ஸ் தயாரிப்பில் கே.எஸ். கோபாலகிருஷ்ணன் இயக்கத்தில் வெளிவந்தது இது 'இனி நடிப்பதில்லை' என்று

அமெரிக்காவுக்குப் போய்விட்ட நடிகை பத்மினி மீண்டும் வந்து நடித்த படமாகும். ஆறு சிறப்பு விருதுகள் பெற்ற இப்படத்தின் மூலம் வை.மு.கோதைநாயகி சிறந்த கதாசிரியருக்கான விருதினைப் பெற்றார்.

இவர் சேர்ந்தாற்போல் 10 ஆண்டுகள் திரைப்படம் - சென்ஸார் போர்டு உறுப்பினராக இருந்தார். திரைப்படத்தில் காணப்படும் பல தீமைகளைக் கண்டித்துப் பொறுப்பாகப் பணியாற்றியுள்ளார்.

இசையரசி வை.மு.கோதைநாயகி

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி திருக்கோவிலில் ஆண்டுதோறும் இராப்பத்து, பகல்பத்து திருவிழாக்கள் நடைபெறும். அப்போது தலைசிறந்த இசைக் கலைஞர்களின் கச்சேரி நடைபெறும். அக்காலத்தில் வைதீகக் குடும்பப் பெண்கள் இசைக் கச்சேரிகளுக்குச் சென்று கேட்கும் வழக்கம் கிடையாது. ஆனால் வை.மு.கோதைநாயகியின் கணவர் இளமையிலேயே முற்போக்குக் கருத்துடையவராக இருந்ததால் சமூக வழக்கங்களைப் பொருட்படுத்தாமல் கச்சேரிகளுக்குத் தன் மனைவியை அழைத்துச் செல்வார். அப்போது வை.மு.கோதை நாயகியின் வயது பத்து. கச்சேரியில் பாடப்படும் பாடல்களை, முன்னரே கண்டபடி "ஏகசந்தக்கிராகி" ஆனதால் பாடியபடியே மனத்தில் பதித்துக் கொள்ளும் ஆற்றல் பெற்றிருந்தார் வீட்டில் வந்து அப்படியே பாடிக் காட்டுவார். எழுத்தறிவு பெறாமையால் சொற்சோர்வு (பிழை) தோன்றும். அவர்தம் தந்தையார் வெங்கடாச்சாரியார் பிழைபட்ட சொற்களைத் திருத்துவார். பரம்பரை வைணவக் குடும்பம் ஆனதால் வீட்டில் அறைதோறும் பெருமாள் திருவுருவப்படம் இருக்கும். மாலையில் விளக்கேற்றிய வுடன் தாம் கேட்டறிந்த இசையைப் பாடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார் வை.மு.கோதைநாயகி.

திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் கோவில் தெருவில் உள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் சனிக்கிழமை மாலைதோறும் மயிலை சாரதா ஐக்கிய சங்கத்தினர் கூடுவர். உயர்நீதிமன்ற நடுவர் சதாசிவ ஐயரின் துணைவியார் லேடி சதாசிவ ஐயரும், கலாக்ஷேத்திரம் ருக்மணி அருண்டேலும் அங்கு வருவர். பெண் கல்வி கூடாது என்றிருந்த அக்காலக் கட்டத்தில் பள்ளிக்குச் செல்லும் பேறு பெற்றவரும், பெண் கல்வி போன்ற சமூகத் தொண்டுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவரும், வை.மு.கோதைநாயகியின் அடுத்த வீட்டுக்காரருமான ஆர்.எஸ்.

சுபலட்சுமி அம்மையார் அச்சங்கக் கூட்டத்துக்கு, பெண்கள் கூட்டந்தானே! ஒரு முறை வரலாமே' என்று உடன் அழைத்துச் சென்றார். கூட்டத்தில் 'இவள் நன்றாகப் பாடுவாள்' என்று அறிமுகப்படுத்திப் பாடவும் வற்புறுத்தினார். மிகுந்த தெளிவாகவும், இசைநெறி பிறழாமலும் அமைந்த குலசேகர ஆழ்வாரின் அப்பாடல் அனைவர் இதயங்களையும் கவர்ந்ததால் வாரந்தோறும் அழைப்பு கோச்சு வண்டியில் வந்தது.

கவிக்குயில் சரோஜினி தேவியாரைத் தலைவராகப் பெற்ற அனைத்திந்தியப் பெண்கள் சங்கம் சென்னையில் இருந்தது. பாரதியாரின் 'பாரத சமுதாயம்', 'வந்தே மாதரம் என்போம்' என்ற பாடல்களைப் பாடும்படிச் சரோஜினியும் வேண்ட, வைமு.கோதை நாயகி பாடிப் பாராட்டுப்பெற்றார். இவர் நன்றாகப் பாடுவதை அறிந்த இச்சங்கத்தார் இவரை மாதந்தோறும் அழைத்துப் பாடக் கேட்டுப் பரவசமுற்றனர்; பாராட்டினர்; பரிசும் அளித்தனர். இச்சங்கத்துக்குத் திருவாங்கூர் மகாராணி சேது பார்வதி பாய் (இராஜமாதா) அவர்களும், அவர்தம் நட்பாளர் கொல்லங்கோடு மகாராணியாரும், விஜயநகர மகாராணியாரும் வந்து வை.மு.கோ.வின் பாடலைக் கேட்டு மகிழ்வதுண்டு.

'கணவனும் மனைவியும் சேர்ந்து செல்வது கூடாது' என்ற அக்கால மரபை மீறி வை.மு.கோதைநாயகியைப் பார்த்தசாரதி திருவல்லிக்கேணி, மயிலை முதலிய இடங்களிலுள்ள பல சங்கீத சபாக்களுக்கும் அழைத்துச் செல்வார். இசைக்கலையில் தேர்ந்து இசையரசியாகத் தம் துணைவியார் வளர வேண்டும் என்ற ஆர்வமே அதற்குக் காரணமாகும்.

சென்னைப் பூங்கா இரயிலடி அருகே கொட்டகையில் இசை நிகழ்ச்சிகளை நடத்தி வந்த மியூசிக் அகாடெமிக்கும் கணவருடன் வை.மு.கோதைநாயகி சென்று வருவார். இவரின் இசைப்புலமையைக் கேள்விப்பட்ட அகாடெமியினர் தங்கள் நிகழ்ச்சியில் அவரைப் பாடுமாறு வேண்ட, பெண்கள் கூட்டத்தில் மட்டும் இதுவரை பாடிவந்த தான் ஆண்கள் கூட்டத்தில் பாட இயலாது என மறுத்துவிட்டார். ஆனால் அடுத்து ஆண்கள் மத்தியிலும் அவர் பாட நேர்ந்த நிகழ்வு நடந்தேறியது.

திருவையாற்றில் ஆண்டுதோறும் தொடர்ந்து நடைபெறும் தியாகராஜ சுவாமிகளின் ஆராதனை விழாவைத் தொடங்கியவர் பெங்களூர் நாகரத்தினம் அம்மையார் ஆவார். புலமை வாய்ந்த அவர் தம்பூரா மீட்ட, தம்புசெட்டித் தெருவில் உள்ள ஒரு சங்கீத

சபாவில் தம்பதிகள் பலரின் முன்னிலையில் 1930இல் பாடி, ஆண்கள் மத்தியில் பாட இயலாது என்ற கட்டுப்பாட்டை வை.மு.கோதைநாயகி தகர்த்தெறிந்தார்.

முறையான இசைப்பயிற்சி இல்லை. எல்லாம் கேள்வி ஞானமே. ஆயினும் மரபு வழி இசையறிஞராலும் பெற இயலாத ஏற்றத்தைப் பெற்ற வை.மு.கோதைநாயகியின் புலமை ஆற்றலைக் கண்டு இசையுலகம் வியப்பில் மூழ்கியது.

1940இல் அக்டோபரில் சென்னையில் நடைபெற்ற பொருட்காட்சியில் மாநகராட்சியினர் இவரை அழைத்துப் பாடச் செய்தனர். அதுமுதல் ஆண்டுதோறும் தவறாமல் அழைத்துப்பாடச் செய்தனர்.

கோவிலில் பாடிய முன்னோடி

ஒருகால் திருப்பதி நவராத்திரி விழாவில் பாடிய பேரும் வை.மு.கோதைநாயகிக்குக் கிட்டியது. கோவிலுக்குள்ளே கொடி மரத்துக்கு முன்பு உள்ள இடத்தில் ஆழ்வார் பாசுரங்களும், மீரா பாடல்களும் அமுத மழையாகப் பொழியப்பட்டமை கண்டு ஆண்டுதோறும் வரவழைத்துப் பாடச் செய்தனர். கோவிலுக்குத் தென்கோடியில் உள்ள மண்டபத்தில் கொட்டகை போட்டு, இசையரங்கம் ஆண்டுதோறும் நடைபெற்று வந்தது. இதனால் கோயில்களில் பெண்கள் பாடுவது வழக்கமில்லாதிருந்த காலத்தில் அவ்வழக்கத்தை மாற்றி மேடை அமைத்துப் பாடிய பெருமை உடையவராக ஆனார்.

சிதம்பரம் கோவிந்தராசர் சந்நிதியில் ஆழ்வார் பாசுரங்களும் நடராசர் சந்நிதியில் தேவாரப் பாடல்களும் முதன்முதலாகப் பாடிய பெண் பாடகர் இவரே.

திருவண்ணாமலை ஆலய நிர்வாகிகள் இவரை அழைத்து ஆலயத்தில் பாடும்படி வேண்டினர். வைணவ மரபினரான வை.மு.கோதைநாயகி எத்துணையும் பேதமுறாது அங்குச் சென்று தேவாரம், திருவாசகம், திருப்புகழ்ப் பாடல்களை ஊனுருக, உயிர் உருக, உளமுருக உவட்டாமல் இனிக்கப் பாடினார்.

மைசூர் சமஸ்தான வித்வானான பிடாரம் கிருஷ்ணப்பாவின் அழைப்பின் பேரில் அரண்மனையில் மகாராஜா கிருஷ்ண ராஜ உடையார், அவர்தம் தம்பி மகனார் யுவராஜா சாம்ராஜ உடையார் முன்பு வை.மு.கோதைநாயகி பாடினார். இன்னிசை கேட்டு அனைவரும் இறும்பூது எய்தினர்.

பாண்டிச்சேரி அரவிந்த ஆசிரமத்தில் பல ஆண்டுகள் மௌனவிரதம் மேற்கொண்டிருந்த சுத்தானந்த பாரதியார் தன் மௌனவிரதம் கலையும் நாளன்று வை.மு.கோதைநாயகிக்கு அழைப்பு அனுப்பி, அவர் வந்து பக்திப் பாடல் ஒன்றைப் பாடிய பிறகே தன் மௌன விரதத்தை முடித்துக் கொண்டார். அப்போது வை.மு.கோதைநாயகி பாடிய பாடல் இசையைக் கேட்ட ஆசிரமத்தினர் இரு மாதங்களுக்கு ஒரு முறை பாண்டிச்சேரிக்கு அழைத்துப் பாடக் கேட்டு மகிழ்ந்தனர்.

பாரதி பாடல்களும் வை.மு.கோதைநாயகியும்

வை.மு.கோதைநாயகியின் தந்தையார் வெங்கடாச்சாரியாரின் வீடு திருவல்லிக்கேணி, துளசிங்கப் பெருமாள் கோவில் தெருவில் 22ஆம் எண்ணுள்ள வீடாக இருந்தது. அதற்கு எதிர் வரிசையிலிருந்த ஒரு வீட்டில் மகாகவி பாரதியார் 1918 முதல் 1921 வரை வாழ்ந்து வந்தார். பாரதியார் அப்போது சுதேசமித்திரனில் துணையாசிரியராக இருந்ததால் அலுவலகம் செல்லும்போது வீட்டினுள் தன்னுடைய பாடல் பாடுவதைக் கேட்டுவிட்டு யார் பாடுவது என வெங்கடாச்சாரியாரிடம் கேட்டறிந்தார். 'ஜெயபேரிகை கொட்டடா' என்ற பாடலை ஆவேசத்துடன் பாடி, தன்னைப் போல் பாடுமாறு கேட்க, வை.மு.கோதைநாயகியும் உடன் பாடலை மனதில் வாங்கி, பாரதி போலவே ஆவேசமாகத் திருப்பிப் பாடிக் காட்டினார். அன்று முதல் பாரதி தான் புதியதாகப் பாடல் புனைந்தபோதெல்லாம் பாடலை வை.மு.கோதைநாயகியிடம் தருவதும் அதை அவர் மனனம் செய்து மறுநாள் பாரதியிடம் பாடிக்காட்டுவதும் வழக்கமாயிற்று.

'சுதந்திரச்சங்கு' என்ற காலணா விலையுள்ள ஓர் இதழ் நாட்டுப்பற்றை ஊட்டும் நோக்கத்துடன் சுப்பிரமணியம் என்பவரால் நடத்தப்பெற்றது. சங்கு என்ற பெயரில் பத்திரிகை நடத்தியதால் சங்கு சுப்பிரமணியம் என்றே அழைக்கப்பெற்ற அவர் பாரதி பாடல்களைப் பாரதி போலவே ஆவேசத்துடன் பாடுவார். ஆக அக்காலத்தில் சங்கு சுப்பிரமணியம், வைமு.கோதை நாயகி ஆகிய இருவர்தாம் சென்னையில் பாரதி பாடல்களைப் பாடிப் பரப்பிய முன்னோடிகளாக அமைந்திருந்தனர்.

1921இல் பாரதியாரின் புதல்வியர் தங்கம்மாள், சகுந்தலா முதலிய பல தோழியர்களுடன் சேர்ந்து கோவிலைச் சுற்றியுள்ள நான்கு தெருக்களிலும் பாரதி பாடல்களைப் பஜனையாகப் பாடி

வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார் வை.மு.கோதைநாயகி. எங்கு எந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டாலும் பாரதி பாடல்களுக்கு முக்கியத்துவம் அளிப்பார். 1918இல் திருவல்லிக்கேணியில் இருந்த முகுந்த பஜனை சபாவில் வெள்ளிதோறும் பெண்களும் சனிதோறும் ஆண்களும் பாடுவர். வை.மு.கோதைநாயகி பாடும் பஜனையின் இறுதிப் பாடல் எப்போதும் 'வாழிய செந்தமிழ்' என்ற பாடலாகவே இருந்தது.

ஏ.வி.எம். மெய்யப்பச் செட்டியாருக்குச் சொந்தமான 'சரசுவதி ஸ்டோர்ஸ்' இசைத் தட்டுக் கம்பெனி மூலம் பாரதி பாடல்களை இசைத்தட்டில் வை.மு.கோதைநாயகியைப் பாடச் செய்து பதிவு செய்ய முயற்சி 1942இல் நடந்ததாகவும், அப்போது அவர் டைபாய்டு காய்ச்சலில் பாதிக்கப்பட்டிருந்ததால் அம் முயற்சி தடைப்பட்டுப் போயிற்று என்றும் தெரிய வருகின்றது.

1938ஆம் ஆண்டு சென்னையில் வானொலி நிலையம் தொடங்கப்பட்டது. இராஜாஜி தொடக்கி வைத்து அத்தொடக்க விழாவில் பாடும் பேறும் வை.மு.கோதைநாயகிக்கே கிடைத்தது. வானொலி நிலைய இயக்குநர் விக்டர் பரஞ்சோதி மாதந்தோறும் வை.மு.கோதைநாயகிக்குப் பேச்சு, பாட்டு, கதை நிகழ்ச்சி என ஏதாவது வாய்ப்பினைத் தந்து வந்தார். அதில் பெரும்பாலும் பாரதி பாடல்களையே பாடி வந்தார் அவர்.

1939இல் திருச்சி வானொலி நிலையம் தொடங்கப் பட்டது. அவ்வானொலி நிலையத்தார் ஆண்டுதோறும் இவரை அழைத்துப் பாரதி நினைவு நாளன்று ஒன்று அல்லது இரண்டு நாட்கள் பாரதி பாடல்களைப் பாடச் செய்து ஒலிபரப்புவது வழக்கமாக இருந்தது.

முதல்பாடல் இசைத்தட்டு

வைணவ மரபினர் மறந்தும் புறந்தொழலாகாது என்பது விதி. அவ்விதியை மாற்றி இவர் ஒரு முறை பழனி சென்றிருந்த போது, முருகன் சந்நிதியில் முருகன் அருளால் கோலமயில் வாகனனே என்ற பாடலை ஆசுகவியாகப் பாடினார். கேட்டவர் பாராட்டி, மீண்டும் பாடுக என்றனர். இந்தப் பாடல் தான் இசைத்தட்டாக வெளிவந்த இவரின் முதல் பாடலாகும்.

பிறபாடல் இசைத்தட்டுகள்

சில பாடல்களை வை.மு.கோதைநாயகி மட்டும் தனியாக இசைத் தட்டுகளாகப் பாடியுள்ளார். டி.கே. பட்டம்மாளுடன்

சில இசைத் தட்டுகளிலும், குடும்பத்தினர் சிலருடன் சில இசைத் தட்டுகளிலும் இவரின் குரல் பதிவாகியுள்ளது. சில நகைச்சுவைப் பாடல்களும், சில சொந்தக் கீர்த்தனைகளும் இசைத் தட்டாகி யுள்ளன.

ஏகாந்த சேவையில் மரபு மாற்றம்

திருவரங்கக் கோயிலில் நாள்தோறும் இரவு நடைபெறும் ஏகாந்த சேவையின்போது, வீணை ராமசாமி ஐயங்கார் மரபினர் மட்டுமே வீணைவாசிப்பது மரபு. அம்மரபை மாற்றி ஒரு முறை வை.மு.கோதைநாயகியை அழைத்துப் பாடச் செய்தனர். அதுமுதல் திருவரங்கம் செல்லும் போதெல்லாம் ஏகாந்த சேவையில் வை.மு.கோ.வே பாடுவது வழக்கமாயிற்று.

இசையமைப்பாளர்

தமிழிலும் தெலுங்கிலும் கீர்த்தனைகள் இயற்றி, அவற்றிற்குச் சுரம் அமைத்து 'ஜகன்மோகினி'யில் வை.மு.கோதை நாயகி வெளியிட்டு வந்தார். இசையார்வமுள்ள மகளிர் பலர் அவற்றை முறைப்படி மனனம் செய்து இவரிடம் வந்து பாடிக் காட்டித் திருத்தம் செய்துகொண்டு செல்வது வழக்கமாயிருந்தது.

தேசியவாதி வை.மு.கோதைநாயகி

வை.மு. கோதைநாயகி தேசியவாதியாக ஆனதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது பாரதியின் பாடல்களே ஆகும். பாரதி பாடல்களைப் பாடும்போது ஏற்பட்ட தேசிய உணர்வு இவரைச் சிறந்த தேசத் தொண்டராகவும், தேசியவாதி யாகவும், தியாகியாகவும் மாறுவதற்குக் காரணமாக ஆயிற்று.

இரண்டாவதாக இவரின் கணவர் பார்த்தசாரதி 1914இல் மாணவராக இருந்தபோதே அரசியலில் ஈடுபாடு கொண்டு தேசபக்திச் செயல்களில் ஈடுபட்டதும் ஆகும்.

1919 ஏப்ரல் 13ஆம் நாள் பஞ்சாப் ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்த்தப்பட்டது கண்டு வை.மு. பார்த்தசாரதி வீட்டிலுள்ள அந்நியத்துணிகளை அள்ளி வந்து கொளுத்திக் கதராடை கட்டத் துவங்கினார். வை.மு.கோதைநாயகியும் அன்று தொடங்கிக் கதராடை கட்டித் தீவிரத் தேசியவிடுதலைப் போராட்டத்தில் நேரடியாக ஈடுபட்டார். மெல்லிய பட்டுச்சேலை உடுத்திப் பழகிய இவர் தேசபக்தி உணர்வினால் பதினெட்டு முழ முரட்டுக் கதர்ச் சேலையை விரும்பி உடுத்தலானார்.

கதர்ப்பிரச்சாரம்

கணவருடன் இணைந்து வை.மு.கோதைநாயகி ஒரு மூட்டைக் கதர்த் துணியைச் சுமந்துகொண்டு வீடுதோறும் சென்று விற்றார். பெயர் விளம்பரத்துக்காக என்றில்லாமல் பல நாட்கள் அப்பணி தொடர்ந்தது. சில நேரங்களில் திருவல்லிக்கேணி பைகிராப்ட்ஸ் சாலையிலிருந்த கதர்க்கடைக் கிளைக்குச் சென்று கதர் விற்பனைக்கு உதவினார்.

வீடுதோறும் கதர்ப் பிரச்சாரமும் செய்தார். மயிலைப் பெண்கள் சங்கத்தின் சுற்றுப்புற வீதிகளிலும், திருவல்லிக்கேணி பெரிய தெரு தளவாய் வீட்டுக்கு எதிர்ப் புறத்திலும் பெண்களிடமும் தீவிரமான கதர்ப் பிரச்சாரம் மேற்கொண்டார்.

இவரது கதர் ஈடுபாட்டையும் பிரச்சாரப் பாங்கையும் கண்ட தலைவர் சத்தியமூர்த்தி 1931 ஆம் ஆண்டு இல்லம் தேடிவந்து, தீவிரமாகக் கதர்ப் பிரச்சாரம் செய்யும் நீ மேடை ஏறிச் சொற்பொழிவாற்ற வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.

கன்னிச் சொற்பொழிவு

திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு கங்கை கொண்டான் மண்டபத்தில் நடந்த பெண்கள் கூட்டத்தில் வை.மு.கோதைநாயகியின் கன்னிச் சொற்பொழிவு நடந்தது. முதல் பேச்சே முதன்மைப் பேச்சாகவும், கன்னிப் பேச்சே கருத்துப் பேச்சாகவும் கனிந்தது. இவர் வீட்டுக்கு எதிரில் குடியிருந்த சத்தியமூர்த்தி கன்னிப் பேச்சை வியந்து பாராட்டியதுடன் அடிக்கடி இவ்வாறு பேச வேண்டும் என்று அன்புக் கட்டளையும் இட்டார்.

பல ஊர்ப் பயணங்களும் பயனுள்ள பொழிவுகளும்

திண்டிவனத்திலிருந்து சிலர் வந்து சத்தியமூர்த்தியைப் பேச அழைக்க, அவருக்கு வேறு நிகழ்ச்சி இருந்ததால் வை.மு.கோதைநாயகியைச் சென்று 'பேசி வா' என்று அனுப்பக் கணவருடன் சென்று திண்டிவனத்தில் பேசினார். ஓ.பி. இராமசாமி ரெட்டியார் முதலியோர் திரண்டிருந்த அக் கூட்டத்தில் முதன் முதலாக ஒரு பெண்மணி பேசியது பலருக்கும் வியப்பை அளித்தது.

ஓ.பி. இராமசாமி ரெட்டியார் மிகச் சிறப்பாகப் பேசிய வை.மு.கோதைநாயகியைப் பாராட்டியதுடன் சின்னாட்கள்

தங்கிச் சுற்றுப்புற ஊர்களிலும் பிரச்சாரம் செய்ய வேண்டும் என வேண்டிக் கொண்டார். அதன்படி விழுப்புரம், கடலூர், சிதம்பரம், விருதாசலம் முதலிய ஊர்களில் வை.மு.கோதை நாயகியின் சொற்பொழிவு தொடர்ந்தது.

1931இல் தென்னார்க்காடு மாவட்டம் முழுதும் மூலை முடுக்கெல்லாம் பிரச்சாரம் செய்தார். காலையில் ஒன்று, பகலில் ஒன்று, மாலையில் ஒன்று என நாளொன்றுக்கு மூன்று கூட்டங்களில் பேசினார்.

தியாகி திரு. அண்ணாமலைப் பிள்ளையின் அழைப்பின் பேரில் திருவண்ணாமலைக்குச் சென்று காங்கிரஸ் கூட்டத்தில் பேசினார் வை.மு.கோதைநாயகி. ரமணமகரிஷி ஆசிரமம் சென்று இரமணரிடம் ஆசியும் பெற்றார்.

இராஜாஜியை வேலூரில் முதன்முதலாகச் சந்தித்து அவர் தலைமையில் சொற்பொழிவாற்றினார். வை.மு.கோதைநாயகியின் சொல்லாற்றல் கண்டு மகிழ்ந்த இராஜாஜி "நான் போகுமிட மெல்லாம் நீ வந்து பேசுதல் வேண்டும்" என்று அன்பு ஆணை யிட்டார். அதன்படி, பல இடங்களுக்கும் சென்று பேசினார்.

ஒருமுறை வாணியம்பாடி வட்டாரத்தில் பிரச்சாரம் செய்யப் போயிருந்தார் வை.மு.கோதைநாயகி. வாணியம்பாடியைச் சேர்ந்த பேரணாம்பட்டியில் முகமதியர்கள் மிகுதி. பேரணாம் பட்டியில் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. காவல் துறை அதிகாரி 'முஸ்லீம்கள் காங்கிரஸ் பிரச்சாரத்தை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். எனவே திரும்பச் சென்றுவிடுங்கள்' என்று எடுத்துரைத்தார். ஆனால் வை.மு.கோதைநாயகி,

> நான் பிரச்சாரத்துக்குப் புறப்பட்டுவிட்டேன். பிரச்சாரத்தின்போது, இந்துக்கள் பகுதி இது; முகமதியர் பகுதி இது என்று பிரித்துக் காண்பது தவறு. எல்லோரும் இந்நாட்டு மக்கள் என்ற கண்ணோட்டமே தேசியவாதிக்கு உரியது. முன் வைத்த காலைப் பின் வைக்க மாட்டேன்

என்று கூறிப் பேரணாம்பட்டியில் பொதுக்கூட்டத்தில் பேசினார். முஸ்லீம்கள் யாரும் அவர் பேசியதை எதிர்க்கவில்லை. விடுதலையின் இன்றியமையாமையையும் தேசியத்தின் தேவையையும் உணரலாயினர். வீதிதோறும் வண்டியில் கொண்டு வரப்பட்ட கதர்த்துணிகளையும் போட்டிபோட்டுக் கொண்டு

வாங்கலாயினர். முஸ்லீம்களின் எதிர்ப்பால் அசம்பாவிதம் நடக்கும் என்று அஞ்சிய காவலர் வியப்பிலாழ்ந்தார்; வை.மு.கோதைநாயகியிடம் வந்து தன் பாராட்டையும் தெரிவித்தார். 'காந்தி கீர்த்தனைகள் நூறு' இயற்றி, அப்பாடல்களைப் பொதுக்கூட்டந்தோறும் பாடினார் வை.மு.கோதைநாயகி.

தஞ்சை, திருச்சி, மதுரை, செட்டிநாட்டுப் பகுதிகளிலும் வை.மு.கோதைநாயகி காங்கிரசுக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்தார். காந்தியடிகளுக்குப் பிடித்த 'வைஷ்ணவ ஜனதோ' பாடலின் மொழிபெயர்ப்பைச் சங்கு சுப்பிரமணியம் அளிக்க, மேடைதோறும் அறிமுகப்படுத்தினார்.

டெல்லி வைசிராய் கவுன்சில் தேர்தலில் நின்ற சத்திய மூர்த்திக்கு ஆதரவாகத் தீவிரப் பிரச்சாரம் செய்து வெற்றியும் ஈட்டித் தந்தார் வை.மு.கோதைநாயகி.

1934இல் நெல்லை ஜில்லா போர்டு தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சியை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தார். நெல்லைப் பகுதியில் ஜஸ்டிஸ் கட்சியை எதிர்த்துப் பிரச்சாரம் செய்வதென்பது எவரும் நினைத்துப் பார்க்க இயலாததொன்று. ஆனால் வை.மு.கோதை நாயகி நெஞ்சத் துணிவுடன் தன் தலைமையில் பன்னிரண்டு பெண்களையும் திரட்டிக் கொண்டு பிரச்சாரம் செய்தார். பன்னிருவரில் ஒருவர் நடிகையும் பாடகியுமான கே.பி. சுந்தராம்பாள் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் அவர் உயிருக்கு உலை வைக்கும் முயற்சியும் நடந்தது. ஆனால் அதனின்று தப்பிப் பிழைத்து வந்தார்.

கள்ளுக்கடை மறியலில் பங்கேற்பு

1931இல் சென்னையில் கள்ளுக்கடை மறியல் தொடங்கியது. அதில் வை.மு.கோதைநாயகி தீவிரமாக ஈடுபட்டார். கள்ளுக் கடை மறியலென்பது, கள் குடிக்க வருபவர்களைப் பணிவுடன் நிறுத்தி, கள்ளினால் வரும் கேட்டினையும், அதனால் நாட்டுச் செல்வம் பாழாவதையும், தேசிய விடுதலைக்குத் தடையாவதையும், அறிவுகெட்டு மனிதன் மிருகமாவதையும், மனைவி மக்கள் பட்டினி கிடக்க நேர்வதையும் இனிய மொழிகளால் எடுத்துக் கூறுவதாகும். மீறிச் செல்பவர்களைக் காலில் விழுந்தாவது தடுப்பதும் ஆகும். காங்கிரஸ் தொண்டராகிய வை.மு.கோதை நாயகியின் இனிய மொழியும், பரிவும், பணிவும் கள் குடியரின் மனத்தைக் கரைக்கக் கூடியதாய் இருந்தன. கள் வியாபாரியாகிய ஒருவரின் கொலை முயற்சியும் நடந்தது. அதிர்ஷ்டவசமாய் அதனின்று தப்பவும் செய்தார்.

சிறைவாழ்க்கை

1932ஆம் ஆண்டு அந்நிய ஆட்சியாளர் அனுப்பிய லோதியன் கமிஷன் இந்தியாவுக்கு வந்தது. அதற்கு நாடெங்கும் எதிர்ப்புக் காட்டல் வேண்டும் என ஆணையிடப்பட்டது. அதன்படி சென்னையிலும் எதிர்ப்பு ஊர்வலம் நடந்தது. கே. பாஷியம் தலைமையில் ஊர்வலத்தில் வை.மு.கோதைநாயகி பாரதி பாடல்களை உணர்ச்சி பொங்கப் பாடிக் கொண்டே வந்தார். மற்றவர்கள் தொடர்ந்து பாடினர். கூட்டம் ஆற்று வெள்ளம் போல் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. சென்னை சைனா பஜாரிலுள்ள காதி வஸ்திராலயத்திலிருந்து 'வந்தே மாதரம்' என்ற முழக்கத்துடன் புறப்பட்ட ஊர்வலத்தைக் காவலர் சுற்றி வளைத்துக் கைது செய்து காவல்நிலையம் கொண்டு சென்றனர். முக்கியமானவர்களைச் சிறையிலிட்டனர். வை.மு.கோதைநாயகி வேலூர் சிறைக்கு அனுப்பப்பட்டார்.

இலக்கியத் தவச்சாலையாகிய சிறைச்சாலை

காந்தியடிகள் சிறைச்சாலையைத் தவச் சாலையாக்கினார். அவரின் 'சத்தியசோதனை'யின் அவதாரத் தலம் சிறைச்சாலைதான். நேருஜியின் 'தன் வரலாறு' புத்தகத்தின் அவதாரத் தலம் சிறைச் சாலைதான். திலகரின் 'கீதா ரகசியமும்' சிறை தந்த சீரிய பரிசுதான். அவர்கள் போன்று வை.மு.கோதைநாயகியும் சிறையில் தன் இலக்கியத் தவத்தைத் தொடர்ந்தார். தம் இலக்கியப் படைப்புகளுக்கான பல அடிப்படைக் கருக்களைச் சேகரிக்கலானார்.

வேலூர் சிறையிலிருந்த கைதிகளில் பலர் பலவிதக் குற்றங்களுக்காகத் தண்டனை பெற்றவர்கள். அவர்களுக்காக இரங்கி, அவர்களுடன் அன்புடன் பழகி அவர்களின் வரலாறு களையும், குற்றம் செய்த சூழ்நிலைகளையும் கேட்டறிந்து, அந்த உண்மை வரலாறுகளின் அடிப்படையில் 'சோதனையின் கொடுமை' என்ற நாவலைச் சிறையில் படைத்தார்.

'உத்தம சீலன்' என்ற நாவலையும் சிறையிலேயே படைத்தார். வை.மு.கோதைநாயகி சிறையிலிருந்தபோதும் 'ஜகன்மோகினி' இதழ் இரு மாதங்கள் இவரின் சிறுகதைகளைத் தாங்கி வெளிவந்து கொண்டிருந்தது. அடுத்து இவரின் எழுத்துகளைத் தாங்கினால் தான் வெளிவர இயலும் என்ற நிலை இதழுக்கு ஏற்பட்ட போது வை.மு.கோதைநாயகி, தன்னிடம் தன் கணவர் தந்த தின்பண்டப் பையினடியில் 'உத்தமசீலன்' நாவலை வைத்துச் சிறைக்கு வெளியே அனுப்பிவிட்டார். சிறையில்

எழுதுவதற்கு அனுமதி உண்டு. ஆனால் வெளியே அனுப்ப அனுமதியில்லை. ஆயினும் சிறையினின்று தப்பி பழக்கூடையில் மராட்டிய சிவாஜி வந்ததுபோல், உத்தமசீலனையும் சிறைக்கு வெளியே அனுப்பி வைத்தார் வை.மு.கோதைநாயகி.

காந்தீயக் கொள்கைகளான கதர் வளர்ச்சி, மது விலக்கு, தீண்டாமை ஒழிப்பு, சகோதரத்துவம், சமூக ஒற்றுமை, சுதேசிப் பிரச்சாரம் ஆகியவற்றை வற்புறுத்தும் தியாகக் கொடி, நளினசேகரன் ஆகிய இரு தேசிய நாவல்களை ஏன் தடை செய்யக் கூடாது என அச்சுறுத்தி அரசு ஆணையனுப்பியது. ஆனால் அந்த நாவல்களில் அந்நிய ஆட்சி குறித்த நிந்தனை ஏதும் இல்லாததால் அரசு எச்சரித்ததோடு நின்றுவிட்டது.

நாட்டு விடுதலைக்குப்பின்

காங்கிரசு இயக்கத்தில் ஈடுபட்டுப் பணியாற்றிய வை.மு.கோதைநாயகி. நாடு விடுதலை பெற்றபின் கட்சி வேலைகளிலிருந்து விலகியிருந்தார். ஆனால் தேசியத் தந்தை பெயரில் 'மகாத்மாஜி சேவாசங்கம்' என்ற ஓர் அமைப்பைத் தொடங்கி, அதன் மூலம் பெண்கள் முன்னேற்றம் முதலிய பல தொண்டுகளுக்கு வழி வகுத்தார்.

விடுதலை பெற்ற நாளன்று சிங்கப்பெருமாள் கோயிலின் முதன்மைச் சாலையில் காந்திஜிக்குச் சிலை நிறுவி, ஏழைகளுக்கு அன்னம் வழங்கினார். அந்தக் காந்திஜியின் சிலையின் கீழ் வை.மு.கோதைநாயகியின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

மகாத்மாஜி சேவாசங்கத்தில் பொருட்காட்சிகள் நடக்கும். அங்கு உறுப்பினர்களின் கைவினைப் பொருட்கள் இடம் பெறும். ஓவியம், தையல், பிரம்பு வேலை, வண்ணக்கோலம் போன்ற பல கலைகளிலும் மகளிர்க்கு ஆர்வம் உண்டாக்க அப்பொருட்காட்சிகள் பயன்பட்டன.

அப்பொருட்காட்சியைக் காணப் பல பெருந்தலைவர் களும் வந்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் தேவதாசு காந்தி, வினோபாஜி ஆகியோர் ஆவர்.

இல்லத்தரசி வை.மு.கோதைநாயகி

இவர் பன்முகப் படைப்பாளியாகத் திகழ்ந்ததுடன் மிகச் சிறந்த இல்லத்தரசியாகவும் திகழ்ந்தார். குழந்தை மணத்தின் மூலம் கணவரான பார்த்தசாரதி வை.மு.கோதைநாயகியின் அனைத்துத் துறை வளர்ச்சிக்கும் ஊன்றுகோலாக அமைந்திருந்தார்.

அவர் சிறந்த உரையாசிரியரான வை.மு. சடகோப ராமானுஜாச் சாரியாரின உடன்பிறந்த தம்பியாவார். கம்பராமாயண உரையா சிரியர், பதிப்பாசிரியர் வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார் அவருக்கு உடன் பிறவாச் சகோதரர் ஆவார்.

கணவர் பார்த்தசாரதி என்ற இன்துணை

வை.மு.கோதைநாயகி நூற்றுப்பதினைந்து படைப்புகளை எழுதுவதற்கும், ஜகன்மோகினியை வெள்ளிவிழாவைக் கடந்து நடத்துவதற்கும், தேசியப் பணியில் முழுமூச்சுடன் ஈடுபடுவதற்கும், இசையரங்குகளிலே ஏறி ஏற்றம் பெறுவதற்கும் ஆன்றோர்களின் நட்பும், ஆசியும் பெறுவதற்கும் கணவர் பார்த்தசாரதி தக்க உறுதுணையாக இருந்தார். பழைய கட்டுப்பாட்டுக் கோட்டையை விட்டு வெளியேறிச் சுதந்திரப் பறவையாக, புதுமைப் பெண்ணாக, புரட்சிக் கனவாகப் புறப்பட்டுப் புகழ் பெறப் பார்த்தசாரதி தக்க ஒத்துழைப்புத் தந்தார். ஆங்கிலக் கல்வி கற்று ஓர் இன்சூரன்சு கம்பெனியில் அலுவல் பார்த்த பார்த்தசாரதி வை.மு.கோதைநாயகி என்ற வைரமணி மாலையை இணைக்கும் பொற்கம்பியாகத் திகழ்ந்தார். இவர் சிறந்த இல்லத்தரசியாகத் திகழ பார்த்தசாரதியும் ஒரு காரணம் ஆவார்.

மருமகள் பத்மினி சீனிவாசன், பேத்தி விஜயலட்சுமி வரதராசன்

தன் ஒரே மகனான சீனிவாசனுக்குத் தக்க வயதில் மணமுடித்தார் வை.மு.கோதைநாயகி. மருமகள் பத்மினி ஆந்திரத் தேசத்தவர். தெலுங்கு தவிரத் தமிழ் அறியாதவர். ஆகையால் வை.மு.கோதைநாயகியின் நாவல்களைப் படித்தறியவேண்டும் என்ற தன் ஆவலைத் தன் தோழி ஸ்ரீமதி ஆண்டாள் நரசிம்மனிடம் கூற, அவள் படித்துக் காட்ட அறிந்துகொண்டார். கணவர் மூலம் தமிழ் கற்றார்.

ஒரு நாள் மருமகளை அழைத்த வை.மு.கோதைநாயகி 'இவ்வளவு கதைகள் கேட்டாயே, உனக்குத் தோன்றியதை வைத்து நீயே ஒரு கதை எழுது என ஊக்கப்படுத்தி எழுதித் தந்த கதையை ஜகன்மோகினியில் வெளியிடவும் செய்தார்.

தன் பேத்தி விஜயலட்சுமி வரதராஜனை ஊக்கப்படுத்தித் தன் மகன் முடிக்காமல் விட்டுச்சென்ற 'தீபஸ்தம்பத்தை' எழுதி முடிக்க வைத்தார். தன் இதழில் சிறுகதைகள் எழுதவும், ஓவியங்கள் வரையவும் வாய்ப்பேற்படுத்தி ஊக்கப்படுத்தினார். தன் மருமகள், பேரன் வை.மு. வெங்கடகிருஷ்ணன் ஆகியோரை வைத்து வானொலியில் இசை நிகழ்ச்சிகள், நாடகங்கள், இசையமைப்பு,

விளக்கவுரை எனப் பங்கேற்க வைத்துத் தன் குடும்பத்தைக் கலைக்குடும்பமாக ஆக்கினார்.

வானொலியில் வை.மு.கோதைநாயகி

இவருக்கு 18 வருட வானொலி அனுபவம் உண்டு. பேச்சு, சிறுகதை, நாவல் படிப்பது, நாடகங்கள், இசை நிகழ்ச்சிகள் எனப் பல நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்டார்.

'அன்பின் சிகரம்' என்ற நாவலை 1 மணி நேர நாடகமாக்கி அதில் தன் கணவர் உட்படக் குடும்பத்தினர்களையே பங்கேற்கச் செய்து நடத்தினார்'.

ஸ்ரீராமநவமி, ஆடிப்பூரம், கிருஷ்ணஜெயந்தி, பாரதியார் தினம், மகாத்மா காந்தியின் பிறந்தநாள், நவராத்திரி, தீபாவளி, பொங்கல் முதலான பண்டிகை நாட்களின் சிறப்புகளையும், மார்கழி நோன்பு, கும்மி, கோலாட்டம் முதலியவற்றையும் சிறப்பாக நடத்தினார். பல மாதர் நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றார். 'தென்னாட்டுக் கல்யாண முறைகள்' என்ற தலைப்பில், கல்யாணத்தின் போது பாடப்படும் பாடல்களையும், அதன் தொடர்பான விளக்கங்களையும் நகைச்சுவையாகவும் அதே சமயம் கருத்தும், பண்பாடும் மிக்கதான நம் வாழ்க்கை முறைகளையும் விவரித்து 5 வாரங்கள் தொடர்ந்து நிகழ்ச்சி நடத்தினார். 'சந்திரகலாமாலை' என்று ஸ்ரீஆண்டாள் பாடல் களை மையமாக வைத்து ஒரு தொடர் நிகழ்ச்சியையும், 'நீல வண்ணன்' என்று நாச்சியார் திருமொழிப் பாசுரங்களில் ஆண்டாள் வருணித்துள்ள அவர் எண்ணங்களின் பிரதிபலிப்பைச் சித்திரித்தும் ஒரு நிகழ்ச்சி நடத்தினார்.

1940இல் சங்கு சுப்பிரமணியமும் வை.மு.கோதைநாயகியும் கலந்து கொண்ட 'விவாத அரங்கம்' சென்னை வானொலியில் நடைபெற்றது. 'ஜகன்மோகினி' பத்திரிகையில் அப்போது 'சந்திர மண்டலம்' என்ற நாவல் வெளிவந்து கொண்டிருந்தது. அந்த நாவலின் முடிவு எப்படியிருக்கும் என்பதே விவாதத்திற்குரிய பொருளாக அமைந்திருந்தது.

திருச்சி வானொலி நிலைய இயக்குநர் சென்னை வரும்போதெல்லாம் இவருடன் கலந்து பேசிப் பல நிகழ்ச்சிகள் அமைப்பார். இவ்வாறாகத் தான் மட்டுமல்லாது தன் மூன்று தலைமுறையினரும் கலைக் குடும்பமாக ஆவதற்குக் காரண கர்த்தாவாக ஆனவர் வை.மு.கோதைநாயகி.

சாதனைகள்

இவரின் சாதனைகள் பற்பல. அவற்றுள் குறிப்பிட்டுக் கூறத்தக்கனவான சாதனைகள் கீழே தொகுத்துத் தரப்படுகின்றன.

1. பெண்கள் தெருவில் தலைகாட்டுவதே கூடாது என்னும் சமூகக் கட்டுப்பாட்டைத் தகர்த்தெறிந்து, முதன்முதலாகத் தலைநிமிர்ந்து தெருவில் நடந்தது மட்டுமல்லாமல், மேடையிலும் ஏறிச் சொற்பொழிவாற்றிய முன்னோடி.

2. பல நாடகங்களை மேடை ஏற்றிய முதற் பெண் இயக்குநர்.

3. கணவனும் மனைவியும் சேர்ந்து பொது இடங்களுக்குச் செல்லலாகாது என்ற சமூகக் கட்டுப்பாட்டை மீறி இசைக் கச்சேரிகள், நாடக சபாக்களுக்குக் கணவருடன் சென்று வந்தவர்.

4. கோவில்களில் பெண்கள் பாடலாகாது என்ற மரபை மீறிக் கோயில்களில் மேடைமேல் வீற்றிருந்து இன்னிசைப் பாடல்களைப் பாடி இசை நிகழ்ச்சிகளை நடத்தினார்.

5. ஆண்கள் கூட்டத்தில் பெண்கள் பாடலாகாது என்ற கட்டுப்பாட்டைத் தகர்த்தெறிந்து தம்புசெட்டித் தெருவில் ஒரு சங்கீத சபாவில் ஆண்கள் மத்தியில் பாடினார்.

6. 'ஜகன்மோகினி' என்ற இதழை, 10,000 பிரதிகளாக வளர்த்தெடுத்தது அக்காலத் தமிழ் இதழியல் வரலாற்றில் ஓர் அற்புதமான சாதனையாகும். அன்று மிகப் பிரபலமான இதழாக இருந்த 'ஆனந்த விகடன்' கூட அதற்கும் குறைவாகவே அச்சிடப்பட்டதாகத் தெரிகிறது. இதழியல் வரலாற்றில் இவரின் அரிய சாதனையாக இதனைக் கருதலாம்.

7. சங்கு சுப்பிரமணியத்துடன் இணைந்து பாரதி பாடல்களைப் பாடிப் பரப்பிய முன்னோடியாக வை.மு.கோதை நாயகி திகழ்ந்தார்.

8. 1938ஆம் ஆண்டு சென்னையில் வானொலி நிலையம் தொடங்கப்பட்ட போது, தொடக்க விழாவில் பாடுகின்ற வாய்ப்பும், பெருமையும் பெற்றவர் வை.மு.கோதைநாயகி. அது அவரின் இசைப் புலமைக்குக் கிடைத்த உயர் மரியாதையாகும்.

9. திருவரங்கம் கோவிலில் நாள்தோறும் நடைபெறும் ஏகாந்த சேவையின்போது, வீணை ராமசாமி ஐயங்கார் மரபினர் மட்டுமே வீணை வாசிப்பது மரபாக இருந்தது. ஆனால் ஒரு முறை அம்மரபினை மாற்றி இவரை அழைத்துப் பாடச்

செய்தனர். அது அவரின் பாடல் திறனுக்கு அளிக்கப்பட்ட அங்கீகாரமாகும். அவர் பாடலின் இனிமையை அனுபவித்ததன், அறிந்ததன் பின் திருவரங்க ஏகாந்த சேவையில் அவருக்கும் பாடும் வாய்ப்பளிக்கப்பட்டது.

10. சமூக அடித்தளத்தையே மாற்றும் கதைகளை வை.மு.கோதைநாயகி படைத்தார். சான்றாக விதவாவிவாகம் குறித்து அவர் படைப்புகளைப் படித்ததன் மூலம் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர், தாங்கள் விலக்கி வைத்திருந்த விதவா விவாகத்தைச் செய்வது என முடிவெடுத்து அதன்படி தங்கள் சமூகப் பெண்கள் பலருக்கு மறுமணம் செய்து வைத்தனர். இவர் படைப்பின் சமூகப்பயன் இதுவாகும். இதனால் கவியோகி சுத்தானந்த பாரதியார் வை.மு. கோதைநாயகியின் பேனாவைப் "பொது நலவாழ்வை உருவாக்கிய பேனா" எனப் பாராட்டிய பெருமைக்குரியவராக ஆனார்.

11. பதினெட்டு முழக் கதர்ச் சேலை அணிந்து, தன் கணவருடன் இணைந்து கதர்த்துணிகளை மூட்டையாகக் கட்டித் தூக்கிக் கொண்டு வீடுதோறும் விற்றும், கதர்க் கடைக்குச் சென்று கதர் விற்பனைக்கு உதவியும், வீதிதோறும் கதர்ப் பிரச்சாரம் செய்தும் தேசிய விடுதலை மற்றும் தேசிய விழிப்புணர்வுக்குச் செயலாற்றிச் சாதனை புரிந்தார்.

12. திண்டிவனம் காங்கிரஸ் பொதுக் கூட்டத்தில் ஓ.பி. இராமசாமி ரெட்டியார் தலைமையில், சத்தியமூர்த்திக்கு கலந்துகொள்ள இயலாததால் அவர் இடத்தில் வைமு.கோதைநாயகி பேசினார். முதன்முதலாக ஒரு பெண்மணி மேடை ஏறிப் பேசியது கண்டு அனைவரும் வியப்படைந்து பாராட்டும் சாதனை செய்தார்.

13. வைணவ மரபினர் புறந்தொழலாகாது என்ற சமய மரபை மீறித் திருவண்ணாமலையில் தேவாரம், திருவாசகம், திருப்புகழ்ப் பாடல்களை ஊனுருக, உயிர்உருக, உளமுருக, உவட்டாமல் பாடிச் சாதனை புரிந்தார்.

14. 1916இல் திலகர் தமிழ்நாட்டுக்கு வருகை தந்தபோது அவருக்கு ஆரத்தி எடுக்க அக்காலத்தில் நிலவிய கட்டுப் பாட்டாலும் அந்நிய ஆடவர் முன் வர நாணமுடைமையாலும், பெண்கள் யாரும் முன்வரவில்லை. அப்போது வை.மு.கோதை நாயகி ஆரத்தி எடுத்து அவர் அருளாசியையும் பெற்றார்.

15. 1934இல் நெல்லையில் ஜஸ்டிஸ் கட்சியை எதிர்த்துப் பிரச்சாரம் செய்ய அனைவரும் அஞ்சி நடுங்கிய ஒரு காலக்

கட்டத்தில் வை.மு.கோதைநாயகி நெஞ்சத்துணிவுடன் பன்னிரண்டு பெண்களைத் திரட்டிக் கொண்டு தன் தலைமையில் பிரச்சாரம் செய்து சாதனை புரிந்தார்.

16. 1931இல் நடைபெற்ற கள்ளுக்கடை மறியலில் தீவிரமாக ஈடுபட்டார் வை.மு.கோ. இதனால் கள்ளுக்கடை வியாபாரியால் உயிர் போகப் போகும் தருணத்திலும் துப்பாக்கி முனையில் மனத் துணிவுடன் நின்று சாதித்தவர் வை.மு.கோதை நாயகி. பின் நல்லவேளையாக ஒரு காவலர் வந்து அவருக்கு நேரவிருந்த உயிராபத்தை நீக்கினார்.

17. திருப்பதி வெங்கடாசலபதி திருக்கோவிலில் முதன்முதலில் மேடை அமைத்துப் பாடிய பெருமைக்குரியவர்.

18. சிதம்பரம் கோவிந்தராசர் சந்நிதியில் ஆழ்வார் பாசுரங்களும் நடராசர் சந்நிதியில் தேவாரப் பாடல்களும் முதன்முதலாகப் பாடிய பெண் பாடகர்.

தன்னுயிர் கொண்டு மகனுயிர் தேடப் புகுந்தவர்

பாடகி, பேச்சாளர், இதழாளர், படைப்பாளர், நாட்டுப் பற்றாளர் என அனைத்து நிலைகளுக்கும் உரியவராக இருந்த தலைசிறந்த நாவல் ஆசிரியையின் திருமகன் என்ற பெருமை சிறக்கும்படி நாவல், பக்திக் கட்டுரை, சிறுகதை, பேரிலக்கியம் என எழுதி மிகச் சிறந்த படைப்பாளராகத் திகழ்ந்த, இரு ஆண், இரு பெண் மக்களுக்குத் தந்தையான, வை.மு.கோதைநாயகியின் ஒரே மகன் வை.மு. சீனிவாசன் உடல்நலக் குறைவால் 5-2-1956இல் பெற்றோரையும் மனைவி மக்களையும், உற்றாரையும், உறவினர்களையும் விட்டு இறையுலகம் புகுந்தார்.

அருமைத் திருமகனாரின் மறைவு இவரை மிகவும் பாதித்துவிட்டது. தம்மினும் அறிஞன் என்று உலகம் பாராட்டிய ஒப்பற்ற மகனின் பிரிவை அவரால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. நூற்றுப்பதினைந்து படைப்புகளையும், பல கட்டுரைகளையும், தலையங்கங்களையும், இசைப் பாடல்களையும், சிறுகதைகளையும் எழுதி ஓயாத வை.மு.கோதைநாயகியின் திருக்கரம் மகனின் பிரிவால் ஓய்ந்தது. அவர் எழுத்து தடைப்பட்டது.

ஜகன்மோகினி இதழை இனி நடத்த இயலாது; நடத்தக் கூடாது என்ற முடிவுக்கும் வந்துவிட்டார்; ஜகன்மோகினி இதழ் இனித் தொடராது என்ற செய்தியும் இராஜாஜிக்கு எட்டியவுடன் தன் திருமகளார் நாமகிரியம்மையாரை வை.மு.கோதைநாயகிக்கு

ஆறுதல் கூற அனுப்பினார். அவரது ஆறுதல் உரையால் சற்று மனம் தேறிய வை.மு.கோ. உடனடியாக இதழை நிறுத்தாமல் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து நடத்தினார். ஆயினும் பிள்ளையின் பிரிவுத்துயர் எந்த ஆறுதல் மொழியாலும் குறையாமல், உள்ளுக்குள்ளேயே கனன்று உடலை உருக்குலைத்துவிட்டது.

1959ஆம் ஆண்டு மகனின் பிரிவுத் துயர் அவரைப் படுக்கையில் வீழ்த்தியது. 20-2-1960இல் தன்னுயிர் விட்டு மகனுயிர் தேடப் புறப்பட்டார்.

வை.மு.கோதைநாயகியின் மறைவு குறித்து எழுத்துலகே ஏங்கித் தவித்தது. இரங்கல் செய்திகள் வந்து குவிந்தன. ஆனந்தவிகடன், கல்கி, சுதேசமித்திரன், இந்து முதலிய இதழ்கள் தலையங்கம் எழுதின. வானொலி வருத்தம் தெரிவித்தது. இவ்வாறாக, சாதனைப் பெண்மணி வை.மு.கோதைநாயகி பூதவுடல் நீத்துப் புகழுடம்பு எய்தினார்.

துணை நூல்கள்

1. எழுத்துலக நாயகி, அருட்கவி அரங்க. சீனிவாசன், 15-9-1988, திருக்குறள் பதிப்பகம், எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 78.
2. தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், மது.ச. விமலானந்தம், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1987.
3. தமிழ் இலக்கிய வரலாறு, தெ.பொ. மீனாட்சிசுந்தரம், தெ.பொ.மீ. நினைவு அறக்கட்டளை வெளியீடு, மதுரை, 1992.
4. இலக்கிய வரலாறு, கா. சுப்பிரமணிய பிள்ளை, ஆசிரியர் நூல் பதிப்புக் கழகம், சென்னை, 1979.
5. தமிழ் இலக்கிய வரலாறு, எம்.ஆர். அடைக்கலசாமி, கழக வெளியீடு, சென்னை, 1992.

பின்னிணைப்பு

வை.மு.கோ. வழங்கிய வளநூல்கள் 115

அகரவரிசை

1. அபராதி
2. அமரத்தியாகி
3. அமிருத தாரா
4. அமுதமொழி
5. அமைதியின் அஸ்திவாரம்
6. அருணோதயம்
7. அனாதைப் பெண்
8. அன்பின் சிகரம்
9. ஆசைப் பிரவாகம்
10. ஆண்டாளின் அருள்
11. ஆத்ம சக்தி
12. ஆனந்தசாகர்
13. இசைப்புயல்
14. இதயஒலி
15. இந்திர மோகனா
16. இனிய முரசு
17. இன்ப ஜோதி
18. உணர்ச்சி வெள்ளம்
19. உண்மைச் சித்திரம்
20. உத்தமசீலன்
21. உளுத்த இதயம்
22. ஓவியப்பரிசு
23. கடமையின் எல்லை
24. கதம்ப மாலை
25. கருணாலயம்
26. கருணை உள்ளம்
27. கலாநிலையம்
28. கஸ்தூரி திலகம்
29. காதலின் கனி
30. காலக் கண்ணாடி
31. கானகலா
32. கானல்நீர்
33. கிருபா மந்திர்
34. கிழக்கு வெளுத்தது
35. குணக்குன்று
36. குலதனம்
37. கோபாலரத்தினம்
38. கௌரிமுகுந்தன்
39. சண்முக விஜயம்
40. சந்திரகலா மாலை
41. சந்திர மண்டலம்
42. சந்தோஷ மலர்
43. சரச ராஜன்
44. சாந்த குமாரி
45. சாந்தியின் சிகரம்
46. சாமள நாதன்
47. சாரமுது
48. சாருலோசனா
49. சிலாசாசனம்
50. சுகுந்த புஷ்பம்
51. சுகுண பூஷணம்
52. சுதந்தரப் பறவை
53. சுடர் விளக்கு
54. சௌபாக்யவதி
55. சோதனையின் கொடுமை
56. ஜீவநாடி
57. ஜீவியச் சூழல்
58. ஜெய சஞ்சீவி
59. ஜெய பேரிகை
60. ஞானதீபம்
61. தபால் வினோதம்
62. தயாநிதி

63. தியாகக்கொடி
64. துப்பறியும் ராஜாராம் நாயுடு
65. தூய உள்ளம்
66. தெய்வீக ஒளி
67. தைரிய லட்சுமி
68. நம்பிக்கையின் பாலம்
69. நவநீத கிருஷ்ணன்
70. நளினசேகரன்
71. நியாயமழை
72. நிர்மல நீரோடை
73. படகோட்டி
74. படோடோபத்தின் பரிபவம்
75. பட்ச மாலிகை
76. பட்டமே பட்டம்
77. பத்மசுந்தரம்
78. பரிமள கேசவன்
79. பவித்திரப்பதுமை
80. பாதாஞ்சலி
81. பிச்சைக்காரக் குடும்பம்
82. பிரதிக்ஞை
83. பிரதிபலன்
84. பிரார்த்தனை
85. பிரபஞ்ச லீலை
86. பிரேமப் பிரபா
87. பிரேமாசிரமம்
88. புகழ் மாலை
89. புதுமைக் கோயில்
90. புத்தியே புதையல்
91. புனித பவனம்
92. பெண் தர்மம்
93. மகிழ்ச்சி உதயம்
94. மங்கள பாரதி
95. மதுரகீதம்
96. மலர்ந்த இதழ்
97. மனச்சாட்சி
98. மனத்தாமரை
99. மாதவமணி
100. மாயப்பிரபஞ்சம்
101. மாலதி
102. மூன்று வைரங்கள்
103. ராஜமோகன்
104. ராதாமணி
105. ருக்மணி காந்தன்
106. ரோஜா மலர்
107. வத்ச குமார்
108. வாத்சல்யம்
109. வாழ்க்கைத் தோட்டம்
110. வானக்குயில்
111. வீரவசந்தா
112. வீராங்கனை
113. வெளுத்தவானம்
114. வெற்றிப்பரிசு
115. வைதேகி

கு.ப. சேது அம்மாள்

தி. செந்தமிழ்ச்செல்வி

தமிழ்ச் சிறுகதை உலகில் முத்திரை பதித்த கு.ப. ராஜ கோபாலனின் தங்கையும் மணிக்கொடி எழுத்தாளருமான கு.ப. சேது அம்மாள் தமிழ் இலக்கிய வரலாற்றில், இருபதாம் நூற்றாண்டின் சாதனைத் தமிழ்ப்பெண்களின் வரிசையில் இடம்பெறுபவர். தெலுங்கு மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட இவர், இயல் தமிழில் மட்டுமல்லாமல் இசைத் தமிழிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். 2002ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதுபெரும் எழுத்தாளரான கு.ப. சேதுஅம்மாளின் படைப்புகள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்பட்டது தமிழ் இலக்கிய உலகிற்கே பெருமை தரும் செய்தியாகும். ஒரு எழுத்தாளர், அதுவும் பெண் எழுத்தாளர் உயிருடன் வாழும் பொழுதே அவருடைய படைப்புகள் நாட்டுடைமையாக்கப் பட்டது இதுவே முதன்முறை என்பதும் குறிப்பிடத்தக்கது.

பேச்சாற்றல், எழுத்தாற்றல் என்று பல்வேறு துறைகளிலும் தம் படைப்புகளை வழங்கிய இவர் பன்மொழிப் புலமையும் மிக்கவர். இவர் இத்துறையில் சாதனை படைக்கத் தூண்டிய சகோதரர் கு.ப.ரா.வைத் தனது குருவாகவே போற்றினார்.

பேச்சாற்றல்

'காந்தி' இதழில் தம் எழுத்துப்பணியைத் தொடங்கிய இவர் சிறந்த சொற்பொழிவாற்றும் திறமையும் கொண்டவர். மாதர் முன்னேற்றம், இல்லற பூகம்பம், லோகமான்ய திலகர், வள்ளுவரும் பெண்மையும் போன்ற பல தலைப்புகளில் திருச்சி வானொலியிலும், சென்னை வானொலியிலும் இவர் குரல் ஒலித்தது.

எழுத்தாற்றல்

திரைப்படத்துறை உள்ளிட்ட பல துறைகளிலும் பயிற்சி உடைய இவரது கற்பனை வளத்தையும், இலக்கிய அறிவையும் திரைப்படத்திற்கு முதன் முதலாகப் பயன்படுத்திக் கொண்டு மற்றவர்களுக்கும் வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் "கிருஷ்ணபக்தி"

என்ற திரைப்படத்தின் இயக்குநர் ஆர்.எஸ்.மணி அவர்கள்தான். கிருஷ்ணபக்தி என்ற படத்திற்குச் ச.து.சு. யோகியார், சுத்தானந்த பாரதி, சாண்டில்யன் ஆகியோருடன் இணைந்து கு.ப. சேது அம்மாளும் கதை வசனம் எழுதியுள்ளார். அவருடைய வசனங்கள் வரும் பாகங்கள் அப்படத்தின் தனிச்சிறப்பாக இருப்பதைக் காணலாம். தமிழ்த் திரைப்படத் துறையில் வசனம் எழுதிய முதல்பெண் என்ற பெருமைக்கும் உரியவர்.

இலக்கியக் கலையைப் போலவே சமையற் கலையிலும் இவர் கைதேர்ந்தவர். அதனால் 'சமையற்கலை' என்னும் தலைப்பில் இரு நூல்களையும் எழுதியுள்ளார். நூல் வெளிவந்த காலக்கட்டத்தில் சேது அம்மாளின் சமையற்கலை நூலை வாங்கி மணமகளுக்குப் பரிசளிப்பது ஒரு வழக்கமாய் இருந்தது. 92 வயதிலும் அம்பலம்.காம் இணைய இதழில் குறிப்புகளை வாராவாரம் வழங்கினார்.

1935ஆம் ஆண்டு "காந்தி" இதழில் "செவ்வாய் தோஷம்" என்ற சிறுகதையோடு தம் இலக்கியப் பணியைத் துவங்கிய இவருடைய பதிமூன்று சிறுகதைகள், சிறுகதைக்கு இலக்கணம் வகுத்த மணிக்கொடியில் வெளிவந்தன. மேலும் சித்திரபூமி, பெண்மணி, மங்கை, சிவாஜி, ஆனந்தவிகடன், கதாமணி, புதுமைப் பெண், நவயுவன், கதம்பம், கிராம ஊழியன், கலா மோகினி, சுதேசமித்திரன், மின்னல், குண்டூசி, திரட்டு, கலைமகள், கல்கி, தினமணி, தினமணிகதிர் ஆகிய இதழ்களில் ஐந்நூற்றிற்கும் மேற்பட்ட சிறுகதைகளைப் படைத்துள்ளார். இவர் எழுதிய கடைசிச் சிறுகதை "சி.ஐ.டி.யும் மனிதன் தானே" என்ற பெயரில் கல்கியில் வெளியானது. சிறுகதைகள் மட்டுமின்றி, மைதிலி, உஷா, தனிவழியே அம்பிகா, கல்பனா, குரலும் பதிலும், வள்ளியின் உதயம், ஒட்டமும் நடையும் போன்ற எட்டு நாவல்களையும் படைத்துத் தமிழ் நாவல் வரலாற்றில் இடம் பிடித்துள்ளார். பெண்களின் பெயரையே நாவல்களுக்குத் தலைப்பாக்கிப் பெண்களின் பிரச்சினைகளைப் பேசுகிறார். சிறுகதைகள், நாவல்கள் மட்டுமின்றிப் பாரதப்பெண், போதிமாதவன் என்ற இரு சரித்திர நூல்களையும் எழுதியுள்ளார்.

"சந்திரனுடைய கிரணங்கள் எப்படிக் கடலலைகளைக் குமுறச் செய்கின்றன என்கிறார்களோ அதே மாதிரி இயற்கையிலும், வாழ்க்கையிலும் தென்படும் காட்சிகள் உள்ளத்தை அலை கொள்ளச் செய்கின்றன" என்று கு.ப.ரா. இவருடைய கதைகளின் தன்மையைப் பற்றிக் கூறியுள்ளார்.

குழந்தையுள்ளம் போல எழுதுகிறவனின் உள்ளமும் சதா புறக் காட்சிகளில் இலயிக்கும் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். அத்தகைய இலயிப்பு அவருக்குப் பூரணமாக இருந்து விஷயத்தை வாங்கச் சக்தியிருந்தது போலவே அதைப் பூரணமாக வெளியிட்டுச் சொல்லவும் சக்தியிருந்தது. (சி.சு. செல்லப்பா, "கு.ப.ரா. கதைகள்" சுதேசமித்திரன் வார இதழ், 01-09-1957, ப. 30) கு.ப.ரா.வின் சிறுகதைகளைப் போலவே பெண்ணின் மன உணர்வுகளைக் கு.ப. சேது அம்மாளும் மிக நுட்பமாகச் சித்திரித்திருப்பதை அவரது சிறுகதைகளில் காணமுடிகிறது. எனவே செவ்வாய் தோஷம், தெய்வத்தின் பரிசு, இஷ்டபூர்த்தி, வாழ்க்கைப் புயல், காலம் கடந்து, எதிர்சீர், நல்ல நாகரிகம், இருளும் ஒளியும், இன்பத் தொல்லை, மானஸாதேவி, கதையா, பகிஷ்காரம், மனப்பால் ஆகிய பதின்மூன்று சிறுகதைகளும் உஷா, மைதிலி, தனிவழியே, குரலும் பதிலும் ஆகிய நான்கு நாவல்களும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

உடல்வளர்ச்சியும் உள்ள ஒடுக்கமும்

பெண் வளரும்போதே தன்னடக்கத்துடன் வளர வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகிறாள். பண்பாடு என்ற பெயரில் ஒடுக்கவும் படுகிறாள். கௌரியம்மாள் (உஷா) தன் பேத்தி உஷாவின் அடக்கக் குணத்தையும், அறிவுக்கூர்மையையும் எண்ணிப் பெருமிதம் அடைகிறாள். ஆனால் நீ பெண்; அதற்கேற்ப நடந்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப் படுகிறாள். பெண் குழந்தைகளின் உடல் வளர்வதைப்போல உள்ளத்தில் சகிப்புத் தன்மையும் கூடவே வளர்ந்து வருகிறது. அந்தச் சகிப்புத் தன்மையே பிற்காலத்தில் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் கேடயமாகப் பயன் தருகிறது.

பெண் உழைப்பின் உருவமாக, பொறுப்பின் உறைவிடமாக, அடக்கத்தின் விளைநிலமாக இருப்பவள். எத்தகைய சூழ்நிலையில் வளர்ந்தாலும் அடக்கம், பெருந்தன்மை, அனைவருக்கும் உதவி செய்யும் மனப்பான்மை ஆகியவற்றைக் கொண்டு பெரியோர் களுக்கு அடங்கி அவர்கள் சொல்லுக்குக் கட்டுப்பட்டு வாழ்தல் போன்ற பண்புகளைப் பெண்களுக்குரிய கருத்தாக்கமாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

பெண்கல்வி

"கல்வி எனல் அறிவாகும்; அறிவே கல்வி" என்கிறார் பாரதிதாசன். கல்வியறிவு பெற்ற பெண் சுயமாகச் சிந்திக்கும்

ஆற்றலைப் பெறுகிறாள். சிட்டு (மைதிலி) தன் தங்கை மைதிலியைக் கல்லூரியில் பட்டப்படிப்புப் படிக்க வைக்கிறாள். படிப்பை முடித்த மைதிலி சுயமாகச் சிந்திக்கும் திறனைப் பெறுகிறாள். அதன் விளைவாக மேற்கொண்டு பி.டி. படித்து ஆசிரியை ஆவதைத் தன் குறிக்கோளாகக் கொள்கிறாள். அவளது விருப்பத்தை அறிந்த அவள் தாய் அதற்கு அனுமதி அளிக்காமல் திருமணத்திற்கு ஏற்பாடு செய்கிறாள். தன் மகளைத் திருமணம் செய்து கொடுத்துவிடுவதே தன்னுடைய தலையாய கடமை என்னும் மனநிலையே பெரும்பாலான குடும்பங்களில் பெண்களின் அறிவைத் திசைதிருப்புகிறது. கோமதியம்மாள் தன் மகள் வேலைக்குச் செல்வதைவிட வசதியான குடும்பத்து மருமகளாக வேண்டும் என்று விரும்புவது உலக நடப்பியலைக் காட்டுகிறது.

உயர்கல்வி கற்ற சரோஜா (நல்ல நாகரிகம்) பகட்டில்லாத உடை, மிதமான அலங்காரம், கல்வியறிவினால் கிடைத்த அடக்கம், நிதானம் ஆகியவற்றைக் கொண்டு விளங்குகிறாள். சரோஜா பாரதி கண்ட புதுமைப்பெண்ணிற்கு முன்மாதிரியாகத் திகழ்கிறாள். முதுகலை பயின்ற கீதா வானொலியிலும் நன்றாகப் பாடக் கூடிய குரல் வளம் பெற்றவள். படித்த பெண் என்பதாலும், இசை பயின்றவள் என்ற காரணத்தினாலும், திருமணச் சந்தையில் கீதா விலை போகாத பொருளாக நிராகரிக்கப்படுகிறாள். பெண்ணின் அறிவு வளர்ச்சியை ஏற்க மறுக்கும் சமுதாய அமைப்பின் அறிவின்மையை இருள் நிறைந்ததாக உருவகப்படுத்திய ஆசிரியர் "இருளும் ஒளியும்" என்று கதைக்கருவையே தலைப்பாக்கியுள்ளார். கல்வியறிவைப் பெற்றதால் சரோஜாவின் சிந்தனை விரிவடைகிறது.

லீலா தன் மகள் விமலாவைப் புதுமைப்பெண்ணாகக் கல்லூரிக்கு அனுப்பிப் பட்டப்படிப்புப் படிக்க வைக்கிறாள். மேலும் ஆசிரியரை வீட்டிற்கே வரவழைத்துப் பிறமொழி கற்பிக்கவும் செய்கிறாள். பாலுணர்வு வர்ணனை மிகுந்த வடமொழிக் காவியங்களை ஆண் ஆசிரியர் கற்பித்ததால் அவ்வாசிரியர் மீதே லீலாவிற்குக் காதல் ஏற்படுகிறது. லீலாவின் தாய் பாலுணர்வு வர்ணனை மிகுந்த வடமொழிக் காவியங்களை ஆண் ஆசிரியரை வைத்துக் கற்பிக்கச் செய்தது மிகப் பெரிய தவறு என்று காலங்கடந்து வருந்துகிறாள். பாலுணர்வு பற்றிய விழிப்புணர்வு இளைய தலைமுறைக்கு முறையாகக் கற்பிக்கப்பட வேண்டும் என்பதும் அக்கல்வியைப் பெண்களே பெண்களுக்குக் கற்பிக்க வேண்டும் என்பதும் பெறப்படுகிறது.

காதல் வெற்றி

பட்டப்படிப்புப் படித்த மைதிலி தன் சகோதரனின் நண்பன் (மைதிலி) கோபுவின் இனிமையான பேச்சு, படிப்பு, தன்னடக்கம், தோற்றம் ஆகியவற்றைப் பார்த்துப்பேசி, பழகி, தன்னையறியாமலே மனத்தைப் பறி கொடுக்கிறாள். கோபுவும் மைதிலியும் காணுந்தோறும் கண்கள் ஒன்றினை ஒன்று நோக்கும். பேசாப் பெருங்காதலைப் பார்வை வெளியிடும். உறவுமுறையில் தாயார் நிச்சயித்த வரனை மைதிலி மணந்துகொள்ள மறுத்துப் பல போராட்டங்களுக்குப் பின் தான் விரும்பிய கோபியையே கைப்பிடிக்கிறாள். இதனால் காதல் வெற்றியடைகிறது. கல்வி அறிவினால் தன் வாழ்க்கைப் பாதையை மகிழ்ச்சியாக அமைத்துக் கொள்ளும் திறனைப் பெண்கள் பெறுகின்றனர்.

வீட்டுச் சமையலறை வாசற்படியில் நின்ற உஷாவை (உஷா) நிமிர்ந்து பார்த்தான் இராம்மோகன். ஒரே வினாடி இருவர் உடலிலும் ஒரு அதிர்ச்சி, படபடப்பு, இனம்புரியாத பரவசம். இவ்வாறு ஒரு ஆணும் பெண்ணும் முதன்முதலாகச் சந்தித்தபொழுது ஏற்பட்ட காதலை ஆசிரியர் தனக்கே உரிய தனித்தன்மையோடு படம்பிடித்துக் காட்டுகிறார். இராம்மோகன் உஷாவின் காதலுக்குப் பொருளாதாரத் தகுதி தடையாகவில்லை. அதனால் காதல், திருமணத்தில் நிறைவுறுகிறது. பெண்ணின் நல்ல குணத்திற்கும் பொறுப்புணர்விற்கும் மதிப்புக் கொடுக்கும் போக்கு உள்ளது.

காதல் தோல்வி

காதல் வெற்றி பெறுவதற்கான காரணங்களைக் காட்டிய ஆசிரியர், காதல் தோல்வி ஏன் ஏற்படுகிறது என்பதையும், அதன் விளைவுகளையும் சில சிறுகதைகளில் சுட்டிக் காட்டுகிறார். காலங்காலமாகப் போற்றப்பட்டுவரும் அச்சம், மடம், நாணம் போன்ற அணிகலன்களைப் பூண்ட விமலா (தனிவழியே) தான் விரும்பிய சேகர் தன்னை விரும்பாததை அறிந்துகொண்டு பெற்றோர் நிச்சயித்த சிவக்குமாரை மணந்து கொள்கிறாள். காதல் நிறைவேறா விட்டாலும் கூட அதன் பின் எடுக்கப்போகும் முடிவு, வாழும் வாழ்க்கை இவற்றை உணர்ந்து பெண்கள் செயல்பட்டிருப்பது ஆசிரியரின் முற்போக்குச் சிந்தனையையும், சமுதாயத்தின்மீது கொண்டுள்ள மானுட நேயத்தையும் வெளிச்சமிட்டுக் காட்டுகிறது.

மானஸாதேவிக்குத் திருமணமான பிறகும் அவள் மீது ஒரு தலையாய்க் காதல் கொண்டவன், அவளுடைய கணவன், தந்தை, சகோதரன் ஆகிய மூவரையும் பழிவாங்கி மனநிறைவு பெறுகிறான். தனக்குக் கிடைக்காத பெண் மகிழ்ச்சியாக வாழ்வதைக் கண்டதும் பொறாமையுணர்வு மேலோங்குவதோடு கொலை வெறியாகவும் அது மாறுகிறது. ஒருதலைக்காதல் கொண்ட ஆடவன் தன்னை விரும்பாத பெண்ணைச் சார்ந்தோரை அழிக்குமளவிற்கு ஆதிக்க உள்ளம் கொண்டிருப்பதை மானஸாதேவி என்ற சிறுகதை எடுத்துரைக்கிறது.

திருமணம்

கல்வி கற்ற சாரதா (காலம் கடந்து) தனக்குச் சமமான கல்வியறிவுள்ள ஒருவனை மணந்து, இல்லற தர்மத்துடன் கல்வி ஞானமும் கை கோர்த்துக் கொண்டதால், தான் வாழ்க்கையில் சம்பூர்ணசுகம் பெற்று ஆனந்தம் அடையப் போகிறோம் என்று மனக்கோட்டை கட்டினாள். ஆனால் அவள் எண்ணத்திற்கு மாறாக ஆணாதிக்கக் குணங்கொண்ட சீனிவாசன் கணவனாகிறான். கணவன் மனைவியாக ஒரு கூரையின் கீழ் வாழும் பொழுது ஒருவருக்கொருவர் புரிதல் இவ்லாத போக்கே பிரச்சினையின் அடித்தளமாகிறது. இதனால் நோயுற்ற சாரதா இறந்து போகிறாள். கல்வியறிவு கொண்டு பெண் துணிச்சலோடு போராடும் திறனைப் பெண்கள் பெறவேண்டும் என்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வரதட்சிணை

வயது முதிர்ந்த பெற்றோர், மகள் மீனாட்சிக்குச் (செவ்வாய் தோஷம்) சாதகப் பொருத்தம் பார்த்துத் திருமண ஏற்பாடு செய்யும்போது வரதட்சிணையாக நாலாயிரம் ரூபாய் கொடுக்க இயலாததால் திருமணம் நின்று போகிறது. திருமணத்தின் போது பேசிய வெள்ளிக் குத்து விளக்கைச் சீர் தராததால் சிவகாமியின் மகள் (எதிர்சீர்) பிறந்த வீட்டிற்கே அனுப்பி வைக்கப்படுகிறாள். திருமணத்திற்கு முன்னும் பின்னும் வரதட்சிணை, பெண்களின் வாழ்க்கைப் போக்கையே மாற்றியமைக்கிறது.

திருமண உரிமை

பத்மா (குரலும் பதிலும்) தன்னை விரும்புகிற ஒருவனுக்கு நல்ல குணம் இல்லை என்பதைத் தெரிந்துகொண்டு பணவசதி

படைத்த அவனைத் திருமணம் செய்து கொள்வதை விட, நல்ல குணம் கொண்ட ஏழை ஒருவனைத் திருமணம் செய்துகொள்வேன் என்று துணிவுடன் கூறுகிறாள். தன் மனம் விரும்பாத பெண்ணை ஆண் நிராகரிப்பது போலப் பெண்ணுக்கும் தன் கருத்தை வெளிப்படுத்தும் பேச்சுரிமை உண்டு என்பதை ஆசிரியர் எழுபது களிலேயே வெளிப்படுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார்.

குடும்ப வாழ்க்கைச் சிக்கல்

குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களுக்கு விடை காணும் சிந்தனை வளம் மிக்க பெண்கள் சிறுகதைகளில் இடம்பெறுகின்றனர். கோமளம் (இன்பத் தொல்லை) கணவன் ஐராவதத்திற்குப் பணநெருக்கடி ஏற்படுகிறபொழுது பல வருடங்களாகச் செல்லாமலிருந்த தன் மாமனார் வீட்டிற்குச் சென்று உதவிபெறுகிறாள். தன்னைவிடச் சாமர்த்தியமும், நிர்வாகத் திறமையும் கொண்டவள் தன் மனைவி என்பதை அவள் கணவன் உணர்ந்து மகிழ்கிறான். இது போன்று மனைவியின் திறமையை மதிக்கும் கணவன், சமுதாயத்தில் உருவாக வேண்டும் என்பது உணர்த்தப்படுகிறது.

பத்மாவைத் திருமணம் செய்து கொள்ள ஒரு தலையாய் விரும்பிய அனந்தராமன், அவள் வேறு ஒருவனை மணந்து விதவையான பிறகும் அவள் குடும்பத்தில் குழப்பத்தை ஏற்படுத்துகிறான். "நடுத்தர வயதில் வாழ்க்கை வைக்கும் கடினப் பரிட்சைகளில் சிக்கித் திணறித் திக்குமுக்காடி வாழ்க்கையிலுள்ள நெளிவு சுழிவுகளைக் கண்டறிந்த நிபுணியாகிக் குடும்பத்தினரை அரவணைத்துச் செல்லும் தலைவியுமாகிப் பிறர் புகழ்ந்து போற்றுமளவுக்கு ஏற்றம் பெற்று விடுகிறாள்" என்று ஆசிரியரே "குரலும் பதிலும்" நாவலில் கூறியுள்ளதுபோலப் பெண்கள் எத்தனை சோதனைகள் வந்தாலும் அவற்றை வெற்றியின் படிக்கட்டுகளாகக் கொண்டு நிமிர்ந்து நிற்க முயலவேண்டும் என்ற சிந்தனை ஊட்டப்படுகிறது.

"பொறுப்பும் கடமை உணர்வும் அற்ற கணவரை அடைந்த பெண்களின் சீரழிவில் அவர்களுடைய அவல வாழ்வில் சோகம், கோபம், மானம் முதலிய உணர்ச்சிகளால் பாதிக்கப்பட்டு அவற்றை வாய்விட்டுக் கூறக் கூட இயலாத தத்தளிப்பில் சிக்கி உழலும் உயரிய பண்புள்ள பெண்களின் சித்திரம்" (குரலும் பதிலும், பக். 3-4) என்று சேதுஅம்மாள் கூறியுள்ளபடி, குடும்ப வாழ்வில் பல பெண்கள் சிக்கல்களில்

சிக்கித் தவித்தாலும் ஒரு சிலர் அதிலிருந்து விடுபட்டுப் பிறருக்கு வழிகாட்டியாகவும் விளங்குகின்றனர்.

பொறுப்பற்ற கணவன்

குடும்பப் பொறுப்பில்லாத, ஒரு வேலையை ஒழுங்காகச் செய்யாத, கடமை உணர்வற்ற கணவன் தன்னைத் துன்புறுத்திய போதிலும் அரங்கமணி (உஷா) சோகம், துக்கம், வேதனை ஆகிய அனைத்தையும் தன் உள்ளத்திற்குள்ளே புதைத்துக் கொள்கிறாள். தன் மகளைப் பொறுப்புள்ள பெண்ணாக வளர்க்க வேண்டும் என்ற இலட்சியத்தோடு உழைக்கிறாள். கணவன் தன்னைத் துன்புறுத்தினாலும், தன் மகளுக்குத் தந்தை வேண்டும் என்ற காரணத்தினால் அவனோடு சேர்ந்து வாழ விரும்புவது உலக நடப்பியலைக் காட்டுகிறது. திருமணமான பிறகு பிறந்த வீட்டில் நிரந்தரமாகப் போய் தங்கினால் அந்தப் பெண்ணிற்குச் சமுதாயம் 'வாழாவெட்டி' என்ற முள் கிரீடத்தைத் தலைமீது வைத்து அழுத்துகிறது. ஆனால் பொறுப்பற்ற ஆடவனுக்குச் சமுதாயம் எந்தப் பட்டமும் கொடுப்பதில்லை. இது ஆணுக்கு ஒரு நீதி பெண்ணுக்கு ஒரு நீதி கூறும் சமுதாய அமைப்பைச் சுட்டுகிறது. துன்பம் கண்டு துவண்டு போகாமல் வாழ்க்கை வாழ்வதற்கே என்ற குறிக்கோளுடன் உறுதியான உள்ளத்தோடு வாழும் பெண்களே வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெறுகின்றனர்.

பண்பாட்டைப் போற்றுதல்

முதுகலை பயின்ற சரோஜா (நல்ல நாகரிகம்) அந்நிய மோகத்தையும், ஆடம்பர வாழ்க்கையையும் அடியோடு விரும்பாத போதும், நவநாகரிகப் பித்தனான கணவன் இராமதுரையின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகவே அவன் விரும்பியபடி உடை உடுத்துகிறாள். ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று உயர்கல்வி கற்ற இராமதுரை தான் விரும்பிய பஞ்சாபி உடையை மனைவி அணியாததால் கோபித்துக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறுகிறான். அவன் விரும்பிய அதே வகை உடையை உடுத்திய ஒரு பெண் முன்பின் அறிமுகமில்லாத ஒரு ஆடவனுடன் காரில் ஏறிச் சென்றதைக் கண்டவுடன் அவன் மனத்தை மறைத்திருந்த நாகரிகமென்னும் திரை பட்டென்று அறுந்து விழுந்தது. ஆடையில் ஏற்படும் மாற்றம் அகத்தையும் பாதிக்கும் என்பதை உணர்கிறான். இதிலிருந்து பாரதப் பண்பாட்டைப் போற்ற வேண்டும் என்ற சிந்தனை வெளிப்படுகிறது.

சாதிக்கட்டுப்பாடு

இந்து சமூகத்தில் ஆழமாக வேரோடியுள்ள சாதிக் கட்டுப்பாடு சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் ஊடுருவி நிற்கின்றது. சாதிகளுக்குள் வேறுபாடு இருப்பதுபோல ஒரே சாதிக்குள்ளும் ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. கடைப்பிடிக்க வேண்டிய சில சாதி நெறிமுறைகளைக் கைவிட்டவர்கள் சாதியை விட்டு நீக்கப்படுவதைப் "பகிஷ்காரம்" என்ற சிறுகதையின் தலைப்பு மையப்படுத்துகிறது. பட்டுவின் கணவன் மேல்நாட்டிற்குச் சென்று உயர்கல்வி கற்றுத் தாயகத்திற்குத் திரும்பி வருகிறான். அவன் அந்தணனுக்குரிய குடுமி, பூணூல் போன்ற அடையாளச் சின்னங்களின்றி வந்ததால் அவனை அந்தணனாக ஏற்க ஊரார் மறுக்கின்றனர். ஊர் முடிவுப்படி, பட்டுவின் தந்தை மகளையும் மருமகனையும் சாதியை விட்டுத் தள்ளி வைக்கிறார். பெற்ற மகளைவிடச் சாதிக் கட்டுப்பாட்டிற்கு உயர் மதிப்பு அளிக்கப் படுகிறது. அக்காலக்கட்டத்தில் வெளிநாடு சென்று திரும்பி வருவோரின் மனநிலையில் அந்நாட்டவரைப் போன்று உடை உடுத்தி மகிழும் எண்ணம் ஏற்பட்டதை மேலே குறிப்பிட்ட சிறுகதை வெளிப்படுத்துகிறது.

மனைவி பங்கு நிலை

ஒரு பெண் தன் குழந்தைகளுக்கு அறிவுரை கூறுவதுபோலக் கணவனுக்கும் அறிவுரை கூறி நெறிப்படுத்துகிறாள். பிறர் மனம் வருந்துமாறு பேசிய கணவன் சந்தானத்திடம் அவ்வாறு அவன் பேசியது தவறு என்று (தனிவழியே) இராதா துணிவுடன் சுட்டிக் காட்டுகிறாள். கேட்பவரின் மனநிலையையும் சூழ்நிலையையும் அறிந்து தம் உள்ளத்தில் தோன்றிய எண்ணங்களைச் சொல்வது நல்லது என்ற சிந்தனை வெளிப்படுகிறது.

தாய் – பங்கு நிலை

குழந்தைகளுக்கு அறிவுரை கூறி வளர்க்கும் முதல் ஆசிரியை தாய். அந்தத் தாய் பிறரிடம் தன் மகன் மரியாதை யின்றிப் பேசுகின்றபோது கடிந்துகொள்கிறாள். வீடு தங்காமல் திரியும் மகனை அடக்க முடியாமல் அவனுக்குத் திருமணம் செய்து வைக்கிறாள். பொறுப்பில்லாமல் வாழும் ஆண் மகனைப் பொறுப்புள்ள மனிதனாக மாற்றும் நிறுவனம் திருமணம் என்று தவறாகக் கருதும் சமுதாய மதிப்பீட்டை அறிய முடிகிறது.

இனிமே அவன் உன் உடைமை. அவனை அடக்கி, திருத்தி வழிக்குக் கொண்டு வரது உன் பொறுப்பு; உன் சமர்த்து; அவ்வளவுதான். குடித்தனம் உன்னுது பிள்ளையையும் குடும்பத் தையும் உன்கிட்ட ஒப்படைச்சுட்டேன் (குரலும் பதிலும், ப. 18)

என்பதிலிருந்து தாயால் அடக்க முடியாத ஒருவனைத் தாரம் அடக்கி விடுவாள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்ற முதுமொழிக்கேற்ப பெற்று வளர்த்த தாயின் அறிவுரையைக் கேட்டு நடக்காத ஒருவன் திடீரென்று வந்து இணைந்த மனைவியின் சொல்லைக் கேட்டுத் திருந்துவான் என்று எதிர்பார்ப்பது முரண்பாடாக உள்ளது.

கணவன் மனைவி ஒற்றுமை

லீலாவும் கிருஷ்ணனும் (தனிவழியே) திருமணமான அன்று முதன்முதலாகச் சந்தித்துக் கொண்டபோது ஏற்பட்ட ஆர்வத்தோடும் அருமையோடும் ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்திப் பழகி ஐக்கியமானார்களோ அதே நிலையில் மகளுக்குத் திருமணம் ஆனபிறகும் மன ஒற்றுமையோடு வாழ்கின்றனர். ஒன்றுபட்ட அன்புள்ளத்தோடு தாம்பத்திய வாழ்வு நடத்துபவரிடையே கோபதாபம், கசப்பு, வெறுப்பு ஏற்பட இடமில்லாமல் போகிறது.

மாமியார் – மருமகள் ஒற்றுமை

மாமியார் மருமகள் இருவரிடையே கருத்து மோதல் இருக்கும் என்ற கருத்தாக்கத்தை மாற்றி ஒற்றுமையான மாமியார் மருமகளை ஆசிரியர் படைத்துள்ளார். மருமகளை மகளாகக் கருதும் அன்பான மாமியாரை "மைதிலி", "குரலும் பதிலும்" ஆகிய இரு நாவல்களும் சித்திரிக்கின்றன. பெற்ற தாயைவிட மாமியார் அருமையாகத் தன்னை வைத்திருப்பதாகப் பத்மா (தனி வழியே) பெருமைப்படுகிறாள். கமலா (தனிவழியே) மருமகள் அருணா மீது ஆசையும் மிகுந்த ஈடுபாடும் கொண்டு சிநேகிதியைப் போல உறவாடுகிறாள்.

உடன்கட்டை ஏறுதல்

கணவர் போரில் மாண்டதால் இளவரசனைப் பொறுப்பான மனிதரிடம் ஒப்படைத்துவிட்டு மானஸாதேவி

உடன்கட்டை ஏறுகிறாள். தந்தையை இழந்த இளவரசனை வளர்க்கும் பொறுப்புடைய தாயை உயிருடன் வாழவிடாது உடன்கட்டை ஏறச்செய்து சடங்கு முடிக்கிறது சமூகம். கணவன் உயிருடனில்லாதபொழுது பாலுணர்வு ஏற்படாமல் காப்பதற் காகவும், அவள் கணவனின் உடைமைப் பொருளாகக் கருதப் பட்டதாலும் அவ்வழக்கம் தொடர்ந்தது. இவ்வழக்கம் ஆண் மேலாதிக்கத்தால் திணிக்கப்பட்ட கருத்து எனலாம். இக் கொடுமையை ஒழிப்பதற்காக இயற்றப்பட்ட சட்டம் ஏட்டளவில் இருக்க அவ்வழக்கம் சமுதாயத்தில் நடைபெற்றதை எதிர்த்து மானஸாதேவி என்ற சிறுகதையில் சேது அம்மாள் எழுதியுள்ளார்.

விதவைத் துயர்

பெண்கள் அடைகின்ற விதவைத் துயரம் நீண்டகாலமாக இலக்கியங்களில் பேசப்பட்டு வருவதாகயிருந்தாலும் இன்னும் தீரவில்லை என்பது கண்கூடு.

கணவனை இழந்த பத்மாவிற்கு (குரலும் பதிலும்) அனந்தராமன் தீமை செய்கிறான். பத்மா தன்னைத் திருமணம் செய்து கொள்ள மறுத்து வேறு ஒருவனை மணந்ததால் பழி வாங்கவும் திட்டமிடுகிறான். அதனால், பத்மாவின் குடும்பத்தில் குழப்பம் ஏற்படுகிறது. தன்னம்பிக்கையை இழந்த பத்மா "நாளாவட்டத்தில் தேய்ந்துவிட்ட பாத்திரம் ஒரு நாள் திடுமென்று பொத்துப்போய் ஓட்டையாகி விடுவதைப் போல உள்ளம் உடைந்து போகிறாள்" என்று பெண்கள் வீட்டில் பயன்படுத்தும் பொருள்களை உவமையாக்கி அவர்கள் நிலையை விளக்கியுள்ளார்.

மூடநம்பிக்கை கொண்ட சமுதாயம் விதவையான சூர்யாவின் தலைமயிரைக் களைந்துவிட முன் வருகிறது. கணவன் இறந்ததுகூட அவளுக்கு வருத்தத்தை ஏற்படுத்தவில்லை. தன் உடலை அலங்கோலப்படுத்தப் போகிறார்களே என்ற துக்கம் தாங்கமுடியாமல் தரையில் படுத்துப் புரண்டு அழுகிறாள். அந்நிலையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகத் தற்கொலை புரிந்து கொள்கிறாள்.

இளம் விதவையரின் தனிமைத்துயரம் தற்கொலைக்குத் தூண்டுகிறது. இந்துமதம் பெண்ணை அடிமையாக வைத்திருக்கிறது என்பதற்கு இச்சிறுகதையைச் சான்றாகக் கூறலாம். மதம் பெண்ணின் சமூகத்தகுதி நிலையில் வேறுபாட்டைக் கற்பித்துள்ளது.

கணவனை இழந்த பெண் உயிருள்ள மனுஷி அவளுக்கு உணர்வுகளும் விருப்பங்களும் உண்டு என்று பெண்ணின் உள்மன உணர்வுகளை ஆசிரியர் எடுத்துக்காட்டித் தலைப்பிலேயே "கதையா?" என்ற வினாவை எழுப்பி இது வெறும் கற்பனைக் கதையல்ல, சமுதாயத்தில் நடந்து கொண்டிருக்கின்ற உண்மை நிகழ்ச்சி என்பதையும் கதைக்குள்ளே விடையாகத் தந்துள்ளார். இளம்விதவையாக இருந்தபொழுது கு.ப. சேதுஅம்மாள் எழுதிய இச்சிறுகதையில் விதவை மறுமணத்திற்குச் சமுதாயம் ஆதரவு தரவேண்டும் என்று அழுத்தமாக எடுத்துரைக்கிறார். இச்சிறுகதை ஆசிரியரின் வாழ்க்கை அனுபவங்கள், இச்சிறுகதையின் முதல் பாதியில் அவரையறியாமலே இடம்பெற்றிருக்கின்றன. இவர் இளம் விதவையாகயிருந்து சமுதாயத்தில் தாம் நேரில் அனுபவித்த அனுபவங்களையும், தாம் அடைந்த உணர்வுகளையும் புரிந்து கொண்டு அவற்றைப் படைப்பில் எழுதிக்காட்டி விழிப்புணர்வு ஊட்டியுள்ளார். சமுதாயத்திற்குப் புத்துணர்ச்சி ஊட்டிய இவர் பிற்காலத்தில் மறுமணம் செய்துகொண்டு பிறருக்கும் முன்னோடியாக வழிகாட்டியுள்ளார் என்பதையும் இங்குக் குறிக்க வேண்டும்.

மாதர் முன்னேற்றம்

சர்வோதயம் என்பது எல்லோருடைய நலம் என்று பொருள்படும். சமுதாயத்திலுள்ள அனைத்து மனிதர்களின் நலத்தினையும் இச்சொல் குறிக்கிறது. சர்வோதயம் பெண்களும் ஆண்களும் சரிநிகர் சமானமாக வாழ வேண்டுமென்பதை வலியுறுத்துகிறது. பெண்களிடமுள்ள அச்ச உணர்வைக் கல்வியறிவின் மூலம் போக்கி அவர்களின் ஆற்றலை வெளிக் கொணர்வது சர்வோதயத்தின் நோக்கம் எனலாம்.

> *பெண்கள் தங்களிடமுள்ள ஆற்றலையும் சிறப்பியல்புகளையும் அறிந்துகொள்ள வேண்டும்— பெண்களை எந்தத் துறையிலும் ஒதுக்குவது நல்லதல்ல*
>
> *(மா.பா.குருசாமி, சர்வோதயம், பக். 25–26)*

என்ற காந்தியடிகளின் கூற்று பெண்கள் தங்களிடமுள்ள ஆற்றல்களைத் தாங்களாகவோ அல்லது பிறர் வாயிலாகவோ அறிந்து கொள்வது பெண்கள் முன்னேற்றத்திற்குரிய வழி என்று விளக்குகிறது. பெண்களின் முன்னேற்றம் பற்றி "மனப்பால்" என்ற சிறுகதையில் சேதுஅம்மாள் குறிப்பிட்டுள்ளார். பெண்களுக்காக

ஆண்கள் பத்திரிகை நடத்தி விழிப்புணர்வூட்டிய காலத்தில், பெண் பத்திரிகை ஆசிரியராவது அரிதாயிருந்தது. தேவையற்ற அச்சத்தையும், நாணத்தையும் விட்டுப் பெண்ணடிமைத்தனத்தை எதிர்த்துப் பெண்களே போராடும் காலம் விரைவில் வர வேண்டும் என்ற எதிர்பார்ப்பு உடையவளாக இச்சிறுகதையில் இடம்பெறும் சாவித்திரி படைக்கப்பட்டிருக்கிறாள். சாவித்திரி பெண்களின் முன்னேற்றத்திற்காகக் ''கலாநிதி'' என்ற பத்திரிகையைத் தொடங்கி நடத்துகிறாள். அதில் இந்துமதம் பெண்களைக் கல்வி அறிவின்றி அடிமையாக வாழ வைத்துள்ளதைச் சுட்டிக்காட்டிப் பெண் கல்வியின் அவசியத்தை எழுதுகிறாள். சமுதாயத்தின் சரிபாதியாக விளங்கும் பெண்கள் தங்களிடமுள்ள குறுகிய எண்ணங்களை மாற்றிக் கொண்டு விருப்பமான துறைகளில் ஈடுபட்டு உழைத்தால் அனைத்து உரிமைகளையும் பெற்று முன்னேற்றமடைய முடியும் என்று பல வழிகளையும் வகுத்துத் தருகிறாள். அதோடு மட்டுமின்றி நாட்டு நலனுக்காக அந்தக் காலத்தின் தேவையை உணர்ந்து பத்திரிகை நடத்துகிறாள். மேலும், அனாதையாக வந்த பெண் ஜெயாவிற்குப் புகலிடம் அளித்துத் தனக்கு உதவியாளராகவிருந்து பணியாற்ற வாய்ப்பும் கொடுத்துத் தான் கொண்ட இலட்சியத்தைச் செயலாக்குகிறாள்.

தொகுப்புரை

பெண்கல்வி கற்றால் வீடும் நாடும் பேதமையற்றிடும் என்பதை உணர்ந்து பெண்பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளனர்.

கல்விக்கண் பெற்ற பெண்கள் சுயமாகச் சிந்திக்கும் திறனையும், பேச்சுரிமையையும் பெறுகின்றனர். பாலுணர்வு பற்றிய விழிப்புணர்வு இளையதலைமுறைக்கு முறையாகக் கற்பிக்கப்பட வேண்டும் என்று குரல் கொடுக்கப்பட்டுள்ளது.

திருமணத்திற்கு முன்னும் பின்னும் வரதட்சிணை பெண்களின் வாழ்க்கைப் போக்கையே மாற்றியமைக்கிறது.

குடும்ப வாழ்வில் ஏற்படும் சோதனைகளைப் பெண்கள் சாதனைகளாக்குகின்றனர்.

வெளிநாடுகளுக்குச் சென்று தாயகம் திரும்புவோரின் நடை, உடைகளில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவு பிரதிபலிக்கப் பட்டுள்ளது.

மனமொத்த கணவன் மனைவியைப் படைத்துக் காட்டி இனிய இல்லறத்தில் அமைதி நிலவ வைக்கிறார். மருமகளை மகளாகக் கருதும் மாமியாரின் பாத்திரப்படைப்பு குடும்ப அமைதியை நிலைபெறச் செய்கிறது.

விடுதலைப் போராட்டக் காலத்தில் எழுதப்பட்ட சிறுகதைகளில் காந்தீயச் சிந்தனைகள் இடம்பெற்றுள்ளன.

கல்வி கற்று வெளியுலகத்தோடு தொடர்பு பெற்ற பிறகு பெண்களுக்கு உரிமை வேண்டும் என்ற எழுச்சியும், வேட்கையும் ஏற்படுகிறது. அதன் பயனாய் நாட்டைத் திருத்தும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது.

பிறந்த வருடம்	:	1908
தந்தைபெயர்	:	பட்டாபிராமையர்
சகோதரர் பெயர்	:	கு.ப. இராஜகோபாலன்
மக்கள்	:	இரு மகன்கள்
ஊர்	:	கும்பகோணம்
தாய்மொழி	:	தெலுங்கு
சிறுகதைகள்	:	ஐந்நூற்றிற்கும் மேற்பட்டவை
நாவல்கள்	:	எட்டு
சரித்திர நூல்கள்	:	1. பாரதப்பெண் 2. போதிமாதவன்
சமையற்கலை நூல்	:	2 பாகங்கள்
திரைக்கதை வசனம்	:	கிருஷ்ண பக்தி என்ற படம்
படைப்புகள் நாட்டு உடைமையாக்கப்பட்ட தேதி	:	ஜூன் 2002
இறந்த வருடம்	:	2002

பூரணி அம்மையார்

இரா. அறவேந்தன்

இலக்கியப் படைப்பில் சாதனையாளரான பூரணி அம்மையாரின் இயற்பெயர் சம்பூரணம். 'சம்பு' என்றும் அழைப்பர். இவர்தம் தாயார் சீதாலக்ஷ்மி; தந்தை ஸ்ரீ ராமஸ்வாமி ஐயர். இவ் இணையர்க்கு ஆறு ஆண் குழந்தைகள் ஏழு பெண் குழந்தைகள். இவர்களில் நான்கு ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் இறந்துவிட்டன. எஞ்சியிருந்த எட்டுக் குழந்தைகளில் ஒருவர்தான் பூரணி. 1913இல் பிறந்துள்ளார். 1926இல் மணம் முடித்துக் கணவர் இல்லம் சென்றுள்ளார். இந்த இடைப்பட்ட காலத்துத் தம் குடும்பச் சூழலை அம்மையார் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> *நான் பிறந்த ஊர் பழனி. புகுந்த ஊர் தாராபுரம். என் தந்தை பெரிய தமிழ் வித்வான். பழனி ஹைஸ்கூலில் பெரிய வகுப்புகளுக்குப் பாடம் நடத்துவார்... அதே பள்ளியில் என் அண்ணாவும் சரித்திர ஆசிரியர். எங்கள் குடும்பம் நடுத்தர வர்க்கமாக இருந்தது. ஆனால் வீட்டில் சரஸ்வதி கடாக்ஷம் நிறைந்திருந்தது. என் தாய் கூடத் தமிழ்ப் பாடல்களுக்குப் பதம் பிரித்து அர்த்தம் சொல்லும் திறன் படைத்தவர்.*
>
> *இந்தக் குடும்பச் சூழலால் நான் ஐந்தாம் வகுப்புவரைதான் படித்திருந்தும் 'கடற்கரையில் நெடுநேரம் அமர்ந்திருந்தால் உடலும் உப்பாகிப் போவது போல' எனக்கும் சற்றுத் தமிழ் அறிவு கூடுதலாக இருந்தது என நினைக்கிறேன். சிறுவயதிலிருந்தே புத்தகம் படிக்கும் ஆர்வம் உள்ளவளாக 'ஆடு தழை மேய்வது போல்' படித்து வந்தேன். எனக்குப் பதின்மூன்று வயதில் விவாகமாகி, பதினைந்து வயதில் கணவன் வீடுவந்தேன். புக்ககத்துச் சூழல் வேறுமாதிரி இருந்தது.*

அம்மையாரின் இக்கருத்துவழி அவருக்கு 1926இல் திருமணம் முடிந்து 1928இல் தம் கணவர் இல்லம் செல்வதாகக் கொள்ளலாம். ஒரு வகையான இடச்சூழலில் இருந்து மற்றொரு வகையான இடச் சூழலுக்கு மாறியதன் பின்னரே அம்மையாரின் எழுத்துப்பணி தொடங்கி உள்ளது. இன்று கிடைத்துள்ள அம்மையாரின் படைப்புகளில் 'தமயந்தி ஸ்வயம்வரக் கும்மி' என்பது 1929இல் எழுதப்பெற்றதாகக் குறிக்கப்பெற்றுள்ளது. தொடர்ந்து மாதர்சங்கத்திற்காகவும், பள்ளிகளுக்காகவும், நலுங்கிடல் சடங்கிற்காகவும் பாடல்கள் எழுதித்தரும் முயற்சியில் அம்மையார் ஈடுபட்டு வந்துள்ளார். இவற்றின் இடையே தம் படைப்புகளை இதழ்களுக்கு அனுப்பவும் செய்துள்ளார். இம்முயற்சி தொடர்பான அம்மையாரின் எழுத்துவழிக் குறிப்பு வருமாறு:

1937 வாக்கில் பழநியிலிருந்து 'சித்தன்' என்னும் பத்திரிக்கையும், கோவையிலிருந்து 'பாரத ஜோதி' என்னும் பத்திரிக்கையும் வந்து கொண்டு இருந்தன. இரண்டும் அல்பாயுசிலேயே மறைந்தும் போய்விட்டன. அந்த இரண்டிலுமாக என்னுடைய ஐந்து சிறுகதைகள் வெளிவந்தன. அவை: பிராயச்சித்தம், சுவர்ணம், நாட்டியக்காரி, சிற்றன்னை கோயில், பொம்மை.

அம்மையார் தம் 22ஆம் வயதில் தன்னுடைய இரண்டாவது மகனைப் பெறுவதற்காகத் தன் தாய்வீடு சென்று இருந்தபோது இந்தி கற்றுள்ளார். தொடர்ந்து பயின்றதன் விளைவாக ராஷ்டிரபாஷா விஷாரத் வரை தேர்ச்சி பெற்றுள்ளார். இந்த இந்திக் கல்வி அம்மையாரின் வாழ்வியலில் கற்பித்தல் தொழிலாகப் பின்னர் அமையாவிட்டாலும், தொண்டாகவும் ஒரு வகையான பொருள் வரவிற்கு உரியதாகவும் அமைந்ததும் மதிப்பு நிலைக்கு உரியதாக அமைந்ததும் இங்குக் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கது ஆகும். அம்மையாரின் குடும்பம் வறுமையை எதிர்கொண்டபோது இந்தி படித்த மாணவிகள் அன்பளிப்பாக அளித்த வெள்ளிப்பாத்திரங்கள் பெரிதும் பயன்பட்டுள்ளன.

இரண்டாம் தாரமாகத் தன்னைப் பெற்றோர் மணம்முடித்துஅளிக்க முற்பட்டபோது, அதனை எதிர்த்துப் போராடித் தன் கருத்தை நிலைநாட்டியுள்ளார். பின்னர் வைதீஸ்வரன் என்பவரை மணம் முடித்துள்ளார். வைதீஸ்வரர் குடும்பமும் மிகப் பெரியது. ஆறு ஆண் குழந்தைகள் ஒரு பெண் குழந்தை என ஏழுபேர்களை உடையதாக அக்குடும்பம் அமைந்திருந்தது. ஆண் குழந்தைகள் வளர்ந்த நிலையில்

தமக்கென 'உணவகம்' ஒன்றைச் சாரதாவிலாஸ் என்ற பெயரில் தொடங்கி, தாமே ஆளுக்கு ஒரு பொறுப்பேற்று உழைத்துள்ளனர். இதனால் அவர்கள் திருமணம் முடிந்த நிலையிலும் கூட்டுக் குடும்பம் தொடர்ந்துள்ளது. இக்குடும்பத்தின் ஒரு நாள் சூழலைப் பின்வருமாறு அம்மையார் தம்நூலில் பதிவு செய்துள்ளார் (2005; 99)

> *நான்கு ஓரகத்திகள், தாயற்ற மூன்று குழந்தைகள், ஞானாம்பாள் குழந்தை கிட்டு, வீட்டு ஆண் பிள்ளைகள், விருந்தாளிகள் என்பதாக, 'ஜே ஜே' என்று கூட்டம் ஓட்டலில் சாப்பாடு போடுவதில்லை, இரு வேளை டிபன், காபி மட்டும்தான் இருந்தது. ஆகையால் வேளைக்கு இருபதுக்கும் மேலேயே இலைபோடநேரும். இது தவிர, கடை ஆட்கள் அங்கு ஒரு சாதம் மாத்திரம் செய்து கொண்டுவிட்டு வீட்டிலிருந்து குழம்பு, ரசம், காய் வாங்கிச் செல்லுவர்கள். ஆகையால் சமையலறையில் இரண்டு பேர் சேர்ந்து சமைப்பார்கள். பாக்கி இரண்டு பெண்களும் கிணற்று ஜலத்தை ஒருத்தி இழுத்துத்தர, மற்றவள் எல்லாப் பாத்திரங் களிலும், தொட்டியிலும் நிரப்புவாள். குளியல் அறையில் பெரிய அண்டாவில் வெண்ணீர் காலை 6 மணி முதல் 11 மணி முடிய காய்ந்து கொண்டே இருக்கும். மறுநாள் சமையல் செய்தவர்கள் ஜலம் நிரப்பவும், ஜலம் நிரப்பியவர்கள் சமைக்கவுமாக மாற்றிக் கொள்ளுவார்கள். இயந்திர கதியில் முறைபோட்டு வேலை செய்வதால் தடங்கலின்றி வேலை நடக்கும்.*

இந்தப் பின்புலத்தை உள்வாங்கிக் கொண்டுதான் அம்மையாரின் படைப்பாற்றலை மதிப்பிட வேண்டும். அதுவும் பிராமணச் சமூகப் பின்புலத்தில் வாழ்க்கையை நகர்த்திய ஒரு பெண்ணின் படைப்பாகத்தான் அம்மையாரின் படைப்புகளை மதிப்பிட வேண்டும். இதுபோன்று பாலின வேறுபாடு, சாதிய அல்லது சமய, சமூக அடையாளம் ஆகியவற்றின் அடிப்படையில் படைப்பாளியை இனம்கண்டு படைப்பிற்குள் செல்வதால் படைப்பு, படைப்பாளி சிலபோது சிறுமைப்படுத்தப் பெறுதலும் உண்டு; சில போது பெருமைப்படுத்தப்பெறுதலும் உண்டு. இந்திய, தமிழகச் சூழலில் சாதிய அடையாளத்தைப் பாலின வேறுபாட்டைக் கருத்தில் கொண்டு பெண் அல்லது தலித்துநிலைப்

படைப்பாளிகளின் படைப்புகளை ஆய்வுக்கு உட்படுத்துகையில் தான் அவர்தம் ஆளுமையின் வீரியத்தை முழுமையாக உணர முடியும். இத்தகு முயற்சி படைப்பிற்கோ படைப்பாளிக்கோ வழங்கப்படும் கரிசனச் சலுகை அன்று; பல்வேறுதளங்களில் இருந்து தம்மை விடுவித்துக் கொண்டு படைப்பாளி மேற் கொள்ளும் முயற்சியின் உண்மைநிலையை உணரத்தான். இல்லை யெனில், பூரணி அம்மையார் இத்தனை வேலைகளுக்கு இடையேயும் தன் ஒய்வு நேரத்தை மற்றவர் போல் செலவிடாமல் வாசிப்பதிலும், எழுதுவதிலும் செலவிட்டார் எனும் அசாதாரணச் செயல்கள் எல்லாம் சாதாரணச் செயல்களாகவே மதிப்பிடப்பெற்றுவிடும். கல்வி அறிவு பெற்று இருந்த அல்லது இலக்கியம் படைத்தலின் அருமை, இலக்கிய வாசிப்பின் அருமை அறிந்திருந்த குடும்பச் சூழல் குறிப்பாகக் கணவர், சகோதரர் உள்ளிட்டவர் தம் ஊக்கப்படுத்தலும் அம்மையாரின் எழுத்து வாழ்க்கைக்கு உரமாக அமைந்துள்ளது. பிற்காலத்தில் கவியரங்குகளில் அம்மையார் பங்கேற்றதற்கும், பரிசுகள் பல பெற்றதற்கும், நூலாக்க முயற்சிகளுக்கும் துணைநின்றவர்கள் அம்மையாரின் மக்கள் என்பதும் நினைவில் கொள்ளத்தக்கதே.

படைப்பாக்கம்

பூரணி அம்மையாரின் படைப்பு வாழ்க்கை 1929ஆம் ஆண்டு முதற்கொண்டதாக அமைகின்றது. ஆக, ஏறக்குறைய சுமார் 78 ஆண்டுக் கால அவர்தம் படைப்புலக வாழ்க்கைவழி வெளிப்பட்டுள்ள படைப்புகளில் இருந்து பூரணி கவிதைகள் (2003), பூரணி நினைவலைகள் (2005) என்ற இரு நூல்கள் வெளிவந்துள்ளன. இந்நூல்கள் போக எஞ்சிய படைப்புகள் ஏராளமானவை அச்சாகாமல் உள்ளதை அப்படைப்புகளைத் தம் திருமகள் கிருஷாங்கினி அவர்களிடம் அளித்துள்ளதை,

> *ஒருநாள் அன்னை என்னிடம் 'இதுதாண்டி என்னோட சொத்து. நீயும் எழுதறே. இதை யெல்லாம் தூக்கிப் போட்டுடமாட்டே' என்று சொல்லி வரிசையாக அடுக்கப்பட்ட 200 பக்க நோட்டுகள் 10-க்கும் மேற்பட்டவை கொடுத்தார். கவிதைகளே அதில் ஐந்து நோட்டுகள். . . .*

என்ற அவர்தம் கருத்துவழி அறிந்து கொள்ளமுடிகின்றது. கவிஞர் கிருஷாங்கினி அவர்களிடம் பேசியதன்வழி, பூரணி அம்மையாரின் படைப்புகளைக் கீழ்வரும் வகைமைகளுக்கு உரியனவாகப் பகுத்தளிக்கலாம்.

- பாடல்கள்
- கவிதைகள்
- புதுக்கவிதைகள்
- கட்டுரைகள்
- சிறுகதைகள்
- வாழ்க்கை வரலாறு
- மொழியாக்கக் கவிதைகள்

இவற்றில் கட்டுரைகள் தவிர்த்த ஏனைய படைப்புகளில் அச்சில் வெளிவராதவை எல்லாம் கிருஷாங்கினி அவர்களிடமிருந்து இக்கட்டுரைக்காகக் கேட்டுப் பெறப்பட்டன. ஆக, பூரணி கவிதைகள் எனும் தொகுப்பில் வெளிவந்துள்ள இன்னும் வெளிவராமல் உள்ள பாடல்கள், கவிதைகள், புதுக்கவிதைகள் ஆகியவற்றைப் பொருண்மைநோக்கில் கீழ்வருமாறு பகுத்துக்காட்டலாம்.

பூரணி அம்மையாரின் தொடக்ககாலப் படைப்புகள் பெரும்பாலும் பாடல்களாக அமைந்துள்ளன. ஒவ்வொரு பாடலுக்கும் 'மெட்டு' குறிப்பிட்டுள்ளார். அவர் பயன்படுத்தியுள்ள மெட்டுகள் வருமாறு:

பொன்னுலவு சென்னிகுள, பத்தொன்பதாம் நூற்றுக்கு மேல், வாழ்க திலகர்நாமம், ரத்ன ஊஞ்சல் ஆடினார், அன்னையேஎன், மாதவர் போற்றிடும், கானகம் தாண்டி, நந்தவனத்தில், ஐயா பழனி மலை, மருவே சரித்த, அம்மா வயிற்றைப் பசிக்குது, வேட்டையாடினான், மங்களம் மாதவற்கு, மாயப் பிரபஞ்சத்தில், உன்னை நினைந்து நினைந்து, என்னதான், நந்தகே லாலா, பஜனை செய்வோம், உள்ளம்தான், நாக பஞ்சமி செய்யும், பத்யம் சதா போரே, யாவரும் சுந்திரமாக, ஸ்ரீ கண்டேசனை, பகு பதம் பணிவது, நிருபண சாமி, பார்க்க பார்க்க, கோலாட்டம் தரணி மாதா, மண்ணுக்கு மரம் பாரமா, நினைத்தது ஒன்னு, என்று தணியும், மெல்லச் சிரித்தாள், நெஞ்சத்தை அள்ளிக்கொஞ்சம் தா, நீ பார்த்த பெண்ணை, தங்கத்திலே ஒரு, பிருந்தா வனமும், கண்ணும் கண்ணும், சொல்லத்தான் நினைக்கிறேன்.

கும்மிப் பாடல், நலுங்குப்பாடல், வில்லுப்பாட்டு, சிந்துப் பாடல் என்று குறிப்பிடப் பெற்றுள்ள இப்பாடல்களின் பொருண்மைகள் கீழ்வருமாறு அமைந்துள்ளன.

- வரவேற்புத் தன்மைக்குரியவை
- புராணக் கதைகளை விளக்குபவை
- தேச விடுதலை நிலையைக் குறிப்பவை
- பள்ளிக்கூடம் தொடர்பானவை
- அறிவுறுத்தும் தன்மையவை
- மகளிர் சங்கம் தொடர்பானவை
- வாழ்விடச் சூழல் தொடர்பானவை
- காந்தியடிகள் போன்றோர் தம் பணிகளை விளக்குபவை

பூரணி அம்மையார் தம் படைப்புகள் பலவற்றுக்கு 'மெட்டு' இன்னது என்று குறிப்பிடாமல் எழுதி உள்ளார். அவை பெரும்பாலும் வசனக் கவிதைகளாகக் கருதத்தக்கனவாக அமைந்துள்ளன. அதாவது அவற்றைப் பாடலாகப் பாடுவதைவிடக் கவிதைகளாக வாசிப்பதே பொருத்தமானதாக அமைகின்றது. இக்கவிதைகளின் பொருண்மைநிலை வருமாறு:

இயற்கை : வானம், அரச (மரம்) வாழ்வு, கொடுக்காப்புளி, மங்கல மார்கழி, நதி, ஆற்றுவழி, கிராமம், வண்ணக்கோலம், மதியம், மின்னல், அலைக் குழந்தை, மலை, வாடாமலர், நாதம், மாலை, உதயம் (கிராமம்), மழைக்குப் பிறகு ஒரு மாலையிலே.

பெண் : அன்னை அன்பு, பெண், சாத்திரம், சிறுமி அழுகிறாள், அன்னையவள்.

வறுமை : வறுமை, ஏழையின் புலம்பல், சோகம்

சமூகம் : பக்தி ஏது, பயணம், குடிநீர், உள்ளம், குழந்தை, வாழ்க்கை, பயம், பிரார்த்தனை கோலம்.

பக்தி : ஆலய நினைவுகள், தீப பூஜை.

பண்டிகை : தீபாவளி.

அறிவுரை : மவுனம் கார் . . . .

உயிரினம் : நாகமும் உறையும், கானல் நீர்.

வரவேற்பு : கவியரங்க வரவேற்பு.

மேற்குறிக்கப்பெற்ற கவிதைகள் தவிரப் பல கவிதைகள் 'புதுக்கவிதைகள்' எனும் பெயரிடப்பெற்று அவற்றின் கீழ்க் கணினியாக்கப் பெற்றுள்ளன. புதுக்கவிதைக்கே உரிய சமூக விமர்சனத் தன்மை இக்கவிதைகளில் இடம்பெற்றுள்ளது. இக்கவிதைகளின் பொருண்மை நிலை வருமாறு :

இயற்கை : மீன்கள், தாரகை, மழை, நிலவின் இரவு, அழகு வானம், மேகச் செதில்கள், மயான வானம், வானமென்னும் மைதானம், வானக் காட்சிகள் பகிர்வு, மாற்ற முடியுமா?, சுனாமி, பயத்திலும் கவர்ச்சி, இயற்கை.

பெண், ஆண்/பெண் : பெண்ணின் நிலை, பெண்ணியம், பெண், பாஞ்சாலி, பாஞ்சாலியின் துயரம், நளாயினி, இது அசட்டுத் தனமா மனிதத்தனமா? தாலி, ஆண் - பெண், அசட்டுத்தனம், திருமணம், விதிவிலக்கை, மணத்து, அந்தநாள்..., ஆண் விருப்பம், சலிப்பு, அர்த்தம் என்ன?, வக்கிரம், மாற்றங்கள், மாற்றங்கள் மூன்று, பெண் உரிமைப் போர், காலை ஒலிகள்.

பக்தி : கனவான உலகத்தில், வழி என்ன?, பக்தி, மதம், நவராத்திரி கொலு, பூஜை, நமது மதம், பக்தி.

அரசியல் : பன்றி, தகுதி, நீதி கேட்டால் பிடிக்காதா?, செம்மொழி, கூவம் மணக்கிறது, மாற்ற முடியுமா?

சமூகப் பிரச்சினை : கொழுப்பு, தந்தை, மொழிவெறி, ?, ஹிந்துத்துவா, திகம்பரம், சாத்தியமாக்கு, எத்தனை கூட்டமடா, ஜாதி, மதம், போலிஸ், நஞ்சு, சில உண்மைகள், வீணர்கள், முடிவில்லை, தண்ணீர் தண்ணீர், தேவையா? தலிபான், மோகினிப்பிசாசு.

படைப்பு : முறையீடு, படைப்பு, நள்ளிரவில், கிழம், இதிலுமா கீழ்ப்பார்வை, எழுத்து.

போலி : பாம்பா பழுதா? பொறாமை, போலிகள் பண்பாடு, ஸத்காலட்சேபம்.

பண்டிகை : கார்த்திகை.

சோகம் : வாழ்வு, பேச்சு, அவலம், வேண்டாம் தாம்பத்யம்.

ஒற்றுமை : சார்தல்.

மறுபரிசீலனை : மன்னிக்கவும் எனக்கொரு சந்தேகம், ஆண் குணம், பொய்கள், பாஞ்சாலி, முன் எச்சரிக்கை.

மனிதநிலை : பொதுவாழ்வு, கைதிகள், உழைப்பு, போலிகள் - 1, முதுமை, எண்ணமும் செயலும், முதுமை -1, நியதி, நான்யார்?, முதுமை, வாழ்க்கை, கரப்பான் பூச்சினம், அதிர்ஷ்டசாலிகளுக்கு, முதுமை, ஈகோ.

மொழி : கலப்பு மணம்.

துறவி : குற்றம், எதற்கு.

அறிவுரை : தளராதே, ஏற்றுக்கொள். . .

உலக இயல்பு : குற்றங்களை, கையெழுத்து. . .

நிகழ்வு : மோஷம், வருடப்பிறப்பு, ஊஞ்சல்.

உயிரினம் : கலிநீதி, நாய்.

பூரணி அம்மையார் எழுதியுள்ள சிறுகதைகள் தற்பொழுது 27 கிடைத்துள்ளன. இவற்றில் 22 கதைகள் அவர்தம் வாழ்வியல் நிலையில் சந்தித்த மனிதர்கள் தொடர்பானவையாகக் கருதத்தக்கன. ஏனைய ஐந்து சிறுகதைகளில் நான்கு தொடர்பான மறு உருவாக்கம் அம்மையாரால் பதிவுசெய்யப் பெற்றுள்ளன. 1937 வாக்கில் வெளிவந்துள்ள இச்சிறுகதைகளில் மூலநிலையை அறியமுடியவில்லை. இந்த 26 சிறுகதைகளின் உட்கிடையாக இழையோடும் கருத்தியலைக் கீழ்வருமாறு குறிக்கலாம்.

- ஆண் ஒழுக்கச் சிதைவு (கணவன், சினேகிதி, அங்கிச்சி, ஆசாரம், சுப்பமணி, துளசி, அவலம், கரும்பலகைகள்)
- பெண் ஒழுக்கப் பிறழ்வு (சினேகிதி, அங்கிச்சி, வரதட்சணை சாவு, நாட்டியக்காரி)
- பெண் மணவாழ்வைத் தீர்மானித்தலில் பெற்றோரின் ஆதிக்கம் (விஜயா, அலமு, கரும்பலகைகள், சிற்றன்னை கோயில்)
- விதவை நிலை (வயறு, ஆசாரம், தாய்மை, பொம்மை)
- குழந்தையின்மை, குழந்தைப்பேறு தள்ளிப் போதலால் பெண்அடையும் மனத்துன்பம் (அவள், அவலம்)
- பெண்ணின் முதுமைப் புறக்கணிப்பும் உழைப்புச் சுரண்டலும் (வேஷம், சாவு)
- சோம்பல் (சீதாச்சீ), அறிவீனம் (நெருப்பு), சந்தேகம் (சேஷம்மாள்), விதவை மறுமணம் (துங்கா), மூடநம்பிக்கை (புதையல்), ஜாதிவெறி (சுப்பாமணி), பாசம் (தாய்மை)

இப்பொருண்மைகள் அம்மையாரின் பாடல் / கவிதை / புதுக்கவிதைகளின் பொருண்மைகளில் இருந்து வேறுபட்டு அமைவதும் சுருங்கிய தளத்திற்கு உரியனவாக அமைவதும் இங்கு ஒப்பிட்டு நினைக்கத்தக்கன. மேலும் இக்கதைகளுக்கான சமூகச் சூழல் பெரும்பாலும் 'அக்ரகாரமாகவே' அமைந்துள்ளது. கரும்பலகைகள், பொம்மை, சிற்றன்னைகோயில் எனும் கதைகளின் களம் மட்டும் விதிவிலக்காக அமைகின்றன. கதையாக்கமும் பெண்களை மையமிட்டே கட்டமைக்கப் பெற்றுள்ளது. மேலும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய ஒன்று 'படைப்பாளி தன் நிலை சார்ந்த கருத்தியலை எங்கும் வெளிப்படுத்தவில்லை' என்பது ஆகும். இதற்கு, கவிதைகளில் ஆண்பெண் சமரசத்தை வலியுறுத்தும் போக்கிற்கு நேர்மாறாக இச்சிறுகதைகளில் பெண்களின் மரணம், தற்கொலைகள் இடம்பெறுதலைத் தக்க சான்றாகக் கொள்ளலாம். இச்சிறுகதைகளில் தற்கொலை செய்து கொள்ளும் மரணமடையும் இளம்பெண்கள் தொடர்பான விபரம் வருமாறு:

தற்கொலை:
- தூக்கிலிட்டுக் கொள்ளுதல் — (சினேகிதி- லலிதா, அங்கிச்சி - அங்கிச்சி, கரும்பலகைகள்-மேரி)
- நெருப்பிட்டுக் கொள்ளுதல் — (நெருப்பு-பாரதி, வரதட்சணை சாவு - சிவாவின் மனைவி)
- அரளி குடித்தல் — (சேஷம்மாள் - சேஷம்மாள்)
- வழிமுறை சொல்லாதது — (சிற்றன்னை கோயில் - ராது)

பெண்மரணம் (புதையல்-அந்து, கிருஷ்ண ஐயரின் மகள், கிணறு-காமாட்சி அம்மாளின் மருமகள், அலமு-கிருஷ்ண அய்யர் மனைவிகள், கரும்பலகைகள் - தொழிலதிபர் மனைவி, சாவு - சரசு)

ஆக, பூரணி அம்மையாரின் படைப்புலகம் பற்றிச் சுருக்கமாக, கோட்பாட்டு ஆக்கமாகக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்றால் சிறுகதைப் படைப்பாக்க முயற்சிகள் நடப்பியலைப் பேசுவனவாகவும், கவிதைப் படைப்பாக்க முயற்சிகள் குறிக்கோள் தன்மையை முன்வைப்பவையாகவும் உள்ளன எனலாம்.

இதுபோன்ற கருத்துநிலையைத் தன்வரலாற்று நூலிலிருந்து வருவித்துக்கொள்வது அவ்வளவு எளிதானது அன்று. எனினும் அம்மையாரின் 'நினைவலைகள்' எனும் நூலில் அவர்தம் வாழ்வியல் மட்டும் விவரித்துச் சொல்லப்பெறவில்லை. அவரின்

வாழ்வியலுடன் தொடர்புடைய உறவினர், நண்பர் என ஒரு பெருந்திரளான மக்கட்கூட்டத்தின் செயல்பாடுகளை எல்லாம் மலர் மலர்வது போன்று மெல்ல மெல்ல விவரித்துச் சென்றுள்ளார். விவசாயத் தலைமுறை தொழில் தலைமுறையாவதும் பின்னர் அதுவே கல்வி அறிவுலகம் சார்ந்ததாகத் தன்னைப் புனரமைத்துக் கொள்வதும் என மூன்று தலைமுறை வாழ்வியல் இந்நூலில் விவரிக்கப்பெற்றுள்ளது.

சுருங்கச் சொன்னால் கிராமத்து அக்கரகாரங்கள் எப்படி நகரத்தை நோக்கி நகர்ந்தன என்பதனை நேரில் கண்டுணர்ந்தவர் கூற்றுவழி வாசகர் அறிந்துகொள்ள உதவும் ஒரு பதிவேடாகவே நினைவலைகள் நூல் அமைகின்றது. சகிப்புணர்வு, ஒற்றுமை உணர்வு, உழைப்பில் ஆர்வம் எனும் உறுதிப்பாட்டுடன் நடை போடுகையில் குடும்பம் தலைத்தூக்குவதையும் உறுதிப்பாட்டை விட்டு விலகுதல், ஆடம்பரவாழ்வியலுக்கு உட்படுதல், ஒழுக்கக் கேட்டிற்கு ஆட்படுதல் என்பனவற்றால் குடும்பங்கள் நொறுங்கிப் போவதையும் கருத்தியலாக அல்லாமல் நிகழ்வுகள் வழி உணர்த்தும் நூலாக இந்நூல் அமைந்துள்ளது.

கருத்தாக்கம்

பூரணி அம்மையாரின் படைப்புகளில் காணலாகும் பொருண்மைகளின் அடிப்படையான பகுப்பு அவர்தம் கருத்தியல் தளத்தைத் தெளிவாக்குகின்றது. முதுமைக்கும் இயற்கைக்கும் பெண்ணுக்கும் அவர்தம் படைப்பில் அளித்துள்ள 'இடம்' மிகுதி. காந்தி, தமயந்தி, பாஞ்சாலி ஆகியோர் வாழ்வியலின் மையங்களைக் கவிதையாக்கிப் பெண்களிடையே பரவலாக்கும் முயற்சி பாடலாக்கங்களில் இடம்பெற்றுள்ளது. அதே நேரத்தில் காந்தி, பாஞ்சாலி தொடர்பான தன் கருத்தாக்கங்களை,

அழைத்து வந்தவர்க் கெல்லாம்
அமுதளித் தசுத்தம் நீக்கி
உழைத்து மெய் சோர்ந்து போன
உத்தமி மனைவி கேட்ட
கழுத்திலே அணியும் மாலை
பொதுநலச் சொத்து என்று
மறுத்த அக்காந்திதானும் என்
மதிப்பிலே குறைந்து போனார்

சூதாட
துரியோதனன் தயாரா?

அறை கூவினாள் திரௌபதி ;
துரியோதனன் ஏற்க நேர்ந்தது.
'இப்போது நீ உன் அடிமைகள்
ஐவரையும் பணயம் வைத்து முதலில் ஆடு,
சகுனிக்கு இங்கு இடமில்லை'
தோற்றான் ஆட்டத்தில் துரியன்
ஆரண்யம் சென்றாள் ஐவரொடு பாஞ்சாலி

என்று கவிதை நிலையில் வெளிப்படுத்தவும் செய்கின்றார். இதே நிலைப்பாட்டைப் பக்தி, இந்துமதம், பெண் உரிமை, அரசியல் முதலானவற்றைப் படைத்து அளிக்கும் நிலையிலும் பின்பற்றி உள்ளார். அதாவது ஒன்றைக் கண்மூடித்தனத்துடன் பாராட்டுவதும் இல்லை. குறை ஒன்று இருப்பதால் அதனை முற்றிலும் வெறுத்து ஒதுக்குவதும் இல்லை. அது ஒழுங்கானதாக, தூய்மையானதாக, மக்கள் நலனுடையதாக அமைதல் வேண்டும் என்பதிலேயே கவனம் செலுத்துகின்றார். தன் புரிதல் திறனில் நின்று தாம் எடுத்துக்கொண்ட பிரச்சினைக்கு வெட்டு ஒன்று துண்டு இரண்டு எனத் தீர்ப்பு வழங்கிவிடுகின்றார். இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகக் கீழ்வரும் கவிதைப் பகுதிகளைக் குறிக்கலாம்.

சர்ச்சைக்கு ஏதுவான
தரைதனைத் தோட்டமாக்கு
மிச்சத்தில் மசூதி, கோயில்
இரண்டையும் சாத்தியமாக்கு
மதம்
அது விஷமோ அபினோ அல்ல
வாழ்க்கையை ரசித்து, ருசிக்க
செய்யும் ஊறுகாய்

. . .

ஊறுகாய்
குடிப்பதற்கும் உதவும்
தயிர்ச்சாதம் சாப்பிடவும் உதவும்

. . .

தண்ணீர்க் குடம் தூக்கும்
தருணியர்கள் இப்போ
டென்னிஸ் விளையாட
கிளப்புகள் உண்டாச்சு
ஏலேலோ இயற்கையதின் தன்மை எப்போதும்
மாறுதலே

இதையறியாப் பல பெரியோர் கண்டு இகழுவதும் அறியாமை

பச்சிளம் பாலருக்கு
படம், பாடம் போதிக்க
எஸ்.எஸ்.எல்.சி. பிறகு
இரு வருடப் பயிற்சியுண்டு
மந்திரியாய் ஆவதற்கு
மக்களையே ஆள்வதற்கு
எந்தப் பயிற்சியுண்டு!
எங்கே படிப்புண்டு!

நிரூபணம் ஆகிவிட்டால்
தண்டிக்க வேண்டியதுதான்
அது யாராக இருந்த போதிலும்
மடாதிபதிகளுக்கு மட்டுமல்ல
மக்களை ஆட்சி செய்வோருக்கும்
கை, வாய், கச்சை சுத்தம்
கண்டிப்பாக வேண்டும்.

அம்மையாரின் இத்தகு நிலைப்பாட்டால் தான் எவ்வகையான கருத்தியல் முத்திரைக்குள்ளும், ஒற்றைத்தளச் சிறைக்குள்ளும் அவர்தம் சிந்தனையை நிலைநிறுத்த முடிய வில்லை. நமது இந்து மதம் என்று தலைப்பிட்டு எழுதுவதுடன், மடிசார் கட்டித் திருநீறு அணிந்து ஈஸ்வரி பக்தையாக வெளிப்பட்டாலும்

மடிசார் புடவையின் மூன்று முடிச்சில்
லஷ்மியும் ஸரஸ்வதியும் பார்வதியும்
பத்திரமாக அமர்ந்திருக்கிறார்களாம்
ரத்த, மாம்ஸ, எலும்பு, நரம்புடைய பசுமாட்டில்
முப்பத்து முக்கோடி தேவதைகளும் வாசமாம்
இத்தகைய கற்பனைப் பொய்களும்

என்றும் தம் கருத்தை நிலைநிறுத்துகின்றார். இதுபோன்று அம்மையாரின் கருத்தியல் நிலைப்பாட்டை நம்மால் அவர்தம் கவிதைகள்வழி வருவித்துக் கொள்ள முடிகின்றதே தவிர, அவர்தம் சொந்த வாழ்வியல் சார்ந்த நிகழ்வுகளை வருவித்துக் கொள்ள இயலவில்லை.

நான் என் ம்ன உளைச்சலையும் வேதனையையும்
பாட்டின்மூலம் வெளிப்படுத்த விரும்பவில்லை.

பக்திப் பாடல்களும் எழுத முயலவில்லை. என் மனத்தை ஈர்த்த ஏதேதோ விஷயங்களைப் பாட்டாக்கினேன்

என்று அம்மையாரே குறிப்பிட்டுள்ளது இங்கு நினைவுகூரத் தக்கது. விதிவிலக்காக முதுமை, ஓரகத்திகள் தொடர்பாக அமையும், இது அசட்டுத்தனமா? மனிதத் தனமா? என்ற கவிதைகளை மட்டும் குறிக்கலாம்.

படைப்பாக்க முறை

பூரணி அம்மையாரின் தொடக்ககால மொழிநடைக்கும் பிற்கால மொழிநடைக்கும் பெருத்த வேறுபாடு ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. பாடல்கள், கவிதைகள், சிறுகதைகள் என எல்லாவற்றையும் ஒருங்கு வைத்து வாசித்தால் மூன்று முக்கியக் கூறுகள் படைப்புகளில் காலந்தோறும் இழையோடி வருவதைக் காணலாம். அவை :

- பிராமணச் சமூகத்தைச் சேர்ந்தவராக இருப்பினும் படைப்பில் பிராமணச் சமூகம் இடம்பெறும் இடங்களில்கூட அச்சமூக மொழிவழக்கு இடம்பெறாமை.
- சொற்களும் தொடர்களும் அலங்காரமற்று, நீட்சியற்றுச் சுருக்கமாக எளிமையாக அமைகின்றமை.
- மொழிக் கலப்பு அற்ற நிலை.

ஆங்காங்கு இடம்பெறும் சிற்சில கூறுகளாகக் கதைசொல்லி நிலைகளைக் கவிதைகளுக்கு உரியதாகக் குறிக்கலாம். சிறுகதைகளைப் பொறுத்தவரையில் 'நான்' என்ற ஒருவரைத் தான் தன்னோடு இணைத்துக் கொண்ட கதை நிகழ்வுகளை உருவாக்கிக் கொள்கின்றார். இந்த நான் என்பவர் பெரும்பாலும் படைப்பாளியான பூரணி அம்மையாராகவே இருத்தல் வேண்டும். இதற்கான அகச் சான்றுகள் பல உள்ளன. குறிப்பாக இக்கதைகளில் பெரும்பாலானவை

அது 1942 ஆவது வருடம் . . . (வேஷம்)

1967 அப்போது . . . (கணவன்)

1925 ஆம்வருடம் . . . (சினேகிதி)

என்பெரிய பிள்ளைக்கு 1960 ஆம் ஆண்டு. . . (நெருப்பு)

நான் புக்ககம் வந்த புதுதில் (சுமார் 72 வருடம் முன்பு)... (துங்கா)

பழநியை அடுத்த ஒரு கிராமத்தில் 1930. . .(புதையல்)

என்று காலக் குறிப்புடன் தொடங்கப்பெறுவதைக் குறிக்கலாம். சினேகிதி கதையில் இடம்பெற்றுள்ள,

"1925ஆம் வருடம் அப்போது எனக்கு வயது 12 நிறைந்திருந்தது" என்ற தொடக்கம் பூரணி அம்மையாரின் நேரடி வாழ்வியலுடன் தொடர்புப்படுத்தத்தக்கதாக உள்ளது. இவ்வாறு படைப்பாளியும் கதைகளில் இடம்பெறும் நானும் ஒருவரே என்ற முடிவுக்கு வந்தால் பூரணி அம்மையார் தமிழில் தனி ஓர் இலக்கிய வகைமையில் முத்திரை பதித்துள்ளார் எனலாம். தமிழில் தன் வரலாற்றுத் தன்மைவாய்ந்த நாவல்கள் வெளி வந்துள்ளன; கவிதை நூல்கள் படைக்கப்பெற்றுள்ளன. அரிதாகச் சில சிறுகதைகளும் வெளிவந்துள்ளன. ஆனால், தனி ஓர் படைப்பாளி தம் வாழ்வியல் சார்ந்த நிகழ்வுகளைச் சிறுகதைத் தன்மையுடன் தனித்தனித் தலைப்புகளில் தொடக்கம் முடிவு எனும் நிலையில் படைத்தளித்திருப்பது என்பது பூரணி அம்மையாரின் தனிப்பட்ட படைப்பாக்க முறையாகவே கருதவேண்டும். அம்மையாரின் கவிதைப் படைப்பாக்க முறையில் காணப்பெறும் வானம், குழந்தை முதலானவற்றுடன் பேசுவது போன்ற வெளிப்பாடும், உருவகத் தன்மையும் (நாகமும் உறையும்), அந்தாதியும் (குடிநீர்) பொதுவான தமிழ்ப் படைப்பாக்கச் சூழலுக்கு உரியவைதாம்.

'பூரணி நினைவலைகள்' எனும் அம்மையாரின் தன் வரலாற்று நூல் எந்தையும் தாயும், சாரதா விலாஸ், நீயூ சாரதா கபே உதயம், இரண்டாவது சகுனி (கிட்டன்), அனுபவம் நிகழ்வுகள், அது சார்ந்த எண்ணங்கள் எனும் ஐந்து பகுதிகளாக 214 பக்க அளவில் வெளிவந்துள்ளது. இந்நூலின் படைப்பாக்க முறையில் கட்டிக்காட்டத்தக்க இரண்டு சிறப்பு அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

அவை :

1. 'பூரணியின் தந்தை ஸ்ரீ ராமஸ்வாமி ஐயர் 1864இல் பிறந்தார்' என்று படர்க்கை நிலையில்தான் தன்னுடைய தான் சார்ந்த வரலாற்று நிகழ்வுகளை விவரித்துச் செல்கின்றார். சம்பூர்ணம், பூரணி என்று தம் பெயர்களைச் சூழலுக்கு ஏற்ப மாற்றி மாற்றிப்

பயன்படுத்தினாலும் சம்பூர்ணம் கேட்டாள், பூரணி சொன்னாள் என்றே படர்க்கை நடையைக் கையாண்டுள்ளார். முதல்பாகத் தலைப்புமட்டும் தான் 'எந்தையும் தாயும்' என்று தன்மை நிலைக்குரியதாக உள்ளது.

2. கிராமம், இயற்கை நிலைகளைப் பற்றி வர்ணித்துச் சொல்லும் போக்கைப் பூரணி அம்மையாரின் கவிதைகளில் பெரும்பாலும் காணலாம். அதுபோன்றே தன் வரலாற்று நூலிலும் வர்ணனைத் தன்மை இடம்பெற்றுள்ளது. அதாவது காப்பியங்களின் நாட்டு நகர வர்ணனைகளை நினைவூட்டுவதாக அப்பகுதி அமைகின்றது. சான்றுக்கு, இரண்டாம் பாகத்தின் தொடக்கம் வருமாறு :

கலையம்புத்தூர் அக்கிரஹாரம் கிழக்கு மேற்காக எதிரெதிரான வீடுகளுடைய இரு வரிசையாக அமைந்திருக்கும். தெருக்களில் வந்தால் கம்பங்களில் மண்ணெண்ணெய்யில் எரியும் சிம்னி விளக்குகள் இருக்கும். தெரு மிகவும் குறுகல். . . .(ப.89).

கபீர், அடல் பிஹாரி வாஜ்பேய், ஞான பாரில்லா, உதய் சங்கர், ஈஸ்வர சரண்சிங்கல், உதய சங்கர் பட்டா, ஞானவதி சக்சேனா, தேவ விரததேவ் ஆகியோர் இந்தி மொழியில் எழுதியுள்ள கவிதைகளில் சிலவற்றைத் தமிழாக்கம் செய்துள்ளார் பூரணி அம்மையார். தமிழாக்கம் தழுவலாக அமைகின்றது. கவிதைகளுக்குத் தலைப்பிட்டு,

சுயபரிசோதனைகள் செய்து
சிந்திக்கின்ற போதிலே
'எதை இழந்தேன் எதை அடைந்தேன்'
என்று கணக்குப் பார்க்கிறான்

என்பது போன்று எளிய கவிதைநடையில் தம் மொழியாக்கத்தை அமைத்துள்ளார்.

பெண்மை உருவாக்கம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிறந்து வளர்ந்த மனிதர்களுடன் பழகி இருபதாம் நூற்றாண்டின் நீண்ட எல்லையைக் கடந்த நிற்கும் படைப்பாளி பூரணி அம்மையார் ஆவார். இக்காலக் கட்டத்தில் உலக அளவிலும் இந்திய, தமிழக

அளவிலும் நிகழ்ந்துள்ள மாறுதல்கள் புற, அக நிலைகளில் பல பல ஆகும். பண்பாட்டு விழுமியங்கள் மறுபரிசீலனை செய்யப்பெற்ற முக்கியக் காலக்கட்டமாக இக்காலப் பகுதியைக் குறிக்கலாம். அதிலும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால் 'பெண்' சார்விழுமியங்களில் நிகழ்வுற்ற மாற்றங்களை உட்செறித்துக் கொண்டுள்ள காலக்கட்டமாகக் குறிக்கலாம். இவற்றைத் தம் கூர்ந்த அறிவு நுட்பத்தால் உள்வாங்கிய படைப்பாளியாகப் பூரணி அம்மையார் திகழ்கின்றார். பெண் தொடர்பான மாற்றங்களை

> ஏலேலோ இயற்கையின் தன்மை எப்பொழுதும்
> மாறுதலே
> இதையறியா பல பெரியோர் கண்டு இகழுவதும்
> அறியாமை.

என்று வரவேற்கும் நிலைப்பாட்டுடன்

> தாலி தன் ஜாலியைக் கெடுக்கின்றதென்று
> தவிர்த்திடும் பெண்கள் இன்றுண்டு அந்த
> . . . . . .
> உடலுறவென்பதும் மிக மிகப் பழமை
> ஒருவரும் அதை விட்டொழிக்க வில்லை
> கடவுளை சாட்சி வைத்து நூலணிதல்
> பழமை என்றெண்ணுதல் சகிக்கவில்லை

என்று பழமையைப் பேணும் நிலைப்பாட்டையும் அம்மையாரிடம் காணமுடிகின்றது. பெண் சார்ந்த செயல்பாடுகளாகக் குடிநீர் எடுத்தல், சமையல், கும்மி, கோலாட்டங்கள், நலுங்கிடுதல், கோலம் போடுதல் என்பனவற்றைத் தம் கவிதைகளில் பதிவு செய்துள்ளார். பெண் போகப் பொருளாகப் பாவிக்கப்பெறும் சமூகநிலையை

> . . . . . .
> பெண் உடலின் கவர்ச்சிகளைப்
> பிதுக்கிக் காட்டிப் படமெடுக்கும்
> நச்சுப்பாம்புக் கூட்டம்
> காணியைப் போல் கால்நடைபோல்
> கனக நவரத்தினம் போல்
> ஆணினங்கள் பெண்ணினத்தை
> அனுபவிக்கும் பொருளாக

என்று சாடும் கவிஞர், பெண்ணுக்கானச் சுயம் சார்ந்த இன்பம் நிறைவேறப்பெறாமல் ஜடமாக வாழ்நாள் கழிவதைக் கீழ்வருமாறு பல்வேறு கவிதைகளில் பதிவு செய்துள்ளார்.

நளாயனி
கால தர்மம் அனுசரித்து
. . . .
சீக்காளிக் கணவனுக்கு
சிசுரூஷை பல செய்து
. . . .
தாலி போம் நாளை என்று
சாபமிட்டான். . .
. . . . .
பொழுது விடியாதுபோ என்று
மறு சாபம் இட்டுவிட்டேன்
. . . . .
திரௌபதியாய் பிறப்பெடுத்து
திடதீர்க் கணவர்கள்
ஐவரை அடைந்திருந்தும்
அடைந்ததில்லை ஒரு சுகமும்

உடற்பசி தீரவும்
உருப்படிகளைப் பெறவும்
புனிதம் என்ற பெயரில்
கல்யாணக் கட்டால்
கூட்டுச் சேரல்
. . . . .
அவரவர் மனதிலும்
ஆயிரம் ஏமாற்றங்கள்
. . . .

பெண்மைக் குறைதீரப்
பிள்ளைகள் பெற்றெடுத்து
என்கடமை தீர்த்தாச்சு
இனி வாழ்வில் சலிப்பாச்சு

ஆண்களிலும் காணலாகும் பிறழ்வுகளைப் பிறழ்வுகளாகக் கருதித் திருத்த வேண்டுமே தவிரத் தாமும் அப்பிறழ்வைப் பாதையாக்கிக் கொள்ளக் கூடாது என்பதில் அம்மையார் தீவிரம் காட்டுகின்றார்.

ஆண் என்ன பெண் என்ன
அபிப்பிராயம் சொல்ல
எண்ணத்தை வெளிப்படுத்த
உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ள
எல்லோர்க்கும் உரிமை உண்டு
. . . . .
ஆணோ பெண்ணோ சுய கட்டுப்பாடு
யாருக்கும் அவசியம்
மிகமிக அவசியம்

என்று குறிக்கும் நிலையுடன், இராமன், காந்தி என்போரின் குடும்ப வாழ்வியலை விமர்சித்து அவர்கள் 'ஆண்களாகப் பேசுவதை' சுட்டிக்காட்டித் தன்னால் குறைத்து மதிப்பிடப் பெறுபவர்களாகப் படைக்கின்றார். சான்று :

கணவனால் காடடைந்து
கயவனால் சிறைபுகுந்து
தணலிலே குளித்துவந்த
மனைவியாம் சீதை தன்னை
மறுபடி வனம் துறத்தும்
மனமுடை இராமன் தன்னை
கடவுளாய்ப் பார்க்க எந்தன்
உளமது இசைவதில்லை

இனிக்க இனிக்கச் சொல்லிப் பெண்ணை அடிமைப் பொருளாகப் பாவித்து வருகின்றது ஆண்வர்க்கம் என்ற புரிதலும் அம்மையாரிடம் தெளிவாக இருக்கின்றது. சான்று :

மணந்து
மனைவி பதவி ஏற்று
விருந்தோம்பி
வீட்டுப் பணிசெய்து
பெற்றுப் பாலூட்டி
பெரிதாக்கி
குற்றேவல் செய்து
குடும்பம் நடத்தலே
சுவர்க்கம் என்ற
எண்ணத்தைப்
பெண்ணில் திணித்து
யந்திர பொம்மையாய்
ஆக்கிவிட்டது தந்திரமாய்
ஆண்வர்க்கம்

வாழ்க்கை மைதானத்தில்
. . . . .
குழந்தையாய், குமரியாய்
மனைவியாய், தாயாய்,
தாதியாய்
ஒவ்வொரு கட்டத்திலும்
ஆண் வர்க்கத்தால்
அழுத்தப் படும் அபலையாய்

பெண் விடுதலைக்கெனச் சில சட்டங்கள் இயற்றப் பெற்றாலும் போராட்டங்கள் நிகழ்த்தப்பெற்றாலும் சடங்குகள் மாறுகின்றனவே தவிர விதவை மறுமணம் வழக்குப் பெறவில்லை என்ற ஏக்கத்தை

மழிக்கும் வழக்கம் வழக் கொழிந்தது
மறுமணமும் அங்கீகரிக்கப் படுகிறது
வரன் கிடைக்கிறதா ?

என்ற கவிதை வரிகள்வழி வெளிப்படுத்தியுள்ளார். இந்நிலைகளில் இருந்து பெண்கள் விடுதலை பெறுதற்கு அம்மையார் தம் கவிதை வழி முன்வைத்துள்ள கருத்தியல்கள் மிகக் குறைவே.

மங்கையர் நலம் காக்க அவர்
வறுமை சிறுமை நீக்க
எங்கள் சங்கம் உழைக்க நீ
இரங்கி மகிழ்ந்து வரம் தா

என்ற அம்மையாரின் வேண்டுதல் கூடப் பிற்போக்கு நிலைப்பாட்டையே உணர்த்துவதாக அமைகின்றது. ஆனால் நிஜவாழ்க்கையில் கைம்பெண்ணுக்குப் பூச்சூட்டி மகிழ்ந்ததும், மறுமணம் செய்து வைத்ததும், காதல் மணத்தை அங்கீகரித்ததும் என அடுக்கடுக்காகச் செய்து காட்டியுள்ளார். பல எதிர்ப்புகளுக்கு இடையே செய்து காட்டியுள்ளார் என்பனவற்றை அறியும்போது போராட்ட வாழ்வில் பதிவு செய்ய இயலாதநிலையினதாகவே அம்மையாரின் முற்போக்குச் சிந்தனைகளைக் கருத வேண்டி உள்ளது. பொதுவாகப் படைப்புகளை மதிப்பிடும் போது படைப்பை மட்டும் மையப்படுத்தும் முறையும் உண்டு. படைப்புடன் படைப்பாளியின் வாழ்வியலையும் இணைத்துப் பேசுவதும் உண்டு. இவற்றுடன் படைப்பு உருக்கொண்ட காலத்தையும் கருத்தில் கொண்டு விளக்குவதும் உண்டு. இவற்றுக்கு அப்பாலும் படைப்பாளி வளர்க்கப்பெற்ற

இளம்பருவச் சூழலையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதைப் பூரணி அம்மையாரின் வாழ்வியல் நிகழ்வுகளும் படைப்புகளும் ஒருங்கு நிறுத்திப் பார்க்கையில் தெரிகின்றது. அம்மையாரின் படைப்பில் சகிப்புத்தன்மை அல்லது ஒருங்கிருத்தல் என்பது இழையோடுவதற்குக் காரணமே அவர் பிறந்து வளர்ந்த சூழலும் மணம் முடித்து வாழ்ந்த சூழலும் 'ஜனத்திரளாக' அமைந்திருந்ததுதான் எனலாம். பெண்களை உயர்வாக மதிக்க வேண்டும் எனும் வித்து அம்மையாரின் பிறந்தகச் சூழலில் விதைக்கப் பெற்றுவிட்டதைக் கீழ்வரும் பகுதி தெளிவாக்குகின்றது.

> *சீதாலக்ஷ்மியின் குடும்பம் பெருகியது. குழந்தைகள் பிறந்தன. சில சமயம் வீடு செழிப்பாகவும், சில சமயம் பற்றாக்குறையுடனும் இருந்தது. ஆனால் இதெல்லாம் கணவன் மனைவிக்குள் எந்தவிதப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. அங்கே பரஸ்பர அன்பு இருந்தது. ஐயர் மனைவியை மதிக்கத் தெரிந்தவர். அவர் தன் போக்கில்தான் செயல்படுவார் என்றாலும் மனைவி ஏதேனும் ஆலோசனை சொன்னால் கூர்ந்து சிரத்தையுடன் கேட்டுக்கொள்வார். பெண் என்று தாழ்வாகப் பேசமாட்டார். மனைவி, குழந்தைகளிடம் மிகுந்த பாசத்துடன் பழகுவார். அன்பொழுகப் பேசுவார். பெண் குழந்தைகள் தான் அதிகம் பிறந்தன என்றாலும் சலிப்படையாமல் அவர்களை, 'பெண்களா கண்களா' என்று அழைத்து அன்பு செலுத்துவார். இது சீதாலக்ஷ்மிக்கு மிகுந்த பூரிப்பைக் கொடுக்கும். ஏனென்றால், அவளுடைய அக்காள்களின் கணவர்கள் 'பொட்டைக் கழுதைகளா' என்று தமது மனைவிகளைத் திட்டி அலட்சியப்படுத்துவார்கள் (2005; 6).*

எனவே, பூரணி அம்மையாரிடம் காணப்பெறும் பெண் தொடர்பான கருத்தியல்களுக்கான அடித்தளம் பிறந்தகம் என்றே கூறலாம். இந்நிலையில் பூரணி அம்மையார் எனும் படைப்பாளியின் படைப்பாளுமையைக் கட்டமைத்தலில் பிறந்து வளர்ந்த சூழல் முக்கிய இடம் வகிக்கின்றது என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். ஒரு படைப்பை அதுவும் பெண்களின் படைப்பைப் புரிதலுக்கு ஆட்படுத்துகையில்

படைப்பாளியின் இளம்பருவச் செயல்பாட்டையும் திறனாய்வாளன் கருத்தில் கொள்ள வேண்டும் எனும் உளவியல்சார் சிந்தனையைப் பூரணி அம்மையாரின் படைப்பாக்கத்திறன் முன்வைப்பதாகக் கொள்ளலாம். இந்நிலைப்பாட்டைக் கீழ்வருமாறு கோடிட்டுக் காட்டலாம்.

படைப்பாளி வளர்க்கப்பெற்ற→ படைப்பாளியின் → படைப்பாக்கக் சூழல் (அ) பெற்றோரின்→ கருத்தியல்→ கருத்தியல் கருத்தியல்

துணைநூல்கள்

1. பூரணி, பூரணி கவிதைகள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்-1, 2003.

2. ------, பூரணி நினைவலைகள், சதுரம் பதிப்பகம், 2005, சென்னை.

நன்றி : பூரணி அம்மையாரின் கவிதைகளில் செம்பாதி இன்னும் அச்சில் வெளிவரவில்லை. சிறுகதைகளும் நூலாக வெளிவர வில்லை. இவற்றை எல்லாம் கணினி நிலையில் இருந்து நிழற்படி எடுத்து அளித்த அம்மையாரின் புதல்வி கவிஞர் கிருஷாங்கினி அவர்களுக்கு.

படைப்பாளர் லக்ஷ்மி

தி. மகாலட்சுமி

தமிழ்ப் புனைகதைப் பெண் படைப்பாளியாகக் கால் நூற்றாண்டைத் தன்வயப்படுத்தி வைத்திருந்தவர் லக்ஷ்மி. இவர் ஏறத்தாழ 45 ஆண்டுகளுக்கும் மேலாக நூற்றுக்கும் மேற்பட்ட புதினங்களையும், சிறுகதைகளையும் படைத்தவர். சிறந்த மனிதநேயமிக்க மருத்துவர். பயனுள்ள மருத்துவ நூல்கள் பலவற்றை எழுதியவர். தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த காலத்தைப் பற்றிய பயணக் கட்டுரையும் வரைந்தவர். இத்தகைய சாதனைகளுக்குரிய லக்ஷ்மியின் வாழ்க்கை, படைப்பாளுமை ஆகியவற்றை ஆய முற்படுகின்றது இக்கட்டுரை.

பிறப்பும் வளர்ப்பும்

திரிபுரசுந்தரி எனும் இயற்பெயர் கொண்ட லக்ஷ்மி 23.03.1921இல் திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த முசிறியில் பிறந்தவர். இவரது தந்தை மருத்துவராகப் பணியாற்றியவர். தாய் சிவகாமி இவரது சிறுவயதிலேயே இறந்துவிட்டார். இவரது பெற்றோருக்கு ஆறு பெண்கள், இரண்டு ஆண்கள். இவர்களுள் மூத்தவராகப் பிறந்தவர் லக்ஷ்மி. தனது பிறப்பு வெறுக்கப்பட்டதை லக்ஷ்மி,

> *பெண்ணாதான் பிறந்தாளே – இப்படி*
> *கரிக்கட்டையாவா பிறந்து தொலைக்கணும்.*
> *கர்மம். தாத்தா தலையில் அடித்துக் கொண்டார்.*
>
> *(கதாசிரியையின் கதை, பாகம் – 1, ப.9)*

என்று உணர்த்துகிறார். இவ்வாறான அன்றைய சமூகச் சூழலில் தான் லக்ஷ்மி என்ற எழுத்தாளரும் வளர வேண்டியிருந்தது.

கல்வி

மருத்துவரான தந்தை ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி முதலிய மொழிகளில் எழுதவும், படிக்கவும், நன்றாகப் பேசவும் தெரிந்தவர். வீட்டில் தந்தை பெரிய ஆசிரியராக இருந்து, பள்ளிப்பாடங்களையும், உலக அனுபவங்களையும், சிந்திக்கும் திறமையையும் போதித்தார். தான்

ஓரளவு வாசகர் விரும்பும் ஓர் எழுத்தாளராகத் திகழ அஸ்திவாரம் போட்டவர் தன் தந்தைதான் (கதாசிரியையின் கதை, பா. 1, ப.10) என்கிறார் லக்ஷ்மி.

இவரது தந்தை தொண்டியம் கிராமத்தில் பணியாற்றிய போது அங்கிருந்த சிறுமிகள் தொடக்கப் பள்ளியில் இவர் சேர்க்கப்பட்டார். அவ்வூர் ஜமீன்தார் குடும்பத்திற்கும், இவர் குடும்பத்திற்கும் இடையே பழக்கம் ஏற்பட்டது. அதன் பயனாக, ஜமீன்தாரின் பெரிய நூலகத்தில் இருந்த நூல்கள் இவரது இலக்கிய அறிவை வளர்த்தன என்பதை,

> *அந்த நூல் நிலையத்திலிருந்த ஆங்கிலம் – தமிழ் இரண்டிலும் பல புத்தகங்களையும் எடுத்துப் படித்தேன் – படித்தேன்... முடிவில்லாத இலக்கிய உலகில் திளைத்துச் சுற்றி வந்தேன்*
>
> *(மேலது ப. 87)*

என்ற கூற்று காட்டுகின்றது.

இவரிடம் பள்ளிப்படிப்பை ஆர்வமுடன் பயிலும் திறன் மிகுதியாக இருந்தது. எனவே தந்தை மேற்படிப்புப் படிக்க அனுமதித்தார். இந்தக் கல்வி பயிலும் வயதில்தான் தமிழ் மீதும், தமிழ் இலக்கிய வளத்தின் மீதும் லக்ஷ்மிக்கு ஒரு பெரும் தாக்கம் உருவானது.

> *முதல்நாளே எனக்குத் தமிழ் மிகவும் பிடித்து விட்டது.... கம்பராமாயணத்திலிருந்து அழகான குரலில்.... பாடி விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தார். நான் அப்படியே மயங்கிப் போனேன். கம்பன் கவிதையில் இத்தனை சுவை ஒளிந்துகொண்டு இருக்கிறதா? தமிழ்மொழி இத்தனை இனிமையானதா?... என்று வியந்து அன்றே என் தந்தையிடம் என் ஆசையைச் சொல்லிவிட்டேன்.... எனக்குச் சமஸ்கிருதம் படிக்க விருப்பமில்லை. தமிழ் வகுப்புக்கு மாறிவிடப் போகிறேன். (மேலது, ப. 95)*

எதிர்ப்பு

இவ்வாறு தமிழ் நயத்தில் தோய்ந்த லக்ஷ்மி எஸ்.எஸ்.எல்.சி. தேறி இண்டர்மீடியட்டில் அறிவியல் படித்தபோது தமிழிலே வகுப்பில் முதல் மாணவியாகத் தேர்ந்து முதல் ஆண்டுப் பரிசு

பெற்றார். சிறுவயதில் பள்ளிப் பருவத்தில் நிறைய நாடகங்களைச் சுவைத்துப் பார்த்தார். நிகழ்ச்சிகள் அவரது மனத்தில் பளிச்செனப் பதிந்தன. தானும் நடிக்க, நாடகம் எழுத விரும்பினார். கல்லூரியில் படிக்கும்போது நாடகங்களில் நடித்து நல்ல நடிகையாகத் தேர்ந்தார். கல்லூரி ஆண்டு விழாவின்போது ஒரு தமிழ் நாடகத்தில் நடித்து முதல் பரிசாக வெள்ளிக் கோப்பையைப் பெற்றார். மருத்துவக் கல்லூரியில் படித்தபோதும், தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த போதும் பல நாடகங்கள் எழுதிப் பாராட்டுகளைப் பெற்றார். எனவே இவர் நடிகை, நாடக ஆசிரியர் என்ற தகுதியினையும் பெறுகின்றார்.

லக்ஷ்மி பள்ளிக்கூடம் சென்று படிக்க மிகப் பல துன்பங்கள் இருந்தன. அதில் ஒன்றான பெண் குழந்தைகள் மிதிவண்டி ஓட்டக் கூடாது எனும் வழக்கத்தைத்தான் எதிர்கொண்டதைப் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றார்.

> *என்னதான் படிக்கிற பிள்ளையாக இருந்தாலும் பெண் குழந்தை சைக்கிள் ஓட்டுவதைப் பார்க்க நல்லாவா இருக்கு என்று என் பின்னால் பலத்த கிசுகிசுப்பு ஏற்பட்டது. ஆனால் என் 15 வயது வரை நான் கிராமத்துத் தெருக்களில் சைக்கிள் ஓட்டிச் சென்று சிலரின் வியப்பையும், பலரின் கண்டனத்தையும் விலைக்கு வாங்கிக் கொண்டேன்.*
>
> *(மேலது, ப. 90)*

> *துணிச்சலான பெண்ணாக நான் வளர்ந்த போதிலும் பிறர் அதட்டினால் பயந்துவிடும் ஏமாளிக் கோழைத்தனமும் என்னுடன் கூடவே வளர்ந்து வந்தது.* *(மேலது, ப. 60)*

என்பதையும் லக்ஷ்மி சுட்டத் தவறவில்லை. அதுபோல் அனைத்து ஆடவர்களுக்கிடையிலும் தான் ஒருத்தி மட்டுமே பெண்ணாக வகுப்பில் இருந்ததையும்,

> *தாவணி போட்ட பதின்மூன்று வயதுப் பெண் நான். அத்தனை பையன்கள் நடுவில் என்னை வேடிக்கையாக வெறித்த பையன்களை நிமிர்ந்து பார்க்கப் பயந்து கொண்டு... நான் ஒரு பெண் நான் ஒரு பெண் என்ற நினைவில் தாழ்மை உணர்வில் தொய்ந்து போய்த் தன்னந்தனியாக ஒதுக்குப்புறமாக, போடப்பட்ட ஒரு டெஸ்கில் அமர்ந்து படிப்பை ஆரம்பித்தேன். (மேலது, ப. 120)*

என்கிறார். இதுபோன்ற நினைவுகளின் உந்துதல்தான் லக்ஷ்மியை மருத்துவ மாணாக்கியாக, படைப்பாளியாக உருவாக்கியது.

மருத்துவக் கல்வியும் – விகடனும்

ஸ்டேன்லி - இராயபுரம் மருத்துவக் கல்லூரியில் மருத்துவப் படிப்பை ஆறு ஆண்டுகள் தொடர்ந்து படிக்கும் சூழல் லக்ஷ்மிக்குக் கிடைத்தது. இந்த ஆண்டுகள்தாம் இவருள் குடிகொண்டிருந்த படைப்பாளுமையை வெளிக்காட்ட உதவின. எழுபத்து ஐந்து மாணவர்களில், பத்துப் பெண்களில் ஒருவராக லக்ஷ்மி திகழ்ந்தார்.

தந்தையின் உடல்நலக் குறைவு, வருவாய் போதாமை காரணமாக மேற்கொண்டு படிக்கப் பணம் அனுப்ப இயலாது என்று தந்தை கூறவே தான் ஏதாவது சம்பாதித்துப் படிப்பைத் தொடர வேண்டும் என முயன்ற லக்ஷ்மியின் கண்ணில் விகடன் அலுவலகம் தென்பட்டது. இதனை அவர்,

> *அன்று காலை சென்னை மருத்துவக் கல்லூரிக்கு வழக்கம் போலப் புறப்பட்ட நான் அத்த நிறுத்தத்தில் விகடன் கட்டிடத்தை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தேன்*
>
> *(கதாசிரியையின் கதை, பா. 2, ப. 30)*

என்று கூறுகின்றார். ஆனந்த விகடன் ஆசிரியர் வாசனைப் பார்த்து எழுத வாய்ப்புக் கேட்டார். ஆனந்தவிகடன் இதழில் வெளிவந்த இவரின் முதல் சிறுகதை கல்லூரி நிகழ்ச்சிகளைப் பின்புலமாக வைத்துப் பின்னப்பட்டது. தகுந்த தண்டனையோ என்ற தலைப்பில் வந்த இம்முதல் கதையைப் படித்த கல்கி, *என்னையும் மிஞ்சிவிடுவே* என்று பாராட்டினாராம் (லக்ஷ்மி - சூடாமணி நாவல்கள், ப. 26). பின் இவர் எழுதிய பல சிறுகதைகள் விகடனில் வெளிவந்தன. 1940இல் சிறுகதைகள் எழுதத் தொடங்கிய இவரின் முதல் நாவலாகப் 'பவானி' 1944இல் வெளிவந்தது.

புனைபெயர்

தான் கதை எழுதுவது வெளியே, குறிப்பாகக் கல்லூரி வளாகத்திற்குள் அறியப்பட்டுவிடக் கூடாது என்பதற்காகப் புனைபெயரைத் தெரிந்தெடுத்ததாக லக்ஷ்மி கூறுகின்றார். தன் பாட்டியின் சகோதரி ஒருவரின் பெயரான லக்ஷ்மியைப் புனை பெயராக வைத்தமைக்கு,

வாழ்க்கையில் சுகம் என்பதையே அறியாத அவருடைய நினைவு என் நெஞ்சைப் பலமாக இறுக்க.... அவள் பெயரை ஏன் வைத்துக் கொள்ளக் கூடாது என்ற நினைவில் லக்ஷ்மி என்ற புனைபெயரைத் தேர்ந்தெடுத்தேன்

(மேலது, ப. 37)

என்று கூறுகின்றார்.

புதினம்

1946இல் மருத்துவப் பட்டம் பெற்றபின் தமக்கு அறிமுகமான ஜமீன்தார் குடும்பத்தைப் பின்னணியாகக் கொண்டு கற்பனையையும் கலந்து 'காஞ்சனையின் கனவு' புதினத்தை எழுதினார். விகடனில் தொடர்கதையாக வந்த லக்ஷ்மியின் நாவல்களுக்கு வாசகர்களிடையே மிகுந்த வரவேற்பு இருந்தது. இலட்சியவாதி (1948), மிதிலா விலாஸ் (1949), சூர்யகாந்தம் (1951), நாயக்கர் மக்கள் (1952), அடுத்த வீடு (1952), ஸ்ரீமதி மைதிலி (1953), பண்ணையார் மகள் (1955) ஆகிய புதினங்கள் தொடர் கதைகளாக விகடனில் வந்தன. விகடன் இதழுடன் லக்ஷ்மிக்கு இருபத்தேழு ஆண்டுத் தொடர்பு இருந்தது.

1950இல் லக்ஷ்மியின் 'மரகதம்' என்ற நாவல் இன்ப நிலையத்தாரால் நூலாக வெளியிடப்பட்டது. 1950இல் திருச்சி வானொலி நிலையத்தாரால் ஒலிபரப்பப்பட்ட 'கானல்நீர்' என்ற தொடர் சித்திரம் அதே ஆண்டு அல்லையன்ஸ் கம்பெனியாரால் 'மாயமான்' என்ற நாவலாக வெளியிடப்பட்டது. கலைமகள் தீபாவளி மலரில் இவருடைய கதை வெளிவருவது வழக்கமாகக் காணப்பட்டது (லக்ஷ்மி, சூடாமணி நாவல்கள், ப. 27).

திருமணம்

1955இல் இவருடைய திருமணம் நடைபெற்றது. தென் ஆப்பிரிக்காவில் பணியாற்றிக் கணவருடன் அங்குத் தங்கி வாழ்ந்தவர், அங்கிருந்துகொண்டே அரக்கு மாளிகை என்ற நாவலை 1959இல் எழுதினார். அங்குத் தம் கணவர் நடத்தி வந்த கிராஃபிக் என்ற பத்திரிகையில் பெண்கள் பகுதி பொறுப் பாளராகப் பணியாற்றியுள்ளார். எனவே இவர் இதழியலாளர் என்ற தகுதிக்கும் உரியவராகின்றார். அங்கிருந்தபோது தென் ஆப்பிரிக்க மொழி பேசக் கற்றுக்கொண்டார். 1976இல் கணவரின் இறப்பிற்குப் பின் இந்தியாவிற்கு வந்துவிட்டார்.

வீரத் தேவன் கோட்டை இவரது முதல் வரலாற்று நாவல். இது மலேசியாவில் பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்களில் ஒன்றாக வைக்கப்பட்டது. ஆனால் இந்நாவல் லக்ஷ்மிக்கு மனநிறைவு தரவில்லை. எனவே வரலாற்று நாவல் எழுதும் முயற்சியைக் கைவிட்டார்.

இவர் ஏறத்தாழ முந்நூறு சிறுகதைகள் எழுதியுள்ளார். நீலப்புடவை, விசித்திரப் பெண்கள், படித்த மனைவி ஆகிய மூன்று சிறுகதைத் தொகுப்புகள் நூலாக வெளிவந்துள்ளன. நாவல் எழுதும்போது தமக்கு இருக்கும் உற்சாகமும் மன ஒன்றிப்பும் சிறுகதை எழுதும்போது இல்லை என லக்ஷ்மி கூறுகின்றார் (மேலது, ப. 27).

மருத்துவ நூல்கள்

புனைகதைப் படைப்பாளராக மட்டும் அமையாது மருத்துவராகவும் இவர் பணியாற்றியதால் தாய்மை, பத்துமாதம், குழந்தை வளர்ப்பு, குழந்தை வைத்தியம், இரகசிய நோய்கள் முதலான மருத்துவ நூல்களையும் படைத்துள்ளார். தமிழ்க் கலைக்களஞ்சியத்தின் பகுதிக்காகக் குழந்தை நோய்களைப் பற்றித் தொகுத்து உதவியுள்ளார்.

லக்ஷ்மி தம்முடைய தென் ஆப்பிரிக்க வாழ்க்கையைப் பற்றி 1963-64இல் இருண்ட கண்டத்தில் எட்டு ஆண்டுகள் என்று பன்னிரண்டு கட்டுரைகளாக ஆனந்த விகடனில் எழுதியுள்ளார். அவரது நாவல் எழுதுவது எப்படி? என்ற கட்டுரை 1952இல் அகில இந்திய வானொலி நிலையத்தாரால் டெல்லியில் ஒலிபரப்பப்பட்டது.

மொழிபெயர்க்கப்பட்ட புதினங்கள்

லக்ஷ்மியின் 'பெண்மனம்' என்னும் புதினம் இந்தி, இரஷ்ய மொழிகளிலும், நாயக்கர் மக்கள், சோமசுந்தரத்தால் இரஷ்ய மொழியிலும், அரக்கு மாளிகை, கிருஷ்ணமூர்த்தியால் தெலுங்கிலும், ஜெயலக்ஷ்மி ஸ்ரீனிவாசனால் கன்னடத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

பெற்ற பரிசுகள்

1951இல் 'காஞ்சனையின் கனவு' தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய மூன்று மொழிகளில் திரைப்படம் ஆகியது. அவ்வாண்டிற்கான சிறந்த திரைக்கதை ஆசிரியர் என்ற பரிசும் அவருக்குக் கிடைத்தது.

லக்ஷ்மியின் பெண்மனம் இருவர் உள்ளம் எனும் பெயரில் திரைப்படமாகியது. 1963இல் சினிமா இரசிகர் மன்றம் அவ்வாண்டில் சிறந்த எழுத்தாளர் என்ற விருது வழங்கியது.

1948இல் தாய்மை எனும் மருத்துவ நூல் இலங்கையில் நடைபெற்ற தமிழ் மாநாட்டில் சிறந்த மருத்துவ நூலுக்கான பரிசைப் பெற்றது.

1948இல் தாய்மை, குழந்தை வைத்தியம், பெண்மனம், மிதிலா விலாஸ் ஆகியவை தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசுகளைப் பெற்றன.

1984ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதமியின் விருது, 'ஒரு காவிரியைப் போல' எனும் புதினத்திற்குக் கிடைத்துள்ளது.

1962இல் மாநில அரசின் பரிசை, பெண்மனம் பெற்றது.

பண்பு நலன்

எளிமை, அன்பு இவற்றைத் தமது பண்புகளாகக் கொண்டவர்; விடாமுயற்சியும், அயராத நம்பிக்கையும் உடையவர்.

> *இளம்வயதில் அணிந்திருந்த நகைகளை நான் ஏமாந்ததால் இரண்டுமுறை இழந்தேன். ஏமாற்றிப் பறித்த நிகழ்வால் ஏற்பட்ட அதிர்ச்சியோ என்னவோ நான் நகைகளை எப்போதும் விரும்பியதே இல்லை. வசதியாக வாழ்ந்த நாளிலும் எளிமையாகவே இருக்க விரும்பினேன். இப்போது நான் அவைகளை வெறுக்கிறேன் (கதாசிரியையின் கதை, பா. 1, ப. 63)*

என்கிறார் லக்ஷ்மி.

அன்பு என்னும் பாடத்தைக் குடும்பத்தின்வழி இவர் பெற்றார். இளம் வயதிலிருந்தே தாய்மைப் பண்போடு உடன் பிறந்தவர்களை அரவணைத்தார். அதனால்தான் இவரது படைப்புகளில் தாய்மைப் படைப்பு இயல்பாகக் காணப்படுகின்றது.

தன் தந்தையைப் போல் இவரும் சாதி வேறுபாடு பாராட்டாதவராக இருந்தார். சிறுவயதில் அப்பா கூறிய நந்தன் கதை இவரது மனத்தில் ஓர் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தி இருக்கின்றது. ஆனால் குடும்பத்தவர் ஆச்சாரம் என்ற பெயரில் சாதிவேறுபாடு பாராட்டினர். தென் ஆப்பிரிக்காவில் இருந்த போது வெள்ளைக்காரன் ஒருவனால் நிறத்துவேஷம் காரணமாக இவர் அவமானத்திற்குள்ளானபோது நம் நாட்டில் சாதிவேறுபாடு,

இங்கு நிற வேறுபாடு என வருந்தினார். பெற்றவர்கள் பாவம் குழந்தைகளின் தலையில் விடியும் என்ற பழமொழியின் உண்மையும் இவரை வருத்தியது.

சிக்கனமாக, எளிமையாக, பொறுப்பாக வாழ வேண்டும்; ஒரு செயலில் வெற்றிபெறக் கடினமானதொரு பொறுமை தேவை. அன்பினால் வற்புறுத்த முடியாத கட்டுப்பாட்டை அச்சத்தினால் அமைக்கமுடியும். கட்டுப்பாட்டில் உயர்வு மறைந்துள்ளது. ஆபத்து என்று வந்துவிட்டால் மனிதப் பிறவி அதிகப்படியான சுயநலம் உள்ளதாக மாறிவிடுகின்றது என்பன போன்ற பல உண்மைகளைத் தம் இளவயது வாழ்க்கை அனுபவங்களில் இருந்து புரிந்து கொண்டார். தன்னிடம் எக்ஸ்ட்ரா சென்சரி பர்சப்ஷன் என்ற உணர்வு இருப்பதாகத் தனக்கு ஏற்பட்ட மூன்று அனுபவங்களைக் கொண்டு கூறுகின்றார் (மேலது. பா. 2, ப. 170).

படைப்பாளுமை

லக்ஷ்மி எனும் படைப்பாளுமை செதுக்கப்பட்ட இடமாக ஸ்டேன்லி மருத்துவக் கல்லூரி அமைந்தது. மருத்துவக் கல்வி பயிலும் மாணவ நிலையைத் தன்னுடைய வரலாற்றை எழுதும்போது மிக விரிவாக விவரித்து எழுதியமை ஈண்டு எண்ணத்தக்கது. சமூகப் பொறுப்பான எழுத்தாளரான இவரின் புனைவாக்கம் மற்றைய செயல்பாடுகளைவிடச் சிறந்து விளங்குகின்றது. எழுத்தாற்றலின்வழிப் பல ஆயிரக்கணக்கான வாசக நெஞ்சங்களை உடைமையாகக் கொண்ட இவரின் படைப்பாளுமையை இனங்காண்பது அவரின் சாதனையை வெளிக்காட்டுவதாக அமையும்.

கதை என்றால் அது ஒரு நீதியைக் கூற வேண்டும் என்ற கொள்கையுடைய லக்ஷ்மி சிறுகதை மற்றும் புதினம் எழுத வந்த காலக்கட்டத்தை அறிய இவருக்கு முன்பு இருந்த எழுத்துகளைப் பற்றி அறிவது உதவியாக இருக்கும்.

1940க்கு முன் பெண் படைப்பாளிகள்

1835இல் இந்தியர்கள் அச்சு இயந்திரத்தைப் பயன் படுத்தத் தொடங்கினர். இதன்பின் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஓரளவும், 19ஆம் நூற்றாண்டு தொடங்கி மிகுதியாகவும் பதிப்புகள் வரத் தொடங்கின. சிறுகதை இதழான மணிக்கொடி 1933இல் செயல்படத் தொடங்கியது. பின்னர்தான் புதினம் முதலான உரைநடை இலக்கியங்கள் வீறுநடை போடத் தொடங்கின.

அ. சதாசிவம் பிள்ளை, சிவசாம்பன், டி.ஜி. வெங்கட் ரமணய்யா, **அம்மணி அம்மாள்**, மாதவையா, சுப்ரமணிய பாரதி, வ.வே.சு. ஐயர், தி.ஜ.ர, கல்கி, இராஜாஜி, வ.ரா. முதலானோர் 1850-1933களில் இருந்த முதல்நிலை சிறுகதை ஆசிரியர்கள். இவர்களுள் அம்மணி அம்மாள் மட்டுமே பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே போன்று தமிழ்ப் புதினத்தில் பெண் படைப்பாளிகளாக, வை.மு.கோதைநாயகி அம்மாள், கிரிஜாதேவி, மூவலூர் ஆர். இராமாமிர்தத்தம்மாள், டி.பி. ராஜலட்சுமி (தமிழ் நாவல் - நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும், பக். 7-8) ஆகியோரைக் கூறலாம்.

இவர்கள் நாற்பதுகளுக்கு முன் எழுதினாலும், அன்றைய காலக்கட்டத்திலும் புதினம் படைப்பதும், வாசிப்பதும் தவறு எனக் கருதப்பட்டது. மேலும் காவியம் இயற்ற முயன்று தோற்றவர்களின் முயற்சியே புதினப் படைப்பு என நம்பப்பட்டது.

'புதினத்தைப் படித்தவர்கள் அவற்றைப் பெரியோர்களின் பார்வைக்குத் தெரியாமல் மறைத்து வைத்துத்தான் படித்தனர். இக்காரணத்தினால்தான் வாய்விட்டுப் படிக்கும் பழக்கம் உள்ள தமிழ் வாசிப்புமுறை மௌன வாசிப்பாக மாறிற்று' என்கிறோம். (இரா. வேங்கடாசலபதி, நாவலும் வாசிப்பும், காலச்சுவடு பதிப்பகம்).

இத்தகைய சூழல் சற்று நெகிழ்வு பெற்றபின் பலர் புதினம் படிக்க முன்வந்தனர். இக்காலக்கட்டத்தில்தான் மேற்கூறியவர்களின் அடுத்த தலைமுறை எழுத்தாளராகப் புதின உலகிற்குள் லக்ஷ்மி நுழைந்தார். எனவே இவரின் எழுத்து வடிவிலான பாய்ச்சல் முந்தைய தலைமுறையினரைத் தாண்டியதாகவும், புதிய சனரஞ்சக ஏற்பு உள்ளதாகவும், வீறு கொண்டதாகவும் அமைந்தது.

1944இல் முதற் புதினத்தைக் கொண்டு வந்த லக்ஷ்மி முந்தைய பெண் படைப்பாளிகள் அடைய இயலாத ஓர் இடத்தை மக்களிடையே பெற்றார். இதனைப் பெறுவதற்குள் அவர் பட்டபாட்டினைத் தன் சுயசரிதையில் விரிவுபட எழுதியுள்ளார்.

காட்டுகள்

ஓர் எழுத்தாளர் உருவாக வேண்டுமானால் எத்தனையோ முட்டுக்கட்டைகள், எத்தனையோ இடர்கள்.... (கதாசிரியையின் கதை, பா. 2, ப. 44).

படிப்பையும், எழுத்துத் தொழிலையும்
சேர்ந்தாற்போல வெற்றியுடன் நடத்திச் செல்ல
நான் ரொம்பவே பாடுபட்டேன் (மேலது, ப. 46)

அவருடைய எழுத்துகளின் சிறப்பியல்புகளுள் சிலவற்றை இனிக் காண்போம்.

பெண்சிக்கல்களை முதன்மைப்படுத்தல்

தானொரு பெண்ணெனும் கோணத்தில் லக்ஷ்மியின் புதினங்களில் பெண்களின் சிக்கல்கள் மிகுதியாகப் பேசப் பட்டிருக்கின்றன. பெண்கள் தம் விருப்பங்களை வாய்திறந்து பேச அனுமதிக்காத தமிழ் இலக்கிய மரபு இவரிடம் நெகிழ்ந்தும் நீர்த்தும் போகின்றது. இதற்கு லக்ஷ்மிக்குப் பெரிதும் காரணமாக அமைந்திருப்பது திருமணம் எனும் நிகழ்வு.

திருமணத்திற்கான அடிப்படைகளை லக்ஷ்மி
மிகுதியாகத் தம் நாவல்களில் சித்திரித்துள்ளார்.
லக்ஷ்மியின் புதினங்களில் ஏனைய காரணங்
களை விடப் பொருளாதார அடிப்படையே
திருமணத்தில் முக்கிய இடத்தைப் பெறுகிறது.

என்கிறார் சித்ரலேகா. (லக்ஷ்மி, சூடாமணி நாவல்கள், ப. 68). வரதட்சணைக் கொடுமையைப் போக்க ஒரு வழி காண்பது இன்றியமையாத தேவை என்ற கருத்தினையும் தம் நாவல்களில் புலப்படுத்துகின்றார்.

நான் முதன்முதலாகப் பார்த்த ஆங்கிலப் படம்
ஜேன் ஆன்ஸ்டின் எழுதிய பிரைட் அண்ட்
பிரஜூடிஸ் (கதாகிரியையின் கதை, பா. 1, ப.139)

என்கிறார் லக்ஷ்மி. எனவே திருமணம் பற்றி அதிகமாக எழுதியமைக்கு இந்த ஆங்கில நாவலாசிரியை காரணமாக இருக்க இயலும். ஏனென்றால் ஜேன் ஆன்ஸ்டினின் புதினத் தன்மை முழுக்கவே திருமணச் சிக்கல் என்பதாகவே இருக்கும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர் (The Concise Cambridge History of English, Lit. p. 847).

ஜேன் ஆன்ஸ்டின் திருமணம் செய்து கொள்ளாமல் தன் வாழ்வை, புதின உலகிற்கு அர்ப்பணித்து விட்டவர். அவர்கள் அனைத்துப் புதினங்களிலும் ஏதேனும் ஒரு வடிவத்தில் திருமணம் என்பது மையக் கருவாக இருக்கும். இவர் தமக்குத் தெரிந்த வட்டாரங்களையே தம் புதினங்களின் பின்னணியாகக் கொண்டார். இத்தகைய தாக்கத்தை லக்ஷ்மியின் பரந்த வாசிப்பு

அவருக்கும் வழங்கியிருக்கின்றது. பரந்த உலக இலக்கிய வாசிப்பு லக்ஷ்மிக்கு மிகுதியாக இருந்தமையும், தனது அனுபவங்களும், தான் கண்டுணர்ந்த பிறரது அனுபவங்களும் அவரது படைப்புக் கூறுகளை வலிமையுடையதாக்கின.

லக்ஷ்மியின் புதினங்களில் பள்ளி ஆசிரியைகளைவிட அலுவல் மகளிர் குறைவாகவே காட்டப்பட்டுள்ளனர். குறிப்பாகத் திருமணமான அலுவல் மகளிர் பற்றிய சித்திரிப்பு இல்லை. ஆடவருடன் பணியாற்றுவதில் கற்புக்குத் தீங்கு விளைய இடம் உண்டு. எனவே அலுவல் மகளிரைக் குறைவாகவே சித்திரித்துள்ளார் (மேலது, ப. 23) என்கிறார் சித்ரலேகா.

கணவன் - மனைவி உறவில் சிக்கல், அண்ணி - நாத்தனார் சிக்கல் போன்றவற்றுள் மாமியார் - மருமகள் உறவில் சிக்கல் ஏற்படுவதையே லக்ஷ்மி தன் நாவல்களில் மிகுதியாகக் காட்டியுள்ளார். இவ்வுறவில் சிக்கலற்ற நிலை இருப்பது அரிது என்பது இவரது கருத்து. இன்றைய குடும்ப அமைப்பில் தனிக் குடும்ப வாழ்க்கை மிகுதியாக உள்ளது. எனவே இது அவர் காலத்திய குடும்ப அமைப்பை ஒட்டிப் பெரும்பான்மை அமைகின்றது.

லக்ஷ்மி குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளதும், மருத்துவப் பணியில் பலருடன் பழகும் வாய்ப்பு ஏற்பட்டதும், தம்முடைய புதினங்களில் பல்வேறு குடும்ப உறவுகளைக் காட்டுவதற்கு அவருக்குத் துணை செய்துள்ளன. குடும்ப அனுபவம், தொழில் அனுபவம் முதலான வாழ்க்கைப் பின்னணி அவருடைய புதினங்களில் குடும்ப உறவுநிலைச் சித்திரிப்பு மிகுதியாக இடம்பெறக் காரணமாகின்றன (மேலது, ப. 212).

டாக்டர் என்ற முறையில் பல நோயாளிகளிடம் பழகும்போது கேள்விப்படும் பல அனுபவங்கள் சிறிதளவு கற்பனையுடன் கதைகளாக மாறிவிடுகின்றன. மிதிலா விலாஸ் நாவலில் படைக்கப்பட்டுள்ள தர்மாம்பாள், ஸ்ரீமதி மைதிலி நாவலில் சென்னையில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களே எனத் தம் நாவலின் யதார்த்த பாத்திரப் படைப்புளைப் பற்றி லக்ஷ்மி குறிப்பிடுகின்றார் (லக்ஷ்மி - சூடாமணி நாவல்கள், ப. 28).

லக்ஷ்மி பெண்கள் அடிமை போல் நடத்தப்படுவதை வெறுப்பவர். பெண்களின் உயர்வைச் சித்திரிப்பதற்காகவே தம் கதைகளில் பெண்களை உயர்த்திக் கூறுவதைக் குறிக்கோளாகக் கொண்டவர். எழுத்தினால் தம் வருவாயைப் பெருக்கிக் கொண்ட லக்ஷ்மி தம்முடைய கதைகளில் தன்னைப் போலவே ஒரு பெண் உழைத்து முன்னேற வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகின்றார்.

இவர், பெண்களை உயர்த்திக் கூறியமைக்கு ஆண்கள் மீது இவருக்கு இருந்த வெறுப்பும் ஒரு காரணம்:

> *படிக்கும்போது மாணவர்கள் பெண்களின் எந்தச் செயலையும் கண்டனம் செய்து வேடிக்கை காட்டி வேதனை தருவதை வேலையாகக் கொண்டனர். இதனால் ஆண்களை நான் கட்டோடு வெறுத்தேன். என் அடி மன நிலையில் குடிகொண்டுவிட்ட வெறுப்பின் காரணமோ என்னவோ என் கதைகளின் கதாநாயகி தான் பிரகாசிக்கிறாள். நாயகன் அவள் பின்னால் மறைந்து தோய்ந்து நிற்கிறான்.*
>
> *(கதாசிரியையின் கதை, பா. 2, ப. 52)*

இருப்பினும் இவர் முதலில் எழுதிய பவானி என்ற தொடர் கதையின் நாயகன் நல்லதொரு கண்ணியமான மனிதனாகப் பிரகாசிக்கிறான். தனது அகந்தையால், பொறாமையால் வாழ்வையே நாசமாக்கிக் கொண்ட நாயகி பவானி இறுதியில் தான் திருந்துகின்றாள்.

இவரது படைப்புகள் பெண்களுக்கு நல்வழி காட்டுவன வாகவும், விழிப்புணர்வைத் தருவனவாகவும் உள்ளன.

கணவன் - மனைவி உறவுச் சிக்கல்களுள் மனைவியால் எழும் சிக்கல்களே மிகுதி என்பதையும் காட்ட இவர் தவறவில்லை. மேலும் அன்பு மகனின் குடும்ப வாழ்க்கையைச் சிதைத்து விடக் கூடிய தாயின் ஆக்கிரமிப்பு, மூத்தாள் குழந்தையிடம் சிறிதும் அன்பு காட்டாத மாற்றாந்தாய் போன்றவற்றையும் சுட்டிப் பெண்களின் அறியாமையைப் போக்கி விழிப்புணர்வை ஏற்படுத்த முயல்கின்றனர்.

கணவன் மனைவி உறவு பாதிப்பிற்கான காரணங்கள் அவற்றைப் போக்குவதற்கான வழிமுறைகள் என்பவற்றையும் தம் புதினங்களில் விளக்கியுள்ளார்.

பெண்களுக்கு முதன்மை இடம் கொடுத்த லக்ஷ்மி அவர்களை அழகானவர்களாகக் காட்டவும் தவறவில்லை. 'உங்கள் கதாநாயகிகள் பலர் அழகிகளாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறார்களே ஏன்? என வாசகர் அவரைக் கேட்டபோது பல அழகான பெண்களை நான் சந்தித்திருக்கிறேன். அழகை ஆராதிக்கும் ஒரு பாதிப்பு எனக்கு உண்டு என்கின்றார்' (கதாசிரியையின் கதை,

பா. 2, ப. 157). இங்குப் பாதிப்பு என்பது தன்னிடம் அழகு குறைகின்றதே என்ற குறைபாடு சிறுவயது முதல் அவர்க்கிருந்தமையைக் காட்டுகின்றது. இதனை,

> *அழகு இல்லாவிட்டால் தொலையட்டும். இவளைப் போல பாட இனிய குரலாவது அமைத்திருக்கக் கூடாதா என்று பலமுறை எண்ணி மனம் கசந்துவிட்டிருக்கிறேன்.*
>
> *(மேலது, ப. 167)*

என்ற இவரது கூற்று மெய்ப்பிக்கின்றது. மேலும் அழகான பெண்களைக் காணும், பழகும் வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் அவர்களின் அழகைக் கண்டு வியந்து இரசித்திருக்கிறார். எனவே, தான் விரும்பிய அழகைப் படைப்புகளின் வழி வெளிப்படுத்தி இருக்கின்றார்.

அந்தணர் குலத்து, கணவனை இழந்தவள் பத்து வயதுச் சிறுமியானாலும் அவள் தலையை மழித்துக் கொண்டு வெள்ளைப் புடவை உடுத்திக் காலம் முழுதும் கைம்மைக் கோலத்தில் வாழும் கொடுமையை வெறுத்தார். இந்தப் பின்னணியை வைத்துத்தான், 'வடக்கே ஒரு சந்திப்பு' எனும் கதையை எழுதியுள்ளார். பாட்டியின் காலத்து இந்த அநாகரிகமான பழக்கம் தம் காலத்தில் மறைந்துபோய் விதவைகளின் வாழ்க்கையில் திருப்பம் ஏற்பட்டதையும் கூறுகின்றார். (மேலது, பா. 1, ப. 79).

இங்ஙனம் லக்ஷ்மி தன்னுடைய வாழ்க்கைப் பின்னணியில் கிடைத்த அனுபவங்களையும், இந்த அனுபவங்கள் ஏற்படுத்திய பல பாதிப்புகளையும் தன் படைப்புகளில் வெளிப்படுத்தி யுள்ளார். வாழ்க்கையிலுள்ள யதார்த்தம் படைப்புகளைப் பாதித்திருப்பது இவருடைய படைப்புகளின் வெற்றிப் பின்னணி யாகியுள்ளது.

யதார்த்த நடையும், கூர்ந்த பதிவும்

பேச்சு நடையில்தான், மிக எளிமையாக ஒரு நாடகப் பாங்கு நிகழ இயலும். இது வாசகனுக்கு முதன் நிலையிலேயே உள்வாங்கிக் கொள்ள ஏதுவாக அமையும். இந்தப் பேச்சு நடையே லக்ஷ்மியின் மிகப் பெரிய வெற்றியாக அமைந்தது. காட்டு:

> *ஆமாம் என் பெயர்தான் காவேரி. ஆப்பிரிக்க நாட்டிலிருந்து வருகிறேன்; நீங்க தெரிஞ்சு*

கொண்டிருக்கிற விவரமெல்லாம் சரி; ஆனால் என்னைப் பத்தி நீங்க எதற்காக....

(ஒரு காவிரியைப் போல, ப. 311)

காட்சிப்படுத்தல்

எழுத்துக்குள் ஒரு காட்சியைக் கொண்டு வந்து கண்முன் நிறுத்த வேண்டும். அதையே நல்ல எழுத்து என்பர். இதற்கு நவீன இலக்கியத் திறனாய்வில் படிம எழுத்து என்று பெயர். இத்தகைய எழுத்து முறையை லக்ஷ்மி புதினங்களில் பரக்கக் காண முடிகின்றது. படிம எழுத்து நிலை படிக்கும் வாசகனின் கண் முன்னால் நிகழ்ச்சியை நிகழ்த்தச் செய்துவிடும் ஆற்றல் வாய்ந்தது. காட்டாகப் பின்வரும் பகுதியைக் கூறமுடியும்.

மின்சார விளக்கினின்று எழுந்த வெளிச்சம் அறையில் மங்கலாகப் பிரகாசித்துக் கொண் டிருந்தது; மூலையில் இருந்த மேஜையின் மீது அடுக்காக நோட்டுப் புத்தகங்கள் இருநூறு அடுக்கி வைக்கப்பட்டிருந்தன (பெண்மனம், ப. 1)

இத்தகைய படிமத்தை அதன் அனைத்து நிலைகளிலும் இவரது எழுத்துகளில் காண இயலும்.

அனைத்துலகப் பார்வை

தனது சுயசரிதையில் லக்ஷ்மி இரண்டாம் உலகப் போர் பற்றியும், அதன் போக்குகள் பற்றியும் நிறையவே எழுதிச் செல்கின்றார். குறிப்பாக வரலாற்றுச் செய்திகள் பலவற்றைத் தொட்டுக் காட்டுகின்றார். காட்டு:

1939ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் 13 தேதியன்று ஜெர்மானிய நாடு போலந்தின்மீது படையெடுத்தது. இரண்டு நாட்களுக்குப் பின்னர் செப்டம்பர் மூன்றாம் தேதியன்று இங்கிலாந்தும் பிரான்சும் போர் முரசு கொட்டின.

உலக வரலாற்று நிகழ்ச்சிகளோடு பிணைத்துத் தன் வரலாற்றை உருவாக்கியுள்ள இப்போக்கு சிறப்பான ஒன்றாகும்.

வரலாற்றுப் பதிவுகள்

வரலாற்றைக் கூர்ந்து கண்டறிந்து அவற்றைப் பதிவாக்கு பவனே நல்ல கலைஞன். அவ்வகையில் லக்ஷ்மி இரண்டாம் உலகப்

போரின்போது ஒவ்வோர் ஊர்களிலும், தோற்றுவிக்கப்பட்ட ரேஷன்கடை, சென்னையில் விழுந்த குண்டு கடற்கரையில் கிடந்து செயலிழந்தது, இராயபுரம் மருத்துவமனையில் இரண்டாம் உலகப் போரின் போது மக்களுக்குக் கஞ்சி காய்ச்சித் தொட்டி வைத்து ஊற்றியதால் அந்த மருத்துவமனை 'கஞ்சித் தொட்டி' எனப் பெயர் பெற்றது போன்ற பல தேவையான தகவல்களை நுட்பமாக வரலாற்று அறிவோடு பதிவு செய்திருக்கின்றார்.

இவை போன்று சுவைபட விவரித்தல், முரண்பட நிறுத்தல், தாவிச் செல்லுதல், திடீரென உடைத்தல் போன்ற பல கூறுகளை உள்ளடக்கியதாக லக்ஷ்மியின் படைப்பாளுமை திகழ்கிறது. இவர் தொட்டுக் காட்டாத வாழ்வியல் சிக்கல்களே இல்லை என்று கூறுமளவிற்கு எழுத்துகளில் வாழ்வியல் நிலையைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

முடிவுரை

குடும்பப்பெண், மருத்துவர், எழுத்தாளர், இதழியலாளர், பயணக் குறிப்பாளர், மருத்துவ நூலாசிரியர், நாடக ஆசிரியர் என்பன போன்ற பன்முகங்கள் லக்ஷ்மிக்கு உண்டு. இருப்பினும் 1940களில் தொடங்கிய எழுத்துப்பணிதான் இவரைத் தமிழகம் அறிந்த எழுத்தாளராக இனம்காட்டியது. இவர் கல்கி, இராஜாஜி போன்றோரால் தம் படைப்புகளுக்காகப் பாராட்டைப் பெற்றவர். இன்று லக்ஷ்மி நம்மிடையே இல்லை என்றாலும் அவரது படைப்பாளுமையால் சாதனைப் பெண்மணியாய் வரலாற்றில் சுடர்விடுகின்றார்.

துணை நூல்கள்

1. சித்திரலேகா, லக்ஷ்மி, சூடாமணி நாவல்கள்
2. சுந்தரராஜன், சோ. (சிட்டி), சோ. சிவபாதசுந்தரம், தமிழ் நாவல் - நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும், சென்னை, 1977.
3. மேலது, தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும், க்ரியா, சென்னை, 1989.
4. லக்ஷ்மி, பெண்மனம், பூங்கொடி பதிப்பகம், சென்னை, 1945.
5. லக்ஷ்மி, ஒரு காவிரியைப் போல, மேலது.
6. லக்ஷ்மி, கதாசிரியையின் கதை, பாகம் - 1, பூங்கொடி பதிப்பகம், சென்னை, 1980.
7. லக்ஷ்மி, கதாசிரியையின் கதை, பாகம் - 2, பூங்கொடி பதிப்பகம், சென்னை, 1985.

கவிப்பேரரசி ஹா.கி.வாலம்

தி. கமலி

உலகமயமாதலில் பெண்ணியம் என்பது ஓர் அரசியல். ஒரு சமூகத்தில் ஆடவருக்கும் பெண்டிருக்கும் இடையிலான அதிகார உறவுகளை மாற்றுவதை இலக்காகக் கொண்டு இப்பெண்ணிய அரசியல் இன்று முழு வீச்சுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இவ்வதிகாரக் கட்டமைப்பு குடும்பம், கல்வி, நலவாழ்வு, பணித்தளம், அரசியல், பண்பாடு, ஓய்வு, சமயம் என்று வாழ்வின் எல்லாத் தளங்களிலும் செயல்படுகிறது. யார் என்ன செய்ய வேண்டும்? யாருக்காகச் செய்தல் வேண்டும்? யாராக அவர்கள் இருக்கிறார்கள்? யாராக அவர்கள் எங்ஙனம் இயங்கி, எவ்விதம் தங்கள் வாழ்வை வடிவமைத்துக் கொள்ளப் போகிறார்கள்? என்பதான தீர்மானங்கள், செயல்பாடுகள் யாவும் இவ்வரசியலால் நிர்ணயிக்கப்படுகின்றன என்று வீடன் (Weedan) வரையறுப்பார்.

பெண்ணிய அரசியலின் ஆழம், வேகம், வீச்சு, இயங்கு தளம், விரிவு போன்றவற்றை முற்றாக அறிந்துகொள்ள வேண்டுமாயின்,

- பெண் எழுதியலை அறிந்து கொள்ளுதல்
- இதுகாறும் தெரியவந்திராத பெண் எழுதுவெளியைக் கண்டறிதல்
- இறந்தகால, தாம் எழுதுங்கால, எழுத்துச் செயல்பாடு களாகப் பெண் முன்னிறுத்துவதை இனம் காணுதல்
- பெண் எழுதியலின் ஆழம், இலக்கு, வீச்சு எந்த நிலைப் பாட்டைக் கொண்டுள்ளதெனக் கற்றுக் கொள்ளல்.
- ஆண், பெண் வாசிப்பாளர் அனைவருக்கும் எழுதியலின் வழி முன்வைக்கும் தரவுகள் இன்னதென்று அறிதல்
- பன்முக வாசிப்பால், உட்பொருளைக் கண்டறிதல்
- ஆழங்கால்பட்டிருக்கும் அடித்தள வேர்ப்பரப்பினைப் புலப்படுத்துதல்.

எனும் தேவைகள் எழுந்திருக்கக் கூடிய இன்றைய கால கட்டத்தில், ஐம்பத்து நான்கு ஆண்டுகள் வாழ்ந்து மறைந்த கவிப்பேரரசி ஹா.கி. வாலம் (தோற்றம்: 24-8-1922; மறைவு: 12-8-1978) அவர்களது எழுதுதளம், இலக்கியப் பங்களிப்பு, வாழ்வு, சமூகப் பங்கேற்பு, விடுதலை உணர்வு, பெண்ணியப் பொருள், பணி போன்றவற்றைப் பரிசீலிக்க இக்கட்டுரை முயல்கிறது.

நாளெலாம் சமயக் கொள்கை
நாடியே வாழ்ந்த அன்னை
கோளெலாம் எழுத்தே என்று
கிளர்ச்சி கொண்டிருந்த பெண்மை
கோளொடும் வானும் மண்ணும்
குலவிடும் சாத்தி ரங்கள்
கேளென வடித்து வைத்தார்
கேள்வியில் சிறந்த தாய்மை

என்று கவியரசர் கண்ணதாசனால் போற்றப்பட்ட ஹா.கி. வாலம் அம்மையார், தேச விடுதலை, சமூக விடுதலை, ஆன்மீகத் தளம், பெண் மேம்பாடு அவாவும் நேர் பெண்ணியதளம் (Positive Feminism) எனும் புள்ளிகளில் தம் எழுதுவெளியை நிலைப்படுத்தியுள்ளார்.

''ஹாலம் வாலறிஞர்; தமிழகத்தின் மாணிக்கம். பன்மொழிப் புலமையும், தென்மொழித் திறமையும், அருவிப் பேச்சும், ஆவேச வெள்ளமும் பொங்கித் ததும்பும் அம்மையார்'' என்று கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார் 1964-இல் இவரைப் பற்றிப் பதிவு செய்துள்ளார்.

'அருளரசி' என்றும், 'கவிப்பேரரசி' என்றும் அழைக்கப் பட்ட அவரது முக்கிய ஈடுபாடு இலக்கியம்; சிறுவயது முதல் சரசுவதி அருள் பெற்றவர். அவர் எழுதிய பாடல்களின் எண்ணிக்கை 19,570; வரிகள் 1,00,058; அவற்றுள் நூலாக வெளிவந்த பாடல்களது எண்ணிக்கை: 8,737; நூல்கள் முப்பதிற்கும் மேல்; நூலாக வெளியிடப்பெறாதவை: 10,833. அவற்றுள் இந்திப்பாடல்கள் - 50; ஆங்கிலப் பாடல்கள்- 50; வடமொழி எனும் சமஸ்கிருதப் பாடல்கள்-100 என்று எழுதிய அனைத்தும் தெய்வ பக்தி, தேசப்பற்று, இயற்கை வர்ணனை, மனித நலம், வாழ்வியல் வளம், மொழி, இலக்கிய, கலை நாட்டம் எனும் அச்சில் சுழலக் காணலாம்.

வாலம் அம்மையார் பற்றிய வாழ்க்கை வரலாறு (576 பக்கங்கள்) 'இலக்கிய ஜோதி' எனும் பெயரில் வெளிவந்துள்ளது.

முப்பது ஆண்டுகள் தன் வாழ்வில் உண்பதும், உறங்குவதும் போக, எஞ்சிய பொழுதெல்லாம் எழுதுவதிலேயே செலவிட்ட தள்ளரிய பெருவாழ்வு - பயன் வாழ்வு - பைந்தமிழ்க் கவிவாழ்வு வாழ்ந்த அப்பெண்ணரசியின் கவிதைகளைத் தொகுத்து, 'வாலம் ஆயிரம்' என்று நூலாக்கம் செய்து வெளியிட்டிருப்பது குறிக்கத் தகு செய்தி ஆகும்.

பெண் என்பவளின் ஆற்றல் அனைத்தும் அவளுள் இருந்தே வெளிப்படுகின்றது. இறுக்கம் நிறைந்த புறச்சமூக உலகம் அவளை எவ்வளவுதான் வெளிப்படாவண்ணம் அடைத்து வைத்தாலும் ஆற்றலின் வித்தான பெண்ணின் அகவுலகு அதனால் எல்லாம் இருண்டுவிடுவதில்லை. சென்ற நூற்றாண்டுப் பெண்மணிகளது வாழ்வும், பணியும் மீண்டும் இதை உறுதி செய்யக் காணலாம்.

ஹா.கி. வாலம் அம்மையார் திருச்சியில் பிறந்தவர். தந்தை தேசியப் பெருந்தொண்டர்; சிறந்த வழக்குரைஞர். 'தியாக ஜோதி' ஆங்கரை நா. ஹாலாஸ்யம் என்பது அவரது பெயர். தாயார் தஞ்சை மாவட்ட வரகூர் சுவாமிகள் - அச்சுதானந்த சரசுவதி அவர்களது திருமகளாரான சுயம்பிரகாசம் அம்மையார். தந்தை வழித் தேசியமும், தாய்வழித் தெய்வீகமும் வாலம் அம்மையார்க்கு வாய்த்தன.

ஹா. என்பது தந்தை ஹாலாஸ்யம் அவர்களைக் குறிக்கும். அதை அடுத்துள்ள 'கி' என்பது அம்மையாரது கணவர் கிருஷ்ணசுவாமி அவர்களைக் குறிக்கும். 'வாலாம்பாள்' என்பது முழுப்பெயர். சுருக்கி 'வாலம்' என்று கொண்டார். இவர் பெரிதும் இந்தியாவின் வடபகுதியிலேயே வசித்தாலும், முன்னெழுத்துக்களும் சுருங்கிய பெயரும் கேட்பவர்க்கு இவர் ஒரு வடக்கத்திப் பெண்ணோ என எண்ண நேர்ந்தது. அவர் ஒரு தமிழ்ப்பெண்தான். அவரது முறையான படிப்பு ஆறாம் வகுப்பு மட்டுமே. அவர் தாமே தனித்துத் தமிழ் இலக்கியங்கள், வடமொழி இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார். அவரது பதின்மூன்றாவது வயதில் அவருக்குத் திருமணமானது. அவரது கணவர் தஞ்சை மாவட்டப் பூலனூர் ரா. கிருஷ்ணசுவாமி. இராணுவப் பொறியியல் விற்பன்னர். கணவரது ஊக்கமும், ஆக்கமும் அவர் தொடர்ந்து பயிலவும், இந்தி, வடமொழி, ஆங்கில இலக்கியங்களில் ஏற்றம்பெறவும் உதவின. அவரது

தமிழறிவுக்குக் குரு தந்தை; ஆங்கில அறிவுக்கு ஆசான் கணவர் எனில் மிகையில்லை.

வடநாட்டில் மீரட் நகரில் 1946இல் இந்து-இசுலாமியர் இனக்கலவரக் கொடுமைகள் வெடித்தெழுந்தன. அதைக் கண்டு வாலம் அம்மையார் மனம் குமுறினார். அவரது மனக் குமுறல் தமிழ்க் கவிதையாக வெளிப்பட்டது. அதுமுதல் தன் வாழ்நாளின் இறுதி மூச்சுவரை கவிதை எழுதினார்.

கொட்டுக கொட்டுக மாமழையே!
கெட்டவர் நலிய நல்லவர் பொலியக்
கேடில் தமிழகம் வாழ்ந்திடவே
மட்டில் பெருமை மண்டலம் வாழ
மாநிலம் செழித்து வளர்ந்திடவே
அட்ட திசைக்கும் எட்டு இலக்குமி
ஆனந்த நடனம் ஆடிடவே
பட்ட பயிர் எல்லாம் பச்சை துளிர்க்கக்
கொட்டுக கொட்டுக மாமழையே

என்று 'மழை வேண்டுதல்' குறித்துக் கற்பகாம்பாள் கோயிலில் நடத்திய பாட்டரங்கில் பங்கேற்று, அவர் பாடிய பாடல் கடைசிப் பாடலாகும். அவர் கலந்து கொண்ட கடைசி நிகழ்ச்சியும் அதுதான்.

எழுத்து, பேச்சு, கவிதை, உரைநடை, படைப்பு, திறனாய்வு, கலை, அறிவியல் என இருவேறு முரண்பட்ட ஆற்றல்கள் ஒருங்கே அமையப் பெற்றவர்.

- இவரது எழுத்தில் எழிலும், ஏற்றமும் உண்டு
- பேச்சில் அறிவும், உணர்வும் களிநடம் புரியும்.
- கடல் மடை திறந்ததுபோல், கங்கைநதி பெருகி ஓடுவது போல், பேசும் ஆற்றல் மிக்கவர்.
- கேட்பவர்கள் தமை மறந்து, உரைவெள்ளத்தில் இலயிப்பர்.
- இவரது சொற்பொழிவு, 'சொற்-பொருட் பொழிவு' ஆக இருப்பதால், 'இலக்கிய எரிமலை' என்று ஆங்கில ஏடு போற்றியது.

'பிரவசன சிரோமணி', 'பிரசங்க ரத்னாகரம்', 'பாஷண கேசரி', 'விஞ்ஞான சிந்தாமணி', 'வித்யா பூஷணம்', 'வித்யாலங்கார, 'வித்யா துரிண்', 'வித்யா விசாரதா', 'கவிதா ரத்னம்', 'அருளரசி',

'பக்தி இலக்கிய அடர்மழை', 'மகாகவி' போன்றவை இவர் பெற்ற பட்டங்களாகும். வடநாட்டில் 'தமிழ் மீரா', 'ஆண்டாளின் அவதாரம்', 'சரசுவதியின் மறுவுரு' என்றெல்லாம் ஏத்தப் பெற்றவர்.

இலக்கியம் இவரது மூச்சு; பேச்சு; பொழுதுபோக்கு; கவிதை தொழில்; எப்போதும் படித்தபடியும் எழுதியபடியும் வாழ்ந்தவர். எதையும் ஒரே தடவையில் சிறு அடித்தல், திருத்தல் கூட இல்லாமல் செம்மையாக எழுத வல்லவர். எழுதும் நாள், பொழுது போன்றவற்றைக் குறித்து வைப்பது இவரது பழக்கம். வடநாட்டில் தமிழ் பரப்பிய வித்தகி. தமிழ்த் தூதுவர். பூனா கலைக்கழகம், தேவலாலி தென்னிந்திய சங்கங்களின் தலைவி என்று வாழிடந்தோறும் கலை, இலக்கிய, சமூகத் தொண்டாற்றியவர். கணவனும், மனைவியும் இணைந்து இலக்கியப் பணி புரிந்ததால், 'இலக்கியத் தம்பதிகள்' என்று ஏத்தப் பெற்றனர்.

தெய்வீகம், தேசியம், இலக்கியம் எனும் தளத்தில் நிலைபெற்றவர். 'மோகனா' என்னும் திங்கள் இதழை ஐந்து ஆண்டுகள் அயராது நடத்தியுள்ளார். 'மோகனத்தில்' மோகம் கொண்டு, தனது நூல்களுக்கும், ஏன் தான் வாழும் இல்லத்திற்கும், 'மோகனா' எனப் பெயரிட்டுள்ள திறம் இவரது அழகியல் உணர்வைப் புலப்படுத்தும். முப்பது ஆண்டுகள் முழு மூச்சுடன் முத்தமிழ்த் தொண்டாற்றிய இவ்வம்மையார், வாழ்நாள் முழுவதும் வாட்டிடும் நோயுடன் போராடிய வண்ணம், படுத்த படுக்கையில் இருந்துகொண்டே தொண்டாற்றிப் பனுவல்களைப் படைத்துள்ளார். அம்மையார்க்கு 26-9-1976இல் இரங்கல் கூட்டம். 3-7-1977இல் 'இராமாயண இரத்னாகரம்' நூல் வெளியீட்டு விழா நடந்தது. 22-10-1978இல் கருத்தரங்கம். 17-02-80இல் கவியரங்கம். அன்று கவிமாமணி சிறுவயல் செல்லப்பன், 'வாலம் பிள்ளைத்தமிழ்' பாடுவித்து வெளியிட்டார். 7-3-1981இல் வாழ்க்கை வரலாற்றை, மது.ச.வி. அவர்களைக் கொண்டு எழுதச் செய்து வெளியிட்டார். உடல் நலமின்மை, பிள்ளைப்பேறு இலாமை போன்றவற்றைக் கருதாது, உடல்வாழ்வு வாழாது, உயர் உளவாழ்வு, உயரிய இலக்கியப் பெருவாழ்வு வாழ்ந்தவர்.

- கடவுள் வழிபாட்டுப் பாடல்கள்
- வடமொழி வழிபாட்டுப் பாடல்களைத் தமிழாக்குதல்
- சமயத்தலைவர்கள், தியாகசீலர்களைப் போற்றுதல்

என்று முழுமை பெற்ற பரிணாமங்களைக் கொண்டு இவர்தம் படைப்புலகு திகழ்கிறது. வாழ்த்தும் போக்கு இவரது கவிதைகள் அனைத்திற்கும் அடிநாதமாகத் திகழ்கிறது.

ஐம்பெரும் காப்பியச் சுடர்மா மணிகள்
அவ்வை முதுமகள் வாய்மொழித் தேன்
கம்பராமாயணம், கல்லாடம் பெரு
கவிதை எழில் சொல்லும் காரிகையும்,

திருவிளையாடற் புராண தீபம்
திருவிசைப்பா திருமுறை நெறிகள்
பெரியபுராணம் பெருந்தமிழ்க்கடல் உதி
பேர்பெரும் பலமணி திகழ்நாடு

என்று நாட்டைப் போற்றுகிறார். சாதி, இனம், சமயம், மொழி போன்ற வேற்றுமைகளால் கலவரங்கள் தோன்றும்போது, முரண் தீர்க்கும் வழிமுறைகளாக (Conflict Resolution Studies) பிராந்திய ஒருமைப்பாடும் அழுத்தமான ஒற்றுமை மனப்போக்கும் உருவாதல் இயல்பு என்பர்.

ஐம்பது கோடி மக்கள் சமூகம்
அன்னை எனப் பணி திருநாடு
மன்பதை ஓங்க மாண்பு சிறக்கும்
பாரத வீரர் மணி நாடு

வாழ்க இந்தியா! வாழ்க பாரதம்
வளர்க எம் தவமுடைத் தமிழ்நாடு!
தாழ்க தீயவை! சூழ்க நல்லவை
ஊழி தோறூழி வாழ்க நிதம்

என்று பாரத தேசத்தைப் போற்றிப் பரவும் வாலம் அம்மையார், பாரத தேசத்தில் வாழும் மக்களுள் நாம் ஒரு தாய் மக்கள் எனும் உணர்வை விதைத்திடத் தவறவில்லை.

பாரதக் கொடி நிழலில் குளிர்கிறோம்!
பாரதச் செல்வர் பெயரை நினைக்கிறோம்
பாரத மகள் பண்பில் நனைகிறோம்
பாரத நிலம் வாழ வாழ்கிறோம்!

தெற்காசிய அனுபவங்களது தனித்தன்மை எதுவெனில், 'அனைத்துலகப் பிராந்திய அனுபவங்கள் மற்றும் இலக்கிய ஆக்கங்களிலிருந்து, சமயப்பற்று, வரலாற்று நாட்டம், தேசம் போற்றுதல், பொருளாதார வளநாடல், அரசியல் சீர்திருத்தம்,

மக்கள் செம்மை வாழ்வு என்பவற்றை முன்னிலைப்படுத்தும் ஒருமைப்பாடு, மற்றும் ஒற்றுமையைத் தம் நுவல்பொருளாகக் கொண்டு எழுதுதல், பேசுதல், வலியுறுத்துதல் எனும் போக்கு ஆகும். இது வாலம் அவர்களிடமும் காணப்படுகிறது.

பண்பாட்டு அரசியல் (Cultural politics) பெறலரும் நல்விழுமியங்கள் நிரம்பப் பெற்ற மனிதர்களாலே தேசம் மேன்மை பெறும்; நாடு வலிவு பெறும் எனும் கருத்துரு கொண்டவர் வாலம் அம்மையார். இலக்கியத் தளத்தை உலகாய நடப்பியலாகப் (Material reality of literature) பதிவு செய்கிறார். அதன் 'இழைகள் அதியற்புதம்' (Fantasy), குறிகள் (Symbols) போன்றவற்றால் பின்னப்படுதலை (Textual weaving of Literature) விடுத்து, பன்முகப் பாங்கினதாகக் கட்டமைக்கிறார்.

தகதிமி திமிதிமி தத்திமி எனத்
தலைவி நடனம் ஆடினாள்
சகதலத்தில் காலம் தீயத்
துர்க்கை நடனம் ஆடினாள்
பெண்மை வாழ தன்மை வாழப்
பேயரசி நின்றாடினாள்
உண்மை வாழ, உலகு வாழ
உத்தமி நடம் ஆடினாள்
(வாலம் ஆயிரம், ப.178)

நடப்பியல் வாழ்வு தரும் முனைப்புகள், சக மனிதர்களுக்கு உணர்வூட்டும் வேட்கை, எதையும் பாராமல், எதையும் கற்காமல் வாழும் சாதாரணர் தம் போக்கிலிருந்து, இவரது பார்வை ஆழமானதாகவும், 'ஊழி நடனமே உலக இயக்கம்' என்று ஆன்மீகத்துடன் இணைத்துக் காண முற்படும் நிலையும் அவரது படைப்புலகில் காணத்தகும் ஒன்றாகும்.

உயர்ந்த தத்துவமும், சொல்லடுக்கும், மிகமிக மெச்சத் தக்கன. புண்ணியத்தையும், பாவத்தையும் புனைந்து காட்டி, 'காந்தியடிகளும் கோட்சேயும்' என்று கவிதை யாத்தார். காந்திமகான் மரணத்தில் மக்களுக்கு உள்ள கலக்கத்தை மாற்றக் கூடிய பாட்டு இதுபோல் வேறு ஒன்று இல்லை எனலாம். "இந்த ஒரு பாட்டுக்கே எவ்வளவு முகவுரை வேண்டுமானாலும் எழுதி ஸ்ரீ வாலாம்பாளை வாழ்த்தலாம்" என்று சென்னை அரசவைக் கவிஞர் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் 'மோகன முறுவல்' எனும் நூலுக்கு எழுதியுள்ள முன்னுரையில் கூறி இருப்பது கருதத்தக்கது.

இந்திய சுதந்தரப் போராட்டக் காலகட்டத்தில் தலைவராகச் சாமானியர் உருவெடுப்பது என்பது தேசத்திற்காகப் போராட முன்வருதல், சொந்த நலன், குடும்ப ஆதாயம், வாழ்வியல் வளம் என எல்லாவற்றையும் புறந்தள்ளிய அர்ப்பணிப்பு உணர்வுடன், எத்துயரையும் விடுதலையின் பொருட்டு ஏற்க அஞ்சாதிருத்தல், இன்னுயிர் நீத்தலையும் உவப்புடன் ஏற்றல் போன்ற தகைமைகளைச் சார்ந்திருந்தது.

'எங்கள் தலைவன்' பாட்டில் நேரு குடும்பத்தினரைக் காந்தீய பக்தி கவர்ந்ததையும், அந்தக் குடும்பம் இந்த நாட்டிற்குச் செய்துள்ள அரும்பெரும் தியாகங்களையும் நெஞ்சுருக்கும் வகையில் வாலம் அம்மையார் எடுத்துரைக்கிறார்.

விடுதலை நாளில், மறைந்துபோன தேசபக்தர்களை நினைவுகூர்ந்து, அவர்களது தியாகச் செயல்களை எண்ணி, இன்று இந்த நாளில் அவர்கள் இல்லையே என்னும் ஏக்கத்துடன், **'சுபதின சோகம்'** என்று அம்மையார் பாடும் பாட்டு நுண்ணிய எண்ணமும் நூதன நோக்கமும் கொண்டது.

இந்தியா இழந்த இருநிதியம்
பாபு வணக்கம்
ஜனவரி முப்பது

ஆகிய கவிதைகள் காந்தீயத்திற்குத் தமிழிலக்கியம் மூலம் வாலம் அம்மையார் ஏற்படுத்திய அழியாத ஞாபகச் சின்னங்கள் ஆகும். காந்தி இருந்தால் காந்தீய தத்துவத்தை உணர்த்துவது ஒரு முறை; காந்தியின் மறைவுக்குப் பின், அதை அப்படியே உள்வாங்கி, ஏற்று, மனம் நெகிழப் பதிவு செய்யும் உணர்வு எளிதானதன்று.

இன்பமும் துன்பமும் இணைவது போல்
இரவும், பகலும் இயங்குதல் போல்
அன்பும் வெறுப்பும் அணைவது போல
ஆதியும், அந்தமும் நிற்பது போல
பொய்யும் மெய்யும் பொருவது போல
புலனும் அறிவும் பிணைவது போல
வெய்யிலும் குளிரும் வருவது போல்
வெற்றியும் தோல்வியும் சுழல்வது போல
.....
காந்தியும், கோட்சேயும் கணக்கினில் ஒன்றோ
சாந்தியும், சபலமும் சரிநிகர் ஆமோ
வீழ்ந்தது மறநெறி; வாழ்ந்தது தருமம்;

கோட்சே அதன்பேர்; காந்தி இதன்பேர்;
இயேசுவும், பாபியும் இணையாவாரோ?
லிங்கனும் வஞ்சனும் நேராவாரோ?
மாசறு ஞானமும், மடமையும் ஒன்றோ?
மாமணி ரவியுடன் மின்மினி ஒன்றோ?
(ஹா.கி. வாலம், 'காந்தியும் கோட்சேயும், ப.117)

வாலம் காந்தீய நேசர்; அவரது மரணத்தால் துயருற்று, அவரை வழிபடுவோர், எதிர் மறுத்துக் கொல்லத் துணிந்த கோட்சே எனும் இரு எதிரெதிர் முனைத்தள நிலைப்பாடு கண்டு, மனம் வெம்பி மானுடம் என்னும் மதிப்பும், மரியாதையும், உன்னதமும் மிக்கிலங்குவது - சிந்தனை, செயல் யாவும் உலகில் மேம்பாட்டினை இலக்காகக் கொண்டிருத்தல் வேண்டும்" என்ற வேணவாவின் வெளிப்பாடாக இப்பாடல் அமையக் காணலாம்.

ஹாலம் இந்திமொழியில் பிரபாகர் (ஹானர்ஸ்) வடமொழியில் விசாரதா (உயர் திறமை) ஆங்கில இலக்கியத்தில் இளங்கலைப் பட்டம் பெற்றவர். 1950இல் அவரது முதல் கவிதைத் தொகுப்பு நூல் 'மோகன முறுவல்' வெளியானது. உரைநடையாக எழுதப்பட்ட, 'வல்லபர் வாழ்க்கை' எனும் நூல், படேலின் வாழ்வியல் வரலாற்று நூல் ஆகும். இது 1951இல் வந்தது. மகாகவி பாரதியின், 'பாஞ்சாலி சபதம்' ஆங்கில மொழிபெயர்ப்பு 1957இல் வெளியானது. 1960இல், 'மோகனமுரளி' கவிதைத் தொகுதி வெளிவந்தது. அறிஞர்கள், கவிஞர்கள், இலக்கிய மேதைகள், பல்கலை வல்லுநர்களது பாராட்டுக்களை அந்நூல் பெற்றுத் தந்தது. நான்மொழி வித்தகி, சகலகலாவல்லி, கவிதா ரத்தினம் எனும் பட்டங்கள் மெருகேற்றின. 1963இல், 'மோகன லதிகா' என்ற தலைப்பில் இவர் எழுதிய இந்தி நூல், 'வட நாட்டினருக்கு, சூடிக் கொடுத்த சுடர்க்கொடியின் பெருமை யையும், ஆழ்வார்களின் சிறப்பையும் அறிமுகப்படுத்தும் வண்ணம் அமைந்தது. 'இராமாயண இரத்தினாகரம்' என்பது 1951 முதல் 1958 வரை இலக்கிய இதழில் தொடர்கட்டுரையாக வந்த, கம்பராமாயணம், துளசிதாசர் இராமாயணம், வான்மீகி இராமாயணம் ஆகியவற்றை ஒப்புநோக்கி எழுதப்பட்ட மிகச் சிறந்த இலக்கிய விமரிசனம் ஆகும். புதுதில்லி, கல்கத்தா, மும்பை, டாட்டாநகர், பூனா, புஸாவல், கல்யாண், தேவலாலி முதலிய இடங்களில் வசித்தவர். தில்லி, திருச்சி வானொலிகளில் உரையாற்றியவர். சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கம், பூனா பண்டார்கர் ரிசர்ச் இன்ஸ்டிடியுட் என்று தமிழர், தென்னிந்தியர்

அமைப்புகளில் அங்கம் வகித்துப் பணி செய்தவர். அவரது 'மோகன வாணி' நூல் பகவத் கீதையைத் தமிழாக்கம் செய்து, யாவரும் விரும்பிப் படிக்கும் வண்ணம் தரப்பட்டுள்ளது.

பற்றுதல் விட்டுப் பயனைத் துறந்து
மற்றொரு பலனும் மனதில் எண்ணாமல்
வேலைகள் செய்யும் வீர குணத்தான்
காலையும், மாலையும் தீயை வணங்கும்
மேலவன் அவனே மேம்படு யோகி
சீலனுமவனே! செல்வனும் அவனே!
உலகம் துறந்த உயர் மதியாளன்
அலகில் புகழோய் அவனே! அவனே!
(மோகன வாணி, ப.6. பாபி 1)

மனிதர்கள் புனிதர்களாக, நல்மனத்தவர்களாக, சீலர்களாக வாழ விரும்பினாலும், வாழ இயலாமல், பலப்பல விசைகளால் ஆட்கொள்ளப்பட்டு, எற்றுண்டு, இளைப்புண்டு, தடமாறி, தடுமாறினால் யாது விளையும்? அவர்களின் நிலைதான் என்ன? என்று அர்ச்சுனன் தொடுக்கும் வினாவிற்குக் கீதை நாயகன் பதிலுரைப்பதாக வரும் இடம் குறிக்கத்தக்கது.

மனிதன் ஒருவன் மனதையடக்கி
முனிவன் ஆக முயன்று பார்த்துச்
சனியன் மனத்தால் சற்றே பிறழ்ந்து
தனியாம் யோகசித்தி பெறாமல்
பாதியில் விட்டால் அவன்கதி என்ன?
நீதிநெறிமுறை தவறான் ஆயினும்
சோதனை தன்னில் தோல்வி அடைந்தால்
மாதவ, அவன் சதி யாவதும் என்ன?
(மேலது, அர்ச்சுனன் கூற்று, ப. 55)

இம்மை, மறுமை, இரண்டு உலகிலும்
அம்ம, அவனுக்கு அழிவில்லை. அர்ச்சுன!
நன்மை முயன்றவன் நாசம் அடையான்
உண்மை உறுதி உணர்ந்து கொள் (மேலது. ப. 58)

'அதிகாரம்' மிக்கவர் யார்? புனிதம் என்பது என்ன? மாசு என்பதுதான் என்ன? மனதின் காயங்களும், அவை மாற்றவியலாத திகைப்பும், மனித மனப் பேதமையின் விளைபொருளா? தன்னையும், வாழ்வையும் அர்ப்பணித்து, உயர்தனிச் செந்நெறியில் செல்ல வேண்டும் எனில் அதற்குச் செய்யத் தகுவது யாது? அது

நம் வசத்தில் உள்ளதா? நமக்கு அப்பாற்பட்டதா? எனும் அடுக்கடுக்காய்த் தோன்றும் வினாக்களும் மிக அழகாகப் பரிசீலிக்கப்படுகின்றன (மேலது. ப. 47).

மனச்சாளரங்களைத் திறந்து வைத்து, விசாலமான பார்வையால் யாவற்றையும் நோக்க முயன்று, பொருள் கொண்டாலும், மனிதருக்கு மிகவும் அரிதாக இருப்பது தன்னைத் தான் அறிந்துகொள்ளல்தான்! இதற்கு என் செய்வது என்ற வினாவும் விவரிக்கப்படுகிறது (மேலது. ப. 64).

மனத்துள் கனலும் தீ முடிவுற்றது. பணியில் நம்மை நாம் மூழ்கடித்தபடி செயலாற்றினாலும் ஒருபுறத்து ஒளிந்திருப்பது. இடைவெளி கிடைத்தால் மேலெழுந்து துன்புறுத்துவது. அதுவும் நம் ஆளுகைக்குள் இல்லை. என்றாலும் மனது அமைதி அடைவதும் இல்லை. என்னதான் செய்வது? எப்படி இதை நாம் வெற்றி கொள்வது என்ற வினாவிற்கு,

எனக்கு வணக்கமே செய்; என்னை எண்ணு;
என்னைத் துதிசெய்; எனக்கு வேள்வி செய்;
என்னை அடைவாய்! சத்தியம் சொன்னேன்
எல்லா அறத்தையும் துறந்து கைவிட்டு
நல்லாய்! என்னைப் புகல் என அடைவாய்!
உன்னை எல்லாப் பாவத்தினின்றும்
பன்னி விலக்குவேன் வருந்தேல்! வருந்தேல்!

என்பது விடையாகத் தரப்படுகிறது.

'எழுதியல்' என்பது அவரது இருத்தலின் பதிவென்றே சொல்லிவிடலாம். ஆளுமையும் வீச்சோடும் வேகத்தோடும் எழுத்தில் வெளிப்படுதல் கண்கூடு; அவர் சக மனித சகோதர - சகோதரியரை எண்ணிப் பார்த்து, நூற்றுக்கணக்கானவர்களில், தடம்பதித்து, சாதித்த மாமனிதர்களைப் போற்றத் தயங்காதவர்.

பீரங்கிப் போட்டுப் பிளடா கொடுமையை
பிய்த்து எறியடா தீமைகளை
சோரப் புன்மைநெறி நேரில் அழியெனும்
பாரதிதாசன் பண்புடை நாடு
(வாலம் ஆயிரம், ப. 145)

என்று தேசத்தை அதன் சீரிய மனிதர்களைச் சொல்லிப் போற்றுகிறார். சூர்தாசர், துளசிதாசர், வியாசர், வான்மீகி, சுத்தானந்தர், புரந்தரதாசர், தாகூர், நாமக்கல் கவிஞர், சுத்தானந்த

பாரதி, மகாகவி பாரதி இசைச்செல்வர்களாகிய தியாகையர், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரி, பாபநாசம் சிவன், அரியக்குடி, செம்மங்குடி, முசிறி, லால்குடி ஜெயராமன், டி.என். கிருஷ்ணன், பாகவதர், என்.எஸ். கிருஷ்ணன், பிருத்வி ராஜ்கபூர், ராஜ்கபூர், சத்ய ஜித்ரே, உதயசிங்கர், கோபி கிருஷ்ணா, திருவள்ளுவர், இளங்கோவடிகள், கம்பன், காந்தி, ஜவஹர்லால் நேரு, பட்டேல், இராஜேந்திர பிரசாத், ராஜாஜி, ராஜன் பாபுடு, அமெரிக்க லிங்கன் ஆகியோரைப் போற்றிப் பாடல்கள் யாத்துள்ளார்.

எழுதியலுக்கு அமைதியான சுயம் வேண்டும். அச் சுயம் நன்று, தீதறிந்து நன்றை ஏற்றிப் போற்றவும், அன்றை அகற்றி விலக்கவும் வல்ல சிந்தைத் திறம் மிக்க சுயமாதல் (better self) வேண்டும். மனவுணர்வுகள் சிதைவுபடாமல் வெளிப்படும் வாயிலாக அத்தகு சுயம் வாய்க்கப் பெற்றோர்கள் எழுதுவெளி அமையக் கூடும். பாதுகாப்பற்ற உணர்வையோ, அச்சத்தையோ, வெறுமையையோ, விரக்தியையோ காண இயலாத ஆளுமைத்திறன் மிகு எழுத்தாற்றல் வாலம் அவர்களுடையது. அதில் விலகி ஒதுங்கும் மனப்பாங்கையோ, விடுதலையாகி ஓட எத்தனிக்கும் உணர்வையோ காண்டற்கு இயலவில்லை என்பது குறிக்கத்தக்கது.

பெண்ணாய்ப் பிறந்தோர்க்குப் பெருமையும் இல்லை
மண்ணிலே எந்தவித இன்பசுகமும் இல்லை
கண்ணாலம் என்றொரு கருமம் முடிந்தால்
மண்ணோடு மண்ணாகி மடிவதுதான் எல்லை.
ஆணான பேடிக்கு அடிமையாம் பெண்கள்
பூணாத விலங்குக்குப் பெயரும் விவாகம்
நாணாத வாழ்க்கை இது நாயைவிட மோசம்
வீணாக வாழ்வதிலும் வெற்றிவெறி மோகம்
ஆணுக்கு அடிவருடல் பெண்மக்கள் கடமை
வீணுக்கு விடுதலைக்கு முயல்கிறீர் மடமை
ஆணுக்கு நிகரோ பெண் ஐயையோ கொடுமை
சாணுக்குச் சாப்பாடு போதாதோ புதுமை....

(ஹா.கி. வாலம், மோகனமலர்கள், ப. viii)

இதுதான் அந்நாளைய ஆண்-பெண் மனப்போக்கு. சமூகத்தில் பெண்ணின் பயன் பற்றிய மதிப்பீடு இத்தகைய தாக இருந்த காலகட்டமது. வேளாண் சமூகம் நிலத்தோடு போராட வேண்டி இருந்தது. பிரிட்டானிய ஏகாதிபத்தியம், நவீனமயமாதல்,

இயந்திரமாதல், தொழில்மயமாதல் யாவும் மறைந்திருப்பனவும், வெளித் தெரிவனவுமான சுரண்டல்களையும், மனிதரை, சமூக வன்முறையை இந்திய இனம் சந்தித்துக் கொந்தளித்துக் கொண்டிருந்த தருணத்தில், விடுதலை விரும்பிய பலன்களைப் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கை, எதிர்பார்ப்புகள் மனத்தில் நிறைந்திருந்த சூழல், விடுதலை கொணர்ந்த மனித மேம்பாடு என்று யாவற்றையும் பொதிந்த கருவூலங்களாக அவரது கவிதைகள் திகழ்கின்றன.

பெருகிய வெஞ்சினம் மிஞ்சிய வதனம்
துஞ்சிய கணவன் துயரந்தவழ் நயனம்
செஞ்சிலம் பொன்று செங்கையில் வேலாய்
அஞ்சிட வந்தனள் அம்பிகை தேவீ

(மோகன மலர்கள், ப. 112)

என்று கண்ணகியை அம்பிகையாக, தேவியாகப் போற்றிப் பரவுகின்றார். சீதை, ஔவையார், திலகவதி, மங்கையர்க்கரசியார், புனிதவதி, மீரா, ஆண்டாள், சாரதாமணி, ஜான்சிராணி, இராணி சம்யுக்தை, சித்தூர் ராணி பத்மினி, மங்கம்மா, சாந்த் பீவி, அன்னிபெசன்ட், மேடம் சோபியா, அம்மை மாண்டிசோரி, கவியரசி சரோஜினி தேவி, சகோதரி சுப்புலட்சுமி, முத்துலட்சுமி ரெட்டி, ஐடா ஸ்கடர், குமாரி சௌகான், மகாதேவி வர்மா, கணிதமேதை லீலாவதி, கே.பி.சுந்தராம்பாள், எம்.எஸ். சுப்புலட்சுமி, என்.சி. வசந்தகோகிலம், எம்.எல்.வசந்தகுமாரி, லதாமங்கேஷ்கர், குமாரி கமலா, வைஜெயந்தி மாலா, யாமினி கிருஷ்ணமூர்த்தி, ஹேமமாலினி, இந்திராகாந்தி, கஸ்தூரிபாய் காந்தி என்று அனைவரையும் போற்றிப் பாடிய வாழ்த்துப் பாடல்கள் அடங்கிய தொகுதி மோகன மலர்கள் ஆகும்.

வள்ளுவர்க்கு முன்பிறந்த வாழ்வரசி அவளே!
கொள்ளைச்சுவைக் கோலக்கவி கொட்டும் தமிழ்ப்
பெண்ணே!
அள்ளுசுவைத் தண்டமிழை அள்ளியள்ளிப்
பொழிவாய்
எள்ளளவும் செருக்கறியா இன்மணியே வாழி!

ஆத்திசூடி, கொன்றைவேந்தன் அறநூல்கள் அருளி
சூத்திரமும், தொடைக்கவியும் செந்தமிழில் பாடி
நாற்றிசையும் நாவலரும் பாவலரும் ஏத்திப்
போற்றிசைக்கப் புவியாளும் பெண்ணரசே வாழி!

பெண்குலத்தின் பேரொளியே! பழமைத் தமிழ்ப்பண்பே!
மண்ணரசர் அடிபணியும் மங்கையர்க்கு அரசி!
விண்ணரசர் வியந்துநிற்கும் விந்தைக்கொரு கடலே!
கண்ணொளியே! கற்பகமே! கவித்தாயே! வாழி!
(ஔவை, மோகனமலர்கள், ப. 113)

என்று ஔவையின் கவிச்சிறப்பை, தெய்வீகமாக்கிப் போற்று கிறார். இலக்கியம், கலை ஆகியவற்றில் மகளிர் முன்னிலைப் படுத்தப்பட்டாலும், மகளிர் வாழ்வியல் அதன் மெய்ம்மைப் பதிவுகளாக இருத்தல் மிகவும் அரியதாகவே உள்ளது. பெண்ணின் அரசியல், சமூக, பொருளாதார நிலை, வாழ்வுரிமை பற்றி அறிதற்குப் போதிய சான்றாதாரங்கள் கிடைத்தற்கரிய தொன்மைக் காலகட்டத்தில் வாழ்ந்த பெண் கவியரசியாம் ஔவையை மனம் நெகிழ்ந்து வாலம் போற்றுவது கருதத்தக்கது.

மகளிரது சாதனைகள் பழமையானவையாயினும், பிரசித்தி பெற்ற நிகழ்வுச் சித்திரங்களாயினும், மாற்றமில்லா வாழ்வில் மாறுதல்களைத் துறைதோறும் புகுத்துவோராயினும், தொகுக்கப்பட்டு, மதிக்கப்பட்டு வாலம் அம்மையாரால் போற்றப்பட்டிருப்பதைக் காணலாம்.

புற்றுநோய் எனும் பேய்தனை ஒழிக்கப்
பெரிதும் உழைத்துப் பெயர் பெற்ற
முத்துலெட்சுமி ரெட்டி மூதாட்டி
மேதை செயல்திகழ் திருநாடு
(மேலது, பா. 121)

என்று காத்திருத்தலை மையமிட்டுச் சுழலும் மனித வாழ்வில் காலனைத் தடுத்து நிறுத்தப் போராடிய மருத்துவரின் பங்களிப்பை விதந்துரைக்கிறார்.

சரி, வாலம் அம்மையார் போற்றும், 'பெண்' பற்றிய படிமம் எத்தகையது? தாய்மை என்பது எங்ஙனம் மதிப்பிடப் படுகிறது? எல்லாவித வன்முறைகளையும் சகிப்பவளா? எதிர்ப்பவளா? வலியை, துயரை, இரணத்தைப் பொறுப்பவளா அன்றிப் பொங்கி எழுபவளா? போராடுவாளா? அதிகாரத்திற்கும், அடக்குமுறைக்கும் எதிரான போராட்டத்தை முன்னிறுத்தும் பெண்மை இயல்புடையவளா? தம் செயல்திறனால் அதிகாரத்தைக் கைக்கொள்ளும் ஆவல் மிக்கவளா? ஆணுக்கு அடங்கி, பணிந்து வாழும் இயல்பினளா? எத்தகைய புனைவினைத் தருகின்றார்?

குற்றச்செயல் ஏதும் புரியாமல், இல்ல அளவில் செம்மையாகப் பெண் செயல்பட்டால், கிராம அளவில், மாநில அளவில், தேச அளவில் பெரும் முன்னேற்றம் கண்டுவிட முடியும் என்பதான நம்பிக்கையும், உறுதிப்பாடும் அவரது (மேலது, ப.126), புனைவின் மூலவேர் எனலாம். மகளிரது வாழ்வனுபவங்களை நேர்ப் பெண்ணியவாதியாகப் பரிசீலித்து, மதிப்பீடு செய்து, மேன்மேலும் சிறக்க, மேம்பட வழிவகுக்கும் வாயிலாகத் தன் கவிதைத் தளத்தைக் காண்கிறார். வீழ்ச்சிகளைக் காண நேர்கையில் அவரது கவியுள்ளம் பதைக்காமல் இல்லை. பரிதவிக்காமல் இல்லை. அதன் பதிவுகளும் அவரது கவிதை வெளியில் காணப்படவே செய்கின்றன.

இது என்ன?

கற்புடைய மங்கையரைக் கணவர் வழிநிற்கும்
பொற்புடைய பூவையரைப் பொன்னிற மென்மேனி
விற்புருவம் கன்னியரை வீணர்குழு வீணில்
கற்பனைக்கு எட்டாவகையில் கனம் அழித்தனவே!
உடன்பிறந்த சோதரியர் உமைப் பயந்த தாயர்
கடமைபுரி பத்தினியர் காதல் புத்திரிமார்
உடமை உயிர் எதையும்விட ஓம்பும் மணிக்கற்பு
கடைப்பட்டார் தாம்கெடுக்கக் கலங்கினார் அந்தோ?
அபலைகள், சிறுமிகள், குமரிகள், தாய்மார்கள்
கவலையுறு கைப்பிடித்த காதலிளம் பிடிமார்
அவலமுற்று அரற்றிநின்று உகுத்திடு கண்ணீர்தான்
உடலமெனும் உமதுமனம் உருக்கவும் போதாதோ?
(மேலது, ப. 8)

கல்வி அறிவூட்டுவதை, சமயத்தின் மீதிருந்த பற்றை, நல்லொழுக்கத்தின்பாலிருந்த நாட்டத்தை, வாழ்வியல் விழுமியங்களை அசைக்குபடி மதவெறி பஞ்சாப், பீகார், வங்காள மாகாணங்களில் தலைவிரித்தாடியது கண்டு, அவ்வெறிக்கு அப்பாவி மகளிர் பலியாவது கண்டு மனம் பொறாமல் பாடுகின்றார்.

ஆண் தலைமைசார் குடும்ப அமைப்பு, ஆணுக்கு ஆண் பழிவாங்குகையில், ஆணின் உடைமைப் பொருள்களை நாசம் ஆக்குவதிலும், ஆணின் உரிமைப் பெண்டிரைத் துய்ப்பதிலும் முனைப்புடன் செயல்படும் அவலத்தை வெறுத்து மனம் கசி கிறார். அடிபட்டு ஓடும் அகதிகளின் நிலை கண்டு இரங்குகிறார்.

அறியாமை

கல்லோ மரமோ கரும்பொன்னோ, வெறும்
களிமண்ணோ?
எல்லே இதயம் என்பதும் இல்லாப் பொருள்தானோ?
கல்லார் கற்றவர் ஆன்றவர் சான்றோர் அருள்மிகுந்த
நல்லார் பொல்லார் எல்லாம் ஏட்டளவில் தானோ?
ஒன்றே தெய்வமும், ஒன்றே மதமும், ஒன்றே நாம்
நன்றே செய்வது நமது கடமை நாட்டினர்காள்
இன்றே வம்மின் யாவரும் ஒன்று சேர்ந்திடுவோம்
தொன்றே தொட்டு வாழ்ந்த நம் நாட்டைக்
காத்திடுவோம்! (மேலது)

என்று அழைப்பு விடுக்கிறார். பன்முகத்தன்மை ஒருமுகப் படுத்தப்பட்ட வெறியைத் தணிக்கும் மாற்றாகும். அவரது பெண்ணியப் படைப்புலகு ஆணுலகிற்கு எதிரானதன்று. ஆனால் அநீதிகளுக்கு மாற்றானது. இலக்கியமெனக் கொள்ளத் தக்கது. வரலாறு எனக் கருதுதற்கு உரியது. விளக்கம், பண்டைய நல்விழுமியங்கள் போற்றுதல், மதித்தல், வாசித்தல், மீள்வாசிப்புச் செய்தல், செம்மையானவற்றை மட்டுமே தேர்வு செய்தல், பிழிவைத் தருதல் எனும் பணிகள் செய்வன.

எந்நாளோ?

மாதரார் கற்பு மறம் வந்து வவ்வாமல்
சோதரர்தம் தூய்மைதனில் திகழுநாள் எந்நாளோ?
பாலகரைக் கொல்லும் பழிபாவம் மிஞ்சாமல்
சீலநெறிவழி நாம் செல்லும்நாள் எந்நாளோ?
வியாபாரத் துறையில் வல்வழக்குச் செய்யாமல்
நியாயபரமாக நடக்குநாள் எந்நாளோ?
ஆசிய கண்டத்தார் அனைவர்களும் மனமகிழ்ந்து
தேசுமிளிர் பாரதரின் திறம் புகழ்வ தெந்நாளோ?
(மேலது.)

என்று உலகினரது கவனமும், பாராட்டும் இந்திய தேசத்தின் மேல் திருப்பப்பட வேண்டும் எனும் தனது அவாவினை எடுத்துரைக்கின்றார். அடிப்படை மதவாதம் அவருடையதன்று. அடிமைத்தளைக்கு இரங்கும் மனம் அவருடையது. தகர்த்தெறிய வேண்டாமா? யார் அப்பணியைச் செய்தல் வேண்டும்? எதிர்ப்புகளை அடிப்படையாக வைத்துப் பிளவுபடுவதிலோ, வேற்றுமைகளை அதிகரித்துச் செல்வதிலோ அவருக்கு

உடன்பாடு இல்லை. மனிதர் அனைவரும் நேயமுடன் ஒன்றுபட்டு, நன்கு வாழ வேண்டும் என்பது அவரது முதன்மை இலக்கு எனலாம்.

எழுமின், பாரத சோதரிகாள்!

தீமை தடுக்கக் கிளம்புவீர்; தீயர் குழுவைப் பிளந்திடீர்;
நாமே நமக்குக் காவலர், நம்மைக் காக்க வேறுயார் உளர்?
அன்பு, அருள், ஆன்மசக்தி அனைத்தும் விளக்கும் மாதரார்
துன்பம் துடைக்க அறியாரோ? தோல்வியடைந்து முறிவாரோ?
மாதராரின் வலிமைமுன் மாநிலம் பணியுமே!
சோதரியரின் தூய்மைமுன் சூரர் சிரமும் குனியுமே!
(மேலது.)

பெண்ணின் சமூக அனுபவம் இலக்கியப் பதிவாக வாலம் அம்மையாரால் செய்யப்பட்டது எனில் மிகையில்லை. பெண் பெறும் இடம், பங்களிப்பு, சமூகத்தில் அவளது பங்கேற்பு பற்றிய அக்கறை உடையது அவரது பரிசீலனை. பெண்ணியவாதியாக அவர் தன்னை வெளிப்படுத்தவில்லை. பெண் ஆற்றலை ஒருங் கிணைத்து, அநீதிகளைக் களையப் போராட முன்னிறுத்தும் இயக்கச் செயல்பாட்டிற்கு அவர் விடுக்கும் அழைப்பு அவரை நேர்ப் பெண்ணியவாதியாக அடையாளப்படுத்தும், தாய்மை உள்ளிட்ட எந்தப் பெண் படிமமும் அவரால் கட்டுடைப்பு செய்யப்படவில்லை. எதையும் அவர் மீட்டுருவாக்கம் செய்ய முனையவும் இல்லை. பழம் பெண் புனைவுகளை அவற்றின் விழுமியத்தின் அடிப்படையில் போற்றுகின்றார். நடப்பியல் வாழ்வின் பொய்மைகளைக் களைய அவாவுகின்றார். 'புனைவு உலக ஒருமை' (False Universality) என்றோ, 'இலட்சிய வரைவு' என்றோ அவரது உலகக் கட்டுமானத்தை வெகு எளிதாக முத்திரை இட்டுப் புறம் தள்ள முடியாதபடி, பெண்ணியத் தளம் பற்றிய அவரது வரைவீடு ஆழமாகவும், அழுத்தமாகவும் இருத்தலை அவரது கவிதைகள் புலப்படுத்துகின்றன.

வணங்குவதும், வாழ்த்துவதும் வளமையின் நிலைமைகள். வாழ்விக்க வாழ்த்துவனே! என்றார் மாணிக்கவாசகர். வாழ்த்தி வணங்குவதும், வணங்கி வாழ்த்துவதும் பண்பின் வெற்றிகள்.

புத்தாண்டை வாழ்த்தி வரவேற்பது, பொங்கலை வாழ்த்தி வரவேற்பது என்ற வாழ்த்துப் பாடல்கள் 'மோகன வாழ்த்தும் வணக்கமும்' என்று அமைக்கப்பட்டுள்ளன.

பொங்கல் பொங்குக!

தமிழ்மொழி நற்கடல் பொங்குகவே – உயர்
அமுதக் கவிநயம் பொங்குகவே
சமரச சுதந்திரம் பொங்குகவே – தினம்
தமனியக் காந்தியம் பொங்குகவே!
கிராம ராஜ்ஜிய எழில் பொங்குகவே – வளர்
நாம நாமச்சுவை பொங்குகவே!
தாமுடைத் தமிழ்நிலம் பொங்குகவே – மகிழ்
கோமளச் சமரசம் தங்குகவே!
(மோகன வாழ்த்தும் வணக்கமும், ப. 12)

அம்மையார் எழுதிய சித்திரை, வசந்தம், புத்தாண்டு என்ற போற்றிப் பாடல்கள் தமிழ்மொழியையும், தமிழக நல்லாட்சியையும், மாட்சியையும் காண விழையும் அவாவினை வெளிப்படுவதாக அமைந்திருத்தலைக் காண முடிகிறது. தித்திக்கும் தேன் கவிதைகள் இவை தமிழன்னைக்குத் தண் மழலை தரும் நல் முத்தங்கள் ஒப்பவை. 'சந்தனத் தருவில் தேனடைபோல், மாறா மணமும், ஆரா அழகும் வாய்ந்த இந்தக் கவிதைகளை வாசிக்க, வாசிக்க இன்பம் பொங்குகிறது. சொல் ஆட்சிகளின் மாட்சிகள் சொக்க வைக்கின்றன. படித்த அளவிலேயே, கவிதை எழுத வேண்டும் எனும் ஆர்வத்தை இப்பனுவல்கள் வாசகர்கள் மனத்தில் தோற்றுவிக்கின்றன' என்று இராமலிங்கர் பணிமன்ற உதவியாளர், முருகசரணன் கூறுவது கருதத்தக்கது.

வாலமெனும் தாய் சிறுவர்க்காக ஆக்கிய கவிதைகள், பாலர்க்குத் தேனாய் இனிப்பவை. தத்திடும்; நடக்கும்; மெல்லத் தவழ்ந்திடும் குழந்தைத் தெய்வச் சித்திரங்கள் படிப்பவர்தம் மனத்தைக் கொள்ளை கொள்பவை. அத்தனை பாட்டும் தேவ அமுதம். அற்புதம். மகவினைப் பெறாத வாலம் அன்னையார் வடித்தநல் கவிதைகள் குழந்தையர் அனைவருக்கும் சொந்தமான சொத்துக்களாம்!

அறிவுச் சுடர்களாய்
ஆண்மை மலைகளாய்
பிரிய பாலர்காள்
பெருமை எய்துவீர் (மேலது. ப. 17)

என்று மனம் நெகிழ்ந்து மழலைகளை அவர் வாழ்த்தும் திறம் போற்றுதற்குரியது. 'மோகன மொட்டுக்கள்' என்று இக்கவித் தொகுதி பெயரிடப் பெற்றிருப்பது தனிச் சிறப்பேயாகும்.

'மோகன மொழி' எனும் அவரது கவிதைத் தொகுதி தமிழ்மொழியின் சிறப்பையும், வளத்தையும் விதந்துரைக்கும் அமுதக் கவிதைகளது அரும்பெறல் நிதியத் தொகுப்பு ஆகும்.

மொழி உணர்வு அம்மையார்பால் இறையுணர்வு போல் ஒன்றி இருந்தது. பன்மொழிப் புலமைச் செவ்வியராய் அம்மையார் விளங்கிய போதும், தம்மொழி தமிழ்மொழி என்பதை என்றும் இதயம் உருக, பொங்கத் தெள்ளு தமிழில் பா இயற்றுதல் அருளரசியின் வழக்கம் ஆகும். "மேடையில் நின்று உரையாற்றும் போதே, தம்முடைய உணர்வுகளைப் பாட்டு வடிவில் வழங்கும் அவர், பொருள் பொதிந்த பாடல்களை நலம் பொதிந்த சொற்களால் வனப்புற வடிவமைத்துக் காட்டுவதை அவரது பாடல்களிலிருந்து நன்கு தெரியலாம்" என்று அவ்வை நடராசனார் போற்றுவது கருதத்தக்கது.

தமிழ்மொழி வளமையைப் பார் மனிதா!
அமிழ்தினும் இனிதென ஆன்றோர்கள் புகழ்ந்த எம்
தமிழ் மொழி, வளமையைப் பார் மனிதா!
வீரமும், காதலும், வெற்றியும், பக்தியும்
ஈரமும் ஈகையும் என்றும் கூடரும்
தொன்மை தாய்மொழி தன்மையைப் பார் – தமிழா
அமிழ்தினும் இனிது என ஆன்றோர்கள் புகன்ற
எம் தமிழ்மொழி வளமையைப் பார் மனிதா

(மேலது, ப. 27)

என்று மனிதர்களுடன், தமிழர்களுடன் நெஞ்சாரப் பகிர்ந்து கொள்ளும் நிறைஉணர்வு மிளிரும் தங்கக் கவிதைகளது தொகுதி அரிய கருவூலம் ஆகும்.

பாரத மணித் திருநாட்டின் பெருமைகளை விதந்துரைக்கும் கவிதைகள், 'மோகன நாடு' என்ற தொகுதியாக ஆக்கப் பட்டுள்ளன. சீனப்போர், வங்கப்போரைக் கவியரசியார், 'எடு எடு வில்லினை; போர் புரி; இது இது சமயம் எழும்பு நீ!' என்று பாடும்போது எவருக்கும் வீரம் வருதல் இயல்பே,

'காலம்' வென்ற கருணை மிகுந்த
கண்ணியப் பாரதம் பொன்னாடு

வாலம் வழுத்தினள் வாழ்க எம்பாட்டில்
வண்மை மிகுந்தொளிர் தாய்நாடு

என்று 'தாய்நாட்டைப் போற்றும் அவர் பாட்டு மோகன நாட்டை வர்ணித்துப் போற்றும் பாங்கு, தமிழ்த்தாயின் மகுடத்தில் பதித்த நல் மணி' என்று ஆசிரியர் விக்கிரமன் போற்றுவார்.

எது பூசை?

தூபமே காட்ட வேண்டா
தூய்மையே போதும், போதும்!
தீபமே ஏற்ற வேண்டா
தெளிந்த நல்லறிவு போதும்!
பால் அவன் கேட்பதில்லை
பால் போன்ற இதயம் கேட்பான்
நூல் அவன் கேட்பதில்லை
நுண்ணிய அறிவு கேட்பான்
(ஹா.கி. வாலம், 'மோகன தெய்வீகம்', ப. 49)

எனும் வாலம் அம்மையின் கவிதைகளது ஆதார சுருதி தெய்வீகம், இலிங்க வடிவில் உள்ள சிவனை, 'அன்புக்குப் பணியும் இலிங்கம், அற்புதம் செய்யும் இலிங்கம்' என்று அறிமுகப்படுத்து கிறார். அவரது தெய்வீகப் பாடல்களது தொகுப்பாய், மோகன தெய்வீகம் உள்ளது.

இறைவனுக்காகப் பரிவுடன் இவர் கேட்பது காரைக்கால் அம்மையை நினைவூட்டுகிறது. ஆடியது போதும்! அரனே! இனி நிற்பாய்! ஓடியது போதும், ஓய்வெடுப்பாய் நீயே! என்கிறார். 'நல்ல மாஞாலத்தீரே! நடனத்தின் முடிவு ஈதென்னும் சொல்லை நான் ஏற்க மாட்டேன். சூழ்ச்சியே செய்தான் ஈசன்' என்று அத்தன் சிவபெருமானுக்கும், அன்னை சிவகாமிக்கும் நடனப் போட்டியில் , ஊர்த்துவ நடனமாடி இறைவன் வென்ற வரலாறு கேட்டு, வாலம் அம்மையின் பெண்மைக் குரல், அன்னை சிவகாமிக்குப் பரிந்து பேசுகிறது. தில்லைக்காளி எல்லையில் இருப்பதைப் படம்பிடிக்கும் அற்புதக் கவிதை, 'தில்லையின் எல்லையிலே' என்பதாம். கண்ணன் எழிலை, முத்துக் கொண்டையும், மோகன மலரும், இரத்தினச் சுட்டியும், கொத்துச் சரமும் என்று வர்ணிக்கும் வாலம் அம்மையார், 'வேண்டாம் என்றால் தருவான், வேண்டும் என்றால் மறைவான்' என்று கண்ணன் இயல்பைக் கூறுகிறார்.

வேண்டேன் - வேண்டும்

பொன்னும் புதுஉடையும்
பூமிதனில் யான் வேண்டேன்
தின்ன அறுசுவையும்
தீவனமும் யான் வேண்டேன்
சொர்ண மணியணிகள்
சுகபோகம் யான் வேண்டேன்
மின்னுமணி மாளிகையும்
மிளிர்நலமும் யான் வேண்டேன்
சாகாவரம் வேண்டும்;
சலியா மனம் வேண்டும்;
நோகா உடல் வேண்டும்;
நுண்ணறிவு தான் வேண்டும்;
பாலாம் மொழி வேண்டும்;
பாபுனையும் திறன் வேண்டும்;
ஏகாக்கிர சிந்தை எனக்கு
என்றென்றும் தான் வேண்டும்.

(ஹா.கி. வாலம், 'மோகன தெய்வீகம்', ப. 72)

சொல்லுக்குச் சொல் அழகு தோன்றும் கற்பனை, பக்தி இவற்றுடன் இன்னவை வேண்டும் என்பதில் உள்ள தெளிவும், தீர்மானமும் உறுதிப்பாடுடை அக்கவிஞரை ஒளிரச் செய்கின்றன. 8-4-1947இல் அம்மை எழுதிய,

இது என்ன?

சுதந்திர மெய்த்தேவி உன்றன் மணிக்கதவின் முன்பே
இதமென்ப தறியாத ஏழையர்கள் செந்நீர்
பதந்தரு முன்வாசலிடைப் பாய்கின்ற திதுதான்
அதமோ அல்லது சுதந்திரமோ, பந்தனமோ?

(ஹா.கி. வாலம், 'மோகன தேசியம்', ப. 88)

எனும் முதல்பாடலுடன் தேசியமணம் கமழப் பாடிய கவிதைகள், 'மோகன தேசியம்' எனும் தொகுப்பாகத் திகழ்கின்றன. அசோகன், மராட்டிய சிவாஜி, தமிழக ஊமைத் துரை, கட்டபொம்மன், செக்கிழுத்த செம்மல் வ.உ.சி., செண்பகராமன், திருப்பூர்குமரன், வினோபா அடிகள் என்று தேசியத் தலைவர்கள் அம்மையாரால் போற்றப்படுகின்றனர். பூமிதான இயக்கம், சர்வோதயம், சத்தியமேவ ஜயதே, காங்கிரசுக்கு வாக்கு, காளைச் சின்னம் பற்றிய பாடல்கள் அம்மையாரால் யாக்கப்பட்டுள்ளன.

பாரத நாட்டில், உலகில் ஒளிர்ந்திலங்கிய பெண் இரத்தினங்களின் பண்பாடு, கலாச்சாரம், நாட்டுக்கு, மனித குலத்திற்கு அவர்கள் ஆற்றிய அருஞ்சாதனைகள் ஆகியவற்றை அற்புதமாகப் போற்றிப் பாடும் அம்மையாரது கவிதைகள், 'மோகன மலர்கள்' எனும் தொகுப்பாகும்.

மண்ணில் புகழ்வாழ்வு வாழ்ந்த சீலர்களாகிய திரு.வி.க., உ.வே.சா., கி.வா.ஜ., டி.கே.சி., அண்ணங்கராச்சாரியார், குன்றக்குடி அடிகளார், சுனீத் குமார் சாட்டர்ஜி, ஏ.எல். முதலியார், ஏ.ஆர். முதலியார், சர்.சி.பி. ராமசாமி அய்யர், கிருபானந்த வாரியார், டென்சிங் நார்கே, மிகிர்சென் (ஐந்து கடல் நீந்தியவர்), எம்.ஆர். ஜம்புநாதன் (ரிக் வேதம் தமிழாக்கம் செய்தவர்) என்று அவர்களது செயல்களைப் போற்றிய கவிதைகளது தொகுதி, 'மோகன மணிகள்' என்பதாகும். பல்துறை அறிஞர், ஆன்றோர் சிறப்புக்களை விளக்கும் இக்கவிதைகள், வாசிப்பவரைப் பிரகாசமான எதிர்காலத்துக்கு இட்டுச்செல்லும் படிக்கட்டுகளாக அமைந்துள்ளன.

திருமகள் முகமெனப் பொலி தமிழகமே!
பரைசிவை உமையொடு சிவணுறைவிடமே
கருவிழிப் பிடிஇடைக் கலைமகள் பதமே!
பெருமிதமொடு களி நடம்புரி தடமே!

என்று தமிழகத்தையும்,

விழிநிகர் இலக்கண இலக்கிய மணியும்
பழியற இயல் இசைப் பரதமென் னணியும்
தழைமொழி தருபல வதிசயக் கலனும்
பழைய திரவிடப் பெருங்கடனாடு மிளிரும்

என்று இலக்கியத்தையும் போற்றுகிறார்.

காந்தியடிகள், இராமராச்சியம், ராஜ்காட், நேரு, படேல் போன்ற நல்லவர் நாயகமாகவும், நற்குண சாகரமாகவும் விளங்கிய பெரியோர்களைப் போற்றும் பாடல்கள், 'மோகன மாணிக்கங்கள்' என்று கவிதைத் தொகுப்பாகத் திகழ்கின்றன.

கண்ணனைப் பற்றிய பாக்கள், கண்ணனின் விசுவரூபத் தோற்றம், குழந்தைக் கண்ணனாய் மண்ணை உண்டு யசோதை வாய் திறந்து காட்டச் சொன்னபோது அவருக்கு அண்ட சராசரங்களையும் காட்டிய காட்சி, குருக்ஷேத்திரப் போரில் மனம் கலங்கி நின்ற பார்த்தனுக்குக் காட்டிய விசுவரூபக் காட்சி,

என்று அம்மையார் காத்தல் கடவுளாம் திருமாலின் பெருகிய தோற்றம் மூன்றினைக் கவிதைகளாக யாத்திருப்பதன் தொகுப்பே, 'மோகனக் காட்சி மூன்று' என்பது. 'கலங்கரை விளக்கெனக் காவிய உலகில் இலங்கிடும் எம்மான் இளங்கோ வாழி' என்றும், கன்னற் பண்சுவைக் கவிஞர் மன்னவ' என்று கவியரசர் கம்பனையும், 'திராவிடம் பண்ணிய புண்ணியமே' என்று பாரதியையும், 'காலம் கடந்து கவின் எழில் கமழும் கவிதைக் கவிமலர்தரு கதிரோன்' என்று வால்மீகியையும் அம்மையார் போற்றிப் பாடும் கவிதைகளது தொகுப்பு, 'மோகனக் கவிகள்' என்பதாகும்.

ஒட்டுக் கேட்டல், கோள் மூட்டுதல்
திட்டுதல், வைதல், தீமை பயத்தல்
கட்டம் வந்தால் கடுகடுத் திடுதல்
நட்டம் வந்தால் நட்பை இழுத்தல்
வம்பு பேசுதல், வழக்கை ஆடுதல்,
துன்பம் செய்தல், துயரே அளித்தல்
இன்பம் நாடி இழிசெயல் புரிதல்
அன்பரை ஒறுத்தல், சிசுவை அடித்தல்
இல்லறம் தனை நரகமாக்குதல்
சொல்லிய எல்லாம் பொய்யாக்குதல்
இல்லாதவரே 'புரட்சிப்பெண்' ஆகும்
எல்லாரும் அவளை ஏத்துவர் கண்டீர்"

(மேலது, ப. 191)

என்று அம்மையார், 'பெண்' பற்றிய புனைவைக் கட்டமைப்பது கருதத்தக்கது.

கலைத்துறையில் வல்ல கலைஞர்களைப் போற்றி அவர் எழுதிய கவிதைகள், 'மோகனக் கலைஞர்கள்' என்பது, தமிழர், இந்தியர்தம் கலைவளம் ஏற்றப்படுகிறது, போற்றப்படுகிறது.

மெய்ஞ்ஞானத்தைப் போற்றும் அம்மையார் விஞ்ஞானத்தைப் போற்றவும் தயங்கவில்லை. இலக்கியம் துய்க்கவும், கவிதை பாடவும் உணர்வுமயமான உள்ளம் தேவை. அறிவை அடிப்படையாகக் கொண்ட அறிவியல் போற்றவும் அம்மை தவறவில்லை. உலகில் எங்கு நடக்கும் எதையும் கவனிப்பார். கென்னடி சுடப்பட்டபோது குமுறினார். ஹோமிபாபா மறைந்தபோது கதறினார். விஞ்ஞானம் போற்றும் அவரது கவிதைகள், 'மோகன அறிவும், அறிவியலும்' எனும் தொகுப்பில்

உள. இராமானுஜம், ஹோமிபாபா, விசுவேசரையா இவரால் போற்றப்பட்டவர்கள் ஆவர்.

இயற்கை எழிலைப் பாடும் அழகிய கவிதைகளது தொகுதி, 'மோகன எழிலும் இயற்கையும்' என்பது. காவிரித் தாயை அவர் போற்றும் விதம் இதோ:

மயில்கள் அகவக் கிளிகள் கொஞ்ச
மாம்பழக் குலை குலுங்கக்
குயில்கள் கூவக் கோழி யழைக்க
குழந்தை மழலை மொழியத்
துயிலும் பரமன் தலையின் பக்கம்
'தத்திமி' என ஆடும்
சயில சகிய மலையின் புதல்வி
ஜல மகளே வாழி! (மேலது.)

இறைவழிபாட்டுத் தலங்கள், அழகு கொலுவிருக்கும் எழில் நிலையங்களான எல்லோரா சிற்பம் போன்ற கலைநுட்பச் சிறப்புகளும் போற்றப்பட்டுள்ளன. 'மோகனக் கதவும் - தலமும்' எனும் கவிதைத் தொகுதி அழகுத் தோற்றங்களைப் பதிவு களாக்கித் தருகிறது.

பசும்பொன் மேனியன், புலப்படு பிரபஞ்சம், புலப்படாத பிரம்மம் பற்றிய வழிபாட்டுப் பாடல்களான சுப்ரபாதம், மங்களாசாசனம், முகுந்த மாலை, விஷ்ணுசகஸ்ரநாமம் என்பவற்றின் பொழிவை - சாராம்சத்தை அழகுத் தமிழில் உரைக்கும் அம்மையின் கவிதைகளது தொகுதி, 'மோகனத் துதிகளும் தோத்திரங்களும்' என்பதாம்.

வாலம் அம்மையார், பகவத் கீதை, பாகவதம், இராமாயணம், பாரதம், சிவானந்த லகரி, சௌந்தர்யலகரி, ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம், விட்டுணு சகசிரமநாமம், கிருஷ்ண கானாமிர்தம், சுப்ரபாதம், பஜகோவிந்தம், ஆதித்திய இருதயம், புத்தர் தம்மபதம், துளசிதாசர் விரயபத்திரிசா, நாரதர் பக்தி சூத்திரம் போன்ற நூல்களில் இருந்து பெற்ற கருத்துகளைத் தமிழில் முத்துக்களாக - அழகிய பாக்களாகத் தந்துள்ளதன் தொகுப்பு, 'மோகன முத்துக்கள்' என்பது. இது அவரைத் தத்துவதரிசியாகக் காட்டுகிறது. பக்திக்கு அவர் தரும் விளக்கம்,

முக்தி யளிக்கும் மூலத் தன்மையாம்
பக்தி என்பது பரமனிடத்தில்

நித்யம் அழியா அன்பே ஆகும்
சுவையும், ரசமும், இன்பமும் நல்கும்
அமுத ரூபமே அந்தப் பிரேமை
(மோகன முத்துக்கள், ப. 307)

வெயிலின் வேகம் வெகுவாய்க் குறைய, அவர் பொழிந்த கவிதை மழையின் தொகுப்பு, 'மோகன மாமழை' என்பது, இதனுள் 'கொட்டுக மழையே' என அவர் பாடிய கடைசிப் பாடல் உள்ளது.

திறமிக்க ஆய்வாளர் போல் அம்மையார் தொகுத்த அரிய செய்திகளது தொகுப்பு, 'மோகனக் குவியல்' என்பது, புகழ்பெற்ற கற்புக்கரசிகள், பிரம்மச்சாரிகள், பிரம்மச்சாரினிகள், உலகப் புகழ் பெற்ற சகோதர, சகோதரிகள், விசித்திரப் பிறப்பிடம் உடையார்கள், தாய்க்கு ஒரே மகன், மகள், புகழ்மிகு இரட்டையர், புகழ்மிகு காதலர், அழகிய பெயர்கள் என்று தொகுத்தளித் துள்ளார். பெண்களின் பெயர்களாக அவர் தருவன: பரிமளா, சுமித்ரா, கோமளா, கோகிலா, மங்கையர்க்கரசி, திலகவதி, இந்திராணி, மேகாவளி, தாராமதி, நாகமதி என்பன. புகழ்மிக்க பழம்பெரும் நாகரிகங்கள் என்று,

திராவிடம் கி.மு. 2000
ஆரியம் கி.மு. 2000
சிந்துவெளி நாகரிகம் கி.மு. 6000–7000

என்று குறிப்பிட்டுள்ளார்.

மாய உலகில் மனிதப் பிறவியோர் போராட்டம்
காய மெடுக்கக் கருத்தரி வேளையும் போராட்டம்
தாயின் வயிற்றில் தங்கிடும்போது போராட்டம்
சேய் உருவாகிப் பூமியில் வருகையில் போராட்டம்
தாயை இழந்தால், தந்தையை இழந்தால் போராட்டம்
சேயை இழந்தால் சோதரர் பிரிந்தால் போராட்டம்
மாயை மோகமணி மனிதவாழ்வு மகாப்போராட்டம்
காயம் எடுத்தால் காலன் வரும் வரை போராட்டம்
(மேலது, ப. 404)

என வாழ்க்கையைப் போராட்டமாகக் காணும் வாலம் அம்மையாருக்கும், இலக்கியப் படைப்புலகுக்கும் உள்ள உறவு உன்னதமானது. இலக்கியப் படைப்பு அவருக்கு மனவுணர்வுகளை வெளிப்படுத்தும் வாயிலாகவும், தெளிவளிப்பதாகவும், தேற்று

வதாகவும், உயர்த்துவதாகவும், உரம் அளிப்பதாகவும், போராடு வதற்குத் தேவையான வலுவளிப்பதாகவும், ஆழமான சிந்தனையைப் பகிர்தற்கோர் தோழமையாகவும் துணை புரிந்துள்ளது.

காதலுக்கு உடலே வேண்டாம்;
கருத்துணர் வொளியே வேண்டும்;
சாதலுக்கு அஞ்சி நிற்கும்
சஞ்சலம் கொள்ள நிற்கும்
ஏதுதான் துயர் வந்தாலும்
இதயத்துள் ஓங்கி நிற்கும்
மாதவம் காதலாகும்!
மற்றவை மயக்கமாகும்!
எமனாலும் எதிர்க்கலாகா
இதயத்து அன்பே காதல்
அமைதியின் வடிவே காதல்
ஆன்மீக மெய்ப்பெருக்கே காதல்
(மேலது, ப. 383)

என்று காதலுக்கு அம்மை வரையறை தந்துள்ளார். மனித வாழ்வனுபவங்களின் ஆழத்தில் பயணித்து, விழுமியங்களை இனம் கண்டு கவிதை வடிவில் வெளிப்படுத்தியிருக்கும் அவரது எழுத்தாளுமை உள-உணர்வுப் போராட்டங்களுக்கும், மன உளைச்சல்களுக்கும் மருந்தாகவும் திகழும் வல்லமைமிக்கது. எப்படி உலகில் எல்லாமும் முடிவை நோக்கிப் பயணித்த வண்ணமே உள்ளன எனும் வியப்பும், உன்னதத்தைக் கண்டறியும் அவரின் கவிதைப் படைப்புலகும் உன்னதமானவை.

வாலம் அம்மையாரது உணர்வுப்பூர்வ மனது தான் இரசித்தவற்றை, படித்து இன்புற்றவற்றை, நல்லனவற்றை, வாழ்வியல் நெறிகாட்ட வல்ல விழுமியங்களைக் கவி வடிவில் வெளிப்படுத்தி இருப்பது கருதத்தக்கது.

நோயுடன் போராடிய வாழ்வியல் பயணம் அவருடையது. மகப்பேறு வாய்க்கப் பெறவில்லை. கருவிலே திருவுடையவர்; கர்ப்ப சீமாட்டி என்று போற்றப்படுபவர். கவி புனையும் ஆற்றல் அவருக்குக் கை வந்த பேறாம்.

அம்மையாரின் கவிதைகளை நெட்டோட்டமாகப் பார்க்கிறபோது ஓர் உண்மை எனக்குத் தட்டுப்படுகிறது. அம்மையாரின் வாழ்க்கையை

ஏதோ ஒன்று அனலாக நின்று வாட்டியிருக்கின்றது. அத்துயர வெப்பத்தில் தாம் நாளும் கருகுவதே போல் அவர் உணர்ந்து தவித்திருக்கிறார்.

வெயிலின் வெம்மை வெகுவாய்க் குறைய அவர் கவிதையையே மழையாகக் கருதி, 'கொட்டுக மழையே' எனக் கூவியிருக்கிறார். வேண்டுவார் வேண்டினால் கிட்டாததும் உண்டோ? மழை பெய்தது. பெய்யெனப் பெய்யும் மழை, அல்லவா, வாலம் அம்மையாரின் கவிமழை தமிழின் விளைச்சலை மிகுவிக்கும் பெருமழை; உலகில் வெப்பம் தணிக்கும் குளிர் மழை என்று எழில் முதல்வன் கூறியிருப்பது கருதத்தக்கது.

ஓயாத வாழ்க்கைப் போராட்டத்தில், உன்னதங்களையே தேடி, தாம் கண்டவற்றைச் சகலரும் நுகரும் வண்ணம், கவிதைகளாக யாத்தளித்த அவர் பெண் உலகில் ஒரு நேர் பெண்ணியவாதியாகச் சீரிய இடத்தைப் பெற்றொளிர்வது தமிழகம் செய்த தவப்பயன் ஆகும். பாரதம் செய்த பெரும்பேறு ஆகும்.

சித்தி ஜுனைதா பேகம்

நித்தியா அறவேந்தன்

தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்களால் பாராட்டப்பெற்று, முஸ்லிம் பெண்களில் முதன்முதலில் தமிழில் நாவல் படைத்து அளித்த சித்தி ஜுனைதா பேகம் அம்மையார் கி.பி. 1917ஆம் ஆண்டு பிறந்துள்ளார். பிறந்த மாதம், நாள் தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை. இவருடைய தந்தையின் பெயர் எம்.ஷரிப் பெய்க் என்பதாகும். தாயார் முத்துக்கனி என்கிற கதீஜா நாச்சியார் என்பவராவார். இவர் தந்தையின் அனுமதியோடு தன் வீட்டிற்குப் பக்கத்தில் இருந்த கிறித்தவர்களால் நடத்தப்பெற்ற ஒரு பள்ளியில் மூன்றாம் வகுப்புவரை படித்துள்ளார். மேற்கொண்டு படிக்க அவருடைய தாயார் அனுமதிக்கவில்லை. இவரது பன்னிரண்டாம் வயதில் திருமணம் நடைபெற்றது. கணவர் ஃபகீர் மாலிமார் என்பவராவார். இவர் மளிகைக்கடை வணிகம் செய்துள்ளார். பின்னர் மலேசியாவில் உள்ள பூலோசாம்பு என்ற தீவிற்கு வேலை தொடர்பாகச் சென்றுள்ளார். ஓரிருமுறை தாயகம் வந்து சென்றுள்ளார். இரண்டாம் உலகப் போரின் போது மாலிமார் அங்கேயே நோய்வாய்ப்பட்டு இயற்கையெய்தியதால், பேகம் அம்மையாரின் திருமண வாழ்க்கை சில ஆண்டுகளுக்கு உரியதாகவே அமைந்துவிட்டது. இளமைப் பருவத்திலேயே விதவையாகி விட்டார். இவர்களுக்கு, சித்தி ஜமீரா, சித்தி ஹமீதா, சித்தி மஹ்மீதா, சித்தி சாதுளா என்ற நான்கு குழந்தைகள் பிறந்துள்ளனர். நாகூரிலிருந்து நாகபட்டினத்திற்குச் சென்று வாடகை வீட்டில் சில ஆண்டுகள் தங்கித் தன் குழந்தைகளைப் படிக்க வைத்துள்ளார். தனி ஒருவராக நின்றே குழந்தைகளை வளர்த்துள்ளார்.

ஜுனைதா பேகம் அம்மையாரை மற்றவர்கள் 'ஆச்சிமா' என்று அன்புடனும் மரியாதையுடனும் அழைக்கின்றனர். 'சித்தீக்' என்றால் அரபுமொழியில் 'உண்மையாளர்' என்பது பொருளாம். அதன் பெண்பாலாகச் 'சித்தி' கருதப்பெறுகின்றது. நபிகள் நாயகம் அவர்களின் மகள்களுக்குரிய பெயரும் இதுவே. எனவே பேகம் அம்மையாரும் தன் மகள்களுக்குப் பெயர் சூட்டும்போது பெயருக்குமுன் 'சித்தி' என்பதைச் சேர்த்துச் சூட்டியுள்ளார்.

ஜுனைதா பேகம் அம்மையாருடன் பிறந்தவர்கள் நான்குபேர். அம்மையார்தான் மூத்தவர். இரண்டாவது சகோதரர் ஹுசைன் முனவ்வர் பெய்க். இவர் அந்தக் காலத்திலேயே அஞ்சலகத்தில் பணிபுரிந்துள்ளார். மூன்றாவது சகோதரர் முஜீன் பெய்க். இவர் பால்யன் என்ற பத்திரிகையைப் பல ஆண்டுகள் வெற்றிகரமாக நடத்தியுள்ளார். அடுத்துப் பிறந்த இரண்டு ஆண் குழந்தைகளும் இறந்துவிட்டனராம்.

ஜுனைதா பேகம் அம்மையார் தீவிரமாக எழுத ஆரம்பித்தது திருமணத்திற்குப் பிறகுதான். அல்லது விதவையான பிறகு என்று கூடச் சொல்கின்றனர். பதினாறாவது வயதில் எழுத ஆரம்பித்த இவருடைய படைப்புகளைக் கீழ்வருமாறு வகைமை அடிப்படையில் பகுக்கலாம்.

1. நாவல்
2. கட்டுரை
3. சிறுகதை
4. நாடகம்

காதலா? கடமையா? சண்பகவல்லி தேவி, மகிழம் பூ ஆகியன அம்மையாரின் நாவல்களாகும். இவர் சிறுகதை எழுதி யுள்ளதாகத் தெரிகிறதே தவிரப் படைப்பாக வெளிவந்ததா? என்பதை அறிய முடியவில்லை என்கின்றனர். மலைநாட்டு மன்னன் என்ற தொடர்கதையையும் இவரது படைப்புகள் பட்டியலில் காணமுடிகின்றது. சில கதைகள் எழுதி முடிக்கப் பெற்றனவா என்பதும் தெரியவில்லை என்று சொல்கின்றனர். இவருடைய பல கட்டுரைகள் முஸ்லிம் இதழ்களில் வெளி வந்துள்ளன. அவற்றுள் பதினான்கு கட்டுரைகள் இஸ்லாமும் பெண்களும் என்ற தலைப்பில் தொகுக்கப்பெற்றுள்ளன. தற்பொழுது இக்கட்டுரைகள் காதலா? கடமையா? என்ற நூலின் பிற்பகுதியிலேயே சேர்க்கப்பட்டு வெளியிடப் பெற்றுள்ளன. அவை வருமாறு :

1.	இஸ்லாமும் பெண்களும்	நூருல் இஸ்லாம்	1955
2.	இஸ்லாமும் பலதாரமணமும்	" "	16.3.1957
3.	பெண்கள் சினிமா பார்க்கலாமா?	" "	29.10.1953
4.	பெண்களும் சமையலும்	" "	---
5.	பெண் கல்வி	நவயுவன்	2.10.1937
6.	முஸ்லிம் பெண்மணிகளும் விவாக விலக்கும்	தாருல் இஸ்லாம்	20.3.1995

7. பாராளப் பிறந்தவள் பேயாட்டம் போடுவதா?	ஷாஜஹான்	1.10.1951
8. அறச் செல்வி ராபியா	பிறை	ஜீலை 1972
9. அழகிய முன் மாதிரி	செம்பிறை	---
10. அல்லாஹ்வின் தூதர் அவதரித்த திருநாள்	நூருல் இஸ்லாம்	1944
11. மண்ணில் மறைவது சில்லடியா?	" "	9.8.1968
12. கர்பலா யுத்தம்	" "	3.11.1949
13. இசையின் இன்பம்	சிவாஜி	---
14. அன்னை	மாணவர் இதயம்	1956

முஸ்லிம் பெண்கள் எழுதுவதில்லை. அதிலும் மூன்றாவது வரை மட்டுமே படித்த ஜுனைதா பேகம் அம்மையார் எழுதியதும், தன்பெயரையும் போட்டு, வீட்டுமுகவரியைக் கொடுத்து, உருவப் படங்களுடன் கூடிய புத்தகமாக வெளியிட்டுள்ளது அவரது துணிச்சலை நமக்கு உணர்த்துகிறது. இவருடைய காதலா? கடமையா? நாவலுக்கு, 'தாருல் இஸ்லாம்' ஆசிரியரும், நபிகள் நாயக மாண்பினை எழுதிய பெரியாருமான பா. தாவுத்ஷா சாகிபு அவர்களிடம் மதிப்புரை கேட்டுள்ளார். இவர் அம்மையாரின் தந்தைக்கு நண்பராம். "இது ஒரு பெரிய திறமையா? இதற்கு ஒரு மதிப்புரை தேவையா?'' என்று ஏளனமாகப் பேசியதை மற்றொருவர் மூலம் அம்மையார் கேள்விப்பட்டிருக்கிறார். ஆனால் உ.வே.சா. அவர்களின் மதிப்புரையில் அம்மையாரை

> *முகம்மதியர்களுள்ளும் தமிழ் நூல்களைப் பயின்றுள்ள பெண்மக்கள் இருக்கிறார்கள் என்பதை இப்புத்தகம் நன்கு விளக்குகிறது. இதன் நடை யாவரும் படித்தறிந்து மகிழும்படி அமைந்திருக்கிறது. கதைப்போக்கும் நன்றாக உள்ளது*

என்று புகழ்ந்து எழுதியது அவரைப் பெரிதும் ஊக்கப்படுத்தி மகிழ்வித்திருக்கிறது. இது நேர்காணலில் அவர் குறிப்பிட்டுள்ள செய்தியாகும்.

''முஸ்லீம் பெண்டிர் எழுத முன்வருவதை நாம் வரவேற்கிறோம்" என்று புதுமைப்பித்தன் பாராட்டியுள்ளதும் ஊக்கப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கதாகும். அதேபோல் இவரின் படைப்புகள் வெளிவரப் பலர் உதவியிருக்கிறார்கள். அவர்களைப் பற்றிய விவரங்களைத் தன் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

1. திருநாகூர் அண்ணலின் திவ்யமாண்பு என்ற வாழ்க்கை வரலாற்று நூல் நான்கே நாட்களில் கணவரின் தூண்டுதலால் எழுதி முடிக்கப்பட்டு 1946இல் வெளிவந்துள்ளது.
2. பாட்டனார் நாகை நகரசபைத் துணைத்தலைவர் முயூ நவாபு சாகிபு மரைக்காயர்.
3. சகோதரர் மு.ஹுசைன் முனவ்வர்.
4. சிறுகதைகளையும் கட்டுரைகளையும் தொகுத்து வெளியிட விரும்பிய சகோதரர் மர்ஹும் ஹீஸைன் முனவ்வர்பே இளம் வயதிலேயே இயற்கை எய்தினார்.
5. பேராசிரியர் 'தாருல் குர்ஆன்' ஆசிரியர் கே.எம்.காதிர் மொகிதீன்.
6. அறிவின் சுடர் மர்ஹும் கலைமாமணி டாக்டர் கவி காமு ஷரீப்.
7. செல்வர், பேராசிரியர் முகம்மது ரபி.
8. சிற்றன்னை ஹதீஜா நாச்சியார்.

நாவல் வெளிவந்த பிறகு பல எதிர்ப்புகளைச் சந்தித்திருக்கிறார். 'ஒரு முஸ்லிம் பெண் நாவல் எழுதுவதா? அதுவும் 'காதல்' என்ற சொல்லுடன், எவ்வளவு நெஞ்சழுத்தம் வேண்டும்?' இப்படிப் பல கடுஞ்சொற்களைச் சந்தித்திருக்கிறார். ஊரே கூட்டம் கூட்டமாகத் திரண்டு வந்து இவரைக் கேலி பேசியிருக்கிறது. இவை எல்லாவற்றையும் கடந்து இவர் எழுதுவதில் ஆர்வம் காட்டியுள்ளார்.

இவர், காப்பியங்களும், வண்ணங்களும் இயற்றிய புலவர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர் என்பது இங்குச் சிறப்பாகக் குறிப்பிடவேண்டிய செய்தியாகும். இவரது காதலா? கடமையா? எனும் நூல் 1938ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட முதல் நாவலாகும். இவரது மற்றொரு நாவலான சண்பகவல்லி தேவி மற்றும் சில கட்டுரைகளும் இந்நூலுடன் தற்பொழுது இடம்பெற்றுள்ளன. 1938ஆம் ஆண்டு முதல் பதிப்பாக வந்த இந்நூல் 2003இல் (ஸ்நேகா வெளியீடு, இராயப்பேட்டை, சென்னை-14) இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது.

ஜுனைதா பேகம் அம்மையார் தொடக்கத்திலிருந்தே உடல்நலக்குறைவு பட்டிருந்தாலும் 1979-80களில் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுச் சித்தமருத்துவம் செய்து கொண்டுள்ளார். 193.1998 அன்று இறைவனடி சேர்ந்துள்ளார்.

இறப்பதற்கு நான்கைந்து நாட்களுக்கு முன்கூட அவர் எழுதிக்கொண்டும், படித்துக்கொண்டுமிருந்தார் என்ற தகவல் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

ஜுனைதா பேகம் அம்மையாரின் படைப்புகள் குறித்து ஐந்து ஆய்வுக் கட்டுரைகளும் ஒரு நேர்காணலும், காதலா? கடமையா? என்ற நூலின் பிற்பகுதியில் இடம்பெற்றுள்ளன. விவரம் வருமாறு:

கட்டுரைகள்	எழுதியோர்
1. காலம் தரக்கூடிய ஆறுதலுக்காகக் காத்திருப்போம்!	சொல்லரசு. முஜபார் முஹையித்தீன்
2. இஸ்லாமிய முதல் புரட்சிப்பெண்	டாக்டர் கம்பம் சாகுல் அமீது
3. முதல் முஸ்லீம் பெண்மணியின் முதல்நாவல் அனுபவம் - பெண்ணியப் பார்வை	மு. பழனியப்பன்
4. தமிழில் நாவல் எழுதிய முதல் முஸ்லீம்பெண்	பேரா. ஹமு. நத்தர்சா
5. முஸ்லீம் சமூகம் தந்த முதல் பெண் தமிழ் எழுத்தாளர்	நா. கண்ணன்
6. முதல் முஸ்லீம் பெண் எழுத்தாளர் (நேர்காணல்)	முஸ்லிம்முரசு, பொன்விழாமலர் பேட்டி - சொல்லரசு, முஜாபர் முஹையித்தீன்

ஜுனைதா பேகம் அம்மையாரின் படைப்புகளாக நாகூர் ரூமி, கம்பம் சாகுல் அமீது ஆகியோர் குறிப்பிட்டுள்ளவை வருமாறு :

1. காதலா ? கடமையா ?	முஸ்லிம் பெண்மணியால் எழுதப்பட்ட முதல் தமிழ் நாவல் என்ற பெருமையுடையது
2. சண்பகவல்லி தேவி	வரலாற்று நாவல் (1947)
3. மகிழம்பூ	நாவல்
4. இஸ்லாமும் பெண்களும்	கட்டுரைத் தொகுப்பு (1995)
5. மலைநாட்டு மன்னர்	தொடர்கதை (நூருல் இஸ்லாம்)
6. ஹலிமா அல்லது சுற்பின் மாண்பு	நாவல்
7. பெண் உள்ளம் அல்லது சுதந்திர உதயம்	நாவல்

8. திருநாகூர் அண்ணலின் திவ்ய மாண்பு	வாழ்க்கை வரலாறு (1946)
9. முஸ்லிம் பெருமக்கள் வரலாறு	தொடர்கட்டுரை (நூரூல் இஸ்லாம்)
10. வனஜா அல்லது கணவனின் கொடுமை	நாவல்

பேகம் அம்மையார் படைக்கும் பெண்நலம்

ஆண்மக்கள் சரித்திர உண்மைகளைச் சாதி, சமயத்தான் தூண்டப்பட்டு மறைத்தும் திரித்தும் எழுதலாம். பெண் மக்கள் இயல்பாகவே ஆழ்ந்து சிந்திக்கும் மனத்தன்மையும், இரக்கமும் உடையவர்கள். எனவே புத்துலகப் புதுமாற்றம் விழையும் முஸ்லிம் உலகம் மறுமலர்ச்சி விரும்பும் தமிழர் தம் நாட்டுப் பெண் எழுத்தாளர்களை வரவேற்குமாக

என்று சண்பகவல்லி தேவி நாவலின் முன்னுரையில் அம்மையார் குறிப்பிட்டுள்ளது பெண் எழுத்தாளர்களுக்கு இருக்கும் பொறுப்பைச் சுட்டுவதாக அமைகிறது. இக்கருத்தின் அடிப்படையில் அவரது படைப்புகளில் காணலாகும் 'பெண் நலம்' குறித்து இங்கு ஆராயப்பெறுகிறது. இவ்வாய்வை மூவகையாகப் பகுத்துக்காணலாம்.

1. நாவல்களின்வழிக் காணலாகும் பெண்நலம்
2. கட்டுரைகள்வழிக் காணலாகும் பெண்நலம்
3. நாடகம்வழிக் காணலாகும் பெண்நலம்

1. நாவல்களின்வழிக் காணலாகும் பெண்நலம்

ஜுனைதா பேகம் அம்மையாரின் காதலா? கடமையா? சண்பகவல்லிதேவி ஆகிய இரு நாவல்களிலும் இடம்பெற்றுள்ள பெண் கதை மாந்தர்களின் வழி அம்மையார் உணர்த்த விரும்பும் பெண்நலக் கருத்தியல்களைக் கீழ்வருமாறு காணலாம்.

காதலா? கடமையா? நாவலில் இடம்பெற்றுள்ள கதைமாந்தர்களைக் கீழ்வருமாறு பகுத்துக் குறிக்கலாம்.



காதலா? கடமையா? நாவலில் மொத்தம் ஏழு பெண் கதை மாந்தர்கள் இடம்பெற்றுள்ளனர். சுசீலையின் தாய் என்ற பெண்கதைமாந்தர் அறிமுகநிலைக்கு மட்டும் உரியவராகப் படைக்கப் பெற்றுள்ளார். மற்ற அனைவருமே ஏறக்குறைய ஒரே பருவ வயதினராக இருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

கதை நாயகன் சுரேந்திரநாதனின் அண்ணியாக வரும் பெண் கதை மாந்தரின் பெயர் குறிப்பிடப்பெறவில்லை. அறிமுக நிலையில் மட்டுமே இவர் சுரேந்திரநாதனிடம் மிகப் பாசமாகவும் அதேநேரம் தவறுகளைச் சுட்டிக்காட்டி அறிவுரைகள் வழங்குபவராகவும் படைக்கப்பெற்றுள்ளார். சுரேந்திரநாதன் காணாமல் போனபோது மிக வருத்தமடைந்து அவரைத் தேடுவதற்கு ஆட்களை அனுப்புவது பாசநிலை வெளிப்பாட்டுக்குத் தக்க சான்றாக அமைகின்றது.

இளவரசி விஜயசுந்தரி, பதுமினி இருவருமே வேறு வேறு அரசு வாரிசுகளாகப் படைக்கப் பெற்றிருக்கின்றனர். இருவருமே திருமண விஷயத்தில் தமக்கு உடன்பாடு இல்லா நிலையிலும் தந்தையின் விருப்பத்தையே ஏற்கின்றனர்.

விஜயசுந்தரி தந்தையின் இறுதி விருப்பம் நிறைவேறவும், கடமை உணர்வை மதித்தும், மக்கள் நலன் குறித்த பொறுப்புணர்வாலும் தன் காதலைத் தியாகம் செய்கிறாள். பதுமினியோ தந்தையின் விருப்பப்படி வயதில் மூத்த ஆண்மகனை மணந்து கொண்டாலும், அவனிடம் வெறுப்பையே

காட்டுகிறாள்; செல்வச் செருக்கோடு நடந்துகொள்கிறாள். அவன் இறந்த பிறகு இராகுலன் என்பவனை விரும்பிக் கருவுற்று ஏமாறுகிறாள். ஆனாலும் இராகுலனைப் பழிவாங்க உறுதி எடுத்து அதில் வெற்றியும் பெறுகிறாள்.

சுசீலை மற்ற கதை மாந்தர்களைவிட வயதில் குறைந்தவள். இவளது உதவியால்தான் சுரேந்திரன் தன் கடமையைச் செய்து முடிக்கிறான். சுசீலையின் அழகும் சுறுசுறுப்பும் கண்டு இராகுலன் அவளைத் தன்னிடம் பணிக்கு அமர்த்திக் கொள்கிறான். எனினும் இராகுலன் தவறானவன் என்பதைப் புரிந்துகொண்ட சுசீலை அவனிடமிருந்து இளவரசர் பிரதாபை மீட்கச் சுரேந்திரநாதனுக்கு உதவுகிறாள். எது நியாயம், எது அதர்மம் என்பதைச் சிந்தித்துச் செயல்படும் ஆற்றல் உள்ளவளாகச் சுசீலை படைக்கப் பெற்றுள்ளாள்.

வனஜா, வசந்தா எனும் இரு பெண் கதை மாந்தர்களும் இளவரசி விஜயசுந்தரியின் தோழியராகப் படைக்கப் பெற்றுள்ளனர். மக்களின் கருத்துக்களை இளவரசிக்குச் சொல்வதும் அவள் வெளியில் செல்லும்போது துணையாக உடன் செல்வதும் இவர்களுடைய பணிகளாக அமைந்துள்ளன.

ஆக, காதலா? கடமையா? நாவலின் பெண் கதை மாந்தர்கள் வழி அம்மையார் படைத்தளித்துள்ள பெண் நிலைகளாகக் கீழ்வருவனவற்றைக் குறிக்கலாம்.

1. தமக்கு விருப்பமில்லையென்றாலும் தந்தை சொல்வதைக் கேட்பவர்கள்.
2. எது சரி, எது தவறு என்று சிந்திக்கின்ற ஆற்றல் வாய்ந்தவர்கள்.
3. தனக்கு மட்டும் நன்மை அளிக்கக்கூடிய செயல்களை ஒதுக்கி மக்கள் நலனின் அக்கறை செலுத்துபவர்கள்.
4. அரிதாகச் சில இடங்களில் உணர்வுப்பூர்வமாகச் சிந்தித்துத் தவறான முடிவை எடுப்பவர்கள்.

சண்பகவல்லிதேவி எனும் நாவல் பாண்டியர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே நடந்த ஒரு போர்ச் செய்தியைக் கூறுவதாக அமைந்த வரலாற்று நாவலாகும். இந்நாவலில் மூன்று பெண்கதை மாந்தர்கள் படைக்கப்பெற்றுள்ளனர். குழுக் குழுவாக வரும் குறிப்பிடத்தக்க வீரர்களையும் சேர்த்து 23 ஆண்கதை மாந்தர்கள் படைக்கப்பெற்றுள்ளனர் எனலாம். இக்கதை மாந்தர்கள் பற்றிய விவரம் கீழ்வருமாறு :



பாண்டிய நாட்டில் இஸ்லாமிய மதப் பிரச்சாரம் செய்த நால்வரில் மூவர், மன்னன் விக்கிரமபாண்டியன் ஆணையினால் கொல்லப்பட்டனர். இச்செய்தியறிந்த இஸ்லாமியர் படையெடுத்து வந்து பாண்டியர்களை வீழ்த்துகின்றனர். இப்போரின் விளைவாகப் பாண்டிய அரசிளஞ்செல்வி சண்பகவல்லிக்கும் இஸ்லாமியப் படைத்தலைவன் வஜீர் அப்பாஸ்க்கும் இடையில்

மோதல் ஏற்படுகிறது. மோதலிலிருந்து காதல் பிறக்கிறது. இந்நிலையிலான சண்பகவல்லியின் மனநிலையை,

> *கல்மேடையொன்றில் அமர்ந்து தன் சிந்தனை முழுவதையும் ஒரே வழி செலுத்தி, தன் 'கடமை' என்று உன்னி ஊட்டி வளர்த்த உணர்ச்சிக்கும், காதலுக்கும் இடையில் போராடினாள்*

என்று அம்மையார் படைத்துள்ளார். அப்பாஸிடம் கொண்ட காதலால் அவனுக்காக மதம் மாறுகிறாள். தன் பெயரைச் சலீமா என்று மாற்றிக் கொள்கிறாள். தன் குழந்தைக்குத் தன் தந்தையின் பெயரைச் சூட்ட விரும்பியவள் மாமாவும், கணவனும் மறுக்காமல் மறுத்ததால் தான்மட்டும் அழகேந்திரா என அழைக்கிறாள். இது தொடர்பான அம்மையாரின் படைப்புப் பகுதி வருமாறு :

> *அவள் விருப்பப்படியே அவள் அழைக்கட்டும், நாம் குழந்தைக்கு எங்கள் குலத்தோன்றல் ஹாரூன் அல்ரஷீத் பாதுஷா அவர்களின் பெயரையே வைப்போம்.*
>
> *பாங்குச்சொல்லி முகமதுர் ரஷீத்பே என்று எல்லாரும் அழைத்தனர்.*
>
> *"என் கண்ணே, அழகேந்திரா"*

என அவள் கண்கள் கலங்கியது.

அதாவது நாவல் தொடக்கத்தில் படைக்கப்பெற்ற சண்பகவல்லிக்கும் நாவல் இறுதியில் பெயர் மாற்றத்திற்குப் பின்னர்ப் படைக்கப் பெற்றுள்ள சலீமாவிற்கும் இடையிலான முரண்பாடுகளை மிகுதியாகவே காணமுடிகிறது. சண்பகவல்லி என்ற பெண் கதைமாந்தரின் வழி அம்மையார் படைத்தளிக்கும் பெண்மை நலனைக் கீழ் வருமாறு குறிப்பிடலாம்.

- யானை ஏற்றம், குதிரை ஏற்றம், போர்ப் பயிற்சி கற்றவள்.
- தந்தை போருக்குச் செல்லும்போது அரசியல் விஷயங்களை எல்லாம் கவனித்துக் கொள்பவள்.
- எவ்வளவு இனியதாய், சிறப்பாயிருப்பினும் மதமாற்றத்தை இவள் விரும்பவில்லை. மூதாதையர்களின் மார்க்கத்தைக் கைவிட முடியாது என்று கூறும் தெளிவுமிக்கவள்.

- திக்கற்ற நிலையிலிருப்பவர்களுக்கு இரங்கி உதவி செய்பவள்.
- பகைவர்களைக் கடுமையாக எதிர்ப்பவள்.
- போரில் தன் தந்தையைக் கொன்றவனைப் பழிவாங்கத் துடிப்பவள்.
- போர்க்களத்திற்கு, மயானபூமிக்கு இரவு நேரத்தில் சென்றுவரும் உள்ள உறுதிமிக்கவள்.
- போர்க்களத்தில் மரணப்பிடியிலிருந்த பகைவனைத் தந்தையின் அறிவுறுத்தலுக்கிணங்கக் காப்பாற்றும் இரக்கக் குணம் வாயந்தவள்.
- ஆண் வேடமிட்டு முஸ்லிம் படைத்தலைவன் வஜீர் அப்பாஸிடம் தன் பலம் உள்ளவரை எதிர்த்து நின்று போரிட்டவள்.

இவ்வாறு பெண் எவ்வளவுதான் திறமைவாய்ந்தவளாகத் திகழ்ந்தாலும் சமூக வழக்கங்கள் அவளை ஆணுக்குக் கட்டுப்பட்டவளாக மாற்றும் பெண் நிலையைச் சண்பகவல்லி, சலீமாவாக மாற்றம் பெறுவதன்வழி அம்மையார் தெளிவாக்கி விடுகின்றார்.

கட்டுரைகள் வழிக் காணலாகும் பெண் நலம்

காதலா? கடமையா? என்ற நூலின் பிற்பகுதியில் ஜுனைதா பேகம் அம்மையாரின் பதினான்கு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இவை அனைத்தும் பழம்பெரும் இதழ்களான நூருல் இஸ்லாம், பிறை, ஷாஜஹான், செம்பிறை, நவயுவன் போன்றவற்றில் வெளிவந்துள்ளன. இக்கட்டுரைகளை இருவகையாகப் பகுத்துக் கூறலாம்.

1. இஸ்லாம் சமயத்தோடு பெண்களை மையப்படுத்தும் கட்டுரைகள்.
2. பொதுவான கட்டுரைகள்.

பதினான்கு கட்டுரைகளில் 5 கட்டுரைகள் பொதுவான நிலையில் அமைந்துள்ளன. அழகிய முன்மாதிரி என்ற கட்டுரை நபிகளின் வாழ்வை முன்மாதிரியாக எடுத்துக்கொண்டு வாழ்ந்தவர்களை எடுத்துக்காட்டி மற்றவர்களும் அவ்வழியில் வாழ வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. அல்லாஹ்வின் தூதர் அவதரித்த திருநாள் என்ற கட்டுரை அல்லாஹ்வின் தூதர்

முகம்மது நபி அவர்கள் பிறந்த நாளில் செய்ய வேண்டிய கடமைகளைச் சுட்டிக்காட்டுவதாக அமைந்துள்ளது. மண்ணில் மறைவது சில்லடியா? என்ற கட்டுரை நாகூரையும் அங்குள்ள சில்லடி என்ற பகுதியின் பெருமைகளையும் எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது. கர்பலாயுத்தம் என்ற கட்டுரை கர்பலா பாலைவனத்தில் நிகழ்ந்த போர்ச் செய்தியைக் கூறுவதாக அமைந்துள்ளது. இசை, சாதி, சமய வேற்றுமை இல்லாதது, நெஞ்சத்தை உருக்கவல்லது என்பன போன்ற இசையின் தன்மையை எடுத்துக் கூறுவதாக இசையின் இன்பம் என்ற கட்டுரை அமைந்துள்ளது.

இஸ்லாம் சமயத்தோடு பெண்களை மையப் படுத்துவனவாக ஒன்பது கட்டுரைகள் அமைந்துள்ளன. இந்த ஒன்பது கட்டுரைகள்வழிக் காணலாகும் பெண்மை நலனைக் கீழ்வரும் பகுதி விளக்குகிறது.

இஸ்லாமும் பெண்களும் என்ற கட்டுரையில் இஸ்லாம் சமயத்தில் பெண்களுக்கு அளிக்கப்பெற்றுள்ள உரிமைகள் தொடர்பாக விளக்கப்பெற்றுள்ளது. அவை,

1. மறுமண உரிமை
2. மண மறுப்புரிமை
3. சொத்துரிமை

மண மறுப்புரிமையின் வழியாகப் பெண்கள் தங்களுக்கு விருப்பமில்லாத ஒருவரை மணந்துகொள்ளத் தேவையில்லை. இது தொடர்பான தன் கருத்தைத் திருமணத்தை நடத்திவைக்கும் நீதிபதியிடம் முறையிடலாம். அதே போல் சொத்துரிமையின் வழித் தனக்குக் கிடைக்கும் சொத்தைத் தனக்கு விருப்பமான வழியில் செலவிடலாம்; மற்றவர்க்கு அதில் உரிமையில்லை. திருமணத்திற்குப்பின் கணவன் பெயரோடு தன் பெயரை இணைத்துக் கொள்ளத் தேவையில்லை. இவ்வாறு இஸ்லாமியச் சட்டம் வழிப் பெண்களுக்கு உரிமைகள் அளிக்கப் பெற்றுள்ளன என்பது இக்கட்டுரையில் விளக்கப்பெற்றுள்ளது.

ஒருவன் ஒருத்தியுடன் வாழ்வதே அறம் என்று வள்ளுவமும், இஸ்லாமும் வலியுறுத்துகின்றன. இஸ்லாமும் பலதாரமணமும் என்ற இக்கட்டுரையானது பெண்ணானவள் இரக்கம், மென்மை, உருக்கம், அடக்கம், பொறுமை, தியாகம், தொண்டு என்பவற்றை இயல்பாக உடையவள் என்பதை விளக்கி அவள் தன் கணவன் மற்றொரு பெண்ணுடன் பழகுவதை விரும்புவதில்லை.

சிற்றின்பம் இல்லறத்தின் கூறுதானே தவிர அதுவே வாழ்க்கை நோக்கமல்ல என்பவற்றை விளக்குகிறது. கணவன் மற்றொருத்தியிடம் அன்பு செலுத்துகிறான் என்ற எண்ணம் பெண்ணைப் பேய்க்குணமுடையவளாக்குகிறது; சந்தேகம் வாழ்வைக் கெடுக்கிறது என்பனவற்றையும் விளக்குகிறது.

பெண்கள் சினிமா பார்க்கலாமா? என்ற இக்கட்டுரையானது வினாவிற்கு விடையளிக்கும் முறையில் திரைப்படத்தால் ஏற்படும் குறைகளைச் சுட்டிக்காட்டி வேண்டாம் என்று மறுக்கிறது. பின்னர் ஆண், பெண் சமத்துவத்தைக் கூறிப் பார்க்கலாம் என்கிறது. இறுதியாக இது மார்க்கக் கலைஞரால்தான் முடிவுகாண இயலும் என்று மார்க்கக் கலைஞரிடம் பொறுப்பை ஒப்புவித்துவிடுகிறது.

1. கூடா ஒழுக்கத்தைத் தருமானால்
2. ஒழுக்கத்தைப் பாதிக்குமானால்
3. குடும்பத்தின் அமைதி கெடுமானால்
4. அந்நிய ஆடவருடன் செல்லும் துணிவைத் தருமானால்
5. சின்னஞ்சிறு குழந்தைகளைத் தனியே வீட்டில் போட்டுவிட்டுப் போகும் அளவுக்குச் சினிமாபித்து தலைக்கேறுமானால்
6. பெண்களைக் காமப்பொருளாகக் கண்டுகளிக்கும் கயவர்களாக்குமானால் நன்மை ஓரளவு இருப்பினும் இது வருத்தத்திற்குரிய நிலை மட்டுமல்ல முஸ்லிம் இனத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாகவும் அமையும் என்கிறது.

ஆனால் பெண்கள் சினிமா பார்த்தல் ஆகுமா? என்றால் ஆகும். ஏனென்றால் ஆண்மகனுக்கு ஆகும் என்றால் பெண்மகளுக்கும் ஆகும். ஆண், பெண் கடமைகள் வேறுவேறாக இருந்தாலும் நீதி ஒன்றாகத்தான் இருத்தல் வேண்டும். நல்ல சினிமாவை ஒழிந்த நேரங்களில் போய்ப் பார்ப்பது குற்றமில்லை. இதற்காக அத்துமீறி இஸ்லாத்திற்கு இழிவை உண்டுபண்ணுதல் ஆகாது

என்பவைதாம் பேகம் அம்மையாரின் கருத்தாக அமைகின்றன.

பெண்களும் சமையலும் எனும் கட்டுரையில் ஆண்மகனும் சரி, செல்வம்படைத்த பெண்களும் சரி அடுப்பூதும் தொழிலின்

மேன்மையை அறியாமல் இருக்கின்றனர் என்பதைச் சுட்டி, இந் நிலை மாறவேண்டும் எனும் வகையில் கீழ்வரும் கருத்துக்களைக் குறித்துள்ளார்.

1. சமையற் தொழிலை உயர்வாகக் கருதவேண்டும்.
2. தங்களுக்கு அளிக்கப்பெற்ற தொழிற்சாலையாக நினைக்க வேண்டும்.
3. உயிர்வாழ இன்றியமையாத உணவைக் குடும்பத்தினர்க்கும் பிறர்க்கும் பதமாகச் செய்தளிக்க வேண்டும்.

அதே நேரத்தில் ஆண்களும் பெண்களைச் சமையற்காரியாகவும், பிள்ளை பெறும் இயந்திரமாகவும் தம் தேவையைப் பூர்த்தி செய்யும் தேவைப் பொருளாகவும் எண்ணக்கூடாது என்பவையும் அம்மையாரால் வலியுறுத்தப்பெற்றுள்ளன. ஆண், பெண் கடமைகளும் உரிமைகளும் மாறுபட்டவைதாம். அதனால் பெண்ணை அடிமைப்படுத்தக்கூடாது என்று ஆண்களுக்கும் அதேபோல் இலட்சியக் கணவர்களை மனைவிகள் தொழலாம் என்று பெண்களுக்கும் இக்கட்டுரை அறிவுறுத்தும் வகையிலும் அமைந்துள்ளது.

இஸ்லாமியப் பெண்களின் கல்வி மிகவும் தாழ்ந்த கீழ்நிலையில் உள்ளது என்பதைக் குறிக்கும் 'பெண்கல்வி' எனும் கட்டுரையில், அதற்கான காரணமாகக் கீழ்வருவனவற்றை அம்மையார் குறித்துள்ளார்.

1. பெற்றோர் அனுமதிப்பதில்லை.
2. சிறு வயதிலேயே (12) மணமுடிக்கப்பெறுதல்.
3. கணவன், குழந்தைகளைக் கவனித்தல்.
4. பெண்கள் கல்விகற்றால் கற்புநெறியில் வழுவுவர் என்ற மனப்பான்மை.

மனவடக்கம், புலனடக்கம் ஆடவரைவிடப் பெண்களிடமே மிகுதியும் உண்டு. இப்படிப்பட்ட பெண்கள் 'கல்விகற்றால் தீய ஒழுக்கத்தில் ஈடுபடுகின்றனரென்னும்' கருத்து பெண்களின் மீது பொறாமையுள்ளவரின் கூற்றாகும் என்கிறார். கல்வி பெண்ணுக்குத் தீமை செய்யும் என்றால் ஆணுக்கும் தீமை செய்யவேண்டுமல்லவா? எனும் வினாவுடன் இக்கட்டுரையை முடித்துள்ளார் அம்மையார்.

அடிமைபோல் அடக்கி ஆண்டுவந்த அராபிய ஆண்களின் அகத்திமிரை' அடக்குவதற்காக இஸ்லாம் பெண்களுக்கு விவாகவிலக்கு உரிமை அளித்திருக்கிறது. இவ்வுரிமையை அரைகுறையாக அறிந்தவர்கள் தவறாகப் பயன்படுத்துகின்றனர்.

தக்க காரணமும், பொறுக்க இயலாத் துன்பமும் ஏற்பட்டாலொழிய மணவிலக்கு தகாதது என்று 'முஸ்லிம் பெண்மணிகளும் விவாக விலக்கும்' எனும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

உம்மூல் மூமினின் ஆயிஷாசித்திகா முஸ்லிம்களுக்குத் தாயாராகக் கருதப்பெறுகிறார். இவர் அக்காலத்தில் அரபு நாட்டில் கல்வி அறிவுபெற்ற பெண்மணியாவார். கிலாபத் ஆட்சியில் அரசியலில் பங்குபெற்றார். இவரை அடுத்து சூபியான ராபியத்துல் அதவியா, ரஜியா, நூர்ஜஹான், ஜெய்னம்பு, ஜுபைதா காத்தூன், பாத்திமா ஜின்னாஹ் போன்று கல்வியில் சிறந்தவர்களைப் பற்றிய சிறப்பான செய்திகளை ஓரிரு வரிகளால் எடுத்துக்காட்டி உள்ளார். இச்சான்றுகளைத் தொடர்ந்து உரிமை என்ற பெயரால் பெண்கள் பேயாட்டம் ஆடும் நிலை உள்ளது, ஒழுக்கமே சிறந்தது என வாழவேண்டும் என அறிவுறுத்தும் வகையில் பாராளப்பிறந்தவள் பேயாட்டம் போடுவதா? என்ற கட்டுரையை அமைத்துள்ளார்.

அறச்செல்வி ராபியா என்ற கட்டுரை ராபியாவைப் பற்றிய வரலாறாகும். ராபியா பிறந்தது முதல் இறப்புவரையில் ஆன்மீகத்துறையில் அவர் கொண்ட ஈடுபாட்டை விளக்குவதாக அமைந்துள்ளது.

அன்னை என்ற கட்டுரையானது அன்னையின் சிறப்புகளை எடுத்துக்கூறி ஆண்மகனைப் பெற்ற தாயாயினும் சரி பெண் மகளைப் பெற்றவளாயினும் சரி அவர்களை வளர்ப்பதற்குரிய இடர்ப்பாடுகளை விளக்குகிறார். ஆனால் பிள்ளைகள் வளர்ந்ததும் அவற்றை மறந்து ஏதோ வானத்திலிருந்து குதித்து வந்தவர்களைப் போல எண்ணுவது தவறாகும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

நாடகத்தின்வழிக் காணலாகும் பெண் நலம்

இந்து முஸ்லிம்கள் ஒன்றுபட்டு நடத்திய உரிமைப் போரைப் பற்றியும், பெண் உள்ளத்தின் ஆழத்தையும், வன்மையையும் திண்மையையும்,

உறுதியையும், சிறப்பியல்புகளையும் விவரித்துக் கூறுகிறது இச்சிறுநூல்

என்று பெண் உள்ளம் என்ற நாடகத்தின் முன்னுரையில் அம்மையார் குறிப்பிட்டுள்ளதன் மூலம் பெண்மை பற்றிய அவரது சிந்தனையை அறியமுடிகின்றது. ஜுனைதாபேகம் அம்மையார் எழுதிய பெண் உள்ளம் அல்லது சுதந்திர உதயம் என்ற நாடகம் 8 காட்சிகளாக அமைந்துள்ளது. இது ஒரு சரித்திர நிகழ்வைக் கூறுவதாகப் படைக்கப்பெற்றுள்ளது. இந்து முஸ்லிம் வேறுபாடு கருதாமல் அனைவரும் ஒன்றுபட்டு ஆங்கிலேயரை நாட்டைவிட்டு விரட்டிய உரிமைப் போர் பற்றியதாக அமைந்துள்ளது. இந்நாடகத்தில் இடம்பெற்றுள்ள கதைமாந்தர்களைக் கீழ்வருமாறு பகுத்துக் கூறலாம்.

கதைமாந்தர்கள்

ஆண் கதைமாந்தர்	பெண்கதைமாந்தர்
1. நானாசாஹிப் (மராட்டிய மன்னன்)	1. கமல குமாரி
2. அசனுல்லா (மந்திரி)	2. ஜான்சியின் மகாராணி இலட்சுமிபாய்
3. பாபாசாஹிப்	3. ஷாபிலி (நானாவின் தங்கை)
4. பாலாசாஹிப்	
5. போர் வீரர்கள்	

இந்நாடகத்தில் மூன்று பெண் கதை மாந்தர்கள் படைக்கப் பெற்றுள்ளனர். நான்கு ஆண்கதை மாந்தர்கள் மற்றும் வீரர்களும் படைக்கப் பெற்றுள்ளனர். ஆங்கிலேயரை எதிர்த்துப் போராட மராட்டிய மன்னன் நானாசாஹிபின் தலைமையில் ஆலோசனை சபை கூடுகிறது. அக்கூட்டத்தில் ராணி இலட்சுமி பாய், நானாசாஹிபின் தங்கை ஷாபிலி ஆகியோர் கலந்து கொள்கின்றனர். கான்பூர், ஜான்சி ஆகிய இரு இடங்களும் இறுதியில் விடுதலை பெறுகின்றன.

வெள்ளையர்களுக்கு அடிபணிந்து வாழ்வதைவிட
நாம் உயிர் விடுவதே சிறந்தது

என்ற இலட்சுமிபாயின் பேச்சும், ஷாபிலியின் வீரப்பேச்சும் எல்லோருக்கும் உணர்ச்சியூட்டுவதாக அமைந்திருந்தன. அதே போல் மந்திரி அசனுல்லாவைக் காதலிக்கும் கமலகுமாரி போர்க் களத்திற்கே சென்று வீரர்கள் சோர்ந்து போகும்போதெல்லாம்

ஊக்கமளிக்கும் விதத்தில் சுதந்திரப் பாட்டைப் பாடுகிறாள். வீரர்களை அவளது பேச்சால் உற்சாகப்படுத்துகிறாள். இவளது பாட்டும், பேச்சும் வீரர்களின் கண்களை நெருப்பாக மின்னச் செய்கின்றன. ஆண்வேடத்தில் போர்செய்கிறாள். இறுதியில் ஒரு துப்பாக்கிக் கட்டையால் தாக்கப்பட்டுக் கீழே விழுந்து உணர்விழக்கிறாள்.

அசனுல்லா நாட்டு விடுதலைக்குரிய போரில் ஈடுபடுவதால் காதலி கமலகுமாரியை மணம்செய்ய மறுக்கிறான். அவளோ இருவருமே சேர்ந்து போரில் பங்கு பெறலாம் என்கிறாள். நாடோ, இனமோ சமயவேறுபாட்டுத் திருமணங்களை ஆதரிப்பதில்லை. ஆண் பெண் ஆசைகள் உயர்ந்த நோக்கம் அல்ல. பிரம்மச்சரியம் உன்னத இலட்சியம் மட்டுமல்ல உயர்ந்த இலட்சியத்தின் ஒரு நிலை என்று சிந்தித்து முடிவு செய்கிறாள். ஆனால் அசனுல்லா வந்து பேசும்போது அமைதியாய் இருப்பது அவனை ஏற்கும் அல்லது தவிர்க்கும் மனநிலையா? என்பதை அறிய முடியவில்லை.

சண்பகவல்லிதேவி நாவலிலும், பெண் உள்ளம் நாடகத்திலும் வரும் முதன்மைப் பெண் கதை மாந்தர்களான சண்பகவல்லியும், கமலகுமாரியும் ஓரளவு ஒத்த தன்மையுடையவர்களாகவே படைக்கப்பெற்றுள்ளனர். அவர்களுக்கிடையில் நிலவும் ஒற்றுமைகளாகக் கீழ்வருவனவற்றைக் கருதலாம்.

1. வீரம் மிக்கவர்கள்
2. ஆண் வேடமிட்டுப் போர்க்களத்தில் போரிடுபவர்கள்.
3. இஸ்லாமியச் சமயத்தைச் சேர்ந்தவர்களைக் காதலிக்கும் இந்தப் பெண் கதைமாந்தர்கள் இந்து சமயத்தைச் சேர்ந்தவர்களாகவும், மதமாற்ற உணர்வுடையவர் களாகவும் திகழ்கின்றனர்.

பேகம் அம்மையாரின் இலக்கியப் படைப்பாக்க முறை

ஜுனைதா பேகம் அம்மையாரின் படைப்புகளில் பெரும் பாலும் வரலாற்றுச் செய்திகள் இடம்பெற்றுள்ளன. அதுவும் சில போர்ச்செய்திகளாகவும், சில அரச குடும்பத்தினரைப் பற்றிய செய்திகளாகவும் இருக்கின்றன. இஸ்லாமியச் சமயம் தொடர்பான கருத்துக்களும் பெரும்பான்மை இடம்பெற்றுள்ளன. இவரது படைப்புகளில் தந்தை-மகள் உறவு நிலையை மிகுதியாகக் காணமுடிகிறது. 'தாய்' உறவு பெரும்பாலும் இறப்பிற்குரிய பாத்திரமாகவே உள்ளது. மகிழம்பூ நாவலின் தொடக்க

அத்தியாயங்களில் ஒரு பகுதியில் தாய், தந்தை ஒருவர் பின் ஒருவரின் இறப்பும் சுட்டப் பெறுகின்றது. இந்நாவலில் மட்டும் சிற்றன்னை (சித்தி) மாந்தர் படைக்கப் பெற்றுள்ளார். இவரது படைப்பில் மிகுதியும் காதல் நிலை பேசப்பெற்றாலும் பாலியல் சீர்கேடுகள் எதுவும் பேசப்பெறவில்லை என்பது சிறப்புக்குரிய தாகும். இவரது படைப்புகள்சில இரண்டு தலைப்புகளில் அமைந்துள்ளன. சான்றாக 1. பெண் உள்ளம் அல்லது சுதந்திர உதயம், 2. சண்பகவல்லிதேவி அல்லது தென்நாடுபோந்த அப்பாஸியகுலத் தோன்றல் போன்றவற்றைக் குறிக்கலாம். நாவல்களில் அத்தியாயங்களுக்குப் பெயரிடும் முறையையும் இவரது இரு நாவல்களில் காணமுடிகிறது. சான்றாக ஒரு சிறு குடும்பம், வனமாளிகை, மாயாபுரி.....(காதலா? கடமையா?). நிலமகளோ, கடமைவீரன், விடுதலை (மகிழம்பூ) என்பனவற்றைக் குறிக்கலாம்.

அம்மையாரின் படைப்புகளில் காதலா? கடமையா?, சண்பகவல்லி தேவி, மகிழம்பூ ஆகியவற்றின் கதை சொல்லும் முறையானது நாவல் வாசிப்பவர்களை வாசிப்பவர் என்ற நிலையிலிருந்து கதை கேட்பவர் என்ற நிலைக்கு மாற்றி இட்டுச் செல்கிறது. சான்று :

> *நாம் கதையைத் தொடர்ந்து செல்லுதற்கு முன் மாயாபுரியைப் பற்றிச் சிறிது அறிந்து கொள்ளுதல் கதா நிகழ்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப் படுவதால் அதை (ப. 29)*
>
> *அவை நமக்கு வேண்டற்பாலனவல்ல (ப. 113)*

நாடகப் படைப்பில் கதைமாந்தர்களுக்கு இடையே நிகழும் வழக்கமான 'உரையாடல் தன்மை' இடம்பெற்றுள்ளது. இவரது படைப்புகளில் இஸ்லாமியச் சமய 'நபிகளின்' சிந்தனைகளைக் கூறினாலும் திருக்குரானிலிருந்து அதிகமாக மேற்கோள்கள் எடுத்தாளப்பெறவில்லை. ஆனால் தமிழிலக்கியங்களிலிருந்து அதுவும் திருக்குறளிலிருந்து அதிகமாக மேற்கோள்கள் எடுத்தாளப்பெற்றுள்ளன. மொழிநடையில் ஒருசில பிற மொழிச் சொற்கள் கையாளப்பெற்று இருந்தாலும் கதையோட்டத்திற்கு அவை தடையில்லாமல் அமைந்துள்ளன. அம்மையார் தம் படைப்புகளில் சிறு சிறு தொடர்களைப் பயன்படுத்துவது மொழிநடைக்குக் கூடுதல் சிறப்பாக அமைகின்றது.

அவருடைய படைப்புகளில் அவர் எடுத்தாளும் மேற்கோள்களைக் கண்டால் பெரும் வியப்பளிக்கிறது. (சங்க

இலக்கியம், திருக்குறள், பழமொழி, நளவெண்பா, ஆழ்வார் பாடல்கள், காப்பியங்கள், பட்டினத்தடிகளின் பாடல்கள், சீறாப்புராணம், வண்ணக்களஞ்சிய புலவர்கள் பாடிய காப்பியங்கள், இஸ்லாமிய வரலாற்று நூல்கள், திருக்குர்ஆன், பாரதியார் கவிதைகள்). இவ்வளவு நூல்களையும் அவர் வாசித்திருக்கிறார் என்பது வியப்பு மட்டுமல்ல அவரது அறிவுக்கூர்மையையும் நமக்குப் புலப்படுத்துகின்றன. பாரதியார் இறக்கும்போது அம்மையாருக்கு வயது நான்கு. பாரதியாரின் கவிதைகளை அம்மையார் வாசித்துள்ளார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

முடிவுரை

ஜனைதா பேகம் அம்மையார் இளவயதில் கணவனை இழந்து, நான்கு குழந்தைகளைத் தனியாக நின்று வளர்த்துத் தான் பெறமுடியாத கல்வியை அவர்கள் பெறவைத்தது என்பது சாதாரணச் செயலல்ல. அதே நேரத்தில் தன் எழுத்துப் பணியையும் விடாமல் செய்திருக்கிறார்.

காதலா? கடமையா? என்ற நாவலில் வரும் பெண்கதை மாந்தர்கள் அனைவருமே ஒவ்வொரு விதத்தில் உறுதி உள்ளம் படைத்தவர்களாகவே, பிறர் நலனை விழைபவர்களாகவே படைக்கப்பெற்றுள்ளனர். சண்பகவல்லிதேவி என்ற நாவலில் வரும் நாயகியும், நாவலின் இறுதிப் பகுதியை நீக்கிவிட்டுப் பார்ப்போமானால் வீரம்மிக்க, போர்க்குணம் நிறைந்தவளாகவே படைக்கப் பெற்றுள்ளாள். இதேபோன்றே பெண் உள்ளம் என்ற நாடகத்திலும் கமலகுமாரி என்ற பெண்கதைமாந்தர் படைக்கப் பெற்றுள்ளார். இஸ்லாமும் பெண்களும் என்ற கட்டுரைத் தொகுப்பில் உள்ள பெண்மை நலன்சார்ந்த கட்டுரைகளில் பெண்களின் சிறப்புக்களைக் கூறி அவளை உயர்த்தியே காட்டுகிறார். இஸ்லாம், பெண்களுக்கு அளித்திருக்கும் உரிமைகள் பற்றியும் அவளின் சிறந்த குணங்களையும் கூறிப் பெண்மையை உயர்த்தியே காட்டுகிறார்.

ஜனைதா பேகம் அம்மையார் எழுதிய காலச்சூழல், அவரது சமயக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவரது படைப்புகளை அணுகினால் அவர் மிக உயர்ந்த புரட்சிகரச் சிந்தனையாளராகவும், மனவலிமை மிக்கவராகவும் இருந்திருப்பதை அவருடைய படைப்புகளில் பெண் கதைமாந்தர்கள் படைக்கப் பெற்றுள்ளதன் வழியும்

அவரது சொந்த வாழ்க்கை அனுபவங்கள் வழியும் அறியமுடிகிறது.

குறிப்பு

1. தமிழ் மரபு அறக்கட்டளையினர் ஜுனைதா பேகம் அம்மையாரின் படைப்புகள் சிலவற்றை www.infitt.org/thf என்ற இணையத்தில் வெளியிட்டுள்ளனர். அதில் மகிழம்பூ, காதலா? கடமையா? நாவல்கள், நேர்காணல், அறிமுகம் ஆகியவை இடம்பெற்றுள்ளன. மகிழம்பூ நாவல் 26 அத்தியாயங்களாகப் பகுக்கப்பெற்றுள்ளது. ஆனால் 12வது அத்தியாயத்தின் பாதிவரை மட்டுமே இணையத்தளத்தில் வெளியிடப்பெற்றுள்ளது.
2. சித்தி ஜுனைதா பேகம், காதலா? கடமையா? 2003 (இ.ப.) ஸ்நேகா வெளியீடு, இராயப்பேட்டை, சென்னை-600 014.
3. சித்தி ஜுனைதா பேகம், பெண் உள்ளம்.

கே.பி. சுந்தராம்பாள்

பு. பாலாஜி

காலங்காலமாக மனித வாழ்வு வளம் நோக்கி இயங்குகிறது. பல துறை அறிவால் நாடு வளமை பெற்று வந்தாலும் தனிமனிதனின் ஆளுமைத் திறன் நாட்டின் வளர்ச்சிக்கு மிக இன்றியமையாதது. பெண்ணினம் மிகப் பொறுப்புடன் செயல்படும் தன்மை பெற்றது. இருபதாம் நூற்றாண்டில் சுதந்திரம் வேண்டிப் போராடிய இந்திய மக்களில் ஒருவராகக் கே.பி. சுந்தராம்பாள் அம்மையார் திகழ்ந்தார். தம் கலையுணர்வு வழித் தேசியவுணர்வையூட்டி இந்திய மக்களின் மனங்களைச் செம்மைப்படுத்தியவர் இவர். நாடகத்துறை, திரைப்படத்துறை, இசைத்துறை, அரசியல் துறை எனப் பல்துறைகளில் சாதனை படைத்த அம்மையாரின் பங்களிப்பை இக்கட்டுரை நோக்குகிறது.

கே.பி. சுந்தராம்பாள் கிலக ஆண்டு ஐப்பசி (1908 அக்டோபர்) மாதம் 11ஆம் தேதி திங்கட்கிழமை பிறந்தார்.

குடும்பச்சூழல்

சுந்தராம்பாள் என்பது இவர் பெயர். கொடுமுடி என்பது பிறந்த ஊர். பாலாம்மாள் என்பது தாயின் பெயர். ஊர்ப்பெயரின் ஆங்கில முன் எழுத்தும், தாய் பெயரின் ஆங்கில முன் எழுத்தும் கொள்ளப்பட்டு இவர் கே.பி. சுந்தராம்பாள் என வழங்கப் பட்டார். தம்பி கனகசபாபதி, தங்கை சுப்பம்மாள் என இரு உடன்பிறப்புகள் பிறந்தனர். ஓரளவு நடுத்தர குடும்பமானது, குடும்பத் தலைவரின் இறப்பினால் மிகுந்த துன்பத்திற்கு உள்ளாயிற்று.

பாலாம்பாளுடன் பிறந்த சகோதரர்கள் சங்கமேஸ்வரர் மலைக்கொழுந்து, நடேசன் போன்றோர் தொடர்ந்து ஆதரவளித்து வந்தனர். பாலாம்பாள் குழந்தைகளைக் காப்பாற்ற வீட்டுவேலை செய்து, கிடைத்த வருமானத்தில் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார். குழந்தைகளைக் கொடுமுடி இலண்டன் மிஷன் பள்ளியில் சேர்த்துப் படிக்க வைத்தார். பசிக் கொடுமையால் படிப்பு ஏறவில்லை. பசியை மறக்கப் பள்ளியில்

விளையாடுவது சுந்தராம்பாளுக்கு விருப்பமாக இருந்தது. படிப்புத்தான் வராமல் இருந்ததே தவிர, இயல்பாக நன்றாகப் பாட்டு வந்தது. யாராவது பாடினால் அதைக் கவனித்து அது போலவே தானும் திரும்பப்பாடுவார். கோயிலின் பூசை நேரங்களில் பாடுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

வறுமைத் துயரின் விளிம்பில் இருந்த பாலாம்பாள், தன் பிள்ளைகளுடன் சாவதற்கு முடிவெடுத்து, குழந்தைகளை ஆற்றுக்குக் கூப்பிட்டார். "எதற்கம்மா, எங்களை ஆற்றுக்குக் கூப்பிடுகிறாய், குளிப்பதற்கா?'' என்று கேட்டபொழுது, அந்தத்தாய் துக்கம் தாங்காமல் "என் அருமைச் செல்வங்களே! உங்கள் பசித்த வயிற்றுக்குச் சோறுபோட இந்தப் பாழும் ஜன்மத்துக்கு ஒரு வழியுமில்லை. வறுமையின் கொடுமையை என்னால் தாங்கவும் முடியவில்லை. உங்கள் மூவரையும் ஆற்று வெள்ளத்தில் தள்ளிவிட்டு, நானும் உங்களுடன் உயிரைவிடப் போகிறேன்" என்று கதறிவிட்டாள்.

அதைக் கேட்ட பெரிய பெண் குழந்தை, அம்மாவைத் தடுத்து நிறுத்தி வீட்டுக்குத் திரும்பி அழைத்து வந்துவிட்டாள். அதன் பின்பு கரூர் சென்று வாழ்க்கையைத் தொடங்கினார்கள் (கே.பி. சுந்தராம்பாள், வரலாறு, ப.10)

புதுவாழ்வு

வாழ்க்கையின் ஒருபக்கம் மூடிக் கொண்டால், மறுபக்கம் திறக்கும் என்பது போல 1914ஆம் ஆண்டு, 'கரூர் தாலுகா அலுவலகத்திற்கு முகாம் வந்திருந்த காவல் துணை ஆணையர் ஆர்.எஸ். கிருஷ்ணசாமி ஐயர், சிறுமி சுந்தராம்பாளின் இசையைத் தற்செயலாகக் கேட்டார். உடனே ரூ.50 அன்பளிப்பாக வழங்கினார். அத்துடன் ஆண்டிப்பட்டி ஜமீன்தாரிடம் சிறுமியின் இசைத் திறம் பற்றி எடுத்துரைத்தார். இதனால் ஜமீன்தாரிடமிருந்து, சிறுமி சுந்தராம்பாளுக்கு அழைப்பு வந்தது. கந்தல் பாவாடை, வாரிச் செருகிய கூந்தல் எனும் கோலத்தில் வந்த சிறுமியை ஜமீன்தார் அன்புடன் வரவேற்றுச் சபையில் தமது மடியில் அமர்த்திக் கொண்டார். பின்னர், ஆறு வயது சிறுமியின் அற்புதமான கானமழை பொழிந்தது. சுந்தராம்பாள் தனது வாழ்க்கையில் முதன் முதலாக ஒரு அவையில் நிகழ்த்திய முதல் நிகழ்ச்சியாகும் இது. இசையை நுகர்ந்த அன்பர்கள், வியந்து திகைத்தனர். ஜமீன்தார் ஒன்பது பவுன்களைச் சபையோர் முன்னிலையில் சிறுமிக்கு வெகுமதியாக அளித்தார். ஒருவாரம்

சுந்தராம்பாளை அடிக்கடி பாடச் சொல்லிக் கேட்டுவிட்டு, ஜமீன்தார், சிறுமிக்குப் புதுப்பாவாடை, நகைகள் முதலியவற்றைக் கொடுத்து அனுப்பினார்.

சமூக மதிப்பேற்றம்

ஜமீன்தாரிடம் இருந்து பெற்ற பரிசால், கரூரில் சுந்தராம்பாள் குடும்பத்திற்குச் சமூகத்தில் நல்ல மதிப்பு ஏற்பட்டது. இந்த நேரத்தில் கரூருக்கு வந்த வேலு நாயர்-ராஜாமணி அம்மாள் நாடகக் குழுவினர் நாடகங்களை நடத்தி வந்தனர்.

நாடக நடிப்பின் தொடக்கம்

வேலுநாயர், சங்கரதாஸ் சுவாமிகளின் சீடர். சுவாமிகளின் நாடகங்களில் அவருக்கு நல்ல பயிற்சி இருந்தது. அக்காலத்தில் இருந்த சிறந்த 'ராஜபார்ட்' நடிகர்களில் இவரும் ஒருவர். இக்குழு 'நல்ல தங்காள்' நடத்த விரும்பியது. நல்லதங்காள் துன்பம் தாங்காமல் தான்பெற்ற ஏழு குழந்தைகளைக் கிணற்றில் தள்ளும் துன்பக் காட்சியில் ஊரே அழுதுவிடும். இக்காட்சியில் நடிப்பதற்குக் குழந்தைகள் கிடைக்காமல் நெருக்கடி நிலையில் இருந்தது நாடகக் குழு. இதை அறிந்த கிருஷ்ணசாமி அய்யர், சுந்தராம்பாளை அக்குழுவில் சேர்த்துவிட்டார்.

நல்லதங்காளின் மூத்த பிள்ளையான ஞானசேகரன் வேடத்தைச் சிறுமி சுந்தராம்பாளுக்குக் கொடுக்கத் தீர்மானித்தனர். அதற்குக் காரணம் சுந்தராம்பாள் சிறுவயதில் ஆண்களுக்கான முகத் தோற்றத்துடன் இருந்ததுதான். சிறுமியும் அவ்வேடத்தை ஏற்று நடிக்கத் தொடங்கினார். "பசிக்குதே! வயிறு பசிக்குதே!" என்ற பாட்டை மிகக் கவர்ச்சியுடன்பாடி, பொது மக்களிடம் கைதட்டலைப் பெற்றார்.

இந்நாடகத்திற்குப் பிறகு 'கண்டிராஜா' என்னும் நாடகத்தில் உரலில் போட்டுத் தலை இடிக்கப்படும் பாத்திரத்தை ஏற்று நடித்துப் புகழ்பெற்றார் (மேலது, 11, 12).

கரூரில் நாடகத்தை ஒரு மாதத்தில் முடித்துக்கொண்டு வேலுநாயர் சேலத்திற்குப் போகத் தீர்மானித்தார். சுந்தராம்பாளை இராஜாமணி அம்மையார் அழைத்தார். தாய் பாலாம்பாள் விரும்பவில்லை. அந்தக் குழுவின் இசைக் கலைஞர் கோவிந்த ராஜுலு நாயுடு, தாம் சென்னைக்குப் போய்த் தொடர் வண்டிக்குப் பணம் அனுப்புவதாகவும் அங்கு வந்தால் நாடகத்தில்

சேர்த்துவிடுவதாகவும் ஆசைக் கனலை மூட்டிவிட்டார். இரண்டொரு நாடகங்களில் நடித்தவுடன் சுந்தராம்பாள் மனத்தில் நாடக ஆசை ஒட்டிக் கொண்டது. அதனால், அவர் நாயுடுவின் எண்ணத்திற்குக் தயங்காமல் தலையசைத்தார்.

சென்னை வாழ்க்கை

சுந்தராம்பாள் அந்த வயதில் அளவிலாத துணிச்சலுடன் இருந்தார். நாயுடுவிடமிருந்து ஐந்து ரூபாய் பணம் வந்ததும், எவரிடமும் சொல்லாமல் அணிந்திருந்த ஆடையுடன் சென்னைக்குத் தொடர் வண்டியில் புறப்பட்டார். அக்காலத்தில் வீட்டிற்குச் சொல்லாமல் நாடகத்தில் சேர்ந்தவர்கள் 99 விழுக்காட்டினராவர். தன்னந்தனியாய்ச் சென்னையை அடைந்த சுந்தராம்பாள் மௌண்ட் சாலை மன்னார் சாமி கோயில் தெருவில் இருந்த கோவிந்தராஜுலு நாயுடு வீட்டைத் தேடிக் கண்டு பிடித்தார். சம்பளமில்லாமல் ஒரு வேலைக்காரி கிடைத்த மகிழ்ச்சியில் இருந்தார் நாயுடு. அன்று முதல் வீட்டு வேலைகள் எல்லாம் சுந்தராம்பாள் தலையில் ஏறின.

சிறிது காலம் சென்ற பின்னர், நாயுடு போடுகிற சிறப்பு நாடகங்களுக்கெல்லாம் சென்று நடிக்கத் தொடங்கினார். இவரது குரலினிமையைக் கேட்ட (இரசிகர்கள்) பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்து புகழலாயினர். எனவே மளமளவென்று நாடக மேடையில் கே.பி. சுந்தராம்பாளுக்கு நல்ல வரவேற்பு ஏற்பட்டது. பணம் குவியலாயிற்று. உடனே நாயுடு எல்லாரிடமும் அவரைத் தனதுசொந்த மகள் என்று சொல்லி வந்தார்.

இதற்கிடையில் சுந்தராம்பாளைப் பற்றி ஓராண்டாகியும் எந்தத் தகவலும் கிடைக்காததால், பெண் உயிருடன் இருக்கிறாளா? இல்லையா? என்று மாரியம்மனிடம் பூ போட்டுக் கேட்டார் தாயார். இறந்துவிட்டதாகப் பதில் கிடைத்ததால் துக்கத்தில் மூழ்கி விட்டார்.

இச்சூழலில் புதுச்சேரியில் தாணுவம்மாள் என்பவர் ராஜபார்ட் வேடங்களில் தோன்றி நாடகங்களில் நடித்து வந்தார். இவர் நாடகங்களுக்குச் சுந்தராம்பாளும், நாயுடுவும் ஒப்பந்தம் செய்யப்பட்டனர்.

நாயுடு, சிறுமியை ஈவு இரக்கமில்லாமல் அடித்துக் கொடுமைப்படுத்துவதைப் பார்த்த தாணுவம்மாள், சுந்தராம்பாள் நாயுடுவின் மகளாக இருக்க மாட்டாள் என்பதை அறிந்துகொள்ள நாயுடு இல்லாத நேரம் பார்த்துச் சுந்தராம்பாளிடம் கேட்டார்.

அவள் தன் வரலாற்றைச் சொல்லவே இரக்க உள்ளம் கொண்ட தாணுவம்மாள் அவரிடம் தாயார் வீட்டு முகவரியை அறிந்துகொண்டு கரூர் சென்று, உண்மையை எடுத்துக்கூறினார். அன்றிரவு பாலாம்மாள், தன் சகோதரன் மலைக் கொழுந்து கவுண்டரை அழைத்துக்கொண்டு புதுச்சேரிக்குப் புறப்பட்டார். பெண்ணை ஊருக்கு அழைத்துக் கொண்டு போக வேண்டு மென்று மலைக்கொழுந்து, நாயுடுவிடம் கேட்டார். அதற்கு நாயுடு முதலில் மறுத்தார். "சுந்தராம்பாள் இல்லாமல், நாங்கள் இந்த இடத்தைவிட்டு நகர மாட்டோம்" என்று பாலாம்மாளும், மலைக் கொழுந்து கவுண்டரும் பிடிவாதமாகக் கூறவே, நாயுடு மனமின்றி ஒப்புக் கொண்டார். சுந்தராம்பாள் நாடகம் மூலம் சேர்த்த செல்வங்களையும் நகைகளையும் வாங்கிக் கொண்டு அனுப்பிவைத்தார்.

சுந்தராம்பாள் போய்விட்ட செய்தி அறிந்ததும் நாடக ஒப்பந்தக்காரர்கள் நாயுடுவிடம் மிகுந்த கோபங் கொண்டனர். சுந்தர்ராம்பாளின் பாட்டில் பொது மக்களுக்கு இருந்த ஈடுபாடுதான் இதற்குக் காரணம். நாயுடு ஒரு மகிழ்வுந்து எடுத்துக்கொண்டு சுந்தராம்பாளை மீண்டும் அழைத்து வர வேண்டும் என்ற எண்ணத்தில் புறப்பட்டார். மகிழ்வுந்து கடலூர் அடைந்தது. அங்குச் சுந்தராம்பாளும், அவரது தாய்மாமன், தாயாரும் விருத்தாசலம் வண்டிக்காகக் காத்திருந்தனர். தொலைவில் நாயுடுவையும் ஒப்பந்தக்காரரையும் பார்த்தவுடன் ஏன் மறுபடியும் சிக்கலில் மாட்டிக் கொள்ள வேண்டும் என்று புறப்படத் தயாராக இருந்த சிதம்பரம் வண்டியில் ஏறிவிட்டனர்.

இவர்கள் ஏறிய தொடர்வண்டிப் பெட்டியில் எதிர்ப்புறம் அமர்ந்திருந்த செல்வந்தர் சுந்தராம்பாளை அடையாளம் கண்டு கொண்டார். இவர்களைத் தம் வீட்டில் சில தினங்கள் தங்கிவிட்டுச் செல்லும்படி வேண்டிக் கொண்டார்.

நல்ல விருந்தும் தினமும் சிதம்பரம் கோயில் வழிபாடும் இவர்களுக்குக் கிடைக்கலாயின. இதற்குப் பதிலாகச் சுந்தராம்பாள் தனக்குத் தெரிந்த பாடல்களை எல்லாம் பாடி அச்செல்வந்தரை மகிழச் செய்தாள் இப்படி ஒரு வாரம் சென்ற பின்னர், அவர் சிறுமி சுந்தராம்பாளுக்கு இரண்டு மோதிரங்களைப் பரிசளித்தார். இவர்கள் எல்லோரும் கொடுமுடி போக, தானே பயணச்சீட்டு வாங்கிக் கொடுத்து வழியனுப்பி வைத்தார்.

கொடுமுடியை அடைந்த பின்னர், சுந்தராம்பாள் கருப்பாயி அம்மாள் நாடகக் குழுவில், சிறப்பு நாடகங்களில் நடித்து வந்தார்.

கொழும்புப் பயணம்

அக்காலத்தில் நாடக முகவர் சண்முகம் பிள்ளை பல நாடகக் குழுக்களை இலங்கைக்கு அழைத்துச் சென்று நாடகம் நடத்திச் செல்வம் சேர்த்து வந்தார். சுந்தராம்பாள், பாண்டிச்சேரியில் பாட்டின் மூலம் பெற்ற புகழ் இலங்கையை எட்டியது. சண்முகம்பிள்ளை அவர் முகவரியைத் தேடிப்பிடித்துக் கொடுமுடிக்கு வந்து சேர்ந்தார்.

சுந்தராம்பாளைக் கொழும்புக்கு வந்து நடிக்கும்படியும், எல்லாச் செலவும் போக மாதத்திற்கு ரூ.40 ஊதியம் தருவதாகவும், பிள்ளை கூறினார். வறுமையில் உழன்று கொண்டிருந்த பாலாம்பாள் மகளை அனுப்பிவைத்தார். 1917ஆம் ஆண்டு சுந்தராம்பாள் இலங்கைக்குச் சென்றார்.

சண்முகம் பிள்ளை ஏற்பாட்டின்படி கொழும்பு, ஜிந்துபிட்டி ஹாலில் தொடர்ந்து பல நாடகங்கள் நடைபெற்றன. பாலபார்ட் ஆன சுந்தராம்பாள் தனது நடிப்பின் வழி கொழும்பு வாழ் தமிழர்களை எளிதில் கவர்ந்து விட்டார். தொடர்ந்து இலங்கையின் பல பகுதிகளிலும் குறிப்பாகக் கொழும்பு, யாழ்ப்பாணம், திரிகோணமலை, மட்டக்களப்பு, கண்டி, மாத்தளை, கம்பளை, அட்டன், பதுளை, நுவரேலியா முதலிய இடங்களில் நடித்தார். சண்முகம்பிள்ளை தாராள குணம் படைத்தவர். நாடகத்தால் வருமானம் பெருகியதும் செலவு அதைவிட இரண்டு மடங்கானது. சுந்தராம்பாளுக்கு ஊதியம் வழங்குவதில் சிக்கல் தொடங்கியது. சுந்தராம்பாள் மூன்றாண்டு ஒப்பந்தத்தில் போயிருந்தார். ஒப்பந்தக்காரரின் பணி நெருக்கடியைத் தவிர்க்க எண்ணி இந்தியா திரும்ப எண்ணினார். அவரை அனுப்புவதில் பிள்ளைக்குச் சிறிதுகூட மனமில்லை. "உன்னால் நிறையச் செல்வம் சேர்த்தேன். மற்றவருக்கெல்லாம் தாராளமாய் வாரி இறைத்தேன். ஆனால், உனக்குத்தான் தகுந்தபடி ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது" என்று சொல்லி, அவரும் அவர் மனைவியும் ஒரு தட்டில் ரூபாயும் தங்கள் திருமணத்திற்கு வாங்கிய பட்டுப் புடவையையும் வைத்துச் சுந்தராம்பாளை இந்தியாவிற்கு வழியனுப்பி வைத்தனர்.

இந்தியா திரும்பியதும் (1920) தன்னை நாயுடுவிடம் இருந்து மீட்ட தாணுவம்மாள் நாடகக் குழுவில் மீண்டும்

நடிக்கத் தொடங்கினார். அப்போது சுந்தராம்பாளுக்கு வயது பன்னிரண்டு. தாணுவம்மாள் நடத்திய நாடகங்களில் அவர் ராஜபார்ட்டாகவும் இவர் ஸ்த்ரி பார்ட்டாகவும் நடித்து வந்தார். பிறகு அவர் பாலக்காடு, கோயமுத்தூர் முதலிய ஊர்களிலெல்லாம் சிறப்பு நாடகங்களில் நடித்து வந்தார்.

கே.பி. சுந்தராம்பாளின் இனிய பாடல்கள் புகழ்பெற்றுவருவதைக் கேள்விப்பட்ட வேலுநாயர் அவரைத் தம் குழுவில் நிரந்தரமாக அமர்த்திக்கொண்டார். நாயர் குழுவில் இரண்டாண்டு காலம் நடித்த பின் மீண்டும் சிறப்பு நாடகங்களில் ஈடுபடலானார். அது முதல் தமிழகத்தின் முன்னணி நாடகக் குழுக்கள் பலவற்றிலும் பங்குபெற்று நடிக்கத் தொடங்கினார். நாடறிந்த நடிகரானார். வள்ளி திருமணம், நந்தனார், நல்லதங்காள், கோவலன், ஞானசௌந்தரி, பவளக்கொடி, பாமாவிஜயம், கண்டிராஜா போன்ற அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த நாடகங்களில் முதன்மைப் பாத்திரம் ஏற்று நடிக்கத் தொடங்கினார்.

பதினைந்து வயதிற்குள் 'அயன் ஸ்திரிபார்ட்' நடிப்பிற்கான பதவிவுயர்வு நாடகவுலகில் யாருக்கும் இருந்ததில்லை.

கிட்டப்பா அறிமுகம்

சுந்தராம்பாள் இலங்கையில் முன்பு நடித்துக் கொண்டிருந்த காலக் கட்டத்தில் சிறுவன் கிட்டப்பாவும் இலங்கையில் நடித்துக் கொண்டிருந்தார். அங்கு இருவருக்கும் எந்த அறிமுகமுமில்லை. இரண்டாவது முறையாக ரூ.1200 ஊதியத்தில் கொழும்பு சென்றார் சுந்தராம்பாள்.

நாடக முகவர் சிங்கம் ஐயங்கார் அப்போது மூன்று சிறப்பு நாடகங்களில் கிட்டப்பாவைக் கே.பி. சுந்தராம்பாளுடன் நடிக்க அழைத்திருந்தார். கிட்டப்பா 'நாடகத்திற்கு முன் ஒத்திகை வேண்டும்' என்றார். 'வேண்டாம்' என்றார் சுந்தராம்பாள். 'தன் பாடல் வேறு விதம்' என்றார் கிட்டப்பா. 'எப்படியிருந்தாலும் சரிக்கட்டிக் கொள்கிறேன்' என்றார் சுந்தராம்பாள். இப்படியாக இருவரின் அறிமுகம் அமைந்தது.

1926ஆம் ஆண்டு மார்ச் மாதம் கிட்டப்பா-சுந்தராம்பாள் நடித்த 'வள்ளி திருமணம்' கொழும்புத் தமிழரின் ஒட்டு மொத்தப் பாராட்டைப்பெற்றது. 'மோட்சமுகலதா' என்ற பாடலைக் கிட்டப்பா தனக்கேயுரிய அருமையான குரலில் பாடத் தொடங்கினார். சுந்தராம்பாளும் இன்னிசை முழக்கம் புரியத்

தொடங்கினார். ஒருவருக்கு ஒருவர் சோடைபோகவில்லை. குரல் இணைந்தன. உள்ளமும் இணைந்தன. 1927இல் காரைக்குடியில் 'வள்ளி திருமணம்' நாடகத்தில் தான் இரண்டாவது முறையாக இருவரும் தொடர்பு கொண்டனர்.

காதல் திருமணம்

திருநெல்வேலியில் நந்தனார் நாடகம் நடந்து கொண்டிருந்தது. கே.பி. சுந்தராம்பாள் வேதியராக நடிக்க வேண்டும். அதற்குரிய பாடலையும், பாடத்தையும் கிட்டப்பா, சுந்தராம்பாளின் வீட்டுக்கு வந்து சொல்லிக் கொடுத்தார். அதற்காக அவ்வப்பொழுது வந்து போவார். அப்பொழுது சுந்தராம்பாள் திருநெல்வேலியில் ஒரு மாடிவீட்டில் குடியிருந்தார். பாட்டெல்லாம் சொல்லிக் கொடுத்து முடித்த பிறகு ஒருநாள் கிட்டப்பா, சுந்தராம்பாளின் வீட்டுக்கு வந்து மௌனமாகச் சுந்தராம்பாளைப் பார்த்துக்கொண்டு நின்றார். அவ்வெண்ணம் சுந்தராம்பாளுக்குப் புரிந்துவிட்டது. தன்னைக் கடைசி வரை காப்பாற்றுவதாகக் கிட்டப்பாவிடம் உறுதிமொழி வாங்கிக் கொண்ட பின்னர்த் திருமணத்திற்கு ஒப்புக்கொண்டார்.

இருவரும் வெவ்வேறு இனம் ஆகையால் சுந்தராம்பாள் வீட்டில் மிகுந்த எதிர்ப்பு இருந்தது. இருப்பினும் சுந்தராம்பாளின் பிடிவாதம் வென்றது. மாயவரத்தில் ஆனந்தத் தாண்டவர் வளாகத்தில் ஆடம்பரமின்றி எளிய முறையில் திருமணம் நிகழ்ந்தது.

கே.பி. சுந்தராம்பாளுடன் கிட்டப்பா நடித்தபொழுது நாடகங்கள் சிறந்து விளங்கின. அவற்றில் பாமாவிஜயம், கோவலன், சத்தியவான் சாவித்திரி, தூக்குத்தூக்கி, பவளக்கொடி, சாரங்கதாரா முதலியன குறிப்பிடத்தக்கன. மிகச்சிறந்த நாடகங்களில் நடிக்கும் பொழுது இருவரும் கடுமையாகக் கலைப்போட்டியில் இருப்பது வழக்கம். இருவரும் நாடகக் கலைஞர்களில் புகழ் வாய்ந்தவர்களாகத் திகழ்ந்தனர். எஸ்.ஜி. கிட்டப்பாவிற்குக் கே.பி. சுந்தராம்பாள் ஒருபெரிய கலைப் பொக்கிஷம் எனத் தியாகி சத்தியமூர்த்தி புகழ்ந்துரைத்துள்ளார்.

கிட்டப்பாவும், சுந்தராம்பாளும் நாடகமேடையிலும் வெளியேயும் நகமும் சதையும் போல மிக ஒற்றுமையாக இருந்தார்கள். அவர்களுடைய அன்பின் அளவை எடைபோட முடியாது. இருவரையும் நாடக மேடையில் காண்பது கண்கொள்ளாக் காட்சியாகும். ஒருவருடைய பாட்டு மற்றொரு வருக்குக் கிரீடம் வைப்பது போலிருந்தது.

கருணாகர நர்த்தன குழுவினர் எஸ்.ஜி. கிட்டப்பாவையும் சுந்தராம்பாளையும் கொண்டு நாடகம் நடத்திச் செல்வம் ஈட்டலாயினர். 1927இல் காரைக்குடியில் வள்ளி திருமணம் நாடகம் நிகழ்த்தப் பெற்றது.

பிறகு இரங்கூனில் இருவருக்கும் அழைப்பு வந்தது. சிலமாதங்கள் நடித்துவிட்டு இந்தியா திரும்பினர். கிட்டப்பா கன்னையா குழுவில் மீண்டும் சேர்ந்தார். சுந்தராம்பாள் சிறப்பு நாடகங்களில் நடித்து வந்தார்.

ஆண்டாள் திருக்கல்யாணம் நாடகத்தைக் கன்னையா குழு ஹைதராபாத்தில் நடத்தியது. கிட்டப்பா நோய் வாய்ப்பட்டதால் சி.வி.வி. பந்துலுவும் சுந்தராம்பாளும் சிறப்பாக நடித்து மக்களின் அன்பைப் பெற்றனர்.

கிட்டப்பா-சுந்தராம்பாள் திருமணம் செய்து கொண்ட பிறகு பர்மாவில் ஸ்ரீ கானசபா எனும் நாடகக் குழுவை இருவரும் தொடங்கித் தமிழகமெங்கும் நாடகம் நடத்திவந்தனர். இரங்கூனுக்குச் சுந்தராம்பாள் ரூ.40000 ஊதியத்திற்குச் சென்றார். உடன் மாமா நடேசக் கவுண்டரையும், துணை நடிகை ராதாவையும் அழைத்துச் சென்றார். சுந்தராம்பாளின் கருமை நிறத்தைப் பார்த்து வருமானம் குறையுமே என ஐயுற்றனர் குழுவினர். மும்மடங்கு வருமானம் வரவே மனம் குளிர்ந்தனர்.

பர்மாவில் தமிழர்கள் பெருவாரியாக வசித்த எல்லா ஊர்களிலும் செட்டியாரால் அழைத்துச் செல்லப்பட்டு நாடகம் போட்டார்கள். தமிழர்கள் மட்டுமின்றிப் பர்மியர்களும் தமிழ் நாடகங்களைப் பார்த்துச் சுவைத்தனர். பர்மாவில் இருந்த சிறிது காலத்திற்குள் பர்மா முழுவதும் இவர்கள் இருவரின் புகழ் பரவியது. (மேலது, பக்.25-25).

இல்வாழ்க்கை பாதிப்பு

அம்மையாரைத் திருமணம் செய்வதற்கு முன் 1924இல் கிட்டம்மாளைக் கிட்டப்பா திருமணம் செய்திருந்தார். அவருக்குக் குழந்தையின்மை நிலை இருந்தது. இச் சூழலில் தான் கே.பி. சுந்தராம்பாளைத் திருமணம் செய்திருந்தார். இது இரண்டு குடும்பத்தாருக்கும் பிடிக்கவில்லை. எனவே இருவரும் தத்தம் குடும்பத்தாருடன் இருக்க வேண்டியதாயிற்று. அவ்வப்பொழுது கரூரிலிருக்கும் அம்மையாரைக் கிட்டப்பா பார்த்து வருவது வழக்கம். சுந்தராம்பாளுக்கு ஆண் குழந்தை பிறந்து இரண்டு மாதங்களில் இறந்தது. சில காலங்களுக்குப்பிறகு இருவரும்

அவ்வளவு நெருக்கமில்லாமல் இருந்தனர். இருவரும் இணைந்து விடாமல் தடுப்பதை இருவீட்டாரும் ஒருமித்துக் கடைப்பிடித்து வந்தனர். இருவருக்கிடையே இருந்த காதல், ஊடல், கோபம் போன்றவற்றை அறிந்திடச் சுந்தராம்பாள் எழுதிய கடிதங்கள்தான் சான்று.

கிட்டப்பாவின் இறுதி

கிட்டப்பாவின் வாழ்வில் சோகம் தொடர்ந்தது. 1926இல் தாயார், 1927இல் பாதுகாப்பாளரான தமையன், 1928இல் சுந்தராம்பாளுக்குப் பிறந்த குழந்தை எனத் தொடர் இழப்பால் மனம் வருந்தினார். ஒருபுறம் சுந்தராம்பாள் பிரிந்த துயரும் இருந்தது. 1933ஆம் ஆண்டு டிசம்பர் 2 சனிக்கிழமை கடும் வயிற்றுவலியால் இறந்தார்.

கிட்டப்பாவின் இறப்பு நிகழ்ச்சி முடிந்த பின்னர்தான் சுந்தராம்பாளுக்குத் தெரிவிக்கப்பட்டது. இதை அறிவித்தவர் காசி ஐயர். செய்தி அறிந்ததும் அலறி அடித்துக்கொண்டு ஓடினார் அம்மையார். ரூ.18000 தொகை அவர் கையில் கொண்டு போனார். கிட்டப்பா வைத்துவிட்டுப் போன கடன்களை அடைத்தார். பின்னர்க் கிட்டப்பாவின் அஸ்தியைக் கரைத்துவிட்டுச் சென்னை சென்றார். கிட்டப்பா இறந்ததும் சுந்தராம்பாளுக்கு அடைக்கலம் தந்து ஆறுதல் கூறியவர் கஸ்தூரி விஸ்வநாதனும், ஏ. ரங்கசாமி ஐயங்காருந்தான்.

கிட்டப்பாவின் மறைவுக்குப் பிறகு நாடு முழுவதும் உள்ள இசைக் கலைஞர் நாடகக்-கலைஞர், அரசியல் உலக அறிஞர்கள் இளைஞர்கள் எனப் பலரால் அனுதாபக் கூட்டமும் தீர்மானமும் பல ஊர்களில் நிறைவேற்றப்பட்டன.

துறவுக் கோலம்

1927ஆம் ஆண்டு கிட்டப்பாவைத் திருமணம் செய்து கொண்டு ஏழு ஆண்டுகளில் விதவையானார். அப்போது அவருக்கு வயது 25. கிட்டப்பாவுக்கு வயது 28. அந்த இளம் வயதில் வெள்ளை ஆடையுடுத்திக் கைம்மை நோன்பு தொடங்கினார். அன்று முதல் பால், சோடா, சத்துள்ள உணவு வகைகளைத் தவிர்த்தார். அமாவாசை தோறும் காவேரியில் நீராடும் வழக்கம் தொடங்கிற்று. கிட்டப்பாவின் நினைவாகச் செங்கோட்டையில் ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கினார். 1936ஆம் ஆண்டு நினைவு நாளில் சூரரில் உள்ள தமது இல்லத்தில் 2000 ஏழைகளுக்கு அன்னதானம் அளித்தார். பொது

வாழ்க்கையிலிருந்துமெல்ல மெல்ல ஒதுங்க எண்ணினார். அம்மையாரின் கலையுலக மற்றும் அரசியல் ஒதுக்கம் பலரைக் கவலையில் ஆழ்த்தின.

கணவரைப் பிரிந்த சோகத்தில் வீட்டை விட்டு வெளியே வராமல் இருந்தார். காந்திஜியின் கூற்றால் மீண்டும் தேசத் தொண்டிற்குப் பங்கேற்க முனைந்தார். ''வீட்டிலேயே இருப்பதால் சாவித்திரியைப் போலத் தங்கள் கணவர் உயிரை மீட்டு வரும் சக்தி தங்களுக்கு வந்துவிடப் போகிறதா? அப்படி இல்லாத தாங்கள் தேசத்தொண்டு செய்வதையே நான் விரும்புகிறேன். தங்களைப் போன்ற உத்தமப் பெண்மணிகள் இந்த நாட்டின் விடுதலைப் போரில் ஈடுபட்டால் நான் என் வாழ்நாளிலேயே இந்த நாட்டுச் சுதந்திரத்தை வாங்கிவிட முடியும்" என்றார் காந்திஜி. அப்பொழுது முதல் காங்கிரஸ் இயக்கத்திற்காக உழைக்கத் தொடங்கினார் (ப.59).

வாழ்க்கை முறை

கணவர் இறந்தவுடன் கொங்குநாட்டு வழக்கப்படி வெள்ளை உடுத்தினார். நெற்றி நிறைய திருநீறு காட்சியளிக்கும். கச்சேரியில் கூட திருநீறு கேட்டு மக்கள் கூடுவர். ஒவ்வொரு கச்சேரியின் போதும் ஏழு பைகளுக்குக் குறையாமல் திருநீறு வழங்குவார்.

வீட்டில் ஆலயம்

கொடுமுடியில் வாழும்பொழுது தனக்குப் பிள்ளை யில்லாவிட்டாலும் தம்பி, மாமா, தங்கை குழந்தைகளைச் செல்லமாகச் சீராட்டி வளர்த்தார். இசை நிகழ்ச்சி இல்லாத நாட்களில் கூடை கூடையாக உதிரிப்பூக்களை வரவழைத்தும், வீட்டுத் தோட்டத்தில் பயிர்செய்துள்ள பூச்செடியிலிருந்து பூக்களைப்பறித்துத் தனது கைப்பட மாலைகள் கட்டி, தனது வீட்டிலிருந்த முருகன், விநாயகர், அம்மன் சிலைகளுக்குச் சாத்துவது வழக்கம். கோவிலில் நடைபெறுவது போலவே வீட்டிலும் அபிஷேகங்கள் நடத்துவார்.

கொடுமுடியில் வடக்குத்தெருவில் ஒரு ஏக்கர் நிலத்தில் ஒரு அழகான வளமனை அமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தார். 1940ல் வீடுகட்டினார். கொடுமுடிக்கு வரும் வெளியூர் மக்களெல்லாம் காணத்துடிப்பது ஒன்று ரயில்வண்டி, மற்றொன்று சுந்தாம்பாள் இல்லம். அனைவரையும் வரவேற்று

இன்முகத்துடன் விருந்தளித்து அளவளாவி அனுப்புவது அவரது தனிச்சிறப்பு.

காட்சிக்கு எளியவர். இன்சொல்லாளர். எப்பொழுதும் புன்முறுவல் பூத்தமுகம். தாம்பூலம் தரித்தல் அவரது இடைவிடா மகிழ்ச்சி. உறவினர் வீடுகளுக்கும் தவறாது வருவார். திருமணங்களுக்கு நேரில் வந்து மக்களோடு பழகி மணமக்களை வாழ்த்துவார்.

உணவு

உண்ணும் உணவு யாவும் சரியாக இருக்க வேண்டும். இசை நிகழ்ச்சிக்குப் போகும் இடங்களில் புதுவித உணவு வகைகளாக இருந்தால், அதன் செய்முறை பற்றி விளக்கங்கள் கேட்டுக்கொள்வார். அதைவிட உயர்ந்த சுவையுடன் வீட்டில் சமைத்து வீட்டார் அனைவரையும் உடன் அமர வைத்துத் தானே பரிமாறிச் சாப்பிட வைத்துக் கண்டு மகிழ்வார். எந்த ஒருவேலையானாலும் கண்களால் பார்த்தவுடன் கைகள் அதைச் செய்துவிடும். பலகார வகை, கோலம், புதுவகைத் தையல் என எக்கலையையும் மிக விரைவில் கற்றுக் கொள்வார். மழை நீரைத் தூய்மையாகப் பிடித்து வைத்துக் குடிப்பதில் விருப்பமுடையவர். பயணத்தின் போதும் தூய்மையான பல உணவுவகைகளை உடன் வருவோருக்குக் கொடுத்து மகிழ்வார். முறுக்கு, சீனி அதிரசம், தயிரில் கரைத்த கம்பஞ் சாதம், மிளகாய் வற்றல், மாவடு, ஆவக்காய் ஊறுகாய் என்பன அம்மையாருக்குப் பிடித்தமானவை. அவரது உறவினர்கள் அவரோடுதான் வாழ்ந்து வந்தனர். பெரிய குடும்பம். அவரது நிலபுலன்களையும் அவர்கள்தான் பார்த்துக் கொண்டனர். கொடுமுடியில் ஒரு திரையரங்கம் அமைத்தார்.

பக்தி

அம்மையார் அவ்வப்பொழுது கோயிலுக்குச் சென்று வணங்குவார். திங்கட்கிழமை விரதம் மிகவும் பக்தி சிரத்தையுடன் கடைப்பிடிப்பார். கோயிலுக்கு நடந்து வருவதில் அவருக்கு அளவிலான மகிழ்ச்சி. வழியெல்லாம் மக்களின் நலம் விசாரித்துச் செல்வார்.

கரூரில் ஆண்டுதோறும் மாரியம்மன் திருவிழா நடக்கும். அதில் தவறாது தீச்சட்டி ஏந்தி வந்து வணங்குவார். அமராவதி ஆற்றில் குளித்து முடித்து ஊர்வலம் நகர் வீதியில் வந்து கோயிலை அடையும். திரளான கூட்டமும் இருக்கும்

வடபழனி கோயிலில் 1945-47வரை பல இசை நிகழ்ச்சிகளை இலவசமாக நிகழ்த்திக் கொடுத்து, வடபழனி முருகன் ஆலயம் கட்ட நிதி சேர்த்துக் கொடுத்தார்.

கொடுமுடிக்கும் பழநிக்கும் 70 மைல்கள். அம்மையாருக்கு எப்போது மனம் சரியில்லையோ உடனே பழநி சென்று விடுவார். முருகனுக்குப் பஞ்சாமிர்த அபிஷேகம் செய்வார்கள். சங்கராண்டம் பாளையம் சத்திரத்தில் அவர்களுக்கு எப்போது வந்தாலும் தங்குவதற்கு அறைவசதி செய்து கொடுப்பார்கள். சில நேரங்களில் ஒருவாரம்கூடத் தங்கி இருந்துவிட்டு வருவார். பழநி சென்று வந்தால் தனக்குப் புத்துணர்ச்சியும் நிம்மதியும் கிடைக்கிறது என அவ்வப்பொழுது கூறுவார்.

பட்டங்களும் பதவிகளும்

நாடகத்தில் நடிக்கும் பொழுது ஏராளமான தங்க மெடல்கள், வெள்ளி வில்லைகள், கலை வேலைப்பாடமைந்த வெள்ளித் தட்டுக்களையும் பரிசாகப் பெற்றிருந்தார். பொது மக்கள் அளித்த பட்டங்கள் 'கொடுமுடி கோகிலம்', 'சங்கீத ராணி' என்பவை. 1956ஆம் ஆண்டு நாடு குடியரசான பொழுது இந்திய சுதந்திரப் போராட்டத்திற்குப் பாடுபட்ட கலைஞர்களுக்கான தேசிய விருதைப் பெற்றார்.

1957ஆம் ஆண்டு 'ஏழிசை வல்லபி' என்ற பட்டத்தைத் தருமபுரி ஆதீனம் வழங்கியது. 1958-63வரை சட்டசபை மேலவை உறுப்பினராக இருந்தார்.

1964இல் பத்மஸ்ரீ பட்டத்தை மத்திய அரசு வழங்கியது. 1966இல் தமிழிசை மன்றம் 'இசைப் பேரறிஞர்' விருது (அண்ணாமலை மன்றத்தில்) வழங்கினர்.

1969ஆம் ஆண்டு மத்திய-மாநில அரசுகளின் சிறந்த பாடகியாகத் தேர்வு செய்யப்பட்டுப் பரிசு பெற்றார்.

1980ஆம் ஆண்டு இயல், இசை, நாடக மன்றத்தில் 'தனிப் பெருங்கலைஞர்' எனச் சிறப்பிக்கப்பட்டுப் பரிசு பெற்றுள்ளார்.

எண்ணற்ற இசை மன்றங்களில் கௌரவச் செயலராக இருந்துள்ளார்.

பாடிப் பறந்த குயில்

1980ஆம் ஆண்டு டெப்டம்பர்த் தொடக்கம் முதல் உடல்நிலை சீர்கெடத் தொடங்கியது. உடல் நலமின்றிப் படுத்த

படுக்கையானார். சிறுநீரகக் கோளாறு, இருதயக் கோளாறு என்பன ஏற்பட்டன. சிகிச்சைக்காக மருந்து சாப்பிடவும் மறுத்துவிட்டார். 09-09-1980இல் உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டது. தினமும் மாலை நேரத்தில் மார்பு வலியும் வந்தது. அவரது தம்பி மருமகனின் வற்புறுத்தலால் மருத்துவ சிகிச்சை அளித்தும் இரவு 9.35 மணிக்கு உயிர் பிரிந்தது.

இவரைத் தேசிய நடிகை என முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் மதிப்பளித்தார். அரசு மரியாதையுடன் நடிகர் சங்கத்தின் வளாகத்தில் பொது மக்கள் பார்வைக்காக இவருடல் வைக்கப்பட்டது. கண்ணம்மா பேட்டையில் அவர் தம்பி கே.பி. கனகசபாபதி தீ மூட்ட இறுதி நிறைவெய்தியது.

அம்மையார் 9 ஆண்டுகள் நாடகத் துறையிலும் 45 ஆண்டுகள் இசைத்துறையிலும் ஆக 54 ஆண்டுகளாக சிறந்து விளங்கியவர்.

நாடகத்துறையில் பல அரிய திருப்புமுனைகளால் புகழ் உச்சியில் வாழ்ந்ததுடன் நடிப்பில் மிகவும் திறமையுடையவராகத் திகழ்ந்தார்.

கணீரென்ற வெங்கலக்குரலில் உச்சஸ்தாயியில் தெளிவான உச்சரிப்புடன் தேன் அருவியாக நாடகத்தில் பாடிய பாடல்களில் தெள்ளு தமிழ் துள்ளிவிளையாடியது. இத்தகைய நாடக மேடை அனுபவம் அவரைத் திரையுலகிற்கு அறிமுகம் செய்தது.

ஔவையார் நாடகத்தில் நாட்டுப்பற்று, ஒழுக்க நெறி, பக்தி நெறி ஆகியவற்றின் தலைவியாகத் தெய்வீகத் தமிழ்ப் புலவராக நடித்தார். நடித்ததுடன் அவற்றை அப்படியே தம் வாழ்க்கையிலும் பின்பற்றி வந்தார்.

பம்மல் சம்பந்த முதலியார் அம்மையாரைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது

> *இப்பெண்மணி சிறுவயதிலேயே நாடகங்களில் நடிக்கத் தொடங்கியுள்ளார். பெரியவரானவுடன் முக்கியப் பாத்திரங்களில் நடிக்கத் தொடங்கினார். நடிப்பதில் மிகவும் திறமையுடையவர். ஆயினும் இவருடைய பெயர் தமிழ் நாடெங்கும் பரவச் செய்தது இவருடைய அபாரமான இசைக்கலையே…*

என்கிறார் (ப.159).

நாடகமேடைக்கு வந்த காலத்தில் அம்மையார் கேள்வி ஞானம் மூலம் தான் பாடிவந்தார். நாலரைக் கட்டை சுருதியில் பாடுவது வழக்கம். தொடக்கத்திலேயே இந்த அளவு உச்சஸ்தாயியில் பாடியதற்குக் காரணம் நாடகமேடைதான். நாடகத்திற்கு வந்திருக்கும் கடைசிப் பார்வையாளருக்கும் கூடப் கேட்கும்நிலை இருந்தது (ப. 136,137).

இவர் நடிப்பில் குறிப்பிடத்தக்க நாடகங்கள் ஞானசௌந்தரி, பாமாவிஜயம், கோவலன், சத்தியவான் சாவித்திரி, தூக்குத்தூக்கி, பவளக்கொடி, வள்ளி திருமணம், சாரங்கதாரா, ஆண்டாள் திருக்கல்யாணம், நந்தனார் என்பனவாகும்.

சேலம் நகராண்மைக் கழகத் தலைவர் அம்மையார் மீது பேரன்பு கொண்டவர். மீண்டும் நாடகம் நடிக்கப் பல முறை கேட்டுக் கொண்டார். கணவர் இறந்த பின் நாடகத்தில் நடிப்பதை நிறுத்தினார். நாடகத்திற்குப் பிறகு திரைப்படத்திலும் நடித்து வந்தார் அம்மையார். 1954இல் சேலம் பொருட்காட்சியில் வள்ளி திருமணம் நிகழ்ந்தது. விருத்தன் வேடத்தில் அம்மையாரும் வள்ளியாக எஸ்டிசுப்புலட்சுமியும் நாரதராக டிஆர். மகாலிங்கமும் நடித்தனர். மேலும் மதுரையிலும் புதுக்கோட்டையிலும் அதே ஆண்டில் நாடகம் நிகழ்த்தியுள்ளார் (ப.121).

பொதுமக்களைக் கவர்ந்தவர்

ஆயிரக் கணக்கான தமிழர்கள் நாடகக் கொட்டகைக்குச் சீட்டு கிடைக்காமல் வீட்டுக்கு வருத்தத்தோடும் ஆத்திரத்தோடும் திரும்பியது கிட்டப்பா-சுந்தராம்பாள் காலத்தில் தான் என்கிறார். வ.ரா.

இவர்களின் நாடகத்திற்குச் சீட்டு கிடைக்காத பொது மக்கள் ஆனைக்கவுனிப் பாலத்தில் துண்டை விரித்துப்போட்டு ஆங்காங்குக் கூட்டமாக அமர்ந்திருந்தனர். எவராவது பேசினால் அவர்கள் கோபப்பட்டுப் பேசாதிருக்கச் சொல்வர். இதற்குக் காரணம் 11 மணி இரவில் அமைதியான சூழ்நிலையில் சுருதியுடன் கலந்த உச்சஸ்தாயியில் கணீரென்று, ஆனால் உள்ளத்தை எங்கோ இழுப்பதுபோல உணர்ச்சியை உண்டாக்கிக் கொண்டிருந்த பாட்டைக் கேட்டுச் சுவைத்துக் கொண்டிருப்பது தான். திடீரென்று வெளியே இருந்தவர்களின் கைதட்டல், இது நாடகக்கொட்டகைக்கு உள்ளிருந்து பாடியவர்களைப் பாராட்டுவதற்குத்தான்.

தஞ்சாவூரில் நிகழ்ச்சி நடந்தால், மாயவரம், திருவாரூரில் இருந்தெல்லாம் வருவார்கள் பொதுமக்கள். கும்பகோணத்தில் நடந்தாலும் அதே இரசிகர்கள்தான் சலிக்காமல் வந்து கேட்பார்கள். (ப.25)

கும்பகோணம் ராஜா அரங்கில் 1930இல் இவரின் நந்தனார் நாடகம் நடந்தது. நாடகம் பார்க்கச் சீட்டு கிடைக்காததால் மனம் உடைந்த கருப்பூர் அப்துல்லா சாயபு என்பவர் நாடகக் கொட்டகைக்கு அருகில் இருந்த தென்னை மரத்தில் ஏறிக் கொண்டு தற்கொலை செய்ய முற்பட்டார். இந்த அளவிற்குத் தீவிரமான இரசிகர்கள் அவருக்கு இருந்தது சுட்டத்தக்கது. (ப.53)

இவற்றால் பொது மக்களுக்கு அம்மையாரின் கலைமேல் இருந்த மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் வெளிப்படக் காணலாம்.

திரைத்துறை

இந்தியத் திரை உலகில் முதன்முதலாக ஒரு நடிகை ஒரு இலட்சம் ரூபாயைத் தனது நடிப்புக்காகப் பெற்றது அம்மையார்தான். தயாரிப்பாளர் அசன்தாஸ் நந்தனார் படத்திற்காக இதனை அளித்தார்.

ஔவையார் (1953), பூம்புகார் (1964), மகாகவி காளிதாஸ் (1966), திருவிளையாடல் (1965), கந்தன்கருணை (1967), உயிர் மேல் ஆசை (1967), துணைவன் (1969), சக்திலீலை (1972), காரைக்காலம்மையார் (1973), திருமலைத் தெய்வம் (1973) முதலிய பல படங்களில் மிகவும் சிறப்பாக நடித்தார் அம்மையார். (ba.wikipedia.org 19-9-1980)

ஔவையார் படம் பற்றி 32 பக்கங்களில் மிக விரிவாகச் செய்திகள் கிடைக்கின்றன. அவை கதை, விமர்சனம், பாராட்டு என்பனவாக அமைந்துள்ளன. படத்தில் இடம்பெற்ற 48 பாடல்களில் 35 அம்மையார் பாடியன. தமிழர் வாழ்வை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாட்டையும் தமிழர்களையும் உயர்த்தக் கூடிய ஒருபடமாக இது திகழ்ந்தது. இலங்கை கவர்னர் ஜெனரல் இப்படத்தைப் பற்றிக் கூறும் பொழுது "சத்தியமும், தர்மமும் நிறைந்த ஒரு புதிய உலகத்தைச் சிருஷ்டி செய்து கொடுக்கும் நல்ல முயற்சி" என்கிறார் (ப.104).

பூம்புகார் படத்தில் கவுந்தியடிகள் சமண சமயத்தவர் என்பதால் நெற்றியில் திருநீறின்றி நடிப்புக்கு முக்கியத்துவம் அளித்தார்

நாட்டுப்பற்றும் அரசியல்துறையும்

சுதந்திரப் போராட்டத் தியாகி சத்தியமூர்த்தி சுந்தராம்பாளின் பாடலின் அருமை தெரிந்தவர் (ப.28). கிட்டப்பாவின் இறப்பிற்கு முன்புவரை காங்கிரஸ் கட்சிக்காகப் பல பாடல்களைப் பாடிப் பாமர மக்களின் கவனத்தைக் காங்கிரஸ் பக்கம் இழுத்ததில் கே.பி.சுந்தராம்பாள் பாடல்களுக்குப் பெரும்பங்கு உண்டு (ப.59). காந்தியை மக்கள் மனம் கொள்ளக்கூடிய அளவு 'காந்தியோ, பரம ஏழை சந்நியாசி' என்ற பாடல் இயல்பாக விவசாயிடம், உன்னைப் போன்ற ஒருவர்தான் அவர் என்று அறிமுகப்படுத்தியது. இராட்டையின் சிறப்பு, கதர்த் துணியின் மகிமை; அந்நியத் துணிகளைத் தவிர்க்க வேண்டிய தேவை; வட்டமேசை மாநாட்டிற்குக் காந்தி சென்ற சிறப்பு, பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் இறப்புக்கான அஞ்சலி, மோதிலால் நேரு, கஸ்தூரிபாய் போன்றோருக்கான அஞ்சலி போன்ற பாடல்களில் முப்பதுகளின் தொடக்கத்தில் தமிழக மக்கள் தம்மையே மறந்தனர். இப்படிப்பட்ட ஒரு பிரச்சாரகர் தேசச் சேவைக்கு வராமல் இருப்பது சரியல்ல என்பதை உணர்ந்த தீரர் சத்தியமூர்த்தியும், கே.பாஷ்யமும் காந்திஜியை இவர் குடியிருந்த ஆசிரமத்துக்கு அழைத்து வந்து இவரை அறிமுகம் செய்து வைத்தனர். சுந்தராம்பாளின் தேசபக்தியைப் பற்றி முன்பே கேள்விப்பட்டிருந்த காந்திஜி இவரைப் பார்த்துச் சுதந்திரத் திற்காகப் பாடுபடும்படிக் கேட்டுக் கொண்டார் (ப.59). அன்று முதல் சுந்தராம்பாள் தேசத்திற்கு உழைக்கத் தொடங்கினார்.

1937இல் சுந்தராம்பாள் இல்லத்தில் காந்திஜி இருந்துள்ளார். அறுசுவை விருந்தளித்ததுடன் தங்கத் தட்டையும் அம்மையார் அண்ணலுக்கு வழங்கியுள்ளார். அதனைக் காந்திஜி ஏலமிட்டுக் கட்சி நிதிக்காகச் சேர்த்துக் கொண்டார் (ப.42) (செய்தி-சேலம் சுதந்திரப் போராட்ட வீரர் க.அர்த்தநாரி)

கிராமபோன் இசைத்தட்டும் காங்கிரஸ் கூட்டங்களில் இசைக்கப்பட்டது. அந்த இசைத் தட்டில் சுந்தராம்பாள், காந்தி, போன்றோரின் புகைப்படங்கள் இருந்தது குறிப்பிடத்தக்கது (ப.61). இதன்வழிச் சுதந்திரக் கனலை மூட்டினார் அம்மையார்.

தேர்தல் பிரச்சாரம்

சுயராஜ்யக் கட்சியின் பிரச்சாரங்களில் பெரும்பாலும் பிரபல பாடகியும் நாடக நடிகையுமான அம்மையாரைச் சுதேசியப் பாடல்களைப் பாடக் கூடவே அழைத்துச் செல்வதும்

உண்டு. அம்மையாரும் தமது இசைக்குழுவுடன் செல்வார். இவரின் பாடல்களுக்குக் கூட்டமும் மிகுதியாகக் கூடும். மேடையில் அம்மையார் கணீரென்று, 'வந்தே மாதரம்' என்று குரல் கொடுத்ததும் கூட்டத்திலிருந்து 'வந்தேமாதரம்'! பேரொலி பலமடங்கு எதிரொலிக்கும். பேரொலி முடிந்ததும் அவர் உணர்ச்சியோடு, ஓட்டுரிமை பெற்ற வாக்காளர்களே! கேளுங்கள்! எனத் தொடர்ந்து பாடலைப் பாடுவார். அப்பாடலில் நம் நாட்டிற்கு வெள்ளையரால் ஏற்படும் கொடுமைகள் நாட்டின் விடுதலை, உழைப்பாளர் பற்றிய செய்திகள் இருக்கும். (பக்.62-63 சுதேசமித்திரன், உதவி ஆசிரியர், சத்தியமூர்த்தி வாழ்க்கை வரலாற்றாசிரியர்).

சுந்தராம்பாள் கதர் இயக்கம், தீண்டாமை ஒழிப்பு, வெள்ளை ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆகிய பாடல்களுடன் மதுரகவி பாஸ்கரதாஸின் தேசியத் தலைவர்கள் பற்றிய பாடல்களையும் பாடி உணர்வுபெறச் செய்வார். சட்டசபையைக் காங்கிரஸ் கைப்பற்றும் முதல் தேர்தல் இந்தியா முழுவதும் நடைபெற்றது. ஈரோடு தாலுகாவில் கிராமம் கிராமமாகச் சென்று தேர்தல் பிரச்சாரம் செய்த அம்மையாரின் ஆவேசப்பேச்சை எவராலும் மறக்க முடியாது (ப.64, டி.கே. சண்முகம்கூற்று).

காங்கிரஸில் இருந்த மகளிர் பிரிவு அம்மையாருக்கு ஒரு விழா எடுத்துச் சிறப்பித்தது. அக்குழுவில் ருக்மணி லட்சுமிபதி, பன்னிபாய், சுந்தரா சத்தியமூர்த்தி, வை.மு. கோதைநாயகி, அம்புஜம் அம்மாள் முதலான பலர் இருந்தனர் (ப.65).

தேசியவுணர்வில் கொடையுள்ளம்

1939இல் உடல்நிலை பாதிக்கப்பட்ட சத்தியமூர்த்தியைப் பார்க்க வந்த அம்மையார் இடிந்துபோன வீட்டிற்கு ரூ.18 வாடகை கொடுத்து இருந்தது கண்டு வருந்தினார். இந்தத் தேசத்திக்கு மாபெரும் தியாகங்களைச் செய்த சத்தியமூர்த்திக்கு அம்மையார் தியாகராய நகரில் இன்றைய இந்திப் பிரச்சாரசபாவுக்கு முன் உள்ள தன் இடத்தில் இருந்து நாலரை கிரவுண்ட நிலத்தை எழுதிக் கொடுத்தார். இன்றும்கூட அவ்வீட்டின் முகப்பில் 'சுந்தரா' என்ற எழுத்தைக் காணலாம். (ப.65).

காங்கிரஸ் தேசிய இயக்கத்திற்காகப் பாட்டுப்பாடிப் பிரச்சாரம் செய்தவர் வழக்கைக்கூட எதிர்கொண்டிருக்கிறார்.

நிறையப் பொருட்களை இழந்துள்ளார். பல நிகழ்ச்சிகள் நடத்தி நிதி கொடுத்துள்ளார். 1937ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி ஜெயித்தது அம்மையாரால்தான்.

காந்தி அஞ்சலி

சுதந்திரத்திற்குப் பிறகு நடந்த பெரிய துயர நிகழ்ச்சி காந்திஜி சுட்டுக் கொல்லப்பட்டது. அம்மையாரால் பாடப்பட்ட சோகப்பாடல்கள்:

- அடிமை எனும் விலங்ககற்றி அன்னைதனை அரசாள அமைத்த அய்யா....(ராய. சொக்கலிங்கம், காரைக்குடி)
- உத்தமராம் காந்தி உகந்துபேச . . .(நாமக்கல் கவிஞர்)

என்பனவாகும். இதன் மூலம் அன்னை மீண்டும் தனது தேசிய வாழ்க்கையைத் தொடர்ந்தது தெரிகிறது. (ப.88)

அரசியல் பங்கேற்பு

காமராஜர் ஆட்சிக்காலத்தில் 1958ஆம் ஆண்டு முதல் 1963 வரை ஆறாண்டுகள் எம்.எல்.சி.யாகப் பதவியிலிருந்துள்ளார். 1962இல் சீனப்போர் தொடங்கியபோது நிதி அளித்துள்ளார். தனது பதவி மூலம் கிடைத்த ஊதியத்தை முழுவதையும் போருக்குக் கொடுத்தார். இது அவரின் தேச பக்தியைக் காட்டுகிறது (ப.175). இந்தியாவில் முதல் முதல் ஒரு பெண்மணி நாடக, இசை, திரைப்படத்துறையிலிருந்து மேலவை உறுப்பினரானது சுந்தராம்பாள் தான் என நான் கண்ட பாரதம் எனும் நூலில் அம்புஜம் அம்மாள் குறிப்பிடுகிறார் (ப.123).

இசைத்தொண்டு

நாடகத்திலிருந்து விலகிய அம்மையாரை இசை நிகழ்ச்சிகளுக்குக் கொண்டுவர முசிறி சுப்பிரமணிய ஐயரும் இந்துக் கல்லூரி சீனுவாசனும் முயன்று அவரை மேடையேற்றினர். மயிலாப்பூர் ஆர்.ஆர். சபாவில் இசை விருந்தளித்தார் (ப.57). அம்மையார் தியாகராஜ கீர்த்தனைகள் பதினொன்று பாடினார். அதுவரையில் அவையோர் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். பிறகு தமிழில் பாடத் தொடங்கினார்.

தோழி ஒரு வார்த்தை
தோழர்களே வார்த்தை

என்று தொடங்கும் பொழுது அவையில் பொதுமக்களிடம் கலகலப்பான மகிழ்வு ஆரவாரம் கைதட்டலுடன் எழுச்சி பெற்றது. இதற்குக் காரணம் தாய்மொழித் தமிழிலமைந்த பாடல் என்பதால் ஆகும். (ப.58)

இசைக்கலைஞரின் மதிப்பு

அம்மையாரின் இசையை முதல்வரிசையில் இருந்து இரசித்த கலைஞர்கள் பலர். அவர்களுள் முத்தையா பாகவதர், திருச்சி பிடில் கோவிந்தசாமி பிள்ளை, புதுக்கோட்டை தச்சிணாமூர்த்திப் பிள்ளை, காஞ்சிபுரம் நாயனாப்பிள்ளை, ஆரியக்குடி, காரைக்குடி வீணை சகோதரர்கள், மதுரை பொன்னுசாமி நாயனக்காரர், திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை, வீராசாமி பிள்ளை போன்றோர் குறிப்பிடத்தக்கவராவர். (ப.33)

இசைத்தட்டு

1926ஆம் ஆண்டு 'பொதிகை மலை ஓரத்திலே' என்ற தெம்மாங்குப் பாடலை அம்மையார் இசைத்தட்டில் பதிவு செய்தார். அதிலிருந்து எண்ணற்ற நாடகப் பாடல்களும், தேசபக்திப்பாடல்களும் அக்காலத்தில் எங்கும் ஒலிக்கலாயின. தமிழர்கள் வாழ்ந்த தென்னாப்பிரிக்கா, பிஜி, பர்மா, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை முதலிய நாடுகளில் கூட விற்பனை செய்யப்பட்டுத் தமிழர் வீடுகள் தோறும் முழங்கின. இவர் குரலுக்கு உள்ள மதிப்பை அறிந்த கொலம்பியா நிறுவனம் ஒப்பந்தம் செய்து கொண்டு பல பாடல்களை வெளியிட்டது. கிராமபோனும், இசைத்தட்டும் 1950 வரை வழக்கில் இருந்தன (பக்.35-36).

பாரதி பாடல்கள்

1928 செப்டம்பர் 11இல் பாரதி பாடல்களை நீதிக் கட்சி தடை செய்தது. இதை எதிர்த்து நிகழ்ந்த கூட்டங்களில் அம்மையார் 'நெஞ்சு பொறுக்குதில்லையே' என்ற நடிப்புச் சுதேசிகள் பற்றிய கிளிக் கண்ணி பாடல்களையும், 'வீரசுதந்திரம்' என்ற பாடலையும் பாடி மக்களை வீறுகொண்டு பாடச் செய்தார். இவர் குரலில் இருந்த வீரவுணர்வும் வலிமையும் மக்களிடம் பரவின (ப.36).

காந்திஜி, பகத்சிங், நேரு போன்றோருக்கு இரங்கல் பாட்டுப்பாடி, தேசியவுணர்வை வலுப்பெறச் செய்தவர்

அம்மையார். காங்கிரஸ் கூட்டங்களிலும் தேர்தலுக்கும் இவர் பாடி உதவினார். (ப.60)

கர்நாடக இசையைப் பெருமையாகக் கருதிய சூழலில் அம்மையார் தமிழில் பாடியது பெரிய வரவேற்பு பெற்றது.

தமிழிசை முதல் மாநாட்டு இசையரங்கில் பங்கேற்ற அம்மையார் 4-1-1944ஆம் ஆண்டு தனது இசை வெள்ளத்தைப் பெருக்கெடுத்து ஓடச்செய்தார். தனது இறுதிநாள்வரை தமிழிசை இயக்கத்திற்காகப் பொது மக்களிடம் சென்று முழுத் தமிழிசை நிகழ்ச்சியையே வழங்கி வந்தார். இவர் தொடக்கத்தில் தெலுங்குக் கீர்த்தனமும் பாடியுள்ளார் (ப.83-86).

1945-1947 வரை பல் இசை நிகழ்ச்சிகளை இலவசமாக நடத்தி வடபழனி முருகன் கோயில் கட்ட நிதி கொடுத்தார்.

திருவிளையாடல் படத்தில் "ஞானப் பழத்தைப் பிழிந்து" என்ற பாடலை இராகமாலிகையாக்கி அம்மையார் தன் முத்திரைகளைப் பதித்திருந்தார். இப்பாடலை மோகனம், காபி, காவேரி, கானடா என்ற இராகங்களை மாலையாக்கித் தன் கம்பீரக் குரலால் இசைச் சிற்பமாக்கினார். இப்பாடலைக் கேட்போர் எவரும் மெய்மறக்கும் நிலை அடைவர் (ப.128).

அம்மையாரின் தமிழ் இசை வெள்ளம்

தமிழிசை வரலாற்றில் அம்மையாருக்குக் கிடைத்த குரல் ஒரு வரப்பிரசாதம். இது போன்றதொரு குரல் யாருக்கும் கிடையாது. பாடும் வல்லமையை அவரே தனக்குத்தானே வளர்த்துக் கொண்டார். பிற்காலத்தில் நாமக்கல் சேஷையங்காரிடம் எட்டு ஆண்டுகள் முறைப்படி கற்றார். விருத்தங்களை இராகமாலையில் பாடிப்புகழ் பெற்றவர் திருச்செந்தூர் சண்முகவடிவு. இவர் பாடிய பிள்ளைத்தமிழ், அருட்பா, காவடிச் சிந்துகளை இன்று கேட்டாலும் நம்மை மறந்துவிடச் செய்யும். இவரிடமிருந்து இம்முறையை அம்மையார் கற்றார். திருச்செந்தூர் சண்முகவடிவு, சுந்தராம்பாள் இவர்களை அடுத்து யாரும் இத்துறையில் முயற்சி செய்யாதது வருந்தத்தக்கது. நமது தமிழிசை மரபில் நிகழ்வின் இறுதிப் பகுதியாக இராகமாலிகை (பண்மாலை) பாடும் வழக்கம் இருந்தது. இன்று அதுவும் மறைந்துவிட்டது. சுந்தராம்பாளின் காலத்தில் பாடிய பெண் பாடகிகள் ஏறத்தாழ 20 பேர் இருந்தனர் (ப.135).

அம்மையார் தம் கடுமையான பயிற்சியால் சாரீரத்தைத் தனக்கேற்றபடி வசப்படுத்திக் கொண்டார். அவருக்கு அசுர சாதகம். சாரீரம் சரியில்லை என ஒருமுறை கூட நிகழ்ச்சியைத் தள்ளிப்போட்டது இல்லை (ப.136).

இசையரங்குகளின் மரபாக முதலில் வர்ணம் பாட வேண்டும். ஆனால் வர்ணத்தைப் பாடாமல் அதற்கு நிகராக வர்ணத்தில் உள்ள பண்சுவை மிக்க இசைச்சுர அமைப்புகளையும், 'ததிங்கிணதொம்' வைக்கும் தாள முத்தாய்ப்பு அமைப்புகளையும் இனிய செந்தமிழ்ச் சொல் மகுடங்களாகவே அமைத்துக் காட்டி மகிழ்ச்சியூட்டுவார். இது போன்ற கற்பனைச் சுரங்கள் பாடும் இடத்தில் சொல் மகுடங்களைக் குடம் குடமாகப் பொழிந்து துள்ளல் இசையைத் துய்க்கச் செய்வார் (வி.ப.கா. சுந்தரம்) என்பது அம்மையாருக்கு மிகவும் பொருந்தும் (ப.137-138).

அகர இகர உகர ஒலிகள் மூலமாகப் புதுப்படைப்புக் கோவைகள் போன்ற அமைப்பைக் காட்டிக் களிப்பூட்டுவார் அம்மையார். கொண்டுகூட்டிப்பாடும் சிறப்பை அம்மையாரின் எல்லாப் பாடல்களிலும் காணலாம் (ப.138).

சுரம்பாடி அழகு சேர்த்த பாடல்கள், விருத்தங்களை இராகமாலிகைகளில் பாடிய பாடல்கள், புது மரபால் பாடிய திருப்புகழ், வேறு இராகங்களில் பாடிப் புதுமை சேர்த்த தேவாரப் பாடல்கள், சிந்துபைரவி இராகத்தில் தாமே இயற்றிய பாடல்கள் எனப் பல பாடல்கள் இவரால் புகழ்பெற்றன.

பாடிய இராகங்கள்

அம்மையார் பாடிய இராகங்கள் பல. அவை சிந்துபைரவி, பைரவி, கேதாரம், ஹம்சநந்தினி, பிம்ப்ளாஸ், காபி, நாத நாமக்கிரியை, காம்போதி, மாண்ட், தோடி, சங்கராபரணம், பந்துவராளி, கல்யாணி, தேஷ், சுருட்டி, செஞ்சுருட்டி, புன்னாகவராளி, எதுகுல காம்போதி, செங்கனா, தேசிக தோடி, இந்துஸ்தான் காபி, இந்துஸ்தான் வர்ணமெட்டு, கமாஸ், பியாக், மாஞ்சி, சிவரஞ்சினி, கரகரப்ரியா, சரஸ்வதி, சண்முகப்ரியா, ஸ்ரீராகம், பூபாளம், பிலஹரி, ஹரிகாம்போதி, சுத்தகாவேரி, கானடா, மோகனம், ஸிம்மேந்தரமத்யமம், லதாங்கி, நடபைரவி, சாமா, பூர்வகல்யாணி, காவடிச்சிந்து, இலாவணி என்பனவாகும். மிக அதிகமான பாடல்கள் சிந்துபைரவியிலும், சண்முகப் பிரியாவிலும் உள்ளன. (பக்.140-141)

இசை நிகழ்ச்சி

அம்மையாரின் நிகழ்ச்சி குறைந்தது ஆறு மணிநேரம் நிகழும். பொதுவாக 5000லிருந்து 50000 பேர் கூடும் இடத்தில்தான் பெரும்பாலும் கூட்டம் நடக்கும். நாடகமேடை கட்சிக் கூட்டங்கள், கோவில் திருவிழாக்கள், தமிழிசை மன்றம் போன்ற இடங்களில்தான் பாடிவந்தார்.

தஞ்சை, குடந்தை, சிதம்பரம் முதலிய ஊர்களில் மட்டும் பாடும் பொழுது இராகம், தாளம், பல்லவி, ஆலாபனை, இலய விந்நியாசம் எல்லாம் முடிந்த பின்னர்தான் திரைப்பாடலுக்கு வருவார். இசை நிகழ்ச்சிகளில் மற்றவர் பாடாத இராகங்களை எடுத்து வைத்துக் கொண்டு அந்த இராகங்களுக்கு அழகைக் கொடுத்து நிகழ்ச்சியைச் சிறப்படையச் செய்வார் (பக்.141-142).

நாவிலிருந்து வெளிவரும் ஒவ்வொரு சொல்லும் அச்சரம் பிசகாமல் தெளிவான தமிழ்நயத்துடன் காதில் ரீங்காரமிடும். செந்தமிழ் தூய்மையாகவும் தெளிவாகவும் பாமரர்க்கும் புரியும் வகையிலும் கணீரென்று உச்ச ஸ்தாயியிலும் அமையும். பாடும் பொழுது அனைத்து உயிர்களும் ஒரு கணம் நின்று கேட்கும் என்பார் புஷ்பவனம் குப்புசாமி (பக்.170-171).

நிறைவுரை

கே.பி. சுந்தராம்பாள் இளமைக்காலத்தில் வறுமையில் இருந்தாலும் பிற்காலத்தில் மிக வளமையுடன் இருந்திருக்கிறார். இவரின் இல்வாழ்வு மனநிறைவளிப்பதாக அமையவில்லை. இளமைக் கால முதலே நாடகக் துறையிலிருந்ததால் செம்மையான பயிற்சியும் திறமையும் உடையவராகக் திகழ்ந்தார். நாடகத்துறையில் இவரின் குரல் வளமும் நடிப்புத்திறனும் இவருக்குத் தனியிடம் அமைத்தளித்தன. இசைத்துறையில் மக்களுக்கேற்ற தமிழ் மொழியிலும் பாடும் வல்லமையைப் பெற்றிருந்தார். இசையால்தான் மக்களிடம் பெரும்புகழ் பெற்றார். இவரின் நாடக அறிவால் திரைத் துறையிலும் மிக எளிதாகவும் அருமையாகவும் பங்கேற்க முடிந்தது. அம்மையாரின் இசைப்புகழும் நாடகத் திரைப்படக் கலைஞர் என்ற புகழும் இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி வழி அரசியல்துறைக்குத் தொண்டு செய்ய வாய்ப்பமைத்தன. அம்மையாரின் ஒழுக்கநெறி, பக்தி நெறி, நாட்டுப்பற்று என்பன இந்தியச் சமுதாயத்திற்குப் பெரிதும் பயனுடையதாக இருந்தன. நாடகத்துறைக்கு இவரின் நடிப்பு முன்னுதாரணமாக இருந்தது

இசைத்துறையில் மக்கட்குப் புரியவும், தேவைப்படுவதுமான தேசியவுணர்வுப் பாடல்கள் இந்தியத் திருநாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் முத்தாய்ப்பாக அமைந்தன. இருபதாம் நூற்றாண்டின் சாதனைப் பெண்மணிகளில் அம்மையாரின் பங்களிப்பு மிகவும் சிறப்பாக இருந்தது. பல்துறை நாயகியாக விளங்குவது மட்டுமன்றித் தேசிய விடுதலைக்கும் தம் உழைப்பை அளித்தமை போற்றத்தக்கதாகும்.

துணை நூல்கள்

1. கொடுமுடி கோகிலம், கே.பி.சுந்தராம்பாள் வரலாறு, சோழநாடன், ரிஷபம் பதிப்பகம், சென்னை, 2002.

2. திரை இசை அலைகள், வாமனன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1999.

3. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி ஒன்பது, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1988.

இசைமேதை எம்.எஸ். சுப்புலட்சுமி

மு. பாண்டி

காலம் கலைகள் பலவற்றைச் சுவடுகளாக மண்ணில் பதித்துவிட்டுச் செல்கின்றது. அவற்றுள் ஒன்று தமிழிசைக்கலை. கலைகளில் முதலில் பிறந்ததும் சிறந்ததும் இசைக்கலை என்பர். இவ்விசையைச் சங்ககாலம் முதல் தற்காலம் வரை பலர் இசைத்தும் காத்தும் வந்துள்ளனர். தமிழை இயல், இசை, நாடகம் என்று தொடக்கத்தில் மூன்றாகப் பகுத்து இசையை நடுவண் வைத்துள்ளனர். பரிபாடல், சிலம்பு போன்ற பழந்தமிழ் இலக்கியங்களில் அக்கால நாட்டுப்புற இசை, செவ்விசை போன்றவற்றைப் பல இசைவாணர்கள் இசைத்துள்ளனர். அவர்களுள் பாடினி, விறலி, கூத்தியர் போன்றவர்களும். தொடர்ச்சியாக இசையை வளர்த்தவர்களுள் ஔவையார், காக்கைபாடினியார், காரைக்காலம்மையார், திலகவதியார், ஆண்டாள், பிற்கால ஔவையார் போன்றோர் குறிப்பிடத் தக்கவர்களாவர். இவ்வாறு மரபுத்தொடர்ச்சியாக அவ்வக் காலங்களில் பெண்கள் இசையை வளர்த்துள்ளனர். அவர்களுள் இருபதாம் நூற்றாண்டில் இசையுலகில் தனி முத்திரை பதித்தவர் எம்.எஸ். சுப்புலட்சுமி ஆவார்.

மதுரையும் இசையும்

மதுரை என்றால் இனிமை என்று பொருள். இம்மதுரை சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த இடம். இங்குப் பல்வேறு புலவர் பெருமக்களும், இசைவாணர்களும், கலைஞர்களும் இருந்து இலக்கியம் மற்றும் சங்கங்கள்வழி இலக்கியக்கலை, இசைக்கலையை வளர்த்து வந்துள்ளனர். சிலப்பதிகாரத்தில் கானல்வரி, ஆய்ச்சியர் குரவை, வேட்டுவவரி, குன்றக்குரவை போன்ற பல இசைகளும் குறிப்பிடப்படுகின்றன. ஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், பரஞ்சோதி முனிவர், அருணகிரி, குமரகுருபரர் போன்றோரும் பக்தி இலக்கியங்கள் வாயிலாக இசையை வளர்த்துள்ளனர். இசை மரபு போற்றும் மதுரையில் பிறந்தவர் எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள்.

பிறப்பும் வளர்ப்பும்

அன்னை மீனாட்சி ஆட்சி செய்யும், அருள் பாலிக்கும் நகரம் மதுரை. பாண்டிமாதேவி, மங்கையர்க்கரசியார், அரசி மங்கம்மாள் போன்ற சிறப்பு வாய்ந்த பெண்கள் வாழ்ந்து பெருமை சேர்த்த மங்காப் புகழ் கொண்ட மதுரையில் 1916 செப்டம்பர் பதினாறாம் நாள் மேல அனுமந்தராயன் தெருவில் சுப்பிரமணிய அய்யர், சண்முகவடிவாம்பாள் என்னும் இசைத் தம்பதியருக்கு மகளாகப் பிறந்தவர் மதுரை சண்முகவடிவு சுப்புலட்சுமி. பரணி நட்சத்திரத்தில் பிறந்து இசையால் தரணியை ஆண்டவர். உடன்பிறந்தவர்கள் சகோதரர் சக்திவேல், சகோதரி வடிவாம்பாள். சிறுவயதிலேயே தந்தையை இழந்தவர். அன்னையின் அரவணைப்பில் வளர்ந்து பெரும்புகழ் எய்தியவர்.

தான் பிறந்த ஊரின் பெயரையும் எழுத்தையும் பெற்ற தாயின் முதல் பெயரையும் தனது பெயரின் முதலில் கொண்டு 'மதுரை சண்முகவடிவு சுப்புலட்சுமி' என்று நாமம் சூட்டிக் கொண்டவர். தன் தாயார் இசைக்கச்சேரிகளுக்குப் போகும் பொழுதெல்லாம் மற்ற குழந்தைகள் போலத் தாய்ப்பாசத்தால் உடன் செல்வார். சங்கீதக் குடும்பப் பின்புலத்தில் பிறந்ததால் சிறுமி சுப்புலட்சுமி சங்கீதத்தில் அதிகம் நாட்டத்துடன் இருந்துள்ளார். எம்.எஸ். என்று பின்னாளில் உலகப் புகழ்பெற்ற சுப்புலட்சுமி அவர்களை, மகாகவி பாரதி தமிழ்ப்பணியாற்றிய சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் மேடையில் பாடிக் கொண்டிருந்த அம்மா வீணை சண்முகவடிவு அழைத்து மேடையேற்றிப் பாடச் சொல்ல, விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பதற்கேற்ப நன்றாகப் பாடினார். அன்று தொடங்கிய இசைக் குயிலின் இசைப்பயணம் அவரின் 81ஆம் அகவை வரை வளர்பிறை போல் வளர்ந்து கொண்டேயிருந்தது. 1997இல் தனது கணவரின் இறப்புக்குப் பின் இசைபாடுவதை நிறுத்திக் கொண்டார்.

தனது பெற்றோருடன் பத்து வயதில் அன்றைய சென்னைப் பட்டினத்திற்குக் குடிபெயர்ந்து புரசைவாக்கம் டாணா தெருவில் குடியேறினார். சென்னை வாழ்க்கை இவருக்குப் பன்மொழியில் பாடும் வாய்ப்பைப் பெற்றுத்தந்தது. குடும்பச் சூழலில் தமிழும் சமஸ்கிருதமும் இயல்பாகப் பெற்ற இவர் தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, வங்காளமொழி, குஜராத்தி ஆகிய மொழிகளில் பாடியிருக்கிறார். இந்துஸ்தானி இசைப் பயிற்சியும் முறையாகப் பெற்றவர்.

திருமணம்

கச்சேரி ஒன்றிற்காக மும்பைக்குச் சென்ற பொழுது அவருக்குத் துணையாகச் சென்ற விடுதலைப் போராட்ட வீரரும் சிறந்த சமூகச் சேவகரும், திரைப்படத்தயாரிப்பாளருமான டி.சதாசிவம் அவர்கள் எம்.எஸ். அவர்களின் குணம் மற்றும் செயற்பாடுகளில் மனம் பறிகொடுத்தார். எம்.எஸ். அம்மா அவர்களிடம் திருமணம் செய்யும் தனது விருப்பத்தைத் தெரிவிக்க, அவரும் இசைந்துள்ளார். சென்னைத் திருநீர்மலையில் 10.7.1940இல் இந்து முறைப்படித் திருமணம் செய்து வாழ்க்கைத் துணையாக்கிக் கொண்டார்.

எம்.எஸ். அவர்களுக்குச் சிறந்த கணவர் வாழ்க்கைத் துணையாகக் கிட்டியது, இவரின் வெற்றிகளுக்கும் சாதனைகளுக்கும் துணையாக அமைந்ததோடு, இசைப்பயணத்திற்கு அடித்தளமாக அமைந்தது. ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னும் ஒரு பெண் உண்டு என்ற கருத்தியலுக்கு மாறாக எம்.எஸ். அவர்களின் வெற்றிகளுக்கும், சாதனைகளுக்கும் பின்புலமாகக் கணவர் டி.சதாசிவம் இருந்துள்ளார். இவரின் இத்தகைய சீரிய செயலைக் கண்ட மூதறிஞர் ராஜாஜி அவர்கள் "உங்கள் மனைவியிடம் நீங்கள் காட்டிவரும் அன்பும், ஈடுபாடும், சுயநலமற்ற தன்மையும் என்னை வியக்க வைக்கின்றன" (சாரதி, இசை உலகின் இமையம் எம்.எஸ்., ப.166) என்று நெஞ்சாரப் பாராட்டியுள்ளார்.

எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் தன் கணவர் தனது முன்னேற்றத்திற்குப் பக்கபலமாக இருந்ததை,

> *வாழ்க்கையில் பலருக்கு நான் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். ஆனால் என் கணவருக்கு நான் பட்டிருக்கும் நன்றிக் கடனோ . . . வார்த்தைகளால் வடிக்க முடியாது. இன்றைய எனது அந்தஸ்துக்கும், இசைத்துறையில் நான் அடைந்துள்ள வெற்றிக்கும் முழு முதல் காரணமாக மற்றெல்லாரையும் விட மிக முக்கியமானவராக அமைந்திருப்பவர் என் கணவரே. தனது சொந்தச் சௌகரியங்கள், வசதிகள் இவற்றையெல்லாம் பற்றி ஒரு சிறிதும் கவலைப் படாமல் ஒதுக்கிவிட்டு, என் புகழுக்காகவும் பெயருக்காகவும் இரவு, பகல் பாராமல் உழைத்தவர் அவர். சமூகத்திலும்*

இசைத்துறையிலும் நான் முன்னேற வேண்டும் என்பதுதான் அவரது லட்சியமாகவே இருந்தது. இத்துறையில் இன்றைய எனது நிலைக்கு அவரே காரண புருஷராக விளங்குகிறார். நான் அடைந்துள்ள புகழும் பெருமையும் முழுதும் அவரைத்தான் சேரும். அதற்குரியவர் என் கணவரே"

(சாரதி, இசை உலகின் இமையம் எம்.எஸ்., ப.168).

என்று மனமார ஒப்புக் கொண்டிருக்கிறார்.

இசையும் புகழும்

தமிழ் என்றால் இனிமை, நீர்மை, தேவாரம் என்று பல பொருள்களுண்டு. திருநாவுக்கரசர் "தமிழோடிசைப் பாடல் மறந்தறியேன்" என்பதில் தமிழையும் இசையையும் பிணைத்திருக்கிறார்.

இசை மனத்திற்கு இன்பத்தையும் அமைதியையும் கொடுக்கவல்லது. உணர்வுக்கும் அறிவுக்கும் விருந்தாக அமைகின்றது. இசை பாடுவோரையும் கேட்போரையும் இசைவிக்கின்றது. பாட்டு, தாளம், பண் முதலியவற்றையும், பலவகை இன்னிசைக் கருவிகளையும் ஒன்றுவிக்கின்றது; சொல்லையும் பொருளையும் இசைவிக்கின்றது; உள்ளத்தையும் உணர்வையும் ஒன்றுவிக்கின்றது; சிந்தையையும் மொழியையும் சேர்ப்பிக்கின்றது; கேட்போர் பலரையும் கூட்டுவிக்கின்றது. இன்னோரன்ன பல இசைவுகள் கொண்டே தமிழில் இது 'இசை' என்னும் பெயரைப் பெற்றிருக்கின்றது. ஒருவரின் வாழ்வு இன்பமயமாக, அமைதியாக அமைய இசையில் ஈடுபாடு வேண்டும். இசை இடம்பெறாத மக்கள் வாழ்க்கை வாழ்க்கையாகாது. வாழ்க்கையில் முழுத்தன்மையும் முற்றுப்பெற வேண்டுமானால், இசையும் ஒரு கூறாக இடம்பெற்றிருக்க வேண்டும் (ச. ஆறுமக முதலியார், இலக்கிய ஓவியங்கள், ப.8).

என்கிறார் ச. ஆறுமுகம் முதலியார்.

இசையும் எம்.எஸ். சுப்புலட்சுமியும்

இசைக்கு மயங்காத உயிரினங்களே இல்லை என்பர். தன் இன்னிசையால் பலரை ஈர்த்தவர் இவர். இசைப் பின்புலமுள்ள

குடும்ப மரபில் பிறந்து வளர்ந்தவர் என்ற போதிலும் முசிறி சுப்பிரமணிய அய்யர், வித்வான் ஸ்ரீநிவாச அய்யங்கார், மழவராயனேந்தல் சுப்பராம பாகவதர், அரியக்குடி ராமாநுஜ அய்யங்கார், தட்சிணாமூர்த்தி பிள்ளை, சங்கீத பூஷணம் வீணை நாராயண சாமி, செம்மங்குடி ஸ்ரீநிவாச அய்யர், பாபநாசம் சிவன், டி.எல். வெங்கட்ராம அய்யர் போன்றவர்களிடம் குருபக்தியுடனும் ஈடுபாட்டுடனும் முறையாக இசையையும், கீர்த்தனைகளையும், தாளங்களையும் கற்றுக் கொண்டவர். இசையில் உன்னத நிலையை எட்டிய பொழுதிலும் தினமும் பல மணிநேரம் இசைப்பயிற்சி மேற்கொள்வது இவரது பழக்கம். இயற்கையாக வாய்த்த அபார சாரீர வளம் பெற்றவர். மகாராஜபுரம் விசுவநாத அய்யர், செம்மங்குடி சீனிவாச அய்யர், செம்பை வைத்தியநாத பாகவதர், மாணிக்கம் பிள்ளை, ராஜரத்தினம் பிள்ளை, பாலக்காடு மணி அய்யர், ஜி.என். பாலசுப்பிரமணியம் போன்றோரின் கச்சேரிகளைச் சிறுவயதில் கேட்டு இன்புற்றவர். கச்சேரிகளில் பாடும் பொழுதும் கற்றுக் கொள்பவர். பாராட்டும் பெற்றவர். இசையை முறையாகக் கற்றுக் கொண்டு, தான் பிறந்த மதுரையில் தனது பதினைந்தாவது வயதில் முதல் இசைக் கச்சேரியைத் தொடங்கினார்.

இருபதாம் நூற்றாண்டில் 'இசை' என்ற சொல்லுடன் இரண்டறக் கலந்தவர். இசையின் உருவம். இசையுலகின் ஓமயம். இசைக்கு மொழி, மதம், இனம், நாடு என்ற வரையறையில்லை. எந்த நாட்டினரையும் மொழியினரையும் இசையால் வசமாக்கலாம் என்பதை இவரின் இசை மெய்ப்பிக்கின்றது. இவருடன் அணுக்கமாக இருந்த ரங்கராசன் என்பவர், 'சரஸ்வதியின் மறு உருவாகவே அவரை நாங்கள்பார்க்கிறோம்' என்கிறார்.

> *ராக சஞ்சாரங்களில் எழில்மிக்க சித்திர விசித்திரங்களோடு, கமக கம்பீரம், கார்வைகளின் அமைதி, உச்சரிப்பின் சிறப்பு, பக்தி பூர்வம், ஸ்வரம், இதயத்திலிருந்து ஸ்புகித்து வரும் பாவபூர்வம் இவை எல்லாம் அவரது தனிச்சிறப்புகள் (சாரதி, இசை உலகின் மையம், எம்.எஸ்., ப. 150).*

என்பது இவரின் இசைச் சிறப்பை வெளிக்காட்டும்.

இருபதாம் நூற்றாண்டில் இசைத்துறையில் மிக உன்னத நிலையிலிருந்த பொழுதும் எங்கேனும் முக்கிய இடங்களுக்குப்

பாடச் செல்லும் பொழுது அவரும் அவருடைய கணவரும் மூதறிஞர் இராஜாஜி, காஞ்சிப் பெரியவர் போன்ற பெரியவர்களிடம் கருத்துக்கேட்ட பின்னரே பாடச் செல்வது வழக்கம். ஐந்தாம் வகுப்பு வரை மற்றுமே இயல்முறைக் கல்வி கற்றவர். பின்னாளில் இசைப் பல்கலைக்கழகமாக மிளிர்ந்தவர். இந்துஸ்தானி இசையைப் பண்டித நாராயணராவ் வியாசியிடமிருந்து கற்றுக்கொண்டார். 1926இல் பத்துவயதில் 'மரகதவடிவும் செங்கதிர் வேலும்' பாடல் இவர் முதன்முதலில் வெளியிட்ட எல்.பி. இசைத் தட்டாகும். இசையில் உலகப் புகழ்பெற்ற எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் இசைக்காக 1998இல் இந்தியாவின் மிக உயர்ந்த விருதான பாரத ரத்னா விருதினைப் பெற்று, இசைக்காக இவ்விருதினைப் பெற்ற இரண்டு பெண்மணிகளில் ஒருவராகத் திகழ்கின்றார். ஐக்கிய நாடுகளின் சபையில் இந்திய இசையைப் பாடி இந்தியாவிற்குப் பெருமை சேர்த்தவர். அமெரிக்கா, இலண்டன், எகிப்து, பிலிப்பைன்ஸ், ஜப்பான், ஹாங்காங், தாய்லாந்து, சிங்கப்பூர், மலேசியா, ஜெர்மனி, இலங்கை ஆகிய நாடுகளில் இசைக்கச்சேரி நிகழ்த்தியவர். தமிழ்நாட்டில் பிறந்து உலக நாடுகள் பலவற்றில் இசைக்கச்சேரி நிகழ்த்திய ஒரே பெண்மணி என்ற தனிப்பெருமை பெற்றவர். தேமதுரத் தமிழோசை உலகெல்லாம் பரவும் வகை செய்திடல் வேண்டும் என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க தமிழிசையை உலகின் பல பாகங்களில் பரப்பியவர்.

திரைப்படத் துறை

இவரது இசைப் புலமையை அறிந்த அக்காலத் திரையுலகம் இவரைத் திரைப்படக் கலைஞராகவும் கண்டது. டி. சதாசிவம் தான் தயாரித்த சகுந்தலை படத்தில் இவரைக் கதாநாயகி ஆக்கினார். இவருக்கு இத்துறையில் மிகுந்த புகழைப் பெற்றுத் தந்தது 'பக்த மீரா' ஆகும். இப்படத்தில் இவர் பாடிய காற்றினிலே வரும் கீதம், பிருந்தாவனத்தில் கண்ணன், கிரிதர கோபாலா போன்ற பாடல்கள் அக்காலத் திரைப்படப்பாடல்கள் இரசிகர்களை மட்டுமல்லாது பக்தர்களையும், இக்காலத்தவர் சிலரையும் ஈர்த்தன. அந்தக் காலத்தில் திரைப்படங்களில் பாடும் ஆற்றல் பெற்ற பாடகிகள் தான் நடிகையாக முடியும். இவரின் இனிமையான குரல் வளத்தைக் கண்ட கே. சுப்பிரமணியம் 'சேவாதளம்' என்ற படத்தில் இவரைக் கதாநாயகியாக நடிக்க வைத்தார். பாடல், நடிப்பு இரண்டிலும் சிறந்து விளங்கியுள்ளார். ஆண் வேடத்தில் நடிக்க மறுத்து, பின் தன் கணவரின் இதழியல்

பணிக்காகச் சாவித்திரி படத்தில் ஆண்வேடமிட்டு நடித்திருக்கிறார்.

சமூகச் சேவை

இசைத்துறையிலும் திரைப்படத் துறையிலும் அக்காலத்தில் பெரும் பொருள் ஈட்டியவர்கள் பலர், அசையும், அசையாச் சொத்துக்களாக வாங்கிக் குவித்த வேளையில் எம்.எஸ். சுப்புலட்சுமி இசைக் கச்சேரிகள் மூலம் சம்பாதித்த பணம், பொருள் அனைத்தையும் இறைத் தொண்டிற்கும் சமூகச் சேவைக்கும் தானமாக வழங்கிய- தனக்கென வாழாப் பிறருக்கென வாழ்ந்த பெருந்தகை. இவரது கல்வி, ஆன்மீக, சமூகச் சேவைகளை அடுக்கிக் கொண்டே செல்லலாம். இந்தியாவிலும் ஐக்கியநாடுகள் சபை, அமெரிக்க, ஜப்பான், தாய்லாந்து, சிங்கப்பூர் போன்ற உலகநாடுகளிலும் பாடச் சென்ற பொழுது ஈட்டிய பணத்தை அவ்விடங்களிலுள்ள கல்வி நிறுவனங்கள், ஏழை எளிய மக்களுக்குக் கொடுத்தவர். இலங்கையில் இசைக் கச்சேரி பாடச் சென்ற பொழுது பெற்ற நாற்பது இலட்சம் ரூபாயை அங்கேயுள்ள பல அமைப்புகளுக்கும் வாரி வாரி வழங்கியவர். உலகத்தில் அமைதியும் அறநெறியும் தழைக்க மங்கள சுலோகங்கள் பாடிப் பிரார்த்தனை செய்தது பாரதத்திற்கு மட்டுமல்ல, உலகிற்கே பெருமையளிப்பதாகும் என்கிறார் திருமதி சந்திரகாந்தி கோவிந்தராஜூலு. 1944லிலேயே நான்கு இசைக் கச்சேரிகள் மூலம் இரண்டு கோடி ரூபாய் சம்பாதித்து மருத்துவம், கல்வி, அறிவியல் ஆராய்ச்சி மற்றும் சமயத் தொண்டுகளுக்கு வழங்கிய கொடையாளர். பல ஏழை எளியவர் களுக்கும் அனாதை இல்லங்களுக்கும் இசைத்துறையிலும் திரைத்துறையிலும் சம்பாதித்த பணத்தை அள்ளிக் கொடுத்த வள்ளலாகத் திகழ்ந்திருக்கிறார். தனக்குக் குழந்தைச் செல்வம் இல்லாததை எண்ணி வருந்தாது ஏழைக் குழந்தைகளை, அனாதைக் குழந்தைகளைத் தன் குழந்தைகளைப் போல் பாவித்தார். காந்தியத்தில் ஈடுபாடுடையவர். ஆச்சாரமான குடும்பத்தில் பிறந்த பொழுதும் தீண்டாமை, கலப்புத் திருமணம், விதவைத் திருமணம் போன்றவற்றை ஆதரித்த முற்போக்குச் சிந்தனையாளர்.

இறை நம்பிக்கை

கடவுள் நம்பிக்கை மனிதர்களைப் பக்குவப்படுத்தும். வழிபாட்டில் இசை இன்றியமையாதது. இறைவன் இசை

வடிவானவன் என்பதைப் 'பண்ணின் இசையாய் நின்றாய் போற்றி' என்கிறார் அப்பர். ஏழிசையாய் இசைப் பயனாய் இருப்பவன் இறைவன். இயலவன் இசையவன் என்பர். மனிதர்களை இறைவனிடம் ஒன்றவைக்கும் தன்மை இசைக்குண்டு. ஞான சம்பந்தரை 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்' என்பர். பார்ட்டினைப் போல் இன்பம் பாரின் மிசை யில்லை என இசையில் மனத்தைப் பறிகொடுத்த பாரதி தீவிர இறைப்பற்றாளர். பக்தியுணர்வில் இசையுடன் பண்கலந்த பாடல்களைப் பாடிய காரைக்காலம்மையார், திலகவதியார், ஆண்டாள் வரிசையில் இருபதாம் நூற்றாண்டில் எம்.எஸ். அவர்களையும் இணைத்துக் கொள்ளலாம். அவர்களைப் போல் பக்திப் பனுவல்கள் படைக்கவில்லையாயினும் இறையுணர்வுடன் பாடிய பாட்டுத் திறத்தால் அவர்களுடன் ஒப்பவைத்து நோக்கத் தகுதியுடையவர். வழிவழியாக வந்த தமிழிசை மரபை, கர்நாடக இசையைத் தம்காலத்தில் கட்டிக் காத்து, வளர்த்தவர்.

> *'பாடும் பொழுது சுப்புலட்சுமி பக்தியால் பரமனிடம் வயப்பட்டு, மற்றவரையும் அவரைப் போலவே பரமனிடம் லயிக்க வைத்து விடுவார்' என்கிறார் காந்தியடிகள். ஸ்ரீவெங்கடேஸ்வர சுப்ரபாதம் இவரின் பெரும் சாதனையாகும். நமது இசையின் முக்கிய அம்சம் பக்தி. பக்தியுடன் இணைந்ததே நமது இசை. எனவே நமது இசை பரவும் போதே பக்தியும் பரவும். இதனால் உயர்நெறி கொண்ட வாழ்க்கையும் அமையும் (சாரதி, இசை உலகின் மையம், எம்.எஸ், ப. 159).*

என்கிறார். இதன்வழி இவரின் இசையுடன் கூடிய பக்தி நிலையை உணரலாம்.

நாட்டுப்பற்று

எம்.எஸ். அவர்கள் இந்தியா ஒன்றுபட்ட, அமைதியான, வளமான நாடாக உலக அரங்கில் விளங்க வேண்டும் என விழைந்ததோடு மட்டுமல்லாமல் இந்திய ஒருமைப்பாட்டிற்குத் தன் இசையால் தொண்டாற்றியவர். இந்தியத் தாயின் திருமகளாகத் திகழ்ந்தவர். இந்தியமொழிகள் சிலவற்றை இசை நோக்கிலே கற்றுத் தேர்ந்து, இசையால் பல மாநிலத்தவர்களை மகிழ்வித்து மாநிலங்களுக்கிடையே ஒற்றுமை நிலவப் பாடுபட்டவர். தான் இசைக் கச்சேரிகளில் உழைத்துச் சம்பாதித்த

வருவாயில் ஒரு பகுதியை இந்திய தேசத்தின் வளர்ச்சிக்கு அளித்தவர். இந்திய-சீனப் போரின் போது தன்னிடமிருந்த பொருளையும் பணத்தையும் அள்ளிக் கொடுத்தவர். 'நாம் பிறந்த நாட்டுக்கு, நம்மை அன்புடன் நேசிக்கும் மக்களுக்குப் பிரதியுபகாரமாக நம்மால் முடிந்த தொண்டையும் உதவிகளையும் செய்யத் தவறவோ, தயங்கவோ கூடியது' என்ற இவரின் கூற்று இவரது நாட்டுப் பற்றிற்குச் சிறந்த சான்றாகும். காந்தி, நேரு போன்ற தேசத் தலைவர்களுடன் பல வழிபாட்டுக் கூட்டங்களில் கலந்து கொண்டு நாட்டு நலத்திற்காகப் பாடிய பற்றாளர். உலகில் சமாதானம், ஒற்றுமை, அன்பு, அமைதி நிலவப் பாடுபடும் ஐக்கிய நாடுகள் சபையில் உலக அமைதிக்காகப் பாடிய பெருமையும் பெற்றவர். இந்தியாவிற்குத் தன் இசையால் பெருமை சேர்த்தவர். இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கு இவர் ஆற்றிய சேவைக்காக 1990இல் இந்திராகாந்தி விருதினைப் பெற்றார்.

மிதவாதப் பெண்ணியச் சிந்தனையாளர்

மேலை நாடுகளில் தோற்றம் பெற்ற பெண்ணியச் சிந்தனைகள் சமூகத்திலும் இன்றைய தமிழிலக்கிய உலகிலும் பெரிதும் விவாதிக்கப்படும் பெண்ணியமாக விளங்குகின்றன. சாதனைப் பெண்மணி எம்.எஸ். அவர்களின் வாழ்வியலைத் தனித்து நோக்கும் நிலையில் அவரது பெண்ணியச் சிந்தனைகளைக் காண்பது தேவையான அணுகுமுறையாகிறது. கூட்டுக் குடும்பச் சூழலில் பிறந்து வளர்ந்த எம்.எஸ். அவர்களிடம் மிதவாதப் பெண்ணியச் சிந்தனை இருந்ததை அவரது வாழ்வியல் வெளிப்படுத்துகின்றது. பெண்கள் குடும்பத்திலும், சமூகத்திலும், குறிப்பாகப் புகுந்த வீட்டிலும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாய்த் திகழ்ந்தவர். இவருடைய குடும்பத்தில் நெருங்கிப் பழகிய சாரதி 'சுற்றத்தாரையும் நண்பர்களையும் பேணும் நல்லியல்பு நிறைந்தவர். அவர்கள் மகிழ்ச்சியில் தன் மன நிறைவைக் காண்பவர் திருமதி எம்.எஸ். அவர்கள்' என்கிறார்.

பாராட்டுகள், பட்டங்கள், விருதுகள்

உழைப்பால் உயர்பவர்களை, சேவை மனம் கொண்டவர்களை, தகுதியும் திறமையும் படைத்தவர்களைப் பதவிகளும், பட்டங்களும் விருதுகளும் தேடிவந்து சேரும் என்பதற்கேற்ப, இசையில் மிகுந்த பயிற்சியும் வெளிப்படுத்தும்

திறனும் கொண்டிருந்த எம்.எஸ். அவர்களின் வாழ்வில் பல பாராட்டுகளும், பட்டங்களும், விருதுகளும் வந்து சேர்ந்து கொண்டேயிருந்தன. இந்தியாவிலிருந்தும், உலக நாடுகளிலிருந்தும் **கோகிலகானம், இசைவாணி, சங்கீதகலாநிதி, தென்னகத்தின் இசைக்குயில், சர்விகார், தேசிகோத்தமா, தனிப் பெருங்கவிஞர், சங்கீத விதூஷமணி, இசைப்பேரறிஞர்** போன்ற பல பட்டங்களும் விருதுகளும் அவருக்குக் கிடைத்தன.

கல்கத்தா இரவீந்திரபாரதி சர்வகலா சாலை, டில்லி பல்கலைக்கழகம், திருப்பதி வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகம் ஆகியன இவருக்கு **டாக்டர் பட்டம்** வழங்கிச் சிறப்பித்தன. **1992ஆம் ஆண்டின் சிறந்த பெண்மணி, பத்மபூஷன், பத்மவிபூஷன்** போன்ற பல விருதுகள் சிறந்த அமைப்பு, நிறுவனங்கள், சங்கீத சபைகளிடமிருந்து வந்து சேர்ந்தன. உலகில், இந்தியாவின் சிறந்த மனிதர்களான காந்தியடிகள், பண்டித நேரு, இசைவிமர்சகர் சுப்புடு, முசிறி சுப்பிரமணிய அய்யர், செம்மங்குடி சீனிவாச அய்யர், நேபாள அரசர், மைசூர் மகாராஜா, காஷ்மீர் அரசர், வி.கே. நாராயண மேனன், டி.டி. கிருஷ்ணமாச்சாரி, கோவிந்த வல்லபந்த், எர்னெஸ் நியூட்மென், அமெரிக்க சீமாட்டி ஹெலன் கெல்லர் போன்ற பலர் பலவாறு பாராட்டியுள்ளனர். மகாவித்வான் செம்பை வைத்திய நாத பாகவதர் சுபலட்சுமியின் கச்சேரியைக் கேட்பதற்காகவே அடிக்கடி மதுரைக்குப் போவதுண்டு என இவரின் இசையில் ஈர்க்கப்பெற்றுப் பாராட்டியிருக்கிறார்.

இந்தியாவின் முதல் பிரதம மந்திரி நேரு அவர்கள், "அவரோ இசை உலகின் பேரரசி. பேரரசியின் முன் பிரதம மந்திரி எம்மாத்திரம். ராணிக்கு முன் சாதாரண மந்திரியான நான் யார். இசை உலகின் ராணி எம்.எஸ். சுப்புலட்சுமி" என்று பாராட்டியிருக்கிறார். இசை வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த செட்டிநாட்டு அரசர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் 'ஸ்ரீமதி சுப்புலட்சுமி அவர்கள் கர்நாடக சங்கீதமும் தமிழ் சங்கீதமும் ஒன்றுதான் என்று நிரூபித்த பெரிய சங்கீத வித்வான்' என்கிறார். இந்தியாவின் மிக உயரிய விருதான 'பாரதரத்னா' விருதை 1998ஆம் ஆண்டு இந்திய அரசு இவருக்கு வழங்கிச் சிறப்பித்துள்ளது.

எங்களூர் எம்.எஸ். இன்று ஏழுகடல் புகழ் பெற்றார்!
தங்கம் போல் சங்கீதங்கள் கொண்டல் போல் கொடை
வளங்கள்

எங்கிலும் நற்பெயர்கள் இணையிலாச் செல்வமெல்லாம்
மங்கலமாய்ப் பெற்ற மாபெரும் லக்ஷ்மி வாழ்க"

(சாரதி, இசை உலகின் மையம், எம்.எஸ்., ப. 146)

என நெஞ்சாரப் பாராட்டுகிறார் சாரதி.

பாட்டுத் திறத்தாலே – இவ்வையகத்தைப்
பாலித்திட வேண்டும்

என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க தனது இனிய குரல் வளத்தால், பாட்டுத்திறத்தால் இந்தியாவையும் உலக நாடுகள் பலவற்றையும் ஈர்த்தவர்.

முடிவுரை

மாநகர் மதுரையில் பிறந்து, சென்னையில் வளர்ந்து, உலகெல்லாம் பயணித்து, இசையால் மக்களை மகிழ்வித்தவர் எம்.எஸ்.அவர்கள். பெண்மை என்பதற்கு எடுத்துக்காட்டாகவும், எளிமை, அடக்கம், அன்பு ஆகியவற்றின் இருப்பிடமாகவும் திகழ்ந்தவர். மாமனிதர்களின் நன்மதிப்பையும், பாராட்டுகளையும், பட்டங்களையும், உயரிய விருதுகளையும் பெற்றுப் புகழின் உச்சியில் இருந்தபொழுதும் மக்களையும் மண்ணையும் நேசித்த காந்தீயவாதி; தேசப்பற்றாளர். இசைக்கு இலக்கணமாய், கலைவாணியின் மறுவடிவாய் விளங்கிய இசைக்குயில் 11.12.2004இல் சிந்துக்குத் தந்தை, பாட்டிசையில் மனத்தைப் பறிகொடுத்த மகாகவி பாரதி பிறந்த நாளில் இறைவனடி சேர்ந்தார். மரணத்திற்குப் பின்பும் மக்கள் மனங்களில் இசையாய் வாழ்கிறார் எம்.எஸ். சுப்புலட்சுமி.

வீணை தனம்மாள்

எம்.ஏ. பாகீரதி

இசைவாணர் பலருடைய பெயர்களை அவர்களுடைய பிறந்த ஊர்களின் பெயர்களாலேயே நாம் குறிக்கின்றோம். ''செம்மங்குடி'' என்பது அவ்வூரில் பிறந்து புகழ்பெற்ற இசைவாணராக விளங்கிய சீனிவாச ஐயர் அவர்களைக் குறிக்கும். தர்மபுரம் என்று நாம் குறிப்பிட்டால் அது இசை உலகில் தேவார இசைவாணர் சுவாமிநாதர் அவர்களைக் குறிப்பதாகும். இவ்வாறே சில இசைக் கருவிகளைக் குறிப்பிடும் பொழுது அவற்றை இசைத்த இசைவாணர்களையே நாம் குறிப்பிடுகின்றோம். இவ்வகையில் 'வீணை' என்றால் 'தனம்' என்றும் 'தனம்' என்றால் 'வீணை' என்றும் இசையுலகில் இன்றளவும் பொருள் கொள்வர். இதற்குக் காரணம், இசை உலகில் அவர் வீணை இசைத்தலின் மூலம் ஆற்றிய தொண்டே ஆகும். இவருடைய இசைத் தொண்டை நாம் சிறிது ஆய்வு செய்வோம்.

தனம்மாளின் குலப்பெருமை

இவருடைய முன்னோர்கள் ஆறு தலைமுறைக்குமேல் இசை மற்றும் நடனத்தில் திறமை பெற்றவர்களாக இருந்தனர். பாப்பம்மாள் என்பவர் தஞ்சை அரசவையில் 18ஆம் நூற்றாண்டில் இசை மற்றும் நடனக் கலைஞராக இருந்தவர். பாப்பம்மாளின் மகள் ருக்மணி ஆவார். இவரும் இசை மற்றும் நடனத்தில் புலமை பெற்றிருந்தார். ருக்மணியின் பெண் தஞ்சாவூர் காமாட்சி (1810-1890) ஆவார். இவர் பட்டணம் சுப்பிரமணிய ஐயரின் தாய்மாமனாகிய பரதம் கணபதி சாஸ்திரி என்பவரிடம் நடனம் பயின்றார். மேலும் திருவாரூர் மூவரில் ஒருவரான சியாமா சாஸ்திரியின் மகன் சுப்பராய சாஸ்திரியிடம் இசை பயின்றார். மேலும் ஆனை ஐயா சகோதரர்களிடமும் இசை பயின்றார். காமாட்சி பிறந்த ஒரு சில ஆண்டுகளிலேயே தஞ்சை அரசு தனது முக்கியத்துவத்தை இழந்தது. 1855இல் தஞ்சை அரசர் 2ஆம் சிவாஜி மரணமடைந்த பின்பு தஞ்சை அரசு நிலைக்கவில்லை. எனவே அதனைச் சார்ந்த இசை மற்றும் நடனக் கலைஞர்கள் வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்நிலையில் அரசவைக் கலைஞரான காமாட்சியை ரங்கூன் கிருஷ்ணசாமி முதலியார் என்பவர் ஆதரித்தார்.

இளம்பருவச் சூழலையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதைப் பூரணி அம்மையாரின் வாழ்வியல் நிகழ்வுகளும் படைப்புகளும் ஒருங்கு நிறுத்திப் பார்க்கையில் தெரிகின்றது. அம்மையாரின் படைப்பில் சகிப்புத்தன்மை அல்லது ஒருங்கிருத்தல் என்பது இழையோடுவதற்குக் காரணமே அவர் பிறந்து வளர்ந்த சூழலும் மணம் முடித்து வாழ்ந்த சூழலும் 'ஜனத்திரளாக' அமைந்திருந்ததுதான் எனலாம். பெண்களை உயர்வாக மதிக்க வேண்டும் எனும் வித்து அம்மையாரின் பிறந்தகச் சூழலில் விதைக்கப் பெற்றுவிட்டதைக் கீழ்வரும் பகுதி தெளிவாக்குகின்றது.

> *சீதாலக்ஷ்மியின் குடும்பம் பெருகியது. குழந்தைகள் பிறந்தன. சில சமயம் வீடு செழிப்பாகவும், சில சமயம் பற்றாக்குறையுடனும் இருந்தது. ஆனால் இதெல்லாம் கணவன் மனைவிக்குள் எந்தவிதப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. அங்கே பரஸ்பர அன்பு இருந்தது. ஐயர் மனைவியை மதிக்கத் தெரிந்தவர். அவர் தன் போக்கில்தான் செயல்படுவார் என்றாலும் மனைவி ஏதேனும் ஆலோசனை சொன்னால் கூர்ந்து சிரத்தையுடன் கேட்டுக்கொள்வார். பெண் என்று தாழ்வாகப் பேசமாட்டார். மனைவி, குழந்தைகளிடம் மிகுந்த பாசத்துடன் பழகுவார். அன்பொழுகப் பேசுவார். பெண் குழந்தைகள் தான் அதிகம் பிறந்தன என்றாலும் சலிப்படையாமல் அவர்களை, 'பெண்களா கண்களா' என்று அழைத்து அன்பு செலுத்துவார். இது சீதாலக்ஷ்மிக்கு மிகுந்த பூரிப்பைக் கொடுக்கும். ஏனென்றால், அவளுடைய அக்காள்களின் கணவர்கள் 'பொட்டைக் கழுதைகளா' என்று தமது மனைவிகளைத் திட்டி அலட்சியப்படுத்துவார்கள் (2005: 6).*

எனவே, பூரணி அம்மையாரிடம் காணப்பெறும் பெண் தொடர்பான கருத்தியல்களுக்கான அடித்தளம் பிறந்தகம் என்றே கூறலாம். இந்நிலையில் பூரணி அம்மையார் எனும் படைப்பாளியின் படைப்பாளுமையைக் கட்டமைத்தலில் பிறந்து வளர்ந்த சூழல் முக்கிய இடம் வகிக்கின்றது என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். ஒரு படைப்பை அதுவும் பெண்களின் படைப்பைப் புரிதலுக்கு ஆட்படுத்துகையில்

வழங்கத் துவங்கினார். இப்படித்தான் இரு பெண்கள் சேர்ந்து பாடுவது என்ற வழிமுறை துவங்கியது. 7 வயதிலேயே தனம், தன் சகோதரர் நாராயணசாமி வயலின் இசைக்க, வினிகைகள் செய்யத் துவங்கினார்.

சாத்தனூர் பஞ்சநாத ஐயர் என்பவரிடம் தனம் இசை பயின்றார். சாத்தனூர் பஞ்சநாத ஐயரின் குரு சுத்தமத்தளம் தம்பியாப் பிள்ளை ஆவார். இவர் முத்துசாமி தீட்சதரிடம் இசை பயின்றவர். சாத்தனூர் பஞ்சனாத ஐயரிடம் தனம் இசை பயின்றபொழுது இவரோடு பயின்றவர் திரும்பாம்புரம் நடராஜ சுந்தரம் பிள்ளை ஆவார். அவர்தான் முதன் முதலில் தீட்சிதருடைய பாடல்களைப் புத்தகமாகப் பதிப்பித்தவர்.

தனம் தன் வாழ்நாள் முழுவதும் புதுப்புதுப் பாடல்களைக் கற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டினார். இவ்வாறு தான் அவர் வாலாஜாப்பேட்டை பால்தாஸ் நாயுடு என்பவரிடம் க்ஷேத்ரய்ய பதங்களைக் கற்றுக் கொண்டார். பாலதாஸ் நாயுடு மொத்தவெரபு வெங்கடசாமி நாயுடு என்பவரின் ஆதரவில் மயிலையில் வசித்து வந்தார். தனம் அங்குச் சென்று பதங்களைக் கற்றுக்கொண்டார்.

தனம் தஞ்சை நால்வர் வழியில் வந்தவர்களிடம் அவர்கள் இயற்றிய பாடல்களைக் கற்றுக் கொண்டார். தர்மபுரி சுப்பராயர் என்ற இசை வாணர் தனம்மாளை முதன் முதலில் டி.டி. ரங்காச்சாரி என்பவரின் இல்லத்தில் சந்தித்தார். தனம்மாளின் இசைப் புலமையைப் பார்த்துச் சுப்பராயர் வியந்தார். சுப்பராயரின் இசைப்புலமையைப் பார்த்துத் தனம்மாள் வியந்தார். சுப்பராயர் பெரும் செல்வந்தராகவும் இருந்ததால் இவர் தனத்தை ஆதரிக்கத் துவங்கினார். சுப்பராயர் பல ஜாவளிகளை இயற்றினார். அந்த ஜாவளிகள் தனம்மாளின் புகழைப்பாடவே இயற்றப்பட்டதாகக் கூறுவர். **அவையாவன:**

1. ஸ்மர சுந்தராங்குணி - பரசுராகம்
2. சகிபிராண - ஜஞ்சுட்டி ராகம்
3. நாரிமணி - காஸ் ராகம்

தனம்மாள் வீணை குப்பய்யரின் மகனான திருவொற்றியூர் தியாகய்யரிடம் இசை பயின்றார். காஞ்சீபுரம் நைனாப் பிள்ளை என்பவரிடம் தியாகராஜர் கிருதிகளைப் பயின்றார். அவர் 2 பாடல்களைக் கற்றுக் கொடுத்தால் தான் அவருக்கு ஒருபாடல் கற்றுக் கொடுப்பதாகக் கூறி அவரிடம் இசைபயின்றார்.

தனத்தின் குடும்பம்

தனம்மாள் மிகுந்த செலவாளியாக விளங்கினார். அதிகப்படியான நகைகள் அணிவதிலும் புடவைகள் அணிவதிலும் அதிகமான ஆர்வம் காட்டினார். 1900 களிலேயே வெற்றிலை பாக்கிற்காக ரூ.5 செலவழித்தார். இவ்வாறான அதிகப்படியான செலவினங்களினால் அவர் வசித்த வீடு ஏலத்திற்கு வந்தது. அப்பொழுதே தனம்மாளுக்கு ராஜலஷ்மி, லஷ்மிரத்னம், ஜெயம்மா, காமாட்சி என்ற மகள்கள் இருந்தனர். வீடு ஏலத்திற்கு வந்ததால் அவர்கள் மூலைக்கொருவராய்ப் பிரிந்து தங்களின் உறவினர்களின் வீடுகளில் தங்கினார்கள். தர்மபுரி சுப்பராயரால் தனம் மற்றும் அவரது குழந்தைகளைத் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை. இது நடந்த சிறிது காலத்திலேயே சுப்பராயர் இறந்தார்.

இந்தச் சமயத்தில் ஜலதரங்கம் ரமணய்ய செட்டி என்பவர் வீணை தனம்மாளை ஆதரித்தார். தனம்மாள் குடும்பத்தினர் தங்குவதற்கு ராமகிருஷ்ண செட்டித் தெருவில் வீடு ஏற்பாடு செய்து கொடுத்தார். இந்த இல்லத்தில்தான் தனம்மாள் தனது இறுதி நாள்வரை வசித்து வந்தார். இந்த இல்லத்தில்தான் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வினிகைகள் செய்தார். தனம்மாளுக்கு 50 வயதிலேயே கண்பார்வை பறிபோனது. இருப்பினும் அவர் தன் மகள்கள் ராஜலட்சுமி மற்றும் லட்சுமி ரத்தினத்துடன் தனது இல்லத்தில் முதல் மாடியில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வினிகைகள் செய்தார். 6 மணிக்குத் துவங்கும் வினிகைகள் 8 மணிக்கு முடியும். அவற்றிற்கு டி.டி. கிருஷ்ணமாச்சாரி, கஸ்தூரி ரங்க ஐயங்கார், ர.க. ஷண்முகம் செட்டியார், டைகர் வரதாச்சாரியார் போன்றோர் வருகை புரிந்தனர்.

மைசூர் மகாராஜாவின் முன்னிலையில் இவர் வினிகைகள் செய்துள்ளார். திருவாங்கூர் அரண்மனையிலும் இவர் வினிகைகள் செய்துள்ளார். இவருடைய இசையை டி.என். ராஜரத்தினம் பிள்ளை, மதுரை ஷண்முக வடிவு (எம்.எஸ். சுப்புலட்சுமியின் அன்னை) ஆகியோர் மிகவும் ரசித்தனர். இவர் அரங்குகளில் வீணை இசைக்கும் பொழுது ஒலி பெருக்கி இல்லாமல்தான் இசைப்பார். சென்னை இசைவல்லுனரவையில் 1933 முதல் இவர் வினிகைகள் செய்துள்ளார். மேலும் அகில இந்திய வானொலியிலும் கலைஞராகத் திகழ்ந்துள்ளார். பல இசைத் தட்டுக்களையும் இவர் வெளியிட்டுள்ளார். எச்.எம்.வி. நிறுவனம் இவரது இசைத் தட்டுக்களை வெளியிட்டுள்ளது. இவற்றில் ஒருசில இசைத்தட்டுக்களே நமக்கு கிடைத்துள்ளன.

தனம் ஓர் இசை ஆசிரியர்

இவர் ஒரு சிறந்த இசை ஆசிரியர். இவரிடம் பல இசைவாணர்கள் இசை கற்றுள்ளார்கள். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் திருவாரூர் ராஜாயீ, பன்னிபாய், லலிதாங்கி (எம்.எல். வசந்தகுமாரியின் அன்னை) பரூர் சுந்தரம் ஐயர் மற்றும் முசிறி சுப்பிரமணிய ஐயர் ஆகியோர் ஆவார்கள். இவர் ஒரு வகுப்பிற்கு 5 ரூபாய் சன்மானமாக வாங்கிக் கொண்டார். அந்தக் காலக்கட்டத்திற்கு இது மிகவும் அதிகமான சன்மானம் ஆகும். எனவேதான் பரூர் சுந்தரம் ஐயரும், முசிறி சுப்பிரமணிய ஐயரும் ஒரே பாடலின் வெவ்வேறு பகுதிகளைக் கற்றுக்கொண்டு தாங்கள் ஒருவருக்கொருவர் அவற்றினைப் பரிமாறிக் கொண்டனர். தனம்மாளிடம் பயின்ற முக்கிய இசைவாணர் ரங்கராமனுஜ ஐயங்கார் ஆவார். இவர் கிருதிமணி மாலை என்ற நூலை 5 தொகுதிகளாக வெளியிட்டுள்ளார்.

தனம்மாள் 1938ஆம் ஆண்டு அக்டோபர் 15ம் நாள் இயற்கையெய்தினார். அப்போதும் அவர் கை வீணையையே இசைத்துக் கொண்டிருந்தது. அவர் 'முவ்வகோபால' என்று கூறிக்கொண்டே உயிர் நீத்தார்.

பிற்காலத்தில் இசைவாணிகளாக விளங்கிய பிருந்தா, முக்தா சகோதரிகள் மற்றும் நடனக் கலைஞராக விளங்கிய பால சரஸ்வதி ஆகியோர் இவர் வழித்தோன்றல்களே ஆவார்கள்.

முடிவுரை

வீணை தனம்மாள் தமது பூவுலக வாழ்க்கையை விட்டு நீங்கிய பின்னும் இசைவணர்களின் நெஞ்சங்களில் இன்றளவும் நீக்கமற நிறைந்திருக்கிறார். இசையில் இமயமாகத் திகழ்ந்த அவரது இசைத்தொண்டு இவ்வுலகம் உள்ளளவும் நினைவு கூரத்தக்கதாகும். சாதனைப் பெண்மணியான இவர் கடந்து வந்த படிக்கட்டுக்களை மனதில் கொண்டும் நாமும் சாதனை படைக்கலாம் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

துணை நூல்கள்

1. T. சங்கரன், இசை மேதைகள், 1962.
2. இந்திரா மேனன், இசைப் பெண்மணிகள், 1999.
3. ஸ்ரீராம், செவ்விசையின் நற்காலம், 2004.

டி.கே. பட்டம்மாள்

தி. உமாதேவி

இருபதாம் நூற்றாண்டின் வாழ்நாள் சாதனையாளர்களுள் குறிப்பிடத்தக்கவர் டி.கே. பட்டம்மாள். கர்நாடக இசையை உலகறிய செய்த முதல் பெண்மணி ஆவார். இவர் தனது எண்பது வயது வரை உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று இசைக் கச்சேரி நிகழ்த்தி வந்துள்ளார். தற்போது 90 வயதாகும் இவர் வீட்டில் இருந்து கொண்டே கர்நாடக இசையைப் பயிற்று விக்கும் பணியைச் செய்து வருகிறார். எம்.எஸ். சுப்புலெட்சுமி, எம்.எல். வசந்தகுமாரி ஆகியோரின் சமகாலத்தவர். இம் மூவரும் கர்நாடக இசைத்துறையின் மும்மூர்த்திகள் என அழைக்கப் பட்டனர்.

இக்கட்டுரை டி.கே. பட்டம்மாளின் வாழ்வியல் பின்னணியையும், சாதனைகளையும் விளக்குவதாக அமைகிறது.

பிறப்பும் இளமைப் பருவமும்

டி.கே. பட்டம்மாள் காஞ்சிபுரத்தில் உள்ள தாமல் என்னும் கிராமத்தில் அந்தணர் குலத்தில் 1919ஆம் ஆண்டு மார்ச் 28இல் பிறந்தார். இவரது தந்தையார் தாமல் கிருஷ்ணசாமி தீட்சிதர். இவருக்குக் கர்நாடக இசையில் ஆர்வம் அதிகம். தாயார் காந்திமதி என்ற ராஜம்மாள். இவர் நன்றாகப் பாடுவார். மிகவும் பழமையான ஆசாரங்களைப் பின்பற்றும் குடும்பத்திலிருந்து வந்தமையால் நண்பர்கள் முன்பாகவோ, உறவினர்கள் முன்பாகவோ பட்டம்மாள் பாட அனுமதிக்கப்படவில்லை. இவருடன் பிறந்தவர்கள் டி.கே.ஜெயராமன், டி.கே. ரெங்கநாதன் ஆகியோர். மூவருமே இசையறிவும், பாடல் ஞானமும் இயல்பிலேயே பெற்றிருந்தனர். டி.கே. பட்டம்மாளின் இயற்பெயர் அலமேலு. செல்லமாகப் 'பட்டு' என்று அழைக்கப்பட்டார். அதுவே, பெயராய் டி.கே. பட்டம்மாள் என நிலைத்துவிட்டது. இளமையில் முறைப்படி சங்கீதம் கற்றுக் கொள்ளவில்லை. அதாவது, சரள வரிசை, ஜன்ட வரிசை, கீதம், வர்ணம் போன்று படிப்படியாக முறைப்படிக் கற்றுக்கொள்ள வில்லை. ஆனால் அவருடைய தந்தை அவருக்குப் பக்திப்

பாடல்களையும், பக்திச் சுலோகங்களையும் பயிற்றுவித்தார். அதிகாலை 3.30 மணியிலிருந்து ஆறு மணி வரை இசைப் பயிற்சி செய்வதற்கு அவருடைய தந்தையார் கற்றுக் கொடுத்தார். அதில் பல் கிருதி மற்றும் சுலோகங்கள் அடக்கம். 10 கீர்த்திகளைப் பல்வேறு இராகங்களில் தொடர்ந்து பாடச் சொல்வார். பாடல்களில் தெளிவு வருவதற்காக ஒரு பாடலை 50 முறை திரும்பத் திரும்பப் பாடச் சொல்வார். (Frontline, Vol.16, issue 16, 1999.7)

இவ்வாறு அவருடைய தந்தையே முதல் குருவாக இருந்து அவரது இசைத்திறமையை வளர்த்து வந்தார்.

முதல் இசை நிகழ்ச்சி

டி.கே. பட்டம்மாள் பல்வேறு இசை விருதுகளையும், பரிசுகளையும் பெற்ற பின்பு, 'இந்தியா டுடே' என்னும் ஆங்கில இதழில் அளித்த பேட்டியில், தான் முதன் முதலாகப் பெற்ற விருதைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். டி.கே. பட்டம்மாள் தனது ஐந்து வயதிலேயே இசையிலும் சமஸ்கிருதச் சுலோகங்களை வெளிப்படுத்துவதிலும் தனித்திறமை கொண்டிருந்தார். நூறு சுலோகங்களை மனப்பாடம் செய்வதிலும் அதற்கு இசை தானே அமைத்துப் பாடுவதிலும் சிறப்பானவராகத் திகழ்ந்தார். இந்தத் திறமை அவருடைய தலைமையாசிரியை அம்முக்குட்டி அம்மாவால் அடையாளம் கண்டு கொள்ளப்பட்டது. டி.கே. பட்டம்மாள் தனது ஒன்பது வயதில் அரசு இசைக்கல்லூரியில் (4வது நிலை) (IV Form) தேர்ச்சி பெற்றார். அப்போது பள்ளியில் நிகழ்த்தப்பட்ட 'சத்தியவான் சாவித்திரி' நாடகத்தில் சாவித்திரியாக அரங்கேறினார். அது தான் அவருக்கு வாழ்வின் திருப்புமுனையாக அமைந்தது எனலாம். அதில் சாவித்திரி கதாபாத்திரத்தில் அவர் பாடிய பாடலைக் கேட்ட ஒரு பார்வையாளர் இவருக்கு ஒரு தங்க மெடலைக் கொடுத்தார். இவர் 'கந்தசாமி பட்டுச்சேலை' என்ற கடையின் உரிமையாளர் (India Today, 15.02.1999:2). இச் செய்தி 'The Hindu' செய்தித்தாளில் டி.கே. பட்டம்மாளின் புகைப்படத்துடன் மறுநாள் வெளிவந்தது.

இதனால் டி.கே. பட்டம்மாளின் தந்தையார் மிகவும் கவலை கொண்டார். தனது மகளின் எதிர்கால வாழ்க்கை பாதிக்கப்படும் என்றும் கருதினார். அதற்கு அக்காலச் சூழ்நிலை காரணமாக அமைந்தது. கொலம்பியா கிராமபோன் கம்பெனி, அவருடைய இசை ஞானத்தை வெளிக்கொண்டு வர அவருடைய

இசைக் கச்சேரியை நிகழ்த்த ஒரு வாய்ப்பளித்தது. டி.கே. பட்டம்மாளின் தந்தை கிருஷ்ணசாமி தீட்சிதர் தன் மகள் பொது மேடையில் கச்சேரி நிகழ்த்தினால், அவளை யார் திருமணம் செய்து கொள்ள முன் வருவார்கள் என்ற அச்சத்தை வெளிப்படுத்தினார். ஆனால் அம்முக்குட்டி அம்மா மற்றும் அந்தப் பகுதியைச் சார்ந்த காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த பி.எஸ். சீனிவாசன் இருவருடைய வற்புறுத்தலின் பேரால் அந்தக் கச்சேரிக்கு ஒப்புக் கொண்டார். மேலும் சீனிவாசன் தன் மருமகனை டி.கே. பட்டம்மாளுக்குத் திருமணம் செய்து வைப்பதாக ஒப்புக் கொண்ட பின்னரே டி.கே.பட்டம்மாள் இசைக்கச்சேரி நிகழ்த்த அவருடைய தந்தையார் ஒப்புக் கொண்டார். அப்போது டி.கே. பட்டம்மாளின் வயது பன்னிரண்டு மட்டுமே.

1929இல் 10ஆவது வயதில் வானொலியில் (AIR) தனது முதல் இசை நிகழ்ச்சியை நடத்தினார். 1932இல் மெட்ராஸ் ரசிக ரஞ்சனி சபாவில் தனது இசைக்கச்சேரியை நிகழ்த்தி எல்லாருடைய பாராட்டையும் பெற்றார்.

டி.கே. பட்டம்மாள் 1939இல் தனது 20ஆவது வயதில் சீனிவாசனின் மருமகனான ஈஸ்வரன் ஐயரை மணந்தார். அவரது கணவர் ஈஸ்வரனும் டி.கே. பட்டம்மாளின் இசைப் பயணத்திற்கு வழிகாட்டியாகவும் உதவியாளராகவும் திகழ்ந்து வந்தார். பின்னர் அவருக்குத் தொடர்ச்சியாக, கச்சேரிகள் வர ஆரம்பித்தன எனவே அவர் தனது குடும்பத்துடன் காஞ்சியிலிருந்து சென்னைக்குக் குடி பெயர்ந்தார். அங்குச் சென்னை மகிளா சமாஜம் நடத்திய இசைப் போட்டியில் கலந்து கொண்டு அதில் முதல் பரிசையும் வென்றார்.

பட்டம்மாளின் தனித்தன்மையும் சாதனைகளும்

தொடக்கக் காலத்தில் பொது இடங்களில் பெண்கள் கச்சேரி நிகழ்த்துதல் என்பது கடினம். ஆனால் டி.கே. பட்டம்மாள் அந்த மரபை முறியடித்தார். எனினும் தொடக்கத்தில் பட்டம்மாள் தனது தமையனுடனே பல கச்சேரிகளை நிகழ்த்தி வந்தார். அந்தக் காலகட்டத்தில் தேவதாசிப் பெண்கள்கூடத் தனியிடங்களில் மட்டுமே இசை நிகழ்ச்சிகளை நடத்திவந்தனர். அந்தக் காலகட்டத்தில் இரண்டு சவால்கள் அவருடைய வளர்ச்சிக்குத் தடையாக இருந்தன. 1. அந்தணர் குலப் பெண் பொது இடங்களில் கச்சேரி நடத்துவது விலக்காகக் (Taboo) கருதப்பட்டது. அடுத்துப் பெண்பாலர்

(Gender) பொது இடங்களில் கச்சேரி நிகழ்த்துவதும் அனுமதிக்கப் படவில்லை. இந்த இரண்டு மரபுத் தடைகளையும் மீறிப் பொது இடங்களில் கச்சேரியை நிகழ்த்தி உலக அளவில் புகழ்பெற்றார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. பட்டம்மாளுக்கு முன்னால் பெண்கள் கர்நாடக இசைக் கச்சேரிகளில் அணிகலன்கள் போன்று செயல்பட்டனர். அவர்கள் எளிமையான இசை வகைமை மாதிரிகளான பதம் (Padams), ஜவாலி (Javallis) போன்றவற்றை மட்டுமே பாடி வந்தனர். அதனையும் அவர்கள் தனிப்பாடல்களில் (Private Poetry) நிகழ்த்தி வந்தனர் (India Today, 15.02.1999:2). இராகம், தாளம், பல்லவி என்பது கர்நாடக இசையில் மிகவும் கடினமானது. அதனைப் பட்டம்மாள்தான் முதலில் கையாண்டார் (Frontline, 31.08.1999:2). பல்லவி என்பது பாடியதைத் திரும்ப பாடுவதாகும். பாடல் வரிகள் திரும்ப, திரும்ப வரும், ஆனால் ஸ்வரங்களை மேடையிலேயே மாற்றி மாற்றி அமைத்துப் பாடுவதில் பட்டம்மாளுக்கு நிகர் யாருமில்லை. பல்லவியின் ரிதம் மிகவும் சிக்கலானது. அதற்கு அதிகமான கற்பனைத்திறனும் அதிக அளவு கவனமும் தேவை. இந்த இரண்டையும் திறம்படக் கையாண்டுப் பல்லவி பட்டம்மாள் என்று பெயரெடுத்தார். நைனா பிள்ளை என்பவரின் கச்சேரிக்கு அடிக்கடிச் செல்வார். அவரது பாடல் முறையில் மிகவும் ஈர்க்கப்பட்டு அதனை அடிப்படையாகக் கொண்டுதான் பாடுவதாக அவர் குறிப்பிடுகிறார். இவருடைய பாடல் முறையில் மூன்று வரன்முறையைப் பின்பற்றுகிறார். அதாவது அழகு, ஒழுக்கம், ஆழம் (Dignity, Discipline, Depth) இந்த மூன்றும் இருக்கும். இவர் பாடல் வரிகளையும், இசைக் குறிப்புகளையும் கையில் வைத்துக் கொள்வதில்லை. ஏனெனில் அதனைப் பார்த்துக் கொண்டு பாடினால் கவனச் சிதறல் ஏற்படும். எனவே அதனைத் தான் தவிர்த்து விடுவதாக "Frontline" பத்திரிக்கைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிடுகிறார் (Frontline, Vol.16. 1999:3). இவர் தியாகராஜ பாகவதர், முத்துசுவாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரி போன்றோர் இசை அமைப்புகளில் (Compositions) தேர்ச்சி பெற்றவர். அதுமட்டுமின்றி, முத்துத்தாண்டர், அருணாசலக் கவிராயர் கோபாலகிருஷ்ண பாரதி, சுப்ரமணிய பாரதியாரின் பாடல்களையும் பாடிப் புகழ்பெற்றார். தேவாரம், திருப்புகழ், அருட்பா போன்ற பாடல்களையும், பாடுவதில் வல்லவர். திரைப்படங்களில் முதல் பின்னணிப் பாடகியாக பாபநாசம் சிவன் என்பவரால் அறிமுகப் படுத்தப்பட்டார். நாம் இருவர், தியாக பூமி போன்ற படங்களின் பாடல்களைப் பாடியுள்ளார். நாட்டுப் பற்று மற்றும் பக்திப்

பாடல்களைப் பாடுவதில் மட்டுமே இவருக்கு ஈடுபாடு உண்டு. இவர் 50வயது வரை தமது இசைக் கச்சேரிகளில் பாடல்களின் இலயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தார். ஐம்பது வயதிற்குப்பிறகு இலயத்திலிருந்து பாவத்திற்கு (உணர்வு) முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்தார். பாவம் என்பது பார்வையாளர்களின் மனத்தின் ஆழம் வரை செல்லும் என்கிறார். "என்றைக்குச் சிவகிருபை வருமோ" என்ற பாடல் எல்லோராலும் (இசை வல்லுநர்கள்) மிகவும் பாராட்டைப் பெற்றது.

பாரதியார் பாடல்களில் அவரது ஈடுபாடு வியக்கத்தக்கது. அவர் பாரதியாரின் மொழி நடை, தேசபக்தி போன்றவற்றின் மீது கொண்ட ஈர்ப்பினால் அவரது தேசபக்திப்பாடல்களைப் பாடுவதாகக் குறிப்பிடுகிறார். அவர் அமெரிக்கா, கனடா, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளுக்குச் சென்று தமது இசைக் கச்சேரியை நிகழ்த்தி வந்தார்.

டி.கே. பட்டம்மாள் பெற்ற விருதுகளும் பாராட்டுகளும்

டி.கே. பட்டம்மாள் ஏராளமான விருதுகளையும் பல பாராட்டுகளையும் பெற்றுள்ளார். சங்கீத நாடக அகாதெமியின் சார்பில் 1961இல் **கான சரஸ்வதி** என்ற பட்டத்தை டைகர் வரதாச்சாரி வழங்கினார். இவர் பட்டம்மாள் பல்லவி பாடும் திறமையினைக் கண்டு "**பல்லவி பட்டம்மாள்**" என்ற பட்டத்தையும் வழங்கினார். 1970இல் கர்நாடக இசைத் துறைக்கான மிகவும் மதிப்புடைய 'சங்கீத கலாநிதி விருது' வழங்கப்பட்டது. 1971இல் இந்திய அரசாங்கம் **பத்மபூஷன்** விருதை வழங்கி இவரைச் சிறப்பித்தது. 1999இல் சிறந்த இந்தியக் குடிமகன் என்ற சிறப்பினையுடைய **பத்மவிபூஷன்** விருதினையும் வழங்கிச் சிறப்பித்தது. இவருக்கு, காளிதாஸ் **சம்மான் விருது** 1999இல் வழங்கப்பட்டுள்ளது. காஞ்சி சங்கராச்சாரியார் **ஸ்ரீ** ஜெயேந்திர சரஸ்வதியால் "சங்கீத சாகர **ரத்னா**" என்ற விருது அவருடைய கர்நாடக இசைப் பங்களிப்பிற்காக வழங்கப்பட்டது.

மேலும் கர்நாடக இசையில் **வாழ்நாள் சாதனையாளர் விருது,** 2005இல் அமீர் குஷ்ரோ சங்கீத அகாதெமியால் வழங்கப்பட்டுள்ளது. இவருக்கு 3.8.2008இல் அவரது இல்லத்தில் வைத்துப் பெரிகசிவ் ஆர்ட்ஸ் சென்டர் (Percussive Arts Centre) சார்பாக **லய கலா நிபுணா** (Laya Kalaa Nipuna) என்ற விருது வழங்கப்பட்டது. இசைப் பேரறிஞர் விருது தமிழிசைச் சங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது. சங்கீத கலா சிகாமணி

விருது இந்தியன் நுண்கலைச் சங்கத்தினால் (Indian Fine Arts Society, Madras) வழங்கப்பட்டுள்ளது.

டி.கே. பட்டம்மாள் பற்றிய புத்தகம்

டி.கே. பட்டம்மாளின் வாழ்க்கை வரலாறு, Gana Saraswathi D.K. Pattammal - "Dimensions of a Divine Songster" என்ற தலைப்பில் 128 பக்கங்களுடன் புத்தகமாக வெளிவந்தது. இந்தப் புத்தகம் நவம்பர் 23ஆம் தேதி 2007இல் கோயமுத்தூர் ஆர்.எஸ்.புரம் பாரதிய வித்யா பவனில் வெளியிடப்பட்டது. இதனைத் தொகுத்தவர் நித்தியராஜ். இந்தப் புத்தகத்தைச் சென்னை மியுசிக் அக்காதெமி (Music Academy)யின் தலைவர் வெளியிட்டார். இதன் முதல் பிரதியை டி.கே. பட்டம்மாளின் பேத்தி நித்யஸ்ரீ மகாதேவன் பெற்றுக்கொண்டார்.

பட்டம்மாள் மிகச்சிறந்த இசை விமர்சகர் சுப்புடு பற்றி ஒரு புத்தகம் எழுதியுள்ளார். அதில் அவருடைய வாழ்க்கை வரலாறு மற்றும் அவருடைய விமர்சனம் முறை போன்றவற்றை விளக்கிச் செல்கிறார் "Beyond Destiny - The Life and Times of Subbudu" என்பது புத்தகத்தின் தலைப்பு. இதனைப் பவன் புத்தகப் பல்கலைக்கழகம் (Bhavan Book, University) வெளியிட்டுள்ளது. "Great Masters of Carnatic Music" (1930-1965) - Indialog Publications, 2007இல் இவரைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்பும் கர்நாடக இசைக்கு இவருடைய பங்களிப்பைப் பற்றிய செய்திகளும் வெளிவந்துள்ளன (p. 308).

ஆசிரியராகப் பட்டம்மாள்

பட்டம்மாளின் பாடல்களில் ஈர்க்கப்பட்ட பலர் அவரிடம் மாணவர்களாகச் சேரத் தலைப்பட்டனர். பட்டம்மாளும் தனக்குத் தெரிந்த இசையை மற்றவருக்குக் கற்றுக் கொடுப்பது அவசியம் என்று கருதி இசைப்பள்ளியைத் தொடங்கி நடத்தி வருகிறார். இவரிடம் பயின்ற மாணவர்களில் புகழ் பெற்றவர்களில் லலிதா சிவகுமார், கீதா ராஜசேகர், நித்ய ஸ்ரீ மகாதேவன், பவதாரிணி அனந்த ராமன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். சகோதரன் டி.கே.ஜெயராமனும் இவரின் மாணவரே. நித்யஸ்ரீ மகாதேவன் இவரதுபேத்தி. தனது பாட்டியின் பதிவாகத் (Carbon Copy) தன்னைக் கூறிக் கொள்கிறார் (The Times of India, 21/11/2001:1). பவதாரிணி தனது ஐந்து வயதில் தன்னுடைய பாடலைக் கேட்ட பட்டம்மாள் தான் இவருக்குக் குருவாய் இருப்பதாகச் சொல்லி மாணவியாக ஏற்றுக்

கொண்டார் என்கிறார். (http://www.bhavadharini.com/dkp.htm:1). இவர் ஐந்து ஆண்டுகளுக்கு முன் தனது வீட்டில் பல மாணவர்களுக்கு இசையை அறிமுகப்படுத்திக் கொண்டிருந்த முறையை நிருபர் ஒருவர் இவ்வாறு விளக்குகிறார்: "பால கோபால" என்ற பாடலைச் சந்தத்துடன் விளக்கி 18ஆம் நூற்றாண்டில் வகேயாகாரா எவ்வாறு இப்பாடலுக்கு உணர்வையும், இசையையும் கொடுத்தார் என்பதை அதன் வரலாற்று பின்னணியுடன் விளக்கிக் கொண்டிருந்தார். மேலும் இந்தப் பாடல்தான் அம்பி தீட்சிதர் (முத்துசுவாமி தீட்சிதரின் பேரன்) முதலில் எனக்குக் கற்றுக் கொடுத்த பாடல் என்றும் குறிப்பிட்டார் (The Hindu, 18/4/2003:1).

முடிவுரை

டி.கே. பட்டம்மாள் தனது வாழ்நாள் முழுவதையும் இசைப் பணிக்கே தன்னை அர்ப்பணித்து, பல மாணவர்களையும் உருவாக்கி யுள்ளார். "இசைக்குச் சமமானது எதுவுமில்லை. எனவே நான் வாழும் வரை நான் பாடிக் கொண்டே இருக்க வேண்டும்.

எத்தனையோ பெற்றோர்
எத்தனையோ பிறப்பு
எனவே பிறப்பொன்றும் வேண்டாம்
அப்படியே
பிறந்தால் இசையுடன் பிறக்க வேண்டும்
இசையுடன் இருக்க வேண்டும்

இது அவரது 89வது பிறந்த நாளின் வேண்டுதல் ஆகும். இசையே உயிராய், இசைக்கு உயிராய் வாழும் அம்மையார் வாழ்க்கையும் சாதனை வாழ்வே.

பயன்பட்ட இணையத்தள முகவரிகள்

1. Article - Frontline : Music with Feeling Vol.15, No.8, Ap. 11-24, 1998 p.(1-4) (http://www.frontlineonnet.com/f11508/15080770.htm).
2. Article - Frontline : A Lifetime for Carnatic Music Vol.16 No.16, July 31-Aug 13 1999 p.1-8) http://www frontlineonnet.com/fll616/16160670.htm)
3. Prifile-Sangita Kalanidhi D.K. Pattammal(http://archives. Chennaionline.com/Music Season99/Profile/dk.pattammal.
4. The Times of India: htm Singer par excellence - Hyderabad 21 Nov./ 2001/Times-Cities.

5. D.K. Pattammal : The Revolutionary Entertainment (http://www the indujobs.com/the hindu/fr/2003/04/18/stories htm.)

6. Article - Hindu, D.K. Pattammal's Biography to be released, Tuesday Nov.20,2007 issue. Tamilnadu -Coimbatore.
(http://www.hindu.com2007/1/20/stories.htm.

7. http://en wikipedia.org/wiki/D.K. Pattammal.

8. http://en wikipedia.org/wiki/Nithyasree Mahadevan.

9. Pallavi wikipedia, the free encyclopaedia (http://en.wikipedia.org/wiki/Pallavi

10. D.K. Pattammal Devotional Song, Tamil Album, Music Mazza.

11. http://www.vedams books.com/No.54908.htm

12. http://www.forumum.com/Indiamusic/835.025/29/htm

13. http://www.archive.org/strem/another garland book/4528/

14. http://www.Saigan.com/heritage(music)/garland/htm

15. Damal Krishnasamy Pattammal Biography http://www.artistdirect.com/nod/music/artist/bio/01025811100/htm

16. http://www.bhava dharmi.com/bio/hti.

17. One hundred Tamils of the century Damal Krishnaswamy Pattammal (http://www.Tamilnation.org/hundredtamils/Pattammal.htm)

டி.ஆர். ராஜகுமாரி

இரா. பிரேமா

தமிழக வரலாறும், தமிழ்த்திரைப்பட வரலாறும் ஒன்றோடொன்று இடைமிடைந்ததாக அமைந்துள்ளன. தமிழ்த் திரைப்படக்கலைஞர்கள் அறுபதுகள் தொடங்கி இன்றுவரை தமிழக அரசியலைக் கையிலெடுத்து அதிகாரப்படுத்தி வருவதைக் கண்கூடாகக் காண்கிறோம். அதுமட்டுமல்லாமல், இருபதாம் நூற்றாண்டின் தமிழ்ப் பண்பாட்டு அசைவுக்கும், ஆதிக்கத்துக்கும் உச்சகட்டத் துணையாக அமைந்தது தமிழ்த் திரைப்படங்கள்தான். எனவே, இருபதாம் நூற்றாண்டை மையப்படுத்திய எந்தவொரு வரலாறும் தமிழ்த் திரைப்பட வரலாற்றைத் தொடாமல் எழுத இயலாது.

இந்தியத் திரைப்பட வரலாற்றில், ஏன் உலகத் திரைப்பட வரலாற்றிலேயே, தமிழ்த் திரைப்பட உலகிற்கெனத் தனித்ததொரு இடமுண்டு. உலகத் திரைப்பட விழாக்களில் தமிழ்த் திரைப்படங்கள் தவறாது இடம்பெறுவதோடு பரிசுகளையும் தட்டிச்சென்றுள்ளன. 'ஆஸ்கார்' விருதினை எந்தவொரு தமிழ்ப் படமும் இதுவரை பெறவில்லை. என்றாலும், அப்போட்டியில் கலந்துகொள்ளும் அளவிற்குத் தமிழ்ப் படங்கள் தகுதி வாய்ந்தனவாக இருந்திருக்கின்றன; இருக்கின்றன என்பதை மறுக்க இயலாது.

இருபதாம் நூற்றாண்டு, தமிழ் இலக்கிய உலகிற்கு மட்டுமல்ல; தமிழ்த் திரைப்பட உலகிற்கும் பொன்னான வாய்ப்புகளை உருவாக்கித் தந்த காலக்கட்டமாகும். தமிழ்த் திரைப்படங்கள் ஊமைப் படங்களிலிருந்து, 1930களிலேயே பேசும் படங்களாக வளரத் தொடங்கின.

1931இல், 'காளிதாஸ்' முதல் பேசும் படமாக உருவானது. டி.பி.ராஜலட்சுமி கதாநாயகியாகவும், எம்.கே. தியாகராஜபாகவதர் கதாநாயகனாகவும் நடித்த அப்படம் தமிழ்த் திரை வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது. டி.பி. ராஜலட்சுமி அவர்கள் தமிழ்த் திரை உலகில் முதல் கதாநாயகி என்ற பெருமையையும், 1936இல் 'மிஸ் கமலா' என்ற படத்தை இயக்கியதன் மூலம்,

தமிழின் முதல் பெண் இயக்குநர் என்ற பெருமையையும் ஒருசேரப் பெற்றுள்ளார்.

அவரைத் தொடர்ந்து எம்.எஸ்.சுப்புலட்சுமி, எஸ்.பி.எல். தனலட்சுமி, டி.எஸ். தமயந்தி போன்றோர் தமிழ்த் திரைப்படங்களில் நடித்து வந்தனர். எம்.எஸ். சுப்புலட்சுமி பவளக்கொடி, மீரா, காந்தாபாய், லட்சுமிபாய் என்ற படங்களில் நடித்துப் பெரும்புகழ் பெற்றிருந்தார். அவர் நடிப்பைவிடத் தம்குரல்வளத்தால் தமிழ் இரசிகர்களைக் கவர்ந்திருந்தார். எஸ்.பி.எல். தனலட்சுமி, டி.எஸ். தமயந்தி இருவரும் தஞ்சாவூரைப் பிறப்பிடமாகக் கொண்ட வளர்ந்துவரும் கலைஞர்களாகத் திகழ்ந்தனர். இவ்விருவரின் குடும்பத்துவழி வந்தவர்தான் டி.ஆர். ராஜகுமாரி.

தஞ்சாவூர் ரங்கநாயகி ராஜகுமாரி என்ற டி.ஆர். ராஜகுமாரி, தமிழ்த்திரை உலகின் முதல் கனவுக்கன்னி ஆவார். 1941இல் தமிழ்த் திரை உலகிற்கு அறிமுகமான அவர் கவர்ச்சிக் கன்னியாகப் புகழ்பெற்றாலும், அரைகுறை ஆடைகள் அணிந்து தம் உடல் அழகினைக்காட்டி அப்பெயரைப் பெறவில்லை. இயற்கையிலேயே கவர்ச்சியான உடற்கட்டைப் பெற்றிருந்த அவர் தன் கண் அசைவுகளாலும் பாவனையாலும் கவர்ச்சிக் கன்னியாகத் தமிழ் இரசிகர்கள் மனதில் வலம்வந்தவராவார்.

ராஜாயி என்ற இயற்பெயர் கொண்ட ராஜகுமாரி தஞ்சையில் 1922இல் புகழ்பெற்ற இசைவேளாளர் குடும்பத்தில் பிறந்தவர். அக்காலக்கட்டத்தில், தஞ்சை மாவட்டத்தில் இசைவேளாளர் குலத்தவர்களில் பெண்கள் சுவாமிக்குப் பொட்டுக்கட்டி நேர்ந்துவிடப்படுவார்கள். 'பொட்டுக்கட்டுதல்' என்பது, இறைவனைக் கணவனாக ஏற்றுக்கொண்டு, பொட்டுப் போன்ற வடிவிலிருக்கும் தாலியைக் கட்டிக் கொள்ளுதல் ஆகும். சிறுவயதிலேயே பொட்டுக்கட்டும் விழா நடைபெறும். அதுமுதல் அப்பெண்கள், கோயில்களில் ஆடுதல், பாடுதல், வீணைக் கச்சேரிகள் செய்தல், கதாகாலேட்சேபம் செய்தல் போன்ற கலைப்பணிகளில் ஈடுபட்டுத் தம் வாழ்நாளைக் கழிப்பர். இவர்கள் வேறுயாரையும் திருமணம் செய்துகொள்ள இயலாது. ஆனால் ஜமீன்தார்கள், பண்ணையார்களுக்குக் காமக்கிழத்தியாக இருந்து குழந்தை பெற்றுக்கொள்வது உண்டு. அக்குழந்தைகளுக்குத் தந்தை இன்னார் என்பதைப் பொதுவாகக் காட்டிக்கொடுத்தல் இல்லை. அந்த ஜமீன்தார்களும் தம்மோடு இணைந்துவாழும் பெண்களுக்கும் அவர்கள் மூலம் பெறும் குழந்தைகளுக்கும் சொத்துக்கள் தருவதுண்டு

இவ்வாறு இணைந்துவாழும் அவர்களுக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டுப் பிரிந்துசெல்ல நேர்ந்தால், அப்பெண்கள் பின் வேறொருவருடன் இணைந்து வாழும் வாய்ப்பு ஏற்பட்டால் அவர்களோடு வாழ்வர். அவர்களுக்கும் குழந்தைகள் பெற்றுக்கொள்வர். அதனால் இசைவேளாளர் குடும்பத்தில், தாயின்பெயரையே குழந்தைகளுக்கு முதல் எழுத்தாகப்போடுவது வழக்கமாகும். அந்தவிதத்தில் தஞ்சாவூர் ரங்கநாயகி என்பதை டி.ஆர். என்று தம் முதல் எழுத்தாகக் கொண்டிருந்தார் ராஜகுமாரி.

ராஜகுமாரியின் குடும்பம் பதினாறுபேர் கொண்ட பெரியகுடும்பமாகும். தஞ்சாவூர் ஜவுளிச்செட்டித் தெருவில் சொந்தவீட்டில் அக்குடும்பம் வசித்துவந்தது. அத்தெரு தஞ்சைப் பெரியகோயிலின் அருகே இருந்தது. ராஜாயியின் பாட்டி தஞ்சாவூர் குசலாம்பாள் அக்காலத்தில் தஞ்சைமாவட்டத்தில் புகழ்பெற்ற கர்நாடக இசைக்கலைஞராகத் திகழ்ந்துள்ளார். ராஜாயியின் அம்மா ரங்கநாயகி குடும்பத்தில் மூத்தவர். இவர் நன்றாகப் பாடக்கூடியவர். கதாகாலேட்சபமும் செய்பவராவார். அவருக்கடுத்த சரஸ்வதி அம்மாளும், கண்ணம்மாளும் நடனமாடுபவர்கள். இவர்களில் சரஸ்வதியம்மாள் தஞ்சை ராஜா சரபோஜி பரம்பரையைச் சேர்ந்தவரோடு வாழ்ந்துவந்தார். அவருடைய பெண்தான் டி.எஸ்.தமயந்தி. இவர்கள் இருவருக்கும் அடுத்தவர் கௌரியம்மாள். இவர் வீணை வித்தகி ஆவார். அவருக்குப்பின் பிறந்த பாலு என்பவர் கஞ்சிராக் கலைஞர். அடுத்தவர் 'அண்ணா' என்பவர் வாய்ப்பாட்டுச் சொல்லித் தருபவர். அவர் எம்.கே. தியாகராஜ பாகவதருக்குச் சிலகாலம் வாய்ப்பாட்டுச் சொல்லித் தந்துள்ளார். அடுத்தவர் ராஜகோபால் என்பவர் மட்டும் தஞ்சை சார் பதிவாளர் அலுவலகத்தில் வேலைபார்த்துள்ளார். ரங்கநாயகி அம்மையாரின் கடைசித் தங்கை எஸ்.பி.எல். தனலட்சுமி. இவர் தன் பெரியம்மா பெண் டி.எஸ். தமயந்தியுடன் சென்னை வந்து தங்கித் திரைப்படங்களில் நடித்து வந்தார். நன்கு பாடும் திறமைகொண்ட இவர் 'காளமேகம்', 'கிருஷ்ணபக்தி' போன்ற படங்களில் நடித்துள்ளார். இவர் எழுபதுகளில் புகழ்பெற்றிருந்த ஜோதிலட்சுமியின் வளர்ப்புத் தாயாவார். டி.எஸ். தமயந்தி 'விகடயோகி'; 'காலேஜ்கேள்', 'மணிமேகலை' போன்ற படங்களில் நடித்துப் புகழ்பெற்றுள்ளார். இவ்வாறு மிகப்பெரிய கலைக்குடும்பத்துப் பின்னணியில் வந்தார் டி.ஆர். ராஜகுமாரி. இவருடன் உடன் பிறந்தவர்கள் நால்வர் அவர்கள் டி.ஆர். ராமண்ணா, டி.ஆர். சக்கரவர்த்தி, டி.ஆர். பார்த்தசாரதி, டி.ஆர். சேதுலட்சுமி என்பவர்களாவர்.

ராஜாயியின் பாட்டியும், தாயும் அவரைப் பாடகியாக உருவாக்க முயன்றனர். ஏனெனில் ராஜாயியிக்கு நல்லகுரல் வளம் இருந்தது. ஆனால் காலம் அவரை ஒரு திரைப்பட நட்சத்திரமாக உருவாக்கியது.

ராஜாயி தன் பதினெ1ட்டாவது வயதில் சென்னை (மெட்ராஸ்) வந்து தன் சித்தி எஸ்.பி.எல். தனலட்சுமியின் வீட்டில் தங்கினார். அப்பொழுது தனலட்சுமி எல்லீஸ் கே. டங்கனின் (அமெரிக்கர்) இயக்கத்தில் 'காளமேகம்' (1940) என்ற படத்தில் நடித்துக் கொண்டிருந்தார். அப்படத்தில் அவருடன் நடித்தவர் நாதஸ்வர இசைக்கலைஞர் திருவாவடுதுறை என். ராஜரத்தினம் பிள்ளையாவார். சித்தி தனலட்சுமி ராஜாயியை இயக்குநர் டங்கனிடம் அழைத்துச் சென்று, திரைப்படத்தில் நடிக்க வாய்ப்புக்கேட்ட பொழுது அவர் நகைச்சுவை வேடம் கொடுக்க முன்வந்தார். ஆனால் அதை இருவரும் மறுத்துவிட்டனர். அந்தச் சமயத்தில், இயக்குநர் கே.சுப்பிரமணியத்தின் (நடனக்கலைஞர் பத்மாசுப்பிரமணியத்தின் தந்தை) விகடயோகியில் தனலட்சுமி நடித்துவந்தார். இயக்குநர் தனலட்சுமியின் வீட்டிற்கு ஒருமுறை வந்தபோது தனக்குத் தேனீர் வழங்கிய ராஜாயியைப் பார்த்துத் தன்படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்து கொண்டார்.

டி.ஆர். ராஜகுமாரி ஒப்பந்தமான முதல் படம் கே.சுப்பிரமணியத்தின் 'கச்சதேவயானை'யாகும். ஆனால் அப்படம் தயாரிப்பில் தாமதமாகி மூன்றாவது படமாக வெளிவந்தது. 'குமாரகுலோத்துங்கன்' என்ற படமே முதல் படமாக வெளிவந்தது. இப்படத்தில் ராஜகுமாரி பி.யூ. சின்னப்பா அவர்களின் இணையாக நடித்துள்ளார்.

'கச்சதேவயானை'ப் படத்தில் கொத்தமங்கலம் சீனு. கதாநாயகன். அப்படத்தில் ராஜகுமாரி கையில்லாத ரவிக்கை அணிந்து நடித்தார். மயக்கம்தரும் தளர்நடை, குளத்தில் மீன் போன்று துள்ளி விளையாடுகின்ற பாங்கு, கதாநாயகனுடன் யானையில் பவனிவரும் காட்சிகள் இவை தமிழ்த் திரைப்பட இரசிகர்கள் முன்பு பார்த்திராதக் காட்சிகளாகும். இக்காட்சிகளைப் பார்ப்பதற்காகவே ரசிகர்கள் திரும்பத்திரும்ப படம்பார்க்க முனைந்தனர். டி.ஆர். ராஜகுமாரியும் ரசிகர்கள் மனதில் தீவிரமாக இடம்பிடித்தார்.

அவர், 1942இல் சேலம் மாடன் தியேட்டர் எடுத்த 'மனோன்மணி' படத்தில் பி.யூ. சின்னப்பாவின் இணையாக

நடித்தார்; அதற்காக, 'சேலம்' சென்று சிலகாலம் தங்கி இருந்து அப்படத்தில் நடித்தார்; கதாநாயகன், கதாநாயகியைக் கனவில் கண்டு காதல் வயப்படுவதாக மனோன்மணி கதை அமைந்திருந்தது. பின் கனவில் கண்ட பெண்ணை நனவிலும் கண்டு தன் காதலை உறுதி செய்கிறான். இக்கதை, இரசிகர்களை மிகக் கவர்ந்தது. இப்படம் வெளியான பொழுது, மாடன் தியேட்டர் நிறுவனத்தினர் தமிழ்ச் சினிமாவின் சிறந்த இணையினைத் தேர்ந்தெடுக்க ஒரு போட்டி நடத்தினர். அப்பொழுது பி.யு. சின்னப்பாவும், டி.ஆர். ராஜகுமாரியும் சிறந்த இணையாக இரசிகர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1943இல், 'சிவகவி' என்ற படத்தில் அக்காலத்திய 'சூப்பர் ஸ்டாரான' என்.கே. தியாகராஜபாகவதரின் இணையாக டி.ஆர். ராஜகுமாரி நடித்தார். அப்படத்தில் அரண்மனை நாட்டியக்காரியாக நடித்ததுடன், 'கவலையைத் தீர்ப்பது நாட்டியக்கலையே' என்ற பாடலைப்பாடி அதற்கு நாட்டியமாடினார். அப்பாடலும், அவராடலும் அப்படத்தில் உச்சகட்டமாகத் திகழ்ந்தன. 'வதனமோ சந்திரப்பிம்பமோ' என்ற தியாகராஜ பாகவதரின் புகழ்பெற்றபாடலும் அப்படத்தில் இடம்பெற்றது. இப்பாடல், முதலில் 'முகம் அது சந்திரப்பிம்பமோ' எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. 'முகம்அது' என்பது 'முகமது' என்று ஒலிப்பதுபோல் இருந்ததால், பாகவதர் அதை வதனமோ என்று மாற்றி அமைத்துப் பாடியுள்ளார்.

டி.ஆர்.ராஜகுமாரி தன் குரல்வளத்தை வளர்த்துக்கொள்ள அக்காலத்தில் புகழ்பெற்றிருந்த குன்னக்குடி வைத்தியநாதரிடம் பாட்டுக் கற்றுக்கொண்டார். அவரோடு எஸ்.பி.எல். தனலட்சுமியும், டி.எஸ். தனலட்சுமியும் சேர்ந்து வாய்ப்பாட்டுக் கற்றுக் கொண்டனர். அக்காலத்தில் நல்ல குரல்வளமும், பாடும் ஆற்றலும் நடிகைகளுக்கு மிக முக்கியம் என்பதினால் இந்தப் பயிற்சியினை அவர்கள் எடுத்துக் கொண்டனர்.

1944இல் டி.ஆர். ராஜகுமாரி ஹரிதாசில் நடித்தார். இப்படம் அக்காலத்தில் மிகப்பெரிய வெற்றிப்படமாகும். அவ்வருடத் 'தீபாவளி' அன்று வெளியான அப்படம் 112 வாரங்கள் தொடர்ந்து ஓடி, மூன்று தீபாவளிகளைக் கண்டது. அப்படத்தின் அச்சாதனை இன்றுவரை முறியடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இப்படத்தில் ராஜகுமாரி கதாநாயகன் தியாகராஜ பாகவதரைக் காதலித்து மயக்கும் பெண் (Vamp) வேடத்தில் நடித்துள்ளார். தியாகராஜ பாகவதரும்,

ராஜகுமாரியும் நடித்த காதல் காட்சிகள் அக்காலத்தில் தமிழ் இரசிகர்களால் திரும்பத் திரும்பப் பேசப்பட்டன. அப்படத்தில், 'மன்மதலீலையை வென்றார் உண்டோ' என்ற காலத்தால் அழியாத பாடல் இடம்பெற்றுள்ளது. அப்பாடலின் இடையே 'சுவாமி' என்று டி.ஆர். ராஜகுமாரி அழைப்பார் இதுவும், அப்பாடலுக்குக் கிளர்ச்சியூட்டியது. 1944ஆம் வருடமே 'பிரபாவதி' என்ற படத்திலும் அவர் நடித்துள்ளார். பின் 1946இல் 'வால்மீகி', 'விகடகவி' என்ற படங்களிலும் 1947இல் 'பங்கஜவள்ளி' என்ற படத்திலும் நடித்தார்.

1948இல் டி.ஆர். ராஜகுமாரி ஜெமினியின் மாபெரும் வெற்றிப் படமான 'சந்திரலேகா'வில் நடித்தார். இதுவும் புகழின் உச்சிக்கு இட்டுச் சென்றபடமாகும். இப்படம் 1943ஆம் வருடத்திலிருந்து 1948ஆம் ஆண்டு வரை ஐந்து ஆண்டுகள் தயாரிக்கப்பட்டது. இப்படத்தில் முதலில் நடிக்க ஒப்பந்தமானவர் கே.எல்.வி. வசந்தா என்பவராவார். பின் சில காரணங்களுக்காக அவர் நீக்கப்பட்டு டி.ஆர்.ராஜகுமாரி ஒப்பந்தமானார்.

தமிழ்த் திரை உலகின் சாத்தியங்களை வெளிப்படுத்திய பிரமாண்ட படம் அது. இப்படத்தை யுனெஸ்கோ நிறுவனம் இந்தியத் திரை உலகின் மைல் கல்லாகத் தேர்ந்தெடுத்தது சிறப்பிற்குரியது. அமெரிக்க 'Library of Congress'இல் இடம்பெற்ற இரு திரைப்படங்களில் இதுவும் ஒன்றாகும். மற்றொன்று ஔவையார். இத்தகைய சிறப்புவாய்ந்த படத்தில் நடிக்கும் வாய்ப்பைப் பெற்ற டி.ஆர். ராஜகுமாரி அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டார். இப்படம் ஒரே சமயத்தில் தமிழிலும், இந்தியிலும் எடுக்கப்பட்டதால், ராஜகுமாரி ஆசிரியர் மூலமாக இந்திமொழி கற்றுக்கொண்டார். அதன்பின், அவர் இந்தியைச் சரளமாகப்பேசும் ஆற்றல் பெற்று அனைவரும் பாராட்டும் வண்ணம் இந்தி வசனம் பேசி நடித்தார். சந்திரலேகாவில் எம்.கே.ராதா, ரஞ்சன், என்.எஸ். கிருஷ்ணன், டி.ஏ. மதுரம், சுந்தரிபாய், வி.என். ஜானகி, ஜாவர் சீதாராமன் போன்றோர் நடித்துள்ளனர் இப்படத்தின் இயக்குநர் எஸ்.எஸ். வாசன். இப்படம் 30 லட்சம் ரூபாய் செலவில் எடுக்கப்பட்டது. அக்காலத்தில் இது மிகப்பெரிய தொகையாகும். இப்படம் ஒரு கோடி ரூபாய் வருமானம் ஈட்டி வசூலிலும் சாதனைபுரிந்தது.

இப்படத்தில், எம்.கே.ராதாவும், டி.ஆர். ராஜகுமாரியும் காதலன் காதலியர். மன்னன் எம்.கே. ராதாவின் தம்பி ரஞ்சன் அவர்கள் இருவரையும் சிறைபிடித்து நாட்டைக் கைப்பற்றிக்

கொள்கிறான். அவனிடமிருந்து நாட்டையும் காதலியையும் மீட்கப் போராடுவதுதான் இப்படத்தின் கதையாகும்.

சந்திரலேகா படத்தில் வரும் 'டிரம்' டான்ஸ் மிகப்புகழ் பெற்ற ஒன்றாகும். இந்த நடனக்காட்சிக்காக ஒருமாத காலம் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்படத்தில் இடம்பெறும் கத்திச்சண்டையும் புகழ்பெற்றதாகும். மேலும் அப்படத்தில் கதாநாயகனும், நாயகியும் வில்லனிடமிருந்து தப்பிக்க, சர்க்கஸ் கூட்டத்தில் இணைந்து விடுகின்றனர். சர்க்கஸ் சம்பந்தமான காட்சியில் ராஜகுமாரி 'டிரெபிஸ்' ஆடுவதுபோலக் காட்சிகள் எடுக்கப்பட்டன அதற்காகவும் அவர் தனிப்பட்ட முறையில் பயிற்சி எடுத்துக்கொண்டார்.

சந்திரலேகா படத்தின் மூலம், புகழின் உச்சிக்குச் சென்ற ராஜகுமாரி, அப்படத்தில் நடிக்க ஒரு இலட்சம் வாங்கியதாகவும் சொல்லப்படுகிறது. அக்காலக்கட்டத்தில் நடிகைகளில் இவரும், நடிகர்களில் டி.ஆர். மகாலிங்கமும்தான் நடிப்பதற்கு அதிகம் பணம் பெற்றுள்ளனர்.

இவ்வாறு, டி.ஆர். ராஜகுமாரி நடிப்பு, பாட்டு, ஆடல் என்று முழுக்க முழுக்கத் தன்னை நடிகைக்குரிய முழுத் தகுதியாக்கிக் கொண்டுள்ளார். நேரில் பார்க்கும்போது, அவரை அத்தனை அழகு என்று சொல்லமுடியாது. இயல்பாக அவர் சற்று உயரம் குறைந்தவர். புதுநிறம் கொண்டவர். சற்றுக் குண்டானவருமாவார். திரைப்பட நடிகைகளுக்குரிய அபூர்வத் தோற்றப்பொலிவு அவருக்குக்கிடையாது. இருந்தாலும் அவருடைய குரல்வளமும், அழகான பேசும் கண்களும், காட்சிக்கேற்ப நடிக்கும் ஆற்றலும், பாத்திரத்தன்மையைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப நடிப்பை வெளிப்படுத்தும் ஆற்றலும், ஆடல் காட்சிகளில் எடுத்துக்கொண்ட அக்கறையும், எல்லாவற்றையும் மீறிப் புகைப்படத் தோற்றமும் (Photogenic Face) அவரைத் தமிழ் இரசிகர்களின் மனதில் கனவுக்கன்னியாக இடம்பெற வைத்தன.

1949இல் 'பவளக்கொடி', 1950இல் 'விஜயகுமாரி', 1951இல் 'வனசுந்தரி', 1952இல் 'அமரகவி', 1953இல் 'என்வீடு', 'மனோகரா', 1955இல் 'குலேபகாவலி' ஆகிய பாடங்களில் ராஜகுமாரி நடித்துள்ளார். இவற்றில், பவளக்கொடியில் டி.ஆர். மகாலிங்கமும், டி.ஆர். ராஜகுமாரியும் இணைந்து நடித்துள்ளனர். இசையை அடிப்படையாகக்கொண்டு எடுக்கப்பட்ட இப்படத்தைப் புகழ்பெற்ற பட்சிராசா பிக்சர்ஸ் தயாரித்தது மனோகரா

திரைப்படம், டி.ஆர். ராஜகுமாரியின் திரைப்பட வரலாற்றில் மற்றொரு மைல்கல்லாகும். சதாசிவராவ் என்பவர் மன்னராகவும் நடிகை கண்ணாம்பாள் அரசியாகவும், சிவாஜிகணேசன் இளவரசனாகவும் நடித்த அப்படத்தில், மன்னனைக் காதல் வலையில் வீழ்த்தி அவரையும் நாட்டையும் தன்பக்கம் திருப்பும் வசந்தசேனா என்ற வில்லி பாத்திரத்தில் டி.ஆர். ராஜகுமாரி நடித்தார். இப்படத்தில் அவர் கொடுமைக்காரியாக நடித்திருந் தாலும் இரசிகர்கள் அவர் வரும் காட்சிகளை விரும்பி வரவேற்றனர்.

புகழின் உச்சியிலிருந்த டி.ஆர். ராஜகுமாரி, தன் தம்பி டி.ஆர். ராமண்ணாவுடன் இணைந்து ஆர்.ஆர். பிக்சர்ஸ் (ராஜகுமாரி, ராமண்ணா பிக்சர்ஸ்) என்ற திரைப்படத் தயாரிப்பு நிறுவனதத்தைத் தொடங்கினார். அதன் மூலம் 1954இல் 'கூண்டுக்கிளி' என்ற படம் முதல்படமாக எடுக்கப்பட்டது. அப்பொழுது புகழ்பெற்று விளங்கிய சிவாஜி, எம்.ஜி.ஆர். இருவரையும் இணைத்து இப்படத்தைத் தயாரித்தனர். ஆனால் அப்படம் வெற்றிபெறவில்லை. அதன்பின் 1955இல் 'குலேபகாவலி', 1957இல் 'புதுமைப்பித்தன்', 1962இல் 'பாசம்', 1963இல் 'பெரிய இடத்துப் பெண்', 1964இல் 'பணக்காரக் குடும்பம்', 1965இல் 'பணம் படைத்தவன்', 1966இல் 'பறக்கும் பாவை' என்று வரிசையாகப் புகழ்பெற்ற படங்களைத் தந்தது அந்நிறுவனம்.

இப்படங்களின் தயாரிப்பின்போது, டி.ஆர். ராஜகுமாரி நிறையப் பங்கு எடுத்துக்கொண்டார். கதைத்தேர்வு, நடிகர் நடிகையர் தேர்வு இவற்றில் இவரின்பங்கு முக்கியமானதாகும். ஒவ்வொரு படமும் உருவாகும்போது அதை அடிக்கடிப் போட்டுக்காட்டச் சொல்லி, ஆலோசனைகள் வழங்குவதுண்டு. அவர் கூறும் மாற்றங்களை அப்பட இயக்குநராகவும், இணைத் தயாரிப்பளராகவும் இருந்த டி.ஆர். ராமண்ணா முழு மனதுடன் ஏற்றுச் செயல்படுவதுண்டு. ஆர்.ஆர். பிக்சர்ஸ் தயாரித்த சில படங்களில் ராஜகுமாரியும் நடித்துள்ளார். குறிப்பாகக் குலேபகாவலியில் எம்.ஜி.ஆரின் இணையாக மூன்று கதாநாயகிகளில் ஒருவராகவும், பெரிய இடத்து பெண்ணில் எம்.ஜி.ஆரின் சகோதரியாகவும் நடித்துள்ளார்.

திரைப்படங்களில் புகழ்பெற்றிருந்த அந்தக் காலக் கட்டத்தில் டி.ஆர்.ராஜகுமாரி அவர்களை மணந்துகொள்ள புதுக்கோட்டைராஜா முன்வந்தார். ஆனால் அதை ராஜகுமாரி

மறுத்துவிட்டார். (குசலகுமாரி அவர்களின் பேட்டியின்போது பெறப்பட்ட தகவல்.) அவருக்குத் திருமணவாழ்வில் சிறிதும் விருப்பம் இல்லை. அவர் தன்னோடு உடன் நடிக்கும் நடிகர் களிடமும் நடிகைகளிடமும் கூட நெருங்கிப் பழகியதில்லை. எப்பொழுதும் தன்னைத் தனிமைப்படுத்திக்கொள்ளும் இயல்புடையவர். படப்பிடிப்பு தளங்களில்கூடத் தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பாரே தவிர, யாரிடமும் நெருக்கம் பாராட்டியதில்லை.

டி.ஆர். ராஜகுமாரி தயாரிப்புப் பணியில் ஈடுபட்டபின் வெளிப்படங்களில் நடிப்பதைக் கொஞ்சம் சொஞ்சமாகக் குறைத்துக் கொண்டார். சுமார் 64 படங்களில் நடித்துள்ள அவர், இறுதியாக நடித்தது 'வானம்பாடி' (1963) படத்தில்தான். நடிப்பைத் துறந்த அவர் பொதுவாழ்க்கையையும் அதன்பின் அறவே துறந்துவிட்டார்.

டி.ஆர். ராஜகுமாரி நடிக்க வந்தபின்பு, தன் குடும்பத்தை முன்னேற்றுவதைத் தம் பொறுப்பில் எடுத்துக்கொண்டார். தம் தாயின் இறப்புக்குப்பின்பு, தம் உடன்பிறந்தவர்களைக் காக்கும் பொறுப்பு மூத்தவரான அவரைச் சார்ந்தது. ஒலிப்பதிவாளராக (Sound Recordist) இருந்த தன் மூத்த தம்பி ராமண்ணாவைத் திரைப்படத் தயாரிப்பாளர் ஆக்கினார். சென்னை தியாகராய நகரில் 'ராஜகுமாரி' என்ற பெயரில் திரைப்பட அரங்கை வாங்கினார். அதை நடத்தும் பொறுப்பைத் தம் இரண்டாவது தம்பியிடம் ஒப்படைத்தார். மூன்றாவது தம்பியைச் சட்டம் படிக்க வைத்தார். அவர்களுக்கெல்லாம் திருமணம் செய்து அனைவரையும் ஒரே குடும்பமாகத் தம் பார்வையில் வைத்துக்கொண்டார். தன் ஒரே தங்கை சேதுலட்சுமியை டி.ஏ. மதுரம் அவர்களின் தம்பி பி.ஏ. ஞானத்திற்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

தம் குடும்பத்துப் பெண்களைத் தம் குலத்தொழிலிருந்து மீட்டெடுத்தார் ராஜகுமாரி. அவருக்குப்பின் அவர் குடும்பத்தில் யாரும் பொட்டுக்கட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தன் தம்பி குடும்பங்களைச் சேர்ந்த பெண்களை உயர் கல்வி படிக்கவைத்துச் சமூகத்தில் நல்ல அந்தஸ்தில் உள்ளவர்களுக்கு மணம் செய்துகொடுத்தார். அப்பெண்களை மிகுந்த கட்டுப்பாட்டுடன் வளர்த்தெடுத்து, திரைப்பட நிழல்படியாது அவர்களை நல்ல குடும்பப் பெண்களாக வாழ வழிவகை செய்தார். தம் தம்பியர் குடும்பங்களை மட்டுமல்லாது தம் தாயின் உடன்பிறந்தவர்களையும் காப்பாற்றினார். சொந்தபந்தங்களுக்

கெல்லாம் திருமணம் செய்து வைத்தார். அவர் தியாகராயநகர் அபிபுல்லா சாலையில் மிகப்பெரிய வீட்டினைக் கட்டிக் குடியேறினார். அவ்வீட்டிற்குக் 'கன்னியாகுமாரி' என்று பெயரிட்டார். அவ்வீட்டில் நாள்தோறும் உறவுகளில் 40,50 பேர்கள்சாப்பிடுவது வழக்கம்.

ராஜகுமாரி தம் பிற்கால வாழ்க்கையை முழுக்க முழுக்கக் குடும்பத்திற்காக அர்ப்பணித்துக்கொண்டதுடன் மிக எளிமையாகவும் வாழ்ந்தார். நகைகள் அணிவதை அறவே தவிர்த்திருந்தார். வெளியில் செல்வதையும் அறவே தவிர்த்து விட்டார். வெளி உலகத்தினர் கண்ணில்படாது குடும்பத்தினருடன் அமைதியான வாழ்க்கை வாழ்ந்தார். அந்தக்காலக் கட்டத்தில் அவர் வீணை கற்றுக்கொண்டார். வடமொழி கற்றுக்கொண்டார். குடும்பத்தோடு மகிழ்ச்சியாக இருக்கும்போது வீணைவாசித்துப் பாடுவதுதான் அவரது பொழுது போக்கு. பின்பு தன்நேரத்தை இறைவழிபாட்டில் செலவழித்தார். கடவுள் விக்கிரங்களைத் தங்கத்தில் செய்துவைத்து நாள்தோறும் அவற்றிற்கு அபிஷேகம் செய்வதையும், சுலோகங்கள் சொல்வதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார். பின்பு ஒருநாள் அவற்றையெல்லாம் காஞ்சிப் பெரியவரிடம் ஒப்படைத்துவிட்டு முழுக்க ஸ்ரீசீரடி சாய்பாபாவின் பக்தையானார். அவர் தன் வீட்டில் சாய்பாபாவின் சிலைவைத்து வழிபாடு நடத்தினார்.

ராஜகுமாரிக்கென்று பெரிய நட்புவட்டமும் கிடையாது. தோழி என்று சொல்லிக் கொள்பவர்கள் இருவர்தான். ஒருவர் எம்.ஜி.ஆரின் மனைவி வி.என். ஜானகி. மற்றொருவர் ராஜகுமாரியின் வீட்டின் பின்புறம் வசித்த திருமதி சுலோசனா சம்பத் ஆவார். இவர்களைத் தவிர அவர் யாருடனும் நட்புப் பராட்டியதுமில்லை. வீட்டிற்கு அழைத்ததுமில்லை.

ராஜகுமாரியின் சித்தி எஸ்.பி.எல். தனலட்சுமியின் வளர்ப்புப் பெண் நடிகை ஜோதிலட்சுமி. இவர் ராஜகுமாரியின் தாய்மாமாவின் பெண்ணாவார். ஜோதிலட்சுமியின் கடைசித் தங்கை நடிகை ஜெயமாலினி. ராஜகுமாரியின் மற்றொரு சித்தி பெண்ணான டி.எஸ். தமயந்தியின்பெண் நடிகை குசலக்குமாரி. இம்மூவரும் அவரவர் காலங்களில் திரைப்படங்களில் நடித்துப் புகழ்பெற்றுத் திகழ்ந்தனர்.

ராஜகுமாரியின் விருந்தோம்பல் பணியினைக் குறிப்பிட்டேயாக வேண்டும். யார் அவர்கள் வீட்டிற்குச் சென்றாலும் உணவு உண்ணாமல் திரும்ப முடியாது. தன்னிடம் வேலை

பார்த்தவர்களின் குடும்பங்களையெல்லாம் காப்பாற்றியதுடன் அவர்களிடமும் குறையாத அன்பு பாராட்டியுள்ளார்.

நல்லதொரு மனுசியாக வாழ்ந்த அவர், தன்னைமட்டும் வெளி உலகம் காணாது மறைத்துக் கொண்டது பல வதந்திகளைக் கிளப்பியது. அவருக்கு 'குஷ்டரோகம்' என்றும் 'சயரோகம்' என்றும் வதந்திகள் கிளம்பின.

தெரிந்தவர்களின் இல்லத்திருமணத்திற்கும், சாவுக்கும் செல்வதை மட்டும் வழக்கமாக வைத்திருந்த ராஜகுமாரியை ஒருமுறை சிவாஜி ஒரு திருமண வீட்டில் பார்த்து, 'அம்மா! உன்னைப் பற்றி என்னென்னவோ சொல்கிறார்களே. உன் உடல்நிலை எப்படி இருக்கிறது' என்று கையினைப் பிடித்துக் கொண்டு பரிவோடு நலம் விசாரித்தபோது, 'நீங்கள்தான் என்னை நேரில் பார்க்கிறீர்களே. நான் நலமாகத்தான் இருக்கின்றேன். அவை வதந்திகள்தான். கவலைப் படாதீர்கள்' என்று கூறினாராம். இவ்வாறு தன் குடும்பத்திற்காகச் சமூகத்தை விட்டு விலகி வாழ்ந்த அவரின் தியாக உள்ளத்தைக் கண்ணதாசன் ஒருமுறை நினைவு கூர்ந்துள்ளார்.

கண்ணதாசன் தான் சந்தித்த நபர் ஒருவரைப் பற்றி ஒவ்வொரு வாரமும் 'குமுதத்தில்' எழுதி வந்தார். ஒருவாரம் டி.ஆர். ராஜகுமாரியைப்பற்றி எழுதியிருந்தார். தான் ராஜகுமாரி திரையரங்கு வழியாகக் காரில் சென்றபோது டி.ஆர். ராஜகுமாரியைப் பற்றிய நினைவுகள் வந்ததாகக் கூறி அதனால் அவரைப்பற்றி அந்தவாரம் எழுதுவதாகத் தொடங்கும் அக்கட்டுரையில், 'தம்பிகளுக்காகத் தம் வாழ்வைத் தியாகம் செய்தவர்' என்று எழுதிவிட்டு, தனக்கு அடுத்த ஒரு பிறவி என்று ஒன்று இருந்தால் ராஜகுமாரியின் தம்பியாகப் பிறக்கவேண்டும் என்று முடித்திருந்தார்.

இறுதிவரை தம்பி ராமண்ணாவுடன் வாழ்ந்த ராஜகுமாரி, தம்பியின் இறப்புக்குப்பின் அவர் மனைவியுடன் வாழ்ந்தார். மறதிநோய் காரணமாக ஓரிருவருடம் அவதியுற்ற அவர் 1999ஆம் ஆண்டு செப்டம்பர் 21ஆம் தேதி மறைந்தார். அவருடைய இறப்புகூட அவர் குடும்பத்தாரால் பெரிதாகப் பிரகடனப் படுத்தப் படவில்லை. கலையுலகம் சார்பாக, கலைஞர் கருணாநிதி தம் இரங்கல் அறிக்கையை வெளியிட்டிருந்தார். இந்து நாளிதழ் ரண்டார்கையின் 'A Legend in her time' என்ற கட்டுரையை வெளியிட்டு அவருக்கு அஞ்சலி செலுத்தியிருந்தது.

டி.ஆர். ராஜகுமாரி, திரை உலகின் முடிசூடா ராணியாகத் திகழ்ந்தபோது, புகழ்பெற்ற நடிகைகளுக்கேயுரிய அத்தனைக் கஷ்ட நஷ்டங்களையும் கடந்து வந்துள்ளார். அவரைச் சுற்றி நாளும் வதந்திகள் உலாவி இருக்கின்றன. ஆனால், இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டு, தன்னைத் தன்குடும்ப உறவுகளுடன் பிணைத்துக் கொண்டு, பிற்கால வாழ்வைத் திட்டமிட்டு அமைதியுடனும் அர்ப்பணிப்புடனும் வாழ்ந்து சென்றுள்ளார் என்பதை அறியும்போது, தனிவாழ்விலும் பொது வாழ்விலும் அவரது வாழ்க்கை குறிப்பிடத்தகுந்த ஒன்றாக இருந்திருப்பதை அறியமுடிகிறது.

தகவல் ஆதாரங்கள்

1. டி.ஆர். ராமண்ணாவின் மூன்றாவது பெண்ணாகிய திருமதி. சித்ரா அவர்களிடம் 15.11.08 அன்று கண்ட நேர்காணல்.
2. 16.11.08 அன்று, 'குசலக்குமாரி' அவர்களிடம் கண்ட நேர்காணலில் திரட்டிய தகவல்கள்.
3. ராண்டார்கை எழுதிய, 'A Legend in her time' என்ற கட்டுரை.
4. அக்காலத்தில் இரசிகர்கள் ஒருசிலரிடம் கண்ட நேர்காணல்கள்.

ருக்மணிதேவி அருண்டேல்

தா. ரெங்கநாதன்

தந்தைவழிச் சமுதாயம் தோற்றம் பெற்ற காலம் முதல், இன்றுவரை ஆண்களின் சாதனைகள்தான் அதிகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதனையும் மீறிப் பெண்களும் பல சாதனைகளைச் செய்து வந்துள்ளனர். இவர்களின் சாதனைகள் ஆண்களுக்கு நிகராக இருந்தாலும், அவை முழுமையாக ஆவணப்படுத்தப்படவில்லை. இவ்வாறு சாதனைகள் பல நிகழ்த்தியவர்களில் கலாக்ஷேத்திராவை நிறுவிய ருக்மணி அருண்டேலும் அடங்குவார். இந்தக் கட்டுரை ருக்மணி தேவி பற்றி அமைகிறது.

ருக்மணி தேவி 1904 ஆம் ஆண்டு பிப்ரவரி 29ஆம் நாள் மதுரையில் பிறந்தார். தந்தை நீலகண்ட சாஸ்திரி மதுரையில் பொறியாளராகப் பணியாற்றினார். இவரது சொந்த ஊர் திருவாச நல்லூர். இவர் தமிழ், வடமொழி இலக்கியங்களிலும், வேதங்களிலும் சிறந்த புலமை பெற்றவர். இவர் வைதிக குடும்பத்தைச் சேர்ந்தவராக இருப்பினும் பிற்போக்கு வழக்கங்கள் எதையும் பின்பற்றுவதில்லை. இவர் சென்னையிலிருந்த பிரம்ம ஞான சபையின் உறுப்பினராக இருந்தார். தாயார் சேஷம்மாள் இசையறிவுமிக்க குடும்பத்தில் பிறந்தவர். இவர் பிறந்த ஊர் திருவையாறுக்குப் பக்கத்திலுள்ள அகிலாண்டபுரம். நீலகண்ட சாஸ்திரி, சேஷம்மாள் தம்பதிகளுக்கு ஆறாவது குழந்தை ருக்மணி தேவி.

குழந்தைப் பருவத்திலேயே ருக்மணி இசையிலும், பிற கலைகளிலும் மிகுந்த ஆர்வமுடையவராக இருந்தார். எனவே, தொடக்கக்கல்வி கற்கும்போதே ருக்மணி இசையும் கற்றார். நீலகண்ட சாஸ்திரி மதுரையில் பணியாற்றியபோதும், அன்னி பெசன்ட் நிர்வகித்த பிரம்மஞான சபையின் செயல்பாடுகளில் ஆர்வம் காட்டினார். எனவே, பணியோய்வு பெற்றதும், சென்னையில் குடியேறினார். இச்சமயத்தில் டைகர் வரதாச்சாரி, வீணை வைத்தியநாத ஐயர், மைசூர் வாசுதேவாச்சாரி, பாபநாசம் சிவன் ஆகியோரிடம் ருக்மணி இசை கற்க ஏற்பாடு செய்தார்.

நீலகண்ட சாஸ்திரிக்குப் பிரம்மஞான சபை செயல்பாடு களில் ஏற்பட்டிருந்த ஈடுபாடு காரணமாக, அங்கு இணைந்து பணியாற்றத் தொடங்கினார். அப்போது ருக்மணி தேவியை, அன்னிபெசன்ட் அம்மையாரிடம் அறிமுகப்படுத்தினார். ருக்மணியின் தோற்றமும் சுறுசுறுப்பும் அன்னிபெசன்ட் அம்மையாருக்கு மிகவும் பிடித்தன.

இசையும், கல்வியும் இணைந்து கற்றுக்கொண்டிருந்த மகிழ்ச்சியான காலத்தில் ருக்மணியின் தந்தை காலமானார். அவர் மறைந்த ஆண்டு 1919. இதனால் ருக்மணியின் இசைப் பயிற்சிக்குத் தடை ஏற்பட்டது. இந்தச் சமயத்தில் அவருக்குப் பிரம்ம ஞான சபையுடன் அதிகமான தொடர்பு ஏற்பட்டது (எம்.எல். அகுஜா, 2006: 24). எனவே, அன்னி பெசன்ட் அம்மையாருடன், நெருங்கிப் பழகும் வாய்ப்பு அமைந்தது. அப்போது அருண்டேல் என்ற ஆஸ்திரேலியர் அங்கு இருந்தார். இவர் பிரம்ம ஞான சபையினரின் பெசன்ட் பள்ளியில் முதல்வராக பணியாற்ற 1913இல் சென்னைக்கு வந்தார் (சி.நாச்சியப்பன், 2003:15). அவர் இந்தியக் கலைகளிலும், பண்பாட்டிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். தந்தையை இழந்த ருக்மணிக்கு அருண்டேலின் பழக்கம் ஆறுதலை அளித்தது. பின்னர் ருக்மணியின் வீட்டிற்கும் வரத்தொடங்கினார். அருண்டேலுக்கு, ருக்மணியின் அழகு, அறிவு, கலை இலக்கிய ஈடுபாடு ஆகியவை பிடித்தன. அப்போது அருண்டேல் 40 வயது நிரம்பியவராகவும், திருமணம் ஆகாத வராகவும் இருந்தார். ருக்மணிக்கு 16வயதுதான் நிரம்பியிருந்தது. அருண்டேல், ருக்மணியைத் திருமணம் செய்து கொள்வதாகக் கூறினார். அன்னிபெசன்ட் அம்மையாரும் இதை ஆதரித்தார். இந்தச் செய்தி வெளியானபோது, உயர்குடியைச் சேர்ந்தவர்களும் பத்திரிகையாளர்களும் எதிர்ப்புத் தெரிவித்தனர். உயர்வகுப்பைச் சார்ந்த பெண் ஆங்கிலேயரைத் திருமணம் செய்து கொள்வதா? என்பதுடன் இருவருக்குமான வயது வேறுபாடும் சேர்ந்து கொண்டது (பைம்பொழில் மீரான், 2007: 132). 'தி இந்து' பத்திரிகை 'Adyar Ways' என்று தலையங்கம் எழுதி தனது எதிர்ப்பைத் தெரிவித்தது. இதனை எதிர்த்தும் திருமணத்தை ஆதரித்தும் பெசன்ட் அம்மையார் 'New India' பத்திரிகையில் கட்டுரை எழுதினார் (சி. நாச்சியப்பன், 2003:15-16).

திருமணத்திற்கு எதிர்ப்புகள் பல இருந்த போதிலும், ருக்மணியின் தாயாரும் அன்னிபெசன்ட் அம்மையாரும்

ஆதரவாக இருந்தார்கள். எனவே 1920ஆம் ஆண்டு ருக்மணி அருண்டேல் திருமணம் பிரம்ம ஞான சபையில் எளிமையாக நடைபெற்றது. திருமணத்திற்குப் பின்னர், இசை, நடனம், கல்வி போன்றவற்றில் ருக்மணி அதிக ஈடுபாடு காட்டி வந்தார். கணவரும் பல்வேறு வகையில் ஊக்கம் கொடுத்துப் பாராட்டினார். இந்த நேரத்தில் அவருக்குக் கணவருடன் வெளிநாடுகளுக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. பிரம்மஞான சபை தொடர்பான பயணமாக இருந்தமையால் பல்வேறு துறை அறிஞர்களையும், கவிஞர்களையும் சந்தித்துப் பேசும் வாய்ப்பாக அமைந்தது. இவர் தன்னுடைய கணவரின் பல பணிகளிலும் உதவியாக இருந்தார். அப்போது 'New India' பத்திரிகையின் பதிப்புப் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இந்தக் காலகட்டத்தில்தான் கல்வி, கலை பற்றிய புதிய சிந்தனைகளைப் பெற்றுக் கொண்டார். அருண்டேலுடன் வாழ்ந்த வாழ்க்கை முறை கல்வி கற்பது போலவே இருந்தது (எம்.எல். அகுஜா, 2006: 25). கணவரின் ஆதரவால் ருக்மணி பன்முகத் தன்மையுடைய பெண்ணாக உருவானார். திருமணத்திற்குப் பின்னர் ருக்மணியின் முழுமையான திறமைகள் வெளிப்பட்டன.

ருக்மணியின் திறமைகளை அங்கீகாரம் செய்வதுபோல், இந்திய இளைஞர் அமைப்பின் தலைவர் பதவி தரப்பட்டது. பின்னர் 1925ஆம் ஆண்டு உலக இளைஞர் பிரம்மஞானசபைத் தலைவியானார். இந்த இரு பதவிகளுக்குப் பின்னர் உலக நாடுகளில் பயணம் செய்யும் வாய்ப்பு கிடைத்தது. இந்தப் பயணத்தின் போது சிலவற்றைப் புதிதாகக் கற்றுக் கொள்ள முடிந்தது.

அன்ன பவ்லோவா என்ற ஆஸ்திரேலிய நாட்டுப் பாலே நடனக் கலைஞரை 1926இல் சந்தித்தார். அப்போது, பாலே நடனம் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அன்ன பவ்லோவாவின் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கான நடனப் பயணத்தின்போது, அவருடன் இருக்கும் வாய்ப்பு தற்செயலாக ருக்மணிக்குக் கிடைத்தது. அப்போது அருண்டேலும் விரிவுரையாற்றும் பயணத்தில் ஈடுபட்டிருந்தமையால், அவரும் உடனிருந்தார். அன்ன பவ்லோவா மூலம் பாலே நடனத்தைக் கற்றார் ருக்மணி. இந்த நடனம் கற்றபின் ருக்மணியின் உடல் பரதநாட்டியம் கற்பதற்கான தகுதி பெற்றிருந்தது.

உயர் வகுப்பு மக்களால் சதிர் என்று அழைக்கப்பட்ட, பரத நாட்டியத்தைப் பார்க்கும் வாய்ப்பு ருக்மணிக்குக் கிடைத்தது. அதில் எவ்விதமான இழிவான செயலும் இல்லை எனத் தெரிந்து கொண்டார். அதைப் பார்த்த பின்னர் ஏற்பட்ட ஆர்வம் காரணமாக, பரதநாட்டியம் பயிலவேண்டும் என்ற எண்ணம் ருக்மணிக்கு ஏற்பட்டது (சரவணன், திருவேங்கிமலை, 2008: 99). 1954இல் நட்டுவனார், தேவதாசிகள் பற்றி உயர்வாக 'ஆனந்தபஜார்' பத்திரிகையில் கட்டுரை எழுதினார் கி.நாச்சியப்பன், 2003:31).

கவுரி அம்மாள் என்பவரிடம் ருக்மணி பரதநாட்டியம் கற்கத் தொடங்கினார். ருக்மணி பரதம் கற்பது தெரிந்து எதிர்ப்புகள் ஏற்பட்டன. இதனைப் பொருட்படுத்தாமல், அடிப்படை நடனம் கற்றபின் பந்தநல்லூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் நாட்டியம் கற்கச் சென்றார். சுந்தரம் பிள்ளை முதலில் தயங்கினாலும், ருக்மணியின் ஆர்வம் காரணமாகக் கற்றுக் கொடுத்தார். பின்னர், சிறந்த நாட்டியக் கலைஞராக ருக்மணி பெயரெடுத்தார். இவரது நடன அரங்கேற்றம் 1935இல் கணவர் தலைமையில் நடந்தது. இந்த அரங்கேற்றத்தின்போது ருக்மணி தேவிக்கு வயது 31.

இந்த அரங்கேற்றத்திற்கும் எதிர்ப்புகள் இருந்தன. கலை அனைவருக்கும் பொதுவானது. இதில் இனம், மதம், மொழி என்ற பாகுபாடு இல்லை என்றார் ருக்மணிதேவி. இன்று இந்தக் கலை மதிப்புமிக்கதாக அமைந்துள்ளமைக்குக் காரணம் ருக்மணிதேவி. இவர் கலைப்பணி ஆற்றிக் கொண்டிருக்கும் அதேவேளையில் இவர் கணவர் அருண்டேல் கல்விப் பணி செய்தார். மறைந்த அன்னிபெசன்ட் நினைவாக 1934இல் பெசன்ட் நினைவுப் பள்ளியைத் தொடங்கினார். இதற்காக ருக்மணிதேவி கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தி நிதி திரட்டித் தந்தார். பொழுது போக்கிற்காகப் பயன்பட்டுவந்த நடனக் கலையைச் சேவைக்காக நிதிதிரட்டவும் முதன்முதலில் பயன்படுத்தியவர் ருக்மணிதேவியே.

ருக்மணி தேவி பரதம் பயின்றபோது கேலியும், கிண்டலும் பேசினார்கள். இதை மாற்றும் நோக்கில், நடனப் பள்ளி அமைக்கும் முயற்சியில் இறங்கினார். அதற்கான களமாக 1936இல் கலாசேத்திராவை (Kalashetra) ஆரம்பித்தார். நடனத்தில் ஆர்வம் உள்ளோர்கள் அனைவரும் கற்பதற்கு வாய்ப்பளித்த கலாசேத்திராவைத் துவக்கும்போது மூன்று மாணவர்களுடன் ஓலைக் குடிசையாக இருந்தது. இன்று நூறு ஏக்கர் பரப்பில்

பல்வேறு கலைகளைக் கற்கும் கல்விக்கூடமாக அமைந்துள்ளது. பல்வேறு நடன மேதைகள், நடிகைகள் கலாசேத்திராவிலிருந்து உருவாகியிருக்கிறார்கள். இன்று கலாசேத்திரா மாணவி என்பது பெருமைக்குரியதாக உள்ளது. இந்த நிலையை அடைய ருக்மணி தேவி நடந்து வந்த பாதை கடினமானது.

ருக்மணிதேவியின் கணவர் அருண்டேல் 1945இல் காலமானார். அந்தப் பாதிப்பிலிருந்து வெளிவரக் கலை அவருக்கு உதவியது. பின்னர்ப் பிராணிகள் நலம், கல்வி, நடனம், இசை ஆகியவற்றில் தன்னை மேலும் ஈடுபடுத்திக் கொண்டார். 1946இல் பிரம்ம ஞான சபையின் தலைவரானார். 1947இல் அருண்டேல் மாண்டிசொரி கல்வி நிலையத்தையும், 1973இல் பெசன்ட் அருண்டேல் மேல்நிலைப் பள்ளியையும் நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அவர் தன்னை முழுமையாக ஒவ்வொரு பணியிலும் ஈடுபடுத்திக் கொண்டார். இந்த உழைப்பும் ஈடுபாடும் காரணமாக 1977இல் இந்தியக் குடியரசு தலைவர் பதவி இவரைத் தேடி வந்தது. இந்திய அரசின் மாநிலங்களவை உறுப்பினராகப் பணியாற்றிய நிலை இருந்தபோதும், குடியரசு தலைவர் பதவிக்கு விருப்பம் தெரிவிக்கவில்லை.

ருக்மணி தேவி தன்னுடைய நாட்டியத்தையும், நாட்டிய நாடகங்களையும் தொடர்ந்தார். மதம், பண்பாடு, கலை ஆகியவற்றை, முன்வைத்துத்தான் இந்தியக் கலையை எடுத்துக் கூறினார். புராணங்களின் அடிப்படையிலும், செவ்வியல் இலக்கியங்களின் அடிப்படையிலும் நிகழ்ச்சிகள் அமைக்கப் பட்டன. இந்நிகழ்ச்சிகளுக்கு இசை வல்லுநர்களாக மைசூர் வாசுதேவாச்சாரி, டைகர் வரதாச்சாரி, பாபநாசம் சிவன், பூதலூர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி, எம்.டி. ராமநாதன், ராஜாராம் ஆகியோர் இருந்தனர்.

ருக்மணி தேவி 5 நாடகங்களும், 25 நாட்டிய நாடகங்களும் தயாரித்துள்ளார். இவை இந்தியா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் அரங்கேற்றப்பட்டுள்ளன. இவரது புத்த அவதாரம் நாட்டிய நாடகம் வியட்நாம், கொரியா, ஹாங்காங், தாய்லாந்து ஆகிய நாடுகளில் மேடையேற்றப்பட்டுப் பாராட்டப்பட்டது. இவர் உருவாக்கிய மீன் அவதாரம், கூர்ம அவதாரம், மீனாட்சி விஜயம் போன்றவை மேடை அலங்காரம் மற்றும் வண்ணக்கலவை ஆகியவற்றுக்காக பாராட்டப் பெற்றவை. அரங்கத்தையே கோயிலாக மாற்றும் சக்தி இந்த நாட்டிய நாடகங்களுக்கு இருந்தது பெருமைக்குரியது இவரது

இராமாயணத் தொடர், ஆறு பகுதியாகத் தொடர்ந்து ஆறு இரவுகள் நடைபெற்றது. இது வால்மீகி இராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டது. இது லக்நௌ தாவரவியல் பூங்காவின் திறந்தவெளியில் மரம் செடிகளமைந்த பின்னணியில் நிகழ்ந்தது. அப்போது அயோத்தி, பஞ்சவடி, அசோகவனம் போன்றவற்றை நேரில் பார்ப்பது போன்றிருந்தது (எம்.எல். அகஜா, 2006: 29). அனுமன் மரத்துக்கு மரம் தாவிச் செல்லும் காட்சி யதார்த்தமாக அமைந்திருந்தது. இது ருக்மணி தேவியின் கற்பனைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

ருக்மணி தேவியின் நாட்டிய நாடகக்குழு குற்றாலக் குறவஞ்சி, கண்ணப்பர் குறவஞ்சி, கிருஷ்ண குறவஞ்சி ஆகியவற்றையும் நாட்டிய நாடகமாக உருவாக்கியது. இவற்றுள் குற்றாலக் குறவஞ்சியைக் குற்றாலத்தில் அரங்கேற்றம் செய்தனர். தெலுங்கில் மேலாட்டூர் வெங்கட்ராம பாகவதர் இயற்றிய துருவ சரித்திரம், உஷா பரிணயம், ருக்மணி கல்யாணம் போன்ற வற்றையும் மேடையேற்றினார். காளிதாசரின் குமாரசம்பவம், ஜெயதேவரின் கீதாகோவிந்தம், அஜமிலே பாக்யானம், கூர்ம அவதாரம், உத்தரை சுயம்வரம், ஆண்டாள் சரித்திரம், மீனாட்சி விஜயம் (திருவிளையாடல் புராணத் தழுவல்), தாகூரின் சியாமா, தமயந்தி சுயம்வரம் போன்றவை கலாசேத்திராவின் சிறந்த நாட்டிய நாடகங்களாகக் கருதப்பட்டன. ருக்மணி தேவி மதம், பண்பாடு, கலை, தத்துவம் போன்ற பல்வேறு தலைப்புகளில் 46 நூல்கள் எழுதியுள்ளார் (மோகன் சுந்தர் பாண்டியன், 2007:13-14).

ருக்மணி தேவியின் படைப்புக்களில் குமார சம்பவம் மிகச் சிறப்பு வாய்ந்தது. இதில் ருக்மணி உண்மையான பார்வதி போல் நடனமாடினார். மேடையில் திரை விலகியதும், பார்வை யாளர்கள் மற்றொரு உலகிற்குள் புகுந்ததுபோல் உணர்ந்தார்கள் (எம்.எல். அகுஜா, 2006: 31). ருக்மணி தேவி தஞ்சாவூர் பாணி பரதத்தைப் பின்பற்றினார். ஆடை வடிவமைப்பு, ஒப்பனை, ஒலி ஒளி அமைப்பு, அரங்க அமைப்பு போன்றவற்றை நேரில் கண்காணித்தார். நாட்டிய உடைகளுக்கான துணிகள் கலாசேத்திராவில் நெய்யப்பட்டன. இங்கு உருவாக்கப்பட்ட 'கலம்காரி' பட்டுச்சேலை புகழ் பெற்றது.

ருக்மணி தேவியின் படைப்புகளாக 5 நாடகங்களும், 25 நாட்டிய நாடகங்களும் உள்ளன அவை,

நாடகங்கள் : 1. ஹயவதா 2. லைட் ஆப் ஆசியா 3. பீஷ்மா 4. குசேலவிருத்தம் 5. காரைக்கால் அம்மையார்

நாட்டிய நாடகங்கள் : 1. குற்றாலக் குறவஞ்சி (1944) 2. குமார சம்பவம் (1947) 3. சீதாசுயம்வரம் (1954) 4. உஷா பரிணயம் (1959) 5. ருக்மாங்கத சரிதம் 6. கீத கோவிந்தம் 7. ஸ்ரீராம வனகமனம் (1960) 8. பாதுகா பட்டாபிசேகம் (1960) 9. சியாமா (1961) 10. ஆண்டாள் சரிதம் (1959) 11. கண்ணப்பக் குறவஞ்சி (1962) 12. ருக்மணி கல்யாணம் (1964) 13. சபரி மோட்சம் (1965) 14. காளிதாசரின் அபிஞான சகுந்தலம் (1967) 15. சூடாமணி பிரதானம் (1968) 16. மகா பட்டாபிஷேகம் (1970) 17. துருவ சரித்திரம் (1971) 18. கிருஷ்ணமாரி குறவஞ்சி (1971) 19. குசேலாபாக்கியானம் (1972) 20. மத்சய கூர்ம அவதாரம் (1974) 21. மீனாட்சி விஜயம் (1977) 22. தமயந்தி சுயம்வரம் (1978) 23. புத்த அவதாரம் (1979) 24. அஜமிலோபாக்யானம் (1980) 25. மீரா ஆப் மேவார் (1984) (சி. நாச்சியப்பன், 2003: 44-45)

வயது அதிகமாகிக் கொண்டே சென்றபோது நாட்டியம் ஆடுவதைத் தவிர்த்தார். இவரின் சிறந்த மாணவர்களிடம் நாட்டியத்தை ஒப்படைத்து விட்டுப் பிற துறைகளில் கவனம் செலுத்தினார். இன்று கலாசேத்திரா, ருக்மணி தேவியின் வாழும் நினைவிடமாக உள்ளது. அது வளர்ந்து பண்பாட்டு மையமாக, நாட்டியம், இசை பயிலும் மாணவர்களை ஈர்க்கும் மையமாக உள்ளது. கலாசேத்திராவால் உருவாக்கப்பட்ட சிறந்த நாட்டிய மங்கைகளுள் யாமினி கிருஷ்ணமூர்த்தி, சஞ்சுக்தா பாணிகிரகி, சாரதா, ராதா, தனஞ்செயன்கள், சந்திரசேகர்கள், லலிதா சாஸ்திரி, லீலா சாம்சன், கிருஷ்ணவேணி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

கல்விச்சேவையும் கலைச்சேவையும் ஆற்றி வந்த ருக்மணி விலங்குகள் மீது அன்பு செலுத்திவந்தார். எனவே, அதனைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொண்டார். இந்தப் பணியைக் கண்ட மைய அரசு, இவரைப் பிராணிகள் நல வாரியத் தலைவராக நியமித்தது. இவர் இந்தியா முழுவதும் பயணம் செய்து விலங்குகள் வதை செய்வதை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தார். இவர் கல்விக்கும், கலைக்கும் செய்த சேவைகளை மதித்து, இந்திய அரசு மாநிலங்களவை உறுப்பினராக்கியது. அவ்வாய்ப்பைப் பயன்படுத்திப் பிராணிகள் வதைக்கப்படும் நிலைமை குறித்து உரையாற்றினார். அப்போது மாநிலங்களவைத் தலைவராக இருந்த இராதாகிருஷ்ணனும், ஜவஹர்லால் நேருவும் அவையில் இருந்தனர். ருக்மணி தேவியின் உரை இருவரையும் கவர்ந்தது. பின்னர் விலங்குகள் வதைத் தடுப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்தியா முழுவதும்

அமைந்துள்ள புளூ கிராஸ் அமைப்பிற்கு முன்னோடியாக ருக்மணி அருண்டேலைக் குறிப்பிட முடியும்.

ருக்மணி தேவி செய்த பல்வேறு சேவைகளைப் பாராட்டிப் பல விருதுகள் வழங்கப்பட்டன. 1958இல் விக்டோரியா அரசியின் வெள்ளிப் பதக்கம் வழங்கப்பட்டது. 1959இல் ராயல் சொசைட்டி ருக்மணி தேவியைக் கவுரவித்தது. அமெரிக்காவிலுள்ள வேய்ன் ஸ்டேட் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கியது. இந்தியாவில் ரவீந்திரபாரதி பல்கலைக்கழகம், விசுவபாரதி பல்கலைக் கழகம், மத்திய பிரதேசத்திலுள்ள சந்திரகலா பல்கலைக் கழகம், காசி இந்துப் பல்கலைக்கழகம் முதலியவை ருக்மணி தேவிக்கு டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தன (பைம்பொழில் மீரான், 2008: 13).

ருக்மணி தேவியின் கலைச்சேவையைப் பாராட்டிப் பல்வேறு விருதுகள் வழங்கப்பட்டன. சங்கீத நாடக அகாதெமி 1957இல் சிறந்த நாட்டியக் கலைஞர் என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் 1980இல் தனிப்பெருங்கலைஞர் என்ற விருது வழங்கிப் பெருமைப் படுத்தியது. மத்திய பிரதேச அரசு 1984ஆம் ஆண்டு காளிதாசர் விருது அளித்துச் சிறப்பித்தது. 1984இல் மத்திய அரசு பத்மபூஷன் விருது வழங்கிப் பெருமை பாராட்டியது. எந்தச் சமுதாயம் ருக்மணி தேவியைக் குறை கூறியதோ, அச்சமுதாயம், பின்னர்ப் பல்வேறு பட்டங்களைக் கொடுத்துச் சிறப்பித்தது. பிராணிகள் வதைத் தடுப்புச் சங்கத் தலைவராக இருந்தபோது ஒப்பனைப் பொருட்கள் மற்றும் அலோபதி மருந்துகள் பயன்படுத்துவதைத் தவிர்த்தார். ஒப்பனைப் பொருட்கள் பிராணிகளின் பகுதிகள் அடங்கியவை என்பதும் அலோபதி மருந்துகள் பிராணிகள் மீது பரிசோதனைக்குட்படுத்தப் பட்டவை என்பதுமாகும். தனது இறுதிக் காலத்திற்கு மூன்றாண்டுகளுக்கு முன்னரே நுரையீரல் புற்றுநோயல் அவதிப்பட்டார். அதற்கான மருந்துகள் உட்கொள்ளாமலேயே, அவ்வேதனையைத் தாங்கிக் கொண்டார். ருக்மணிதேவி 1986 பிப்ரவரி 24ஆம் நாள் இதயத்துடிப்பு நின்றதால் காலமானார். அப்போது அவருக்கு வயது 82.

ருக்மணி தேவி பரதநாட்டியத்திலும் பிற கவின் கலைகளிலும் புதுமையைப் புகுத்தினார். பாரம்பரியம் மிக்க உடைகள், அணிகலன்கள் ஆகியவற்றைத் தயார் செய்யும் முறைமையையும் அறிமுகப்படுத்தினார். கலாசேத்திரா சேலைகள்

உலகப்புகழ் பெற்றவை. இந்தியக் குடியரசு தலைவர் ராஜேந்திர பிரசாத், வெங்கட்ராமன், பிரதமர் இந்திராகாந்தி, வி.வி. கிரி, வி.கே. கிருஷ்ணமேனன், ஹாலந்து இளவரசி ஜூலியானா மற்றும் பல்வேறு வெளிநாட்டுக் கவின்கலையாளர்கள் கலாசேத்திராவிற்கு வருகை தந்துள்ளனர். மாணவர்களால் அத்தை என்று அன்பாக அழைக்கப்பட்ட ருக்மணி தேவியின் நினைவை அமைதியாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது கலாசேத்திரா.

துணை நூல்கள்

1. சூர்யகுமாரி, சரித்திரம் படைத்த சாதனைப் பெண்மணிகள், நர்மதா பதிப்பகம், சென்னை, 2008.
2. திருவேங்கிமலை சரவணன், மறக்கமுடியாத மங்கைகள், சென்னை, 2008.
3. பைம்பொழில் மீரான், தலை நிமிர்ந்த தமிழச்சிகள், தோழமை வெளியீடு, சென்னை, 2007.
4. Ahaja, M.L., Eminent Indian Dancers, Rupa & Co., New Delhi, 2006.
5. Mohan Sundar Pandian, Introduction to Theosophy and The Theosophical Society, Besant House, Chennai, 2007.
6. Nachiappan, (Com.) Rukmini Devi Dance Drama, Kalashetra Publications, Chennai, 2003.
7. Nachiappan, (Com.) Rukmini Devi Bharata Natya, Kalashetra Publications, Chennai, 2003.

கருத்தரங்க நிறைவுப் பேருரை

காலந்தோறும் சாதனை மகளிர்

தாயம்மாள் அறவாணன்

பண்டைக்காலத் தமிழ்ப்பெண் தலைமை வாய்ந்தவள். அக்காலச் சமுதாயம் தாய்வழிச் சமுதாயம். தாயே முதன்மை பெற்றிருந்தாள். நில வேலை முழுமையும் செய்தவள் அவளே. குடும்பம் பெரிதாகப் பெரிதாக பெண் மனையில் உறையத் தொடங்கினாள். பொருளீட்டத்திலிருந்து விலக்கப் பெற்றாள். ஊதிய உழைப்பு ஆடவர்க்கு மாறியது. பொருளீட்டக் கடலும் மலையும் கடந்தவன் மனைவியை அழைத்துச் செல்லாமல் வீட்டிலேயே தங்க வைத்துத் தனித்துச் சென்றான்.

வினையே ஆடவர்க்கு உயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே (குறுந். 135)

என்றும்

முந்நீர் வழக்கம் மகடூவொடு இல்லை (தொல்.)

என்றும் இலக்கிய, இலக்கண அடிகள் பெண்ணினத்தை வெளியுலகத் தடுப்புக்கு வழிசெய்தன. இப்பின்னணி இருப்பினும் சங்க காலத்தில் பெண்கள் கல்வி கற்பதில் இருந்து விலக்கி வைக்கப்படவில்லை. சங்கப்பாடல்களைப் பாடிய புலவர்கள் 473 பேரில் மொத்தம் பெண்புலவர்கள் 45 பேர். ஆண் புலவர்களைப் பார்க்கும்போது பெண் புலவர்களின் எண்ணிக்கை 10 விழுக்காட்டிற்கும் குறைவு. பதிற்றுப்பத்தில் காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் என்ற ஒரு புலவர் மட்டும் (ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப்) பாடியுள்ளார். எல்லோராலும் போற்றத்தக்க அவ்வையார் 59 பாடல்களைச் சங்க காலத்தில் பாடியவர்; அரசனின் ஆட்சியிலும் ஆலோசனைகளை வழங்கியவர். பெண்டிர் சிலர் விறல்பட ஆடியும், பாடியும் வாழ்ந்தனர் என்பதற்கு விறலி, பாடினி என்ற பெயரீடுகள் சான்றுகள்.

அரசனை அறநெறியில் அரசாட்சி செய்ய ஆணை யிட்டார் கண்ணகி. சேரமன்னன் செங்குட்டுவனுக்குக்

கண்ணகியைத் தெய்வமாக வழிபட ஆலோசனைகள் சொன்னவர் வேண்மாள் என்ற பெண். அரசவையிலும் அரசன் செல்லும் இடங்களிலும் பிறவற்றிலும் அரசி அரசன் கூடவே இருப்பதும் கூடவே செல்வதும் வழக்கங்களாக இருந்தன. இதனைப் பாண்டியன் நெடுஞ்செழியன் கோப்பெருந்தேவி இருப்பும் சேரன் செங்குட்டுவனுடன் மலைவளம் காணச் செல்லும் வேண்மாள் செலவும் சான்றுரைக்கின்றன. இம்மரபு தமிழரசர் அனைவராலும் பின்பற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆய கலைகள் அறுபத்து நான்கில் பல தெரிந்தவள் மாதவி. தமிழ்ப் பெண்டிர் வரலாற்றில் முதல் துறவியாகவும், சமயத் தத்துவத்தை நன்கு கற்றவராகவும் அறிமுகம் இல்லாதவர்க்குக்கூட உடன் உவந்து உதவி செய்தவராகவும், சமணப் பெண் துறவி கவுந்தி அடிகள் படைக்கப்பட்டிருக்கிறார்.

குற்றம் செய்பவனாகக் கணவன் இருந்தால் அவனைக் கொல்லவும் அஞ்சாதவள் பெண் (மனைவி) என்பதைக் குண்டலகேசி பாத்திரம் காட்டும். வாதிடுவதில் ஆணுக்கு நிகராகப் பெண்டிர் இருந்தனர் என்பதைச் சமண, பௌத்த மதங்களில் வரும் 'கேசி' நூல்களும் கேசி பாத்திரப் படைப்பும் தெளிவுபடுத்தும் (நீலகேசி, குண்டலகேசி). தனக்குத் தீங்கு இழைத்த நாடாளும் இராணியின் மனம் மாற்றி அறிவுரை வழங்கி, சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்கிப் பசியையும் வறுமையையும் போக்கி ஞானம் பொழிந்து நாட்டை நன்னிலை ஆக்கிய தொண்டர் மணிமேகலை. நாட்டை ஆண்டிருக்கிறாள் இராசமாதேவி. அவள் ஆணைப்படி சிறையில் அடைத்தல், நஞ்சு கொடுத்தல் முதலியவற்றைச் செய்யும் ஆட்கள் இயங்கியிருக் கின்றனர் என்பதை மணிமேகலைக் காப்பியம் வழி அறிகிறோம்.

பதினெண் கீழ்க்கணக்கில் ஒரு பெண் புலவர் கூடக் கவிதை எழுதவில்லை. பக்தி இலக்கியத்தில் சைவ மங்கையாகப் பாடல்கள் பாடியவர் புனிதவதி என்ற காரைக்கால் அம்மையார். வைணவ இலக்கிய ஆழ்வார்களில் ஒரே ஒரு பெண்மணி ஆண்டாள். அவருக்குப் பிறகு குறிப்பிடத்தக்க கவிதைகளைப் படைத்தோர் பட்டியலில் மகளிர் இடம்பெறவில்லை. கவிதைப் படைப்பில் இடம்பெறாவிட்டாலும் ஆட்சியில் தம்மை ஈடுபடுத்திய மகளிர் இருந்திருக்கிறார்கள். மங்கையர்க்கரசி என்ற பெண்ணரசி கூன்பாண்டியன் என்ற பாண்டிய அரசன் நெடுமாறன் ஆட்சியில் சமண மத அரசை மாற்றிச் சைவ மத

அரசை நிலைநாட்ட அரும்பாடுபட்டிருப்பதைப் பெரிய புராணச் சேக்கிழார் எடுத்துரைப்பர். ஆகவே ஆட்சியில் அரசனுக்கு அணுக்கமாக இருந்திருக்கிறாள் பெண்.

இலக்கியப் புலமை போலவே இலக்கணப் புலமை உடையவராயும் பெண்கள் இருந்தனர் என்பதற்குக் காக்கைப் பாடினியம் எழுதிய காக்கைப்பாடினியார், சிறுகாக்கைப் பாடினியம் எழுதிய சிறுகாக்கைப்பாடினியார் சான்றாவர். 9ஆம் நூற்றாண்டில் தோன்றிய சீவகசிந்தாமணி நூலில் கந்தியார் பாட்டு என்று இடையிடையே இருநூற்றுக்கும் மேலாகப் பல பாடல்கள் உள்ளன. அவற்றை எழுதியவர் சைன சமயப் பெண்கள் ஆவர்.

முதலாம் இராசராச சோழனுக்கு அரிய ஆலோசனைகளை வழங்கியவர் பெரிய குந்தவை நாச்சியார் ஆவார். சைவ சமயச் சாத்திரங்களான தேவாரப் பாடல்களைக் கறையானிலிருந்து பாதுகாத்தவர்; ஏட்டுச் சுவடிப் பாதுகாப்புக்குப் பெரும் பங்காற்றியவர் பெரிய குந்தவை. சோழ நாட்டுடன் சாளுக்கிய உறவு கொள்ளச் செய்தவரும் அவரே. தம்பி இராசராசனுக்கு அரசியலில் அரிய ஆலோசனை வழங்கியவரும் அந்தப் பெண்மணியே.

சைவ நாயன்மார்களில் மூன்று பெண்மணிகளாகிய இசை ஞானியார், காரைக்கால் அம்மையார், மங்கையர்க்கரசியார் ஆகிய மூவரும் வழிபடத்தகும் நாயன்மார்களாக ஏற்கப்பெற்றனர்.

திருக்குறளின் பெருமையைச் சிறப்பித்த திருவள்ளுவ மாலையில் பெண் புலவர்கள் சிலர் இடம்பெற்றிருக்கிறார்கள். சான்று: நாமகள், பொன்முடியார், அவ்வையார், வெள்ளிவீதியார்.

12ஆம் நூற்றாண்டிற்குப்பின் அவ்வையார் பெயரில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, ஔவை குறள், அசதிக் கோவை, பந்தனந்தாதி, கல்வி ஒழுக்கம், விநாயகர் அகவல், வேழமுகம், கணபதி ஆசிரிய விருத்தம், பெட்டகம் ஆகியவை ஏற்பட்டன. தனிப்பாடல் திரட்டு, பெண் கவிஞர்கள் சிலரைச் சுட்டுகிறது. திருக்காட்டுப் பள்ளிப்பெண், அம்மைச்சி, பூசைத்தாயார், ஏகம்பவாணர் மனைவி, அவர்தம் பணிப்பெண், சிவகடாட்சம் அம்மையார், வரதுங்கராம பாண்டியன் மனைவி முதலானோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

தேவரடியார்களில் சிலர் திருக்கண்ணபுரம் தாசி, தாசி பெரியகுப்பு, திருவழுந்தூர்த்தாசி முதலானோர் இலக்கியங்களைக்

கற்றுத் துறைபோகியவராய் இருந்தனர் என்றும் அவர்தம் பாடல்கள் நயமிக்கவையாய்த் தனிப்பாடல் திரட்டில் இருப்பதையும் அறியலாம். தாசியர் நடனம் கற்றாக வேண்டும், நடனத்திற்கு இசை வேண்டும், இசைக்கு இலக்கியம் தேவையாயிற்று. ஆக முத்தமிழிலும் வல்லவராய் இருந்தனர் தாசிப் பெண்டிர்.

கி.பி. 12 முதல் 19ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலங்களில் பெண்களைப் படிக்கவே வைக்கவில்லை; கல்வி மறுக்கப்பட்டது. சமுதாயத்தில் பெண்கள் கல்வி கற்கக் கூடாது என்று நினைத்தனர். பெண்ணைப் பேயாகப் பழித்தனர். தலைமை நிலையில் அமைந்த பெண்கள் அடிமை நிலைக்கு அழுத்தப்பட்டனர். இக்காலக்கட்டத்தில் பெண்களில் சிலர் மட்டுமே சிறந்தோங்கி இருந்தனர்.

கிறித்தவர் வந்த பிறகு பெண் சமுதாயத்தை உயர்வுக்குக் கொண்டுவர விழைந்தனர். பெண்கள் கல்வி கற்கக் கூடாது; ஏட்டையும் தொடுவது பாவம்; அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு? என்ற நிலையிலிருந்து அவர்களை உயர்த்த, கல்வி கொடுக்க எண்ணிப் பள்ளிக்கூடங்கள் நிறுவப் பெற்றன. புதுச்சேரியில்தான் முதன்முதலாகப் பெண்களுக்கு எனத் தனிப் பள்ளி நிறுவப்பட்டது. 20க்கும் மேல் பெண் ஆசிரியைகள் அமர்த்தப் பெற்றனர். அப்பெண்களையும் ஆண்கள் படிக்கவிட வில்லை. பள்ளி மீது சாணி அடித்தும், மலம் வீசியும் இழிவு செய்தனர். படிக்கும் பெண்களைத் தேவரடியார்கள் என்று பழித்தனர். அந்த நிலையிலிருந்து பெண்கள் படிப்படியாகப் படித்து முன்னேறி உயர்ந்துள்ளனர்.

விடுதலைக்கு உதவிய பெண்கள்

தென்னாப்பிரிக்காவில் வெள்ளையன் துப்பாக்கி காந்தியடிகளை நோக்கிக் குறிவைத்தது. காந்தி உடலைத் தன்னுடலால் மறைத்துத் தன் மீது குண்டு ஏந்தி, காந்தியைக் காத்த வீரமங்கை வள்ளியம்மை. தன்னுயிர் தந்து காந்தி உயிர் காத்த தியாக மங்கை வரலாற்றில் பேரிடம் பெற்றாள் .

இந்தியச் சுதந்திரப் போராட்ட வரலாற்றில் பெண்களின் பங்கு மகத்தானது. சான்றுகள்: மதுரையை ஆண்ட ராணி மங்கம்மாள், ராணி மீனாட்சி, சிவகங்கை அரசி வேலுநாச்சியார்.

ராணி மங்கம்மாள்

நாயக்க மரபில் வந்த அரசியான இவள், சாலை, குளம், கால்வாய் அமைத்தாள். இவள் கட்டிய சத்திரம் இன்றும் 'மங்கம்மாள் சத்திரம்' என்ற பெயரில் மதுரையில் இருந்து வருகிறது. தஞ்சை, திருவாங்கூர் இவள் ஆட்சிக்கு வந்தன. எம் மதத்தையும் சம்மதமாக ஏற்றுக்கொண்டு வரலாற்றில் நிலை நின்றாள்.

வேலு நாச்சியார்

சிவகங்கையின் காளையார் கோயிலை வெள்ளைக்காரர் பிடிக்க எண்ணியபோது சிவகங்கை மன்னனின் ராணியான வேலு நாச்சியார் எதிர்த்தார். **ஆங்கிலேயரை எதிர்த்த முதல் இந்தியப் பெண்.**

பெண்கள் அரசியலில் ஈடுபட்டார்கள். நாட்டு விடுதலைக்காகப் பெண்கள் பலர் ஈடுபட்டனர். பெண்கள் முன்னேற்ற சங்கத்தில் மகளிர் பலர் இணைந்தனர். பெண்கள் முன்னேற்றமும் நாட்டு விடுதலை உணர்வும் இணைந்தன. இதனால் பெண்கள் அரசியலுக்கு வந்தனர். ஈ.வெ.ரா. மனைவி நாகம்மாள், சகோதரி கண்ணம்மாள் போன்றோர் மதுபானக் கடை மறியல் செய்தவர்கள்.

மதுரையைச் சேர்ந்த பத்மாசனி அம்மாள் அந்நியத் துணிகளைப் புறக்கணித்துக் கதர் உற்பத்தியைப் பெருக்கப் போராடினார். தேசியச் சொற்பொழிவு ஆற்றிக் கதர் விற்பனையை மேம்படுத்தப் பாடுபட்டார். பெண்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

அங்கச்சி அம்மாள், அஞ்சலை அம்மாள் ஆகியோர் கொடிய வெள்ளைக்காரன் நீல் சிலையை 1927இல் உடைக்க முயன்றபோது கைது செய்யப்பட்டுச் சிறையானார்கள்.

திருமதி ருக்மணி லட்சுமிபதியும் அவரோடு சில பெண்களும் சைமன் குழுவை எதிர்த்துப் போராடினர். சைமன் குழுவில் பெண்களும், இந்தியர்களும் இடம்பெறவில்லை என்பதை முன்னிறுத்திப் போராடினர் பெண்கள். ருக்மணி லட்சுமிபதி சட்ட மறுப்பு இயக்கத்தில் தலைமை வகித்த ஒரே பெண் சத்தியாகிரகி. காந்தியோடு உப்புச் சத்தியாகிரகத்தில் ஈடுபட்ட அவர் ஓராண்டு சிறை செய்யப்பெற்றார்.

இவர்களைப் போல நாட்டுப்பற்றுக் கொண்ட பெண்கள் பலர் இருந்தனர். **எஸ். அம்புஜம்மாள், ஞானம்மாள்** போன்றோர் சென்னை ரட்டன் பஜாரில் உள்ள அந்நியத் துணிக்கடைகளின் முன் மறியல் செய்தனர். இவர்கள் மீது ரப்பர்க் குழாய் மூலம் சாக்கடை நீரை வீசியடித்தனர். என்ன கொடுமை பாருங்கள். அப்போதும் அஞ்சாத பெண்களாய் அவர்கள் மறியல் போரிட்டனர்.

நாட்டு விடுதலையில் பெண்டிர் பலர் ஈடுபட்டமையால் சிறை செய்யப் பெற்றனர். அவர்கள் தம் கணவர், பிள்ளைகளை இழக்கலாயினர். அவர்களில் ஒருவர் **சரஸ்வதி பாண்டுரங்கன்.** 1924இல் நடந்த 'வெள்ளையனே வெளியேறு' என்ற தொழிலாளர் வேலை நிறுத்தப் போராட்டத்திலும் **அந்தோணி அம்மாள், பேச்சியம்மாள்** முதலானோர் பங்கேற்றனர். ஊர்வலங்கள், கடையடைப்பு என்று நிகழ்ச்சிகளில் சிலர் பங்கேற்றனர். அவர்களில் ஒருவர் **அம்மு சுவாமிநாதன்.**

பெண் கவிஞர்கள் பலர் தம் படைப்புகளைக் கொண்டு வந்துள்ளனர். அவர்களில் 1. பொன்னம்மாள், 2. மனோன்மணி, 3. சிவகடாட்சம் அம்மாள், 4. தனபால பதுமாவதி, 5. முத்தம்மாள், 6. ரெங்கநாயகி, 8. விசாலாட்சி அம்மாள், 8. அசலாம்பிகை அம்மையார், 9. ராமலெட்சுமி, 10. அம்புஜம்மாள், 11. ஆவுடையம்மாள், 12. பத்மாசனி அம்மாள், 13. சந்திரவடிவு அம்மாள், 14. நாகரத்தினம் அம்மாள், 15. லக்ஷ்மி அம்மாள், 16. வேம்பம்மாள், 17. மீனாட்சி அம்மாள், 18. கனகவல்லியம்மா, 19. அனந்தம்மாள், 20. பூரணி அம்மாள் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்.

ஆண்கள் மட்டுமே மருத்துவம் படித்துப் பட்டம் பெற்ற காலத்தில் பெண்களால் மருத்துவப் பட்டம் பெறமுடியும் என்று பெற்றவர்; தேவதாசி அமைப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தவர்; சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தவர்; அவ்வை இல்லத்தை அமைத்துக் காத்தவர்; தமிழ்நாட்டிலேயே முதன் முதலாகப் புற்றுநோய் ஆராய்ச்சிக் கழகம் நிறுவியவர்; இளமைத் திருமண எதிர்ப்பாளர்; பெண்ணுக்குச் சம வாய்ப்பை அன்றே கோரியவர்; அவர்தான் சாதனைப் பெண்மணி முத்துலட்சுமி அம்மையார்.

சுயமரியாதைச் சுடராக, தந்தை பெரியாரின் கொள்கைக் கலனாக, பெண்ணுரிமைப் போரின் தளபதியாக அமைந்தவர் மணியம்மையார்.

இனிமை, அற்புதம், இலயம் என்றெல்லாம் உணர்ந்து போற்றும் சங்கீத மேதைமை படைத்தவர்; இந்திய நாட்டில், வெளிநாட்டில் நாளும் இன்னிசையால் இசை மழை பொழிந்தவர்; நாட்டின் உயரிய விருதுகளையெல்லாம் பெற்றவர் எம்.எஸ். சுப்புலட்சுமி. அவருக்கு முன்னும் பின்னும் கான மழை தந்த காரிகைகள் டி.கே. பட்டம்மாள், எம்.எல். வசந்தகுமாரி, கே.பி. சுந்தராம்பாள். இப் பெண்டிரின் நீண்ட பட்டியலைப் பார்த்தால் பெண்கள் வரலாறு நிலைத்த புகழ் படைத்தது என்பது மாபெரும் உண்மை என உணரப்படும்.

அடையாறு கலாச்சேத்திரத்துத் திருமகள் ருக்மணி, பாலசரசுவதி, கமலா, பத்மினி, சுதாராணி ரகுபதி, பத்மா சுப்பிரமணியம் என்று நடன நாரிமணிகளின் பெயர்கள் நீண்டு கொண்டே போகும். பாட்டும் பரதமும் இரு கண்களாகக் கொண்ட பெண்கள் பரத கண்ட வரலாற்று வனிதையரல்லவா!

ஆண்களை அசர வைக்கும் 'தவில்' இசைக் கருவியை அயராமல் வாசிக்கும் பெண்மணியும் உள்ளார். தவில் என்பது அசுர வாத்தியம். ஆண்களே 30 நிமிடம் தொடர்ந்து வாசிப்பதற்கும் மூச்சு வாங்கித் தளர்ச்சி அடைந்துவிடும் நிலையில் 22 ஆண்டுகளாகத் தவில் வாசித்துச் சாதனை செய்தவர் திண்டுக்கல்லைச் சார்ந்த சாந்தகுமாரி.

விடுதலைப் போரில் பங்கேற்ற தமிழ்ப் பெண்களைப் போல் எழுத்துலகிலும் ஆண்களுக்கு இணையாகக் கவிதை, புதினம், சிறுகதை, கட்டுரை படைக்கத் தொடங்கினர். 19, 20ஆம் நூற்றாண்டுகளில் கவிதைகள் படைத்தோரில் குறிப்பிடத்தக்கோர் விடுதலைக்கு முன் கவிதை படைப்பதிலும் புதினங்கள் புனைவதிலும் பங்களித்தனர். பாலம்மாள், மீனாட்சி சுந்தராம்பாள், பண்டிதை விசாலாட்சி அம்மாள், கமலாசனி அம்மாள், பத்மாசனி அம்மாள், ருக்மணி அம்மாள், வை.மு. கோதை நாயகி அம்மாள் போன்றோர் வெற்றிகரமாக நாவல் சிறுகதைகளை எழுதினர். மகளிர் இதழ்களும் மகளிரின் படைப்புகளை வெளிக்கொணர்ந்தன. அவை பெண்களைப் பற்றிய சிந்தனையை வெளியிட்டன.

19-20 ஆம் நூற்றாண்டுகளில் மகளிர் அரிய படைப்புகள் கவிதை வடிவில் வெளிவரலாயின. கவிஞர் பொன்னம்மாள் தாயுமானவர், வள்ளலார் பாடல்களைப் போன்று ஆன்மீகப் பாடல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

அசலாம்பிகை அம்மையார் திருவிடையூர்த் தலபுராணம், காந்தி புராணம் (எட்டுக் காண்டங்கள்), திலகர் மான்மியம், இராமலிங்கர் சரிதம், திருவாமாத்தூர் திரிபு அந்தாதி எனப் பல நூல்களை (வரலாறு, நாட்டு விடுதலை, ஆன்மீகம் முதலிய கோணங்களில்) எழுதிக் குவித்தமை பெண்டிர் பெருமைப்பட வேண்டிய செய்தியாகும்.

சிறுகதை, நாவல், கவிதை படைத்துச் சாதனை புரிந்த மகளிர் போலவே பல்லாற்றானும் அறிவு மேம்பட்ட பெண்கள் பலர் இருந்தனர்.

கிராமியப் பல்கலைக்கழகம் காந்தி கிராமத்தில் தோற்றுவிக்க ஒரு பெண் காரணமாக இருந்தார். அப்பெண்மணி சௌந்திரம் அம்மையார்.

பெண்டிர் வீழ்ச்சியினின்றும் எழுச்சி பெற்ற சூழல்

கல்வியிலும் சம வாழ்விலும் ஆடவருக்கு நிகராக இருந்த தமிழ்ப் பெண்டிர், சங்கம் மருவிய காலத்தில் மெல்ல மெல்லப் பின்தள்ளப்படத் தொடங்கினர். அதற்குரிய பின்னணியையும் நேர்ந்த வீழ்ச்சியிலிருந்து பெண்டிர் எழுச்சி பெற்றதற்கான உந்து சக்திகளையும் நிரல்படக் காணுவோம்.

1. பெண் பிறப்பு தாழ்ந்தது என்ற கருத்தைத் தமிழகத்திற்கு வட இந்தியாவிலிருந்து வந்த ஜைன சமயம் பரப்பியது.

2. கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்குப்பின்பு பாண்டியன் கடுங்கோனும் அவன் தொடர்பில் வந்த பிராமண வைதிகமும் முன்னணி இடத்தைப் பெற்றன. பிராமண வைதிகம் பெண் பிறப்பைச் சமமாகவும் கருதவில்லை; உயர்த்தியும் பிடிக்கவில்லை. முன்பே வீழ்த்தப்பட்டிருந்த பெண் பிறப்பை மேலும் படுபாதாளத்தில் வீழ்த்தியது. குறிப்பாகப் பெண்கள் கல்வி கற்பதை ஜைனம் தடை செய்யவில்லை. வைதிகம் கல்வியை வர்ணாசிரம தர்மத்துடன் இணைத்து அதன்படி மேல்தட்டில் உள்ள பிராமணர்க்கு மட்டுமே உரியதாகக் கல்வியை ஆக்கிற்று. விளைவு: பெரும்பான்மையாக இருக்கக்கூடிய க்ஷத்திரிய, வைசிய, சூத்திர வர்ணங்களில் பிறந்த ஆண்களும் பெண்களும் கல்வி கற்கும் வாய்ப்பை இழந்தனர். மெல்ல மெல்ல ஆடவர் தலைமை பெறவே பெண்கள் கல்வியை இழந்த நிலையில் பொருளாதார உற்பத்தியிலிருந்தும் விலக்கி வைக்கப்பட்டனர். கல்வியிலிருந்தும் பொருள் உற்பத்தியிலிருந்தும் பின்தள்ளப்படவே பெண்டிரின் நிலை மிகப் பின்னிலையை எய்தியது. இந்நிலை பல்லவர்,

பிற்காலச் சோழர், பாண்டியர், இசுலாமியர், நாயக்கர், மராத்தியர் காலத்திலும் தொடர்ந்தது.

3. ஐரோப்பியர் வரவிற்குப் பிறகே வருண தருமத்தை மீறி அனைவரும் கற்கின்ற முறைமை, ஐரோப்பியக் கிறித்துவ மிஷனரியால் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் தமிழகத்திலும் புதுவையிலும் அறிமுகமாயிற்று.

4. முதல் கட்டத்தில் ஆடவர்க்கு மட்டுமே இருந்த கல்வி கற்கும் போக்கு காலப்போக்கில் பெண்களுக்கும் விரிவடைந்தது. பெண்களுக்கான பள்ளிகள் தனியே வரத் தொடங்கியபோது உள்ளூர்த் தமிழர்கள் பெரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். பள்ளிக்குத் தம் குழந்தைகளை அனுப்பிய தாய்மார்களை வேசையர் என்று திட்டியதுடன் படிக்கச் சென்ற பெண் குழந்தைகளையும் வேசிக் குழந்தைகள் என்று திட்டினர்.

1870ஆம் ஆண்டில் அரசுப் பள்ளிகளில் தமிழகத்தின் பகுதிகளில் 8010 பெண்கள் கல்வி பயின்றனர். சென்னையில் 3440 பெண்களும், நெல்லையில் 2317 பெண்களும், தஞ்சையில் 689 பெண்களும் பயின்றனர். சென்னையில் கல்வி பயின்ற பெண்கள் மிகுதி.

ஆண்டு	பள்ளிக்கூடங்களில் பெண்களின் எண்ணிக்கை
1865-66	4111
1866-67	4638
1868-69	8099
1869-70	9421
1870-71	10185

5. அன்னி பெசன்ட் அம்மையாரின் Home Rule இயக்கமும், அதனைத் தொடர்ந்து வந்த காங்கிரஸ் பேரியக்கமும், அதனைத் தொடர்ந்து வந்த திராவிட இயக்கங்களும் பெண் கல்வியை முன்னிலைப்படுத்தின. திரு.வி.க., பெரியார் ஈ.வெ.ரா. ஆகியோரைக் குறிப்பிட்டுச் சொல்லுதல் வேண்டும். பெண் கல்வி பெறத் தொடங்கியவுடன் கற்ற பெண்கள் வேலைக்கும் செல்லத் தொடங்கினர். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு பொருள் உற்பத்தியில் இருந்து விலக்கப்பட்ட பெண்கள் மீண்டும் பொருள் ஈட்டுவதில் ஈடுபட்டனர். இதனால் தம் தேவைகளைத் தாமே நிறைவு செய்து கொள்ளும் சுதந்திர உரிமையை எய்தினர்.

6. இதற்கு வாய்ப்பாக ஐரோப்பியத் தொழில் முறையையும் அரசு நிர்வாக முறையையும் தழுவியதன் காரணமாக ஐரோப்பிய நாகரிகமும் பண்பாடும் தமிழகத்தில் ஊடுருவின. விளைவாகக் கூட்டுக் குடும்பமுறை சிதைந்தது. தனிக் குடும்ப முறை தளர்ந்தது. தளரவே சிக்கலை நேர்முகமாக எதிர்கொள்ளவும் அதற்குரிய தீர்வுகளைக் காணவும் பெண்டிர் துணிச்சல் பெற்றனர்.

7. பொறியியல், வேளாண் இயல், கால்நடை இயல், மருத்துவ இயல் முதலான தொழில்சார் படிப்புகளில் பெண்களும் சேரத் தொடங்கினர். இதன் விளைவாக மேற்கண்ட அனைத்துத் துறைகளிலும் பெண்டிர் முன்னிடம் பெறத் தொடங்கினர். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., எனக் கல்வியில் வளர்ச்சிபெற்று வருகின்றனர். மண்ணிலும் விண்ணிலும் கால்பதித்து உலா வருகின்றனர்.

8. 1950இல் இருபத்தொரு வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை என்ற ஜனநாயக உரிமை வந்தபோது பெண்கள் ஆண்களைப் போலத் தமக்குரிய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றனர். தாமே பிரதிநிதிகள் ஆகவும் தொடங்கினர்.

9. தமிழ்நாட்டில் பெண்ணுக்கு என இட ஒதுக்கீடு உள்ளூர் ஆட்சியில் சட்டப்பூர்வமாக வந்துற்றது. அதன் விளைவாகத் தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி முதலான அமைப்புகளில் மூன்றில் ஒரு பகுதியில் பெண்களே தலைவராயினர்.

10. பெண்களுக்கு எனத் தனிப் பள்ளிகளும், கல்லூரிகளும், தனி ஒரு பல்கலைக்கழகமும் வந்துள்ளன. அதன் விளைவாகப் பெண்கள் உயர்கல்வி கற்கத் தொடங்கினர். ஆண்களுக்கு உள்ள பல்முனைச் சிதைவு பெண்களுக்கு இல்லாமையால் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக வகுப்புகளில் முதன்மை பெறத் தொடங்கினர்.

11. இவற்றால் ஏற்பட்ட பத்திரிகை, நூல் வாசிக்கும் எல்லை பெண்களுக்கும் விரிவடைந்தது. அதற்கு ஏற்பப் பெண்களில் இருந்தே எழுத்தாளர்களும் கலைஞர்களும் வெளிவரத் தொடங்கினர்.

பெண்களின் பொற்காலம் பிறந்தது.

பின்னிணைப்பு

நினைத்துப் போற்றப்பட வேண்டிய பிறர்

லொ. ஆ.உமாமஹேஸ்வரி

சுப்பலட்சுமி அம்மாள் (1897–)

கல்வி-முறையான கல்வி பயிலவில்லை எனினும் தமிழிலும், ஆங்கிலத்திலும் சிறப்பான புலமை பெற்றவர். சிறந்த சமூகச் சேவகர்; ஆங்கில இலக்கியம், கலை, தொல்லியல், தத்துவவியல் போன்றவற்றில் ஆழ்ந்த நுண்ணறிவு பெற்றவர். மகாத்மா காந்தியின் கொள்கையான காதி நூல் நூற்கும் பணியினைத் தமது இறுதிக் காலம் வரை செய்தவர். சுதேசி இயக்கத்தில் தீவிரமாகப் பங்கு கொண்டவர் எனினும் குடும்பச் சூழல் காரணமாகப் பின்னாளில் போராட்டத்தில் இருந்து தம்மை விலக்கிக் கொண்டார். ஆயினும் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஏராளமான நிதியுதவி நல்கியுள்ளார்.

கமலாதேவி சாட்டோபாத்தியாய, சரோஜினி நாயுடு ஆகியோருடன் நட்பு பூண்டவர். மிருணாளினி தேவி பதிப்பித்த 'ஷாமா' எனும் இதழில் இவர் பல கட்டுரைகளை எழுதி உள்ளார். தமது இறுதிக்காலம் வரை (1977) சிறந்த சமூகச் சேவகியாகத் திகழ்ந்தவர்.

மீனா கிருஷ்ணசாமி

விடுதலையடைந்த இந்தியாவுக்கு முகவரியைக் கொடுத்து விட்டு, தங்கள் முகங்களை மறைத்துக் கொண்ட ஆயிரக் கணக்கான வீராங்கனைகளில் ஒருவர் மீனா கிருஷ்ணசாமி. சென்னை திருவல்லிக்கேணியில் வசித்து வருபவர் 'காம்ரேட் மீனா'. இவருடைய தாய் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர். சொர்ணம்மாளின் தோழி. இருவரையும் வெள்ளைக்காரன் கைது செய்து, கொடூரமாக அடித்துத் துணியினை உருவி ஊருக்கு வெளியே ஓட்டிவிட்டதை மீனா கிருஷ்ணசாமி நினைவு கூர்கிறார். தன்தாய் தனக்கு நிலாவினைக் காட்டி உணவு ஊட்டவில்லை; வெள்ளைக்காரனைக் காட்டியும் மிரட்டியும் தான் ஊட்டினார்கள் எனச் சொல்லும் மீனா, தனது 12வது

வயதிலேயே சுதேசி இயக்கப் போராட்டத்தில் இறங்கி, சிறைக்குச் சென்றதாகக் கூறுகிறார். சுதேசி இயக்கப் போராட்டத்துக்காக மதுரை வந்த மகாத்மா காந்தியிடம், போராட்ட நிதிக்காக தனது கம்மலைக் கொடுத்துள்ளார். அப்பொழுது மகாத்மா இவரிடம் 'இனிமேல் நீ நகையே போடக்கூடாது' எனச் சொன்னதால், தனது திருமணத்தின் பொழுது கூட நகை அணியாமல் இருந்துள்ளார். மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, இந்தி ஆதரவு எனப் பல விதமான போராட்டங்களில் கலந்து கொண்டுள்ள இவர், 'ஞானயாத்திரை' எனும் அமைப்பின் மூலம் அலகாபாத் சென்று, கல்வி நிலையத்தில் சேர்ந்து படித்து, இந்தியிலும் பட்ட வகுப்பினை முடித்துள்ளார். இவருடைய கணவர் எஸ். கிருஷ்ணசாமியும் விடுதலைப்போராட்ட வீரர்; மதுரையில், சுதந்திரா கட்சியின் செயலாளராக இருந்தவர். வார்தா ஆசிரமத்தில் வேலை பார்த்த காலத்தில் இவரைச் சந்தித்து, சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டதைப் பெருமையுடன் சொல்கிறார். 86 வயதாகும் வீராங்கனை மீனா கிருஷ்ணசாமி.

(பேட்டி: மீனாகிருஷ்ணசாமி, அவள்விகடன், ஜனவரி 30, 2009, ப.23)

ருக்மணி லட்சுமிபதி

பி.1891 ; தந்தை : ஸ்ரீனிவாசராவ்; திருவாங்கூர் சமஸ்தான திவான் டி. ராமாராவின் பேத்தி. கணவர்: டாக்டர் அவுந்த லட்சுமிபதி. படிப்பு ; மாநிலக் கல்லூரி, சென்னை.

போராட்டங்கள் : வேதாரண்ய உப்புச் சத்தியாகிரகம், ஒத்துழையாமை இயக்கம், தனிநபர் சத்தியாகிரகம் முதலான போராட்டங்களில் பங்கேற்பு.

சிறைவாசம் : 1931இல் கைது, ஓராண்டு சிறைவாசம்; 1932இல் கைது, 6 மாத சிறைவாசம்.

வகித்த பதவிகள் : 1. செயலாளர், பாரத ஸ்திரீ மண்டல், சென்னை 2. உறுப்பினர், மகளிர் இந்தியக் கழகம் 3. தலைவர், இளைஞர் லீக், சென்னை 4. காங்கிரஸ் உறுப்பினர், 1928, 5. 1935 சென்னை சட்டமன்றத்திற்குத் தேர்வு செய்யப்பட்டார் (M.L.A.) 6. செயலாளர், தமிழ்நாடு பிரதேச காங்கிரஸ் கமிட்டி 7. 1935 துணைத்தலைவர், தமிழ்நாடு பிரதேச காங்கிரஸ் கமிட்டி 8. சட்ட மன்றத்தில் துணை சபாநாயகராகப் பணியாற்றியவர் 9. சுகாதாரத் துறை அமைச்சராக இருந்தவர். 1951 வரை MLA ஆக இருந்தவர். தமிழக அரசு இவரைச் சிறப்பிக்கும் விதமாக 1997ஆம் ஆண்டு (ஆகஸ்டு திங்கள் 6ஆம் நாள்) தபால் தலையினை வெளியிட்டுள்ளது.

இந்திய தேசியப்படை மறத்தியர்
(Indian National Army)

இந்திய தேசியப்படையின் மகளிர் பிரிவு 'ஜான்சிராணி பிரிவு' (Rani of Jhansi Regiment) எனப் பெயர் பெற்றிருந்தது. இப்படைப்பிரிவின் தலைமைப் பொறுப்பேற்று இருந்தவர் **லட்சுமி சேகள்** இவரின் கீழ் பணியாற்றிய 18 தமிழக மகளிர்.

1. அபிராமி ராமச்சந்திரன், தஞ்சாவூர், சிப்பாய் (படைப்பிரிவு எண். 8044).
2. காளிமுத்தம்மாள் நாகலிங்கம், இராமநாதபுரம், சிப்பாய்.
3. காவேரி அம்மாள், திருச்சி, சிப்பாய் (படைப்பிரிவு எண்.98: கம்பெனி எண்.1).
4. குருவாயம்மாள் அழகர்சாமி, இராமநாதபுரம், சிப்பாய்.
5. சரஸ்வதி அம்மாள் (த) வைத்தியலிங்கம், மதுரை, சிப்பாய்.
6. நாகம்மாள், A.T. (த) ஆதினமிளசை பிள்ளை, திருப்பத்தூர், சிங்கப்பூரில் செவிலிச் சிப்பாயாகப் பணியாற்றியவர்.
7. பட்டம்மாள் முருகேசன், சென்னை, சிப்பாய்.
8. பட்டம்மாள் (க) பழனியாண்டி, சிப்பாய் (Regimental No.506955).
9. பட்டம்மாள் (க) L. ருத்ரபதி, தஞ்சாவூர், சிப்பாய்.
10. பழனியாயி அம்மாள் (க) ஆண்டியப்பன், திருச்சி, சிப்பாய்.
11. மதுரம் நாகரத்தினம், நாகப்பட்டினம், சிப்பாய் (Basena Unit)
12. மங்கம்மாள் (த) சங்கரப்ப நாயக்கர், அருப்புக்கோட்டை, நாயக்காகப் பணியாற்றியவர்.
13. முத்தம்மாள், K. (த) கருப்பையன் உடையார், மதுரை, சிப்பாய்.
14. ராதாம்பாள், (த) கருப்பையா தேவர், சென்னை, சிப்பாய்.
15. லட்சுமி தேவி, (த) ஸ்ரீ நாயுடு, தஞ்சாவூர், லெப்டினன்ட்.
16. வேலையம்மாள் (எ) மாலை அம்மாள், சென்னை, சிப்பாய்.
17. ஜெயலட்சுமி அம்மாள், (க) நமசிவாயம், சென்னை, சிப்பாய்.
18. ஹிலியன் தனுஷ்கோடி, சென்னை, இந்திய தேசியப்படையின் உறுப்பான 'இந்திய விடுதலை லீக்'கின் மகளிர் பிரிவுத் தலைவர்.

இந்திய விடுதலைப் போராட்ட மறத்தியர்
சென்னை மாவட்டம்

1. **அபிஷேகத்தம்மாள் (1897–)**

   கல்வி: படித்தவர். 1925 - கள்ளுக்கடை மறியல், 1925 - உப்புச் சத்தியாக்கிரகம், 1925, 28, 30ஆம் ஆண்டுகளில் நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி, சென்னையில் சிறைவாசம் செய்தவர்.

2. **அம்மு சுவாமிநாதன் (1894–)**

   சமூகச்சேவகி, 1942-வெள்ளையனே வெளியேறு இயக்கம், 1946-பாராளுமன்றத்திற்குத் தேர்வு செய்யப்பட்டார் 1952-பாராளுமன்ற உறுப்பினர். எத்தியோப்பியா, சைனா, அமெரிக்கா, இரஷ்யா போன்ற நாடுகளுக்கு 'இந்தியாவின் தூதராக'ச் சென்றவர். மகளிர் ஆண்டில் (1975) 'Mother of the year' விருது பெற்றவர்.

3. **அனுசூயாராமிரெட்டி (1914–)**

   1941 - வெள்ளையனே வெளியேறு இயக்கம், வேலூர் சிறையில் 3 மாதம் சிறைவாசம்.

4. **பாலம்மாள், எம்.எஸ். (1911–)**

   தனிநபர் சத்தியாகிரகத்தில் பங்கேற்பு, 1941இல் கைது செய்யப்பட்டு 3 மாத சிறைவாசம்.

5. **செல்லம் மாணிக்க முத்தரையன்**

   போருக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு கைதாகி 6 மாதம் சிறைவாசம் பெற்றவர்.

6. **கௌஸின் ஜேம்ஸ் (Cousins James)**

   பிரம்மஞான சபை மற்றும் மகளிர் இந்தியக் கழகத்தின் (WIA) உறுப்பினர்; அன்னிபெசன்ட்டுடன் தன்னாட்சிக் கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

7. **தேவகி அம்மாள் (1924–)**

   தனிநபர் சத்தியாகிரகம், 1941-வெள்ளையனே வெளியேறு இயக்கம், 1942-கைது செய்யப்பட்டு சிறைக்காவலில் 15 நாள் அடைக்கப்பட்டார். பின்னர் ஓர் ஆண்டு சென்னைச் சிறையில் (பெண்கள்) சிறைவாசம்.

8. **கோமதியம்மாள் (1896–)**

   கணவர்: ஹரிசிவராம்; தனிநபர் சட்ட மறுப்பு; 1930இல் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

9. இந்திராபாய் (1902–)

கணவர்: மாதவராவ்; தனிநபர் சட்ட மறுப்பு; 1931இல் கைது 6 மாத சிறைவாசம்.

10. ஜகதாம்பாள் (1916–)

கல்வி: படித்தவர், 1936இல் தனிநபர் சத்தியாகிரகத்தில் பங்கேற்பு, 1941இல் கைது செய்யப்பட்டு, வேலூர், கடலூர் சிறையில் 9 மாத சிறைவாசம்.

11. ஜனனம்மாள் (1892–)

தந்தை: பாஷ்யம் அய்யங்கார் (நீதிபதி), தனிநபர் சட்ட மறுப்பில் பங்கேற்பு, 1932இல் கைது 6 மாத சிறைவாசம்.

12. ஜானகி அம்மாள், ஆர்.

கணவர்: ஆர். ராமசாமி, தனிநபர் சட்டமறுப்பில் பங்கேற்பு, 1932இல் கைது 3மாத சிறைவாசம்.

13. ஜெயலட்சுமி, ஏ.கி. (1914–)

கணவர்: ஏ.கே.சந்திரசேகர முதலியார்; தனிநபர் சத்தியா கிரகத்தில் பங்கேற்பு, 1941இல் கைது, 3 மாத சிறைவாசம்.

14. கமலாபாய் (1905–)

கணவர்: லட்சுமணன்ராவ், தனிநபர் சட்ட மறுப்பு, 1931-32 இரு முறை கைது செய்யப்பட்டு 6 மாதம், 1 வருடம் சிறைத் தண்டனை பெற்றார்.

15. கமலா தேவி (1901–)

கணவர்: மஹேஸ்வர ஆர்யா; கல்வி: படித்தவர்; பலவிதப் போராட்டங்களில் பங்கேற்பு; 1930-கள்ளுக்கடைமறியல், அந்நியத்துணி புறக்கணிப்பு; 1932, 1941 இரு முறை கைது செய்யப்பட்டு சிறைவாசம் பெற்றார்.

16. காமாட்சி அம்மாள் (ம) வேங்கட பாப்பையா (1906–)

தனிநபர்சட்ட மறுப்பில் பங்கேற்பு, 1930இல் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைத்தண்டனை பெற்றார்.

17. கிருஷ்ணாபாய் (1903–)

கணவர்: ஹரிராவ், தனிநபர் சட்ட மறுப்பு, சத்தியாகிரகப் போராட்டம்; 1941இல் கைது செய்யப்பட்டு 6 மாத சிறைவாசம் பெற்றார்.

18. லட்சுமி பாரதி (1906–)

கணவர்: கிருஷ்ணசாமி பாரதி; எஸ்.எஸ்.எல்.சி வரை படித்தவர்; தனிநபர் சட்ட மறுப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்; 1932, 1940இல் கைது செய்யப்பட்டு இருமுறை சிறைவாசம் செய்தவர், 1937இல் சென்னை சட்டமன்றக் கீழவை உறுப்பினராக (MLC) இருந்தவர்.

19. லட்சுமி (1921–)

1930இல் அந்நியத் துணி புறக்கணிப்பு, 1931இல் கைது செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் சிறைவாசம் பெற்றார்.

20. லஷ்மி, ஏ. (1916–)

படித்தவர்; அந்நியத் துணி மறுப்புப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.

21. லீலா ஜமதக்னி (1920–)

படித்தவர்; அந்நியத் துணி புறக்கணிப்பு, ஒத்துழையாமை இயக்கம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் பங்கேற்றவர். 1927 முதல் 30 வரை சென்னை மத்திய சிறையில் சிறைவாசம் செய்தவர்.

22. மஞ்சுபாஷினி சுப்ரமணியம் (1906–)

வழக்கறிஞர், வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்பு, 1942இல் கைது செய்யப்பட்டு ஓராண்டு வேலூரில் சிறைவாசம் செய்தவர்.

23. மாயா ஜோசப் (1917–)

தந்தை: ஜார்ஜ் ஜோசப், வெள்ளையனே வெளியேறு இயக்கம், 1942இல் கைது; 6 மாதம் மகளிர் சிறையில் சிறைவாசம்.

24. மீனாட்சி

மாணவர் அமைப்புப் போராட்டத்தில் பங்கேற்று 1942இல் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார்.

25. முனியம்மாள் (1882–)

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்பு; இந்திய சட்டம் பிரிவு 81(4)ன் கீழ் கைது செய்யப்பட்டு 1 வாரம் சிறைத் தண்டனை பெற்றார்.

26. நவநீதம்மாள், ஜே. (1918–)

கல்வியறிவு பெற்றவர்; 1932இல் அந்நியத் துணி புறக்கணிப்பு; 1932இல் தனிநபர் சத்தியாகிரகம்; 1940இல் கைது செய்யப்பட்டு சிறைவாசம் பெற்றார்.

27. நீலாவதியம்மாள் (1914–)

கணவர்: கலிய பெருமாள், தனிநபர் சத்தியகிரகம்; 1941இல் இந்திய சட்டம் பிரிவு 38(5)ன் கீழ் கைது செய்யப்பட்டு 3 மாதம் சிறைவாசம் பெற்றார்.

28. பர்வதவர்த்தனி

ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்பு, 1932இல் பிரிவு 17(1)ன் கீழ் கைது செய்யப்பட்டு வேலூர் மகளிர் சிறையில் 6 மாதம் சிறைவாசம் செய்தவர்.

29. பூர்ண திலகம்மாள் (1891–)

கணவர் - இராமகோட்டையா, ஒத்துழையாமை இயக்கம், 1931இல் பிரிவு 151 ஐ.பி.சி.யின் கீழ் கைது செய்யப்பட்டு 6 மாதம் சிறைவாசம் செய்தவர்.

30. ராஜேஸ்வரிபாய்

கணவர்: பாலுநாயுடு, கல்வி: படித்தவர்; 1939-தனிநபர் சத்தியாகிரகம், 1941-ஆகஸ்டு இயக்கம்; 1942இல் கைது செய்யப்பட்டு 5 மாதம் சிறைத் தண்டனை பெற்றார்.

31. ருக்மணி அம்மாள், என்.எஸ். (1915–)

கல்வி: படித்தவர்; 1930 முதல் போராட்டத்தில் ஈடுபட்டவர், அந்நியத் துணி புறக்கணிப்பு, கள்ளுக்கடை மறியல், தனிநபர் சத்தியாகிரகம் முதலான போராட்டங் களில் முன்னணி வகித்தவர்; 1941இல் கைது- 6 மாதம் சிறைவாசம்.

32. ருக்மணி லட்சுமிபதி (–1951)

கணவர்: லட்சுமிபதி, விடுதலைப் போராட்டத்திலும் மகளிர் இயக்கத்திலும் முதன்மையான பங்கு வகித்தவர். உப்புச் சத்தியாகிரகம், ஒத்துழையாமை இயக்கம், தனிநபர் சத்தியாகிரகம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் பங்கேற்றவர்; ஒவ்வொரு போராட்டத்தின் பொழுதும் ஓராண்டு சிறைத் தண்டனை பெற்றவர்; சட்டமன்ற உறுப்பினர் (1937). உதவி சபாநாயகர் (1937), உடல் நலத்துறை அமைச்சர் (1946–47).

33. சகுந்தலா ராமரெட்டி (1925–)

மாணவப் பருவத்திலேயே போராட்டத்தில் ஈடுபட்டவர் ; ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்று 5 வயதிலேயே சிறை சென்றவர்.

34. சரஸ்வதி பாண்டுரங்கன் (1913–)

கணவர்: வரதராஜ முதலியார்; கல்வி: படித்தவர்; 1929 முதல் போராட்டத்தில் பங்கேற்பு; உப்புச்சத்தியாகிரகம் (1929), ஒத்துழையாமை இயக்கம் (1930), தனிநபர் சத்தியாகிரகம் (1931-32), ஆகஸ்ட் இயக்கம் (1941), முதலான போராட்டங் களில் பங்கேற்பு. பலமுறை கைது செய்யப்பட்டு வேலூர், சென்னை, கண்ணனூர் சிறைகளில் சிறைவாசம் செய்தவர். நீதிமன்றக்காவலில் வைக்கப்பட்ட முதல் பெண்.

35. சீதாலட்சுமிகுமாரசுவாமி (1918–)

கணவர் - ப.ல. குமாரசுவாமி, கல்வி பயின்றவர் ; 1931 முதல் போராட்டத்தில் பங்கேற்பு ; தனிநபர் சத்தியாகிரகத்தில் (1931) பங்கேற்றார்; 1941இல் கைது- ரூ.250/- அபராதம் செலுத்தினார்-6 மாதம் சிறைவாசம் ; காங்கிரஸ் கமிட்டி முதல் பிரிவின் செயலாளர் (1941), சமூகச் சேவகி.

36. சிவலோகம்மாள் (1910–)

தந்தை - சாமி ஐயர், ஒத்துழையாமை இயக்கம் (1932), பிரிவு 17(2)ன் கீழ் கைது - ஓராண்டு சிறைவாசம்.

37. சுசீலா, பி. (1923–)

தந்தை-ஏ.வி. கோடிமேனன், வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்றார். 1942இல் கைது- 2 மாதம் சிறைவாசம்.

38. தாணு அம்மா (1911–)

கணவர் - குமாரசாமி பிள்ளை, வெள்ளையனே வெளியேறு இயக்கம் - 1942இல் கைது-8 மாதம் 2 வாரம் சிறைவாசம் (பிரிவு 38(5))

39. தாயாரம்மாள் (1912–)

தனிநபர் சத்தியாகிரகம் 1941இல் 3 முறை கைதானவர், சென்னை, வேலூர், கடலூர் சிறைகளில் சிறைவாசம்.

40. துளசியம்மாள், என்.என். (1908–)

கல்வி: படித்தவர்; அந்நியத் துணி புறக்கணிப்பு, ஆகஸ்டு இயக்கம் முதலானவற்றில் பங்கேற்பு, 1942இல் கைது செய்யப்பட்டு சிறைவாசம் பெற்றவர்.

41. வாசுகி அம்மாள்

கணவர்: சி. சுப்பிரமணியம்; 1921-வெள்ளையனே வெளியேறு இயக்கம், 1942இல் கைது-ஓராண்டு 2 வாரம் சிறைவாசம்.

42. வரஹலம்மா, டி. (1904–1958)

கணவர்: டி. நரசிம்ஹமூர்த்தி; கல்வி: படித்தவர்; உப்புச் சத்தியாகிரகம், அந்நியத் துணி புறக்கணிப்பு, 1930 வேலூர் சிறையில் 6 மாதம் சிறைவாசம் (1930)

43. விஜயலட்சுமி, எம். (1919–)

கல்வி: படித்தவர்; ஒத்துழையாமை இயக்கம், 1933 முதல் 1937 வரை சிறைவாசம்.

மதுரை மாவட்டம்

44. அகிலாண்டத்தம்மாள் (1899–)

கணவர்: வைத்தியநாத அய்யர், 1932இல் இருந்து போராட்டத்தில் பங்கேற்பு, ஒத்துழையாமை இயக்கம், தனிநபர் சத்தியாகிரகம்-பங்கேற்ற போராட்டங்கள், 1933இல் 3 மாதம், 1941இல் 2 மாதம் மதுரை, வேலூர் சிறையில் சிறைவாசம்.

45. அங்காச்சியம்மாள்

தந்தை: கிருஷ்ணசாமி அய்யர்; ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்பு. 1932இல் கைது; வேலூர் கண்ணனூர் சிறையில் 6 மாதம் சிறைவாசம்.

46. அலமேலு அம்மாள் (1908–)

கணவர்: சுந்தர்ராஜ் அய்யர்; கல்வி: படித்தவர்; 1941 முதல் போராட்டத்தில் பங்கேற்பு, தனிநபர் சத்தியாகிரகத்தில் பங்கேற்று, வேலூர் சிறையில் 3 மாதம் சிறைவாசம் செய்தவர்.

47. கமலா, கே.டி.

ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்று 1932இல் கைது செய்யப்பட்டு 6 மாதம் சிறைவாசம் பெற்றவர்.

48. கமலாட்சியம்மாள், எஸ்.எம்.கே. (1913–)

கல்வி: படித்தவர்; 1930-அந்நியத் துணி புறக்கணிப்பு போராட்டத்தில் பங்கேற்பு. இதன் விளைவாக கைது செய்யப்பட்டு 6 மாதம் சிறைவாசம் செய்தவர்.

49. கமலவேணி

1942 முதல் போராட்டத்தில் பங்கேற்பு, ஆகஸ்டு புரட்சியில் பங்கேற்று, வேலூர் பெண்கள் சிறையில் 6 மாதம் சிறைவாசம் செய்தவர்.

50. சின்னக் கொண்டா சொர்ணம்மாள் (1829–)

தந்தை: லட்சுமண அய்யர், ஒத்துழையாமை இயக்கம், தனிநபர் சத்தியாகிரகத்தில் பங்கேற்று, இ.பி.கோ. 145வது பிரிவின் கீழ் ஓராண்டு சிறைத் தண்டனை பெற்றவர்.

51. சீதாலட்சுமி அம்மாள் (1909–)

1929 முதல் போராட்டத்தில் பங்கேற்பு. உப்புச் சத்தியாகிரகம், அந்நியத் துணி புறக்கணிப்பு போன்றவற்றில் பங்கேற்பு. 1930இல் கைது வேலூர் சிறையில் 6 மாதம் சிறைவாசம்.

52. சூரியவதி அம்மாள் (1928–)

கல்வி: படித்தவர், 1942இல் ஆகஸ்டு இயக்கத்தில் பங்கேற்றவர்.

53. சோலை. பாக்கியலட்சுமி

ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்பு; 1932இல் கைது செய்யப்பட்டு 6 மாதம் சிறைத் தண்டனை பெற்றவர்.

54. சொர்ணம்மாள், சி.கே.

1932இல் ஜவுளிக்கடை மறியல் போராட்டத்தில் பங்கேற்று 6 மாதம் வேலூர் சிறையில் இருந்தவர்.

55. சொர்ணம்மாள் (1917–)

தந்தை: ரெங்காச்சாரி; கல்வி: படித்தவர்; 1940இல் விடுதலைப் போராட்டத்தில் சேர்ந்தார். 1941-தனிநபர் சத்தியாகிரகம், இந்தியப் பாதுகாப்பு விதி 38(5) பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டு 3 மாதம் சிறைத்தண்டனை பெற்றவர்.

56. சொர்ணத்தம்மாள் (1905–)

கணவர்: இலட்சுமண பெருமாள் பிள்ளை; கல்வி: படித்தவர்; 1930இல் கள்ளுக்கடை மறியலில் பங்கேற்பு; வேலூர் பெண்கள் சிறையில் 6 மாதம் சிறைவாசம்.

57. சொர்ணத்தம்மாள்

கணவர்: எஸ்ஆர்.என். சேஷபாகவதர் இவர் தம் கணவருடன் இணைந்து விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டார். இருவரும் பலமறியலில் கலந்து கொண்ட மதுரை, வேலூர் சிறையில் பல முறை சிறைத் தண்டனை பெற்றனர். இத்துடன் 'வெள்ளையனே வெளியேறு', அன்னியத்துணி எரிப்பு முதலான போராட்டங்களில் ஈடுபட்டபொழுது 'தீச்சட்டி கோவிந்தன்' எனும் காவல் அதிகாரியால் கைது செய்யப்பட்டனர். அப்பொழுது சொர்ணம்மாளுக்கு வயது 26. காவல் நிலையத்தில் பற்பல கொடுமைகளுக்கு உட்படுத்தின அதிகாரிகள் இறுதியில் ஊரின் எல்லைக்கு அழைத்துச் சென்று உடுத்தியிருந்த கதராடையை நீக்கித் துரத்தி அடித்துள்ளனர். (பேட்டி : ஆனந்த விகடன், 21.8.97, ப.138)

58. தங்கம்மா (1897–)

ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்பு; பிரிவு 17(2) xivஇன் கீழ் கைது செய்யப்பட்டு 6 மாதம் சிறைத் தண்டனை பெற்றார்.

59. தமயந்தி (1925–)

கணவர்: மாயா அழகன்; கல்வி: படித்தவர்; 1942இல் ஆகஸ்டு இயக்கத்தில் பங்கேற்பு; பிரிவு 38(5)இன் கீழ் கைது செய்யப்பட்டு 3 மாதம் வேலூர் சிறையில் சிறைவாசம்.

60. தனம்மாள் (1910–)

கணவர்: நடராஜ பிள்ளை; ஒத்துழையாமை இயக்கம்; 1932இல் கைது, 6 மாதம் சிறைவாசம் (பிரிவு 17(2))

61. தாயம்மாள் (1903–)

தாய்: சீதம்மாள்; 1929-உப்புச்சத்தியாகிரகம், 1930-ஒத்துழையாமை இயக்கம்; 1932இல் கைது ஓராண்டு சிறைவாசம்; 1933இல் மீண்டும் கைது, கண்ணனூர் சிறையில் 6 மாதம் சிறைவாசம்.

62. திருக்கொண்டா லட்சுமிஅம்மாள்

அன்னியத்துணி புறக்கணிப்புப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.

63. பங்கஜத்தம்மாள் (1928–)

கணவர்: முத்துசாமி; கல்வி: படித்தவர்; அன்னியத்துணி புறக்கணிப்பு; துணிக்கடை மறியலில் பங்கேற்பு; 1932இல்

கைது செய்யப்பட்டு வேலூர், கடலூர் சிறையில் ஓராண்டு சிறைவாசம் செய்தவர்.

64. பத்மாஸினி அம்மாள் (1897–)

கணவர்: ஸ்ரீனிவாச வரதராஜ அய்யங்கார் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்பு, 1930 & 1932 இருமுறை கைது செய்யப்பட்டார். முதலில் 6 மாதம், பின்னர் 18 மாதம் (பிரிவு (4)ன்கீழ்) வேலூர் சிறையில் இருந்தவர்.

65. பாக்யலட்சுமி (எ) சுதா போகியன் (1907–)

தந்தை–ராஜப்பா; ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்று கைது செய்யப்பட்டார். பிரிவு (4) சட்டம் 17(2)ன் கீழ் 6 மாதம் சிறைத்தண்டனை.

66. பாக்யலட்சுமி வெங்கடபதி அய்யர் (1897–)

ஒத்துழையாமை இயக்கம், 6 மாதம் சிறைத் தண்டனை.

67. மகாலட்சுமி பாரதி

கல்வி - பி.ஏ., 1942 முதல் போராட்டத்தில் பங்கேற்றார் வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் பங்கேற்று 6 மாதம் வேலூர் சிறையில் இருந்தவர்.

68. மீனாட்சி அம்மாள் (1887–)

கணவர் - சொக்கலிங்கம் பிள்ளை; ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்று 6 மாதம் சிறைவாசம்.

69. மீனாம்பாள் (1916–)

தந்தை-கோபால் செட்டியார் ; ஒத்துழையாமை இயக்கம்-பிரிவு (143இன் கீழ் 2 மாத சிறைவாசம்)

70. முத்தம்மாள் (1902–)

கணவர்-நாராயணாபிள்ளை ; ஒத்துழையாமை இயக்கம் ; 1932இல் கைது 4 மாதம் சிறைவாசம்.

71. ரங்கம்மாள் (1921–)

தந்தை: குருசாமி நாயக்கர்; கல்வி: படித்தவர்; தனிநபர் சத்தியாகிரகம்; 1941இல் கைது-2 மாதம் சிறை.

72. லட்சுமி (1923–)

கல்வி: படித்தவர்; 1940-தனிநபர் சத்தியாகிரகம்; 1941-ஆகஸ்டு புரட்சி, 1942இல் கைது, மதுரை, வேலூர் சிறையில் 7 மாதம் சிறைவாசம்.

73. லட்சுமி (1882–)

ஒத்துழையாமை இயக்கம்; 1932இல் கைது, 6 மாதம் சிறைவாசம்.

74. லட்சுமிபாய் (1911–)

தாய்: அம்மணி அம்மாள் ஒத்துழையாமை இயக்கம்; 1932இல் கைது; 6 மாதம் சிறைவாசம்.

75. லட்சுமிபாய், ஜி. (1900–)

கணவர்-கோபால்ராவ் : 1900; பல்வேறு போராட்டங்களில் பங்கேற்பு; 1932இல் (பிரிவு 17(1)) கைது; 6 மாத சிறைவாசம்.

76. ஜானகி (1914–)

தந்தை - கே.ஆர். சுப்ரமணிய அய்யர் : 1914 ; ஒத்துழையாமை இயக்கம்-1932இல் கைது; இ.பி.கோ. பிரிவு 143இன் கீழ் 2 மாத சிறைவாசம்.

77. ஜானகி அம்மாள் (1917–)

கணவர்: குருசாமி நாயுடு; கல்வி-படித்தவர்; 1937 முதல் போராட்டத்தில் பங்கேற்பு; 1939இல் கைது 1 ஆண்டுசிறைவாசம். 1940இல் 4 ஆண்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். 1943இல் மீண்டும் கடலூர் சிறையில் 3 மாதம் சிறைவாசம்; 1939இல் 'காங்கிரஸ் சோஷலிச கட்சியில் சேர்ந்து பின் அதிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தவர்.

78. ஜானகி அம்மாள் (1910–)

கணவர்: ராமாமிர்தம்; 1910; 1930-அன்னியத்துணி புறக்கணிப்புப் போராட்டம்; மதுரை சிறையில் 8 மாதம் சிறைவாசம்.

79. ஜானகி அம்மாள், டி.வீ. (1884–)

ஆகஸ்டு போராட்டத்தில் பங்கேற்பு, 1942இல் கைது ; ரூ500/- அபராதத்துடன் 2 மாதம் சிறைவாசம்.

80. ஜெயலட்சுமி அம்மாள்

தந்தை: ஆர். வரதராஜ அய்யா; 1933 முதல் போராட்ட்த்தில் பங்கேற்பு; 1933இல் கைது; மதுரை மற்றும் கண்ணனூர் சிறையில் 2 மாதம் சிறைவாசம்.

81. வத்சலாமணி அம்மாள்

கணவர்: டி.எஸ். சுப்பராயன்; விடுதலைப் போராட்டத்தில் முழுமையாகப் பங்கேற்பு, செங்கல்பட்டு சிறையில் 3 மாதம் சிறைவாசம்.

82. வர்தனி அம்மாள்

கணவர்: எம்.ஆர். சுந்தரராமையர்; கல்வி-எஸ்.எஸ்.எல்.சி. 1931-அன்னியத்துணி புறக்கணிப்பு; 1931இல் கைது; மதுரை மற்றும் வேலூர் சிறையில் 6 மாதம் சிறைவாசம்.

83. விசாலாட்சி கிருஷ்ணகுந்து (1917–)

கல்வி: படித்தவர்; 1932-அன்னியத்துணி புறக்கணிப்பு; 1932இல் கைது, 6 மாத சிறைவாசம்.

செங்கல்பட்டு மாவட்டம்

84. ஜானகி அம்மாள், வி.எம். (1916–)

கணவர் ஆராவமுது அய்யங்கார்; 1941இல் தனிநபர் சத்தியாகிரகத்தில் பங்கேற்பு. 1941இல் கைது, வேலூர் பெண்கள் சிறையில் 1 ஆண்டு 6 மாதம் சிறைவாசம். செங்கல்பட்டு மாவட்ட வாரிய உறுப்பினர்.

தர்மபுரி மாவட்டம்

85. அம்மையம்மாள், ஏ. (1904–)

தந்தை: கோவிந்தராஜுலு (எ) அப்பண்ணாராவ் நாயுடு); கல்வி: படித்தவர்; 1942இல் போராட்டத்தில் பங்கேற்பு; ஒத்துழையாமை இயக்கத்தில் தீவிர பங்கேற்பு.

86. சின்னகண்ணு அம்மாள், கே. (1922–)

கல்வி: படித்தவர்; வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்பு; 1942இல் கைது செய்யப்பட்டு இராபர்ட்சன் பேட்டை மற்றும் சேம்பியன்ரீட் (Champion Reef Jail) சிறைச் சாலையில் 15 நாட்கள் காவலில் வைக்கப்பட்டார்.

கன்னியாகுமரி மாவட்டம்

87. கோமதி (1906-)

கணவர்: முத்துசாமி; வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகத்தில் பங்கேற்பு, 1930இல் கைது, இ.பி.கோ. பிரிவு (151)இன் கீழ் வேலூர் சிறையில் 6 மாதம் சிறைவாசம்.

கோவை மாவட்டம்

88. அலமேலு (1912–)

தந்தை: அய்யாசாமி தேவர்; வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்பு; 1942இல் இ.பி.கோ. பிரிவு (14)இன் கீழ் கைது செய்யப்பட்டு மாநில சிறையில் 18 மாதம் சிறைவாசம்.

89. அல்லம்மாள் (1868–)

தந்தை: கங்கா நாயக்கர்; ஒத்துழையாமை இயக்கம் ; 1932இல் கைது; கோவை மத்திய சிறைச் சாலையில் 7 மாதம் சிறைவாசம்.

90. அமராவதி அம்மாள் (1920–)

தந்தை: மாரிமுத்து; ஆகஸ்டு இயக்கம் ; 1942இல் கைது ; ஓராண்டு வேலூர் சிறையில் சிறைவாசம்.

91. அம்புஜம் (1911–)

கணவர்: டி.ராகவாச்சாரி; கல்வி: எஸ்.எஸ்.எல்.சி. ; 1932 முதல் போராட்டத்தில் பங்கேற்பு; அன்னியத்துணி புறக்கணிப்பு போராட்டத்தில் பங்கேற்றதால் கைது செய்யப்பட்டு 4 மாதம் சிறைத் தண்டனை பெற்றார்.

92. அம்மணி அம்மாள்

கணவர்: ஆறுமுக முதலியார்; விடுதலைப் போராட்டத்தில் தீவிர பங்கேற்பு, இரண்டாண்டுகள் பெல்லாரி சிறையில் காவலில் வைக்கப்பட்டார்.

93. பத்மாவதி (1908–)

கணவர்: பி.டி.. ஏஷர் (Asher); உப்புச் சத்தியாகிரகம், ஒத்துழையாமை இயக்கம்; 1930-31இல் இ.பி.கோ. பிரிவு (143)இன் கீழ் 6 வாரம் சிறைவாசம்; 1933இல் குற்றவியல் சட்டம், பிரிவு 123 பி.ஸி.இன் கீழ் 7 மாதம் கோவை பெண்கள் சிறையில் காவலில் வைக்கப்பட்டார்.

94. பாக்யலஷ்மி அம்மாள் (1885–)

கணவர்: வி.வி.எஸ். அய்யர்; உப்புச்சத்தியாகிரகம், ஒத்துழையாமை இயக்கப் போராட்டங்களில் பங்கேற்பு; 1932இல் இ.பி.கோ. பிரிவு (143)இன் கீழ் கைது செய்யப்பட்டு 6 வாரம், பிரிவு 4இன் கீழ் 6 மாதம், குற்றவியல் சட்டம் 17(1)இன் கீழ் 19 மாதம் எனப் பல பரிவுகளில் கடும் சிறைவாசம் பெற்றவர்.

95. கோவிந்தம்மாள், சி.ஏ.

கல்வி: படித்தவர்; 1930இல் கள்ளுக்கடை மறியலில் பங்கேற்பு; ஒத்துழையாமை இயக்கம்; 1933இல் பல பிரிவுகளின் கீழ் கைது செய்யப்பட்டு கண்ணனூர், வேலூர் சிறைகளில் பல ஆண்டுகள் சிறைவாசம்; காந்தி நகர் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்தவர்.

96. ஜானகி அம்மாள் (1895–)

கல்வி: படித்தவர்; 1928 முதல் போராட்டத்தில் பங்கேற்பு; அன்னியத்துணி புறக்கணிப்பு, கள்ளுக்கடை மறியலில் பங்கேற்பு, 1931இல் சட்டம் 14 பிரிவு 17(2)இன் கீழ் கைது செய்யப்பட்டு 2 ஆண்டுகள் காவலில் வைக்கப்பட்டார்.

97. ஜெயலட்சுமி (1909–)

கணவர்: ஜி.ஆர். சுப்ரமணியம்; கல்வி: இண்டர்மீடியேட்; அன்னியத்துணி புறக்கணிப்பு, கள்ளுக்கடை மறியல், 1932 & 33 இருமுறை கைது செய்யப்பட்டு, திருச்சி, மதுரை, கண்ணனூர் சிறைகளில் சிறைவாகம்.

98. காளியம்மாள், கே.எஸ். (1910–)

கல்வி: படித்தவர்; 1924 முதல் விடுதலை இயக்கத்தில் பங்கேற்பு; தனிநபர் சத்தியாகிரகத்தில் பங்கேற்றதால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார்.

99. கமலம்மாள் (1911–)

கணவர்: கே.சுப்ரமணியம்; கல்வி: படித்தவர்; கள்ளுக்கடை மறியல், உப்புச் சத்தியாகிரகத்தில் பங்கேற்பு; 1932இல் குற்றவியல் பிரிவு, இ.பி.கோ. பிரிவு எனப் பல பிரிவுகளில் கைது செய்யப்பட்டு பல ஆண்டுகள் சிறைவாசம் செய்தவர்.

100. கண்ணம்மாள் (1890–)

தந்தை: வெங்கடேச நாயக்கர்; அன்னியத்துணி புறக்கணிப்பு, 1934-கைது (3 மாத சிறைவாசம் - இ.பி.கோ. பிரிவு 123)

101. லட்சுமி

கணவர்: ஜி.எஸ். லட்சுமணன்; போருக்கெதிரான நடவடிக் கைகளில் பங்கெடுத்துக் கொண்டார் (took part in anti-war activities), இதன் விளைவாக கைதாகி, ரூ. 1,000/- அபராதத் தொகை கட்டியுள்ளார்.

102. லட்சுமி (1916–)

கணவர்: கே. திருவேங்கடம்; கல்வி: படித்தவர், தனிநபர் சத்தியாகிரகம், 1941இல் கைது (3 மாத சிறைவாசம்)

103. லட்சுமியம்மாள் (1887–)

கணவர்: ஸ்ரீனிவாச அய்யங்கார்; ஒத்துழையாமை இயக்கம், 1933இல் கைது 6 மாத சிறைவாசம்.

104. மருதை அம்மாள் (1890–)

தந்தை: ராமசாமி பிள்ளை; கல்வி: படித்தவர், ஆகஸ்டு இயக்கம், 1942இல் இ.பி.கோ. பிரிவு 147இன் கீழ் கைது, ஓராண்டு காவலில் வைக்கப்பட்டார்.

105. முத்துலட்சுமி (1908–)

கணவர்: எஸ்.ஏ. நாராயண சாஸ்திரி; கல்வி: படித்தவர், அன்னியத் துணி புறக்கணிப்பு, 1932இல் கைதாகி 4 மாதம் சிறைவாசம், குற்றவியல் சட்டப்பிரிவின்கீழ் 1 வாரம் எனச் சிறைத் தண்டனை பெற்றவர்.

106. குட்டியம்மாள் (1916–)

கணவர்: பழனிசாமி நாயுடு; கல்வி: படித்தவர், 1942இல் நடைபெற்ற விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்பு, ஆகஸ்டு இயக்கத்தில் பங்கேற்றதால் கைதாகிக் கோவை சிறையில் 3 மாதம் காவலில் வைக்கப்பட்டார்.

107. பங்கஜத்தம்மாள்

போருக்கெதிரான முழக்கங்களில் ஈடுபட்டதால் 1940இல் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் மற்றும் ரூ. 200 அபராதத் தொகை கட்டினார்.

108. பொன்னம்மாள் (1921–)

கணவர்: ராமசாமி கவுண்டர்; ஆகஸ்டு இயக்கத்தில் கலந்து கொண்டு 1942இல் கைது (இ.பி.கோ. பிரிவு 14இன் கீழ் 6 மாத சிறைவாசம்).

109. சாவித்திரி அம்மாள் (1899–)

கல்வி: படித்தவர், 1928 முதல் போராட்டத்தில் பங்கேற்பு, கள்ளுக்கடை மறியல், தனிநபர் சத்தியாகிரகம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங் களில் பங்கேற்பு; 1942இல் 14ஆவது நடைமுறை பிரிவு 17(2)இன் கீழ் கைது செய்யப்பட்டு 2 ஆண்டுகள் சிறைவாசம், 1932இல் பிரிவு 38(5)இன் கீழ் சிறைவாசம்; குற்றவியல் சட்டத்தின்கீழ் 1941ஆம் ஆண்டு 2 ஆண்டுகள் சிறைவாசம், 1943இல் இ.பி.கோ. பிரிவு 120(b)(1)கீழ் கடலூரில் 2 ஆண்டுகள் சிறைவாசம் எனப் பலமுறை சிறைவாசம் செய்தவர்

110. சுமித்ரா அம்மாள் (1914–)

தந்தை: சுந்தரம்; ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்பு, 1908 உருவாக்கப்பட்ட குற்றவியல் சட்டப்பிரிவு 17(1)இன் கீழ், 1932இல் 6 மாத சிறைவாசம்.

111. சுந்தரம்மாள் (1916–)

கணவர்: நாச்சிமுத்துக் கவுண்டர்; கல்வி: படித்தவர், தனிநபர் சத்தியாகிரகம், ஆகஸ்டு இயக்கம் முதலான போராட்டங்களில் பங்கேற்பு; 1941இல் இந்தியக் குற்றவியல் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு 8 மாத சிறைவாசம்; 1942இல் 7 மாத சிறைவாசம், 1943இல் இ.பி.கோ. பிரிவு 188இன் கீழ் தடுப்புக் காவலில் 2 மாத சிறைவாசம் எனப் பலமுறை சிறைவாசம் செய்தவர்

112. தையம்மாள்

கணவர்: மாரியப்ப நாயுடு; ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்துகொண்டு 1932இல் கைது செய்யப்பட்டு பிரிவு 7(1)13இன் கீழ் 6 மாத சிறைவாசம்

113. தாயம்மாள், வி.சி.பி.

1930 முதல் போராட்டங்களில் பங்கேற்பு; 1941இல் கைது செய்யப்பட்டு கோவை சிறையில் 1 வார காலம் காவலில் வைக்கப்பட்டார்.

வட ஆற்காடு மாவட்டம்

114. ஜெகதாம்பாள் (20–2–1911 –)

கணவர்: சுப்பராயலு அய்யர்; கல்வி: படித்தவர்; 1931 முதல் போராட்டங்களில் பங்கேற்பு, அன்னியத் துணி புறக்கணிப்புப் போராட்டத்தில் பங்கேற்றதால் கைது செய்யப்பட்டு 3 மாதங்கள் சிறைவாசம் செய்தார்

115. புஷ்பவதி அம்மாள் (1909–)

தந்தை: நாகநாத ரெட்டியார்; ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்பு; 1932இல் கைது செய்யப்பட்டு 3 மாதசிறைவாசம்.

116. சகுந்தலா குர்ஜாலி (1910–)

ஆயுர்வேத மருத்துவர், சத்தியாகிரகத்தில் பங்கேற்றதால், இந்தியக் குற்றவியல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 5 மாத சிறைவாசம்.

இராமநாதபுரம் மாவட்டம்

117. அமிர்தம்மாள்

கணவர் சண்முக நாடார்; ஊர்: விருதுநகர்; அன்னியத்துணி புறக்கணிப்புப் போராட்டம் 1931இல் கைது, திருச்சியில் 6 மாத சிறைவாசம்.

118. எஸ். ஜெயலட்சுமி அம்மாள் (10-1-1924 -)

ஊர்: பாளையூர்; கல்வி: படித்தவர்; 1942 முதல் போராட்டத்தில் பங்கேற்பு; 1942இல் கைது செய்யப்பட்டு காரைக்குடி, திருப்பத்தூர் சிறைகளில் தடுப்புக் காவலில் 3 மாத சிறைவாசம்.

119. குஞ்சம்மாள் (1918-)

ஊர்: இராமநாதபுரம்; 1937 முதல் போராட்டத்தில் பங்கேற்பு, உப்பு சத்தியாகிரகத்தில் பங்கேற்று, ரூ. 50 அபராதத் தொகை கட்டும் தண்டனை பெற்றார்.

120. கே.என். லஷ்மி அம்மாள்

கணவர்: நாராயண ராஜா; ஊர்: இராஜபாளையம்; 1950 முதல் தேசிய இயக்கத்தில் பங்கேற்பு; மதுரையில் 3 மாதம் 22 நாட்கள் சிறைவாசம்.

121. மஞ்சம்மாள் (1909-)

தந்தை: கோபால்ராஜு; ஊர்: இராஜபாளையம்; கல்வி: படித்தவர்; 1925 முதல் போராட்டத்தில் பங்கேற்பு; 1932இல் வேலூரில் 3 மாத சிறைவாசம்.

122. பி.எஸ். மஞ்சம்மாள் (1910-)

தந்தை: குருவையா ராஜா; ஊர்: இராஜபாளையம்; கல்வி: படித்தவர்; 1930 முதல் போராட்டங்களில் பங்கேற்பு; அன்னியத் துணி புறக்கணிப்புப் பேராட்டத்தில் பங்கேற்று 3 மாத சிறைவாசம்.

123. நாராயணம்மாள் (1910-)

தந்தை: குருசாமி நாயக்கர்; கல்வி: படித்தவர்; தனிநபர் சத்தியாகிரகத்தில் பங்கேற்பு; 1941இல் வேலூரில் கைது செய்யப்பட்டு 3 மாத சிறைவாசம்.

124. ஏ. ராஜலட்சுமி

கணவர்: அப்பாவு; கள்ளுக்கடை மறியலில் பங்கேற்றதால் கைதாகி 6 மாதம் சிறைவாசம் செய்தவர்.

125. எம். ராஜம்மாள் அம்மாள்

கணவர் வி.கே.ஏ. மஹாதேவ பிள்ளை; ஊர்: விருதுநகர்; கள்ளுக்கடை மறியல், ஓராண்டு சிறைவாசம்.

126. சோலை அம்மாள்

கணவர்: சுப்பாராஜு; ஊர்: இராஜபாளையம்; ஒத்துழையாமை இயக்கம்; 6 மாத சிறைவாசம்.

127. எஸ். வள்ளியம்மாள் (1907–1942)

ஊர்: தேவக்கோட்டை; ஆகஸ்டு இயக்கப் போராட்டத்தில் பங்கேற்பு; 17-8-1942 அன்று சுடப்பட்டு இறப்பு.

128. பி.என்.எஸ். விசாலாட்சி (2–8–1910 –)

ஊர்: அலவகோட்டை; கல்வி: படித்தவர்; 1931இல் போராட்டத்தில் பங்கேற்பு (அன்னியத் துணி புறக்கணிப்பு); 1932இல் தனிநபர் சத்தியாகிரகத்தில் பங்கேற்பு; 1941இல் கைது செய்யப்பட்டு 9 மாத சிறைவாசத்துடன் ரூ. 500 அபராதம்.

சேலம் மாவட்டம்

129. லட்சுமி (1914–)

தந்தை: பீராபோயன் (Bera Boyan); ஒத்துழையாமை இயக்கம்; 1932இல் கைது செய்யப்பட்டு 1 மாதம் 6 நாட்கள் சிறைவாசம்

130. ராதாபாய் சுப்பராயன் (15–11–1888 –)

கணவர். டாக்டர் பி. சுப்பராயன்; கல்வி: இளங்கலை; 1922 முதல் போராட்டத்தில் பங்கேற்பு; தனிநபர் சத்தியாகிரகத்தில் பங்கேற்பு; 1940இல் இந்தியக் குற்றவியல் சட்டம் பிரிவு 38(1)இன் கீழ் கைது செய்யப்பட்டு 6 மாத சிறைவாசம்

131. ராமக்காள் (1882–)

தந்தை: பீராபோயன் (Bera Boyan); ஒத்துழையாமை இயக்கம்; 1932இல் இ.பி.கோ. பிரிவு 188இன் கீழ் கைதுசெய்யப்பட்டு 7 மாத சிறைவாசம்.

132. வெங்கடம்மாள் (1914–)

கணவர்: மாரிசெட்டியார்; கல்வி: படித்தவர்; அன்னியத்துணி புறக்கணிப்பு; சேலத்தில் 1 மாத சிறைவாசம்.

தென்னார்க்காடு மாவட்டம்

133. அம்மக்காம்மாள் (1916–)

தாய்: அஞ்சலை அம்மாள்; ஊர்: கடலூர்; 11 வயதிலேயே போராட்டத்தில் பங்கேற்பு (Neil Statue Satyagraha); 1927இல் கைதாகி சிறுவர் இல்லத்தில் காவலில் வைக்கப்பட்டார்.

134. அங்காச்சியம்மாள்

தந்தை: கிருஷ்ணசாமி நாயக்கர்; ஊர்: நெய்வேலி; உப்புச் சத்தியாகிரகம்; வெள்ளையனே வெளியேறு இயக்கம்; 1930இல் இந்தியக் குற்றவியல் சட்டப்பிரிவின்கீழ் 9 மாத சிறைவாசம்; 1942இல் இ.பி.கோ. பிரிவு 157 மற்றும் 144இன் கீழ் 6 மாத சிறைவாசம்.

135. அங்கம்மாள்

கணவர்: முருகேச முதலியார்; ஊர்: திண்டிவனம்; உப்புச் சத்தியாகிரகம், 1931இல் கைது (இ.பி.கோ. 147 & 332), 9 மாத சிறைவாசம்

136. அஞ்சலை அம்மாள் (1890–)

கணவர்: ஆர். முருகா படையாச்சி; ஊர்: கடலூர்; கல்வி: படித்தவர்; 1920இல் போராட்டத்தில் பங்கேற்பு (Neil Statue Satyagraha); 1927இல் ஒத்துழையாமை இயக்கம்; கள்ளுக் கடை மறியல், 1941இல் ஆகஸ்டு இயக்கம் எனப் பல போராட்டங்களில் பங்கேற்பு; 1942இல் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். 1931இல் 6 மாத சிறைவாசம்; 1933இல் 3 மாத சிறைவாசம்; 1940இல் 6 மாத சிறைவாசம்; 1941இல் 18 மாத சிறைவாசம்; 1983இல் 8 மாதங்கள் 2 வாரங்கள் எனப் பல முறை சிறைவாசம் செய்தவர்.

137. அரங்கநாயகி அம்மாள் (1891–)

ஊர்: திண்டிவனம்; கல்வி: படித்தவர்; தனிநபர் சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டு 1941இல் கைது செய்யப்பட்டு 3 வார சிறைவாசம்.

138. ஜெகதாம்பாள் (11–5–1980–)

கணவர்: ராஜமாணிக்கம் பிள்ளை; ஊர்: வள்ளுவனூர்; கல்வி: படித்தவர்; தனிநபர் சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டு 1941இல் கைது செய்யப்பட்டு 3 வார சிறைவாசம்.

139. கமலாம்பாள், வி.டி. (1901–)

கணவர்: தண்டபாணி பிள்ளை; ஊர்: சிதம்பரம்; கல்வி: படித்தவர்; 1919இல் போராட்டதில் இணைந்தவர்; கள்ளுக் கடை மறியலில் தீவிர பங்கேற்பு.

140. கிருஷ்ணவேணி அம்மாள், வி.டி. (1895–)

தாய்: காயம்மாள்; ஊர்: விழுப்புரம்; கல்வி: படித்தவர்; 1934இல் தனிநபர் சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டு 1941இல் கைது செய்யப்பட்டு 3 வார சிறைவாசம்.

141. லட்சுமி அம்மாள் (1902–)

தந்தை: வீராசாமி அய்யர்; தனிநபர் சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டு 1940இல் கைது செய்யப்பட்டு 6 மாத சிறைவாசம்.

142. முத்துலட்சுமி அம்மாள் (5–10–1915 –)

கல்வி: படித்தவர்; தனிநபர் சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டு 1941இல் கைது செய்யப்பட்டு 4 மாத சிறைவாசம்.

143. நீலவேணி அம்மாள் (1906–)

தந்தை: கேசவ பிள்ளை; ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டு 6 மாத சிறைவாசம்.

144. வி. பத்மாவதி

கணவர்: வரதராஜன் முதலியார்; ஊர்: திருவெண்ணெய் நல்லூர்; அன்னியத்துணி புறக்கணிப்பு, ஆகஸ்டு இயக்கம் பங்கேற்பு; 1942இல் ராஜமுந்திரியில் 2 ஆண்டு சிறைவாசம்.

தஞ்சை மாவட்டம்

145. அங்கம்மாள் (1886–1955)

கள்ளுக்கடை மறியல், அன்னியத் துணி புறக்கணிப்பு மறியல் பங்கேற்பு

146. நன்னுபாய் அம்மாள் (18–7–1911 –)

உப்பு சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டு 1930இல் வேலூரில் 3 மாத சிறைவாசம்.

147. ராஜாமணி அம்மாள் (1879–)

கணவர்: கிருஷ்ணசாமிப் பிள்ளை; தனிநபர் சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டு 1939இல் குற்றவியல் சட்டப்பிரிவின் படி கைது செய்யப்பட்டு 6 மாத சிறைவாசம்.

148. ராஜம்மாள் (1869–)

கணவர்: நடேச பிள்ளை; தனிநபர் சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டு 1939இல் கைது செய்யப்பட்டு 6 மாத சிறைவாசம்.

149. சிவசாரதாம்பாள் (1916–)

கணவர்: பொன்னுசாமி பிள்ளை; தனிநபர் சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டு 1941இல் கைது செய்யப்பட்டு 6 மாத சிறைவாசம்.

150. ஜி. தையல்நாயகி அம்மாள் (1906–)

கல்வி: படித்தவர்; கள்ளுக்கடை மறியல், அன்னியத் துணிக் கடை மறியல், உப்புச் சத்தியாகிரகப் போராட்டங்களில் பங்கேற்பு.

திருச்சி மாவட்டம்

151. டி.பி. பானு

ஆகஸ்டு இயக்கத்தில் பங்கேற்பு

152. தெய்வானை (1904–)

உப்புச் சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டு 1930இல் கைது செய்யப்பட்டு 6 வார சிறைவாசம்.

153. ஜெகதம்மாள் (1919–)

கணவர்: தங்கவேலு; கல்வி: படித்தவர்; தனிநபர் சத்தியாகிரகம், ஆகஸ்டு இயக்கம் பங்கேற்பு; 1941இல் கடலூரில் 3 மாத சிறைவாசம்.

154. கல்யாணி அம்மாள் (1895–)

கணவர்: டி.வி. சுவாமிநாத சாஸ்திரி; ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டு 1932இல் கைது செய்யப்பட்டு 6 மாத சிறைவாசம்.

155. கமலம் (1920)

கணவர்: எம்.கே.எம். முத்து; கல்வி: படித்தவர்; தனிநபர் சத்தியாகிரகத்தில் கலந்துகொண்டு 1941இல் கைது செய்யப்பட்டு 2 மாத சிறைவாசம்

156. கமலம் (1913–)

கணவர்: எம்.எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார். தனிநபர் சத்தியாகிரகம், வெள்ளையனே வெளியேறு போன்ற போராட்டங்களில் பங்கேற்பு; 1941 & 1942களில் இரு முறை கைது செய்யப்பட்டு சிறைவாசம் செய்தவர்.

157. ஆர். குப்பம்மாள்

கணவர்: ராமசாமி கவுண்டர்; தனிநபர் சத்தியாகிரகம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் போன்ற போராட்டங்களில் கலந்து கொண்டு 1941 & 1942களில் இரு முறை கைது செய்யப்பட்டு சிறைவாசம் செய்தவர்.

158. லட்சுமி அம்மாள்

கணவர்: பாலசுந்தரம் பிள்ளை; ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்துகொண்டு 1932இல் கைது செய்யப்பட்டு 6 மாதம் கடுங்காவலில் வைக்கப்பட்டார்.

159. பத்மாவதி அம்மாள் (1904)

கணவர்: ராமசாமி அய்யங்கார்; ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்துகொண்டு 1932இல் கைது செய்யப்பட்டு 6 மாத சிறைவாசம்.

160. பத்மாஸனி அம்மாள்

கணவர்: ஐ.டி.எஃப். சுந்தரராஜ அய்யங்கார்; உப்புச் சத்தியாகிரகம், ஒத்துழையாமை இயக்கம் போன்றவற்றில் பங்கேற்பு; 1933இல் கைதுசெய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம்.

161. ஜி. பாப்பம்மாள்

கணவர்: 1934; கல்வி: படித்தவர்; தனிநபர் சத்தியாகிரகத்தில் பங்கேற்பு.

162. ராஜாமணி அம்மாள் (1916–)

கணவர்: எம்.எஸ். ராஜன்; தனிநபர் சத்தியாகிரகத்தில் கலந்துகொண்டு 1941இல் கைது செய்யப்பட்டு 4 மாத சிறைவாசம்.

163. பி.என்.எஸ். விஜயலஷ்மி அம்மாள் (1911–)

கணவர்: பி.எம். சொக்கலிங்கம்; தனிநபர் சத்தியாகிரகத்தில் கலந்துகொண்டு 1941இல் கைது செய்யப்பட்டு 2 மாத சிறைவாசம்.

திருநெல்வேலி மாவட்டம்

164. ஜெபமணி மாசிலாமணி (1891–)

கணவர்: மாசிலாமணி பிள்ளை; போருக்கெதிரான பொழிவுகளில் தன் கணவருடன் இணைந்து பங்கேற்றதால் 1941இல் கைதுசெய்யப்பட்டு 8 மாத சிறைவாசம்.

165. ஜானகி அம்மாள் (1913–)

கணவர்: கருப்பசாமி தேவர்; ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்பு; குற்றவியல் சட்டம் 17(1), இ.பி.கோ. 117இன் கீழ் 1933இல் கைதுசெய்யப்பட்டு 18 மாத சிறைவாசம்.

166. லட்சுமி (1908–)

தந்தை: சிவன் பண்ணையன்; ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டு 1932இல் கைது செய்யப்பட்டு 2 ஆண்டு சிறைவாசம்; மீண்டும் குற்றவியல் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டார்.

167. லட்சுமி சங்கரய்யர் (1902–)

கணவர்: டாக்டர் டி.சி. சங்கரய்யர்; ஊர்: கல்லிடைக்குறிச்சி; கல்வி: படித்தவர்; 1919 முதல் போராட்டத்தில் பங்கேற்பு: (1. உப்பு சத்தியாகிரகம், 2. அன்னியத்துணி புறக்கணிப்பு, 3. கள்ளுக்கடை மறியல், 4. கிராமோதய கொள்கை பரப்புதல். 1931இல் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் 6 மாத சிறைவாசம், 1940இல் மீண்டும் கைது செய்யப்பட்டு 6 மாத சிறைவாசம்

1. முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர் (1946-1952)
2. மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் உதவித் தலைவர்

168. பார்வதி அம்மாள்

கணவர்: எல். கந்தசாமி செட்டியார்; 1931 முதல் தேசிய விடுதலைப் போராட்டத்தில பங்கேற்பு; 4 ஆண்டுகள் கடுங்காவலில் வைக்கப்பட்டார்.

169. ராக்கேல் அம்மாள் (1867–)

கணவர்: குரு ரெட்டியார்; கல்வி: படித்தவர்; 1920 முதல் உப்புச் சத்தியாகிரகம், அன்னியத் துணி புறக்கணிப்பு, கள்ளுக்கடை மறியல் போன்ற போராட்டங்களில் பங்கேற்பு.

170. ராமலஷ்மி (1924–)

கணவர்: ஜி. வெங்கடேசன்; கல்வி: படித்தவர்; 1931 முதல் அன்னியத் துணி புறக்கணிப்பு, கள்ளுக்கடை மறியல் போன்ற போராட்டங்களில் பங்கேற்பு.

171. கே. சீதை (1867–)

கணவர்: வி. காளிமுத்து; 1932இல் விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்டு ஓர்ராண்டு சிறைவாசம்.

172. சொர்ணத்தம்மாள் (1905–)

கணவர்: லட்சுமண பெருமாள் பிள்ளை; ஊர்: திருச்செந்தூர்; கல்வி: படித்தவர்; 1930இல் கைது செய்யப்பட்டு வேலூரில் 6 மாத சிறைவாசம்.

173. வி. சுந்தரத்தம்மாள்

கணவர்: டி.டி. வேங்கடராம முதலியார்; அன்னியத் துணி புறக்கணிப்பு போராட்டத்தில் கலந்துகொண்டு 1933இல் திருச்சியில் கைதுசெய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம்.

174. சுயம்மாள் (1910–)

கணவர்: எஸ்.பி. சிவலிங்க பண்ணையார்; கல்வி: படித்தவர்; 1932இல் அன்னியத் துணி புறக்கணிப்பு போராட்டத்தில் கலந்துகொண்டு குற்றவியல் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ரூ. 100 அபராதத்துடன் 15 மாத சிறைவாசம்.

175. தாயம்மாள் (1915–)

கணவர்: ஆறுமுக நாயனார்; கல்வி: படித்தவர்; 1931 முதல் தனிநபர் சத்தியாகிரக போராட்டத்தில் கலந்துகொண்டு 1941இல் கைது செய்யப்பட்டு திருச்செந்தூர், தூத்துக்குடி, நாங்குனேரி சிறைகளில் பல மாதங்கள் சிறைவாசம்.

குறிப்புதவி நூல்கள்

1. A revolutionary life: Memories of a Political activist with an Introduction, Geraldine Forbes, New Delhi, Kali for women, 1997.
2. Role of women in the Freedom movement (1857-1947). Manmohan Kaur., Sterling Publication, New Delhi, 1965.
3. Role of women in India's freedom struggle, Raju V. Rajendran, Discovery Publication, New Delhi, 1994.
4. The Role of women, (ed.) Anand T. Hingoreni, Bharatiya Vidya Bhavan, Bombay, 1964.
5. Women in India - A Bibliography, Nehru Memorial Museum & Library, New Delhi, 2001.
6. Who's Who of Freedom fighters, Tamil Nadu, Government of Tamil Nadu, Madras, 1973 (Vol. I, Vol. II, Vol. III).

Reference (website)

7. www. Google.Co.in & also various website from Internet

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

அண்மை வெளியீடுகள்

	ரூ.பை.
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி. 1300	100.00
தொல். பொருள். (அகம்-புறம்)-ஆங்கில மொழிபெயர்ப்பு	50.00
வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள்	130.00
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 - 2000	180.00
இதழாளர் பெரியார்	160.00
மகாவித்துவான் ரா. ராகவையங்கார்	30.00
தமிழக வானவியல் சிந்தனைகள்	35.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்-நாட்டுப்புறவியல்,கலை,பண்பாடு	90.00
தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	200.00
வாழிய செந்தமிழ்	140.00
பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம்	40.00
தமிழக எல்லைப் போராட்டங்கள்	60.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I	90.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II	90.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III	80.00
தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும்	200.00
தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	325.00
தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும்	300.00
Economic Heritage of the Tamils	115.00
மலேசியத் தமிழரும் தமிழும்	100.00
மொழி, சமய, சமுதாயத் தளங்களில் பாவாணர் பங்களிப்பு	50.00
தமிழ்ப் புனைகதைகளில் உளவியல்	35.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல்	100.00
கவிதையியல்	50.00
பண்பாட்டு நோக்கில் திருமுறைகள்	30.00
கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள்	95.00
Bibliography on Translations	175.00
சங்க இலக்கிய ஆய்வு தெபொமீயும் மேலை அறிஞரும்	60.00
அறந்தாங்கித் தொண்டைமான்கள்	45.00
திராவிட மொழி இலக்கியங்கள்	200.00
தமிழில் தத்துவ நூல்கள்	40.00
வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன்	60.00
நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி	35.00
சி.வை. தாமோதரம்பிள்ளை	40.00
தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி	45.00
மொழி பெயர்ப்பியல்	45.00
புதுவைச்சிவம் கவிதைகளும் புரட்சிக்கோட்பாடுகளும்	60.00
புதுவைச் சிவம் கவிதைகளும் புரட்சிக் கோட்பாடுகளும்	60.00
இசுலாமியத் தமிழ் இலக்கிய தோற்றுவாய்களும் வெளிப்பாட்டு முறைகளும்	60.00